சத்வித்யா சன்மார்க்க சங்கம்

பொன் விழா மலர்



சாந்தலிங்கர் கல்விநிலையம், பேரூர்.

அன்பு அறிவு ஆற்றல்
என் கடன் பணி செய்து கி

1966

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

சத்வித்யா சன்மார்க்க சங்கம்

பொன் விழா மலர்

வெளியீடு :

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கல்வி நிலையம்

பேரூர் — கோவை-10

1966

விசுவாவசு ஆண்டு

மாசித்திங்கள்—மாசிமகம்

திருவள்ளுவர் ஆண்டு (௧௯௯௭)



பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.

உ

காணிக்கை

—*—

இவ் அறநிலையத்தை வளர்த்துச் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தால் கொங்கு நாட்டில் தமிழும் சமயமும் தழைக்கத் துணைபுரிந்த தவத்திரு மாணிக்க சுவாமிகளின் பொன்னர் திருவடிகட்கு இப் பொன்மலரைக் காணிக்கை யாக்குகிறோம்.

கல்வி நிலையத்தார்

முன்னுரை

தவத்திரு சாந்தலிங்கப் பெருமான் திருவருளால் கொங்கு நாட்டில் பேரூரில் சாந்தலிங்கர் திருமடத்தின் சார்பில் இச் சத்வித்யா சன்மார்க்க சங்கம் இற்றைக்கு ஐம்பதாண்டுகட்கு முன்னர் தவத்திரு மாணிக்க சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்று, கொங்கு நாட்டில் சைவத்தோடு தமிழையும் வளர்த்து வருகிறது. விக்ரம (1941) ஆண்டு வெள்ளி விழா பூண்டது. பொன்விழாப் பொலிவுபெறும் இப்போது, இம்மலர் மலர்கிறது.

இம்மலரில் பெரியோர்களின் வாழ்த்துரைகளும், இச் சங்கத்தை நிறுவும் போதிருந்தே தொடர்புடையவர்கள் எழுதிய கட்டுரைகளும், பல துறையிலும் சிறப்புற்றோங்கும் பண்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் கருத்தோவியங்களும், கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள், பயின்ற மாணவர்கள், பயிலும் மாணவர்கள், ஆகியோரின் கட்டுரைகளும், கவிதைகளும், நிலைய வளர்ச்சி, ஆண்டு நிறைவு விழாவின் போது தலைமை யேற்ற தலைவர்களின் பெயர்ப் பட்டியல் முதலிய விவரங்களும், விளம்பரங்களும் இடம் பெற்றுள்ளன. இம்மலர் ஐம்பதாண்டுகள் அரும்பணி புரிந்த சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் நடைமுறைகள், அது சைவத்திற்கு ஆற்றிய பணி, தமிழுக்குச் செய்த தொண்டு எதிர்காலத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற குறிக்கோள் ஆகியவற்றை உங்கள் கரங்களின் நடுவே இருந்து கொண்டு எடுத்துக் கூறி மணம் வீசும் என நம்புகிறோம்.

தாயாய்த் திகழும் சாந்தலிங்கரின் திருமடம், அதன் சேய்களான சத்வித்யா சன்மார்க்க சங்கம், கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியிற் கண்ணும் கருத்துமாய்த் துணை நிற்போரும், இம்மலர் வெளியீட்டில் பங்கு பற்றி உழைத்தோரும், வாழ்த்தியோரும், கட்டுரைகளும், கவிதைகளும் எழுதியோரும் விளம்பரங்கள் கொடுத்து உதவியோரும், இம்மலர் இத்துணைச் சிறப்போடு நல்ல முறையில் வெளிவரப் பெரிதும் காரணமாக இருந்த சிவகளை உயர்திரு. மு. சுப்பையா அவர்களும், குறுகிய காலத்தே வெகு அழகுற இம்மலரை அச்சிட்டுக் கொடுத்த பாரி அச்சக உரிமையாளர் உயர்திரு மு. நாராயணன் செட்டியார் அவர்களும், அவர்களுடன் ஒத்துழைத்துதவிய தொழிலாளர்களும் சாந்தலிங்கப்பெருமான் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ்வார்களாக! அனைவருக்கும் எங்கள் நன்றி.

"போந்தெம் உயிர்க்குயிராந் துணைபொத்த
சாந்தையர் தம்பதம் ஏந்து கருத்தே."

சாந்தலிங்கர் கல்வி நிலையம், பேரூர்.



ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள்

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

பொருளடக்கம்

✳

கட்டுரையின் தலைப்பு	ஆசிரியரின் பெயர்	
வாழ்த்துச் செய்திகள்		க
நிலையவளர்ச்சி		i
பழைய நினைவுகள்	திரு. கோவை கிழார், இராமச் சந்திரஞ் செட்டியார்	1
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடமும், சங்கமும்	பண்டித திரு. அ. கந்தசாமி பிள்ளை அவர்கள்	4
திருப்பேரூர்ச் சத்வித்யா சன்மார்க்க சங்கம்—சிங்கநோக்கு	கவியரசு திரு. கு. நடேச கவுண்டர்	10
பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மடமும் சத்வித்யா சன்மார்க்க சங்கவிழாவும்	திரு. மறை திருநாவுக்கரசு அவர்கள்	14
கயப்பாக்கம் திரு. சதாசிவம் செட்டியார் B. A. அவர்களின் வாழ்க்கை வரலாறும் பேரூர் சத்வித்யா சன் மார்க்க சங்கத் தொடர்பும்	கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம் செட்டியார்	19
இரு பெருங் குறள் உண்மை	சைவத்திரு ப. சு. மணியம்	22
ஸ்ரீமெய்கண்டாரும் சாந்தலிங்க அடிகளும்	திரு. நல். முருகேச முதலியார் பி.ஏ.	26
சித்தாந்தச் செந்நெறிக்குத் திருமுறைகளே உயிர்	சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளை	29
நடிப்பவர்க்கே நல்ல காலம்	திரு. ஆ. சிவலிங்கனர்	32
தெய்வ மணக்குஞ் செய்யுளெல்லாம்	திரு. ரா. ப. தங்கவேலு	34
பயன் தரும் பசுக்கள்	வித்துவான் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை I.A.S.(ஓய்வு)	37
ஞானப்பாலில் வேட்கை	வித்துவான் திரு. வீ. குமாரசாமி ஐயர்	42
பொது நிலை	வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்	45
குமரகுருபர முனிவரின் விண்ணப் பச்சாதுர்யம்	திரு. சி. சு. கண்ணுயிரம் B. A.	47
ஊர்ப் பெயர்கள்	டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனர்	51
ஆடுஉ - மகடூஉ	திரு. அரசு. நாராயணசாமி நாயுடு B. O. L.,	54
தென்னாட்டுக் கலைமன்றங்கள்	திரு. அ. ச. ஞான சம்பந்தன் M. A.	56

வித்தும் விளைவும்	திரு. ம. ரா. போ. குருசாமி M.A.,	60
வள்ளுவர் கண்ட அரசியல்	திரு. உ. பழநி எம். ஏ . பி. ஒ. எல்.	65
சமய மறுமலர்ச்சி	திரு. மு. சண்முகம் M.A., B. O. L.	71
இறைவா வா	திரு. சிவ. பொய்யாமொழி மூன்றும் ஆண்டு மாணவர்	74
பிரமபுரமும் பேரூரும்	சிவகளை, திரு. மு. சுப்பையா	75
தமிழரசு	புலவர், திரு. புவியரசு	79
தமிழ் வளர்ச்சி	தேவி - திரு. கவிமணிதாசன்	81
சொல்லேருழவர் சால்பு	திரு. ஒ. கி. நல்லமுத்து M.A.,	82
சமய மாற்றம்	வித்துவான் திரு. ர. வையாபுரி	84
நல்லவர்	வித்துவான் திரு. மா. பட்டியப்பன்	86
கனவு	வித்துவான் திரு. ந. இராய. சென்னி யப்பன்	88
மாயா விதம்	வித்துவான் திரு. மு. சகந்நாதன்	91
பழந்தமிழ்ப் பெண்கள்	வித்துவான் திரு. நா. இராமாத்தாள்	94
பொழிந்த அன்பு	திருமதி என். சுப்புலட்சுமி M.A., B. O. L.,	99
தாய் மொழிப் பயிற்சி	திரு. இரா. வெங்கட்ட ராமன்	101
கொல்லாமை நன்று கொலைதீது	திரு. அ. கி. அரங்கநாதன்	102
பிறப்பில் துன்பமல்ல தில்லை	திரு. க. இராமசாமி	103
தமிழ் அமுதம்	திரு. அரங்கநாதன்	105
திருக்குறளும் வைராக்கிய தீபமும்	திருமதி அர. ஈசுவரி	106
வைராக்கிய தீபத்தில் உவமைகள்	,, அ. மங்கையர்க்கரசி	108
வைராக்கிய தீபமும் நால்வர் பாடலும்	,, இரா. சாந்தாமணி	111
மங்கை பங்கன்	திரு. அ. இரத்தினம்	113
தந்தைதாய் மனைவி மக்கள்	திருமதி. சு. இரத்தினபாய்	116
சைவம்	திரு. சொ. இராமசாமி	117
முடியா முதல்	திரு. கு. சோ. முருகன்	119
நமக்கு நாம் அழுவதில்லை	திரு. சா. சண்முக சுந்தரம்	122
பேரூரான்	திரு. பித்துக்குளி முருகதாஸ்	123
கொலைமறுத்தல் உரைநலம்	திரு. மு. நடேசன்	125
உன்சொல்பிழையாமன்றே	திருமதி. ப. வினதா	127
முருகன் அவதாரம்.	திரு. பி. அருணசல நாட்டார்	129
பாதகத்துக்குப்பரிசு.	வித்துவான் திரு. மு. சங்கரலிங்கம்	130
திருஞானசம்பந்தர்--சிவபுரத்தேவாரம்.	திரு. ச. ப. மாணிக்கவாசகம்	132
கேடில் விழுச் செல்வம் கல்வி.	திரு. க. சண்முக சுந்தரம்	134
பெண்மையும் புலமையும்.	திரு. ப. கிருட்டிணசாமி	137
"க"வின் பெருமை.	திரு. கோ. வெ. நாராயணச்சார்	138
இசைக்கலையின் சிறப்பு.	திரு. கு. பழனிசாமி	139
மாலைமுழுதும் விளையாட்டு.	திரு. ச. நா. தாமோதரன்	140
தெய்வத்தமிழும் நமது கடமையும்.	திரு. ப. செங்குட்டுவன்	141
சைவமும் தமிழும்.	திரு. சீ. புருஷோத்தமன்	142
காலமும் கடமைகளும்.	திரு. கு. மெ. ச. மூர்த்தி	143
அடியார் மாண்பு.	சிவகளை, வித்துவான். திரு. மு. நாராயணன்	144
மலைநாட்டுச் செலவு.	திரு. பி. ரா. கந்தன்	146
தாள் வணங்குவாம்.	திரு. ந. பொன்னுசாமி	148

நூலினுட் படங்கள்

அருள்திரு சாந்தலிங்க சுவாமிகள்
பேரூர் நடராசப் பெருமான் திருவுருவம் தவத்திரு சாந்தலிங்கர் திருக்கோயில்
மூலவர்.
தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் 18 ஆம் பட்டம் மகாசந்நிதானங்கள்
மறைத்திரு மறைமலையடிகள்
தவத்திரு அழகரடிகள்
தவத்திரு மாணிக்க சுவாமிகள்
தவத்திரு சிதம்பர மெஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்
தவத்திரு, பேரூர், சுந்தரம் சுவாமிகள்
தவத்திரு சிவராமசாமி சுவாமிகள்
தவத்திரு ஆறுமுக சுவாமிகள்
தவத்திரு சம்பந்த சரணாலய தம்பிரான் சுவாமிகள்
தவத்திரு சிவராமலிங்க சுவாமிகள்
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்
தவத்திரு இராமானந்த சுவாமிகள்
தவத்திரு கந்தசுவாமி சுவாமிகள்
தவத்திரு இராமசாமி அடிகள்
தவத்திரு சுந்தரம் அடிகள்
திரு இரா.க. சண்முகஞ் செட்டியார்
திரு கோவைகிழார், ம. இராமச்சந்திரஞ் செட்டியார்
உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்
கல்லூரிக் கட்டிடத் திறப்பு விழா
திரு வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர் தம் துணைவியார்
திரு கு. வேங்கடாசலம்.
திரு நா. மகாலிங்கம்
வாரவழிபாட்டுக் கூட்டம்.
சைவத்திரு கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியார்
தவத்திரு. வீரசுப்பைய சுவாமிகள்.
தவத்திரு ஞானியார் அடிகள்
திரு பண்டித அ. கந்தசாமி பிள்ளை
திரு மணம்பூண்டி குமாரசாமிப் பிள்ளை
திரு பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்.
திரு அ. மு. சரவண முதலியார்
திரு சோ. சோமசுந்தர பாரதியார்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தவத்திரு மயிலம் 19.ஆம் மகாசந்நிதானம்
தவத்திரு சிதம்பரம் சபாபதி சுவாமிகள்
கவியரசு கு. நடேச கவுண்டர்
திரு சி. ஆர். நடராசன்
தவத்திரு சாரங்க தேசிக சுவாமிகள்
திரு ச. பா. மாணிக்கவாசகம்
திரு அருணாசல நாட்டார்
திருமதி இரா. கௌசலாம்பாள் அம்மாள்
டாக்டர் செங்காளியப்பக் கவுண்டர்
டாக்டர் சண்முக சுந்தரக் கவுண்டர்
திரு ஆர். செங்கோட்டு வேலன்
திரு. அய்யாசாமிப்பிள்ளை
திரு. சாமிக்கவுண்டர்
திரு வெ. சு. சின்னசாமிக் கவுண்டர்
திரு சி. என். நாகப்பக் கவுண்டர்
திரு P.S.G.G. கோவிந்தசாமி நாயுடு
த.சா.அ. உயர்நிலை, உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள்.
திரு வெ.ந. சுப்பணக் கவுண்டர்
திரு கே. ஆர். இராமகிருட்டிண பிள்ளை
திரு வெ.சு. பழநிசாமிக் கவுண்டர்
திரு எம்.எஸ். பழநியப்ப முதலியார்
திரு பீ. ஆர். காளிமுத்துத் தேவர்
புலவர் மாணவர்கள் 1957 முதல் 1966 வரை
பள்ளி இறுதி வகுப்பு மாணவர்கள்
மாணவர், மாணவியர் உடற் பயிற்சி
கொடி வணக்கம்
கல்லூரி மாணவர்கள் நாடகம்
சுற்றுலா
கல்லூரிக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டோர்.

கவியோகி சுத்தானந்த பாரதியார், *சென்னை-20.*

சாந்தலிங்கக்கவர்ச்சி

காந்தம்போல் அடியார் தம்மைக் கவர்ந்திடும் கலையின் கோயில்
நாந்தவம் இருந்து பெற்ற நற்றமிழ் வளருங்கோயில்
ஈந்து வந்தின் புற்றேங்கும் இயல்பினை யிலக்குங்கோயில்
சாந்தலிங்கத்தின் கோயில் சந்நிதிச் சிறப்பென்சொல்வேன்.

சைவமுந் தமிழும் போற்றிச் சரியை யாதிகளைப் போற்றி
வையத்தில் வாழுமாங்கு வாழவைத்திடுந் தொண்டாற்றும்
கைவந்தகனியே போலக் கைவல்ய பதவிநல்கும்
தெய்வச் சந்நிதியில் யானும் தீந்தமிழ் பேசினேனே.

விருந்தினையோம்பும் அன்பும் வேள்வியை நடத்தும் அன்பும்
மருந்தினும் இனிய கல்வி மாண வர்க்கீயும் அன்பும்
பொருந்திய புலவர்வாக்கிற் பூத்திடும் பொருளின் அன்பும்
அருந்தினேன் அன்பில் ஊறும் அமுதினை யுவக்கின்றேனே.

———



திருமடத்தின் தலைவரும், அடியவர்களும்.



பேரூர் நடராசப் பெருமான் திருவுருவம்.



அருட்திரு. சாந்தலிங்க சுவாமிகளின்
திருக்கோயில் தோற்றம்.

அருட்திரு. சாந்தலிங்க சுவாமிகள்
(மூலவர்)

வாழ்த்துரைகள்

மேதகு. M. பக்தவத்சலம், அவர்கள், B.A., B.L.,

முதலமைச்சர், தமிழ் நாடு.

"சத் வித்யா சன்மார்க்கச் சங்கப் பொன் விழாவிற்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்."

மேதகு. என். எஸ். எஸ். மன்ருடியார்,

கூட்டுறவு அமைச்சர், தமிழ் நாடு.

பக்தி செய்து வாழும் வாழ்க்கையே வாழ்க்கை. எல்லாம் வல்ல இறைவனை நினைத்து ஊர் வாழ, தேசம் வாழ, உலகம் வாழ ஒவ்வொருவரும் ஏற்ற தொண்டுகளை ஆற்றினால்தான் மனித சமுதாயம் உய்ய முடியும். இத்தகைய பக்தி நெறியைத்தான் நம் முன்னோர் நமக்கு வற்புறுத்திச் சென்றனர்.

அந்த வகையில், பேரூர். தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடம் தமிழ் வளர்க்கவும், சமய நெறி பரப்பவும் ஆற்றி வரும் நற் பணிகளைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அருள் நெறி பரப்பும் திருமடத்தின் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் பொன் விழா நடைபெற இருப்பதை அறிய மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பக்திச் சுவை சொட்டும் வகையில் பொன் விழா மலர் வெளிவர என் நல் வாழ்த்துக்கள்.

திருமிகு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள், B.A., B.L.,

ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

கொங்கு நாட்டுச் சிவத்தலங்களுள், கோவைக்கு அடுத்த பேரூர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. 'மேலைச் சிதம்பரம்' என்று போற்றப் பெறுவது.

அங்கே ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்து, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், கொலைமறுத்தல் என்னும் சிறந்த நூல்களை இயற்றியருளிய ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் அவர்களின் திருமடம் அமைந்திருக்கின்றது.

அத்திருமடத்தின் சார்பில், பல சிறந்த பணிகள் நடைபெற்று வருகின்றன. அவைகளுள் "சத் வித்தியா சன்மார்க்க சங்கம்" என்பது ஒன்று. ஸ்ரீ மாணிக்க சுவாமிகள் என்பவர்களால், அவர்கள் காலத்தில் தொடங்கப் பெற்ற இச்சங்கமானது, சமயப் பணியும் தமிழ்ப்பணியும் ஒல்லும் வகைகளிலெல்லாம் பல்லாற்ருனும் ஆற்றி வந்துள்ளது. ஆசிரியர் மறைமலேயடிகள், அருட்டிரு ஞானியார் அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற மாபெருஞ் சான்ருேர்கள் பலரும், இச்சங்கத்தின் ஆண்டு விழாக்களுக்குத் தலைமை தாங்கியுள்ளனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக இச்சங்கமானது, கொங்கு நாட்டுப் பகுதியில் சமய வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டுகள் ஆற்றியிருக்கின்றது. இச்சங்கத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு ஆகிய பொன்விழா, அண்மையில் மாசிமக நன்னளில் சிறப்புற நிகழ இருப்பது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

சத்வித்தியா சன்மார்க்க சங்கம், மேலும் வளர்ந்து தழைத்தோங்கிச் சமயப்பணியும் தமிழ்ப்பணியும் ஆற்றி வருதல் வேண்டும் என்று, பேரூர்ப் பட்டீச்சுரப் பெருமான் திருவருளை வழுத்துகின்றேன்.

ஸ்ரீமத் சிவஞான பாலய தேசிகன் திருவடி வாழ்க!

ஸ்ரீமத் ஞான இராசதானியான பொம்மயபாளயம் திருக்கயிலாய பரம்பரைப் பெரிய மடம் சிவகஞ்சி மயூராசல நிவாச யதிச்சுர கர்த்தரான மயிலம் தேவத்தான ஆதீன பரம்பரைத் தர்ம கர்த்தத்துவம் 19ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மகா சந்நிதானம்

அருளிய

ஆசியுரை

✳

உலகத்துப் பொருள்கள் இரண்டுவகையில் அடங்கும். ஒன்று அறிவு (சித்துப்) பொருள். இரண்டாவது அறிவற்ற (அசித்துப்) பொருள். அறிவுப் பொருள்கள் ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ளன. ஆருவது அறிவுப்பொருள்தான் மனிதன். மனிதனுக்கு மற்றைய பொருள்கள்யாவும் அடக்கம். ஆருவது அறிவாவது நல்லது கெட்டது என்று பகுத்துணரும் அறிவே. அதை வாய்க்கப் பெற்ற மனிதனே சிறப்புடைய வனுவான். அம்மனிதனே சிறந்த அறிவுடையவன் எனப்படுவான். அவனே உலகத்துப் பொருள்களின் உண்மையை யுணர முடியும்.

காணப்படும் உலகம் உலகப் பொருள்கள்யாவும் அழிவன என்பர். என்ருலும் எக்காலத்தும் எங்கும் இல்லாமலேயே போய்விடுவன வல்ல அவை. இருக்கும் நிலை மாறுமே யல்லாமல் அழிவனவல்ல. அதனுல் உலகப்பொருள்கள் யாவும் என்றும் உள்ள பொருள்களேயாம். உலகில் காணப்படும் உயிர்களும் நிலைமாறுமே யல்லாமல் அழிவனவல்ல. எனவே உயிர்களும் என்றும் உள்ள பொருள்களேயாம். உலகப்பொருள்களுக்கு அறிவில்லை. உயிர்களுக்குச் சிறிது அறிவுண்டு. சிறிது அறிவு கொண்டு அறிவற்ற பொருள்களை யாளுகின்றன வுயிர்கள். அறிவன கொஞ்சம், அறியாதன உல.

களவு. எனவே எல்லாம் அறிந்து எல்லாம் செய்யும் ஆற்றல் உயிர்களுக்கில்லை. சிறிதறிவுள்ள குழந்தையை அறிவு மிகுதியும் உள்ளதாய் நடத்துகிருள். அது போலவே அறிவு குறைவாகவுள்ள உயிர்களை நடத்தப் பேரறிவுள்ள எல்லாம் அறிதலுள்ள ஒரு பொருள் தேவை. அப்பொருளே பரம் பொருள் - அதுவே கடவுள், அறிவற்ற பொருள்களும் சிறிதறிவுள்ள பொருள்களும் என்றும் உள்ள பொருள்கள் என்ருல் இவற்றை நடத்தும் பேரறிவுள்ள பொருளும் என்றும் உள்ள பொருள் என்பதும் சொல்ல வேண்டுமோ? எனவே உலகம் உயிர் பரம்பொருள் ஆகிய மூன்று பொருள்களும் என்றும் உள்ள பொருள்கள் என்னலாம் இம்மூன்றையும் பாசம், பசு, பதி என்பர் சாத்திர நூலார்.

மேற் கூறிய மூவகை உண்மைப் பொருள்களை மக்கள் உணர்தல் வேண்டும். உணரவைப்பது அவற்றை யுணர்ந்தார் கடமை. அக்கடமையைச் செய்து வருவனவே திருமடங்கள். அம்முறையில் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் திருமடமும் அத் தொண்டினைச் செய்து வருகின்றது. அத்திருமடம், 'சத் வித்யா சங்கம்' அமைத்து மக்களை நல்வழிப்படுத்துகிறது. சத் என்ருல் உண்மைப் பொருள் என்பது, வித்யா என்ருல் கல்வி. சங்கம் என்ருல் கூட்டம். எனவே, 'உண்மைப் பொருள்களைக் கற்றுத்தரும். அமைப்பு' என்பது சத் வித்யா சங்கம் என்பதன் பொருளாம். அந்நிலையில் மக்களுக்குப் பயன்பட்டு வரும் அச்சங்கம் பொன்விழா ஏற்கிறது என்பது கேட்டுப் பெருமகிழ் வெய்துகின்ருேம். அச்சங்கம் என்றும் நிலைத்து அத்தொண்டினைச் செய்து சிறப்புறுக என வாழ்த்துகின்ருேம். அச்சங்கம் நிறுவி நடத்திவரும் திருமடத்துத் தலைவரும் இளவரசு வித்துவான் அருள்திரு இராமசாமியடிகளார் அவர்களும் நீடு வாழ்க என வாழ்த்துகின்ருேம்.

வாழ்க சீரடியாரெல்லாம்.

தவத்திரு. தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,

திருவண்ணுமலை ஆதீனம், குன்றக்குடி.

நமது பிரார்த்தனை

கொங்குநாடு இனிய தமிழ்வளம் கொழித்த நாடு. கொழிக்கின்ற நாடு. தமிழ் நலத்தின் விழுமிய விளைவாகிய அருள் நலமும் தவமும் நாடு. கொங்கு நாட்டில் ஒரு சிதம்பரம். அதனை மேலைச் சிதம்பரம் என்றும் கூறுவர். அதுதான் திருப்பேரூர் எனுந் திருத்தலம். திருப்பேரூரில் எழுந்தருளியுள்ள பட்டிப் பெருமாஞல் அந்தச் சிற்றூருக்குப் பேரூர் என்னும் பேரமைந்தது. சிற்றூரிலிருந்து பேரூருக்குச் செல்ல வழிகாட்டும் ஆசிரியர்கள் தேவை. அத்தகைய ஒரு ஞானுசிரியனை 18ஆம் நூற்ருண்டிலேயே கண்டுகொண்ட பெருமை பேரூருக்கு உண்டு. பேரூரில் தங்கி,தமிழ் நெறியும் தவநெறியும் வளர்த்த மாமுனிவர் சாந்தலிங்க முனிவர். இனிய தமிழ்க்கவிஞர். அருளார்ந்த அனுபவத்தை உலகினுக்குணர்த்திய சிறந்த அருளாசிரியர். வீரசைவ மரபைச் சார்ந்த தவச் செல்வர்! வீரம் வைராக்கியத்தால் வருவது, வைராக்கியம் என்பதைச் சிலர் பிடிவாதம் என்று கருதுகின்ருர்கள், பிடிவாதம் வேறு. வைராக்கியம் வேறு. ஒரு நெறியினை மனம் வைத்து உணர்தல் வைராக்கியம். வைராக்கியமின்றி அலைந்த மக்கட்பதைக்கு வைராக்கிய தீபத்தை ஏற்றிக் கொடுத்த மாமுனிவர். இறைவன் பெய

ரால் கொலை வேள்வி நிகழ்த்துதலும். பலியிடுதலும் மலிந்ததைக்கண்டு குவலயத்து மக்களைக் கொல்லா விரதம் மேற்கொண்டு ஒழுகச்செய்ய "கொலை மறுத்தல்" என்ற நூல் செய்தவர். இத்தகுஞான முனிவரை முதலாகக்கொண்டு தொடங்கிய சாந்தலிங்கர் திருமடம் வளரும் தமிழ் போல வளர்ந்து வந்திருக்கிறது. இந்த நூற்றுண்டில் சாந்தலிங்கர் திருமடம் பழமை நலத்தொடு புதுமைப் பொலிவும் பெற்று விளங்குகிறது. தமிழாழியராக விளங்கிய சாந்தலிங்கர் அடி நிழலில் தமிழ்க்கல்லூரியே தோன்றி தமிழை வளர்க்கிறது! பன்னூறுபேர் பாங்குறத் தமிழ் கற்கின்றனர். தமிழ் உணர்தற்குரிய அடிப்படை அறிவைத் தருகின்ற உயர்நிலைக் கல்வியும் கற்பிக்கப் பெறுகிறது. மனிதனுக்கு வேண்டிய மூன்றும் தருகின்ற ஓரிடமாகஇன்று சாந்தலிங்கர் திருமடம் திகழ்கிறது. தேவை மூன்றுவன முறையே சோறு, அறிவு, அருள். இம் மூன்றினையும் ஒருங்கே தருகின்ற சாந்தலிங்கர் திருமடத்தின் திருக்கை வழக்கத்தை மற்றோர் வாழ்த்துவதும் முகமனே யன்றி வேறில்லை. "முன்னே யுரைத்தால் முகமனே யொக்கும்" என்ற அப்பரடிகளின் அருள் வாக்கு நினைவுக்கு வருகிறது. இன்று, சாந்தலிங்கர் திருமடத்தின் அருளாட்சி ஏற்று நடத்திவரும் சிவத்திரு ஆறுமுக சுவாமிகள் அவர்கள் அடக்கமுடமையின் சின்னம். இனிய பண்பின் இருப்பிடம். அவர்கள் செய்த தவம் பெரியது. தந்தையின் தவ ஆற்றல் அவருடைய வழித்தோன்றல்களாலேயே புலப்படும், என்பது மரபு. அதனாலன்றே திருவள்ளுவர் "இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்" என்றார். ஞானத்தந்தை சிவத்திரு ஆறுமுக சுவாமிகள் அவர்கள் தம்முடைய அருள்வழித் தோன்றலாக தவத்திரு இராமசாமி அடிகளைப் பெற்றிருக்கிறார்கள். தவத்திரு இராமசாமி அடிகள் அவர்கள் நன்னெஞ்சினர்; ஈர அன்பினர்; தொண்டருழவர் அவர் தம் அரிய தொண்டால் சாந்தலிங்கர் திருமடம் விளங்குகிறது. தமிழ் வீறு கொள்ளுகிறது. தன்மை பெருகு அருள் நெறி நாளும் தழைக்கிறது! சாந்தலிங்கர் திருமடம் பொன்விழாக் கொண்டு பூவுலகில் பல்லூழிக் காலம் கரைக்கண்டன் திருவருளைப்போல சிறந்தினிது விளங்க நமது பிரார்த்தனை.

வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

(கட்டளை விசாரணை, வேலூர் தேவஸ்தானம்)

திருப்பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம் சத்வித்யா சங்கத்தின் பொன் விழாமலர் வெளிவர இருப்பதை அறிய மிக்க மகிழ்ச்சி. ஐம்பது ஆண்டுகளாக இச்சங்கம் பல்லாற்றானும் தொண்டு செய்து வருகின்றது. தொண்டு என்பது மக்களுக்கு இம்மையில் பயன்தரும் பணிகளைச் செய்தலும், மறுமையில் பயன்தரும் பணிகளைச் செய்தலுமாகும். அவை பசுத்தொண்டு, பதித்தொண்டு என இருவகைப்படும்.

பசுத்தொண்டு என்பது கல்விச்சாலை, மருத்துவச்சாலை, அன்னச்சத்திரம் இளமரக்கா முதலியன அமைத்தல் எனப்பல வகைப்படும். இவை மக்களுக்குச் சிலகாலம் மகிழ்ச்சியைத்தருவன. இவற்றிற்கு மேலாக நிலைத்த இன்பத்தைத் தரக்கூடியதொண்டு பதித்தொண்டாகும். இத்தொண்டினால் விளையும் இன்பம் செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பமாகும் என்பர் மணிவாசகர்.

......இந்த இன்பத்தை அடையப் பதித்தொண்டு செய்யவேண்டும்.

பதித்தொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும். இந்நால்வகைத்தொண்டுகளையும் செய்தலே செயற்கரிய செயலாகும். மேற்கூறிய பசுத் தொண்டுகள் எல்லோராலும் எளிதில் செய்யக் கூடியன. உடம்பைப்பேணி வளர்த்தல்

எளிய செயல். உடம்பினுள் உள்ள உயிரை வளர்த்து அந்த உயிருக்குயிராய் இருக்கின்ற உத்தமனைக்காண்பது செயற்கரிய செயலன்றோ?

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது திருவள்ளுவம்.

மேற்கூறிய நால்வகைத் தொண்டுகளில் சரியை என்பது திருக்கோயில் வலம் வருதல், அலகிடுதல், மெழுக்கிடுதல், நந்தவனம் அமைத்தல், பூமாலை கட்டுதல், திருவிளக்கிடுதல், பசுமடம் அமைத்தல், ஆடிப்பாடித்தோத்திரம் செய்தல் முதலியனவாகும்.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே!

எனச்சரியைத் தொண்டின் சிறப்பை விளக்குவர் மணிவாசகப்பெருமான்.

கிரியை என்பது மேற்கூறிய சரியைப்பணிகளோடு உயிர்க்குயிராய் இருக்கின்ற ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை மனத்தால் தியானித்து திருவுருவத்தை இலிங்க வடிவத்தில் அமைத்து வழிபடுவதாகும். இதனை,

'உயிரா வணமிருந்து உற்றுநோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணம்செய்திட்டு உன்கைத்தந்தால் உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி'

என்பர் திருநாவுக்கரசர்.

யோகம் என்பது மேற்கூறிய இருவகைச் செயல்களின் பயனாகப் பதியோடு ஒன்றிநின்று தன்னிலை இழக்கும் செயலாகும். இதனை, 'எல்லாம் அற என்னை இழந்தநலம் சொல்லாய் முருகா சுரபூபதியே!' என்பர் அருணகிரிநாதர். மணிவாசகரும் 'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே!' எனத்தன்னிலையழிந்தயோக வழிபாட்டைக் கூறியருளுகின்றார்.

ஞானம் என்பது சிவத்தோடு ஒன்றிநிற்கும்போது ஏற்படும் அனுபவம். இது அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படிவம் இவ்வண்ணம் இன்னது இது..... என அறியமுடியாதது. இஞ்ஞானத்தைச் சேக்கிழார் பெருமான்,

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என நான்கு வகையாகப் பிரித்து ஓதுவர். இந்த ஞானத்தை அடைய ஞானபூசை செய்வது அவசியமாகும்.

ஞானநூல் தனை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக்கேட்பித்தல், தான் கேட்டல், நன்கு ஈனமிலாப்பொருள தனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை என்பர் அருணந்தி சிவம்.

இவ்வண்ணம் இச்சங்கம் பலபேரறிஞர்களைக் கொண்டு ஞானநூல்தனை ஓதுவித்தும் நூற்பொருளைச் சொற்பொழிவு வாயிலாகவும் கட்டுரைகள் வாயிலாகவும் விளக்கியும் பெரும்பணி ஆற்றியுள்ளது. இச்சங்கத்தைச் சீரிய முறையில் சிறப்புற்றோங்கப் பேணிக்காத்துவரும் இராமசாமி அடிகளின் தொண்டு சிறக்க அருள்புரியுமாறு செந்தமிழ்ச்சொக்கன் திருவடிகளைச் சிந்திக்கிறோம்.

குருவே துணை.

சிரவை, பேரூர்த் திருமடத் தொடர்பு

(தவத்திரு. சுந்தர சுவாமிகள், சிரவணபுரம் கௌமார மடாலயம்)

கோச்சகக் கலிப்பாக்கள்

1 செந்தமிழ் நாட்டணியாகத்திகழ் கொங்குத் திருநாட்டிற்
சந்தமலி புனற்காஞ்சித் தண்கரையிற் கோயில் கொண்டு
வந்த அன்பர்க் கருட்செல்வம் வழங்கு பட்டிப் பெருமானார்
தந்தநடக் காட்சியருள் தகைமேலைச் சிதம்பரமே.

2 பேரூரென்றிடும் பேரும் பெற்ற அந்தப் பதியினிடை
நாரூரும் உளங்கொண்டு ஞானதபோதன ராகிக்
காரூர்பூம் பொழில் மடத்தைக் கவின்பெறச்செய்தருள் நெறியைப்
பாரூரார் அன்பர் கொளப்பயிற்று வித்த குருவருளால்

3 முன்னூற்றைம் பதினாண்டு முன்னாக்கன்னடதேய
மன், ஊறில் சிதம்பரப்பேர் மாதவனும் பணிசெய்யப்
பன்னுகொலை மறுத்தல்முதற் பகருமொரு நான்கு நன்னூல்
தன்னுயர்வாய் கொடுசொற்றார் சாந்தலிங்க தேசிகனார்.

4 மிகுந்தபல நல்நெறியில் மேலான தவநெறியும்
தகுந்தமிழின்சிறப்பும் மிகச் சார்ந்த அந்தத் திருமடத்தில்
சகப்புகழும் பெரும்புகழ்ச்சி சாராமல் இடைக்காலம்
திகழ்ந்தகுறை அதைநீக்கச் சிந்தித்தார் சிலமேலோர்.

5 அந்தநிலையினிலெங்கள் ஆதீனக் குருமுதல்வர்,
நந்தலிலாப் புகழ்ராமானந்தகுரு தேசிகரைச்
சந்ததமும் அம்மடத்தின் தலைமையுற வேண்டுமென்று
சொந்தமுறப் பலர்எழுத்து, விண்ணப்பம் சொன்னார்கள்.

6 சிலதினம் அவ்வாறவர்கள் சிந்தை விரும்பிய வண்ணம்
தலமதனிற்றங்கியபின் தமதன்பு மாணவராம்
வலமிகுமாணிக்கச்சாமியையங்கு தங்கும் வண்ணம்
நல முறுமாறிருத்தி அருள் நல்லாசி புரிந்தார்கள்.

7 தவமாணிக் கச்சாமி தலைமையுற்றுத் திருமடத்தில்
நவமாகப்பணி செய்தே நன்கு வருவாய் பெருக்கிப்
பவம்மாற்றும் நான்குநூல் பதித்தளித்தார் பலர்க்கும் அந்நாள்
அவம்நீக்கும் ஆறுமுக அடிகள் துணை ஆயினார்.

8 மாணிக்கசுவாமிகள்தாம் மாசி மகம் குருபூசை
பாணிக்கும் படிசெய்து படியிலுள பெரும் புலவர்ப்
பேணிக்கொண்டுவந்தினிய பிரசங்கம் புரிவித்தார்
மாண்மிக்க சத்வித்யா சன்மார்க்கசபை யமைத்தார்.

9 சிரவைநகர்க் கௌமாரத் திருமடத்திற் குருநாதர்ப்
பரவிநலம் பெற்றுணைப்படி பேரூர் சென்றமர்ந்த
தரமுடைய ஆறுமுகசாமி திருமடமதனைத்
திரமுறவே காத்தருளிச் சிலகாலம் சென்ற பின்னர்

10 ஆறுமுகசாமியவர்க்காம் முதுமை எய்தியதால்
வீறுகவுமாரமடம் விளங்குமிராமானந்தர்
நாறுமலர்ப் பதம் போற்றி நமக்குப்பின் திருமடத்தைப்
பேறுபெறக் காத்திடல்நும் பெரும்பாரமெனச்சொன்னார்.

11 அணிமுதலி பாளையத்தில் ஆன்றதவச் சிவராமர்
தணிவில் தவச் சேயாகித்தகை கொளிரா மானந்தர்
பணிபுரிந்து சிரவையிடைப் பயிலுமெற்கோர் துணையான
அணிராம சாமிஅடி களை அனுப்பிவைத்தார்கள்.

12 நண்ணுமிராமசாமிப்பேர் நம்அடிகள் நன்மயிலம்
எண்ணுதமிழ்க் கல்லூரியிடைப்பயின்று சிவஞான
ஒண்முனிவர் பால்வீரசைவ உபதேச முற்றே
உண்மை உணர்ந்தருட்பேரூர் உயர்மடத்திற் றிகழ்கின்றார்.

13 சாந்தலிங்க அடிகளார் தம்பெயரைத்தாங்கி ஒளிர்
தீந்தமிழின் கல்லூரி சிறந்த உயர்நிலைப்பள்ளி
ஆந்தகைசால் உயர் தொடக்கமாம் பள்ளி முதலான
ஏந்துபுகழ் அறப்பணிகள் எவர்க்கும் நலமுறவமைத்தார்.

14 சத்வித்பா சன்மார்க்க சங்கத்தைத் தொடங்குவித்து
நத்துமைம்பதாமாண்டு நண்ணுவதாற் "பொன்விழா"
மெத்தச்சீர் பெறச்செய்து மேலான புலவர்களை
வைத்துச் சொற்பொழிவளித்து மலர் ஒன்றும் வெளியிட்டார்.

15 கல்லூரியிடை முதல்வராக்க வின்று கவியின்பம்
நல்லசமயப்பண்பும் நாளும் மாணவர்க்குரைக்க
வல்லபணி ஆற்றும் எங்கள் வளராம சாமிப்பேர்
சொல்லடிகள் தமிழ்த்தொண்டும் துணைமடமும் வாழியவே.

16 திருமடத்தார் கல்லூரி, சிறந்த உயர் நிலைப்பள்ளி
பெரும்பணிசெய் ஆசிரியர், பெரிது வந்து புரந்திடுவோர்
வரும்நல்ல மாணவர்கள் மாணவியர் நலம் பெற்றுத்
திருவுடனே வாழ்க எனச் செவ்வேளை வாழ்த்துதுமே.

குருபாதமே கதி.

திருப்பேரூர் அருள்மிகு சாந்தலிங்க அடிகள் திருமடம்
சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின்

பொன் விழா வாழ்த்துக் கவி

தவத்திரு. முருகதாச சுவாமிகள், கௌமாரமடம், திருவாமாத்தூர்.

வெண்பா

கொங்கு மலர்ப்பொதும்பர்க் கொங்கிற் சிவதலமாத்
தங்குமோ ரேழு தலத்துள்ளும்—பொங்குபுகழ்
மேவுதில்லைக் குஞ்சிறப்பாம் மேலைச் சிதம்பரமாத்
தாவுதிருப் பேரூர்த் தலம்.

அப்பதியில் வீரசைவ ஆகமத்தோர்க் குட்சிறந்து
மெய்ப்பரம ஞானநிலை மேவியே—செப்பருஞ்சீர்
சாரு மொருநான்கு சாத்திரஞ்சொல் சாந்தலிங்கப்
பேருடன்வாழ்ந் தானோர் பிரான்.

சிவ கருணை சிவபத்தி பாசமறல்
மேவரிய மோனநிட்டை வீறெடுத்துப்—பாவதனல்
நான்குநூல் செய்தளித்த ஞானிதவச் சாந்தலிங்கர்
மேன்மையளத் தற்கரிதா மே.

அன்னோன் சிவப்பே றடைந்த நிலையத்தை
நன்னேன் புடன்புரந்த நற்றெழும்பன்—மன்னார்வ
மாணிக்க சாமி வளம்பலசெய் தேயவற்றைப்
பேணிச்செய் வண்மை பெரிது.

சத்வித்யா சன்மார்க்க சங்கந் தனைநிறுவி
வித்தகர்கள் போற்ற மிளிர்வித்தான்—நத்துமவன்
பின்வந்த ஆறுமுகப் பேர்ப்பெரிய னும்புரந்து
தன்வழிக்கோர் நற்றவற்கொண் டான்.

சிரவணவூர்க் கௌமார தேவனருள் பெற்றுப்
பரவுமா தைத்தண்ட பாணிக் குரவனன்பு
சார்ந்து சிவராம சாமிதவன் சேயாகி
நேர்ந்தசுகு ணன்றொடர்ந்தா னே.

சீரார் மயிலச் சிவஞான பாலையநற்
பேரார் முனிதீக்கைப் பேறடைந்து—தாராளக்
கண்ணியத்தன் னேன்செய்தமிழ்க் கல்லூரி யிற்பயின்ற
புண்ணியத்தோன் எந்தமக்கன் போன்.

சந்தலிங்கர் பேர்தோய் தமிழ்க்கல்லூ ரிக்குயர்வு
வாய்ந்தபள் ளிக்கு மடாலயத்தில்—தோய்ந்த
பவிசா யிரத்தினுக்குப் பண்புறச்செய் மேலோன்
கவின்ராம சாமியடி கள்.

மாசிமா தத்தின் மகநாளிற் சாந்தலிங்கர்
ஆசில்குரு பூசையுடன் அச்சங்கம்—பேசவரும்
ஆண்டுவிழா கல்லூரி ஆண்டுவிழா ஆதியன
வேண்டு சிறப் பாப்புரிவான் மெய்.

பேரின்ப முத்திப் பெருவீட் டினுக்கேகச்
சாரின்ப நால்வாயில் சாற்றுமந் நூல்—சீராய்த்
தனித்தனியச் சிட்டளித்த தக்கோன்; இனிமை
கனிராம சாமியடி கள்.

சத்வித்யா சங்கத்தின் சாருமைம்ப தாண்டுவிழா
நத்துபொன்வி ழாவாக நண்ணியதால்—மெய்த்தவரும்
வித்தகநற் பாவலரும் மேவுசைவ ஆதீனத்(து)
உத்தமரும் கொண்டா ருவப்பு.

நற்கருத்துக் கட்டுரைகள் நண்ணுமா சிச்செய்தி
சொற்செறிவார் வாழ்த்துமுதற் றேயபவே—உற்றவுயர்
பொன்விழா நன்னுளிற் பூத்த மலராக
மன்னிடுமிப் புத்தகநூல் மாண்பு.

தங்கவிழாக் கொள்பேரூர்ச் சத்வித்யா சன் மார்க்க
சங்கமின்று போ லுயர்வு சந்ததம்சீர்—பொங்கித்
தழைக்கத் தவராம சாமி யடிகள்
உழைப்பு சிறக்கமேன்மே லும்.

சாந்தலிங்கர் கோயிலுடன் சார்ந்ததமிழ்க் கல்லூரி
வாய்ந்த மடத்தமைசிர் வாகமுதல்—ஏய்ந்த
தவச்சீர் பெறுராம சாமி யடிகள்
உவப்போடு வாழ்கபல்லாண் டு.

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக ஆறுமுகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

7-ஆம் முறைத்தலைவர்.

ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்,
திருப்பாதிரிப்புலியூர்.

இருவேறு இயற்கைத்தாய இந்நில உலகில், திருவினைத் தேடிச் செருக்கி வாழாமல், வையத்துள் வாழ்வாங்கு வாழத் தெள்ளிய அறிவு பெறல் யாவருக்கும் இயைந்ததொன்றன்று. நோற்பார் சிலராகவே இயலும் இவ்வுலகிலே அவரே 'செல்வன் கழல் ஏத்தும் செல்வம்' பெற்று ஒளிர்கின்றனர். தெள்ளிய அறிவு பெருதார் நிறைந்திருத்தலைக் கண்ட ஆன்றோர், மனம் சாம்பிக் கூறியன பல. 'ஊன் எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!' என்றெழுந்த வாக்கும் அத்தகைமைத்தே.

கலைகளும், நூல்களும், அச்சுப்பொறி முதலிய பலவகை முன்னேற்றங்களும் இல்லையெனக் கூறும் அப்பழங்காலத்திலேயே,

'அலகுசால் கற்பின் அறிவு நூல்கல்லாது
உலகநூல் ஓதுவ தெல்லால்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந்துணையறிவார் இல்' என்றும்

'கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற்பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து'

என்று நாலடியாரிலும்

'கற்றுரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்'

எனத் திருவாதவூரடிகளும் வற்புறுத்திக் கூறியிருப்பதால், நல்லறிவு நாளும் தலைப் படற்கு வேண்டும் முயற்சியுட் புகுத்தும் நூலறிவல்லாது வேறறிவு மக்களுக்கு வேண்டற்பால தன்று என அறியப்படுகிறது.

இக்கொள்கையினை மக்கள் பால் வலியுறுத்தற்காகவே, அல்கு கழியினும் கடல் செல்லுமாறு போல நிறையறிவினர் குறையறிவினர் பாற்சென்று மக்களை மக்களாக வாழவழியருளினர். 'மனிதர்காள் இங்கேவம்மின் ஒன்று சொல்லு கேன்,......... புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி இனிது' என்பதைத் தெரிவித்தனர். இல்லற நெறிக்கண் நின்றே அவ்வின் கனியைச் சுவைத்துப் பேராநந்தம் பெற வழி காட்டினர்.

செம்மொழி பற்றிக் கற்க வேண்டுவனவற்றைக் கற்பதே 'சத்வித்யா' எனப்படும்.

கற்க வேண்டுவனவற்றைக் கற்றுவிட்டால் மட்டும் போதுமோ? கற்றவாறொழுகி, 'யான் என தென்னும் செருக்கு அறுப்பானன்றோ வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' 'இருவினை மும்மலமும் அற இறவியொடு பிறவி அறவழி தேடிக்கொள்' வதன்றோ உடம்பினாற் பெற்ற பயனுவதெல்லாம்?

இவ்வொழுகலாறே 'சன்மார்க்கம்' எனப்படும்.

சத்வித்தையையும் சன்மார்க்கத்தையும் பரப்பவே மக்கள் உய்தி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அருளே கடைப்பிடித்த அறிஞர் நாடெங்கும் திரிந்தனர். அங்ஙனம் திரிந்தவருள், வடமொழி-தென் தமிழ்க் கடல்களுள் திளைத்து அவற்றின் நிலை கண்டுணர்ந்த இம்மடாலயத்து ஐந்தாமுறைத் தலைவர்களாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ ல ஸ்ரீ சிவசண்முக மெஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் இந்த நூற்றாண்டிலே தலை சிறந்தவர்கள். அவர்கள் 1924 ஆம் ஆண்டிலே, கொங்குநாட்டுச் செலவினை மேற்கொண்டார்கள். அஞ்ஞான்று திருப்பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தில் ஒரு வாரகாலம் தங்கிச் சைவப்பயிர் தழைக்கச் சொன்மாரி பொழிந்தருளினார்கள்.

தமிழும் சைவமும் தழைத்து இனிதோங்கச் சத்வித்யா சன்மார்க்க சங்கம் கடந்த ஐம்பதாண்டுகளாக அரும்பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதொன்று. அச்சங்கம் இன்று பொன் விழாக் கொண்டாடுவதில் யாமும் பெருமகிழ்வெய்துகிறோம். நெடிது நின்று மன்பதைகட்குச் சாலப்பயன்தந்து ஆல்போல் தழைத்தும் அறுகுபோல் வேர்விட்டும் யாண்டும் தன் தொண்டினை அச்சங்கம் பரப்புக என எம் அண்ணல் அறுமுகச் செவ்வேளின் சேவடிகளைச் சிந்தையிற் கொண்டு இறைஞ்சுகின்றோம்.

சிவத்திரு சபாபதி சுவாமிகள்

ஸ்ரீ மௌன தேசிக ராதீனம், சிதம்பரம்.

"....பேரூரர் பெருமானை புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ருமன்றே" எனத் தில்லைத் தேவாரத்திலே கூறிப் பேரூர்ப் பெம்மானைத் தில்லையிற் கண்ட நிலைமையைத் தெரிவிக்கின்ருர் நம்பி ஆரூரர்.

"பிரானே திருத்தில்லையுளாய் அன்றிப்போதையேன் முன்
ஒரானேறி வர்ந்து அம்பிகையோடெளி தோடி வந்தாய்..."

எனத்தில்லைப் பிரான் பேரூரில் காட்சியளித்த நிலையைச் சாந்தலிங்க சுவாமிகள் தாம் அருளிய வைராக்கிய சதகம் என்னும் நூலில் விளக்குகின்ருர்கள்.

பெருமிழலைக் குறும்பராம் பரம யோகியும் பெரிது வந்து தன் திருவடியை வந்தனை செய்ய நம்பி ஆரூரர் நானிலத்து யோக நெறியை விளக்கினர். பேரூர்ச் சாந்த மூர்த்தியும் அவ்வாறே ஞான நெறியை நானிலத்து மக்கள் யாவருமுணர விளக்கி வாழ்ந்தார்.

ஞான சக்தி கிரியாசக்திகளாகிய, பரவையார்சங்கிலியாரென்னும் இரு மாதரை மணந்து இல்லற வழியொழுகியவர் நம்பி ஆரூரர். ஞான சக்தியாகும் ஞானம் பிகை அம்மையை மணந்து இல்லற வழியொழுகியவர் பேரூர் சாந்த தேசிகர். இவ்வாறு காலவேறுபாட்டால் இருவரும் வெவ்வேருக விளங்கினும் செயல் முறையால் ஒரு தன்மையரே என்பது விளங்குகின்றது.

நம்பி ஆரூரர் சிவபெருமானிலும் வேறல்லர். இவ்வாறே பேரூர்ச் சாந்த லிங்கப் பெருமானும் இறைவனிலும் வேறல்லர் என்பது வெள்ளிடை மலை.

பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் "...என் அங்கைத்தளம் பற்றிய சாந்தன் என்கோ." எனக் கூறியிருப்பதிலிருந்து அவர் வழிபாடு செய்துவந்த இட்டலிங்கப் பெரு மானுக்கும் சாந்தலிங்கம் என்ற பெயர் இருந்தமை புலனுகின்றது. ஆதலினலும், சாந் தலிங்க தேசிகர் தத்துவ நிலையுணர் சற்குரு மூர்த்தமாம் ஆதலின் குருவே சிவம் எனக் கூறினன் நந்தி...' என்னும் திருமந்திரம் வலியுறுத்து மாற்ருனும் இறையாம் பரம் பொருள் இவரே என்பதனைத் தெள்ளிதின் உணரலாம்.

சிவபெருமான் ஞான வடிவாய திருவருளைச் சத்தியாகக் கொண்டு உலகுயிர்க்கு நலம் பாலிக்கின்றது போலவே சாந்தலிங்க பெருமானும் ஞானம்பிகையைத் தனது சத்தியாகக் கொண்டு உயிர்கட்கு நலம்பாலிக்கின்ருர். சாந்தலிங்க சுவாமிகள் இன்ன ருள் ஞானம்பிகை அம்மை மறைந்து சாந்தலிங்கப் பரவெளியில் கலந்த நிலையிலும் * அநுற்பூத நிலையில் உயிர்கட்கு நலம் செய்து வந்தது.

அவ்வாறு இடையறவு பட்ட நிலை நீடித்து நில்லாமல் மீண்டும் அவ்வம்மை யின் அருள் சத்வித்யா சன்மார்க்க சங்கமாகப் † பரிணமமுற்றது. சிவபெருமானது ஞானவடிவமாய் திருவருட் சத்தி பின்னர் ஞானம்பிகையானதேபோல் மேலும் அப்பெய ராகிய ‡சத்வித்யா சன்மார்க்க சங்கமாகத் திருத்தம் பெற்று விளங்குவது இயல்பே யன்றிப் புதுமையல்ல.

ஞான நெறியைப் பரப்புவான் போந்தவர் மாணிக்க வாசக சுவாமிகள். அப்பொருளில் அமையும், சத்வித்யா சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்தவரும்

---

* அநுற்பூதம்-வெளிப்பட்டுத் தோன்ருத நிலை

† பரிணமம்—திரிவு ‡ வித்தை—ஞானம்.

அப்பெயர்த் தாங்கிப் பேரூர் மடத்தைப் புது உருவில் விளக்கஞ் செய்த மாணிக்க சுவாமிகள்.

அவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற இச்சங்கம் தோன்றிப் பலப் பல நற்பணி யாற்றி நிலவுற்ற காலம் 50 ஆண்டுகள் ஆகின்றதெனத் தெரிந்து மிக மகிழ் கின்றேம்.

மாணிக்க சுவாமிகளை நெடுநாட்களாக அறிந்து வந்தது போலவே இச்சங்கத் தையும் நெடு நாட்களாக அறிவோம். ஏறக் குறைய 45 ஆண்டுகள் இச்சங்கம் ஆற்றி வரும் பணிகள், இச்சங்கத்தில் தலைமை ஏற்கும் பெரியார்கள் சீரிய சொற்பொழிவு நிகழ்த்தினேர் யாவரையும் அறிவோம்.

இடையீடின்றி ஆண்டு விழா நிகழ்ச்சியும் பிறவும் அனுப்புவார்கள்.

புலிசை ஞானியாரடிகள், பண்டிதமணி, கதிரேசஞ்செட்டியார் முதலிய பேரறிஞர் பலரும் தலைமை தாங்கி நடாத்திய இச்சங்கத்தில் இரண்டொரு ஆண்டு விழாவைக் கண்டுகளிக்கவும், நாற்பத்தொன்பதாம் இவ்வாண்டில் தலைமை வகிக்கவும் வாய்ப்புக் கிடைத்து மகிழ்வுற்றேம்.

ஐம்பதாண்டுகள் நிலவுற்று நற்பணி செய்து வரும் சத்வித்யா சன்மார்க்க சங்கம் தமிழகத்துக்கும், சைவத்துக்கும் மேலும் பலப் பல அரிய நற்பணிகள் ஆற்றி நீடு நிலவ வேண்டும் எனவும், இவ்வாண்டு நிகழவிருக்கும் 50 ஆண்டு நிறைவுப் பொன் விழா எல்லாச் சிறப்புக்களும் அமையச் செவ்வனே நிகழவேண்டும் எனவும் இச்சங்கத் தின் தலைவர், அங்கத்தினர், புரவலர் முதலிய அனைவரும் எல்லா நலமும் பெற்று பீடு வாழ வேண்டும் எனவும் திருவருளைப் பெரிதும் வேண்டுகின்றேம்.

வெண்பா

சத்தே சிவமாகும் சாந்தலிங்கர் சத்தியெனும்
வித்யை ஞானம்பிகையா மேயிவர்தம்—புத்துருவே
சத்வித்யா சன்மார்க்க சங்கம், தழைத்திடுமே
இத்தரைக் கண் என்றும் இருந்து.

———

பண்டித. சித. நாராயணசாமி சுவாமிகள்,

அறுபத்து மூவர் மடம், திருவையாறு.

அருளும் இறையன்பும் ஆன்ற துறவும்
தெருளும் படைத்துச் சிவமா — மருவியே
ஆறியிருத்த லறிவுசால் மக்களுடற்
பேறு பெறுவார்நற் பேறு.

என்றறிந்து இன்னல் வடிவாகிய பிறவியறப் பெற்றின்புருவாக இருத்தல் மக்களுடம் பெடுத்த மாண்புடையவுயிர்கட்கேயியலும். பிறவுயிர்கட் கியலாது. ஆதலால் மக்களுடம் பெடுத்தவர்கள், பிறஅழியும் பேறுகளை அழிதராப்பேறுகளெனக் கருதியழிதராமல், பொருளைப் பொருளாக உணர்ந்து அதுவாகியஞரகன்று ஆறியிருத்தல் வேண்டுமென்று,

திருப்பேரூரிலே சில நூற்றுண்டுகட்குமுன்னர் "தம்முதல் குருவுமாய்த்தவத்தினிலுணர்த்த" என்றபடி "சிவர்களிடத்திலருள் சிவபக்தி திருந்திய துறவு மெய்ஞ்ஞானமாவதோர் வடிவா" கியமெய்க்குருபராரகச் சாந்தலிங்க முனிவர் என்ற திருப்பெயருடனெழுந்தருளி விளங்கிய அருளிறைவர், கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார் என்னும் நான்கு நூல்களாலறிவுறுத்தியும், தம் மாணாக்கராகிய பழமலைக்கு மாரதேவ முனிவரையும், அம்முனிவர் மாணாக்கராகிய திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளையும் கொண்டு சுத்தசாதகம் அத்துவிதவுண்மை மகாராசாத்துறவு முதலிய நூல்களாலும் திருப்போரூர்ச் சந்நிதி முறை முதலிய நூல்களாலும் அறிவுறுத்துமாறு செய்தும் விளங்கியருளிய செய்தி, சான்றோர் யாவருக்கும் புலனாகும். இதுபோதும் அம்முனிவர் பெருமாணாகியசாந்தலிங்க சுவாமிகள், தம்மடிகந்தாகப்பற்றித் தந்திருமடாலயத்திலுறை தரும் துறவறச் செம்மல்களைக்கொண்டு தோன்றாத்துணையாக நின்று "எழுத்தறியத் தீருமிழி தகைமை தீர்ந்தான், மொழித்திறத்திறத்தின் முட்டறுப்பானாகும் - மொழித்திறத்தின், முட்டறுத்தநல்லோன் முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடுபெறும்" என்பதால் முதனூற்பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெறவாயிலாக எழுத்துநூற் பயிற்சியையே யாவருங்கொள்ளுமாறு செய்வித்தருள்கின்றனர்.

இவ்வாறு பண்டு மின்றும் அருள்புரிந்து வருகின்ற அச்சாந்தலிங்க முனிவராகிய அருளிறைவரின் பெருநலந்தெரிந்து வழிபட்டிருமைப் பேற்றையுமக்களெய் துமாறு, அச்சாந்தலிங்கப்பெருமானுடைய திருமடத்துச் செம்மல்களாக விளங்கும் துறவரசர் ஆறுமுக அடிகளாரும், துறவரசரும் புலமைமிக்கவருமாகிய இராமசாமி அடிகளாரும், இவர்கட்குறுதுணைவராக விளங்கும் மெய்யன்பர்களும் பொன்விழா நிகழ்த்தவும், அப்பொன் விழாவின் நினைவுச்சுவடியாகப் பொன்விழா மலர்ச்சுவடி வெளிவரச் செய்யவும் அவ்வருளிறைவர் தாட்டுணை துணையாக முயலுகின்றனர். இச் சான்றோர்களின் முயல்வு பயனுடையதாக ஆகி யின்பளிக்கு மென்பதிலையமில்லை.

இச்சான்றோர்கள் இவ்வருமந்தபணிபோன்ற பதிப்பணிபசுப்பணிகளைச் செய்து தாமின்புறலோடுலகின்புறச் செய்து கடுக்களத்திறைபருள் புரிய நடுக்கின்றி வாழியர் என அன்பினுலுளமாரவாழ்த்துகின்றனன்.

தவத்திரு. இராமநாதஸ்வாமிகள்,

ஈசான்ய மடம், திருவண்ணாமலை.

நமது பாரத தேசம் "புண்ணிய பூமி" என்று போற்றப் பெறுகிறது. காரணம் செல்வங்களுள் தலையாய ஆத்மியச் செல்வம் நிறைந்திருப்பதே. ஏனைய தேசங்கள் ஜடசக்திகளின் மாயாஜாலங்களில் மயங்கி விஞ்ஞானத்துறையில் விந்தை பல புரியினும் மெய்ஞ்ஞானத்தின் முன் அவை மிக மிக அற்பமேயாகும். மெய்ப்பொருள் காட்சி கண்ட "மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு பாரதம். அவர்கள் தமது தீர்க்க தரிசனத்தால் கண்ட பேருண்மைகள் என்றும் அழிவில்லாதவை. மாறுபடாதவை. காலவட்டத்தில் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்புகளும், ஆதிக்கங்களும் கூட அவற்றைப் பாதிக்க வில்லை.

நமது பாரதத்தில் பலப்பலவான அன்னிய கலசாரங்கள் வந்து குடிபுகுந்த போதினும் அவைகளையும் அணைத்துக்கொண்டு மேலோங்கி விளங்குவது நமது கலாச்சாரத்தின் தனிச் சிறப்பியல்பு. எம்மதமும் சம்மதம் எனக் கொள்வது நமது பண்பாடு. உலக சரித்திரம் தொடங்கிய காலத்துக்கு முன்னரே நமது கலாச்சாரம் சிறப்புற்று விளங்கியது என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கண்ட உண்மையாகும்.

உலகனைத்துக்கும் ஆத்மீய உண்மைகளைப் போதிக்கும் சிறப்புப் பெற்றிருந் தும் பாரத மக்கள் அவற்றை மறந்து புறப் பொருள் இன்பத்தை மதித்து வாழ்க்கைப் புயலில் சிக்குண்டு தவிக்கும் நாளில் அருட்சக்தி பெற்ற அவதார மூர்த்திகள் தோன்றிச் சன்மார்க்கத்தை உபதேசித்து மக்களை நல்வழிப்படுத்துகின்றனர். வாழையடி வாழை எனவரும் மகான்களின் மரபில் அவதரித்தவர் பேரூரில் திருக்கோயில் கொண்டு விளங்கும் ஞானத்தபோதனர் சாந்தலிங்க அடிகள் ஆவர். ஞான சாதனங்கள் அனைத்திலும் மனத்தைச் செம்மைப் படுத்துதல் தலையாய சாதனமாகும். உலகத்தில் எல்லாவித சித்தி களும் செய்யவல்லவை. ஆனால் சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்றதிறம் அரிதினும் அரிதாகும். இத்துறையில் அருண்மிகு அடிகளாரின் கருணைத்திறம் வியக்கத் தக்கது.

அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருமரபில் வந்த அடியார்கள், குருமர பின்வழி நின்று மக்களுக்கு நல்வழி காட்டும் பணியில் தோற்றுவித்த சத்வித்யா சன்மார்க்க சங்கம் இந்நாள் பொன்விழா கொண்டாடுவது கேட்க மகிழ்ச்சியடைகிறேன்.

ஐம்பது ஆண்டுகள் அயராது பணியாற்றி வரும் தாபனங்கள் இந்நாளில் மிக மிக அருமையாகும். ஐம்பது ஆண்டுகள் நிறைந்த "சத்வித்யா சன்மார்க்க சங்கம்" பெருமைக்கு உரியதாகும். தாபனத்தின் குறிக்கோள் விரைவில் நிறைவெய்தவும், ஒவ்வொரு இல்லமும் சத்வித்யாசன்மாக்க சங்கமாக விளங்கவும், மக்கள் மனம் பண்பாடு அடைந்து "மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருளை" நாடி மேன்மை பெறவும் இறை அருள்வதாக.

— — —

நன்ஞானம் நன்னெறி அடைதல்

திருப்பூவணம் வேதாந்த மடம்

ஸ்ரீ காசிகா நந்த ஞானாச்சார்ய ஸ்வாமிகள்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

—(திருக்குறள் இல்லறவியல் புகழ் 6)

கோயம்புத்தூரை அடுத்த பேரூரில் சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் 'சத்வித்யா சந் மார்க்க சங்கம்' என்னும் இச் சங்கம் தோன்றி ஐம்பது ஆண்டு பூர்த்தியாகிறது. ஒரு சங்கமோ, ஒரு மனிதன் தோற்றமோ, உண்டாயின் புகழொடு தோன்ற வேண்டு மென்று கூறுகிறது. அதுபோல் தோன்றியதாகும் இச் சங்கம். மேன்மேலும் விருத் தியாக வேண்டும் என்று நடந ராஜன் திருப்பாதத்தினைச் சிந்திக்கின்றோம்.

உலகில், அசத் வித்தையும், அசத் மார்க்க சங்கமும் அநேகம் இருக்கின்றன. சன்மார்க்கக் கூட்டமும் சத் வித்தையும் கிடைப்பது அரிதினும் அரிது. இவ்விரண் டினையும்,

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்,

—(திருக்குறள் அறிவுடைமை 10)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி இருப்பதுவும் நன்று. (மூதுரை 9)

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் தீது. (மூதுரை 10)

திருக்குறளும் மூதுரையும் கூறுகின்றது.

புகலரும் பரப் பிரமமாங் கடறணிற் புணர்பாத்தினர் ஈசன்
சகமொ டாருயிர் எனுநுரை யாதிகள் தந்துமாற்றிடு மென்றே
பகரு நான்மறை எனினதில் எதையெதைப் பற்றுவாம் விடுகிற்பாம்
சுகசொ ரூபமே அனைத்துமென் றகற்றுதி துவிதபா வனைநெஞ்சே.

—(சாந்தலிங்க சுவாமிகள் வைராக்கிய சதகம் 25)

தேர்ந்திடின் அபரம் பரமென இரண்டாய்த் திகழ்தரு ஞானமாங் கவற்றா
டோர்ந்திடு மறையாதியகலை அபரம் உயிர்பர ஞெடுவிர வயிக்கியம்
கூர்ந்துணர் உணர்வே பரமதைத் தெளியக் கூறன்மாத்திரங்கலைஞானம்
சார்ந்துணர் வரிதப் பரனையோர்ந் தன்றிச் சாற்றினவ் வைக்ய மாந்தவமே

—(சாந்தலிங்க சுவாமிகள் வைராக்கிய தீபம் 34)

அனைத்தும் பிரஹ்ம ஸ்வரூபம் என்று சாந்தலிங்க சுவாமிகள் கூறுகிறபடியே அதனை அடைதற்கு (சத் வித்யா) பரஞானம் வேண்டும். அதாவது, பிரஹ்ம ஞானம் வேண்டும். அந்தப் பிரஹ்ம ஞானத்திற்குச் சாதநம் (சந் மார்க்கம்) அபரஞானம் அதாவது, வேதம் நான்கு வேதாங்கம், சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தஞ் ஜ்யோதிஷம், கற்பம் ஆறு. நியாயம், மீமாம்சை, ஸ்மிருதி, புராணம், நான்கு என்பன ஆம்; அதாவது பதினன்கும் ஆம்; அபர ஞானம் உடையவர்களே இக்காலத்தில் அரிது.

சாந்தலிங்க சுவாமிகளே, வைராக்கிய தீபம் கவி 5ல் "திரிவிதவுலகத் தரிதொரு ஞானி தேர்விடத் தென்றுமோர் ஒன்றை உரைசெயிற் பிரம வித்தையொத் தரிதோ என்றுமிவ் வுலகுரைப்பதனல்," எனக் கூறியிருப்பதனல்; பர ஞானம் உடையவர்களே மூன்றுலகத்தும் அரிது என்று கூறுகின்றபடியால் சன்மார்க்கத்தினைக் கற்று, சத் வித்தையினை அடைதல், அநந்தங்கோடி ஜந்மங்களிற் செய்த புண்ணியம் உடையார்க்கே கிடைக்குமாகலின் மநிதராய்ப் பிறந்த யாவரும் விடாமுயற்சி செய்து நடநராஜன் அருளால் அவதரிக்கும் குருநாதரின் கிருபையினல், விரைவில் இகத்தே சத் வித்தையினை அடைந்து, சச்சிதாநந்த சொரூபமாக விளங்குவோமாக.

எல்லாரும் இன்புற்று இனிது வாழ்க!

தவத்திரு அம்பலவாண சுவாமிகள்

பவளக்குன்று மடம், திருவண்ணாமலை.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை—குறள்.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளின் திருவருள் பெற்ற தவத்திரு அடிகளுக்கு வணக்கம். தங்கள் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் 50வது ஆண்டுவிழா (பொன்விழா) வின்சிறப்பு சுவாமிகளின் தன்னலமற்ற சேவை, உடல் நலம் கருதாது ஆற்றும் பணி, தளரா முயற்சி இவற்றின் பயனே.

அருணாசலேஸ்வரர் கிருபையால் சுவாமிகள் நீண்ட ஆயுளும் எல்லாவல்லமையும் பெற்று, சுவாமிகளின் முயற்சியால் சங்கமும் கல்லூரியும் வளர்ச்சியடைந்து உலக நலனுக்குப் பாடுபட வாழ்த்துகிறேன்.

உயர்திரு, கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள், மதுரை.

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில், ஐம்பது ஆண்டுகளாக நற்பணி புரிந்து வரும் சத்வித்யா சன்மார்க்கசங்கத்தின் பொன்விழா சிறப்புற நிகழ இருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வி அறிவு உலகியல் வாழ்விற்கும், பொருள் நிலை உயர்விற்கும் இன்றியமையாதது. எனினும், கல்வியின் இறுதிக் குறிக்கோளும், முடிந்த பயனும் மெய்யுணர்ந்து இறைவன் திருவருளைப் பெறுதலே யாகும். இவ்வுண்மையை,

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்'

என்னும் பொய்யா மொழி இனிது விளக்குகின்றது.

ஆனால், இக்கால மேனாட்டுக் கல்வி முறை விஞ்ஞானத்தின் பேரால் மெய்ஞ்ஞானம் மறையக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. விஞ்ஞானம் இவ்வுலக வாழ்க்கைக்கு மிகவும் வேண்டற் பாலதென்பதில் எட்டுணை ஐயமும் இன்று. எனினும், உண்மை யறிவை ஒடுக்கி, உலகாயதத்தை வளர்க்கும் முறையில் அது அமைதல் ஆகாது.

இனி, சமய நெறிகள் பலவாயினும், அவற்றின் மூலம் உணரப்படும் மெய்ப் பொருளாம் இறைவன் ஒருவரே யாவர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் பொன்மொழி இதற்குப் போதிய சான்றாகும்.

எனினும், உலக சமயங்கள் சில, தம்முள் பிணங்கி, எல்லார்க்கும் பொதுவான பரம்பொருளைத் "தம் தெய்வம் எம்தெய்வம்" என்று முழங்குவ ஆயின. இப்பொருந்தா வழக்கை மன்பதைக்கு உணர்த்தி உய்விக்கவே இராமலிங்க அடிகள் சமரச சன்மார்க்க நெறியைத் தோற்றுவித்தருளினர்.

இவ்வாறு, உயிரின் உறுதுணையாய் விளங்கும் உண்மைக் கல்வியையும், பொது நெறியையும் மக்களுக்கு உணர்த்தும் உயர் பணியைத் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் உருவான சத்வித்யா சன்மார்க்க சங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆற்றி வருதல் பாராட்டிப் போற்றத் தக்கதாகும். ஆதலின், சங்கத்தின் திருத்தொண்டை ஏத்தும் வகையில் பொன்விழா நிகழ்தலும், சிறப்பு மலர் பூத்தலும் பொருத்தமுடைய வாகும்.

பொன்விழா இனிதே நிகழ்ந்தேறவும், சத்வித்யா சன்மார்க்க சங்கமும், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடமும் மேன்மேலும் வளர்ந்து மெய்யறிவுப் பணியைச் சிறப்புற ஆற்றிப் புகழ் சான்று இலங்கவும் அங்கயற் கண்ணி தம்மொடும் அமர்ந்த ஆலவாய் அவிர் சடை அண்ணல் அருள் புரிவாராக.

உயர்திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, எம். ஏ., எம். எல். சி.,

"அன்பு நிலையம்" இலஞ்சி, தென்காசி.

வணக்கம் பல. சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் பொன்விழா நடைபெறவிருக்கிறதென்பது அறிந்து மிக மகிழ்ச்சி. 50 ஆண்டுகளாக சங்கம் நல்ல முறையில் செயலாற்றியிருக்கிறது. இன்றைய சமுதாய சூழ்நிலையில் இத்தகைய சங்கங்கள் மக்களுக்கு சமரச சன்மார்க்க போதனையை நினைவூட்டி சமயவாழ்க்கையைக் கடைப்பிடிக்கச் செய்ய மிகவும் பயன்படும். சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் சீரியபணி மென்மேலும் சிறந்து விளங்க முருகன் அருள் பாலிப்பாராக.

உயர்திரு கி. ஆ. பெ. விசுவநாதம்

திருச்சி.

கோவை, பேரூர், ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் பொன்விழா விரைவில் நடைபெறவிருக்கிறது என்ற செய்தியும், அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவருகின்றது என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றன.

விழாஇனிது நடைபெற வேண்டுமெனவும், மடாலயம் வளர்ச்சியுற வேண்டுமெனவும், சன்மார்க்க சங்கம் சிறந்து ஒளிவீச வேண்டுமெனவும், மலர் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் நற்றொண்டு செய்யத் தமிழகம் முழுதும் நன்மணம் வீசவேண்டு மெனவும் முழுமனதோடு வாழ்த்துகிறேன். வணக்கம்.

தமிழ்நெறி தழைத்தோங்குக

தமிழ்ப்பெரியார் மயிலை சிவமுத்து அவர்கள்

அருள்திரு சாந்தலிங்க அடிகளார் அவர்கள் தம் திருப்பெயரால் பேரூரின் கண் அமைந்துள்ள அறநிலையத்தின் தனிசிறந்த பணிகளை நான் அவ்வப்போது எண்ணி மகிழ்வதுண்டு.

இயற்கை அன்னையின் எழில் குலுங்கும் இனிய சூழலில் இறை பணியும் கல்வித் தொண்டும் ஆற்றி வரும் பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடாலயம் தன்கிளை அமைப்பாகச் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தினைத்துவக்கி நன்முறையில் இயக்கிப் பொன்விழாவும் கொண்டாட விருப்பது என் மகிழ்ச்சியினை மிகுவிக்கின்றது. இறையார்வம் மீக்கூரும் இப் பொன்விழா தனிசிறந்த பெருவிழாவாகத் திகழவும் வென்றி பயக்கவும் வாழ்த்துகின்றேன்.

அறநிலையத்திலமர்ந்து எளிய வாழ்வினைக் கைக்கொண்டு என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் உயரிய கொள்கையின் படி நாட்டு மக்களுக்கு அரும் பெரும் பணி புரிந்து வரும் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தினரை என் உள்ளமெல்லாம் இனிக்கப் பாராட்டுகின்றேன்.

பேரூர் மடாலயத்தில் பயிற்சி பெறுவோர்தம் அருந்திறனையும் அறிவாற்றலையும் நான் நேரில் அறியும் வாய்ப்புக்கள் பெற்றுள்ளேன். தமிழ்நெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் செயற்கரிய செயல்களைச் செய்துவரும் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் பொன் விழாப் பெருநாளில் அறநிலையப் பணிகளெல்லாம் வாழ்க! வளர்க! வெல்க! என வாழ்த்துகின்றேன்.

பிறர்நலம் பேணும் பெறற்கரிய தலைவர்களைக் கொண்டொளிரும் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தினர் பொன் விழாவோடு அமையாமல் வைரவிழாவும் நூற்றாண்டு விழாவும் கண்டு சிறந்திலங்க வாழ்த்துகின்றேன்.

ஐம்பதாண்டுக் காலமாகப் பொதுப்பணியாற்றி வரும் சங்கத்தின் பேரறிஞர் கட்கும் அன்பர்கட்கும் என் உள்ளம்களித்த பாராட்டும் வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்வதற்கே" என்னும் நெறி நிற்கும் சத்வித்யா சன்மார்க்க சங்கம் வாழ்க! வாழ்க!!

உயர்திரு நா. மகாலிங்கம் பி.எஸ்.ஸி., எம். ஐ. ஈ., எம். எல். ஏ., அவர்கள், சக்தி நிலையம், பொள்ளாச்சி

திருப்பேரூர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் சன்மார்க்க சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. இது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

எந்தஸ்தாபனம் தொடங்கப்பெற்றாலும், சில குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டு தொடங்கப்பெற்றிருக்கும். என்னென்ன குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டு சன்மார்க்க சங்கம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப் பட்டது என்பதைத் தெளிவாக அறிவிப்பது இப்போது பலனுள்ளதாக இருக்கும்.

இரண்டாவதாக, இந்த ஐம்பது ஆண்டுகளாக இந்த சங்கம் என்னென்ன தொண்டாற்றியிருக்கிறது? அப்படி ஆற்றிய தொண்டும், சேவையும் சங்கத்தின் எந்தெந்த நோக்கங்களை எந்தெந்த அளவுக்குப் பூர்த்தி செய்திருக்கிறது என்பதையும் அறிக்கை செய்தால் நலமாகஇருக்கும்.

மூன்றாவதாக, இனிமேல் இந்த சங்கம் எத்தகைய சேவை செய்யத்திட்ட மிட்டிருக்கிறது என்பதையும் பொதுமக்கள் அறிய ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள்.

நமது நாடு, சமூக, அரசியல், பொருளாதார முன்னேற்றத்தை நாடிப்பல திட்டங்களைக் கையாண்டு கொண்டிருக்கிறது. இதனால் பல சிக்கல்களும், பிரச்சனைகளும் ஏற்பட்டிருப்பது அனைவருக்கும் தெரியும். இந்தச் சூழ்நிலையில் சன்மார்க்க சங்கம் போன்ற ஸ்தாபனம், இம்மூவகை முன்னேற்றத்துக்கும் உதவக் கூடியவகையில், சமுதாயத்தின் பண்பாட்டு மறுமலர்ச்சியை எப்படிக் கொண்டுவர முடியும் என்று சிந்திப்பது அவசியமாகத் தோன்றுகின்றது. சன்மார்க்க சங்கம் சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமாகையால், சமூகத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு அடிகோலியாக விருக்குமென்பதில் ஐயமில்லை. அப்படியெனில் எந்தெந்த வகையில் இச்சங்கத்தின் எதிர்காலச் சேவைத்திட்டம் அமைய வேண்டு என்பதைச் சிந்திப்பதற்கு இது தருந்த சமயமாகும்.

சுருங்கச் சொன்னால் நாட்டிலே சமூக மறுமலர்ச்சி, அரசியல் மறுமலர்ச்சி, பொருளாதார மறுமலர்ச்சி தோன்றிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் ஆன்மீக மறுமலர்ச்சியைக் கொண்டுவர சன்மார்க்க சங்கம் என்னசெய்யப் போகிறது என நம் மனதில் கேள்விகள் எழுவது இயல்பே.

இக்கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்குமாறு இச்சங்கம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்பது இதன் வரலாற்றால் விளங்கும். இத்தகைய சிறந்த பணியினைச் செய்யும் இச்சங்கத்திற்கு எனது ஒத்துழைப்பு என்றும் உண்டு. இச்சங்கம் நன்முறையில் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

உயர்திரு ஜெகவீரபாண்டியன்

திருவள்ளுவர் நிலையம், 127. மேல மாசி வீதி, மதுரை

சாந்தி நிலையம்

சாந்தலிங்கமெய்ஞ் ஞானியைத் தரிசனம் செய்த
மாந்தர் யாவரும் மகான்களாய் மருவியே வாழ்வார்;
ஏந்தல் ஆனஅம் முனிவரர் பெயரினால் இயைந்த
சாந்த மானஇந் நிலையமும் சாந்தியைத்தருமே.

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்

ஆசிரியர், திருப்புகழ் அமிர்தம், சென்னை

நேரிசை வெண்பா

சாருமுயர் சத்வித்யா சன்மார்க்கச் சங்கநலம்
பேருலகில் மெய்ஞ்ஞானப் பெற்றியுடன் —சீருவந்து
சொல்லாண்டு நல்லோர் துதிக்கக் குகனருளால்
பல்லாண்டு வாழ்க பரிந்து.

கருணையுள்ள கடவுள் ஏன் கஷ்டப்படச் செய்கிறார்?

தவத்திரு சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம்.

ஒருசிலர் நம்மைக் கருணையுள்ள ஆண்டவன் ஏன் படைத்துத் துன்பப்படும்படி செய்கிறான்? என்று கேட்கலாம். இதற்குச் சிவஞான சித்தியார் தக்க பதில் கூறுகிறது. நமது அஞ்ஞானமாகிய ஆணவ அழுக்கை நீக்க வேண்டுமென்று நம்மீது கொண்ட கருணையினாலேயே ஆண்டவன் விசித்திரமான இவ்வுலகத்தையும், உணவுப் பொருள்களையும், மனித உடலையும், தந்து இன்ப துன்பங்களை நுகரும்படி செய்து, நமக்கு அனுபவ ஞானமும், தெளிவும் உண்டாகும்படி செய்கின்றான் என்பதே அப்பதிலாகும். உயிர்களுக்கு ஆண்டவன் அழுக்கடைந்த இந்த உடல்களையும், போகப் பொருள்களையும் கொடுத்திருப்பது, உயிர்களை அநாதியே பந்தித்திருக்கும் ஆணவமலத்தை நீக்குவதற்கேயாம். அது வண்ணான் அழகிய கோடிப் புடவைகளுக்குச் சாணியும், உவர் மண்ணுமாகிய அழுக்குப் பொருள்களைப் பொருந்தும்படி செய்து, முன்புடவையிலிருந்த அழுக்கையும், பின்னால் சேர்க்கப்பெற்ற அழுக்குகளையும் முற்றாகப் போக்கிப், புடவையைத் துய வெள்ளையாக்குவது போலாகும். இதனை விளக்குவதற்கு மேலும் சில உதாரணங்கள் கூறலாம். வைத்தியன் ஒருவனிடத்தில் இருக்கிற வியாதியைப் போக்கவும், அவனுக்கு உடல் நலத்தை உண்டாக்கவும், வியாதியஸ்தன் விரும்பாத பல மருந்துகளைக் கொடுத்து ரணசிகிச்சைகளையும் செய்கிறான். கூரிய கருவிகளால் வெட்டவும், குத்தவும் அறுக்கவும் செய்கிறான். அவ்வாறு வைத்தியன் செய்வதெல்லாம் வியாதியஸ்தனிடத்திலிருந்த வியாதி நீக்கத்திற்கேயல்லவா? அதுபோலவே நீதியுள்ள அரசாங்கம் சிறைத் தண்டனை விதிப்பது குற்ற நீக்கத்திற்காகவும், கல்விச் சாலைகளை வைத்து மக்களுக்குக் கல்வி போதிப்பது அறியாமையைப் போக்குவதற்காகவும் ஆகும். மேலும் தந்தையும், தாயும் தாங்கள் பெற்ற புதல்வர்களைத் திருத்துவதற்காக உறுக்குதலும், அடித்தலும், கட்டிவைத்தலும், அவர்கள் மேல்வைத்த அன்பின் காரணத்தால் செய்கின்ற காரியங்கள் அல்லவா?

இவற்றை விளக்கியே சிவஞான சித்தியாரில் கீழ்க்கண்ட பாடல்கள் அமைந்துள்ளன.

1 மண்ணுளே சில வியாதி
மருத்துவன் அருத்தியோடும்
திண்ணமாய் அறுத்துக்கீறித் தீர்த்
திடும் சில நோய்எல்லாம்
கண்ணிய கட்டி பாலும் கலந்து
உடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம்
அருத்தியே வினையறுப்பன்.

—கி. சிவஞானசித்தியார் 125.

2 தந்தை தாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம் சொல் ஆற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினால்
அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம்
பார்த்திடின் பரிவேயாகும்
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்;

—சிவஞான சித்தியார் 106

இவற்றுள் வண்ணான் புடவையையும் உண்டுபண்ணவில்லை. அழுக்கையும் உண்டு பண்ணவில்லை. வியாதியஸ்தனையும், வியாதியையும் வைத்தியன் உண்டு பண்ணவில்லை. அரசாங்கம் சிறைச்சாலைக்குள் செல்லும் குற்றவாளிகளையும், அவர்களது கெட்ட குணங்களையும் உண்டு பண்ணவில்லை. பள்ளிக்குச் செல்லுகின்ற மாணவர்களையும், அவர்களது கல்வி இல்லாத் தன்மையையும் யாரும் உண்டுபண்ணவில்லை. அப்படியானால் உயிர்களைப் படைத்தது யார்? அவற்றிற்கு அஞ்ஞானம் எப்படி வந்தது என்ற கேள்விகள் பிறக்கலாம்.

அரசன் என்று உண்டோ, அன்றே மக்களும் உண்டல்லவா? அதுபோல என்று ஆளுகின்ற ஆண்டவன் உண்டோ, அன்றே ஆளப்பெறும் உயிர்களும். உண்டு ஒரு தகப்பனுக்கும் அவன் பெற்ற குழந்தைகளுக்கு உள்ள தொடர்பு தூல உடல் சம்பந்தமாகஏற்பட்டதே தவிர தகப்பனுடைய உயிருக்கும், குழந்தையினுடைய உயிருக்கும், யாதொரு தொடர்பும் பந்தமும் கிடையாது. அது

போல் ஆண்டவனுக்கும், ஜீவ ராசிகளுக்கும் உள்ள தொடர்பு அவன் உடல் கொடுத்ததினுல் ஏற்பட்ட தொடர்பே தவிர வேறு எவ்வித தொடர்பும் பந்தமும் கிடையாது. உடம்பினுள் கட்டுப்பட்ட பரமான்மாவின் அம்சமே ஜீவான்மா என்றும். அது உடம்பினுள் கட்டுப் பட்டதில். பரமான்மாவின் அம்சங்களாகிய தன்னை ஜீவான்மாவென்று மயக்கத்தினுலும், அறியாமையாலும், தவறுதலாகக் கருதிக் கொள்கிறது என்றும்: அந்த மயக்கம் தீர்ந்து விட்டால் தன்னையே தான் பரமான்வாகக் கண்டுகொள்ள முடியும் என்றும் சொல்லுவார்கள். ஆனுல் சைவ சித்தாந்தம் பரமான்மா என்று சொல்லப் பெறும் பதி ஒன்று, ஜீவான்மா என்று சொல்லப் பெறும் பசு எண்ணிறந்தன என்று கூறுவதைச் சுட்டிக்காட்டி அதற்குக் காரணங்களும் கூறுகின்றது. பதியாகிய பரமான்மா சுத்தத் தங்கம் போன்றது. தங்கத்தில் களிம்பு எப்படி ஏற முடியாதோ, அதேபோல பதியாகிய கடவுள் கட்டுப்படுத்தப்படுகின்ற அல்லது அசுத்தப்படுத்தப்படுகின்ற தன்மை உடையவரல்லர். தங்கமானது எவ்வளவு சிறிது அணுவானுலும் அதில் களிம்பு ஏற முடியாது. களிம்பு ஏறுமானுல் அது தங்கமாகாது. அதுபோல மெஞ்ஞானமுடைய பரமான்மாவின் எவ்வளவு சிறிய அம்சமும் அஞ்ஞான முடையதாக மாட்டாது.

ஆனுல் பசு எனப்படும் ஜீவான்மாக்களாகிய நாமோ, செம்பு போன்றவர்களாய் செம்பில் களிம்பு இயல்பாகவே ஏறி இருப்பது போல, அஞ்ஞானத்தால் ஏற்பட்டசில அசட்டுக் குணங்களை உடையவர்களாய் இருக்கிருேம். செம்பினுள்ள களிம்பு போவதற்கு இரதகுளிகை சேர்த்து அதைப் புடம் போட்டுச்சுத்தப்படுத்துவதுபோல், ஆண்டவன் நமக்கு (உயிர்களுக்கு)ப் பல பிறவிகளைக் கொடுத்து அவற்றில் வரும் அனுபவ அறிவைப் பெறும்படி செய்து, பக்குவம் நோக்கி அருள்பாலித்து வருகின்ருன் என்று கூறுகின்றது.

மேலும் ஆண்டவனது தன்மைகளையும், உயிர்களது தன்மைகளையும் நன்ருக அளந்து ஆண்டவனுக்குச் சிறந்த எட்டுக் குணங்கள் உண்டு என்று கண்டார்கள் நம் முன்னுேர்கள் அதனுலேயே திருவள்ளுவரும்.

"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" — என்ருர்.

இறைவனே :—1. முடிவில்லாத ஆற்றலுடையவன், நாமோ அணுஅளவு ஆற்றலும் இல்லாதவர்கள் 2. முற்றுமுணர்ந்தவன் (திரிகாலம் உணர்ந்தவன்) - நாமோ அடுத்த நிமிஷம் என்ன நடக்கு மென்பதை உணர முடியாதவர்கள், 3. முற்றறிவுடையவன். நாமோ சிற்றறிவுடையவர்கள். 4 தன்வயத்தன் (பிறர் துணையின்றித் தானே இயங்குபவன்) நாமோ இறைவனது துணையின்றி வாழ முடியாதவர்கள், 5. தூய உடம்பினன் (அழியாத அருள் திருமேனி உடையவன்) நாமோ நாற்ற உடலுடையவர்கள், 6. பேரருள் உடையவன் - நாமோ பேரிருள் உடையவர்கள், 7. வரம்பில்லாத இன்பம் உடையவன் - நாமோ வரம்பில்லாத துன்பமும், சிறு அளவு சிற்றின்பமும் உடையவர்கள், 8. இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன் நாமோமும்மலங்களால் சேட்டிக்கப் பட்டவர்கள் என்று நம் முன்னுேர்கள் கண்டுரைத்தார்கள் இவற்றுள் ஒவ்வொன்றிற்கும் போதிய காரணங்கள் சொல்லி நிரூபிக்கலாம்.

இனி ஜீவான்மாக்களுக்கு அஞ்ஞானம் எப்படி வந்தது என்றுபார்ப்போம். செம்பில் களிம்பு அநாதியாகவே ஒட்டியிருப்பதுபோல், உயிர்களை அநாதியாகவே பந்தித்திருக்கும் ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் என்ற மும்மலங்களின் சேட்டைகளே அவற்றின் அஞ்ஞானத்திற்கு மூலகாரணம். ஜீவான்மாக்களுக்கு ஆணவ மலத்தால் ஏற்பட்டிருக்கும் அசட்டுக் குணங்களும் எட்டு என்றே நிச்சயித்திருக்கிருர்கள். அவை 1. தனக்குத் தெரிந்த ஒன்றையே சாதித்தல், தனக்குத் தெரியாத உண்மைகள் உலகத்தில் நிரம்ப உண்டு என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தல் (நாஸ்திகத்திற்கு அஸ்திவாரமான தன்மை, உலகத்தார் உண்டு என்பதை இல்லென்பது) 2. தான் சொல்வதைப் பிறர் கேட்க வேண்டுமென்ற விருப்பமும், பிறர் சொல்லுவதை தான் கேட்டுக்கொண்டிருத்தலில் விருப்பம் குறைவும் உள்ள தன்மை 3. எடுத்ததற் கெல்லாம் கோபப் படுதல் 4. தன்னிடம் இல்லாத பொருளின்மேல் ஆசைப்படுதல் 5. கொலை செய்தலும், கொன்றதைத் தின்றலும் 6.

எப்பொழுதும் கவலைப்பட்டு வருத்த முறுதல் 7. நான் என்ற அகங்காரமும், என்னுடையது என்ற முனைப்பும் தலைக்கேறி இருத்தல் 8. தன் குற்றத்தை உணர்ந்து கொள்ள முடியாமல் பிறர் குற்றத்தைச் சொல்லி நகையாடுவதில் பெரியதோர் மகிழ்ச்சியும், திருப்தியும் கொள்ளுதல். இந்த எட்டுக் குணங்களில் யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு இருக்கிறதென்பதை அவரவரே அறிவர். ஆண்டவனும் அறிவான்.

இனி மாயா மலத்திற்கு ஏழு அசட்டுக் குணங்கள் உண்டென்று கண்டிருக்கின்றனர் அவை 1. எவ்வளவு படித்திருந்தாலும் உண்மையை அறிய முடியாமை 2. களவு செய்தல் கெடுதல் என்று தெரிந்தும் களவு செய்யாமல் இருக்க முடியாமை 3. கண்டதைச் சொல்லும் நேர்மை வாராமை 4. படித்தபடி நடக்க வேண்டுமென்று நினைத்தாலும் நடக்கமுடியாமை 5. பெரும்பணம் படைத்தவனாக இருந்தாலும், பிறருக்குக் கொடுத்துதவும் மனப்பான்மை வாராமை 6. இறப்பு என்பது திண்ணமாக உண்டு என்பதைக் கண்டும், கேட்டும், உணர்ந்தும் அதைக் குறித்து மனம் தைரியப்படாமை 7. பிறருடைய ஆக்கங்களைக் கண்டபோதும், கேட்டபோதும் மனம் பொறாமை. இவற்றில் யார் யாருக்கு எவ்வவவு எவ்வளவு மயக்கம் இருக்கிறது என்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்ளலாம். இனி கன்ம மலத்திற்கு ஆறு குணங்கள் உண்டென்று கண்டனர். அவை யாவன :—1. சோம்பேறியாக இருத்தல் 2. தூங்குதல் 3. புண்ணியத்தைச் செய்யாமை 4. பாவத்தைச் செய்தல் 5. செய்ய வேண்டிய தொழிலைச் செய்யாது விடுதல் 6. தன்குற்றத்தைப் பிறர் மேல் சுமத்தல். (வாசற்படியில் மோதிக் கொண்ட ஒருவன் படி தட்டியது என்று சொல்வதைப் போன்றது.)

இவ்வளவு இழிவான தன்மையிலுள்ள ஜீவான்மாக்களாகிய நம்மைப் "பரமான்மா" என்று கருதிக் கொள்ளுதலும், பேசிக் கொள்ளுதலும் எவ்வளவு பேதமை என்றும் எவ்வளவு பாவமும், பழியும் ஆகும் என்றும் சிந்தித்துத் தெரிந்து கொள்ளல் வேண்டும். அல்லாமலும் பரமான்வாகிய ஆண்டவன் ஜீவான்மாவாக வந்து தனக்குத்தானே துன்பங்களைக் கொடுத்து விடுவித்துக் கொள்கிறான் என்றால் அது அறிவுடைய செயலாகுமா? அல்லது தனக்குத்தானே செய்து கொள்ளுகிற எந்தச் செயலும் கருணையுடைய செயலென்று கருத முடியுமா? அல்லது பயனில்லாத சொல்லையே அறிவுடைய பெருமக்கள் சொல்ல மாட்டார்கள் என்றால் பயனில்லாத செயல்களை ஆண்டவன் விளையாட்டாகச் செய்கிறான் என்று கருதத்தான் முடியுமா?

ஜீவான்மாக்கள் ஆண்டவனிடம் ஒன்றும் விண்ணப்பம்செய்யாதிருக்கஆண்டவனுடைய முற்றறிவினால் ஜீவான் மாக்களுடைய கேவல நிலையை அறிந்து அவற்றிற்கு இன்னின்ன செய்தால் அவை மேல் நிலைக்கு வரும் என்று உணர்ந்து, கருணையே காரணமாக அருள் புரிவதினால் அல்லவா?, ஆண்டவன் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத "பரம் பொருள்" ஆன்மாக்களையெல்லாம் உய்விக்கின்ற "பரமான்மா" என்று எல்லோராலும் வாழ்த்தவும், வந்திக்கவும், பெறுகின்றான், இந்தஉண்மைகளையெல்லாம் சந்தேக விபரீதமின்றித் தெரிவிக்கச் சைவசித்தாந்த சாத்திரங்கள் உதவுவதைத் தமிழர்களே பூரணமாக உணரவில்லையென்றால் உலகம் எப்படி அதை உணர முடியும்? ஆகவே தியாகம் செய்யும் மனப்பான்மையுடைய தமிழர்களில், வேறு பாஷைகளையும். படித்திருப்பவர்கள் பலர் முன்வந்து, சித்தாந்த சாத்திரங்களைச் சந்தேக விபரீதமின்றிக் கற்றுணர்ந்து நம் நாட்டிலும் உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் அவை கூறும் உண்மைகளையும், நீதிகளையும் பரப்புதல் வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவன் நமக்குதுன்பம் தந்தும் நன்மை செய்து வருகிற உண்மையினை எல்லோரும் உணர்வார்கள். இந்தப்பேருண்மையை உலகிலுள்ள எல்லா மக்களும் உணர்ந்து கருணைக் கடலாகிய ஆண்டவனைச் சிக்கெனப்பற்றிப் பிரார்த்தனை செய்து வந்தால், எந்த நிலையிலும் மனக்கவலையற்று மனச் சாந்தி பெற்று, வையத்து வாழ்வாங்கு வாழலாம். மொழித்துவேஷமும், இனத் துவேஷமும் நாட்டுத் துவேஷமும் அற்று ஒருவருக்கொருவர் சகோதர மனப்பான்மையுடன் சமாதானமாய் வாழலாம். அதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் எல்லா வகையாலும் உறு துணையாக நின்று எல்லோரையும் ஊக்குவித்தருளப் பிரார்த்தித்து அசிர்வதிக்கின்றோம்.

சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாக்களில் தலைமை வகித்த பெரியோர்கள்

ஆண்டு	தலைவர்
தொடக்கம்:—இராட்சத (1916) தை. 4. திங்கள்.	தவத்திரு சிதம்பர மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்.
முதலாண்டு நிறைவு விழா நள. (1917)	தவத்திரு சிவஞான வள்ளல், பாளையங்கோட்டை.
2-ஆம் ஆண்டு நிறைவு விழா பிங்கள. (1918)	சிவரகசியப் பதிப்பாசிரியர், சைவத்திரு கயப்பாக்கஞ் சதாசிவஞ் செட்டியார்.
3-ஆம் ஆண்டு நிறைவு விழா காளயுக்தி (1919)	,, ,,
4-ஆம் ஆண்டு நிறைவு விழா சித்தார்த்தி (1920)	சிவரகசியம் மொழி பெயர்ப்பாசிரியர் சைவத்திரு மருவூர் கணேச சாஸ்திரிகள்.
5-ஆம் ஆண்டு நிறைவு விழா ரௌத்ரி (1921)	திருக்களர்மடம் ஸ்ரீஜகத்குருபீடம் நியாயசந்திர வேதாந்த பாஸ்கர ஸ்ரீமண்டலேசுவர வீரசுப்பைய ஞானதேசி கேந்திர சுவாமிகள்.
6-ஆம் ஆண்டு நிறைவு விழா துர்மதி (1922)	,, ,, ,,

குறிப்பு:—இவ்வாண்டில் ஆகம பாடசாலை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆண்டு	தலைவர்
7-ஆம் ஆண்டு நிறைவு விழா துந்துபி (1923)	,, ,, ,,
8-ஆம் ஆண்டு நிறைவு விழா ருத்ரோத்காரி (1924)	சென்னை ஆநந்தாசிரமம் நியாயசந்திர வேதாந்த பாஸ்கர ஸ்ரீமண்டலேசுவர வீரசுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமிகள்.
9-ஆம் ஆண்டு நிறைவு விழா ரத்தாட்சி (1925)	திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்.
11-ஆம் ஆண்டு நிறைவு விழா அட்சய (1927)	தவத்திரு, மறைமலையடிகள், பல்லாவரம்.

குறிப்பு:—இவ்வாண்டில் சாந்தலிங்க சுவாமிகள் நூல்கள் வெளியிடப்பட்டன.

ஆண்டு	தலைவர்
19-ஆம் ஆண்டு நிறைவு விழா பவ (1935)	கௌமாரமடாலயம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள், சிரவணபுரம்.
20-ஆம் ஆண்டு நிறைவு விழா யுவ (1936)	அறுபத்துமூவர்மடம் சிதம்பர மெய்ஞ்ஞான ஞான சிவாச்சாரிய சுவாமிகள், திருவையாறு.
21-ஆம் ஆண்டு நிறைவு விழா தாது (1937)	துடிசைக்கிழார் அ. சிதம்பரனார், கோயமுத்தூர்.
24-ஆம் ஆண்டு நிறைவு விழா பிரமாதி (1940)	கௌமாரமடாலயம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள், சிரவணபுரம்.

குறிப்பு:—இவ்வாண்டில் சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

ஆண்டு	தலைவர்
25-ஆம் ஆண்டு நிறைவு விழா விக்ரம (1941)	கௌமாரமடாலயம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் சிரவணபுரம்.

குறிப்பு:—இவ்வாண்டில் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.

ஆண்டு	தலைவர்
26-ஆம் ஆண்டு நிறைவு விழா விஷு (1942)	தவத்திரு சோமசுந்தர சுவாமிகள், பிரமானந்த சுவாமிகள் மடம், மதுரை.
32-ஆம் ஆண்டு நிறைவு விழா சர்வசித்து (1948)	தவத்திரு சுவாமி அத்வையானந்த சரசுவதி, ஈங்கோய்மலை.

33-ஆம் ஆண்டு நிறைவு விழா சர்வதாரி (1949) — தவத்திரு மறைமலையடிகள், பல்லாவரம்.

34-ஆம் ஆண்டு நிறைவு விழா விரோதி (1950) — தவத்திரு சிவஞானபாலைய சுவாமிகள் மயிலம், பொம்மபுர ஆதீனம். 18வது பட்டம், நாவலர் சோமசுந்தர பாரதியார், பசுமலை.

குறிப்பு :—இவ்விழாவில் முதலிபாளையம் சிவராமசாமி சுவாமிகளின் மகனும், சிரவணபுரம் இராமானந்த மடாலயத்தின் அடியவரும், மயிலம் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தவரும் ஆகிய இராமசாமி ஐயா அவர்கள் சிவஞானபாலைய சுவாமிகளால் தீட்சை செய்விக்கப் பெற்று இளவரசுப்பட்டம் ஏற்ருர்.

35-ஆம் ஆண்டு நிறைவு விழா விக்ருதி (1951) — யோகி சுத்தானந்த பாரதியார்.

36-ஆம் ஆண்டு நிறைவு விழா கர (1952) — திருவண்ணுமலை ஆதீனம் தெய்வசிகாமணி அருணுசல தேசிகபரமாசாரிய சுவாமிகள், குன்றக்குடி.

37-ஆம் ஆண்டு நிறைவு விழா நந்தன (1953) — சைவத்திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை, சென்னை.

38-ஆம் ஆண்டு நிறைவு விழா விசய (1954) — தவத்திரு குன்றக்குடி அடிகள். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.

குறிப்பு :—இவ்வாண்டுமுதல் தமிழ்க் கல்லூரியின் ஆண்டுவிழாவும், வார வழிபாட்டு விழாவும், குருபூசை விழாவுடன் நடைபெற்று வருகின்றன.

39-ஆம் ஆண்டு நிறைவு விழா சய (1955) — சைவத்திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை, சென்னை.

40-ஆம் ஆண்டு நிறைவு விழா மன்மத (1956) — தவத்திரு குன்றக்குடி அடிகள்.

41-ஆம் ஆண்டு நிறைவு விழா துன்முகி (1957) — தவத்திரு ஆறுமுக சத்திய ஞான பண்டார சந்நிதிகள், செங்கோல் ஆதீனம், பெருங்குளம், நெல்லைமாவட்டம்.

42-ஆம் ஆண்டு நிறைவு விழா ஏவிளம்பி (1958) — தவத்திரு சம்பந்த சரணுலயத் தம்பிரான் சுவாமிகள், (சி. கே. சுப்பிரமணிய முதலியார்.)

குறிப்பு :—இவ்வாண்டு முதல் புலவர் பேரவை தொடங்கி நடைபெற்று வருகிறது.

43-ஆம் ஆண்டு நிறைவு விழா விளம்பி (1959) — தவத்திரு சாந்ததேவசாரங்கதேசிக சுவாமிகள், கும்பகோணம்.

44-ஆம் ஆண்டு நிறைவு விழா விகாரி (1960) — தவத்திரு குன்றக்குடி அடிகள். தவத்திரு சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம்.

குறிப்பு :—இவ்வாண்டில் சாந்தலிங்க சுவாமிகள் கோவில் திருப்பணி கோவை திருமதி இரா. கௌசலாம்பாள் அவர்களால் செய்விக்கப்பெற்றுக் குடமுழுக்குவிழா நடைபெற்றது.

45-ஆம் ஆண்டு நிறைவு விழா சார்வரி (1961) — தவத்திரு சிவஞானபாலைய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம், 18ஆம் பட்டம்.

46-ஆம் ஆண்டு நிறைவு விழா பிலவ (1962) — தவத்திரு இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் தருமையாதீனம், தருமபுரம்.

குறிப்பு :—இவ்வாண்டு முதல் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழாவும் இதனுடன் நடைபெற்று வருகிறது.

47-ஆம் ஆண்டு நிறைவு விழா சுபகிருது (1963) — தவத்திரு குன்றக்குடி அடிகள்.

48-ஆம் ஆண்டு நிறைவு விழா சோபகிருது (1964) — தவத்திரு அழகர் அடிகள், திருக்குறள்பீடம், குருகுலம், மதுராந்தகம்.

49-ஆம் ஆண்டு நிறைவு விழா குரோதி (1965) — தவத்திரு சபாபதிச் சுவாமிகள், மௌனசுவாமிகள் மடம், சிதம்பரம்.



தவத்திரு மாணிக்க சுவாமிகள்,
சத்வித்யா சன்மார்க்க சங்கம்
நிறுவி, வளர்த்தவர்கள்.



தவத்திரு சிதம்பர மெய்ஞ்ஞான சிவாச்சாரிய
சுவாமிகள், சத்வித்யா சன்மார்க்க சங்க
முதலாண்டு நிறைவு விழாத் தலைவர்.



தவத்திரு சுந்தர சுவாமிகள்,
தெற்கு நந்தவனம், பேரூர்.

தவத்திரு சிவராமசாமி சுவாமிகள், முதலிபாளையம்.

கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம்,
தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் 18ஆம் பட்டம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள்,
மகா சந்நிதானம்,
34, 45ஆம் ஆண்டு நிறைவு
விழாக்களின் தலைவர்.

மறைத்திரு மறைமலையடிகள்
11, 33ஆம் ஆண்டு நிறைவு
விழாக்களின் தலைவர்.

தவத்திரு அழகரடிகள்,
48ஆம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர்.

நிலைய வளர்ச்சி

கொங்கு நாட்டின் தெய்வத் திருத் தலமாக விளங்குவது திருப்பேரூர். பேரூர் சமய, வரலாற்றுத் துறைகளில் பழமை வாய்ந்தது. பிறவா நெறி, மேலைச் சிதம்பரம் என்னும் பெயர்களை உடையது; தமிழ் நலங் கனிந்த அருட் சான்றோர்கள் புகழ்ந்து பாராட்டிய திருத்தலம். 'மீ கொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெருமானை,' 'பேரூர் உறைவாய்ப் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே' என்று குறிப்பிடுகிறார் ஆளுடை நம்பியாகிய சுந்தரர். சேக்கிழார் பெருமானும், சங்கச் சான்றோர்களும் சிறப்பித்துக் கூறியுள்ளனர். தற்போது தொழிற்றுறையில் மிகச் சிறந்து விளங்கும் கோவை நகருக்கு மேற்கே விளங்குகிறது இத்தலம். இங்கு சுமார் முந்நூற்றைம்பதாண்டுகட்கு முன் தமிழ்நாடு செய்த தவப் பயனாய் விளங்கிய, நமது ஆதிகுரு முதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் எழுந்தருளித் தவம் புரிந்துள்ளார்கள்.

சாந்தலிங்க அடிகளார், பற்றற்று நிலையாமை யுணர்ந்து, பிறப்பறுக்கும் நெறியாகிய அருள் ஞான நெறியில் விளங்கிய செந்தமிழ்ப் புலவர். இவர்கள் திருவாவடுதுறையாதீனம் குருமுதல்வர் தவத்திரு நமச்சிவாய மூர்த்திகளது முதன் மாணவராகிய துறையூர் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர்கள். பின்னர் தமிழ்நாட்டுத் தலங்களை வழிபட்டு வருங்கால் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளது தொடர்பும் கொண்டனர். இருவருமாகக் காஞ்சீபுரம் நோக்கிச் செல்லும் வழியில் புதுச்சேரியை அடுத்துள்ள பொம்மையபாளையத்தில் சிவ ஞானியாக விளங்கிய அருட்டிரு சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடல் பாடுமாறு சாந்தலிங்க அடிகளார் சிவப்பிரகாசரிடம் கேட்டுக் கொண்ட போது, யான் தெய்வங்களைப் பற்றித்தான் பாடுவேன் என்று அவர் கூற இருவரும் அண்மையில் இருந்த ஓர் ஊரில் இரவு தங்கினர். சிவப்பிரகாசர் கனவில் முருகப் பெருமான் தோன்றி மலர்களைக் கொடுத்து மாலையாக்கித் தருகவெனக் கூறி மறைந்தார். பின் சிவப்பிரகாசர் சாந்தலிங்க அடிகளாரிடம் நிகழ்ந்தது கூறிச் சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடல் பாடுவதை முருகப் பெருமான் விரும்புகிறார் என்பதை எண்ணி 'நெஞ்சுவிடு தூது' என்னும் அருமையான நூலைப் பாடிச் சிவஞானபாலய சுவாமிகளை வழிபட்டுச் சிவப்பிரகாசர் அருளுபதேசம் பெற்றார். சிவஞானபாலயரது அருளாணையின் வண்ணம், சாந்தலிங்கர், சிவப்பிரகாசரது தங்கையாகிய ஞானம்பிகை அம்மையாரைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார்.

சாந்தலிங்க அடிகளார் திருப்பேரூரில் திருமடமமைத்து அடியார்கள் பலருடன் விளங்கினார். பிற சமய வாதிகட்கெல்லாம், தம் சமயச் சிறப்புக்களை விளக்கிப் பதில் கூறிச் சைவச் செந்நெறியை வளர்த்த பெருந்தகை நமது சாந்தலிங்க அடிகளார் என்பதை அவர்கள் அருளிய 'கொலை மறுத்தல்' என்னும் நூலால் அறியலாம். ஞானம்பிகையாருடன் சிலகாலம் வாழ்ந்து பின் முழுத் துறவு பூண்ட அவர்கள், கன்னட நாட்டின் அரசராக விளங்கிய குமார தேவருக்கு அருளுபதேசம் வழங்கியாட்கொண்டார். ஐயத்தின் நீங்கித் தெளிந்து அவா அறுத்தற்குப் பெரிதும் துணைபுரியும் 'வைராக்கிய சதகம்' 'வைராக்கிய தீபம்' ஆகிய நூல்களையருளிய இவர் சிவநெறியின் தத்துவக் கருவூலமாகவும், சமய சமரசத்தை விளக்கும் பெருவிளக்காகவும் இயங்கும் 'அவிரோதவுந்தியார்' என்னும் அருள்நூலை வழங்கிய மாதவச் செம்மலுமாவார்.

குமார தேவரது மாணவராக இவர்கள் காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய, போரூர் சிதம்பர சுவாமிகள் இவர்களருளிய நான்கு நூல்கட்கும் மிகச் சிறந்த உரை வகுத்துத் தம் திருமுன்பு காட்டக் கண்டு மகிழ்ந்தார்கள் என்பர். இவ்வுரையினது திட்பமும் மேற்கோள் காட்டும் வளமையும் நூலைக் கற்பார்க்கு இனிது விளங்குவனவாகும்.

சாந்தலிங்க அடிகளார் அருள் ஞானச் செல்வராகப் பற்பல அடியார்களுடன் திருமடமமைத்துத் தங்கியிருந்தார்கள். பல பணிகளிலும் அடியவர்கள் ஈடுபட்டிருந்தனர். முழுத்துறவு பூண்டு விளங்கிய இவர்கள், ஒரு மாசிமகத்தில் நிறைமதி நாளில் பேரூர்த் தலத்தின் பெருமை விளங்க ஞான சமாதி யடைந்து கூத்தப் பெருமான் திருவருளில் கலந்தார்கள். இவர்கள் சமாதிக் கோயில் பேரூரின் கிழக்குப் பகுதியில் நொய்யலாற்றின் தென் கரையில் பலரும் வழிபடச் சிறந்து விளங்குகிறது. இதனையொட்டித் திருமடமும் கல்விநிலையங்களும் அமைந்துள்ளன.

சாந்தலிங்க அடிகளாரவர்கள் பல மாணவர்களுடன் தங்கித் தவமியற்றி அருளுரை வழங்கியிருந்த திருமடம் அன்பர்களது கவனக் குறைவாலும், மகமதிய ஆட்சியாலும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டதெனக் கருத வேண்டியிருக்கிறது. தமிழகத்தின் சமயச் சான்றோர்கள் பலர் முந்திய நூற்றாண்டுகளில் இவர்களது நூல்களைத் தெளிவாகக் கற்றிருந்தும் சமாதி இடம் தெரியாமல் திகைத்துள்ளனர். சென்ற நூற்றாண்டில் தவநெறி மிக்க அருளாளர்களும் சமயத் தொண்டர்களும் தமது பணிகளால் திருமடத்தை உருவாக்கியுள்ளனர். தற்போது கிடைத்துள்ள சான்றுகளின்படி தவத்திரு

நாச்சிமுத்து சுவாமிகள் இந்நிலையப் பணியில் பெரிதும் ஈடுபட்டுச் சமாதி பூசையாதியன நடத்தித் தவச்சாலையைப் பேணி வந்துள்ளார் எனத்தெரிகிறது.

பின்னர் கோயம்புத்தூர் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) காவல் ஆய்வாளர் திரு பொன்னுரங்க முதலியார் அவர்கள் கனவில் தவத்திரு, சாந்தலிங்க அடிகளார் தோன்றி எமது நிலையத்தைப் பேணுக எனத் தெரிவித்தபடி பொன்னுரங்க முதலியார் பேரூர் வந்து கள்ளிக் காடாகக் கிடந்த பகுதியில் இறைவன் திருக் குறிப்பால் இடம் உணர்த்தப்பட்டு நண்பர்களுதவியுடன் சமாதிக் கோயிலையும், தவச் சாலையையும் கண்டு விரிவு படுத்தியுள்ளார். கிணறு வெட்டியது அவரது திருப்பணி. பொருளும் வழங்கியுள்ளார். சமாதிக் கோயில் கருவறைமட்டுமாக இருந்தது. நாச்சிமுத்து சுவாமிகளுக்குப் பிறகு (பொன்னுபுரம்) இராமலிங்க சுவாமிகள் திருமடத்தையும், சமாதிக் கோயிலின் முன்மண்டபத்தையும் அன்பர்கள் உதவியால் அமைத்தார்கள். கம்பஞ்சோறு சமைத்து அதனோடு கலந்த நீரை வழிச் செல்வார் பசி தீர வழங்கினார்கள். திருமடத்தைக் கட்டியதுடன் திருமடத்திற்குரிய இடங்களையும் விரிவாக்கினார்கள். இவர்கள் 1892 வரையில் தலைவராக இருந்து பணியாற்றிச் சமாதி கொண்டுள்ளார்கள். அதன்பின் சச்சிதானந்த சுவாமிகள் திருமடத்தின் பணிகளை மேற்கொண்டு 1909 வரை இருந்துள்ளார்கள். இவர்கள் காலத்தில் சமாதிக் கோயிலின் மூன்றுவது மண்டபம் கட்டப்பெற்றது. இராமலிங்க சுவாமிகளது சமாதிக் கோயிலையும் கட்டியிருக்கிறார். இவருக்குப் பின் தவத்திரு மௌன சுவாமிகள் திருமடத்தில் தலைவராக இருந்தார்கள். இவர் வாய் பேசாத விரதம் மேற்கொண்டிருந்து, பேரூர்ப் பட்டிப் பெருமான் திருக் கோயில் குடமுழுக்கினைச் செய்து முடித்தார். நாள்தோறும் குறிப்பிட்ட தொகை கிடைத்தாலன்றி உணவு உட்கொள்ளுவதில்லை என்ற குறிக்கோளுடன் இருந்து அப்பணியைப் பல்லாயிர ரூபாய்ச் செலவில் நிறைவேற்றியிருக்கிறார்கள். சமயத் தொண்டர்கள் பலரும், பொன்னுரங்க முதலியாரும் இத்திருமடத்தின் வளர்ச்சி கருதிக் கோவையை அடுத்துள்ள சிரவைக் கௌமார மடாலயத்தை நிறுவியவரும், இந்த நாட்டில் திருநீறும் சாதனமும் விளங்கிச் சமயத் திரு நெறியும் தமிழும் தழைக்க விளங்கிய வருமான தவத்திரு இராமானந்த சுவாமிகளைத் தலைவராக இருக்குமாறு அழைத்து வந்தனர். அவர்கள் சாந்தலிங்கப் பெருமான் திருக்குறிப்பு வேருக இருக்குமென எண்ணித் தலைமையேற்க மறுத்தனர். அவரது அடியவர்களில் சிலரை இருக்கச் செய்தனர். அவர்களில் தற்போது தலைவராக விளங்கும் தவத்திரு ஆறுமுக சுவாமிகளும் ஒருவராவார். இவர்களுடன் சிரவைக் கௌமார மடாலயத்து அன்பர்களாகிய, தவத்திரு ஆறுமுக சுவாமிகளும், சின்னச்சாமி சுவாமிகளுடன் தங்கி யிருந்தனர். பின் தவத்திரு இராமாநந்த சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்று, சமயக்குரவர்கள் பெயரைத் தாங்கி யிருந்த அடியவர்கள் நால்வருள் ஒருவராகிய, தவத்திரு மாணிக்க சுவாமிகள், குருநாதரிடம் விடை பெற்றுப் பல தலங்களையும் வழிபட்டுப் பின் அவர்களாணைப்படி இங்குத் தங்கினார்கள்.

தவத்திரு மாணிக்க சுவாமிகள் திருமடத்திற்கு வந்து பொறுப்பேற்று, தவத்திரு ஆறுமுக சுவாமிகளைத் துணையாக வைத்துக்கொண்டு திருமடத்தின் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டார்கள். கொங்கு நாட்டிலுள்ள பல ஊர்களுக்கும் சென்று அன்பர்களிடம் நன்கொடை பெற்றார்கள். திருமடத்தின் பணிகளும், அன்பர் கூட்டமும் வளர்ந்து வரலாயின. மாசி மகந்தோறும் குரு பூசை விழா மிகச் சிறப்பாகப் பல்லாயிரம் அடியார்களுக்கு அமுதளித்தலோடு, மூன்று நாட்கள் நடத்தப்பெற்றது. சாதுக்களும், சான்றோர்களும் தொடர்பு கொண்டனர்.

தவத்திரு மாணிக்க சுவாமிகளது நன்முயற்சியால் அன்பர்கள் பலரும் நன்கு உதவி புரிந்துள்ளனர். பேரூர் திரு மாரிமுத்து தொண்டராகப் பணியாற்றியுள்ளார். நரசீபுரம் திரு செம்பரிச்சிக்கவுண்டர், வெள்ளிமலைப் பட்டிணம் திரு சுப்பண கவுண்டர் ஆகியோர் நிலம் அளித்துள்ளனர். கோவை திரு கலசே கவுண்டர், சின்னவேடம்பட்டி ஆறுமுக கவுண்டர், கவுண்டம்மாள், பொள்ளாச்சி முத்துலட்சுமியவர்கள் ஆகியோர் கட்டளைகளுக்காகப் பொருளும், நிலமும் உதவியுள்ளனர். கள்ளிப்பாளையம் இராமசாமிக் கவுண்டர் கட்டிடத்திற்கு வேண்டிய மரங்களை உதவியிருக்கிறார். விளாங்குறிச்சி பச்சையம்மாள் பொருளுதவி செய்திருக்கிறார். திரு வேலாசாமி செட்டியார், திரு ஆண்டி கவுண்டராகியோர் கட்டிடங்கள் கட்டி உதவியுள்ளனர். இவ்வாறு பல அன்பர்கள் முன்வந்து சமய நிறுவனமாகிய திருமடத்தைப் பொலிவும் ஆக்கமும் உறுமாறு வளர்த்துள்ளனர். இன்றும் அன்பர்கள் பலரது ஒத்துழைப்பும் உதவியும் நிலையங்களின் நற்பணிகளை வளரச் செய்து வருகின்றன. மக்கள் தொடர்பின்றி ஒதுங்கிய நிலையில் சமய நிலையங்கள் இருப்பது பெரும் பயன்தராது. அன்பர்களும், மாணவர்களும், பேணி வளர்த்துப் பெருமைப் படுத்தினால்தான் எந்த நிறுவனமும் நன்கு பணியாற்றும். அத்தகைய வழியினை ஏற்படுத்திப் பல்லாற்றானும் இந்நிலையம் இன்றும் பணியாற்றி வருகிறது.

திருமடத்தின் பணிகளும், வழிபாடுகளும் சிறந்து விளங்கி அன்பர்கள் மிகுதியும் வரத் தொடங்கினர். அன்பர்கட்கு சமய நெறியினை விளக்குவதற்காகத், திருமடத்தின் தலைவர் **தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் மடம், சத்வித்யா சன்மார்க்க சங்கம்** என்னும் பெயரால் ஒரு சங்கத்தைத் தொடங்க விரும்பினார்கள்.

சத்வித்யா சன்மார்க்க சங்கம் :

இச்சங்கம் தமிழ் இராட்சச ஆண்டு (கிறித்து ஆண்டு 1916) தைத்திங்கள் நான்காம் நாள் திங்கட்கிழமை பிரதோச புண்ணிய காலம் மாலை 3 மணிக்கு தவத்திரு சிதம்பர மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளாலும், மற்றும் பல பெரியார்களாலும், மெய்ப்பொருளுணர்த்தும் நூல்களையும் ஞான நெறியையும் மக்களிடம் பரவச் செய்யும் நோக்கத்துடன் தொடங்கப் பெற்றது.

சங்கத்தின் நடைமுறை :

இச்சங்கம் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கி நடைபெறும். பல அன்பர்கள் சங்கத்தில் சொற்பொழிவாற்றுவார்கள். அவர்களுள் கோவை வழக்கறிஞர்கள் சி. கே. சுப்பிரமணிய முதலியார், சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவராவர். பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை, அருணாசல நாட்டார், விளாங்குறிச்சி, புலவர். மருதாசலம்,பேரூர். ச. ப. மாணிக்கவாசகம்ஆகியோர் செயலாளர்களாக இருந்து சங்கத்தின் நிகழ்ச்சிகளைச் செவ்விதின் நடத்தியிருக்கின்றனர். இச்சங்கத்தின் மூலம் சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் முறையாய்ப் பாடஞ் சொல்லப்பட்டன. இவையன்றி விசேட காலங்களில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சங்கத்தின் பயன் :

சுண்டக்கமுத்தூர், குனியமுத்தூர் முதலான ஊர்களிலிருந்து பல அன்பர்கள் வாரந்தோறும் வந்திருந்து சங்க நிகழ்ச்சியில் கலந்து பயனடைந்திருக்கின்றனர். சமயத் துறையில் தலை சிறந்து விளங்கிய அறிஞர்களும், துறவிகளும் ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தாற்றிய சமயச் சொற்பொழிவுகளால் இப்பகுதி மக்கள் சமய நெறியில் உறைப்புக் கொண்டனர். இச்சங்கத்தின் பயனுய்க் கோவை நகரில் சமய உணர்வு அரும்பியது. சமயப் பெரியார்கள் பலர் கோவைக்கு வந்து சென்றனர். அவர்களும் கோவை நகரத்தால் பயன் பெற்றனர். 1922ல் சங்கத்தில் ஒரு ஆகம பாடசாலை நிறுவுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. திருமடத்திற்கு அன்பர் கூட்டம் பெருகியது. அதனுல் சந்தாத் தொகையாகவும், நிலம் முதலியவகையாகவும், கட்டளைகளாகவும் நெல், அரிசி முதலிய பொருட்களாகவும் வருவாய் பெருகியது. இவ்வகையில் இச்சங்கம் சுற்றுப்புறத்து மக்களுக்கும், திருமடத்திற்கும் பெரிதும் பயனளித்திருக்கிறது.

சங்கத்தின் ஆண்டுவிழா மாசிமகம், குரு பூசையினையொட்டி மூன்று நாட்கள் நடைபெறும் தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களும், துறவிகளும் விழாவில் தலைமை தாங்கியுள்ளனர். ஆண்டு வரிசைப்படி அவர்களுடைய பட்டியல் தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு விழாக்களின் சிறப்பைப் பற்றியும், தலைமை தாங்கிய பெரியார்களைப் பற்றியும் இம்மலரில் பண்டித அ. கந்தசாமிப் பிள்ளையவர்களும், கோவை கிழார் அவர்களும், கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்களும் எழுதியுள்ள கட்டுரைகளாலும், மறைமலையடிகள் வரலாறு என்னும் நூலிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்ட கட்டுரையாலும் நன்கு அறியலாம். இவ்விழாக்களுக்குப் பலவகையாலும் உதவிய அன்பர்களைப் பற்றி மாணிக்க சுவாமிகள் ஆண்டுதோறும் வெளியிட்ட அறிக்கையால் அறியலாம். அவர்களுள் குனியமுத்தூர் திரு சோமசுந்தரம்பிள்ளை, சுண்டக்காமுத்தூர் திரு பழநிச்சாமி செட்டியார், போடிபாளையம் திரு நஞ்சப்பக் கவுண்டர், செட்டிபாளையம் திரு அய்யாசாமிக் கவுண்டர் குப்பே பாளையம் திரு நஞ்சப்பக் கவுண்டர், முதலிபாளையம் திரு சிவமலைக்கவுண்டர் (தவத்திரு சிவராம சுவாமிகள்) பொள்ளாச்சி திரு இரத்தின சபாபதிக் கவுண்டர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள்.

இச்சங்கத்தின் வெள்ளி விழா 1941ஆம் ஆண்டில் சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இவர்கள் சாந்தலிங்க சுவாமிகள் மேல் பிள்ளைத் தமிழ் நூல் பாடி அரங்கேற்றம் செய்தார்கள். (இவ்வாண்டு சாந்தலிங்கப் பெருமான் திருவருளாலும் பல அன்பர்களின் முயற்சியாலும் பொன்விழா நடைபெறுகிறது. பொன்விழாவையொட்டியே இம் மலர் வெளிவருகிறதென்பது யாவரும் அறிந்ததே.)

தவத்திரு மாணிக்க சுவாமிகள் சங்கத்தின் வளர்ச்சியுடன் திருமடத்தையும் சிறந்த முறையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து புதியதாகக் கட்டி முடித்தார்கள். தம் குருநாதராகிய சிரவணபுரம் கௌமார மடாலய நிறுவனர் அருண்மிகு இராமாநந்த சுவாமிகளை எழுந்தருளச் செய்து கட்டிடத் திறப்பு விழாவினைச் சிறப்புற நடத்தினர்கள்.

இது அடியவர்கள் தங்குவதற்கும், விழாக் காலங்களில் அடியார்க்கு அமுதளித்தலாதிய வற்றிற்கும் பெரிதும் பயன்படுகிறது. திருமடத்தின் வருவாய் அன்பர்கள் உதவியையே ஆண்டு தோறும் பெரிதும் நம்பியிருப்பதில் பல சிக்கல்கள் இருந்தன. வெளியூர்களுக்கு நன்கொடை பெறச் செல்லுவதிலேயே ஆண்டில் பாதி நாட்கள் செலவழிந்தன. இந்நிலையில் திருமடத்தின் நிலையான வருவாய்க்காக, நஞ்சை நிலங்கள் வாங்கப்பெற்றன. பின்னும் ஆண்டு விழாக்கள் நடத்துவதற்காக ஆண்டுதோறும் கொட்டகைகள் போடுவதால் பொருட் செலவும் வேலைத் தொல்லைகளுமாக இருந்தன. அதற்காக நிலையான ஓர் ஓட்டுக் கொட்டகை மிகப்பெரிய அளவில் அமைத்தார்கள். பின்னர் அதுவே வருவாய் தரும் முறையில் பருத்தி, நெல், நிலக்

கடலை அரைவு ஆலைகளுக்கும் பயன்பட்டு ஆண்டுதோறும் விழா நடத்துதற்கும் ஏற்புடைய தாக அமைந்தது. ஆலையைப் பொருத்தி வாணிபம் செய்வதற்குப் பூளைமேடு திவான்பகதூர் பூ. ச. கோ. அரங்கசாமி நாயுடு பெரிதும் உதவியாய் இருந்தார்கள்.

தவத்திரு மாணிக்க சுவாமிகள் திருமடத்தின் வருவாயும், கட்டிடமும், வளரப் பெரிதும் உழைத்தவராவார்கள். எதனையும் ஊக்கத்தோடும் விடா முயற்சியுடனும் செய்து முடிப்பார்கள். இவர்களுக்குச் சிறிது உடல்நலக் குறைவு ஏற்பட்டவுடன் தம்முடனேயே இருந்து பணியாற்றிய பெருந்தகையும், செம்மனச் செல்வரும், மாசற்ற துறவியும் ஆகிய தற்போதைய தலைவர் தவத்திரு ஆறுமுக சுவாமிகளிடம் திருமடத்தின் உரிமைகளை ஒப்படைத்து 1938ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் மன்றுளாடும் கூத்தப் பெருமான் திருநடக் காட்சியோடு திருவீதிக்கு எழுந்தருளும் நேரத்தில் அவர்கள் திருவடியிற் கலந்தார்கள். இவர் சமாதி சாந்தலிங்க அடிகளார் திருக்கோயிலுக்கு வடபால் அமைக்கப்பட்டது.

தற்போதைய தலைவர் தவத்திரு ஆறுமுக சுவாமிகள் திருமடத்தின் பணிகளைக் கவனித்து வந்தார்கள். இவர்கட்குத் துணையாக இளமை தொட்டே தொடர்புடைய திரு மயில்சாமிக் கவுண்டர் அவர்கள் இன்றியமையா அலுவல்களில் ஈடுபட்டுப் பணி புரிந்தார்கள். ஓர் ஆலோசனைக் குழுவும் அமைந்திருந்தது. அதில் திரு நஞ்சுண்ட கவுண்டர், திரு பி. கே. பழனியப்ப கவுண்டர், பீ. பொன்னுசாமிச் செட்டியார் திரு வி. சி. சுப்பைய கவுண்டர், திரு கோனே கவுண்டர், திரு சதாசிவ முதலியார் ஆகியோர் இடம் பெற்றுர்கள்.

தவத்திரு ஆறுமுக சுவாமிகள் வயது முதிர்வதனுல் தமக்குப் பின் ஒருவரைத் தேர்ந்தெடுக்க எண்ணினுர்கள். தக்கவர்களைப் பல நாள் ஆய்ந்தார்கள். பின், தமது தலைமைக் குருபீடமாகிய சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு இராமானந்த சுவாமிகளை அணுகி அவர்களது, அனுமதி பெற்று, முதலிபாளையம் இராமானந்த மடம் தவத்திரு சிவராமசாமி சுவாமிகள் இசைவுடன் அவருடைய புதல்வராகிய தவத்திரு இராமசாமியடிகளைத் திருமடத்தின் இளையபட்டமாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இராமசாமியடிகள் முதலிபாளையம் சிவராம சுவாமிகளுக்குப் புதல்வராய்த் தோன்றிச் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த இராமானந்த சுவாமிகளுக்குத் தனது தந்தையின் வழியில் நின்று இளமைதொட்டுப் பணிவிடை செய்து ஒழுகி வந்தனர். அம்மடத்தில் தங்கியிருக்கும் காலத்திலேயே தவத்திரு சுந்தர சுவாமிகளுடனும் (இப்பொழுது கௌமார மடாலயத்தின் தலைவராய் இருக்கின்றுர்கள்.) மற்றும் பலருடனும் கந்தசாமி சுவாமிகள்பால் பல நூல்களைப் பாடம்கேட்டுத் தேர்ந்து செய்யுள் இயற்றும் ஆற்றலும் வாய்ந்து விளங்கினர். பின்னர் 1947ஆம் ஆண்டில் மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து தமிழ் பயின்று வந்தனர். அப்பொழுது தான் இத்திருமடத்தின் இளவரசுப் பட்டம் ஏற்றனர்.

விரோதி ஆண்டு மாசித் திங்கள் 20ஆம் நாளில் மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பேரூருக்கு எழுந்தருளி இராமசாமி அடிகளுக்கு வீர சைவ தீட்சை செய்தனர். அவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதனுடன் நடைபெற்ற விழாக்களில் சோமசுந்தரபாரதியார்வந்து சிறப்பித்தனர். இராமசாமி அடிகள் இங்கு வந்த பின்னர் அவருடைய அயரா உழைப்பினுலும் அன்பர்களின் உதவியாலும் திருமடத்தின் பொருள் வளமும், அறச்செயல்களும் நாள் தோறும் வளர்ந்து வரலாயின. இவ்வளர்ச்சியில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன கல்லூரி, உயர் நிலைப்பள்ளிகள் தோற்றுவித்ததும் கோவில் திருத்தியமைத்துக் கும்பாபிஷேகம் செய்ததும் நூல்கள் வெளியிட்டதுமாம்.

இம்மடத்தின் சார்பில் ஊர்மக்களது வேண்டுகோட்படி முதலில் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி ஒன்று 1951ல்தொடங்கப்பெற்று நடந்துவந்தது. இதில் திரு கவிமணிதாசனும் அவருக்குப்பின்னர் திரு ப. கிருஷ்ணசாமியும் அவருக்குப்பின் திரு ர. சீனிவாசனும் தலைமையாசிரியராய் இருந்திருக்கிருர்கள். தற்போது திரு. கோ. வே. நாராயணச்சார் தலைமையாசிரியராய் இருக்கிருர். இப்பொழுது பன்னிரண்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 248 மாணவர்கள் 114 மாணவியர்கள் ஆக மொத்தம் 362 பேர் பயில்கின்றனர்.

கொங்கு நாட்டில் தமிழ்க் கல்லூரி ஒன்று தொடங்கவேண்டும் என்னும் எண்ணம் கோவை நகரத்துப் பெருமக்களிடம் நெடுநாட்களாய் இருந்தது. இராமசாமி அடிகள் தமிழ் பயின்று வந்தவுடன் உயர்திரு ர. க. சண்முகஞ் செட்டியார், சைவத்திரு வெ. சி. சுப்பைய கவுண்டர், சைவத்திரு கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார் ஆகியோருடன் கலந்து எண்ணித் தமிழ்க் கல்லூரி தொடங்குவதற்கேற்ற முயற்சிகளை மேற்கொண்டார்கள். கல்லூரியைத் திருமடத்தின் சார்பில் தொடங்குவது சிறப்புடையதெனப் பெருமக்கள் கருதினர். திருமடத்தின் தலைவர் தவத்திரு ஆறுமுக சுவாமிகள் கல்லூரி தொடங்குவதற்கான அனுமதி வேண்டிப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் செய்தார்கள். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் உயர்திரு ஆற்காடு இலக்குமணசாமி முதலியார் M.D., L.L.D., D.Sc., D.C.L., D.Litt. அவர்கள் வந்து திருமடத்தைப் பார்வையிட்டார்கள். இதற்குத்திரு ர. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள் பெரிதும் உதவியாய் இருந்தார்கள். திரு

மடத்தின் தலைவருடைய விருப்பப்படி தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிக் கழகம் என்னும் பெயரால் ஒரு கழகம் தொடங்கப்பட்டு 31-12-1952ல் பதிவு செய்யப்பெற்றது. முதலில் திரு ர. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள் தலைவராக இருந்தார். பெரும் பொருளுதவியும் செய்தார். திரு வெ. சி. சுப்பைய கவுண்டர் துணைத் தலைவராய் இருந்தார். இவர் பெரும் பொருளும் நிலமும் உதவி செய்தார். கோவை கிழார் செயலாளராகவிருந்தார். இவரும் பல பொருள்கள் உதவியிருக்கிறார். கல்லூரிக்குப் பலவகையிலும் தனது உழைப்பையும் நல்கி யிருக்கிறார். பல்கலைக் கழகப் பார்வையாள ராக உயர்திரு டாக்டர் மு. வரதராசனார் அவர் கள் வந்து கல்லூரி தொடங்குவதற்கேற்ற அமைப்புக்களைப் பார்வையிட்டார். பின்னர் பல்கலைக் கழகத்தின் அனுமதி கிடைத்தது. (அனுமதி எண். ஏ. 2076, நாள் 26-5-1953.) கல்லூரி 24-6-1953ல் தொடங்கப்பெற்றது. கல்லூரி தொடங்கிய நாளில் முதன் முதலாகப் பேரூர்ப் பட்டிப் பெருமான் கோயிலில் தமிழருச் சனை தொடங்கப்பெற்றது. மயிலம் சந்நிதானம், குன்றக்குடி அடிகளார், பழைய கோட்டைப் பட்டக்காரர் நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடி யார், திரு நா. மகாலிங்கம் ஆகியோர் பங்கு கொண்டனர். திரு வெ. சி. சுப்பையகவுண்டர், திரு இரத்தினசபாபதி முதலியாராகியோர் முன் னின்று நடத்தினர்.

உயர்திரு ர. க. சண்முகஞ் செட்டியாருக் குப்பின் சைவத்திரு வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்கள் தலைவராய் இருந்தனர். இவர் பெரும் பொருளும், நிலமும் உதவிக் கல்லூரியின் வளர்ச் சியில் பெரிதும் ஊக்கமுடையவராயிருந்தார். இப்பொழுது உயர்திரு, நா. மகாலிங்கம் பி.எஸ்சி. எம். ஐ. ஈ., எம். எல். ஏ. அவர்கள் தலைவராய் இருந்து நடத்தி வருகின்றார்கள். இப்பேருப காரிகளின் உதவியினால் கல்லூரி எந்தவிதமான தளர்ச்சியுமின்றிச்செவ்விதின் நடந்து வருகிறது.

கல்லூரியில் சைவத்திரு இராமச்சந் திரஞ் செட்டியார் பி. ஏ., பி. எல், அவர்கள் முதல்வராய் இருந்தார். சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சைவத்திரு பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை, சைவத்திரு கு. நடேச கவுண்டர், திருமதி சி. ந. குழந்தை யம்மாள், எம். எல். ஏ., தவத்திரு இராமசாமி யடிகள், தவத்திரு. சுந்தர அடிகள் ஆகியோர் மாணவர்களுக்குக் கல்வி பயிற்றி வந்தனர். திரு இராமச்சந்திரஞ் செட்டியாருக்குப்பின் திரு கு. நடேசக் கவுண்டர், அவர்கள் முதல்வராய் இருந்தனர். இப்பொழுது இராமசாமி அடிகள் முதல்வராய் இருந்து நடத்தி வருகின்றார்கள். மற்றும் திரு ஓ. கி. நல்லமுத்து எம்.ஏ. அவர்கள் துணை முதல்வராகவும், வித்துவான்கள் திரு வையாபுரி, திரு மா.கோட்டீசுவரன், திரு ந.இரா. சென்னியப்பன் ஆகியோர் விரிவுரையாளர்களா கவும் பணிபுரிந்து வருகின்றனர். கல்லூரியில் தற்சமயம் 130 மாணவ, மாணவியர்கள் படித்து வருகின்றனர். (மாணவர்கள் தொகை 62; மாணவியர்கள் தொகை 68.)

இக்கல்லூரி ஆரம்ப காலத்தில் திருமடத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியிலே நடந்தது. பின்னர் 1956ஆம் ஆண்டில் அரசினர் பொருளுதவியும், பொள்ளாச்சி திரு. நாச்சிமுத்துக் கவுண்டர், கோயம்புத்தூர் திரு. நாகப்பக் கவுண்டர், கள்ளிப்பட்டி திரு. குமாரசாமிக் கவுண்டர் ஆகி யோருடைய பொருளுதவியும் பெற்று ஒரு நல்ல கட்டிடம் அமைக்கப்பட்டது. அதனை (ஒரிசா கவர்னர்) உற்கல நாட்டுக் காவலர் மேதகு குமாரசாமி ராசா அவர்கள் திறப்புவிழாச் செய் தார்கள். அதன் மேல் கோயமுத்தூர் திருமதி இரா. கௌசலாம்பாள் அம்மாள் அவர்களின் பொருள் உதவி கொண்டு ஒரு மாடியும் 1961ல் அமைக்கப்பட்டது. இம்மாடிக் கட்டிடத்தைப் பாரத அமைச்சர் மேதகு ப. சுப்பராயன் அவர் கள் திறப்புவிழாச் செய்தார்கள். நூலகத்திற் கென மற்றொரு கட்டிடம் அரசினரிடம் 1958ஆம் ஆண்டில் பொருளுதவி பெற்றுக் கட்டப்பெற்றது. இக்கட்டிடம், அப்போதைய தமிழ்நாடு முத லமைச்சர் மேதகு காமராசரால், நிதியமைச்சர் மேதகு சி. சுப்பிரமணியம் தலைமையில் திறப்பு விழாச் செய்யப்பெற்றது. அதில் இப்பொழுது உயர்நிலைப்பள்ளியின் ஒரு பகுதி நடந்து வரு கிறது. 1955ஆம் ஆண்டில் உயர்நிலைத் தொடக்கப் பள்ளிக்காக ஒரு கட்டிடம் திரு வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்களின் பொரு ளுதவியால் கட்டப் பெற்றது. இந்தக் கட்டிடங் களுக்கு வேண்டிய மாதிரிப் படங்கள், அளவுகள் எல்லாம் வரைந்து கொடுத்துக் கட்டிடவேலைகளை உடன் இருந்து கவனித்து கட்டிடங்கள் உருவா வதற்குப் பல வகையிலும் உதவி செய்தவர் உயர் திரு பி. ஆர். காளிமுத்துத்தேவர் அவர்கள். இவர்கள் செய்து வருகிற உதவி பெரிதும் பாராட்டத்தக்கது.

இவர்கள் பள்ளபாளையத்தைச் சேர்ந்தவர் கள். பக்தி மார்க்கத்தில் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள். சேவை மனப்பான்மையும் துறவு மனப்பான்மையும் உடையவர்கள். இராம கிருட்டிண மடத்துக் கொள்கைகளில் பெரிதும் விருப்பமுடையவர்கள். சுவாமி சித்பவாநந்த ரால் நடத்தப்படும் அந்தர்யோகங்களில் தவறாது கலந்து கொள்வார்கள். கட்டிடங்கள் கட்டிய காலத்தில் திருமடத்தில் சில ஆண்டுகள் தங்கி யிருந்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் சிவகளை மு. சுப்பையா அவர்கள் கோவை இரயில் வழி அஞ்சல் நிலையத்தில் பணிபுரியுமாறு மாற்றலாகி வந்தார். இராமசாமியடிகளுடன் முன்னர் பழகிய நட்புக் காரணமாய் இத்திருமடத்தில் தங்கியிருந்தார்கள். அவர்கள் இங்கு தங்கி யிருந்த காலத்தில் திருமடம், கல்லூரி, பள்ளிகள் ஆகியவற்றின் ஆக்கத்திற்காக தன்னா லியன்ற முயற்சியைத் தளர்ச்சியின்றி செய்து வந்தார்கள். இவர்கள் திருமடத்தின் காரியங் களுக்கு செய்த உதவி குறிப்பிடத்தக்கது.

திருமடத்தில் தங்கியிருந்த அறநிலையத் தொண்டர்கள் சாந்தலிங்கர், குமாரதேவர், சிதம்பர சுவாமி ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்தும், அவர்கள் எழுதிய நூல்களி லிருந்தும் பல பகுதிகளை ஆண்டுதோறும் நாடக மாக நடித்துக் காட்டுவர். பக்கத்துக் கிராமங் களின் பாமர மக்கள் பலர் பார்த்துப் பய னடைந்து வந்தனர்.

காட்டம்பட்டி முதலிபாளையத்தில் 1958ல் சாந்தலிங்க அடிகளார் பெயரால் ஓர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி தொடங்கி நடத்தி அதற்கான கட்டிடம் கட்டப்பெற்றது. பின் அதனை உயர் நிலைப்பள்ளியாக்கி நடத்தப்பெற்றது. தவத்திரு சிவராமசாமிசுவாமிகள் அரிய முயற்சியால் பள்ளி நடந்து வந்தது. தற்போது சாந்தலிங்கர் கழக உயர்நிலைப்பள்ளி என்னும் பெயரால் அரசினரால் நடத்தப் பெறுகிறது. அதற்கான நிலமும் கட்டிடங்களும் (ரூ. 25,000 மதிப்புள்ளவை) மாவட்டக் கழகத்திற்கு ஒப்புவிக்கப்பட்டன.

பேரூரைச் சுற்றிலுமுள்ள மக்களுக்கு உயர் நிலைப் பள்ளிப் படிப்பு வசதி எளிதில் கிடைக்கச் செய்வதற்காக ஓர் உயர் நிலைப்பள்ளி தொடங்க வேண்டுமென எண்ணி, ஊர்ப் பொது மக்களிடம் கலந்தாலோசித்து ஒருகுழு நிறுவி 30-12-1960ல் பதிவு செய்யப் பட்டது. இதன் தலைவர் தவத்திரு இராமசாமியடி களார். செயலாளர் திரு அய்யாசாமிபிள்ளை பொருளாளர் கவுண்டனூர் திரு க. சாமிக் கவுண்டர். உயர்நிலைப்பள்ளி 1960ல் தொடங் கப் பெற்றது. திரு சண்முக சுந்தரம் என்பவர் தலைமையாசிரியராக இருந்து நடத்தி வருகிறார். தற்போது பதினான்கு ஆசிரியர்கள் பணிபுரிகிறார் கள். இதன் பொருள் நிலைக்காக 13.66 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இக்கல்வி நிலை யங்கள் சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயிலை யடுத்து விளங்குவதால் மாணவர்கள் சமய உணர்ச்சியுடையவர்களாய் வழிபாடு செய்தல் முதலியவற்றில் பயிற்சியுடையவர்களாய்ப் பண் பட்ட உள்ளத்தினராய் வளர்ந்து வருகின்ற னர். தற்பொழுது இதில் 236 மாணவ, மாண வியர்கள் (மாணவர்கள் 163; மாணவியர்கள் 73) கல்வி கற்று வருகின்றனர்.

சாந்தலிங்க அடிகளார் திருக்கோயில் பல வேறு காலங்களில் சிறிது சிறிதாய்க் கட்டப்பட்டு விரிவடைந்தது முன்னால் கூறப்பட்டது. தவத் திரு மாணிக்க சுவாமிகள் காலத்தில் 1929ஆம் ஆண்டு ஒரு கும்பாபிடேகம் நடைபெற்றது. சாந்தலிங்க சுவாமிகள் உற்சவமூர்த்தி 1955ஆம் ஆண்டில் அன்பர்கள் பலருடைய முயற்சியால் செய்யப்பெற்றது. அதன் பின்னர் 1960ஆம் ஆண்டில் ரூ. 20,000- செலவில் இக்கோயிலின் முன் மண்டபத்தை மாற்றிப் பெரிதாக அமைத்து விமானத்தையும் புதுப்பித்துக் கும்பாபிடேகம் செய்யப்பட்டது. இதற்குத் திருமதி இரா. கௌசலாம்பாள் அம்மாள் அவர்கள் ரூ. 10,000- உதவி செய்தார்கள். மற்றும் அன்பர்கள் பலர் உதவி செய்தனர்.

திருமதி இரா. கௌசலாம்பாள் அம்மாள் கோவையைச் சார்ந்த திரு இராமசுவாமி முதலி யார் அவர்களின் மகள். இவர்கள் தமது முதுமைக் காலத்தில் தாம் ஈட்டிய பொருள்கள் அறத் துறையில் பயன்பட வேண்டுமென்று கருதிக் கல்லூரிக் கட்டிடத்திற்கு ரூ. 25,000/-மும், திருக்கோயில் புதுப்பிப்பதற்கு ரூ. 10,000/-மும் உதவி செய்தார்கள். திருமடத்தில் தங்கி நாடோறும் சாந்தலிங்கப் பெருமானை வழிபட வேண்டுமென்னும் அவா மிகுதியால் திருமடத் தின் எல்லையிலேயே பல ஆண்டுகள் தங்கி யிருந்தார்கள். சென்ற கார்த்திகைத் திங்கள் (1965, நவம்பர் 30) கோவையில் தமதில்லத் தில் காலமானார்கள்.

இந்த ஆண்டு அரசினருடைய அனுமதி பெற்றுக் கோசாலை ஒன்று தொடங்கப்பெற்றது. அதற்காகப் பத்துப் பசுக்கள் வாங்கப்பட்டன.

திருமடத்தில் தங்கியிருந்த சாதுக்களில் குறிப்பிடத்தக்கவர் தவத்திருசிவசாமிசுவாமிகள். இவர்கள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லவர்கள். வேதாந்த நூல்களில் சிறப்பாகத்தருக்கத்தில் பெரும்புலமை உடையவர்கள். சாந்தலிங்கப் பெருமான் திருக் கோயிலைத் தூய்மை செய்தல், பரிவட்டம் துவைத்தல், மலர் எடுத்துத் தொடுத்தல் ஆகிய திருப்பணிகளை மேற் கொண்டிருந்தார்கள். மழை பனி முதலிய எந்தக் காரணத்தை முன் னிட்டும் நாடோறும் நடைபெறும் இப்பணிகள் தவறுவதுமில்லை; தாழ்ப்பதுமில்லை. சுவாமிக்கு மாலை பல வகையாய்த் தொடுப்பதிலும், நந்த வனத்தை உயிராய்க் கருதிப் பேணுவதிலும் தனது பொழுதைச் செலவிடுவார். எஞ்சியநேரத் தில் தமதன்பர்களுக்குப் பாடம் சொல்லுவார். உலக நடை முறைகளையும் அரசியல் போக்கு களையும் கவனிக்கத் தவறுவதுமில்லை. இத் தகைய துறவி ஒருவரைக் காண்பது அரிது. இவர் 15-3-1961ல் இறைவன் திருவடி எய்தி னார்கள். இவர்களுடைய சமாதி திரு மடத்தின் மேற்கே நந்தவனத்திற்கருகில் கற்பூரசாமி சுவாமிகளின் சமாதிக் கருகில் அமைக்கப் பட்டிருக்கிறது. மற்றும் தம்பு சாமி அவர்கள் கோயில் பூசை காரியங்களைக் கவனித்து வந்தார்கள். சாது விசுவநாத சுவாமி கள் சில ஆண்டுகள் இங்குத் தங்கி மடத்துக் காரியங்களுக்கு உதவி செய்தார்கள். இப் பொழுது திருமாலைத் திருப்பணியை அங்கண சாமி என்பவர் செய்து வருகிறார். கோயில் தூய்மை, மடத்தின் பிற காரியங்களைப் பொன் னப்பசாமி என்பவர் செய்து வருகிறார். தவத்திரு சண்முக சுவாமிகளென்பவர் சுமார் 30 ஆண்டு களாக சாந்தலிங்க சுவாமிகளை நாடோறும் வழி படவேண்டுமென்னும் அவா மிகுதியால் இத்திரு மடத்தில் தங்கியிருக்கிறார்கள்.

இங்ஙனம் சாந்தலிங்க சுவாமிகள் சமாதி கூடியவிடத்தில் தோன்றிய திருமடமும் அதில் தொடங்கப்பெற்ற சத்வித்யா சன்மார்க்க சங்கமும் பொது மக்களது உதவியால் வளர்ந்து கல்வி நிலையங்களாய் விரிந்து பொது மக்களுக்குப் பெரும்பயன் தந்து விளங்குகிறது. இச்சங்கத்திற்கு இன்று ஐம்பதாவது ஆண்டு நிறைவெய்தி ஐம்பத்தொன்ருவது ஆண்டு தொடங்குகிறது.

இவ்வளவு சிறப்புடன் நடைபெற்று வந்த சங்கத்தின் வளர்ச்சி இடைக் காலத்தில் சில காரணங்களால் சிறிது தடைபட்டது என்பதனையும் சொல்லாமல் விடுவதற்கில்லை. ஞாயிறு தோறும் நடைபெற்றுவந்த கூட்டம் தொடர்ந்து நடைபெறவில்லை. அன்பர்களின் வருகையும் குறைந்தது. எனினும் இம்மடத்தின் சார்பில் தொடங்கப்பெற்ற கல்வி நிலையங்களின் மாணவர் மன்றங்கள் இச்சங்கத்தின் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றன என்றே சொல்ல வேண்டும். இருந்தாலும் தற்சமயம் அவை பெரும்பாலும் மாணவர்கட்கே பயன் படுவதாய் சிறுபான்மை பொது மக்களுக்கும் பயன்படுவதாய்ப் பொதுமக்களின் தொடர்பின்றியே இயங்கி வருகின்றன. முன்போலவே, சத்வித்யா சன்மார்க்க சங்கம் பொதுமக்கள் தொடர்பையும் கொண்டு தனியே நடந்து வரவேண்டும் என்று விரும்புகிறோம். பொன்விழாக் கொண்டாடும் இந்த ஆண்டு தொடங்கியேனும் அது நடைபெற வேண்டும். இச்சங்கத்தைப் பற்றுக்கோடாய்க் கொண்டு தேவாரப் பாடசாலையும், சமய வகுப்புக்களும், பிற சிறப்பு விழாக்களும், மாநாடுகளும் நடைபெற்று வருமாயின் மக்கள் பெரிதும் பயனடைவர். திருமடமும் முன்போலவே பெரும் புகழுடன் விளங்கும்.

அவ்வாறு நடைபெறுவதற்கு அன்பர்கள் அறிஞர்கள் செல்வர்கள் உள்ளங்களில் திருவருள் நின்று ஊக்குமாறு நமது சாந்தலிங்கப் பெருமானை வேண்டுவாம்.

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க !

சிவாலய தரிசன விதி

[பண்டித அ. கந்தசாமி பிள்ளை அவர்கள். பேரூர் சத்வித்யா சன்மார்க்க சங்கத்து முன்னுள் செயலாளர்.]

ராகம் : மலயமாருதம்] கீர்த்தனை [தாளம்: ஆதி

	சோமவார சிவ	தரிசனம்-பலன்	
	சொல்லுதற் கெளிதல பல நி	தரிசனம்	
1	நேமமுடன் அதிகாலை நீ	ராடி	
	நேர்மையான மடியுடை இடை	சூடி	
	தூய்மையான திருநீறுடல்	மூடி	
	தோத்திரம் பல இன்னிசையுடன்	பாடி	(சோம)
2	ஆலயத்துக் கோலக் கோபுரமுன்	வந்து	
	அஞ்சலி செய்தன் பினோடுள்பு	குந்து	
	கோலப்பிரகாரம் ஐம்முறை வலம்பு	ரிந்து	
	கொடிக்கம்பமுன் அட்ட பஞ்சாங்கமும்ப	டிந்து	(சோம)
3	தும்பிமுகன் சந்நிதி மூனம்	சென்று	
	தோப்புக் கரணம் போட்டுக் கைகுட்டி	நின்று	
	நம்பிமந்திரம் பதினாறும் ந	வின்று	
	நந்தியெம்பெருமான் அருள் பெறலே	நன்று	(சோம)
4	நேசமிக்க நெஞ்சம் நெக்கு நெக்	குருகி	
	நிர்த்தமண்டபம் கடந்து அர்த்த மண்டபம்	அருகி	
	தேசோன் மயசிவலிங்கம் ஒளி	பெருகி	
	திரட்டும் சிவானந்தத் தெள்ள முதம்	பருகி	(சோம)
5	ஏங்கித் தேம்பியெந்தாயென்	றழுது	
	இத்துணை நாட்களும் போயினவீண்	பொழுது	
	தாங்கி எனைக்காத்தல் உன்பாரம்	முழுதும்	
	சங்கரா சயபோற்றி போற்றி என்று	தொழுது	(சோம)

6 கொண்டு வந்த நிவேத்தியம் குருக்கள்கைக் கொடுத்து
கொழுந்து விட்டெரிய விளக்கில்நெய் விடுத்து
பண்டை முறைப்படி அருச்சனை தொடுத்து
பஞ்சப்புராணம் துதி பரமனார் செவி மடுத்து (சோம)

7 உட்சுற்றில் நால்வர் குரவர் பதம் புனைந்து
உயரறுபான் மூவர் செயற்கரும் செயல் நினைந்து
தக்ஷிணா மூர்த்திமுன் கண்ணீருடல் நனைந்து
தந்திமுக சண்முகர் அடி வனைந்து (சோம)

8 அம்பலவாணர் சந்நிதிமுன் தொடர்ந்து
அமர்திருக்களிற்றுப்படி அடைந்து
இன்புறும் பஞ்சாக்கரப்படி மிடைந்து
எம்பெருமான் திருக்கூத்தில் உளம் படர்ந்து (சோம)

9 மேலாம் ஓங்காரம் திருவாசிகை கண்டு
விளங்கும் ஐம்பத்தோரக்கரம் சுடர் மிண்டும்
தூலபஞ்சாக்கரம் அடிமுதல் முடி கொண்டு
சூக்கும பஞ்சாக்கரம் முடிமுதல் அடி கண்டும் (சோம)

10 அசைந்த உடுக்கை உலகினைப் படைக்கும்
அமைத்தகரம்காக்க அனலங்கை துடைக்கும்
இசைந்தூன்றிய பதம் அருளினைத் தடுக்கும்
எடுத்த திருவடி பேரின்பம் கொடுக்கும் (சோம)

11 மாயைதனை உதறி வல்வினையைச் சதித்து
மடங்கா ஆணவ வலிகெட மிதித்து
தூய உயிர்கட்கருட்சத்தி பதித்து
சொல்லொணாத பேரின்பம் கதித்து (சோம)

12 தேவர்பிரான் புரி திருநடனக் கூத்து
சீவர்கள் தாமறியொண்ணாவகை கூர்த்து
ஆவகைதன் திருஅம்பலந்தனிற் பார்த்து
அருள்சிவகாம வல்லி அடியிணை முடி சேர்த்து (சோம)

13 தேங்குங்கல்யாண மண்டபந்தனை யுற்று
திருவீதிக்கெழுந்தருள் தேவர்படிமம் முற்றும்
நீங்கலில் அவர் வரலாறுடன் பெரும் பற்று
நிரம்பி நினைந்தவரம் அவரவர் பாற் பெற்று (சோம)

14 அம்பிகை வாழ்திருக்கோயிலைச் சேர்ந்து
அருளே திருவடிவாதல் நினைவு கூர்ந்து
துன்புறும் பல்வழி மனம் செலல் தீர்ந்து
தோத்திரம் புரிந்துவகைக் கண்ணீர் வார்ந்து (சோம)

15 இருகடைக் கண்களும் கல்வி செல்வம் ஆக்கும்
இருகரம் வரந்தந்து அஞ்சேலென்று காக்கும்
மருவுமங்குச பாசக்கரம் வினைகளைப் போக்கும்
மலரடியிணை போகபோக்கியங்கள் சேர்க்கும் (சோம)

16 முன்னுந்தண்டபாணி முதல் தெய்வ அடி தாழ்ந்து
முன்னவன் கோவில் மற்றும் ஒருமுறை சூழ்ந்து
கன்னெஞ்சுருகிப் பயிரவர் அடி வீழ்ந்து
கைதட்டி சண்டீசர் முன் பலனெலாம் பெற்று வாழ்ந்து (சோம)



தவத்திரு, ஆறுமுக சுவாமிகள்,
மடாதிபதி, அருள்திரு சாந்தலிங்க சுவாமிகள் திருமடம், பேரூர்.



தவத்திரு. சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள்
(C. K. சுப்பிரமணிய முதலியார்)
42ஆம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர்.



வல்லநாடு
தவத்திரு. சிவராமலிங்க சுவாமிகள்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

கூட்டுத் தொழுகை

திருவள்ளுவரகம், **ப. இராமநாதப் புலவர்**, சென்னை.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

—(போற்றித் திருவகவல், 164, 165)

"நல்ல புணற்புகவித் தமிழ்ஞான சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி ஆரூரமர்ந்தானை
வல்லதோர் இச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பந் துடைப்பாரே."

—க. கoரு-கக.

தமிழ்—சிவம்.

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே."

—எ. ந கூ-கo

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர்திருத் தாள்போற்றி."

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி."

—சேக்கிழார் புராணம், கூ-எ.

"கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்தின் கண்."

—இருபா இருபது, க.

"ஆக்கை யாற்பயனென்—அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் னுதஇவ்
ஆக்கை யாற்பயனென்."

அட்டி—தூவி. —ச. கூ-அ.

க. திருவூர் :

"நின்று மலர் தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு, என்றும் இன்பமே."

—க. கூ௩-க.

உ. கோபுரம் :

"மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி."

௩. கொடிமரம் :

"சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி"

ச. பலிபீடம் :

"சில்லைச் சிரைத்தலையில் ஊணு போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி"

ரு. விடை நந்தி :

" வெள்ளை ஏறு ஏறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி"

சு பிள்ளையார் :

"தொண்டர் பரவும் இடத்தாய் போற்றி
தொழில் நோக்கி ஆளும் சுடரே போற்றி"

எ. முருகன் :

"முக்கணு போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி"

அ. ஆலமர் செல்வன் :

"அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி"

கூ. சிவக்கொழுந்து :

"சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி"

க0. மாதிருக்கும் பாதியன் :

"கொம்பனைய நுண்ணிடையாள் கூறு போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி"

ஓம்

திருச்சிற்றம்பலம்

கூட்டுத் தொழுகை

திருவள்ளுவரகம், **ப. இராமநாதப் புலவர்**, சென்னை.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

—(போற்றித் திருவகவல், 164, 165)

"நல்ல புணற்புகவித் தமிழ்ஞான சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி ஆரூ ரமர்ந்தானை
வல்லதோர் இச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பந் துடைப்பாரே."

தமிழ்—சிவம். —க. கoரு-கக.

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே."

—எ. ரு கூ-கo

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி."

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி."

—சேக்கிழார் புராணம், கூ-எ.

"கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்தின் கண்."

—இருபா இருபது, க.

"ஆக்கை யாற்பயனென்—அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் ஞதஇவ்
ஆக்கை யாற்பயனென்."

—ச. கூ-அ.

அட்டி—தூவி.

க. திருவூர் :

"நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு, என்றும் இன்பமே."

—க. கூரு-க.

உ. கோபுரம் :

"மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி."

ந. கொடிமரம் :

"சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி"

ச. பலிபீடம் :

"சில்லைச் சிரைத்தலையில் ஊணு போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி"

ரு. விடை நந்தி :

" வெள்ளை ஏறு ஏறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி"

சு பிள்ளையார் :

"தொண்டர் பரவும் இடத்தாய் போற்றி
தொழில் நோக்கி ஆளும் சுடரே போற்றி"

எ. முருகன் :

"முக்கணு போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி"

அ. ஆலமர் செல்வன் :

"அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி"

கூ. சிவக்கொழுந்து :

"சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி"

க0. மாதிருக்கும் பாதியன் :

"கொம்பனைய நண்ணிடையாள் கூறு போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி"

கக. அப்பன் :

"மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி"

கஉ. பிள்ளை :

"இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி"

கங. அம்மை :

"உமை பாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி
ஊழிஏ ழான ஒருவா போற்றி"

கச. கூத்தப் பெருமான்:

"துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி"

கரு. முகமதில் எய்தோன்:

"விண் துளங்க மும்மதிலும் எய்தாய் போற்றி
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி"

கசு. அடியார்:

"அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி"

கஎ. சண்டேசுரர்:

"ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி"

கஅ. திருவெண்ணீறு:

"மெய்சேரப் பால்வெண்ணீறு ஆடீ போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி"

கசு. திருவைந்தெழுத்து:

"எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி"

உ0. உள்குதல்:

"ஒட்டகத்தே ஊனா உகந்தாய் போற்றி
உள்குவார் உள்ளத்து உறைவாய் போற்றி"

—சு. போற்றித்திருத்தாண்டகம்.

உக. விடைபெறுதல்:

"உரியாய் உலகினுக்கு எல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வது உடையாய் போற்றி."

"தென் தில்லை மன்றினுள் ஆடிபோற்றி
இன்றெனக் காரமுது ஆனாய்போற்றி"

திருச்சிற்றம்பலம்.

———

திருமடத்தின் முன்னாள் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் :



உயர்திரு. சி. ஆர். சதாசிவ முதலியார் அவர்கள் ✳ உயர்திரு கோனே கவுண்டர் அவர்கள்

கல்லூரித் தொடக்க விழா.

கக. அப்பன் :

"மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி"

கஉ. பிள்ளை :

"இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி"

கங. அம்மை :

"உமை பாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி
ஊழிஏ ழான ஒருவா போற்றி"

கச. கூத்தப் பெருமான்:

"துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி"

கரு. முகமதில் எய்தோன்:

"விண்துளங்க மும்மதிலும் எய்தாய் போற்றி
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி"

கசு. அடியார்:

"அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி"

கஎ. சண்டேசுரர்:

"ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி"

கஅ. திருவெண்ணீறு:

"மெய்சேரப் பால்வெண்ணீறு ஆடீ போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி"

கசு. திருவைந்தெழுத்து:

"எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி"

உ௦. உள்குதல்:

"ஓட்டகத்தே ஊணா உகந்தாய் போற்றி
உள்குவார் உள்ளத்து உறைவாய் போற்றி"

—சு. போற்றித்திருத்தாண்டகம்.

உக. விடைபெறுதல்:

"உரியாய் உலகினுக்கு எல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வது உடையாய் போற்றி."

"தென் தில்லை மன்றினுள் ஆடிபோற்றி
இன்றெனக் காரமுது ஆனாய்போற்றி"

திருச்சிற்றம்பலம்.

———

திருமடத்தின் முன்னாள் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் :



உயர்திரு. சி.ஆர். சதாசிவ முதலியார் அவர்கள் ✵ உயர்திரு கோனே கவுண்டர் அவர்கள்

கல்லூரித் தொடக்க விழா.



மகான்—வண்ணச்சரபம்

அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்

தோற்றம்: 28-11-1839. திருவருட் பேறு: 5-7-1898.

பழைய நினைவுகள்

சத் வித்யா சன்மார்க்க சங்கம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர்.

(கோவை கிழார் இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், கொங்குநாட்டில் கோவையிலிருந்து திருப்பேரூர் நொய்யல் ஆற்றங் கரையைத் தாண்டியதும் வலது புறமாக உள்ள ஒரு புனித இடம். சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டில் தோன்றிய வீரசைவப் பெரும் புலவர் சிவப்பிரகாச சுவாமிகள் மாணவரான சாந்தலிங்கஅடிகளார் திருப்பேரூரில் இந்த மடத்தைத் தாபித்துக் கொலை மறுத்தல் முதலான நான்கு அரிய அருணூல்களை அருளிச்செய்து சமாதி அடைந்தார். அந்தஇடம் மிகவும் புகழ்பெற்று வீரசைவத்திற்கும் பொதுவாகச் சைவத்திற்கும் நடு நாயகமாக விளங்கிற்று. அவருடைய மாணவர்கள் குருசீடபரம்பரையில் அதனை ஆண்டுவந்தனர். நாளாவட்டத்தில் சமாதி ஒடுக்கம் புதர்கள் அடர்ந்து மூடிக்கிடந்தது. சென்ற நூற்றாண்டில் பொன்னுரங்க முதலியார் என்ற அன்பர் அந்த இடத்தைச் சுத்தப்படுத்தி, ஒருகட்டிடம் எழுப்பி ஒரு சிறந்த தீர்த்த வாவி தோண்டினார். பேரூர் விழாவிற்குச் செல்லும் அடியார்கள் இந்த மடத்தில் தொழுது, நன்னீர் அருந்திச் செல்வர். பின்னர் தவத்திரு மாணிக்க சுவாமிகள் மடத்தின் தலைமையை வகித்தார். உருவத்தில் கம்பீரமான தோற்றமுடையவர். பொதுமக்களிடம் சென்று வெகு எளிதில் உதவி பெறுவார். சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து சமாதி, மடம் முதலியவைகளைச் சீர்படுத்தி நந்தவனம், தோட்டம் முதலியவைகளை வைத்தார். மேற்புறத்தில் நெல்அறைவுச் சாலை கட்டி ஆண்டு வருவாயை மிகுதிப் படுத்தினார். கல்விபயின்ற அன்பர்களின் ஒத்தாசை பெற்றுக் குருபூசை சங்கம், சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்தார். தமிழ்நாடு முழுவதும் மடத்தின் புகழ் பரவிற்று. அவர் தாபித்த சங்கத்திற்கு சத் வித்யா சன்மார்க்க சங்கம் என்பது பெயர். குருபூசை, சாந்தலிங்க அடிகளார் திருநட்சத்திரமான மாசி மகத்தில் நடைபெற்றது. அன்பர்கள் சுலபமாகச் சந்தா தந்தார்கள். பல பேராசிரியர்கள் பங்கெடுத்துக்கொண்டார்கள். மகேசுவர பூசை வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆண்டுதோறும் தவறாமல் நடத்திவந்ததில் மடாலயம் மிகப் புகழ் பெற்றது. சங்க விழாவில் தலைமைக்கும், பேச்சுக்கும் சிறந்த ஆசிரியர்கள் தருவிக்கப்பட்டார்கள். சில நிகழ்ச்சிகளை இங்குக் குறிப்போம்.

(1) சென்னையில் கயப்பாக்கம்-சதாசிவஞ் செட்டியார் அவர்கள் ஆங்கிலம், வடமொழி, தென்மொழி மூன்றிலும் பாண்டித்தியம் பெற்றவர். அரசியல் அலுவலராகவிருந்து, ஓய்வுபெற்று, சிவரகசியம் என்னும் பேரிதிகாசத்தைப் பதிப்பிக்கத் தொடங்கினார். வெகு உருக்கமாகப் பேசக்கூடியவர். செய்யுள்களுக்குச் சிறந்த உரை நிகழ்த்தக்கூடியவர். அவர் கோவையில் பெரியபுராணத்தைப்பற்றி முறையாகப் பேருரை நிகழ்த்தினார். சிவக்கவிமணி-சுப்பிரமணிய முதலியார் விருப்பப்படி இரண்டு மூன்று ஆண்டுகள் சத்வித்யா சன்மார்க்க சங்கத்

தின் ஆண்டுவிழாவிற்குத் தலைமைதாங்கிப் பேருரை நிகழ்த்தினர்கள். ஓராண்டு சங்கத்தின் பெயரையே தலைப்பாகக்கொண்டு மூன்று பேச்சுக்கள் [சத்வித்யா சன்மார்க்க சங்கம் என்று அரிய பேச்சுக்களை) நிகழ்த்தினர்கள். மற்ருேராண்டு குரு, இலிங்க, ஜங்கமம் என்ற மூன்று தலைப்புக்களில் மூன்று பேச்சுக்கள் நிகழ்த்தினர்கள். இவ்விதப் பேச்சுக்களால் சங்கத்தின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவிற்று.

(2) வீரசுப்பைய்ய சுவாமிகள் :—தஞ்சை வட்டம் திருக்களர்மடத்துத் தலைவர். வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவர். தொடர்ந்து இரண்டு மூன்ருண்டுகள் தலைமை வகித்தார். பேசினல் இரண்டு, மூன்று மணி நேரம் விடாமல் பேசக்கூடியவர். சைவ சமயத்தின் உட்பொருளை நன்கு ஆராய்ந்தவர். மாணிக்க சுவாமிகள் தவிர வேருெருவராலும் அவரை இந்த நாட்டிற்குக் கொண்டுவந்து சொற்பொழிவு நிகழ்த்திவைக்க முடியாது.

(3) ஞானியார் சுவாமிகள் :—திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்துத் தலைவர். சிறந்த சைவ சமயப் பேராசிரியர். பேச்சு மிகவும் உருக்கமாகவும், தெளிவாகவும் இருக்கும். உரை 3 அல்லது 4 மணிநேரம் நீடித்தாலும் களைப்பென்பதே நேரிடாது. பொதுமக்கள் விலகமாட்டார்கள். அவர்களை அழைத்துவருவது மிகக் கடினம். பிற இடங்களுக்கு வருவதென்ருல் பல்லக்கில் தான் வரவேண்டும். கோவை வருவதற்கு நிரம்ப நாட்கள் பிடிக்கும். செலவும் அதிகமாகும். பேரூர் வந்துபோக மூன்று மாதங்கள் பிடித்தன. மாணிக்க சுவாமிகளே செலவுக்கெல்லாம் பொதுமக்களிடம் உதவிபெற்ருர். இங்கே வரும்போது குருபூசையில், சங்கத்தில் மட்டும் அன்றிப் போகும் வழி, வரும் வழி, இருக்கும் இடங்களிளெல்லாம் பேச்சுக்கள் நிகழ்த்திக் கொண்டே வந்தார். எந்த நேரமானுலும் மக்கள் பிடித்திழுத்து சமயப்பணி வாங்குவார்கள். அப்போது சத்வித்யா சன்மார்க்க சங்கம் செய்த திருப்பணி அபரிமிதம். கோவையில் ஒரு திங்கள் தங்கிப் பன்னிரண்டு பேச்சுக்கள் நிகழ்த்தினர்கள். நான் நன்றி தெரிவிக்கையில் பன்னிரண்டு வெண்பாக்களில் புகழ்ந்துரைத்தேன். திருப்பேரூர் அந்த மூன்று நாட்களிலும், மகோற்சவ நகரமாகி இருந்தது. நாட்டின் பல பக்கங்களிலிருந்தும் பெருவாரியான மக்கள் வந்து பேரூரில் தங்கிச் சமயப் பேச்சுகளைக் கேட்டுத் திருவருள் கடாட்சம் பெற்ருர்கள். அந்த சமய விழாப் போல் முன்னும் பின்னும் பார்த்ததே இல்லை.

4. மறை மலையடிகள் :— ஓராண்டு இந்த ஒப்பற்ற தமிழ் அறிஞரைத் தலைமை வகிக்க சுவாமிகள் ஏற்பாடு செய்தார். கோவையிலிருந்து தமிழ் அன்பர்களும், மாணவர்களும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். அவர் "பைங்குவளைக் கார்மலரால்" என்ற திருவாசகத்திற்கு நிகழ்த்திய விரிவுரை அது வரை கேட்டிராத சிறப்பு வாய்ந்தது. ஆனல் அவர் பேச்சில் வந்த சில புதிய ஆராய்ச்சி உரைகள் சில வைதீகர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரை இங்கே அழைத்த பெருமை மாணிக்க சுவாமிகளுக்கே உரியது. ஏனெனில் அவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களின் பெருக்கம் வேறெங்கும் காண இயலாது.

5. மருவூர் கணேச சாஸ்திரிகள் :— இவர் வடமொழி வல்லுநர். சதாசிவம் செட்டியாருடன் சிவ ரகசியம் பதிப்புக்கு உடன் இருந்து உதவியவர். இவர் ஒரு ஆண்டு தலைமை வகித்தார்.

மாணிக்க சுவாமிகள் காலத்தில் இன்னும் சில பெரியார்கள் தலைமை வகித்துச் சிறப்பித்துள்ளார்கள். இதன் விளைவாகத் திருப்பேரூரும் சாந்தலிங்கர் மடாலயமும் மிகவும் புகழ் பெற்று விளங்கின. வந்தவர்களுக் கெல்லாம் வேண்டிய வசதிகள் செய்து சுவாமிகள் உபசரித்தார்கள். மடாலயத்தில் ஒரு நல்ல நூலகமும் வைக்கப் பட்டது.

மேற்கூறிய சங்க விழாக்களில் பேச்சாளராகத் தருவிக்கப்பட்டவர்களில் உயர்ந்த கல்விமான்கள் இருந்தனர். அவர்களில் மிகச் சிறந்தவர் ஞானியார் அடிகளாரின் முதன் மாணுக்கரான ம. ர. குமாரசாமிப் பிள்ளையவர்கள். அவர்கள் பேச்சு அடுக்குச் சொற்களால் அமைந்தது. பெரும் மழை பெய்தாற் போல் இருக்கும். உதாரணம், "காட்டுப்பாடியை விட்டுப்

பாட்டுப் பாடிக் கொண்டு பேரூர் வரும் போது நித்திரை தேவியின் அருள் எவ்வண்ணம் வாய்க்கும்'' என்பார். ஒரு முறை T. A. இராமலிங்கம் செட்டியார் இவருடைய பேச்சைக் கேட்டு விட்டு, ''எழுதி உரு போட்டு ஒப்புவிக்கிருரா'' என்று கேட்டார். நாயன்மாருடைய வரலாறுகளைக் கூறும் போது, அவர்களுடைய தியாகங்களை வரிசைப் படுத்திக் கூறும் போது இவருடைய ஆராய்ச்சி எத்தன்மையானது என்று வியக்க வேண்டும். ஞானியார் அடிகளுடைய சமய போதனை பெற்ருல் எதுதான் சாத்தியம் இல்லை.

2. குமார வீரையர் :—இவர் வீர சைவப் புலவர். வெகு ஆழமாக வீர சைவசித்தாந்தத்தை ஆராய்ந்தவர். உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்து, தமிழ் கற்றுக்கொடுத்த நற்புலவர். பல தடவை வந்து பேசியிருக்கிருர்.

ஆ. பால சுந்தரம் பிள்ளை :— திருத் தொண்டர் புராணத்தைக் கண்டு ஆராய்ந்து சில பிரதிகளை வெளியிட்டவர். அழகாகத் தமிழ் பேசுபவர்.

3. சிவராமலிங்க சுவாமிகள் :—தலைவர்களுக்கு எப்போதும் தாமே சேவை செய்வார். வெகு அழகாக ஆர்வத்துடன் பேசுபவர்.

இன்னும் பல பெரியார்கள் பங்குகொண்டார்கள். உயர்திரு சிவக்கவிமணியவர்களும் யானும் எப்போதும் உடனிருந்து உதவுவோம். திருமடத்தின் நிர்வாகத்தை அறக் காப்புப்பகுதியார் எடுத்துக்கொண்டு அவர்களுடைய நிர்வாகியை நியமித்த காலத்தில் சங்கத்தின் வேலை சிறிது குறைவுற்றது. தமிழறியாத நிர்வாகிகள் பெயருக்கு என்று நடத்திஞர்கள். அப்போதும் உயர் திரு சிவக்கவிமணியவர்களும் யானும் சில ஆண்டுகள் தலைமை வகித்து நடத்திஞேம்.

தற்போது தவத்திரு இராமசாமி அடிகளார் தலைமை வகித்த பிறகு பழைய சத் வித்யா சன்மார்க்க சங்கம் வேலை செய்யத் தொடங்கி இருக்கிறது. சிறந்த பேச்சாளர்கள் தலைமை வகித்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிருர்கள். கொங்கு நாட்டின் பெருமையும், மடத்தின் புகழும் சைவமும் இந்த சத் வித்தியா சன்மார்க்க சங்கத்தின் பணியினுல் வளம் பெற்ருேங்கும் என்பது திண்ணம்.

வசவண்ணர் அருள் வசனங்கள்

தமிழ் இலக்கியத்தில் வசவண்ணர் வரலாறு சிவப்பிரகாசர் அருளிய பிரபுலிங்க லீலை வசவண்ணர் வந்த கதியிலும் புராணத்திலும் உள்ளது. வசவண்ண தேவர் கருநாடகப் பிரதேசத்தில் கல்யாண புரியில் ஆண்டு வந்த விச்சல மன்னனிடம் அமைச்சராக இருந்தவர். அவர் வீர சைவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உடையராகி நாடு முழுவதும் வீர சைவ சித்தாந்தங்களைப்பரப்பினுர். அவருடைய சீடர்கள் மிக மிகப் பெருகினுர்கள். அது சமணனை விச்சல மன்னனுக்குப் பிடிக்க வில்லை. அமைச்சு த்தொழிலிலிருந்து விலக்கிப் பெருந்துன்பங்களைச் செய்தான். தான் வழிபட்ட கடவுளாகிய கூடலசங்கமேசுவரரிடம் சரண் அடைந்தார். தீவிர அன்பினுல் கடவுள் அணைந்து கொண்டார். சங்கமேசுவர லிங்கத்தில் ஐக்கியமானுர். வீர சைவ சித்தாந்தக்கொள்கைகளை வெகு தெளிவாக வசனங்கள் என்ற அருள் நூலில் சங்க மேசுவரர் மீது அருளிச் செய்தார். அதை பசவ சமிதி என்ற பெங்களூர் சங்கத்தார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிருர்கள். கன்னடம் அறியாதவர்கள் ஆங்கில மொழி பெயர்ப்பை வாங்கிப் படிக்கலாம்.

வசவ தேவர் வாழ்க்கை வரலாறு மாணிக்க வாசகர் வரலாற்றைப் போலவே இருக்கிறது. மணி வாசகர் பாண்டியனுல் துன்புறுத்தப்பட்டார். வசவண்ணர் விச்சல மன்னனுல் துன்புறுத்தப் பட்டார். மணிவாசகர் திருவாசகத்தை அருளிச் செய்தார். வசவ தேவர் வசனங்களை அருளினுர். இரு அடியார்களுடைய கருத்துக்களும் ஒன்றியிருக்கக் காணலாம். வரிசையாக ஆராய்ந்து பார்த்தால் கணக்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடமும், சங்கமும்

(பண்டித, அ. கந்தசாமி பிள்ளை அவர்கள், பேரூர்.)

✷

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியின் ஆக்கங் கருதி அதனைப் பல வழியானும் வளர்க்கக் கருதிய இராமநாதபுரம், பாலவனத்தம் சமீந்தார் பொ. பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகளுக்குமுன் மதுரையில் நான்காம்தமிழ்ச் சங்கம் நிறுவி நடாத்தி வந்தனர்.

அதனை அறிந்த தஞ்சை, கரந்தை த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளையவர்கள் அப்பணி தலைமேற்கொண்டு தங்களூரிலும் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவி நன்கு நடாத்தி வரலாயினர்.

அதன் ஆண்டுவிழா ஒன்றிற்கு நமது கோவை T. A. இராமலிங்கம் செட்டியாரவர்கள் தலைமை தாங்கினர். அவர் மாவட்டக் கழகம், நகராட்சி இவற்றின் தலைவராகவும் சட்டசபை உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். அதோடு தற்போது அரசியலார் ஏற்று நடத்திவரும் கலைக் கல்லூரியின் தலைவராகவும் இருந்தனர். இக்கல்லூரி அப்போது சம்பந்த முதலியார் ஆரோக்கியசாமி பிள்ளை முதலியோர் அமைந்த குழுவினரால் நடத்தப்பட்டு வந்தது.

இவர் தலைமையில் நடந்த கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவிற்கு அடியேன் ஒரு சொற்பொழிவாற்றுபவனாகச் சென்றிருந்தேன். (அப்போது காட்டுப்புத்தூர் சமீந்தார் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியனாக இருந்தேன்).

அப்பேரவையில் எனது சொற்பொழிவின் தலைப்பு ‘சங்க நூற் பயிற்சி’ என்பதாகும். அத்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தாகச் சில பாடல்களும் பாடியிருந்தேன். (இவை அச்சாகியுள்ளன)

ஆண்டு விழாவின் தலைவராகிய செட்டியாரவர்கள் என்னை அழைத்து எங்களூரில் ஓர் இரண்டாந்தரக் கலைக் கல்லூரி நடத்தி வருகிறோம். அதற்கொரு தமிழாசிரியர் வேண்டும்; வரமுடியுமா? என்று கேட்டார். அதற்கிணங்கிய எனக்கு அவர் அனுப்பிய உத்தரவின்படி 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கோவை கலைக்கல்லூரித் தமிழாசிரியனாக அமர்ந்தேன். இரண்டு மாதங்களில் பேரூருக்கு வந்தேன். வந்த இரண்டொரு மாதங்களில் தவத்திரு சாந்தலிங்கப் பெருமானார் கருணைக்குப் பாத்திரமாகி இம் மடாலயத்தோடு தொடர்புடையவனானேன்.

அப்பொழுது மடாலயத்தின் செயல்களனைத்தையும் தவத்திரு. ஆறுமுக சுவாமிகளே கவனித்து வந்தார்கள். அப்பொழுது அவர்கள் காவியுடை வாங்கிக் கொள்ளவில்லை. நான் வருவதற்கு முன் மௌனசுவாமிகள் என்னும் மோனவிரதம் உடையார் மடாலயத்தின் தலைவராய் இருந்தார் என்றும் நாள்தோறும்

கற்ற ஒற்றுமைகள் காணலாம். திருவாசகம் உயர்ந்த செய்யுட்கள். வசனங்களோ உயர்ந்த உரை நடை. வெகு தெளிவான கருத்துக்களைக் கொண்டவை. பாமர மக்களும் நன்கு அறியும் வண்ணம் புத்த தேவரைப் போல வசனத்தைத் தம் உபதேசங்களுக்காக வாகனமாகக் கொண்டார். தமிழ் மக்கள் இந் நூலை மொழி பெயர்த்தால் நலமாக இருக்கும்.

—கோவை கிழார்.

காலையில் கம்பஞ்சோற்றுருண்டை நீரோடு ஏழைகட்களித்தல் அவர்காலத்தில் நிகழ்ந்தது என்றும் பட்டிப் பெருமானுர் திருக் கோயிலுள் சுற்றில் அறுபான் மும்மை நாயன்மார்களின் படிமங்கள் நிறுவிக் குடமுழுக்கு செய்வித்தார் என்றும் கூறுவர்.

சிரவையம்பதி – கௌமார மடாலயம்

கோவைக் கடுத்த சிரவணம்பட்டி என்னும் பதியில் தவத்திரு. இராமானந்த சுவாமிகள் என்பார் தவவிரதம் பூண்டு கௌமார மடாலயம் நிறுவித் தமது செல்வத்தை அதன் பணிக்கு ஆக்கிப் பல உயர் கொள்கைகளை மேற்கொண்டு "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கொப்ப ஏனைய மாந்தரும் இந்நன்னெறி கடைப்பிடித்து உய்தி கூட வேண்டும் என்னும் பெரு நோக்கால் பல ஊர்களினின்றும் வரும் அடியார் குழாங்களை நன்னெறிப் படுத்தித் தம் கொள்கைகளைக் கடைப்பிடித் தொழுகி வரப் பணித்தருளினுர்கள்.

மடாலயத்தின் கொள்கைகள்

இம் மடாலயத்தின் அடியவர்கள் புலால் உண்ணும் தீய பழக்கத்தைக் குடும்பத்தோடு விலக்க வேண்டும். கூலி வேலைக்காரனெனினும் அதிகாலையில் நீராடி மற்ற வேலைகளைத் தொடங்க வேண்டும். நெற்றி முதலிய அவயவங்களில் திருநீறு நிறையப் பூசவேண்டும். "பூசிற்ருன் திருநீறு நிறையப் பூசி" என்பது திருவாசகமன்றே. இவ்வடியார் குழாங்களைக் காணுந்தோறும் அடியேன் "முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்" என்று திருத்தொண்டத் தொகையுள் நமது வன்ருெண்டப் பெருந்தகை திருவாய் மலர்ந்தருளியது இவர்களையே குறிக்கும் எனக் குறிக்கொள்வேன். இவர்கள் இக்கொள்கைகளை மேற்கொள்வோம் என்பதற் கறிகுறியாகத் தம் கையில் காப்பு நாண் கட்டிக் கொள்ள வேண்டும். இவ்வறிகுறியைக் கண்ட மாத்திரத்தில் இவர்கள் கௌமார மடாலயத்துப் பெரியவர்கள் என யாவரும் அறிவர். இம்மடத்து அடியார் குழாங்களுள் ஒருவரே நமது தவத்திரு இராமசாமி அடிகளாரின் தந்தையாகிய தவத்திரு. சிவராமசாமி சுவாமிகள்.

சொற்பொழிவு

இம்மடாலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அடியார் குழாங்கள் குழும அவர்களுக்கு நூல் வாயிலாகவோ அன்றி வாய்மொழியாகவோ சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறும்.

கோவைக்கு வந்த அணிமையில் நான் தரிசிக்க இங்குச் சென்றது ஒரு வெள்ளிக்கிழமை. அன்று தவத்திரு கந்தசாமி சுவாமிகள் சொற்பொழிவாற்ற இருந்தனர். அடியவர் குழாங்களுள் ஒருவராகிய மேனி முழுவதும் வெண்ணீறு பூசிய போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. அப்பாவு பிள்ளை என்பார் என்னை அழைத்துச் சென்று சுவாமிகளுக்கு அறிமுகப் படுத்தினர்.

இம்மடாலயத்தினர்க்கு வழித்துணைக் குரவர் திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகளாவர். அவர் இயற்றிய நூல்களுள் புலவர் புராணம் ஒன்று. அதில் ஔவையார் வரலாறு இனிய ஓசையோடு படித்துக் கருத்துக்களை எண்பொருளவாகச் செலச் சொல்லி அறிவு கொளுத்தியருளியதைக் கேட்டு மிகமகிழ்ச்சியடைந்தேன். கொங்கு நாடு ஒரு தவம் செய்த நாடுதான் என்பது கருத்தில் ஓடிற்று. எங்களுக்குப் பசுவின் மோர் பருகுமாறு அளித்தனர்.

பின்னர் பெரிய சுவாமிகளையும் அடிவணங்கி அவர்களருளிய திருநீற்றுப் பிரசாதம் பெற்றுப் பூசிப் பொலிந்து திரும்பினேன்.

நால்வர் பெருமக்கள்

இம்மடாலயத்தின் மாணுக்கர்களாகி, இராமானந்த சுவாமிகளிடம்கல்வி பயின்று காவியுடைபெற்றுத் துறவு பூண்டவர்களில் நால்வர் பெருமக்கள் வெளிவந்தனர். அவருள் இன்றமிழ்க்கவி இயற்றுநரும் உண்டு. அவர்கள் நமது சைவசமய பரமாச்சாரிய மூர்த்திகளின் பெயர்களாகிய,

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்னும் பெயர்களைத் தரித்தவர்கள்.

இத்திருமடாலயத்து மாணவராகி வெளி வந்த கருணலய சுவாமிகள், சுப்பைய சுவாமிகள் என்னும் இருவரும் திருஅவி நாசியில் மடாலயம் நிறுவி நடத்திவந் தனர்.

அதுபோலவே மாணிக்க வாசக சுவாமிகள் என்பவர் பேரூர் வந்து நமது தவத்திரு. சாந்தலிங்க சுவாமிகளின் திரு மடாலயத் தலைவராக அமர்ந்தனர். உடனே வீரசைவத் திருவேடம் ஆகிய லிங்கதாரணம் செய்துகொண்டனர். இப் பெரியார் வந்தது முதல் இத்திருமடா லயம் நாளுக்கு நாள் வளம் பெருகி மிக் கோங்குவதாயிற்று.

சன்மார்க்க சங்கம்

1916 - ஆம் ஆண்டிலேயே ஆறுமுக சுவாமிகள் அனுமதி மேற்கொண்டு தவத் திரு. சாந்தலிங்க அடிகளார் சன்மார்க்க சங்கம் என்னும் பெயரில் சங்கம் நிறுவப் பட்டு ஞாயிறுதோறும் மாலை மூன்று மணி முதல் ஐந்து மணி வரை நிகழ்ந்துவந்தது.

அதற்கு அடியேனும் கோவை சிவக்கவி மணி சுப்பிரமணிய முதலியார், இராமச் சந்திரன் செட்டியார், சுப்பிரமணிய பாண்டை, பள்ள பாளையம் மாணவர் தமிழ்ச் சங்கத் தலைவர் வையாபுரிப் பிள்ளை ஆகியவர்களும் மற்றும் பலரும் சென்று சொற்பொழிவாற்றிவருவோம். ஒவ்வொரு கூட்டத்துக்கும் இருபது அல்லது முப்பது பேருக்குக் குறையாமல் வந்து கேட்டுச் செல்வர்.

ஆண்டு விழா

மாணிக்க சுவாமிகள் இங்கு வந்தபின்பு தான் சங்கத்தின் ஆண்டு விழா நடத்த லாயிற்று. திருமடத்திற்குக் கட்டிடங்களும் அமைக்கப்பட்டன. சங்கத்தின் செயலாள ஞக அடியேன் இருந்து, தலைவர், சொற் பொழிவாளர்களைத் தேர்தல், கடிதம் எழுது தல் முதலிய பணிகளைச் செய்துவந்தேன். குனியமுத்தூர், கணக்கு - சோமசுந்தரம் பிள்ளை என்பவர் மாணிக்க சுவாமிகளுக்கு உறுதுணையாய்ப் பணியாற்றி வந்தனர். ஆண்டு விழா இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடைபெறும். விழாவிற்கு வரும் அனைவருக்கும் சிற்றுண்டி முதலிய உண வளிக்கும் பொறுப்பு அனைத்தையும் சுண் டக்காமுத்தூர், திரு. பொன்னுசாமி செட்டி யார் என்னும் செல்வர் ஏற்று நடத்தி வந்தனர்.

அகரமோ ராறு கோடி
  அருந்தவம் நூறு கோடி
சிகரமோ ராறு கோடி
  செய்தவப் பயன்களெல்லாம்
மகர கேதனனை வென்ற
  மறைமுத லடியார்க் கன்னம்
பகரவே கனவு கண்ட
  பலன்தனக் கொவ்வா தன்றே!

[அகரம்-அந்தணர் குடியிருப்பு; சிகரம்-கோயில்; சினையாகு பெயர்.]

என்பது பெரியோர் வாக்கன்றோ!

மாணிக்க சுவாமிகளுக்கு உறுதுணையாக அவிநாசி சுவாமிகள் என்று ஒருவர் இருந் தனர். மடத்தில் ஒற்றைமாட்டு வண்டி யொன்றுண்டு. இருவரும் சேர்ந்து நரசா புரம், ஆலாந்துறை, முதலிய இடங்களுக் குச் சென்று அங்குள்ள அன்பர்கள் தரும் வருவாயைப் பெற்றும், பிறவழிகளில் தாஞக வரும் ஊதியம் கொண்டும் செயல் களைச் சிறப்புற நடத்தி வருவாராயினர். சிறந்த அறிஞர்கள் சொற்பொழிவுக்கு அழைக்கப்பட்டனர்.

கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியார்

கயப்பாக்கம் - சதாசிவஞ் செட்டியார் அந்நாளில் புகழ்பெற்ற சொற்பொழி வாளராக இருந்தார். பன்னிரு திரு முறைகளையும் நன்கு பயின்றவர். அவற் றைத்தவிர வேறு எந்த நூலையும் மேற் கோளாகக் கொள்ளார். அவர் நமது சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா வுக்குத் தலைவராக வந்தார். அவர்க ளுடைய சொற்பொழிவிலிருந்துதான் திரு முறைகளின் பெருமையையும், பெரியபுரா ணத்தின் அருமையையும் கோவையிற் பல

பெருமக்கள் அறிந்துகொண்டனர். மூன்ரு வது ஆண்டு விழாவிற்கும் இவரே தலைவராக வந்தார்.

ஒரு நினைப்பு

அவர் கூறிய கருத்துக்களுள் ஒன்று நினைவுக்கு வருகிறது. அவர் தலைமையில் பேசின ஒருவர் ''தமிழ்மக்கள் தீயவர்களாயும், அறம்புரியாத கொடியோர்களாயும் இருந்திருக்கவேண்டும்; அதனுல்தான் தமிழில் பதினெண்கீழ்க்கணக்கு முதலாகப் பல நீதி நூல்கள் (அவர்களைத் திருத்துதற்கு) எழுந்தன'' என்று கூறினர். செட்டியாருக்குப் பெருஞ்சினம் மூண்டது. ஐயா! பேச்சை நிறுத்துக; வேதம் என்பது ஒரு பிரமாண நூல்; இந்தியர் அனைவரும் போற்றத் தக்கது. அதனை ஆரியவேதம் என்றும் கூறுவர். அதில் முதற்கண் என்ன கூறப்பட்டிருக்கிறது தெரியுமா? தர்மம் சர: சத்தியம் வத:—அறம் நிகழ்த்தப்படுவதாகுக; வாய்மை பேசப்படுவதாகுக என்று கூறப்பட்டிருக்கிறதே. ஆரியர்களனைவரும் பாவிகளாகவும் பொய்யர்களாகவுமா இருந்தனர்? என்று கூறி மறுத்தனர்.

ஆயிரம் ரூபாய்ப் பரிசு

செட்டியார் அவர்களைக் கோவை நகருக்கு அறிமுகப்படுத்தியது இச்சங்கமே. அவரது புலமை இச்சங்கத்தால் புலப்படவே கோவை நகரார் அவரை அழைத்துச்சென்று நாடோறும் இரவில் பெரிய புராணச் சொற்பொழிவாற்றுவித்து, நிறைவேற்று விழாவில் பெரிய புராணத்தை யானைமேலேற்றி முழவொலியோடு நகர் வலம்செய்து ஆயிரம் ரூபாய் வெள்ளி நாணயமாகவே அவருக்குப் பரிசளித்தமைக்கு இச்சங்கம் காரணம் என்ருல் அது இல்லது புனைந்துரைத்தல் ஆகாது. [பெரியபுராணப் பொழிவு கோவை வைசியர் வீதியில் இருந்த C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் வீட்டில் நிகழ்ந்தது. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கையேடு படிப்பார். அத்துடன் செட்டியாரவர்கள் சொல்லும் கவி நயம், தேவார ஒப்புமைப் பகுதி முதலியவற்றை எழுதிவைத்துக்கொள்வார்.]

மற்ருெரு புலவருக்கு ஆயிரம் ரூபாய்ப் பரிசு

மறைமலை அடிகள்

தமிழுக்காக - தமிழருக்காக அரும்பணி செய்தவர்களில் மறைமலை அடிகள் தலைசிறந்தவர் என்ருல் அது மிகையாகாது. அவர் பல ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்ததைப்போலத் தமிழ்ச்சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேல்நாடுகளுக்கெல்லாம் நமது கொள்கைகளைப் பரப்பியவர். வீட்டு வேலைக்காரி முதற்கொண்டு தூய தமிழே பேசவேண்டும். அவரை நமது சங்கம் ஆண்டுவிழாவிற்கு இருமுறை அழைத்தது. [1. பதினொன்ரும் ஆண்டு விழா 1927. 2 முப்பத்துமூன்ரும் ஆண்டுவிழா 1949.] இரண்டாம் முறை அவர்கள் வந்தபோது கோவை நகரம் அவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு அளித்தது. இதற்கும் நமது சங்கமே காரணம். அவர் இங்கு வராவிட்டால் கோவை நகரத்தினர் பணம் திரட்டிச் சென்னைக்குக் கொண்டுபோய்க் கொடுப்பார்களா? நமது சங்கம் வரவழைக்காவிட்டால் அவர்தான் பணம் இரக்க இங்கு வருவரா? செட்டியார் அவர்களுக்குப் பரிசு வழங்குவதற்கு V. C. சுப்பைய கவுண்டர், C.S. இரத்தினசபாபதிமுதலியார் ஆகியோருடைய முயற்சி காரணமாக இருந்தது. இவருக்குப் பரிசு வழங்குவதற்குக் காரணமாக இருந்து முயன்ற பெருந்தகை V. C. சுப்பைய கவுண்டரவர்களேயாவர். அவர்கள் பெயரைச் சொல்லவே மனம் உருகுகிறதே! நமது மடாலயத்திற்கும் கல்லூரி முதலிய அறநிலையங்களுக்கும் பெரும்பற்றுக் கோடாக முன்னின்று விளைநிலம் முதலிய உதவிய வள்ளலாயிற்றே!

அவர்கள் இப்பொழுது நம்முடன் இல்லை. பெருஞ்செல்வக் குடித்தோன்றலாய் இருந்தும் யாவரோடும் எளிய முறையில் கலந்து பழகும் அந்தப் பெருந்தன்மை; நற்செயல்கள் எதற்கும் அஞ்சாது முன்னின்று ஆற்றிவரும் அந்த ஆண்டகைமை; எதிர்வருபவர்களை நகைமுகம் முந்த இன்சொல் தொடர வரவேற்கும் அவ்வரிய செயல்; குறிப்பறிந்து ஈயும் அக்கொடைமை; வஞ்சம் கலவாத தூய மனமொழி மெய்களோடு உறவாடும் அந்

தத் திருவடிவம் - இனி என்று, எங்கு மீண்டும் காண்போம்.

தாய்மொழிப் பணியோடு தாய்நாட்டுப் பணியும் புரிந்துவந்ததோடு சமயப் பணியும் புரிந்து வந்தமை பழநி ஈசான சிவாசாரிய சுவாமிகளிடம் சிவபூஜை எழுந்தருளப்பெற்று நாடோறும் வழிபாடு ஆற்றியதும், பிள்ளையார் கோவில் நிறுவி வழிபாடு புரிவித்ததும், தேவாரப் பாடசாலை நிறுவியதும், சன்மார்க்க சங்கக் கட்டிடம் அமைத்து சொற்பொழிவுகள் நிகழ்ந்த வகை செய்ததும் புலப்படுத்தும். அடியேன் அவர்மீது பாடிய கையறுநிலைச்செய்யுட்களுள் இரண்டினை இங்குச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அவை :—

வற்றியநீர் சுனைசுரக்கும் பட்டமரம்
தழைத்தொருகால் வளந்தான் வாய்க்கும்
உற்றவிழி துயின்றோர்கள் விழித்தெழுவர்
மறைபருதி உதிப்பன் மீண்டும்
பற்றியவேற் றூர்சென்றோர் திரும்பிடுவர்
சுப்பையப்பேர் பாராள் வேந்தன்
உற்றிடுமோ மீண்டொருகால் கண்டுகளித்
திடும்பேறும் உளதாங் கொல்லோ !

மேனாடு சென்றுவந்தாய் நம்மவர்நாக
ரிகம்மதே மிக்கதென்று
தாய்நாடு திரும்பிவந்தாய் தார்சூட்டி
வரவேற்றோம் தலைவா இன்று
வானாடு சென்றனையே அங்குள்ளார்
புலவரெனல் மதித்தற் கேயோ
மானாடும் கரதலத்தார்க் குளமீந்தாய்
இனியொருகால் வரவேற்போமோ! என்பன.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள்

(ஒன்பதாவது ஆண்டு விழா 1925) திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் நம் சங்கத்தின் ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்க வந்தனர். அப்பொழுது கேட்கவந்தவர் தொகை ஏனைய ஆண்டு விழாக்களின் மிக்கிருந்தது. இருபத்திரண்டு கார்களுக்கு அதிகமாகவே வந்திருந்தன. நான் எண்ணிப்பார்த்தேன். காரில் வருவோர் ஏழைகளாகவா இருப்பர். பெரிய அரசாங்கப் பதவியில் இருப்போர், மேனாடு பல சுற்றி வந்தோர் முதலியவர் சொற்பொழிவாயின் இவ்வளவு கார்கள் வந்திருக்கலாம். ஒரு தமிழன் பேச்சுக்கு அதிலும் சமயச் சொற்பொழிவுக்கு இவ்வளவு கார்கள் வந்திருந்தன என்றால் அடிகளாரின் பேச்சுத் திறனைப் பற்றி வேறென் கூறுவது. ''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்'' விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்'' என்னும் தமிழ் மறைக்கு இலக்கியமாக நின்றது அடிகள் பேச்சு.

வீர சுப்பைய சுவாமிகள்

வீர சுப்பைய சுவாமிகளும் நமது சங்க ஆண்டு விழாவில் தலைமை தாங்கியிருக்கிறார்கள். இவர்கள் ஐந்தாம் ஆண்டு விழா முதல் எட்டாம் ஆண்டு விழாவரை நான்கு ஆண்டுகள் தொடர்ந்து தலைமை தாங்கியிருக்கின்றார்கள். இவர்கள் கோவை மாவட்டத்து வேட்டைக் காரன் புதூரைச் சேர்ந்தவர்கள். இளமையில் வீட்டைத் துறந்து சென்று ஞான சாத்திரங்கள் பயின்று சென்னை ஆனந்தாஸ்ராமத்தில் இருந்தனர். திருவாரூர் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடத்திலும் இருந்தனர். தருக்கம் முதலிய சாஸ்த்திரங்களில் வல்லவர். கொள்கை வேறுபாடு இருப்பினும் சிவஞான சுவாமிகள் தருக்க சங்கிரக தீபிகை மொழி பெயர்ப்பைப் பெரிதும் வியந்து பாராட்டுவார்.

கந்தசாமி சுவாமிகள்

சிரவணபுரம் கௌமார மடலாயம் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் பெரும் புலமை வாய்ந்தவர். பல பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இவர் பன்முறை இச் சங்கத்தில் தலைமையேற்று இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். சாந்தலிங்க சுவாமிகளின் மேல் பிள்ளைத் தமிழ் பாடி இச்சங்கத்தின் ஆண்டு விழாவில் அரங்கேற்றம் செய்தார். இவர் பாடிய வெள்ளியங்கிரிப் பிரபந்தத்திற்கு அடியேன் ஒரு முன்னுரை எழுதியுள்ளேன். அரங்கேற்றத்திற்கும் சென்றிருந்தேன்.

தவத்திரு. இராமானந்த சுவாமிகள்,
கௌமார மடாலயம் நிறுவியவர்கள், சிரவணபுரம்.



தவத்திரு. கந்தசுவாமி சுவாமிகள், சிரவை.
19, 24, 25 ஆண்டுகளின் நிறைவு விழாத் தலைவர்.



தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்கள்,
சாந்தலிங்கர் திருமடத்தின் இளவரசு, கல்லூரி முதல்வர்.



தவத்திரு. சுந்தரம் அடிகளார் அவர்கள்,
மடாதிபதி, கௌமார மடாலயம், சிரவணபுரம்.

இன்னும் பல புலவர் பெருமக்கள் ஆண்டு தோறும் அழைக்கப் பெற்றனர். இதனிடையில் வல்லநாடு சிவராமசாமி சுவாமிகள் என்பவர் ஞாயிறு தோறும் வருமன்பர்களுக்குச் சாந்தலிங்க அடிகளார் நூல்களை முறையே சொற்பொழிவாற்றி வந்தனர். அதன்பின் சிதம்பர மெய்ஞ் ஞான சிவாச்சாரிய சுவாமிகள் நமது மடத்தில் தங்கியிருந்து வாரக்கூட்டம் ஆண்டு விழா முதலிய செயல்களை நன்கு நடத்தி வந்தனர்.

இவரது ஊர் சிதம்பரத்துக்கடுத்த புவனகிரி என்பது. பின்னர் இவர் திருவை யாற்றில் உள்ள அறுபத்துமூவர் (சிங்கப் பூர்சாமி) மடாலயத்துக்குத் தலைவராய்ச் சென்றனர்.

புவனகிரி என்பது திரிபுவனம் நகரி என்பதன் மரூஉ. திரிபுவனச் சோழன் என்பது ஒரு சோழ மன்னன் பெயர். இங்ஙனமே தஞ்சைக்கடுத்த ராஜகிரி என்பதும் ராஜராஜன் நகரி என்பதன் மரூஉவே

நமது திருமடத்தின் தலைவராய் இருந்த தவத்திரு. மாணிக்க சுவாமிகள் நடராஜப் பெருமான் திருவுலாப் போந்து கருணைபுரிவதாகிய மார்கழித் திருவாதிரை நாளில் ஐக்கியமானார்கள். இது ஒரு வியக் கத்தக்க நிகழ்ச்சியேயாம். இதை நினைக் குங்கால் நமது மடாலயத்தின் இளவர சாகிய தவத்திரு இராமசாமியடிகளின் தந்தையார் சிவராமசாமி சுவாமிகள் மகா சிவராத்திரி நாளில் வழிபாடு முடித்து அடியார்களுக்குத் திருநீற்றுப் பிரசாதம் வழங்கி உடனே ஐக்கியமானதும், திருவா வடுதுறையாதீனத்தில் ஐந்தாறு பட்டங் களுக்கு முன்னிருந்தவரும் பெரும் புலமை யும் நுண்ணறிவும் படைத்தவரும் ஆகிய அம்பலவாண பண்டார சந்நிதிகள் அப்பர் திரு நாளாகிய சித்திரைச் சதயத்தில் ஐக்கியமானதும் நினைவுக்கு வருகின்றன.

மாணிக்க சுவாமிகளுக்குப் பின் ஆறு முக சுவாமிகள் பொறுப்புக்கள் அனைத்தை யும் ஏற்றுச் செவ்வையாய் நடத்தி வரு கின்றனர். இவருக்கு வயது முதிர்ந்தமை யின் மடாலயத்தின் பணிகள் தளர்ந்து தவித்து ஏங்கி நின்றன. இந்நிலைமையில் தவத்திரு சாந்தலிங்கப் பெருமானார் பேரருள் முன்னின்று செலுத்த நமது இராமசாமி அடிகள் உறுபெருந் துணை வராகப் பட்டம் சூட்டப் பெற்றனர்.

தமிழ் நாட்டின் வீர சைவ மடங்களுள் முதன்மைத்தாகிய பொம்மைய பாளையம் தவத்திரு. சிவஞான பாலய தேசிக சுவாமிகளவர்கள் பேரூருக்கு எழுந் தருளித் தமது மயிலம் கல்லூரியில் முறையே தமிழ் பயின்றவரும் வழி வழி சிவத்தொண்டில் ஈடுபட்ட குடியில் வந்த வரும் நற்குண நற்செய்கைகளுக்கு உறையுளாகி எம்போல்வார்க்கு உற்றுழி உதவி ஆதரிப்பவரும் ஆகிய நமது இராம சாமி அடிகளார் அவர்களை மடாலயத்தின் துணைத் தலைவராகப் பட்டம் சூட்டி நீடூழி வாழ்க; நும்மால் சமயப் பணி முதலிய அறப்பணிகள் நாடோறும் தழைத்து ஓங்கி நிலவி விளங்குவதாக என வாழ்த்தி நிறுவியருளினார்கள்.

நமது இராமசாமி அடிகளார் இங்கு எழுந்தருளியது முதல் தொடக்கப் பள்ளி, செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி ஆகியவைகள் தோன்றிக் கல்வி நலம் பரப்பி வருகின்றன. மடாலயத்தின் திருப்பணிகளும் ஆண்டு விழா, குருபூசை விழாக்களும் முன்னை நாட்களின் மிக்க சிறப்புடன் நடந்து வருகின்றன. எல்லாம் பச்சைநாயகியார் சமேத பட்டிப் பெருமானார், சிவகாமி சமேத அரசம் பலவாணர், சாந்தலிங்கப் பெருமானார் திருக்கருணைப் பெருக்கால் நன்கு நிகழ் கின்றன.

வாழ்க நமது சாந்தலிங்கப் பெருமானார்

திருமடாலயம்!

வாழ்க! இங்குத் திருப்பணிபுரியும்

அடியவர் குழாங்கள்!!

வாழிய நீடுழி வாழிய !!

என வாழ்த்தி இக்கட்டுரையை நிறுத்து கின்றேன்.

திருப்பேரூர்ச் சத் வித்யா சன்மார்க்க சங்கம்

சிங்கநோக்கு

(கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்கள், முன்னாள் முதல்வர், சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.)

*

திருப்பேரூர்ச் சத்வித்யா சன்மார்க்க சங்கம் தோன்றி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இச்சங்கம் தோன்றியநாள் தொட்டுச் சத்வித்தையைக்கற்பித்து சன்மார்க்கத்தில் மன்பதையை நிற்பிக்கின்றது. இச்சங்கத்தினால் நற்பயன் பெற்றோரில் யானும் ஒருவன். யான் பெற்ற நன்மைகளையும் அதற்கு ஏதுவான பெரியோர்களையும் பற்றிச் சென்ற காலத்தைச் சிந்தித்து மகிழ்வதே ஈண்டுச் சிங்கநோக்கு எனப்படுவதாகும். சிங்கம் தான் நின்ற நிலையில் இருந்தே, பின்புறம், தான் கடந்த வழியையும் பார்க்கும் என்பர்.

எனது பதினெட்டாம் வயதிலிருந்து இச்சங்கத்தில் எனக்குத் தொடர்புஉண்டு. மாசி மகநாள் அணுகுகிறது என்று அறிந்தால் எனக்கு அகமகிழ்ச்சி எழும். இச்சங்கத்தின் ஆண்டுவிழா அந்நாளிலும் அதன் முன்பின் இரண்டொரு நாளிலும் நடைபெறுவது வழக்கம். சாந்தலிங்க சுவாமிகளின் குருபூசையும் அந்நாளில் தான் நிகழும். சிவபத்தர்களின் கண்ணுக்கு விருந்தாகக் குருபூசையும் காதுக்கு விருந்தாக அறிஞர்களின் பேச்சும் நடைபெறும்.

சத்வித்தையை நன்கு கற்றுச் சன்மார்க்கத்திலே நின்ற பெரியோர் பலர் பொழிந்த சொன்மாரியால், வயதிலும் கல்வியறிவிலும் சிறியனான அந்நாளைச் சிறியனாக இருந்த என் உள்ளம் நனைந்து அதன்கண் கல்விமுளை தோன்றி வளரத் தொடங்கிற்று என்று இன்று நன்றியறிதலுடன் நினைத்து மகிழ்கின்றேன்.

அத்தகைய பெரியோர்களில், என் உள்ளத்தில் முதலிடங் கொண்டவர் சைவப்பெருந்தகை, கயப்பாக்கம் சதாசிவம் செட்டியாரவர்கள். அவர்களுடைய பேச்சினைப்பலதடவை கேட்டதனால் என்உள்ளத்தே சைவத்திருமுறைகளின் பாலும் சித்தாந்த சாத்திரங்களின் மேலும் பத்திமுளைத்து வளரத்தொடங்கிற்று. என்னிற்பெரியரும் சிறியரும் ஆகிய வேறுபலரும் அப்படியே நலன் எய்தினர் எனவும் துணிகின்றேன். கொங்கு நாட்டிற் சைவவிதை தூவியவர் அவர்தான் என்று என்நெஞ்சுநினைகிறது. அவரது பேச்சில் திருமுறைகளின் அருமை பெருமைகளும் சிவபரத்துவமும் தென்மொழி வடமொழியாகிய இருமொழிகளிலும் உள்ள அருள்நூற் கருத்துக்களும் செறிந்திருக்கும். பதார்த்த நிச்சயம்; ஆலயவழிபாடு; சாந்தம்; லிங்கம்; சாமி- என்றதலைப்புக்களில் அவர்கள் பேசிய அந்நாளைப் பேச்சுகளைப்போல மீண்டும் கேட்கும் பேற்றினை என் செவிகள் என்று பெறுமோ!

ஆனந்தாச்சிரமம் சுப்பைய சுவாமிகளின் திருவுருவம் இப்போதும் என் மனக்கண்ணில் நிற்கிறது. முழுநீறு பூசிய திருமேனி. கீளும் கோவணமுமே உடை. தாமரையின் அகவிதழ்போலச் சற்றே சிவந்தகண்கள். முண்டிதமானதலை. இனியகுரல். மேசையின்மேல் பது

மாசனம் இட்டு இருந்து தான் பேசுவார். வேதாந்த நூற்கருத்துக்களேயும் சாந்த லிங்கர் நூற் கருத்துக்களேயும் பண்டி தரும் பாமரரும் உணருமாறு எளிய நடையில் எடுத்துக்கூறுவார். சுவையான கதைகள் பல இடையிடை விரவிவரும். அவர் சொன்ன கதைகளில் ஒன்று :—

வேலூரில் இருந்த மன்னர் ஆகிய இராயர் ஸ்ரீமத் அப்பைய தீட்சிதரையும் தாதாச்சாரியரையும் உடன் அழைத்துக் கொண்டு காட்டில் இருந்த ஒரு மாசாத் தன் கோவிலேத்தரிசித்தார். அச்சாத்தன் தன் மூக்கின்மேல் சுட்டுவிரலே வைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனேயில் இருந் தான். அருகில் இருந்த சிலே ஒன்றில் ''சாத்தனுடைய சிந்தனே இன்னதென்று யாராவது சொன்னல் மூக்கின்மேல் வைத் திருக்கும் விரலே எடுத்து விட்டு இயல்பான கோலத்தில் நிற்பான்' என்று எழுதி இருந்தது. அரசரின் விருப்பப்படி தாதாச் சாரியர் ஒரு சுலோகம் சொன்னர். (அச் சுலோகத்தின் கருத்து எனக்கு நினேவில் இல்லே) சாத்தன் கருத்து அதில் அமைய வில்லே. திருவுருவச்சிலே இருந்தவாறே இருந்தது. பின்னர் தீட்சிதர் ஒரு சுலோ கம் சொன்னர். அதன்கருத்து:—''யான் கைலேக்குச் சென்றல், சிவபெருமானே 'அப்பா' எனவும் பார்வதிதேவியை 'அம்மா' எனவும் அழைப்பேன். வைகுண்டத் திற்குச் சென்றல் திருமாலே 'அம்மா' என அழைப்பேன்; பெண்ணுருக் கொண்டு என்னே அவர் ஈன்றதனுலே; ஆனல் அவர் அருகிலே இருக்கும் திருமகளே என்ன முறைவைத்து அழைப் பேன்? அம்மாளுக்கு ஒரு மனேவியுண்டோ? இது என்ன சங்கடமாயிருக்கிறதே ? என்று சாத்தன் சிந்தனேயில் இருக் கின்றன்'......என்பது. இதனேக் கேட்ட வுடன் சாத்தன் மூக்கின்மேல் வைத் திருந்த கையை எடுத்துவிட்டான்.

இந்தச் சுவாமிகளின் கல்விப் பெருமை புலப்பட நியாயச் சந்திர வேதாந்த பாஸ்கர மகாமண்ட லேச்சுவர வீர சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமிகள் என்பர். இச்சுவாமி களோ எனில் தம்மை ஒரு சில்லரைக் கடை என்றும் ஸ்ரீமத் ஞானியார் சுவாமி களே ஸ்பென்ஸர் அண் கோ என்றும் சொல்லிக்கொள்வர். என்னே! சான்றேர் இயல்பு.

''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னே வியந்து'' (திருக்குறள்)

''கற்றரைக் கற்றரே காமுறுவர்'' (ஔவையார்) என்பது வாய்மை அன்றே.

இந்தப் பெரியாரின் பேச்சுக்களேக் கேட்டதன் பயனுக, கூட்டத்தில் உள்ள அனேவரும் புரிந்துகொள்ளும்படி நல்ல நகைச்சுவை அளவாகக்கலந்து எளிய நடையில் உயர்ந்த கருத்துக்களேச் சொல் லுவதே சிறந்த பேச்சு என அறிந்து கொண்டேன்.

ஞானியார் சுவாமிகள்:— சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாச்சாரியார் என்பது இப்பெரியாரின் முழுப்பெயர். சன்மார்க்க சங்கமேடைப் பேச்சில் இவர்க்கு இணே இல்லே என்று அறிஞர் கூறுவர். கல்வி யாகிய அமுதக்கடல். ஞானச்சொல் மாரிஎன இவரைக்கூறலாம். பல அரிய நூல்களின் நுணுக்கமான கருத்துக்கள் சுவாமிகளின் பேச்சில்வரும். கந்த புராணம், தணிகைப்புராணம், சிவப்பிர காசர் பிரபந்தங்கள், இராமாயணம் முதலிய பலநூல்களிற் பல அரியசெய்யுட் பொருள்களே இவர் பேச்சால் அறிந்து மகிழ்ந்தேன். அவற்றைப் பயிலும் அவா எனக்கும் தோன்றியது. திருப்போரூர்ச் சந்நிதிமுறையிலுள்ள ''இல்லறத்தேன் அல்லேன்'' ''சோமகிரணப்பெருங்கருணே'' எனத்தொடங்கும் செய்யுட்களும் கந்த புராணத்துள்ள ''புன்னெறி யதனில்'' என்னும் பாடலும் சுவாமிகளின் திருவாயி னின்று வந்தால் கேட்பார் உள்ளம் உருகும். செய்யுட்களே இனிமையாகப் பாடும் ஆசை உண்டாகும்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார்:— செய்யுட்களின் சொற்சுவையையும் இலக் கண அறிவால் தோன்றும் நயங்களேயும் தெளிவாக எடுத்துக் கூறும் திறமையில் செட்டியாரவர்களுக்கு அவரே இணேயா வார். ஓர் எடுத்துக்காட்டு:—

''நம்பியைக் காண நங்கைக்கு ஆயிர நயனம்
[வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கும்
அன்னதேயாம்''

என்பது கம்பராமாயணத்தில் வரும் ஒரு தொடர். இராமனும் சீதையும் ஆகிய மணமக்களைக்கண்ட மகளிர் கூற்று இது. இராமனது பேரழகினைக் காண்பதற்குச் சீதைக்கு ஆயிரம்கண்கள் வேண்டும் என்றுளாம் ஒருத்தி. அதனைக்கேட்டவள் சீதையைக்காணுந்தோறும் இராமனுக்கும் அப்படித்தான் என்றுளாம். ஆனால் அவள் கூற்றில் இராமனது அழகிலும் சீதையின் அழகுமிகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. எங்ஙனம் எனில் இராமனது அழகினை முழுதும் காண்பதற்குச் சீதைக்கு ஆயிரம் கண்கள் இருந்தால் போதும். ஆனால் சீதையின் அழகினைக்காண்பதில் அவளது ஒவ்வொரு உறுப்பினையும் காணும் ஒவ்வொரு தடவைக்கும் ஆயிரம் கண்கள் வேண்டும் என்றதாகும். இந்நயம் ''தோறும்'' என்னும் இடைச் சொல்லின் பொருள் உணர்ச்சியால் தோன்றுவதாகும். 'தோறும்' என்ற இடைச்சொல் இடப்பன்மையையும் காலப்பன்மையையும் உணர்த்தும். ஆதலால் இதுபோன்ற நயங்கள் பல செட்டியார் அவர்களின் பேச்சில் வரும்.

''விறகிற்றீயினன்'' என்று தொடங்கும் தேவாரப்பாவில் ''முறுகவாங்கிக் கடைய முன்நிற்குமே'' என்ற தொடருக்கு கடைய, வாங்கிக் கடைய, முறுகவாங்கிக் கடைய, என எடுத்துக் கொண்டு கூறிய உரைநயம் வியக்கற் பாலது.

''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'' என்ற கோப்பெருந்தேவியின் கூற்றின்பொருளை விளக்குவதற்குக் காட்டிய எடுத்துக்காட்டு:—துக்கம் விசாரிக்கும் முறையை ஒருதந்தை தன் மகனுக்குக் கற்பித்தான். அஃதாவது—தாயை இழந்த ஒருவனிடம் உன்தாய் உனக்கு மட்டும் தாயல்லள்; இவ்வூருக்கே தாய் என்றுகூறுக என்றான். அம்முறையைப் பின்பற்றி எல்லாமுறையாருக்கும் சொல்லி வந்தான். அனைவரும் அவனை மெச்சினர். ஒரு நாள் மனைவியை இழந்த ஒருவனைத் தேற்றுங்கால் உன்மனைவி உனக்கு மட்டும் மனைவியல்லள்' என்றான். அவனுக்கு என்ன நடந்திருக்கும் என்பது..........

இதுபோல, இராமாயணம், சிலப்பதிகாரம், திருமுறைகள் முதலியவற்றிலுள்ள செய்யுட்களுக்குக் கூறியநயம் பல. செய்யுட் பொருளை நுகரும் முறை செட்டியார் அவர்கள் கையாண்ட முறைகள் எல்லோரும் பின்பற்றத் தக்கவை வடமொழி நூல்களிலிருந்தும் பொருத்தமான மேற்கோள்கள் காட்டுவர். வடமொழி வெறுப்பினை வெறுத்தவர் இவர்.

ம. ரா. குமாரசாமிப் பிள்ளை :— இவர் ஞானியார் சுவாமிகளின் மாணவர். இவரது பேச்சு கூட்டத்தின் இறுதிப் பகுதியிலே தான் நடைபெறும். காரணம் என்னவெனில் இவர்பேச்சைக் கேட்பதற்காகவே மக்கட்கூட்டம் காத்திருக்கும். பேச்சின் பொருள் விளங்கினாலும் விளங்காவிட்டாலும் பாமரமக்களும் விருப்பத்தோடு கேட்பர். பேச்சின் வேகமும் குரலின் எடுப்பும் அத்தகையது. சண்டமாருதமோ! கடன் மடையோ! பெருமழையோ! என வியக்கத் தக்கதாகும். அத்தனை வேகமான பேச்சாளர் வேறொருவரையும் நான் கண்டதே இல்லை. சிறந்த பேச்சாளராக இன்று உள்ள திருவாளர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் அக்காலத்தில் சுமார் பத்தாண்டுச் சிறுவர். அருமையான பேச்சுப் பேசினார் ஒரு கூட்டத்தில். அதைக் கேட்டுமகிழ்ந்த குமாரசாமிப் பிள்ளையவர்கள் உடனே, தாம் அணிந்திருந்த பொற்பூண் இட்ட உருத்திராக்க மாலையைப் பரிசாக அளித்தார். சம்பந்தனாரின் அருமைத் தந்தையார் அ. மு. சரவணமுதலியார் அவர்களின் பேச்சு வேகத்தை இப்பிள்ளையவர்களின் பேச்சு வேகத்துக்கு இரண்டாவதாகக் கூறலாம். பெரிய புராணப் பேச்சில் வல்லவர் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்.

மறைமலையடிகள் :—அடிகளாரது பெருமையைத் தமிழன்பரில்அறியாதார் இல்லை. அடிகளாரது பேச்சை முதன் முதலாக யான் கேட்டுப் பெரிதும் வியந்தேன். பிறமொழி கலவாத தனிச்செந்தமிழ்ப்

பேச்சு. ஞானசம்பந்தரைப் பற்றிக் கூறுங்கால் கண்ணீர்வார மொழிதழுதழுத்துப் பேசினுர். அடிகள் பேச்சைக் கேட்ட பின்னரே தமிழின் அருமை பெருமைகளை அறிந்துகொண்டேன். சங்கநூற்களின் மேல் பற்றுண்டாயிற்று. சிவனெடொக்கும் தெய்வமும் சித்தியாரொடொக்கும் சாத்திரமும் தமிழொடொக்கும் மொழியும் இல்லை எனும் துணிவும் எனக்கு ஏற்பட்டது. ஈண்டுச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்ட பெரியோர்களே யன்றி மற்றும் பலபெரியோர்கள் பேச்சுக்களும் ஒவ்வொர் அளவில் எனக்குக் கல்வியில் ஊக்கம் உண்டாக்கின. எனவே கழிந்த காலத்தில் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் நடைமுறை நினைக்குந்தொறும் மகிழ்ச்சி விளைவிக்கின்றது. அச்சங்கத்திற்கு யான் நன்றியறிதலுடன் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

''எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்''

என்ற வள்ளுவர் வாய்மொழிப்பயனைத் தெள்ளிதில் உணர்கின்றேன்.

சிங்கநோக்கின் மற்றெருபகுதியாகிய முன்னேக்கத்தை விரிக்க விரும்புகிலேன். அதுஎல்லோரும் நேரில் காண்பதாக இருக்கின்றது. காவிரியாற்றின் கிளைநதி போலப் பழைய போக்கினின்று புது முறைகளும் பல கிளைத்திருக்கின்றன. பேச்சுப் போட்டி, பட்டிமண்டபம் முதலியன அவை. அவற்றின் பயனை இளைய வித்யார்த்திகள் தான் உள்ளபடி கூறுதற்கு உரியராவர்.

சத்வித்தியையில் வளர்ச்சியும் சன்மார்க்கத்தில் உறுதியும் அளித்து மாந்தரை உய்விக்க வேண்டும் எனச் சாந்தலிங்க தேசிகரின் தாமரைத் தாளிணையைப் பணிந்து போற்றி வேண்டிக் கொள்கின்றேன்.

——

ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளாதீனம், சந்தான குருபரம்பரை ஸ்துதி

(பதினுன்கு சீர் விருத்தம்)

புண்ணியன் கைலைக் குருபரம்பரையிற்
போந்த மெய்கண்ட சந்ததியிற்
பொருவில் சீர்த்துறைசை நகர்வளர்
சிவப்பிரகாசர்தம் பொன்னடி புனைந்த
எண்ணினற்றவத்துச் சாந்தலிங்கேச
னெல்லையின் மோனனந்த நிலையாம்
இரும்பொருளளித்த விருத்தவம்பிகையா
ளின்புறுங் குமார சத்குரவன்
திண்ணியவருள்சேர் சிதம்பர தேவன்
செப்புறும் பழநிமா முனிவன்
திருவமராறுமுகன் குவாகத்தான்
செப்பும் வேலாயுதத் திறலோன்
கண்ணினுக்கிமையாங் குழந்தைவே லடியேன்
கருமலங் களைந்த முத்தையன்
கருதுமிச் சந்தானக் குரவர்கடாட்
கமல முண்ணினைந்து கைதொழுவாம்.

(இப் பாடல் சத்வித்யா சன்மார்க்க சங்க முதலைந்தாண்டு அறிக்கையில் கண்டது.)

* பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மடமும் சத்வித்யா சன்மார்க்க சங்க விழாவும்

[திரு. மறை - திருநாவுக்கரசு, அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.]

❋

கோயம்புத்தூருக்கு மேற்கே மூன்றுவது கல்லில் நொய்யலாற்றின் கரை மேல் பேரூர் என்னும் திருத்தலம் அமைந்துள்ளது. நொய்யல் ஆற்றின் பழைய பெயர் காஞ்சி. பேரூர், இப்போது கோயம்புத்தூர் நகரின் பகுதியாய் விட்டது. இத்தலத்தினை மேலைச் சிதம்பரம் என்று சிவநேசர் போற்றுவர். இத்தலத்தின் இறைவர் பட்டீசர். இக் கோயில் வடிவங்களில் அம்பலவாணருக்குத் தான் மிகச் சிறப்பு. திருவாதிரை விழாவே இங்கு சிறந்த விழாவாகும். இயற்கை அழகு சூழ்ந்த இவ்வூர் இறைவன் வழிபாட்டிற் கென்றே அமைந்ததாகும். சிதம்பரத் தேவாரத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் இத்தலக் கூத்தனை வைத்துப் போற்றி மகிழ்ந்தார். அப்பாடல்,

"பாரூரும் அரவல்குல் உமைநங்கை யவள் பங்கன் பைங்கண் ஏற்றன், ஊரூரன் தருமனார் தமர் செக்கிலிடும்போது தடுத்தாட் கொள்வான், ஆரூரன் தம்பிரான் ஆரூரன்மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்று மன்றே" என்பது.

தமிழகத்தில் சிற்பம் நிறைந்த கோயில்களில் பேரூரும் ஒன்றென்பதை அறியாத கலைஞர் இரார். இப்பேரூரில் சாந்தலிங்க சுவாமிகள் வாழ்ந்தார். வைராக்கிய சதகம், கொலைமறுத்தல் முதலிய நூல்களை இயற்றினர். இவரமைத்த திருமடம் ஒன்று இவ்வூர் வாயிலில், மதிலும், பொழிலுஞ் சூழ்ந்த இடத்தில் அழகாக அமைந்துள்ளது. அமைதியும், இனிமையும், சோலையும் சூழ அம்மடம் பெரிதாய், அழகியதாய் அமைந்திருப்பது இன்பந் தருவதாகும். இன்று அத்திரு மடத்தில் செந்தமிழ்க் கல்லூரி ஒன்று நிகழ்ந்து வருகின்றது. மாணவர் பலர் அதில் பயில்கின்றனர். மடத்துத் தலைவராக விளங்கும் இராமசாமி அடிகள் தமிழ்ப் புலவர்; உயர்ந்த தொண்டர் ஆவர்.

இத்திருமடத்தில் 1927-ல் மாணிக்க சுவாமி என்பார் தலைவராயமர்ந்திருந்தார். புலவர்கள்பால் அன்பும், ஆதரவுங் கொண்டவர். இம்மடத்தின் சார்பில் 'சத்வித்யா சன்மார்க்க சங்க' விழாவை ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வந்தார்.

விழாவில் அறிஞர் பலர், புலவர் பலர் சில நாட்கள் தொடர்ந்து விரிவுரைகள் ஆற்றுவர். பன்னூற்றவர் கேட்டுப் பயன் பெறுவர். அச்சங்க விழா ஒன்றுக்குத் தலைமை தாங்க வேண்டுமென மாணிக்க சுவாமி 7—1—27-ல் பல்லாவரம் போந்து அடிகளை வேண்டினர். இசைவு பெற்றுப் பேரூர் சென்றார். விழாவுக்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்புடன் செய்யலானார்.

அடிகள் தலைமை பூணும் விழாவாகலான் திறமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பி. ரத்தின சபாபதிக் கவுண்டர் என்ற பெயர் பெற்ற பெருமகன் தலைமையில் வர

* மறைமலை அடிகள் வரலாறு என்னும் நூலிலிருந்து ஆசிரியர் இசைவுடன் எடுத்துச் சேர்க்கப்பட்டது.

வேற்புக்குழு நன்கு பணியாற்றியது. வேதாந்த, சித்தாந்தத்தில் தெளிந்த அருட் சான்ருேரான சிவராமலிங்க சுவாமிகள் அடிகளின் பேச்சினைக் கேட்கவும் அவர்களு டன் அளவளாவவும் திருநெல்வேலியிலிருந்து பேரூர் வந்தார்.

யான் 1926 ஜுலை முதல் தஞ்சாவூருக்கு மேற்கே ஏழுகல் தொலைவில் காவிரியின் வட கரையில் விளங்கும் திருவையாற்று வட மொழிக்கல்லூரியில் மாணவனகச் சேர்ந்து தமிழ் பயின்று கொண்டிருந்தேன். அக் கல்லூரியின் இப்போதைய சுருக்கப் பெயர் தமிழில் அரசர் கல்லூரியாம்.

பல்லாவரத்திலிருந்து அடிகள் விடுத்த கடிதப்படி விடுமுறை பெற்று அடிகளின் அன்பு மாணுக்கர்களான தஞ்சாவூர் வீரை யன் பி. ஏ. எல். டி காங்கேயம் பேட்டை இராமச்சந்திரன் பிள்ளை என்பவர்களுடன் 16—2—1927 காலை கோயம்புத்தூர் புகை வண்டி நிலையத்தில் அடிகளோடு சேர்ந்து கொண்டேன். மாணிக்க சுவாமியுள்ளிட்ட பல பெரியோர்கள் அடிகளுக்கு மாலைகள் பல சூட்டி வரவேற்றுப் பேரூருக்கு அழைத் துச் சென்றனர்.

அங்கு நொய்யலாற்றின் கரையில் கோயிலுக் கருகில் அமைந்துள்ள பஞ்சாலை உரிமையாளர் சோமசுந்தரஞ் செட்டியாரின் பங்களா, அடிகள் தங்குதற்காக ஒதுக்கப் பட்டிருந்தது. வசதியான அம்மாளிகையில் தங்கினேம். அடிகளுக்குப் பணிவிடைகள் புரிய அங்கப்பாவும் பல்லாவரத்திலிருந்து உடன் வந்திருந்தார். அடிகளுக்கான வசதி களை உன்னிக்கும் மேற்பார்வை என்னைச் சார்ந்தது. வேறு ஊழியர் சிலரும் உதவிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். எல்லா வசதி களும் குறைவின்றி நிறைந்திருந்தன.

எனக்கு அப்போது அகவை இருபது. நல்லஊக்கமும் மகிழ்ச்சியும் மிக்க வயது. தமிழ்ப்புலமை யார்வம் என்னும் அவா என்னை விழுங்கியிருந்தது. கற்பதில் பேரவா, தமிழ்ப் புலவர்கள் சொற்பொழிவுகள் என்ருல் எனக்கு எல்லையற்ற விருப்பம் அதுவும் என் தந்தையாரே தமிழ்த் தலைவர்; அவரே விழாத் தலைவர். எனவே, என் ஆர்வ உணர்ச்சிகள் அப்போது நடந்த விழாச் சிறப்புகளில் மிகவும் ஊன்றி நின்றது. அந் நிலையில் பேரூர் விழாச் சிறப்புக்களெல்லாம் என் மனத்திரையில் அழியா இன்ப ஓவியங் களாய் நிலைத்துவிட்டன. ஆதலின், அவற்றை எல்லாம் ஒரளவேனும் என்னல் சொல்லா மலிருக்கக் கூடவில்லை. சுருக்கிச் சொல்லு வன் கேட்பீர்கள்.

முதல் நாள் விழா

17—2—1927 பிற்பகல் 1-30 மணிக்கு சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் அமைக் கப்பட்டிருந்த பெரிய அணி செய்யப்பட்ட அழகிய பந்தரில் அன்பர்களும், அறிஞர் களும் புலவர்களும், துறவிகளுமாக ஆயிரம் பேருக்குமேல் குழுமியிருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், வி. சி. வெள்ளியங் கிரிக் கவுண்டர், பி. ரத்தின சபாபதிக் கவுண்டர், திவான் பகதூர், சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார், இடையகோட்டை பழைய கோட்டை, சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர்கள். இராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ்செட்டியார்முதலியோராவர். மற்றும் பல பெரியோர்களை யானறியேன். கோயம்புத்தூர்ச் சீர்மை முழுவதும் உள்ள பெரும்பாலான செல்வர்களும், தலைவர் களும், வணிகர்களும் நிறைந்திருந்தனர். மாலை நெருங்க நெருங்கக் கூட்டம் மிகுந்து கொண்டே சென்றது. இரவு 7 மணிக்குக் கூட்டத்தினரின் அளவு இரண்டாயிரம் பேர்.

விழாத் தொடக்கத்திற்கான சடங்கு கள் யாவும் நிகழ்ந்தன. வரவேற்புத் தாள் களும் வழக்கப்படி படித்தளிக்கப்பட்டன. அடிகள் எழுந்து சிவவணக்கம், திருஞான சம்பந்தர் வணக்கம் முதலிய சில பாடல்களை இனிமை கனியப்பாடி வணங்கிக் கண்களைத் திறந்து அவையோரை நோக்கினர். அவை யினர் கண்கள் யாவும் அடிகள் திருமுகத் தில் பதிந்து விட்டன. இன்ப நிறைவான அமைதியாண்டும் நிலவிற்று. அடிகள் சிறிது நேரம் முகவுரையாற்றினர். தம் நீண்ட முடிவுரையைக் கடைசியில் பேசுவதாகத் தொடக்கத்திலேயே சொல்லிவிட்டனர்.

பிறகு, முதற்சொற்பொழிவாளர் அ. மு. சரவண முதலியார் "அழுதடிபடைந்த அன்பர்" என்பதைப் பொருளாகக் கொண்டு மாணிக்க வாசகரின் பேரன்பின் பெற்றியை மிக அழகாக - ஆராய்ச்சியுடன் உருக்க

முடன் பேசிமுடித்தார். இவரது பேச்சின் நலத்தை அடிகள் அன்றுதான் கேட்டார்கள். அன்றுதான் அவர் நட்பும் ஏற்பட்டது. முதலியாரின் பேச்சுப் பற்றி அடிகள் தம் குறிப்பில், “நல்ல தமிழில் அழகாயமைந்த இவரது பேச்சு என் உள்ளத்தை உருக்கியது” என்று வரைந்துள்ளனர்.

அடுத்துப் பேசியவர் சென்னை ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. “சிவமே சிறந்ததாய்” என்னும் பொருள் பற்றி மிக நன்ருகப் பேசினுர் என்று அடிகள் குறித்துள்ளார். பின்னர் அடிகள் நீண்ட முடிவுரை நிகழ்த்தினர். மிக அழகாக இரண்டரை மணிநேரம் பேசினர். அன்பர்கள் உள்ளம் குளிரக் கேட்டு உவகை கொண்டனர். முதல் நாள் விழா அளவில்லா இன்ப உணர்வுடன் முடிந்தது.

அன்பர் கூட்டம் பேச்சினைச் சுவைத்து இன்பங்கண்டது. அறிஞர் கூட்டம் அடிகளைச் சூழ்ந்து கொண்டது. எங்கும் அடிகளின் புகழ் நிறைவான பேச்சுக்களே யாவர்வாயினு முழங்கின. அடிகளின் தோற்றப் பொலிவைப் பேசுவோரும் விரிவுரையின் சிறப்புக்களை விளம்புவாரும், நூல்களின் அருமைகளை எடுத்துரைப்பாரும், அறிவின் நுட்பத்தை ஆராய்ச்சியின் வன்மையை எடுத்துரைப்பாரும் எங்கும் நிறைந்தனர். ஒப்புரவுகள் அளவிலமையாது வளர்ந்தன. அடிகளின் தங்குமிடத்தில் பலர் கையுறைப் பொருள்களோடு வந்து காத்திருந்தனர்.

விழாவின் இரண்டாம் நாள்

பிற்பகல் இரண்டு மணிக்கு அடிகள் தலைமையில் விழாத்தொடங்கியது. இரண்டாயிரம் பேர் திரண்டிருந்தனர். ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. “தமிழும் தமிழர்களும்” என்பது பற்றி மிக நன்ருகப் பேசினர். அடுத்துச் சின்னையா நாயகர் என்பார் “குருபத்தி” என்று உரையாடினர். பந்தலில் இடம் போதாமையால் அவையில் சலசலப்பேற் பட்டது. அடிகள் எழுந்து பேசி அமைதி உண்டு பண்ணினுர். பிறகு அ. மு. சரவண முதலியார் “அப்பூதியடிகள்” என்பது பற்றி விரிவாகவும், மிக நன்ருகவும் பேசினுர். அதன்பின் அடிகளின் முதல்மாணவரான சென்னை மணி திருநாவுக்கரசு முதலியார் ‘பக்தியோகம்’ பற்றிச் சொற்பொழிவாற்றினுர்.

பிறகு அடிகள் எழுந்து, இரண்டு மணி அளவு பேச்சாளர்கள் பேசியவற்றிலுள்ள அருங்கருத்துக்களை எல்லாம் நுட்பமாகவும் திறமாகவும் விளக்கி உரைத்தார்கள். அடிகளின் இவ்வறிவு செறிந்த ஆய்வுரைகள் அவையோரை எல்லையில்லா இன்ப வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டது. அடிகளின் பேசும் ஆற்றல் தன் முழுத்தன்மையுடன் வீறுபெற விளங்கிற்று. அடிகளின் இனிமையுடன் ஆர்ந்த இன்பஉரைகளே எல்லார் உள்ளங்களிலும் ஆரா இன்பத்தை விளைவித்தன. இடையிடையே சொற்பொழிவாளர்களின் பெயர்களைக் கூறிக் கூறி அவர்களின் அறிவாற்றல்களைப் பாராட்டுமாறு செய்திராவிட்டால் பேச்சாளர்களின் நினைவு அவையோர் நினைவிலிருந்து நீங்கியிருக்கும். அடிகளின் பேச்சில் அவையினர் அப்படி உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டனர். கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுற்ற பிறகு தான் கேட்டவர்களுக்கு ஓ! இவ்வளவு நேரமாகி விட்டதா? நேரம் போனதே தெரியவில்லையே! என்ற நினைவுகள் ஏற்பட்டன. பிற்பகல் இரண்டு முதல் இரவு 10 வரையில் 8 மணி நேரமா அவை நடப்பது? யார் குற்றம்? கேட்டவர்கள் குற்றந்தான் அது.

மூன்ரும் நாள் விழா

அடிகள் ஏற்பாட்டின்படி முற்பகலிலும் நிகழ்ச்சி தொடங்கியது. மணி 10. மணி திருநாவுக்கரசு முதலியார் அடிகளின் கல்லூரி மாணவர். திருநெல்வேலி டி. எஸ். காந்திமதிநாத பிள்ளை பி. ஏ. ஆகிய இருவரும் முறையே “மதம்” “தமிழ் வேதம்” என்பனபற்றி விரிவுரைகளாற்றினர். மறுபடியும் விழா பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கியது.

பேரூர் பெயரளவில்தான் பேரூர். இல்லை கோயிற் பெருமையினுல் அப்பெயர் பெற்றிருக்கலாம். ஆனுல் பேரூர் என்ற இச் சிற்றூரில் அறிவின்பத்தை நுகர அன்று கூடிய கூட்டத்தை என்னென்று வியப்பது! வெளியூர்களிலிருந்தே மூவாயிரம் பேருக்கு மேற்பட்ட அன்பர்களும், அறிஞர்களும் புலவர்களும் பெருமக்களுந் திரண்டு நிறைந் . .



திரு. இரா. க. சண்முகஞ் செட்டியார்,
தமிழ்க் கல்லூரிக் கழகத்தின் முதல் தலைவர்.



சித்தாந்தப் புரவலர்,
சைவ ஞாயிறு, செந்தமிழ்ப் புரவலர்,
தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர்,
கோவை கிழார். ம. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A., B.L.,

தனர் ஒப்பரிய காட்சி! அடக்கமும், இன்பமும், தமிழார்வமும் தெய்வ பக்தியும், புலமையும் நிறைந்த அன்பர்களின் திரட்சி கோவை நகரிலுள்ள ஆசிரியர்கள், ஆலை முதல்வர்கள், வணிகர்கள், அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு நின்ற இது போன்ற கூட்டம் எங்கும் நிகழ்ந்திராது, என்று அன்பர்கள் ஆர்வமுடன் கூறினர். எல்லார் உள்ளத்தும், வெளியேயும் அழகான அடிகளே வீற்றிருந்தார், செவிகளில் இன்பத்தேன் மழையைப் பெய்து கொண்டிருந்தார். அறிவிலே ஒளி வீசிக் கொண்டிருந்தார்.

இவ்வினிய சூழ்நிலையில் அடிகள் சிறிது நேரம் முன்னுரை ஆற்றி அவை நடைபெற வேண்டும் முறைமையுங் கூறிக் கோயம்புத்தூர் வழக்கறிஞர் சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களைப் பேசப் பணித்தார். அவர் 'மதத்தின் இன்றைய நிலை' என்பது பற்றிப் பேசினர். பின்பு ஞானியார் சுவாமிகள் மாணவர் திருக்கோவலூர் மணம்பூண்டி. ம. ரா. குமாரசாமி பிள்ளை என்னும் மாபெரும் பேச்சாளர் 'சேந்தனுர் வாழ்க்கை' என்பது பற்றி மக்கள் எல்லாரும் இன்ப ஆரவாரம் கொண்டு கேட்கத் தேன் மழை பொழிவதென, பேராறு பெரு வெள்ளங் கொண்டு திரண்டுருண்டு இன்னொலியுடன் ஒடுவதென — பனிவரையின் அருவியென இரண்டு மணி அளவு பேசினர். அவையோர் அடிகளை மறந்தே விட்டனர்.

அடிகள் தம் முடிவுரையை அவையோர் நன்கு சுவைத்து இன்புறுதற்காக மாலையில் அரை மணி நேரம் ஓய்வு தந்தனர். பந்தலில் இடமில்லாமையால் நாற்புறத்து மிருந்த அடைப்புகள் அகற்றப்பட்டன. கூட்டம் மிகுந்து விட்டது. நான்காயிரம்பேர் கூடியமர்ந்திருந்தனர்; அரிய அதிசயத்தைக் காணத் திரண்டிருப்பது போல அமைதி அங்குக் குடிகொண்டது. ஆவி விளக்குகள் எரியும் ஓசை மட்டும் ஒத்தூதிக் கொண்டிருந்தது. சிவ சமயத்தின் சிறப்பே உருக் கொண்டதே போல் அழகில் திகழும் அடிகளார் எழுந்தார். உணர்ச்சி மிகக் கண்ணீர் சொரிய வணக்கப் பாடல்களைப் பாடி அவையினரை இரண்டொரு கணங்கூர்ந்து பார்த்து விட்டுப் பேசத் தொடங்கினர்.

முற்பகலினும் பிற்பகலினும் நிகழ்ந்த சொற் பொழிவுகளிற் கண்ட அரிய பொருள்களைப் பற்றுக் கோடாக் கொண்டார். சீரிய ஆராய்ச்சிகள் நிறைந்து விம்மின. அன்று அடிகள், தாம், இத்துணை யாண்டுகளாகக் கற்றுச் சேர்த்த பேரறிவுக் கருவூலங்களை எல்லாம் எவ்வகையான தங்கு தடையும் இன்றி எளிதாக எடுத்தெடுத்து வழங்கினர். அறிவும், பேச்சும் நினைக்குமுன் அவர்க்கு அடிமைகள் போலப் பணியாற்றின. அவையோர், 'இப்பிறப்பில் இணையிலா இன்பம் பெற்றேம்; மறுமை இன்பமும் இதற்கு ஈடாகுமோ? பேரின்பம் ஒன்றுண்டானல் அது இதுவேயாகும். இப் பேரின்பம் தந்த இவரே சிவம்' என உருகினர். இன்பத்தால் அழுதனர் பலர். தந்திறமும், அவையோர் அடைந்த இன்பமும் கண்டார்; அடிகள். முடிவுரையின் முடிவுரையில் இந் நிகழ்ச்சிகளை இனிதே நிறைவேறச் செய்த சிவபெருமானை வணங்கி மாணிக்க சுவாமிகளையும் பாராட்டி, அன்பர்களை வாழ்த்தி இரவு 10-30 மணிக்குத் தம் பேச்சினை முடித்தனர்.

3-30 மணியளவு பேச்சிலாழ்ந்தின்புற்றிருந்த அவையினர் தம்முணர்வு பெற்றனர். 'மூன்று நாளாய்க் கண்டும் கேட்டும் வந்த அடிகளை இனி என்று காண்போம்; அவர் இன்னுரைகளைப் பொன்னுரைகளை — ஆய்வுரைகளை என்று கேட்போம்" என்று இன்பத்தில் துன்பங் கண்டனர். நூற்றுக் கணக்கானவர்கள் அடிகள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தம் அன்பார்வத்தை ஓரளவு தணித்துக் கொண்டனர். மறுநாள் மாணிக்க சாமிகள், தமது மடத்தில் அடிகட்குச் சிறப்புக்கள் பல செய்து சிறப்பான விருந்தும் அளித்தார். தம்முடன் அடிகளையும் சிவ ராமலிங்க சுவாமிகளையும் உடன் வைத்தோர் படமும் எடுத்துக் கொண்டார். ரத்தின சபாபதிக் கவுண்டரும் தம்மை, அடிகள், மடத்து ஊழியர்கள், சரவண முதலியார், காந்திமதிநாத பிள்ளை ஆய சொற்பொழிவாளர்களுடன் வைத்துப் படமெடுத்துக் கொண்டார். அப் படங்கள் இரண்டும் அடிகள் மாளிகையிலுள்ளன. ஒன்றில் ரத்தினசபாபதிக் கவுண்டர், மருதாசலக் கவுண்டருடன் அடக்கமாக அடிகளின் அடியிலமர்ந்துள்ளார். அன்று மாலை அடிகள் அனைவருடனும் பட்டீசர் கோயில் சென்று

தம் "தாய் தந்தையரை" வணங்கிப் பின், பேரூரிலுள்ள பிற கோயில்களை வணங்கியும், பார்வையிட்டும் மகிழ்ந்தார்கள்.

பேரூர் விழா முடிந்த மறுநாள் என் றெண்ணுகின்றேன். அந் நாட்காலை அடிகளைக் காணப் பலர் போந்து உட் கூடத்தில் அமைதியாய் அமர்ந்திருந்தனர். வருவாரை எல்லாம் யான் வரவேற்று அமர வைத்துக் கொண்டும், அவர்களோடு அன்புரைகள் பேசிக் கொண்டும், அங்குமிங்கும் ஓடியாடி எனக்குள்ள கடமைகளைச் செய்து கொண்டிருந்தேன்.

சற்று நேரத்தில் இரண்டு மூன்று பேர் உடன் வர 'ஒருவர்' வந்தார். அவரை யான் வரவேற்றேன். கூர்ந்து நோக்கினேன். நெட்டையான வடிவம். மாநிறம். நரம்புகள் எழுந்த கட்டுடல். ஆனால், பருமனில்லை. சந்தனப் பொட்டுடன் கூடிய நிறைந்த நீறணிந்த நெற்றியும் மேனியும், உள்ளமைந்த சிறு கண்கள் ஒட்டிய கன்னம், அப்பளக் குடுமி, மார்பில் உருத்திராக்கக் கண்டி, இடுப்பில் பூங்காவி போன்ற தார்ப்பாய்ச்சு, அதன் மேல் இடுப்பைச் சுற்றிக் கட்டப்பட்ட பிடியாகச் சுருக்கிய துண்டு; இக் கோலத்துடன் அவர் சிறந்த சிவனடியாராக விளங்கினர். துணியால் மூடப்பட்ட பழங்கள் நிறைந்த ஓர் தட்டை அவர் தம் கைகளில் ஏந்திக் கொண்டு—தம் எடுப்பான பல் வரிசைகள் தோன்ற மிக வணக்கமாக உடலை வளைத்துக் கொண்டு "சுவாமிகளைப் பார்க்க வேண்டும். அவர்கட்கு வசதி இருக்குமா" என்று கேட்டார். கவர்ச்சியில்லாத — ஆனால், ஓரளவு தோற்றப் பொலிவுள்ள இவர் யாராக இருக்கலாம்? என்று கருதினேன். விளங்குமா? ஒரு நொடி இவ்வாறெண்ணிச் சற்றுத் தயக்கத்துடன், "அடிகள் சிற்றுண்டி கொள்கிறார்கள். இன்னும் அரை மணி நேரம் சென்றால் காணலாம்" என்றேன். போய் விட்டார்.

உண்டியை முடித்துக்கொண்ட அடிகள் ஓர் நாற்காலியில் அமர்ந்து கீழே உட்கார்ந்து கொண்டிருந்த அன்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அரை மணிக்கு முன் வந்த அவரே மீண்டும் சிலருடன் போந்து வில்லாக வளைந்து அடிகள் திரு முன்பு பழத் தட்டை வைத்து வீழ்ந்து நெடுவணக்கஞ் செய்தார். உட்கார்ந்திருந்த அன்பர்கட்கெல்லாம் அவர் பெருமை தெரியுமாதலால் அவர்களெல்லாரும் சற்றே பரபரப்புடன் அகன்று இடந் தந்தனர். வணங்கிய அவரை அடிகள் அமரச் செய்து "தங்களை அறியக் கூடவில்லையே?" என்றனர்.

அவர் தமது இடது கையை வயிற்றில் சுற்றிக்கொண்டு வலது கையால் வாயைப் பொத்திக் கொண்டே "அடியேன் கந்தசாமி" என்று குறுநகை தோன்ற மெதுவாகச் சொன்னர். அடிகள் மிகவும் வியப்பான தோற்றத்தோடுங் குரலோடும் தாங்களா? தங்களைப் பார்க்க வேண்டுமே என்று மிகவும் ஆவலுடன் இருந்தேன். தங்கள் அருமை பெருமைகளை எல்லாம் பல்லாண்டுகளாகக் கேள்விப்பட்டு வருகின்றேன்; தங்கள் தமையனரைப் பற்றியும் மிகுதியாய்க் கேள்விப்பட் டிருக்கிறேன். தாங்கள் இக்காலத்து "இரட்டையர்கள்" அன்றே? தங்களைப் பார்ப்பது அளவு கடந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என்று அடிகள் முகமலர்ந்து, ஆர்வமுடன்—ஆரா மகிழ்ச்சியுடன் பேசினர்.

அவர் அடிகள் உரைகளால் மிக மகிழ்ந்து மிகப் பணிவான சொற்கள் பலவற்றைச் சிறிதே பேசினர். அடிகள் தம் முன் வந்தமர்ந்தவர்களை எல்லாம் விட்டு அவரிடமே பல்துறை பற்றிய ஆய் வுரைகளைப் பேசி அளவளாவினர். இவர் தாம் கந்தசாமி பிள்ளை என்றறிந்தபோது எனக்கு ஏற்பட்ட திகைப்பும், வியப்பும், மகிழ்ச்சியும் சொல்லி முடியாது. இவ்வளவு பெரும் புலவர் இவ்வளவு அடக்கமும் பணிவுமாக இருக்கின்றாரே என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

[குறிப்பு:—மறைமலை அடிகள் 1949-ஆம் ஆண்டிலும் குருபூசை விழாவிற்குத் தலைமை ஏற்றிருக்கின்றார்கள்.]

கயப்பாக்கம். திரு. சதாசிவம் செட்டியார் B. A., அவர்களின் வாழ்க்கை வரலாறும், பேரூர் சத் வித்யா சன்மார்க்க சங்கத் தொடர்பும்.

[கயப்பாக்கம். சோமசுந்தரம் செட்டியார், சென்னை-5.]

சேட்டியார் அவர்கள் பிறப்பும் வளர்ப்பும்;

சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில் 1872ல் கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் என்னும் வைசிய குலத் தோன்றல் சென்னையில் கயப்பாக்கம் இரத்தின செட்டியார் அரங்கம்மாள் ஆகிய தம்பதிகளுக்குப் பிறந்தார். உரிய காலத்தில் கல்வி பயின்றார். B.A., பட்டத்தைச் சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் 1894ல் முதல் வகுப்பில் பெற்றுத் தேறினர். அப்போது அஷெ கலாசாலையில் இவருக்குத் தமிழாசிரியராக விளங்கியவர் திருமணம். செல்வகேச முதலியார் M. A. அவர்கள். இவர் தொடர்பும் நம் சங்கத்திற்கு இருந்திருக்கிறது.

பிறகு இவருக்குத் திருமணம் நடந்தது. ருக்மிணி அம்மையார் என்பது இவரது மனைவியின் பெயர். இவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. இவர் சென்னை (Sea Customs House) சுங்க இலாகாவில் வேலையிலமர்ந்து சுமார் 15 ஆண்டுகள் வேலை பார்த்து வந்தார். பிறகு உத்தியோக உயர்வு காரணமாக காகி நிறமுள்ள கால்சட்டை, முதலியன அணிய வேண்டியிருந்ததன் காரணமாக வேலையை விட்டு நீங்கினர்.

இவருக்கு இளம் பிராயம் தொட்டே வீட்டில் பூசை செய்வது, தேவாரம் பாடுவது முதலியன சிறந்த வழக்கமாக இருந்ததன் விளைவாகப் பின்னர் அவைகளே மலர்ந்து பெருகிச் சிவபூசை செய்வதற்கும், சைவத் தெய்வத் திருமுறைப் படனம் செய்வதற்கும் பெரிதும் துணைபுரிந்தன என்னலாம்.

சமயத் தோண்டுகள்:-

இவர் தம் வாழ்நாளில் முதலில் தமது 25ம் வயதில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தில் சேர்ந்து மாதந்தோறும் பல அடியார்களுடன் தல யாத்திரை செய்து வந்தார். சிறப்பாகத் திருவூறல் என்னும் (தக்கோலம்) தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலத்திற்கு ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் சென்று அங்கு சமயச்சொற்பொழிவாற்றி மறுநாள் காலை அனைவரும் நீராடி நித்தியக் கடன்களை முடித்துக் கொண்டு உழவாரத் திருத்தொண்டு செய்து இறைவனை வழிபட்டுச் சென்னை திரும்புவது வழக்கம். ஒரு சமயம் நிகழ்ந்த செய்தி இவரது உண்மையான சீவகாருண்யத்தைக் காட்டுமென்றெண்ணித் தெரிவித்துக்கொள்ளலாம். அங்கு அன்று இவர் பேச எடுத்துக் கொண்ட பொருள் "சீவகாருண்யம்" என்பதாகும். உபந்யாசம் செய்யும்போது ஒருவர் குறுக்கிட்டு 'தேள், பாம்பு முதலிய விஷப் பிராணிகளை ஆண்டவன் ஏன் படைத்தான்? அவற்றினிடம் கூடவா கருணை காட்டுவது" என்று கேட்டார். அதுகாலை தெய்வச் செயலாக இவர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த திண்ணையின்மேல் கூறையிலிருந்து ஒரு தேள் இவர் தோளின் மீது விழுந்தது. அனைவரும் பதறினர். இவர் மட்டும் தன் கையை அசைக்காமல் திண்ணையிலேயே ஊன்றிக்கொண்டிருந்தார். அது இவரை ஒன்றும் செய்யாமல் அப்படியே கீழே இறங்கிப் போய்விட்டது. என்னே இவர்தம் உயிர்க் கருணை!

வேறொரு சமயம் தஞ்சை மாவட்டம் பசுபதி கோயில் என்னும் ஊரில் ஒரு இடத்தில் இவர் தங்கி இருந்தபோது நள்ளிரவில் அவ்வீட்டுக்கு வெளியிலிருந்து கிணற்றில் சல சல என்று சத்தம் கேட்டது. அன்று பௌர்ணமியானதால் கிணற்றில் சத்தம் செய்தது பாம்பு என்று தெரிந்து கொண்டு, அதனைக் காப்பாற்ற வேண்டுமென்று ஒரு கூடையைத் தாம்புக் கயிற்றில் கட்டிக் கிணற்றில் விட்டார். இவர் அருகிலிருந்த துறவி ஒருவர் அவ்வாறு செய்வது

ஆபத்து என்றார். இவர் கேட்கவில்லை. கூடையில் பாம்பு ஏறிக்கொண்டது. மெது வாக வெளியே தூக்கின போது அது குதித்து ஓடிவிட்டது. இவரையொன்றும் செய்யவில்லை. அப்போது அவர் சொன்னது "எதுவும் ஆண்டவன் கட்டளைப்படித் தான் நிகழும்" என்றது நினைவிலிருக்கிறது.

சமூகத் தொண்டு:-

சில ஆண்டுகள் கழித்துச் சென்னையில் "சைவ சமயப் பக்த ஜன சபை" எனப் பெயரிய ஒரு சபையை 1905ல் தோற்று வித்துக் கடைசிவரை அச்சபையின் தலைவராகவே இருந்து வந்தார். அச்சபையில் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம், திருமுருகாற்றுப்படை, திருவெம்பாவை முதலியவற்றை முறையாக உபந்யாசம் செய்து வந்தார். எல்லா அங்கத்தினர்களையும் கூட்டிக்கொண்டு அரசாங்க விடுமுறை நாட்களில் பாடல் பெற்ற தலங்களுக்கு எல்லாம் சென்று முறையாக வழிபட்டு வந்தார்கள். இதுவன்றியும் தென்னாட்டிலுள்ள எல்லாத் தலங்களிலுமுள்ள கோயில்களிலும், ஆங்காங்குள்ள சபைகள், கழகங்கள், சங்கங்கள் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று சைவசமய அரிய சொற்பொழிவுகளையாற்றி வந்தார். அவர் 'பன்னிரு திருமுறைப் படனத்தை' ஆண்டிற்கொரு முறையாகச் சுமார் 36 தடவைகள் படித்துப் பூர்த்தி செய்துள்ளார். பிறரையும் இவ்வாறே செய்யுமாறு வற்புறுத்தி வந்தார்.

தாம் "ஆயிர வைசிய சங்கம்" என்னும் எமது குல அபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருந்த சங்கத்தின் தலைவராகவும் இருந்து ச்மூக சேவையும் செய்தார்.

இவர் நூல்கள் வெளியிட்டது:-

இதுவுமன்றிச் 'சிவரகசியம்' என்னும் வட மொழி நூலைப் பல்லாயிரம் ரூபாய் செலவு செய்து கையெழுத்துப் பிரதிகளை வாங்கி அதனை பிரம்ம ஸ்ரீ மருவூர் கணேச சாஸ்திரியார் என்பவரைக் கொண்டு மொழி பெயர்த்துத் தமிழிலும், வட மொழியிலும் அச்சிட்டு வெளியிட எண்ணிச் "சிவ ரகசிய முத்ராலயம்' என்பதனையும் நிறுவிப் பொருள் விரயமாய்விட்டது. என்னே இதிலிருந்த இவர் ஆர்வம்! 'திராவிட வேதத் திரட்டும், தல மான்மியச் சுருக்கமும்' என்னும் நூலையும் ஒருமுறை வெளியிட்டார்கள். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின்' மூலமாக முதன் முதலாக மிகச் சுத்தமான பதிப்பாகப் பதிகங்களின் சிறப்புக்களுடன் முதல் ஏழு திருமுறைகளையும் வெளியிட்டார். அதே சமயம் "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" "திருக் கயிலாய ஞானவுலா" முதலிய அரிய பிரபந்தங்களுக்கும் குறிப்புரை எழுதி வெளியிட்டுள்ளார். இன்னும் சில.

சத் வித்யா சன்மார்க்க சங்கத் தொடர்பு:-

இவ்வாறு இவர் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தபோது 1917ம் ஆண்டு தொடங்கப்பெற்ற பேரூர்ச் சத் வித்யா சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா 1918ல் பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளின் திருமடத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றது. அவ்விழாவிற்கு நமது செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைமை வகித்ததுடன் அமையாது முதல் நாளன்று 'சத் வித்யா' என்பது பற்றியும், இரண்டாம் நாள் "சன்மார்க்கம்" என்பது பற்றியும், மூன்றாம் நாள் "சங்கம்" என்பது பற்றியும் அரிய சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்கள். இச்சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தவர் என் மதிப்பிற்குரிய கோவை, வழக்கறிஞர் திரு, C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்கள். இவரே 'சிவக்கவிமணி' என்ற பட்டத்துடன் வாழ்ந்தவர். பிறகு துறவு பூண்டு ஸ்ரீ மத் சம்பந்த சரணாலய சுவாமிகள் என்ற (பட்டத்துடன்) பெயருடன் சைவ சமயத்தைப் பல்லாற்றானும் வளர்த்துச் சைவர்கள் உய்யும் வகையில் நமது பிரமாண நூலாகிய தமிழ் வேதத்தின் பன்னிரண்டாந்திருமுறையாக விளங்கும் தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிய தனித் தமிழ்க் காவியமாகிய பெரிய புராணத்திற்கு அரியதொரு விரிவுரையை எழுதி உபசரித்தமைக்கு இச்சைவவுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது, என்பது மிகையாகாது. ஷெ சிவக்கவிமணியவர்கள் தன் பேருரைப் புத்தகத்திற்கு முகவுரைக்கு முன்னுரை என்று ஒன்றை எழுதியுள்ளார்கள். அதில் அவர்

வாக்கால் செட்டியார் அவர்களைப் பாராட்டியுள்ளதைப் பின்னர்க் குறித்துள்ளேன். "....எனது அதிர்ஷ்டவசத்தால் எங்கள் நாட்டில் சைவப் பயிர் வளர்க்கும் ஒரு வெண்முகிலை இறைவன் கொடுத்தருளினார். அந்த முகில் சைவத்திருவாளர், கயப்பாக்கம், சதாசிவம் செட்டியார் பி. ஏ. அவர்களேயாவர். அவர்கள் 1918ல் பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் சத் வித்யா சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைவராய் வந்தார்கள். அவரது பிரசங்க மழையினால் எங்கள் நாட்டிலே முன்னர் வாடியிருந்த சைவப் பயிர் சிறிது சிறிதாய்ப் பிழைத்தது. அவர்களைப் பெரிய புராணத்தைத் தினந்தோறும் முறையாச் சொல்லிப் பிரசிக்கும்படிப் பல பெரியார்கள் வேண்டிக்கொண்டனர். அதற்கிணங்கி அவர்கள் 1919 முதல் (சிற்சில இடையீடுகளிடையே) நாடோறும் பிரசங்கித்து வந்தார்கள். 1922 ம் வருடம் அக்டோபர் மீ 11 உ புராணப் பிரசங்கம் இனிது நிறைவேறிற்று. நிறைவேற்று விழாவன்று பெரிய புராண ஏட்டையும் மற்ற சைவத் தெய்வத் திருமுறைகளையும் யானையின்மேல் வைத்து நகர்வலம் செய்வித்துப் பல பெரியார்கள் பெரு விழாக் கொண்டாடிச் சிறப்புச் செய்தார்கள்.......அவர்கள் அவ்வப்போது புராணத்திலிருந்து எடுத்தெடுத்து எங்களுக்கு இடித்திடித்துச் சொன்ன புத்திமதிகள் என்னுள்ளே இன்னும் தொனித்துக் கொண்டிருக்கின்றன...டிவர்களே வேறோரிடத்தில் தாம் எழுதிய பெரிய புராண விரிவுரை திரு. செட்டியாரவர்களுடையதே என்று விதந்தோதியுள்ளார்கள்.

இவர்களைப் பலர் பாராட்டியது:-

இப்பெரிய புராண விரிவுரைப் பூர்த்தி விழா சிதம்பரத்தில் நிகழ்ந்தபோது பல சைவப் பெரியார்கள் திரு செட்டியார் அவர்களைப் பாராட்டியுள்ளமை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

மதுரை ஸ்ரீ மாணிக்க வாசகத் தம்பிரான் சுவாமிகள்:-

(தற்போது மேலையூர் சிவராஜ யோக மடம் அதிபர் ஸ்ரீ லஸ்ரீ மாணிக்க வாசக தேசிக பரமாசாரிய சுவாமிகள்)

"ஆசிரியர் கயப்பாக்கம், சதாசிவச் செட்டியார் அவர்கள் ஆன்ம நெறி வழுவாது சிவபூசை செய்யும் பன்னிருதிருமுறைகளையும் இடையறுது பன்முறை ஓதியுணர்ந்தும் திருவருள் விளக்கம் பெற்றவர்கள். அவர்களிடமிருந்து நேர்முகமாகப் பாடங் கேட்டுப் பயின்ற நமது சிவஞானச் செல்வர் சிவக்கவிமணியவர்கள்......!

திருவாளர். க. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A.L.T. (சென்னை நகராண்மைக் கழகம். கல்வி இலாகா தலைவர்) கூறியுள்ளதும் சிந்தனைக்குரியது. ஆதலால் அதனையும் பின்னர்த் தந்துள்ளேன். "செந்தமிழறிவிலும் சிவ பக்தியிலும் சிறந்துவிளங்கும் திரு. முதலியார் அவர்கள் பெரிய புராணத்தைப் பல ஆண்டுகளாகச் சமயக் கண்ணும், சாத்திரக் கண்ணும் கொண்டு, பேரன்புடனும், பயபக்தியுடனும், தாமே பன்முறை ஆராய்ந்து வந்துள்ளார்கள். அதனோடு சைவத் திருவாளர். க. சதாசிவம் செட்டியார் அவர்கள் போன்ற திருமுறை ஆராய்ச்சி வல்ல பெருமக்களோடு அளவளாவிப் பெற்ற அரிய நுட்பங்களைக் கேட்டு.........!"இன்னும் பல உண்டு,

விரிப்பிற் பெருகும் என இத்துடன் அமைகிறேன்.

இவர் மாணவர்கள்:-

இத்தகைய பெருந்தகையாகிய என் சிறிய தந்தையார் தம் வாழ்நாள் முழுவதும் சைவ சமயத்திற்கே அர்ப்பணம் செய்து என்னையும் என் நண்பர்கள் திரு. R. சண்முக சுந்தரம் செட்டியார் அவர்களையும் திரு. பூ. ஆலால சுந்தரம் செட்டியார் M.A., அவர்களையும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சைவ சமயத்தை வளர்க்குமாறு சொல்லிவிட்டு ஜனவரி 1929ம் ஆண்டில் இறையடி சேர்ந்தனர். அன்று வந்திருந்த யாழ்ப்பாணம் திரு. சுவாமி நாத பண்டிதர் அவர்கள் "சைவத்திற்கு ஒரு கண் போய் விட்டது" எனச் சொல்லி வருந்திச் சென்றனர்.

இருபெருங் குறள் உண்மை

[சைவத்திரு. ப. சு. மணியம் அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், அரசினர் கலைக்கல்லூரி, கோவை.]

*

தெய்வப்புலவர் திருவள்ளுவர், நற்றமிழ் முழுதறிந்த மெய்யுணர்வான் மன்பதை யாவும் பிழைத்தோடி உய்தற்கென இயற்றி அருளிய தெய்வப்பெருநூலாம் திருக்குறளின் கண்ண வாய இருபெருங்குறளின் மேலதாய் அமைவது இக்கட்டுரை. அக்குறள் இரண்டனுள் ஒன்று அறிவின் மேலது; பிறிதொன்று மெய்யுணர்வின் மேலது. ஆறறிவுடைமக்கள் ஐம்பொறி அறிவுடன் பெற்றமனன் உணர்வு, அவ்வைம் பொறி அறி வான் இயல்புபிறழாது, அவ்வைம் புலப்பொருளை அறிந்து நுகர்தற்கும், நுகர்ந்து தெளிந்து அருள் கோடற்கும் அவர்க்குத்துணையாதலை அவ்விரு பெருங்குறளும் தெரிந்து தெளிக்கின்றன. அவ் விருபெருங்குறளிலும் நம் வள்ளுவப் பெருந் தகை நமக்கு அளித்துள்ள விழுமியகருத்துக்கள் மிகப்பலவாம். அவற்றுள் என் சிறு குறுமதி முகந்த அளவிற்சிலபல கட்டுரைத்துச் செல் கின்றேன். திருக்குறளின் தெய்வமாண்பும், அவ்விருபெருங்குறளும், பொருளும், பொருளின் மாண்பும், அவற்றல் மன்பதை கோடற்குரிய பயனும் கட்டுரையின் பொருளாக உள்ளுறுத்தி அவற்றை நிரலே காண்போமாக.

தமிழ்ச்சங்கம் மருவிய இருபெருங்கணக்கு நூல்களினும் அவற்றை இயற்றிய ஆசிரியரினும், தெய்வநூல் எனப்பெயர் பெறுவதும், தெய்வப் புலவர் எனப்பெயர் பெறுவாரும் யாதுஎனவும் யாவர் எனவும் நோக்கின், திருக்குறளும், திரு வள்ளுவரும் ஆதலை உணர்வோம். இங்ஙனம் நூலையும் திருவள்ளுவரையும் தெய்வம் என்ற அடைமொழி புணர்த்துரைத்துச் சிறப்பித்தல் தமிழ் மக்கள்தம் தெய்வமரபாகும். திரு என்னும் அடைமொழியும் தெய்வச்சிறப்பீனுவதே. சமயச் சார்பினராய ஆசிரியரும் அவரியற்றிய நூல் களும் தெய்வத்திறத்தொடு சிறப்பிக்கப் பெறல் இயல்பே; அங்ஙனம் சிறப்பித்தலில் வியப் பொன்றுமில்லை; அதுசமயமரபாதலின். தெய்வ புலவர் திருவள்ளுவரே உலகியலில் தெய்வ நிலையும் தெய்வநிலையில் உலகியலும் கண்டு தேறி, உலகியலுடையார் அவ்வியலால் சமயந் தெளிந்து தெய்வநிலை பெறற்கும் உலகியலைப் புறக்கணித்துச் சமயநெறியில் நின்று தெய்வ நிலைபெற முயல்வார், அந்நிலைநின்றே உலகியல் தெளிந்து தெய்வநிலை உறற்கும் துணையாகத்தம் மதிநுட்பம் நூலொடு கொண்டு அறிவிற்கும் மெய்யுணர்விற்கும் விருந்தாய் இப்பொதுமா மறை இயற்றுவாராயினர். சமயக்கணக்கர் யாவரும் தத்தம் அளவை வகையான் கூர்ந்தறிந் தும் தெளியாதாராய், அஃது; அஃது எனச் சேணிடைச்சுட்டாய்க் கூறியொழிந்த மெய்ப் பொருளாம் பெரும் பொருளை, நம் தெய்வப் புலவர், அவர்மதிவழி அவரியல்பால், ஏழென, ஆறென, ஐந்தென, நான்கென மூன்றெனக் கூறுது, மக்கள்வாழ்வாய உலகியலே கூறி (அவ்வுலகியலாய) அறமும்பொருளும் இன்பமும் இவைஎனத் தெரித்து, இஃது என அண்மைச் சுட்டாய் மக்கள் அறிவிற்கும் உணர்விற்கும் காட்சியாமாறு காட்டிய பெருமையைக் கல்லா டம் என்னும் ஞானப்பனுவல்,

> சமயக்கணக்கர் மதிவழிகூறுது
> உலகியல்கூறிப் பொருளிது வென்ற
> வள்ளுவன் தனக்கு வளர்கவிப்புலவர்முன்
> முதற்கவிபாடிய முக்கட் பெருமான்

எனப்போற்றியுரைத்துப் புகழ்ந்து பரவுவ தாயிற்று. சமயக்கணக்கர் கூறவிழைந்ததனையே அவர்மதிவழிக்கூறுதுதம் அறிவானும் மெய்யுணர் வானும் உலகியலால் தெளிந்துரைத்தனர் என்பதே உண்மைப் பொருளாம். அஃதன்றிக் குறள்சமயக்கருத்துக் கூறவில்லை; கடவுளையும் காட்ட வில்லை என்று பொருள்படுமாறு இவ்வடி கட்கு உரைகூறப்புகுவது, தம் உரை திட்பமும் நுட்பமும் ஒட்பமும் உடையதென மயங்கக்கருதி உண்மைதுறந்தார்தம் அவநிலையைக்காட்டும். தெய்வத்திருக்குறள், உலகியலில் தெய்வமும் தெய்வநிலையில் உலகியலும் முழுவதும் காட்டிய இலக்கண இலக்கிய மரபுவழிப்பட்ட தெய்வ ஒண்டீந்தமிழ்ப் பெருநூலாகும் என்பதனைத் தெளிதல்நன்று.

தெய்வத்திருமாமறையின் பெருமை இஃதாக, இனி அவ்விரு பெருங்குறளும், பொருளும் மாண்பும் பயனும் காண்போமாக. இரண்டனுள் ஒருகுறள், பொருட்பாலில் அறிவுடைமை என்ற அதிகாரத்தமைந்தது; "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது. பிறிதொன்று அறத்துப் பாலில், மெய்யுணர்தல் அதிகாரத்தமைந்த "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்

பொருள். மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பது. முன்னது கல்விகேள்வி என்பவற்றின் பின்நின்று, அறிவு, அக்கல்வி கேள்விகளின் காரியமாய் மாசுநீங்கி இயல்பாய தூயஉருக் கோடலைக்குறிப்பதாகின்றது. மாசுநீங்கலாவது, தன்னொடுகலந்துள்ள, அறியாமை, ஐயம்திரிபு, போதல்; மற்றைப்பின்னதோ துறவறவியலில், ஞானம் தோற்றுவிக்கும் நிலையாமை துறவு என்பவற்றின் பின் நின்று பற்றுவிடற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றிய வழித்தோன்றிப் பொய் தவிர்ந்து மெய்ம்மை போற்றி நிற்கும் மெய்யுணர்வின்தன்னியல் காட்டுவதாகின்றது. பொய் தவிர்தலாவது, இருளும் மருளும் ஐயமும் நீங்கிக் காமம்வெகுளிமயக்கம் என்பனவும் கெடல். முற்றத்துறந்தார்க்கு மெய்யுணர் விற்றேன்று வதே இன்பம் என்பதும் அதன் இயல்பே கூறிற்று. முன்னதன் பொழிப்பு, ''யாதொரு பொருளையாவர் யாவர் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் மெய்யாய பொருட்பயனைக் காணவல்லது அறிவு என்பதாகும். பின்னதன் பொழிப்பு'' யாதொருபொருள் யாதோரியல் பிற்றாய்த்தோன்றினும், அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது'' என்பது.

முதற்குறள் சொல்லின் வழியாய்ப் பொருள் உணரும் அறிவின் மேலது. இரண்டாம் குறள் பொறிகளாற் பொருளை நுகரும் பொழுதுண்டாம் அநுபவ உணர்வின் மேலது. முதலது சொல்லுலகில்நின்று பொருள் அறிவது ஆதலின் மெய்ப்பொருள் உணர்விற்குக்கருவியாய அபரஞானம் என்னலாகும். பின்னதுபொருளில் நின்று மெய்ப்பொருளே துணையாக அநுபவத்தால் அப்பொருளே உணர்தலின் பரஞானம் என்னலாகும். கூறியார்தம் சொற் பொருளைச் செவியாற்றிண்ணிதின் அறிதற்கு அச்சொல் இயல் புணர்தல் ஒருகருவியா மேனும், அங்ஙனம் அவர் தம் இயல்பு காண்டலில் விருப்போவெறுப்போ தோன்றுவாறு நடுவு நிற்றலேதகவுடைத்து. அங்ஙனமின்றி நடுவிகந்து நின்று அவ்வியல்பு காண்டல் சொல்லின் பொருளை மெய்ம்மையான் அறிதற்குத்தடையாம் என்று அறிதல் வேண்டும். முதல்வன் இயற்றிய முதல் நூல்வழித்தாய்ச் செந்தமிழின் நந்தாவிளக்காய்ச் சொல்லுலகும் பொருள் உலகும் அறிவிற்கும் உணர்விற்கும் பொருளாமாறு உணர்த்திநிற்கும் தொல்காப்பியம், சொற்பொருள் உணர்ச்சிபற்றிக் கூறியன சில இருகுறளின் மெய்ப்பொருள் கோடற்குத் துணைபோம் ஆதலின் அவற்றை ஈண்டுச் சுட்டிச் செல்கின்றேன்.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்னும் நூற்பாத்தமிழில் அமைத்த இருவகை வழக்குச் சொற்கள் ஆய பெயர் வினை இடைஉரி என்றயாவும் தமக்கென உரிமைப் பொருளுடையன என்னும் உண்மை உரைக்கின்றது. இனி, அச்சொற்பொருளை உணர்த்தும் திறமும் உணரும் திறமும் காண் போம். ''பொருட்குப் பொருள் தெரியினதுவாம் பின்றே'' என்பது 'ஒரு சொல்லின் பொருளை மற்றொரு சொல்லால் உணர்த்தியவழி, அதுகொண்டே அச்சொற்பொருள் மெய்ம்மை உணர்க' எனக் குறிக்கின்றது. அங்ஙனம் அச் சொற்பொருள் காணும் அறிவிலாது மேலும் மேலும் சொல்லிற்குச் சொல்காண்டல், வறிய சொற்காண்டல் ஆகுமன்றி அதன் பொருள் காண்டலாகாது. இவ்விழுக்குப் போக்கற்கே 'அப்பொருள் மெய்ப்பொருள்காண் பதறிவு' என முதற்குறளில் தெய்வப்புலவர் நுண்ணிதின் சொற்பொருள் காணும் முறைதெளிந்தார். உணர்த்துவானும், கேட்பான் ஒருவன் சொற்குச் சொற்பொருள் மேலும் காணுவகையில், சொல்லியல்பறிந்து உணர்த்தவல்லனுயின் அவன் அறிவில் அப்பொருள் அறியாமையோ, ஐயமோ, திரிபோ இரா.

இவ்வுண்மை தெளிதற்கே, ''பொருட் குத்திரிபில்லை உணர்த்தவல்லின்'' என்றநூற்பா எழுந்தது. சொற்பொருள் ஒருவன் உணர்த்த உணர்கின்ற ஒருவன் அதனைத் திரிபின்றி அறிதல் வேண்டும் என்னும் உணர்வுடையனுய்க்கூர்ந்து நொசித்துணரின் பொருள் விளங்கி நிற்கும் என்பதனைக் காட்டவே, ''உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்தே'' என்பது எழுந்தது.

> பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் [மருள்தீர்ந்த
> மாசறு காட்சியவர்
> எண்பொருளவாகச் செலச்சொல்லித்தான் [பிறர்வாய்
> நுண்பொருள் காண்பதறிவு.
> வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர் சொற்பயன் [கோடல்
> மாட்சியின் மாசற்றூர் கோள்.

என்பன குறள்கள். உணர்த்தல் உணரல் வகைகளைத் தெளித்துரைப்பனவாம். முடிவாகத் தொல்காப்பியனுர் சொற்பொருளின் மெய்ம்மை நிலை கூறுவாராய் ''மொழிப் பொருட்காரணம் விழிப்பத்தோன்றா'' எனச் சுட்டினுர். நான்கு வகையான சொல்லும் பொருளுடையன என முன்னரே பெயரியலில் தெரித்துரைத்தவர், இப்பாவால், அப்பொருள் அச்சொற்குரியவா தற்குக்காரணம் உண்டு என்றும் அக்காரணம் அறிவிற்கு வெளிப்படவிளங்கித் தோன்ரு என்றும் கூறியதன் கருத்து, சொற்பொருள் உணரும் நீ, அவற்றிற்குரிய காரணம் கண்டு பொருள் தெளிதல் வேண்டும்; தன்னறிவிற்குப் புலனுகாமையின் அச்சொல்பொருளிலது என்று கூறுதல் கூடாது; அன்றிப்புல்லறிவினுற் காரணத்தானியையாப் பொருள் கற்பித்தலும் கூடாது என்பனதெளிதல் ஆம். இத்துணைப் பொருளையும் தன்னகத்து அடக்கிக் கொண்டியன்றதே ''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண் பதறிவு'' என்னும் குறள்.

இனி அவ்வபரஞானக்கலை அறிவுதானும் நான்கு கூருயபடி நிலையுள் அடங்குதலைக் காண்போம். அகப்பொருளில் ஆண் மகற்குக் குணம் நான்கு எனச் சுட்டப்படும். அவை அறிவு, நிறை, ஓர்ப்புக்கடைப்பிடி என்பன. அறிவே, பொருளைக்கற்றலாலும், கேட்டலாலும் அறிந்து நிற்கும் நிலை; அறிந்தமாத்திரையில், பொருள்கள் பால் புலன்வழி ஓடி உழலும் மனத்தை அவ்வண்ணம் ஓடாது தகைந்து நிறுத்தும் நிலை; அங்ஙனம் நிறுத்தியபின், அவ்வப்பொருளின் சிறப்பியல்பு ஓர்ந்தறியும் நிலை; இயல்புநன்றாயின் அப்பொருளைப் பெறலும் அன்றாயின் ஒருவுதலும் செய்யும் நிலை; என நான்குநிலை எய்திநிற்கும். அந்நிலைகளே வேறு வேருய் மேலே கூறிய அறிவு முதலாய நான்கு குணங்களாகும். அறிவின் அந்நான்கு கூறுபாடு களும், "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீ நன்றின் பாலுய்ப்பதறிவு" என்னும் குறளிற்பொதிந்துள்ள நுட்பம் தெளிதற்குரித்து. மனம் பொறிவழிப்புலனிற் செல்லும் பொழுது அப்புலத்திற்குரிய பொருளைப் பொதுமையான் அறிந்ததாதல் வேண்டும். அஃது அறிவுநிலை. அம்மனத்தை அப்புலன் வழிச் செல்லவிடாது நிறுத்தல் அவ்அறிவின் நிறுத்தும் நிலையாயநிறை. நிறுத்திய அறிவு மனத்தின் துணைக்கொண்டு புலத்தின்நன்று தீது ஆய்கின்றது. அஃதே ஓர்ப்பு. பின்னர்த்தீய தொருவிநன்றின் கண்ணே செலுத்துவது கடைப்பிடியாம் எனக் கூட்டி அக்குறளிற் பொருள் கொண்டுணர்வோமாக. இனி அவ்வறிவு தன்பாலுள்ள அறியாமை ஐயம் திரிபு என்பன தேய்ந்து தேய்ந்து நீங்கப் பெறுங்கால், மெய்யுணர்வுநிலை எய்தும்; இவை நீங்கப் பெருதேல் அவ்வறிவுகசடீண்டு காட்சி யாகவே நிற்கும்.

> அரியகற்றும் ஆசற்ருர்கண்ணும் தெரியுங்
> இன்மை அரிதே வெளிறு. [கால்
> பலநல்லகற்றக் கடைத்தும் மனநல்ல
> ராகுதல் மாணுர்க்கரிது.
> நுண்ணியநூல்பலகற் பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவேமிகும்.
> அறிதோறறியாமை கண்டற்ருல்...............

என்பன குறள்கொண்டு அறியும் அறிவின் இயல்பு தேறுவோமாக.

புலன்வழிப் பொருளொடு கலந்து நுகர்ந்த அநுபவ அறிவின் தெருட்சியே மெய்யுணர் வென்பது. அதன்கண் அறியாமை, ஐயம், திரிபு இல்லையாம். அதுவே காமம் வெகுளிமயக்கம் அறுக்கும் மெய்ப்பொருள் காண்டலிலும், பேரின் பப்பெருவாழ்வின் நுகர்விலும் அவ்வறுவகை மாசினையும் அறுத்தெறிய வல்லதாகின்றது. இவ்வுண்மைகள் மெய்யுணர்தல் அதிகாரப் பாடல்களில் பொதிந்து கிடத்தலை வெளிப் படையாகக்காணலாம். அங்ஙனம் காணும்முன், அறிவு, மெய்யுணர்வு என்பவற்றின் இயல்பாய நிலைகளை ஒருசான்று கொண்டு தெளிதல் நன்று. மாம்பழம் ஒன்றன் இயல்பறிந்த ஒருவன் தன் சொல்லால் அதனைச்சொல்லக் கேட்பான், அச் சொற்கொண்டு அப்பழம், இன்னநிறத்தது; இன்னவடிவினது; இன்ன மணத்தது; இன்ன நலத்தது; தீஞ்சுவையது என அறிகின்ருன். அவ்வறிவு அப்பழத்தினியல்பு ஒருவாறு தெரிந்து நிற்குமத் துணையன்றி முற்றும் அறுத்துத் துணிந்து தெளிந்ததாகாது. கேட்ட அவனே அதன் நிறம் கண்டு, வடிவுணர்ந்து, மணம் மோந்து, நலம் தேர்ந்து, தீஞ்சுவை நுகர்ந்து தெளிவானுயின், அங்ஙனம் அவன் நுகர்ந்து பெற்ற அப்பொருள் சார்பாய உணர்வே தெருண்ட மெய்யுணர்வு எனப்படும். அம் மெய்யுணர்வே பின் அப்பழத்தின் கண் நிறமாய் வடிவாய் மணமாய் நலமாய்ச் சுவையாய் நிற் பதும் அவற்றுள்கலந்து கரந்து நிறைந்து ஒளிர் வதுமாய மெய்யாம் பொருளை உணரவல்ல தாகின்றது.

இனி, மெய்யுணர்வு, அறியாமையாகின்ற இருளும், ஒன்றை மற்ருென்ருகக் கருதும் மருளும், அதுவோ இதுவோ எனப்பலதலைப்பட நிற்கும் ஐயமும் நீங்கிநிற்றல்

> பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும்
> மருளானும் மாணுப்பிறப்பு.
> இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி
> மாசறுகாட்சியவர்க்கு.
> ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வானம்நணியதுடைத்து.

என்னும் தமிழ்மறைகளால் அறிகின்ருேம். அறிவு இம்மூன்றும் நீங்கி ஐயுணர்வு மடக்கும் பேராற்ற லாம் உரனுயினும் பெரும் பொருளை உணர லைக்காத பொழுது அதுவும் பயனிலதாகின்றது. ஐயுணர்வுமடக்கி, உலகம், உயிர்ப்பொருள் ஆய அவற்றின் தொழிற்பண்பு, குணப்பண்பு என்ப வற்றின் கற்பனையால் மயங்காது அவனருளால் உள்பொருளாம் மெய்ப்பொருளை உள்ளவாறு உணரும் உணர்வே

> எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்
> பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்ற செய்யுளில் மெய்யுணர்வாகச் சுட்டப் படுகின்றது. அருள் அநுபூதிச் செல்வராய தாயுமான அடிகளும்

"அருளால் எவையும் பார் என்ருன். அத்தை அறியாதே சுட்டி என்னறிவாலே பார்த்தேன், இருளான பொருள் கண்டதல்லால் - கண்ட என்னையும் கண்டிலனென்னேடிதோழி" என மெய்யுணர்வால் மெய்ப் பொருள் காட்டுவாரா யினர். இப்பொருளுணர்வே,

புரவலர் உயர்திரு வெ. சு. சுப்பைய கவுண்டர் அவர்கள்,
கல்லூரிக் கழகத்தின் இரண்டாவது தலைவர்,
அவரது துணைவியார் மீனாட்சியம்மையார்.

உயர்திரு கு. வேங்கடாசலம் அவர்கள், பீ.ஏ. எம்.இ.டி.,
கல்லூரிக் கழகச் செயலாளர்,
கல்லூரிப் பொறுப்பாளர்.

உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.

கல்லூரிக் கட்டிடத் திறப்புவிழா.

சுவை ஒளி ஊறோசை நாற்றமென்றைந்
தன் வகைதெரிவான் கட்டேஉலகு.

என்ற குறளில் நீத்தார் மேல்வைத்துரைக்கப்படு கின்றது. பல்புகழ் நிறுத்ததவத் தோராய தொல்காப்பியர், கற்பனை கழன்று மெய்யுணர்வு பெறலே தமிழர்தம் மரபு என்பதனை நூலின் தீர்ந்த பொருளாக, மரபியலில்

நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடுதழாஅல் வேண்டும்.

எனக்கூறி மெய்ப்பொருள் தெருட்டும் திறத்தினை என்னென்பேம்! இருதிணையும் ஐம்பாலும் அபர ஞானக் கற்பனையேயாகி மெய்ப்பொருள் உணரக் கருவியாய் அமைவதுகாண்க.

கற்றலும் கேட்டலும் பெருக உடைய இறப்ப உயர்ந்தார் மாட்டும் அவைசிறுக உடைய இறப்ப இழிந்தார் மாட்டும் அமைந்த அறிவு அவ்வந்நிலைக்கு ஏற்ப அறியாமையும் திரிபும் ஐயமும் உடையதாதலை நாளும் பொழுதும் நாம் கண்டு தெளிகின்றோம். அவரவர் அறிவினை மாசுநீக்கி அருள் அநுபவம் பெறற்குக்கருவியாக் கும் அன்பின் முயற்சியே காமம்வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றமும் அறுத்து நிற்கும் மெய்யுணர்வு ஈனும். காமம் முதலிய முக்குற்றமும் அறுத்து நிற்கும் நிலையே அருள் அநுபவநிலை. இவ்வுண்மையினைத்

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற்
அருளாதான் செய்யுமறம். [றேரின்
காமம் வெகுளிமயக்கமிவை மூன்றன்
நாமம்கெடக் கெடும்நோய்.

என்னும் மறைமொழிகள் உணர்த்திநிற்கின்றன. கேட்டல் சிந்தித்தல் என்பன தரும் அபர ஞானம் நூலறிவாய்க் கருவி அறிவாதலும், தெளிதல் நிட்டை என்பன அவ்விரண்டுடன் கூடித்தரும் பரஞானம் ஐயன் மெய்யருளாற் பெறப்படும் அநுபூதி ஆதலும் சமய மெய்ந் நூலிற்றெளியப்படும்.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகினென்
[றமையாற்
சார்புணர்தல் தானே தியான முமாம்—
[சார்பு
கெடவொழுகினல்ல சமாதியுமாம் கேதப்
படவருவதில்லை வினைப்பற்று.

என்பது திருக்களிற்றுப்படியார் "கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்கையால் தொழுதேத்த" என்று பல ஞானமும் கலையும் அம்மைதிரு முலைப்பால் உண்டு ஒருங்குணர்ந்த தவமுதல்வர் திருஞான சம்பந்தரும்,

"சுற்றுஞ்சடைக்கற்றைச் சிற்றம் பலவற்
[றெழாது தொல் சீர்
கற்றுமறியலரின்,"

என்று ஞானமோனவடிவினராய மணிவாசகப் பெருமானும் உணர்த்தி அருளிய மெய்ஞ்ஞானப் பொருள்கள்

கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்.
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்
[படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

என்ற தெய்வமாமறைப் பொருளை நினைவூட்டு கின்றமை அறிந்துணர்ந்து அந்நிலையுறுவோமாக. அதுவே தவத்தானெய்திய பிறவியால் செய்யும் தங்கருமமாம் தவப்பயன். இக்கட்டுரையில், அபரஞானக்கலை அறிவின் மேலும் பரஞான அருள் அநுபவ மெய்யுணர்வின் மேலும் எழுந்த இருபெருங்குறளும், பொருளும், மாண்பும்பயனும் குறளின் தெய்வமாண்பொடு உரைக்கப் பெற்றன.

திருவேவருக சிவஞானத் தெளிவேவருக யாம்பொருந்தும்
சிறப்பேவருக சிந்தனையுள் தித்தித்தமுதூற் றெழப்புரியும்
கருவேவருக அன்பர்களை கண்ணேவருக இதயவணிக்
கமலமனைத்து மலர்த்திடுசெங் கதிரேவருக வளர்கருணைக்
குருவேவருக எமதுகுற்றம் குணமாகிடநீற் றிடுநீற்றுக்
கோலாவருக இலிங்கவுரம் கொண்டோய்வருக உயிர்மலர்தோய்
மருவேவருக திருப்பேரூர் தாழ்வேவருக வருகவே
மகிமைச்சாந்த லிங்கக்குரு மணியேவருக வருகவே.

—சாந்தலிங்கர் பிள்ளைத்தமிழ்.

ஸ்ரீ மெய்கண்டாரும் சாந்தலிங்க அடிகளும்

திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ., அவர்கள், சென்னை.

ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனரின் சிவ ஞான போதத்தையும் ஸ்ரீ சாந்தலிங்க அடிகளாரின் அவிரோத வுந்தியாரையும் ஒத்திட்டுக் காட்டுவதற்கு எழுந்தது இக் கட்டுரை. சமய உண்மைகளை உணர விரும்பும் எவராயினும் இவ்விரு நூல்களை யும் கற்றுத் தெளிவது நன்று; பாஷிய காரர்களான சங்கரர், இராமாநுஜர், மத்துவர் முதலியோர் செய்த மதங்களில் ஒன்றுக்கொன்று புணராத முரண்பாடுகளையும், சைவ சமயத்துள்ளேயே வளர்ந்த பல்வேறுபட்ட கோட்பாடுகளை யும் சீர்தூக்கி சமன் செய்து சித்தாந்தம் பண்ணின பெரியார் ஸ்ரீ மெய்கண்ட தேவர். அவர் காலத்துக்குப் பின்னும் பல பூசல்களும் காணப்பட்டன. வேதாந்த சித்தாந்த சமரசமின்மை, பேதா பேதக் குழப்பம், வீர சைவத்தின் உண்மையை உணராமை முதலியன தலை தூக்கின. ஸ்ரீ தாயுமான சுவாமிகள், ஸ்ரீ அருணகிரி நாத சுவாமிகள் முதலாயினோர் இம்முரண்களை அகற்றி உண்மை நெறியும், பொது நெறியுமான சைவத்தின் திறனைக் காட்டியவர்களாவார். அவ்வழியில் சேர்ந்தவரே ஸ்ரீ சாந்தலிங்க அடிகளாரும்; அவர்கள் பரம கருணையால் ஆக்கிய அவிரோத வுந்தியார் ஸ்ரீ மெய்கண்ட தேவரின் ஒப்புயர்வற்ற சிவஞான போதத்திற்கு எழுதிய ஓர் சிறு விளக்கம் போல் காணப்படுகிறது.

ஸ்ரீ மெய்கண்ட தேவர் எந்த அடிப் படையிலிருந்து தம் சூத்திரங்களைச் செய்தார் என்பதை அவர் நூலைப் படிக்கப் புகும் பலர் ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஒரு புதிய சமயத்தைக் கோட்டுபாடு செய்யவோ, புறச் சமயங்களை நிராகரிக்கவோ எழுந்ததல்ல அவர் நூல். தம்மையும் தம்முடைய தலைவனையும் உணராத, பல்சமயிகள் 'ஒருங்கே குழீ இக் கொண்டு தம்மிற்றுமே புணராமை'யைக் கொண்டு அக்காலத்தினைப் போக்குவதற்குத்— தம்மை இகழினும் சரி, புகழினும் சரி, தம்மையுடைய தலைவன் உணர்த்தினபடி பதி, பசு, பாசம் என்ற முப்பொருளின் உண்மையை உணர்ந்த ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருவுளங் கொண்டார் என்பதை அவர் அவையடக்கச் செய்யுளில் காண்கிறோம்.

"தம்மை உணர்ந்து தமையுடைய
தன்னுணர்வார்
எம்மை உடைமை எமையிகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"

இக்கருத்தையே ஸ்ரீ சாந்தலிங்க அடிகளாரும் தம் பாட்டில் குறிப்பிடுகிறார்.

"உருவுகண் டெள்ளா துளந்தேரு மேலோர்
பொருணலந் தேராமு னுந்தீ பற
புன்சொல்கண் டெள்ளா ரென் றுந்தீ பற" (2)

இருவர் சாத்திரங்களும் "தவிரா விரோத சமய நூலல்ல, அவிரோதம்" என்பது தெளிவு. இந்தக் கொள்கையை அரை வெண்பாவில் ஸ்ரீ மெய்கண்டார் செப்பியதை அடிகளார் 34 பாட்டுகளில் விரித்துக் கூறியுள்ளார். சாதி, சமய சங்கற்பங்களுக்கு அதீதமான வயநாயிகர்களே பொருளுணர்வை எய்துதல் கூடும் என்பது அவர் துணிவு. மேலும் அடிகளார் ஓர் ஒப்புயர்வற்ற கருத்தைத் தெரிவிக்கிறார். அதாவது சமயங்களின் தோல்வியும், வெற்றியும் காலபேதத்தால் உண்டாவது. அதுவும் கருத்தன் செயலே என்பது. இந்தக் கூற்று யாவரும் ஒப்புக்கொள்ள மாருமாயினும் அடிகளார் தந்துள்ள நுட்பம் மிகவும் போற்றத்தக்கது. அது பரமாய் நிற்கும் ஒன்றே பிற சமயங்களை வாதி தஞ் செய்தல் கூடுமென்பது. பின் பாட்டை நோக்குக.

"ஆறுளு மோரா றவாதீத மென் கை தீ
தாறும் விளங்கிலா னுந்தீ பற
அளவி லளவை கொ டுந்தீ பற" (28)

எனவே ஓது சமயங்களில் சிவ சமயத்தைப் பின்பற்றுவோர் சாதி சமய சங்கற்ப நாச கராய் இருத்தல் சீலம். இக்கொள்கை தற்காலத்திற்கு மிகத் தகுந்ததாக உளது.

'சித்தாந்தம்' என்பதற்கு முடிந்த முடிவு என்பது பொருள் கூறுவது சாமானியம். அடிகளார் வெகு அழகான ஒரு பொருள் தந்துள்ளார். அது 'அவிரோத போதம்'என்பதும்,அதுவே, தத்துவஞானிகளின் தோற்றம் என்பதுமாம். சாத்திரச் சைவம், தோத்திரச் சைவம், சாதிச் சைவம்; பௌராணிகச் சைவம் இவைகளினுல் மலேவுபடும் மக்கள் இதை நோக்குவார்களாக.

"ஆறு நெறிக்கு மவிரோத போதமே
தேறு மெய்ஞ் ஞானியென் றுந்தீ பற
சித்தாந்த மாகும துந்தீ பற" (35)

இனி, ஏறக்குறைய சிவஞானபோதத்தின் இயல் பிரிவைப் பின்பற்றியே அடிகளாரும் தம் நூலில் முப்பொருளுண்மையையும், முத்தி நெறியையும் விளக்கிக் கொண்டு போகிருர். சுருதிகளும் அறு சமயங்களும் பேசுவதெல்லாம் பரன், சீவன், பந்தம் என்பவை பற்றியே; பரிபாஷையைக் கண்டு மயங்கவேண்டாமென்றும் எச்சரிக்கை செய்கிருர். உலகங்கள் தோற்றலால் நிருமல, பூரண, நித்தாதி நீங்கா ஒரு பரன் உளன் என்பதையும் (36), பல சித்தி முத்தி பரனுலடைதலால், தொல்சீவரும் உளர் என்றும், அவர் சுதந்திர ஈனர்கள் என்றும் (38), அஞ்ஞானம், மாயை, கன்மம் என்ற பந்தங்களில், அஞ்ஞானம் (அதாவது ஆணவம்) தனியே ஒரு முதலன்று சிவத்தினது திரோபவம் என்றும், ஆன்மாவினது குணமென்றும், பலவிதமாகச் சொல்வர் என்றும் (39) சுருக்கமாக அடிகளார் விளக்கியுள்ளார்கள். பின் சீவ பரங்களுக்கும் பல சமயங்கள் சொல்லும் பின்னு பின்னத்துவத்தைப் பற்றிப் பேசுகிருர். முக்கியமாக ஏகவாதம் சாதித்தல் தவறு என்பதையும் பந்தத்தைப் பிராந்தி என்பது தவறு என்பதையும் அழகாக விளக்கியுள்ளார்.

"ஒன்றெனின் வீடுமின் றுண்டேனும் லீலையாற்
பின்றையுஞ் சாருமென் றுந்தீ பற
மெத்த மறித்தமவீ டுந்தீ பற" (43)

"ஆகு முயிர்பந்தத் தானது மித்தையே
லேக வமலன்க ணுந்தீ பற
எவ்வா றுளதாமென் றுந்தீ பற" (44)

அப்பந்தத்தை யறுக்க பெத்தத்தில் பந்தமாகையிலே அப்பந்தத்தை யறுக்க மனேலய சாதகஞ் செய்ய வேண்டுமென்றும் அதனுல் தற்பரம் தோன்றுமென்றும் (சிவதரிசனம்) அடிகளார் முடிவு கட்டுகிருர். இம்மனேலயத்தைப் பற்றி உரையாசிரியராகிய ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் பல மேற்கோள் காட்டி அழகாக விளக்கியுள்ளார். நூலாசிரியர் இந்த முறையைப் பேசுவது சித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள் இவைகளில் விரித்துக் கூறப்படும் தசகாரியம் என்னும் சோபான முறையை ஒத்திருக்கிறது. முக்கியமாக அடிகளார் போற்றுவது சிவராசயோகம் என்னும் முத்தி நிஷ்டையே. அடிகளார் அவிரோதம் காணும் தகைமையும் குறிக்கோளும் கொண்டவராகையால் மனேலய சாதகம் என்ருலும் சரி, சிவராஜயோகம் என்ருலும் சரி, நிஷ்டையென்ருலும் சரி, சிவோகம் பாவனை என்ருலும் சரி, தத்துவமசிபாவ மென்ருலும் சரி, தத்போதத்தை மாய்க்குமாயின் சம்மதமே எனக் கூறுகிருர்.

"எம்மதத் தோரெவ் வகைநிட்டை சொல்லினுஞ்
சம்மத மேயெமக் குந்தீபற
தற்போத மாய்க்குமே லுந்தீ பற" (66)

ஆனுல் பாவனை நிஷ்டையல்ல, அத்துவிதப் பேற்றைத் தரவல்லது அன்று என்று எச்சரிக்கிருர்.

"பாவனை தீதநினை வின்மை யுண்டெனிற்
பாவனை யாகுமென் றுந்தீ பற
பன்னூற் கருத்துமீ துந்தீ பற" (70)

எந்த யோகமும் நிஷ்டையும் அன்பின்றி கைவரப் பெருது என்று அடிகளார் கூறுகிருர். அன்பே சிவமான பரம்பொருளுடனே கூடி இரண்டற நிற்கும் சீவன் முத்தர்கள் எல்லா சராசரங்களிடத்தும் அருளை நீக்கார் என்று அணைந்தோர் தன்மையைக் குறிக்கின்ருர் அடிகளார்.

"ஓங்கரு ளீசனே டொன்றியே நின்ரேரு
மீங்கரு ணீங்காரென் றுந்தீ பற
எல்லா வுயிர்க்குமென் றுந்தீ பற"

(100)

இது மெய்கண்டாரின் 12-ஆம் சூத்திரத்தை யொத்திருக்கிறது. ஆனுல் அடிகளார் கூறும் இலக்கணம் சிற்சில வேறுபாடுகள் கொண்டுள்ளது. முன்ஞெரு பாட்டில் அடிகளார் எல்லாவற்றையும் சிவமெனக் காண்பதும் தற்போதமே என்று குறித்துள்ளனர்.

"எல்லாஞ் சிவமேயென் றெண்ணினு நின்போத
மல்லாஃ துண்மையன் றுந்தீ பற
ஆங்கது நீங்கி டென் றுந்தீ பற"

(69)

ஆனுல் கூர்ந்து நோக்கின் முரண் இல்லை என்பது துணிவு.

அகச்சந்தான முதற் குரவரும், அடிகளாரும் 'அவிரோதத்'தையும் 'அயரா அன்பையும்' அரன்கழல் செல்வதற்கு அடிப்படையாகக் கொண்டுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. அவ்வழி நம்மனேர் கடைப் பிடிப்பாராக!

*

திருப்பேரூர், தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் துதி

நீயறையா ஞானமொன்றை நின்திருத்தாள் போற்ருருவன்
வாயறைந்த உண்மையும்நின் வண்மைஎனக் கூடாதோ?
தீயவுல(கு) ஆசைவிட்டுச் செல்வார் பலர்க்குமொரு
தாயனையாய்! பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனே.

வேள்வியிடை கொல்லல் மிகுபாவம் என்றமொழி
கேள்வியில்லார் போன்றுங் கிளத்தியவா(று) என்னைகொல்லோ?
வாள்விதிர்க்கும் திண்டோள் வயவீர பத்திரனுர்
தாள்விழைந்தாய் பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனே.

மிக்க குரவனினும் மேலாய சீடன்வந்து
சிக்கஎன்ன மாதவம்நீ செய்தனையோ? நானறியேன்!
முக்கணுடை வானவனை மூரிவிடை மீதுகண்டாய்!
தக்கபுகழ்ப் பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனே.

காரணனை மால்விடையிற் கண்டவிதம் நீயுரைத்தும்
பேரறிவே நானெனுஞ்சொற் பேசிவம்பில் மாய்வேனே?
வீரசைவ சித்தாந்த மெய்யடியார் மிக்குவந்து
சாரவல்ல பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனே.

தொண்டர்களுக்(கு) ஆன துணைநான்கும் சொற்றருளும்
தண்டமிழ்த்தென் பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனை
அண்டர்புக ழும்நெல்லை அம்பலத்தில் வாழ்புலவன்
விண்ட பதிகம் விரும்பில்வரும் மெய்த்தவமே.

—மகான் - வண்ணச்சரபம் அருள்திரு. தண்டபாணி சுவாமிகள், திருவாமாத்தூர்.

சித்தாந்தச் செந்நெறிக்குத் திருமுறைகளே உயிர்

(சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை, கழகப் புலவர், சென்னை.)

திருமுறைகள் அருமறை எனவும், திருமாமறை எனவும், எழுதுமறை எனவும் வழுத்தப்பெறும். திருமுறைகள் ஓதுங்கால் முதலிலும் முடிவிலும் திருச்சிற்றம்பலமென்னும் செந்தமிழ்ப் பெருமாமறை ஓதுதல் தொன்றுதொட்டுள்ள மரபு. இத் திருச்சிற்றம்பலம் என்னும் செந்தமிழ்த் தனி மந்திரம் ஒற்று நீக்கி எண்ணின் ஆறெழுத்தாகும். அஃது இருமுறை ஓதப் பெறுதலின் இரண்டுங்கூட்டப்பன்னிரண்டு எழுத்துக்களாகும். இதனுல் திருமுறைகள் பன்னிரண்டு என்னும் அமைவு தெய்வத் திருவருட் திருக்குறிப்பாகும். செந்தமிழும் சிவனெறியும் உடலுயிர் போன்று நீக்கமற நிற்கும் நீர்மையன. செந்தமிழின் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அம்முறையான் செந்தமிழுக்கும் உயிர்போன்று திகழ்வது பன்னிரு திருமுறைகள் என்பதுங் காண்க.

சேக்கிழாரடிகள் பதினெரு திருமுறைகளும் ஒப்பில் தனித்தமிழ் அருமறைகள் என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அது வருமாறு:

''பெருமதில் சிறந்த செம்பொன்மா
விகைமின் பிறங்குபே ரம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய
பின்னர் வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில்
கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்
பலமுன் திருஅனுக் கன்திரு வாயில்.''

—கஉ. தடுத்தாட்கொண்ட புராணம், கo௪

திருக்கடைக்காப்பு எனப்படும் ஞானசம்பந்தர் திருமுறை முதலாகும். தேவாரம் எனப்படும் நாவுக்கரசர் ஆருந் திருமுறை நடுவாகும். நம்பியாண்டார் நம்பியருளிய கோயிற் பண்ணிய விருத்தம் கடைசியாகும். அன்பர்தம் சிந்தை என்பது திருத்தொண்டர் திருவந்தாதியாகும். இம்முறையான் நோக்கின் திருச்சிற்றம்பலத்தின் திருக்குறிப்பே திருக்கோயில் என்ப. நாவுக்கரசர் தம் திருமுறை ஆருவது போன்று, ஞானசம்பந்தர் தம் திருமுறை மூன்ருவதாகும்.

அத்திருப்பாட்டுக்கள் வருமாறு:

''ஆடினுய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாத சிற்றம்பலம்
நாடினு யிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினுய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினுயருளாய் சுருங்களம் தொல்வினையே''

—௩. க. க.

இத் திருப்பதிகத்தில் காணப்படும் திருப்பாட்டுக்கள் பதினென்றன் கண்ணும் சிற்றம்பலம் அமைந்துள்ளமை நோக்குக. நான்காவது திருப்பாட்டில் மட்டும் அம்பலம் என்று காணப்படுகின்றது.

''அரியானை அந்தணர்தம் சிந்தையானை'' என்பது முதற்கண் காணப்படுகின்றது. ஆனுல் சேக்கிழாரடிகளின் திருக்குறிப்பின்படிவரும் திருப்பாட்டை முதலாகக் கொண்டு திகழும் திருப்பதிகமே முதலாக அமைய வேண்டுவதாகும். அத் திருப்பாட்டு வருமாறு:

'' மங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்று லத்தார்
குடமூக்கி லுள்ளார்போய் கொள்ளம் பூதூர்த்
தங்குமிட மறியார் சால நாளார்
தருமபுரத் துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே''

—சு. உ-க.

இத் திருப்பதிகத்தில் காணப்படும் திருப்பாட்டுக்கள் பதினென்றன் கண்ணும்

சிற்றம்பலம் அமைந்துள்ள திருக்குறிப்பும் நோக்குக. இதுபோல ஞானசம்பந்தர் பாடியருளிய ''ஆடினாய்'' எனத் தொடங்கும் திருப்பதிகத் திருப்பாட்டுப் பதினொன்றன்கண்ணும் சிற்றம்பலம் அமைந்துள்ளமை காண்க.

இனி பதினொராந்திருமுறைக் கடைசித் திருப்பாட்டு வருமாறு:

''கைச்செல்வ மெய்திட லாமென்று
பின்சென்று கண்குழித்தல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட்
கேயென்றும் பொன்ற வில்லா
அச்செல்வம் எய்திட வேண்டுதி
யேல்தில்லை அம்பலத்துள்
இச்செல்வன் பாதம் கருதிரந்
தேனுன்னை என்னெஞ்சமே.''

—கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், எ0.

அன்பர்தம் சிந்தையின் சிறப்பு வருமாறு:

''ஓடிடும் பஞ்சேந் திரியம்
ஒடுக்கிஎன் ஊழ்வினைகள்
வாடிடும் வண்ணம்நின் றெத்தவம்
செய்தனன் வானினுள்ளோர்
சூடிடும் சீர்த்திருப் பாதத்தர்
தொண்டத் தொகையினுள்ள
சேடர்தம் செல்வப் பெரும்புகழ்
அந்தாதி செப்பிடவே.''

—கக. திருத்தொண்டர் திருவந்தாதி, அகூ

இதன்பின் ஆளுடைய பிள்ளையார் மேல் பாடியருளிய திருப்பதிகங்கள் முறையே க. திருவந்தாதி உ. திருச்சண்பை விருத்தம், ௩. திரு மும்மணிக் கோவை, ச. திருவுலாமாலை, ரு. திருக்கலம்பகம், சூ. திருத்தொகை என ஆறுகும்.

திருநாவுக்கரசு நாயனர் மீது திருவேகாதசமாலை யொன்றுகும்.

நம்பியாரூரர் மீது திருத்தொண்டர் திருவந்தாதியின்கண் அ, ககூ, உ௩, ௩உ, ௩0, சஅ, ருஎ, சுரு, கூகூ, எஎ என்னும் பத்துத் திருப்பாட்டுக்கள் காணப்படுவது காண்க.

இனிச் செந்தமிழ்ச் சிவனெறிச் செல்வர்கள் தம் நன்னெறிக்குரிய திருவருண் முதல்வர் நால்வர் என்னும் நன்னம்பிக்கையினை வழுவாது மேற்கொண்டு கடைப்பிடித்தொழுகல் வேண்டும். மேலும், திருவருளால் செந்தமிழாகமம் மொழிந்தருளிய திருமூலரும், திருக்கைலை சென்று திருவருளால் 'திருக்கைலாய ஞானவுலா''ப் பாடிச் சிவபெருமான் திருச்செவியில் கேட்பித்தருளிய சேரர் காவலரும், திருக்கைலை சென்று திருவருளால் சிவபெருமான் ''அம்மையே'' என்று அழைக்கப்பெற்றுத் திருவாலங்காடெய்தித் தமிழ்பாடித் திருவடிப் பேறு பெற்ற காரைக்காலம்மையாரும், தொண்டர் சீர் பரவுவாராகிய சேக்கிழாரடிகளும் ஆகிய நால்வரும் முதல்வர் நால்வரோடிணைத்து எண்மராகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

இத்திருவருண் முதல்வர் எண்மரும் ஒருபுடையொப்பாகச் சிவபெருமானின் திருவருட் பண்பெட்டின் திருக்குறிப்பினராவர். திருமுறைத் திருவாசிரிய அருளாளர் இருபத்தெழுவராவர். இவருள் எஞ்சிய பத்தொன்பதின்மர் முன் எண்மரோடு துணைவராகக் கொள்ளுதல் வேண்டும். முன்னோதிய எண்மரும் ஓதிய திருமுறைகளைத் திருவருளால் நம்மனோர் வீட்டிலும், மன்றங்களிலும், திருமடங்களிலும், திருக்கோவில்களிலும் நாளும் சிவனெறி முறைப்படி ஓதி வருதல் வேண்டும்.

நால்வரொடு நம்மூலர் சேரர்அம்மை சேக்கிழார்
ஏல்சிவனெண் பண்பினர்தாள் ஏத்து.

எல்லா வகையான வழிபாட்டிற்கும் தெய்வத் திருமுறைகள் ஆறு அமைவாம் தேனூர் தமிழ்த் திருமாமறைகள் என்னும் வாய்மை உறுதியில் உள்ளந்தளராதொழுகுதல் வேண்டும். சிவபெருமானுக்கு மிக்க உகப்பு நல்குவது தனித் திருமாமறைகள் என்னும் உண்மை வருமாறு:

''நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்கர
சரும் பாடியநற் றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானைத்
தொண்டனேனறியா மையறிந்து

கல்லியல் மனத்தைக்கசிவித்துக் கழலடி
காட்டியென்களை களையறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின்றுனை
வலிவலந்தனில் வந்துகண் டேனே.''

—எ. சூஎ-டு.

ஆண்டு முழுவதும் ஓதி உய்தற்கு நம் பெருநற் றவப்பேற்றால் திருவருளால் திருமுறைகள் பன்னிரண்டு அமைந்துள்ளன. எனவே ஒவ்வொரு திங்களுக்கும் ஒவ்வொரு திருமுறையாக ஓதி வருதல் வேண்டும். ஓதத் தொடங்குங்கால் வைகாசித் திங்கள் முதலாகத் தொடங்குதல் வேண்டும். வைகாசித் திங்களின் சிறப்பு, திருஞானசம்பந்தப் பெருமானுர் தம் திருநாள் வைகாசித் திங்கள் மூலமாகும். அங்ஙனந் துவங்கின் எட்டாந் திருமுறை மார்கழித் திங்களில் ஓதப்பெறும். மேலும் பன்னிரண்டாந் திருமுறை சித்திரைத் திங்களாகும். பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராண அரங்கேற்றம் சித்திரைத் திங்களில் நிகழ்ந்துள்ளது. அத்தகைய பொருத்தம் அமைந்துள்ளமையும் நினைவு கூர்க. இவ்வுண்மை வருமாறு:

தாளுடைய திருச்சிலம்பு புலம்பநடம் புரியுந்
தன்மையர னுக்கிசைந்த பேர்வழியி னுளும்
ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும்
அவரமுது திருஞானம் அமுதுசெய்த நாளும்
சூளுடையா திரைநாளாம் சித்திரையா திரைநாள்
தொடங்கிஎதி ராம்ஆண்டு சித்திரையா
திரையின்
நாளுடைய கதைமுடிப்பாம் எனக்குன்றை வேந்தர்
நடத்தஅனை வருமிருந்து கேட்டனர்நாள்
தோறும்.''

—கஉ. சேக்கிழார் புராணம், அ0.

நாடோறும் ஓதிவரு முறைமைக்கு வருமாறு அமைத்துக் கொள்ளுதல் ஏற்புடைத் தென்ப.

ஞாயிற்றுக்கிழமை—சம்பந்தப் பெருமான் ஓதியருளிய திருமுறை.
திங்கட்கிழமை —அப்பர் பெருமான் ,,
செவ்வாய்க்கிழமை—நம்பியாரூரர் ,,
புதன் கிழமை—மணிவாசகப் பெருமான் ,,
வியாழக்கிழமை—திருமூல நாயனுர் ,,
வெள்ளிக்கிழமை—சேரமான் பெருமாள் ,,
சனிக்கிழமை—காரைக்காலம்மையார் ,,

இம்முறையாகக் கிழமைதோறும் மீண்டும் மீண்டும் ஓதி வருதல் வேண்டும். ஓதி வருங்கால் வாய்ப்புளதேல் ஒரு திருப்பதிகம் மூன்ருக ஓதுக. இன்றேல் இன்றியமையாது ஒரு திருப் பாட்டேனும் ஓதி வருதலைத் தலைக்கடனுகக் கொள்க. மேலும் ஒவ்வொரு நாளும் முதற்கண் ஓதியபின்னர்ப் பன்னிரண்டாந் திருமுறையாகிய சேக்கிழார் திருவருண் மொழியினின்று ஒன்றிரண்டு திருப்பாட்டுக்கள் ஓதி வரலாற்றுச் சிறப்பினை ஓதிவருதல் வேண்டும். அங்ஙனம் ஓதுதற்குத் திருத்தொண்டர் புராணத்துள் பதின்மூன்று சருக்கங்கள் உள. அவற்றுள் முதலாவதாகக் காணப்படுவது திருமலைச் சருக்கம். அதனை ஞாயிற்றுக்கிழமைக்கு அமைத்துக்கொள்க. ஏனைய ஆறு நாட்களுக்கும் நாளொன்றுக்கு இவ்விரண்டு சருக்கங்களாக அமைத்துக்கொண்டு ஓதி வருதல் வேண்டும்.

இம்முறை செந்நெறிவளர்ப்பதற்கும் திருமுறை பரப்புவதற்கும், உண்மை தெரிந்தொழுகுதற்கும், ஒழுகுவிப்பதற்கும் பெருந்துணையாகுமென அடியேன் கருதுகின்றேன். அங்ஙனமே மெய்யன்பர்கள் அனைவர்களும் மேற்கொள்ளுதல் வேண்டுமெனப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

ஓம்.

நால்வரொடு நம்மூலர் நற்சேரர் அம்மையார்
பால்வருநாள் ஏழும் பயில்வோமே—சால் திங்கள்
பன்னிரண்டும் பாடத் திருமுறையோர்
பன்னிரண்டாம்
மன்னுவை காசிமுதல் வாழ்த்து.

அன்புள்ள
திருவள்ளுவரகம், ப. இராமநாதன்

நடிப்பவர்க்கே நல்ல காலம்

(பேராசிரியர், ஆ. சிவலிங்கனுர்,

விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.)

"உண்மையாக நடப்பவர்களுக்குக் காலம் இல்லை; நடிப்பவர்களுக்குத் தானையா நல்ல காலம்" என்று அங்கலாய்த்துக் கொள்பவர்களை நாம் காணுகின்றோம். அவ்வாறு அங்கலாய்த்துக் கொள்பவர்களுள், உண்மையிலேயே தாங்கள் நல்லவர்களாக இருந்து, அல்லாதவர்களுக்குக் கிடைக்கும் பெருமை முதலிய கண்டு கூறுபவர்களும் உண்டு. நல்லவர்கள் இருக்கும் இடம் தெரியாதபடி மங்கிக்கிடக்க, அல்லாதவர்கள் புகழ்பெற்று விளங்குதலைக் கண்டு கூறுபவர்களும் உண்டு. ஒருவன் இறைவனிடம் அன்பில்லாதவன்; ஆனுல் அன்புடையவன் போல நடப்பான், பேசுவான். வீட்டில் திருநீறிடாதவன்; ஆனுல் வெளியில் பலர் காண இட்டு வருவான். உள்ளத்தில் தீய எண்ணங்கள் உடையவன் - மறைவாகத் தீய செயல்களும் செய்பவன்; ஆனுல் பேச்செல்லாம் நல்லனவாக - செயலெல்லாம் காண்பார்க்கு நல்லனவாகத் தோன்ற இருப்பான். இப்படிப்பட்டவனைப் பார்த்துத்தான் முன் கூறியவாறு அங்கலாய்ப்புத் தோன்றுகிறது. இத்தகையவனைப் போன்ருரை மனதில் வைத்துத் தான் மாணிக்க வாசகப் பெருமான்,

"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து
நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்."

என்று தம்மையே கூறிக்கொள்பவர் போல் கூறினுர்.

"நாடகத்தில் அடியவர் வேடந் தாங்கி நடிப்பவர் உண்மை யடியவர்போல் நடிப்பர். அதுபோல் யான் நடித்து முத்தி வீட்டைப் புக மிகவும் அவசரப்படுகின்றேன்" என்ருர் மணிவாசகர்.

புகை வண்டியில் கட்டணத் தாள் (Ticket) இன்றிப் போகும் ஒருவன், தான் இறங்கிச் செல்ல நினைத்த நிலையம் வந்தவுடன், தப்பிப்போக வேறு யாதோர் வழியும் இல்லாமல் உரிய வாயில் வழியே தான் போகவேண்டும் என்ற நிலை வரும் போது, அவன் கும்பலில் நுழைந்து பலர்க்கும் முன்னுக விரைந்து, அவ்வாயிலில் இருந்து கட்டணத் தாளைப் பெறுபவனைக் கடக்க முற்படுவான். ஆற்றலால் கடந்தும் செல்வான். கட்டணத் தாள் உள்ளவர்கள் அவனைவிடப் பிந்தியவர்களாவார்கள். மணிவாசகரும், நடிக்கும் தாம் வீடடைதற்குரிய குணங்கள் இல்லாதிருக்கவும் அவையுள்ள பக்குவர்களைவிட வீடடைய விரைவதாகக் கூறிக் கொள்ளுகிருர்.

"தவமே புரிந்திலன்; தண்மலர்
இட்டுமுட்டாது இறைஞ்சேன்."

"ஆமாறுன் திருவடிவுக்கே அகங்குழையேன்
அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்
புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்
மெழுகேன் கூத்தாடேன்."

என்பனவாகத் தம் குறைகளைக் கூறிக் கொண்டார் அவர். அவர் கூறியதற்கேற்பவும் தலைப்புற்கேற்பவும் ஓர் உண்மை காணலாம்.

உண்மையிலேயே நடிப்பவர்களுக்குத் தான் நல்ல காலம் விரைந்து வரும் என்று கூடக் கூறலாம். ஒருவன் நல்லவனுக விளங்க வேண்டும் எனின் அவன் நல்லனவற்றை உளமார மேற்கொள்ள வேண்டும். அப்போது அவன் ஒரு குறிக்கோளும் இல்லாமல் மேற்கொள்ள நேரும். அவன் உலகினரால் நல்லவன் என்று கூறப்பட நெடுங்காலம் ஆகும். அவன் நல்லவனுக விளங்குவதும் சிறிது சிறிதாகவே நடைபெறும். தீய ஒழுக்கம் உடையவன் ஒருவன் நல்லவன் போல விளங்க



உயர்திரு. நா. மகாலிங்கம், அவர்கள்,
பி.எஸ்.ஸி., எம்.ஐ.ஈ., எம்.எல்.ஏ.,
இந்நாள் கல்லூரிக் கழகத் தலைவர்.



வார வழிபாட்டுக் கூட்டம்

எண்ணுவானுனல் அவன் ஒரு குறிக்கோள் உடையவனுவான். ஏதேனும் ஓர் உயர்ந்த பொருளேயோ-புகழையோ - பதவியையோ குறிக்கோளாகக் கொண்டவனுவான். அதனைப் பெறுதற்குத் தன் தீயனவற்றை மறைத்து, நல்லனவற்றையே மேற்கொண்டவன் போல் நடிப்பான். இயல்பாகவே நல்லவன் செயலைவிட இவன் நற்செயல் மிக விரைவில் வெளியில் பரவும். அதனுல் புகழ்- பொருள் - பதவி கிட்டும். கிட்டிய அளவில் இவன் நின்றுவிட முடியாது. கிட்டியதை நிலைக்க வைக்க வேண்டும். ஆதலின் இவன் அதற்காகத் தன் தீய குணங்களை ஒவ்வொன்ருகவிட நேரிடும். உண்மையாகவே நல்லனவற்றைப் பற்றிப் பிடிப்பான். நாளடைவில் நல்லவனுகவே விளங்குவான். இத்தந்திரத்தினை அரசியலார் கைக்கொள்வதைக் காணலாம். தம் அரசியலைத் தாக்குபவனுக்கு ஓர் உயர் பதவி கொடுத்து அவனையே தம் அரசியலைத் தாக்குதலை ஒழித்ததோடு போற்றுதலையும் செய்யச் செய்வதைக் காண்கின்ரே மன்ரே ? மணிவாசகரும்,

"உல்வாக் காலம் தவம் எய்தி
உறுப்பும் வெறுத்திங் குனைக் காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவியேனைப் பணிகொண்டாய்."

என்று கூறியுள்ளார். இந்நிலையில் படிப்படியாக நல்லனவற்றையே மேற்கொண்டு ஒழுகும் ஒருவனைவிடத் தீயவன் ஒருவன் தான் கொண்ட குறிக்கோள் நிறைவேறுவதற்காக நல்லனவற்றைக் கடைப்பிடித்து நடிக்க அதனுல் அக்குறிக்கோள் கிட்ட, அதனை நிலைக்க வைக்க மேலும் நல்லனவற்றையே கடைப்பிடித்து, நடிப்பை ஒழித்து, உண்மையிலேயே நல்லவனுதல் மிக விரைவில் நிகழ்வதாகும். திடீர் மாறுபாடு நிலைத்ததாகவே யிருக்கும். அதனுல்தான் "நடிப்பவர்க்கே நல்ல காலம்" என்பதிலும் உண்மையுண்டு என்று கூறுகின்றேன்.

உலகில் யாவரும் முதலில் நடிக்கவே செய்கிருர்கள். பின்னரே உண்மையுள்ளவராகிருர்கள். இறைவன்பால் அன்புடையவர்களும் பெரும்பாலும் அப்படிப்பட்டவரே. சிலர் "அன்பில்லை; அதனுல் நான் கோயிலுக்குப் போவதில்லை" என்பர். அன்போடு செல்வது தான் சிறந்தது. ஆனுல் சென்று சென்று வருவதாலும் அன்பு ஏற்படும். அதனுல் அன்பில்லையென்ருலும் செல்லுதல் வேண்டும். நீந்தத் தெரிந்து கிணற்றில் இறங்குவது தான் நல்லது. கிணற்றில் இறங்கி நீந்தக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். நீந்தத் தெரியாதவன் கிணற்றில் இறங்கினுல் பார்ப்பவர் தடுப்பார். தடுப்பார் தடுக்கட்டும் என்று எண்ணி முழங்காலளவு நீரிலும், இடுப்பளவு நீரிலும், கழுத்தளவு நீரிலும் ஆக நாளடைவில் இறங்கி மீண்டு மீண்டு நீந்தக் கற்றுக் கொள்வதுதான் அறிவுடைமைக்கழகு. அதுபோல "அன்பில்லாதவன் கோயிலுக்குப் போகின்ருன். இவன் நடிப்பவன்" என்று புறம்பாகவும், "அன்பில்லாதவன் ஏனப்பா கோயிலுக்குப் போகிருய். இந்த நடிப்பு நடிக்காதே' என்று நேரிலும் கூறுபவர் பலர் இருப்பர். அவர்கள் கூற்றுக்களைப் பொருள்படுத்தாமல் சென்ருல் அன்பு தானே வளரும். ஆதலின் ஒன்றைப்பெற முயலுவோர் அதற்குத் தகுதி தம்மிடம் இல்லையென்ருலும் உடையவர் போல முயன்ருல் உண்மைத் தகுதி வரும். பெற நினைக்கும் அவ்வொன்றும் நல்லதாய் இருத்தல் வேண்டும்.

நாடகத்தில் நடிப்பவன் தன் உண்மைப் பெயர், ஊர் முதலிய யாவும் மறந்து, மேற்கொண்ட வேடத்தனுகவே ஆகிவிடுகின்ருன். அதுபோல ஒருவன், தான் நடிப்பாக நல்வினை செய்யுமிடத்தும் தான் யார் என்பதயும் மறந்து செய்தல் வேண்டும். அதற்குப் பலன் உண்டு. இறைவனைப் பூசை புரிபவன் நடிப்பானேயானுல் - பிறர் காணுமளவில் சிறந்தவன் போலப் பூசை புரிவானுனல் அவனும், பூசை புரியும் அவ்வேளையில் தன்னை மறந்து பூசை புரியவேண்டும். அதற்குப் பலன் உண்டு. நாளடைவில் அது வீட்டுலகிற்குரிய நெறியும் ஆகும். அதனுல்தான் மணிவாசர் 'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்ருர். துணிவாக, "வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்"என்றும் கூறினர்.

"தெய்வ மணக்குஞ் செய்யுளெல்லாம்"

[திரு. ரா. ப. தங்கவேலு, ஈரோடு.]

புலவர் பெருமக்கள் இரு பிரிவு படுவார்கள். அவர்கள் அருட்புலவர்களென்றும், அறிவுப் புலவர்களென்றும் இரு வகைப்படுவர். அறிவுப் புலவர்களிடையே அறிவுத் திறன் ஒன்றினையே காணலாம். ஆனால் அருட் புலவர்களிடையே அறிவுத் திறனோடு அருள் திறனையும் ஒருசேரக் காணலாம்.

12-ஆம் நூற்றாண்டில் அருட்பெரும் புலவர் பெரு மகனாகவும் சோழப் பேரரசின் முதல் அமைச்சராகவும் திகழ்ந்தவர் "சேக்கிழார்" என்னும் தெய்வப் புலவராவார். அந்த நூற்றாண்டில் அறிவுப் புலவர்கள், அறிவுத் திறன் கொண்டு ஆக்கிய கற்பனை இலக்கியங்களில் அறிஞர் கூட்டம் சொற்சுவை, பொருட்சுவைகளில் ஈடுபட்டுக் காலத்தைப் போக்கினர். மக்கள் சமுதாயமோ சாதிப் பேய் வாய்ப்பட்டு உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனப் பாகுபாடுபட்டு, பூசலிட்டுப் பிரிந்து கிடந்தனர். இச்சமுதாயத்தை அன்பின் அடிப்படையில் ஆண்டவன் அருள் திறத்தில் யாவரும் ஒன்றெனக் காட்டிச் சமுதாயத்தை உயர்நிலைப் படுத்தத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் பல காலத்தில், பல மரபில் தோன்றிய தமிழ்ப் பெருமக்களின் வரலாற்றைத் தொகுத்துச் சேரியிற் றோன்றிய செம்மலாகிய திருநாளைப் போவாரையும், அந்தணர் மரபில் அக்ரகாரத்தில் தோன்றிய உருத்திய பசுபதியாரையும் ஒப்பப் போற்றிப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர் சேக்கிழார் பெருமானவார்கள். இப் புலவர் பெருமகனார் தாம் பாடிய திருத்தொண்டர் புராண மென்னும் இவ் இலக்கியச் சோலையில் தொட்ட தொட்ட இடந்தோறும் அருள் நலம் கனியக் காட்டும் காட்சி, கண்டு மகிழ்தற்குரியதாகும். சாதாரணமாக நெற்பயிரின் வளர்ச்சியினைப் பலர் பலவிதமாகத் தன் உள்ளக் கிடக்கையை அதன் மேலேற்றித் தற்குறிப் பேற்றணியாகப் பாடியுள்ளனர். சேக்கிழார் காட்டும் தெய்வ நலத்தைக் காண்போம். நெல்மணி முதிர்ந்து தலை சாய்ந்து நிற்கும் காட்சியைத் தலை வணங்கி அன்பு செலுத்தும் அறிவுடைப் பெருமக்களாகிய வித்தகர் தன்மையினை விளக்கிக் காட்டுவார்.

"பத்தியின் பாலராகிப் பரமனுக்
காளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால்
வணங்கு மாபோல்
மொய்த்த நீள் பத்தியின் பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன
சாலி யெல்லாம்."

காவிரி யாற்றினை, மணிப்பூணுடை அது போர்த்துச் செல்லும் காரிகையாகப் பாடிப் போந்தனர், கவிஞர் பலரும். நம் சேக்கிழார் பெருமான், "காவிரியின் இரு மருங்குமுள்ள எண்ணில் சிவாலயத்தில் புண்ணியம் செய்வாருக்குப் பூவுண்டு நீருண்டு" என்று மூலர் மொழிந்தவண்ணம் நீரையும் மலரையும் அலைக்கரத்தால் இறைத்து வழிபடும் அடியாராக நமக்குக் காட்டுகின்றார்.

"வம்புலா மலர்நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார் கரை எண்ணில் சிவாலயத்
தெம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம் பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்."

வசந்த காலம், தென்றல் காற்று திருவாரூர் வந்து வீசுகின்றது. ஆரூரண்ணல் பால் அகத்தை விட்டுப் பரிபவப்படும் அனங்கனைய பரவையார், தனக்கு இன்னல் விளைவிக்கும் அக் காற்றினை நோக்கி "மறம் பயின்ற தெங்கோ தமிழ் மாருதம்" என்று வினவி மயங்குகின்றார்.

"பிறந்த தெங்கன் பிரான் மலையத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்பணைத் தடம் பொங்கழல் வீசிட
மறம் பயின்ற தெங்கோ தமிழ் மாருதம்."

தென்றலைக் கேட்பது போல் நம்முள்ளத் திடையே "எங்கள் பிரான் மலையத்தையும்", "தெய்வ நீர் நாட்டையும்" நினைவூட்டுகின்றார். இனிக் காதலர் காட்சியிலும், கடவுட் காட்சியினையே காட்டும் திறன் சேக்கிழாருக்கே அமைந்த தெய்வத் திறனாகும்.

சுந்தரர் பெருமான் திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட புராதனனை வழிபட்டுத் திரும்புங்கால் "நற்பெரும் பான்மை கூட்ட நகை பொதிந்திலங்கும் செவ்வாய், விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழையாரைக்" காண்கின்றார். நங்கை பரவையாரும் பண்டை வினை கடைக் கூட்ட ஆரூரரைக் காண்கின்றார். இருவரும் ஒருவர் பால் ஒருவர் ஈர்க்கப்பட்டுத் திகைத்து நிற்கின்றனர். ஒருவரைப் பற்றிய எண்ணம் மற்றவர் வாயிலாகக் கவியாக மலர்கின்றது.

பரவையாரைக் கண்டு மயங்கிய சுந்தரர் "புண்ணியத்தின் புண்ணியமாகவும், சிவனருளாகவும் அதிசயக்கின்றார். பரவையாரும் முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ, மின்னேர் செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ என்று வியக்கும் காட்சி நமக்குத் தெய்வீகப் பெரு வியப்பை அளிக்கின்றது. அக் கவி நயத்தைக் காண்போம்:

(1) "கற்பகத்தின் பூங்கொம்போ காமன்
தன் பெரு வாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவள மலர் மதி
பூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ
அறியேன் என்றதிசயித்தார்"

(2) முன்னேவந் தெதிர் தோன்றும்
முருகனோ பெரு கொளியால்
தன்னேரில் மாரனோ தார்
மார்பின் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடை யண்ணல்
மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே! என் மனந் திரித்த
இவனாரோ என நினைந்தார்.

போரிடும் யுத்த அரங்கிலும் மேன்மை கொள் சைவநீதி பேசப்படுவதைக் காண்போம்:

ஏனாதி நாத நாயனாருடன் அவர் பகைவனாகிய அதி சூரனும் அவனாட்களும் சேர்ந்து போரிடுகின்றனர். நாயனாருடன் நேர்பட்டுப் போரிட்டோர் யாவரும் உயிர் விட்டுப் பொன்றினர். மற்றையோர் யாவரும் போர்க்களத்தையே விட்டோடிப் போயினர். இக்காட்சியினை,

"நிலைபெற்ற மெய்யுணர்வு நேர்பட்ட போதினில்
அலைபட்ட ஆர்வமுதற் குற்றம்போல் ஆயினர்"

என்று வெற்றி வீரராகிய நாயனார் முன் எதிர் நிற்க மாட்டாது அஞ்சி ஓடிய மாற்றலரை ஆர்வமுதற் குற்றங்களுக்கு, அஃதாவது, காமக் குரோதாதிகளாகிய தீப்பண்புகள் மெய் ஞானம் கைவரப் பெற்றவர்பால் தலை காட்டாதோடும் காட்சியினை எடுத்துக் காட்டும் திறன் வியத்தற் கொன்றாகும். சேரியில் தோன்றிய செம்மல்களாகிய கண்ணப்பர், திருநாளைப் போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய பெருமக்களை 'ஐயரே' என்று அழைக்கும் அருள் நலம் தெய்வ மணக்கும் செய்யுளின் சீரிய பண்பாகும்.

அந்தணர் மரபில் தோன்றிய 13 நாயன்மார்களை எங்கும் 'ஐயரே' என்று அழையாத சேக்கிழார் பெருமான், மேற்கண்ட மூன்று பெருமக்களை மட்டும் 'ஐயரே' என்று அழைக்கின்றனர். அஃதும், அந்தணர் மரபில் தோன்றிய பெருமக்களைக் கொண்டு தீண்டப்படாதவரென இன்று வரையும் நினைக்கப்படும் மரபில் தோன்றிய நாயன்மார்களை ஐயரே என்று அழைக்க வைக்கின்றார்.

திருநாளைப் போவார் என்னும் பெருமகனாரை அம்பலவாணனும் எங்களில் ஒருவர் என்று எண்ணும் தில்லை வாழ் அந்தணர்கள் சென்று,

"ஐயரே அம்பலவர் அருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யழல் அமைத்துமக்குத் தரவேண்டி"

என விளம்ப வைக்கின்றது தெய்வ மணக்கும் செய்யுள். இன்னும் திருநீலகண்ட யாழ்ப்பாணரை, வேத வேள்வி செய்யும் பிராமணர் மரபில் தோன்றிய பெருந்தகையாகிய திருஞான சம்பந்தப் பெருமான்,

"ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்த வாறென"ச் சிறப்புரைத்து அருளிச் செய்யும் தெய்வீகக் கவித்திறன் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே என்று நம்மை வியக்க வைக்கின்றது. நம்மை மட்டுமா! இலட்சம் கவி பாடிய மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களையும்,

சாறு மணக்கும் குன்றத்தூர் தலைவனைத் தாம் பாடிய பிள்ளைத் தமிழில் தெய்வ மணக்கும் செய்யுளெல்லாம் என்று பாடிப் பரவித் துதிக்கவைக்கின்றது.

சோறு மணக்குமடங்க ளெலாந்
தூய்மை மணக்குஞ் சிந்தையெலாம்
சுவண மணக்கும் ஆடையெலாஞ்
தொங்கன் மணக்குந் தோள்களெலாம்
சேறு மணக்குங் கழனியெலாஞ்
செல்வமணக்கு மாட மெலாந்
தென்றல் மணக்கு மேடையெலாந்
தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்
நீறு மணக்கு நெற்றியெலா
நெய்யே மணக்கும் கறிகளெலாம்
நெருப்பு மணக்குங் குண்டமெலா
நேய மணக்கும் வீதியெலாஞ்
சாறு மணக்குங் குன்றத்தூர்த்
தலைவர் தாலோ தாலேலோ
சகலாகம பண்டித தெய்வச்
சைவா தாலோ தாலேலோ

—சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

மெய்யன்பர்களே!

கொங்கு நாட்டிடையே சிவமணங் கமழ அரும்பணி புரிந்துவரும் அருட்பெருந் திரு. சாந்தலிங்கர் திருமடத்தின் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் பொன் விழா மலர்மாலையில் என் சொல் மலரும் பொருந்த அளித்து, அத் திருமடத்தின் திருத்தொண்டின் நெறி வாழ வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க குருவருள்! வளர்க சிவநெறி!!

—திருச்சிற்றம்பலம்—

தடம்பாயும் இருவிழிகள் கண்டுகளி தேங்காத்
தழுதழுத்து அன்பில்ஏத்தத்
தலைமீ(து) அமைத்தகைத் துணையோடு புளகந்
தழைத்துநுண் துளிஅரும்ப
விடம்பாய் தருங்காள கண்டனைமெய் அன்பருளம்
விரிதாள கண்டனைமுனோர்
மெய்த்தவக் கடலாம் உனக்கென் அறியாமையை
விரித்தோத அஞ்சுகின்றேன்
உடம்பார் அழிந்திடினு ளுயிராரும் அழிவரெனும்
உத்தமர்சொ லாங்கட்டுரை
உண்மைஎன நம்பலிலென் வெண்மையுறு நெஞ்சகத்(து)
உள்ளூறி அள்ளூறிடும்
திடம்பர உணர்ச்சிதர வேண்டிவழி படும் அடிமை
சிற்றிற் சிதைத்திடேலே
சிவமேந்து மங்கைபெறு தவசாந்த லிங்ககுரு
சிற்றிற் சிதைத்திடேலே.

—சாந்தலிங்கர் பிள்ளைத்தமிழ்.

பயன் தரும் பசுக்கள்

[வித்துவான். கோ. மு. முத்துசாமி பிள்ளை I. A. S. ஓய்வு]

பசுவைப் போன்று பயன் தரும் விலங்கினம் யாதொன்றுமில்லை. குழந்தை பிறந்தது முதல் அதற்கு வேண்டிய அளவில் தாய்ப்பால் கிடைக்காத போது அக்குறையைப் பசுவின் பால் கொண்டு நிறைவு செய்து கொள்கிறோம், பின்னரும், வாழ்க்கையின் இறுதி வரையிலும் உடல் நலம் நிலைத்திருப்பதற்குப் பசுவின் பால் அவசியமாக உள்ளது. இறக்கும் நிலையிலுள்ளவருக்கும் பசுவின் பால் வார்க்கப்படுகிறதை நாம் காண்கிறோம். இதுமட்டுமன்று, வாழ்க்கையின் பயனாகிய இறைவன் அருளைப் பெறுவதற்காகச் செய்யப்படும் வழிபாட்டிற்குப் பசுவின் பால் பலவகையிலும் பயனாகிறது. எனவே பசுவினால் கிடைக்கப் பெறும் பயனை அளவிட்டுக் கூறுதல் அரிது. இதன் உண்மையை ஓரளவிலாயினும் நம்மால் அறிந்து கொள்ள இயலுமெனில், பசுவை நன்கு வளர்த்து அதனால் கிடைக்கத்தக்க பயனைப் பிறருக்கும் பகிர்ந்தளிக்க நாம் தயங்காது முன் வருவோம்.

பசுவின் வரலாறு மிகப்பழமையானது. சிவபெருமானது தரும விடைக்குலத்தைச் சேர்ந்தது பசு. நந்தி என்ற பெயரில் மூவர் உள்ளனர். பூவுலகில் வாழ்ந்த காலத்தில் அரிய தவம் செய்த காரணமாகப் பெரு வாழ்வு பெற்றவர் அதிகார நந்தி. இவர் சிவகணங்களுக்குத் தலைவர். ஊழ் இறுதியில் எல்லாமே சிவ பெருமானிடத்து ஒடுங்கி விடும். பிரமன் திருமால் உட்பட ஒருவர் பின் ஒருவராக ஒடுங்கி விடுவர் என நூல்கள் கூறுகின்றன. இவ்வுண்மையை உணர்ந்த தரும தேவதை எனப்படும் அறக்கடவுள் தானும் அவ்வாறு மறைந்துவிடக்கூடாது எனக் கருதித் தன்னை ஓர் ஊர்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனச் சிவபெருமானிடம் கேட்டுக்கொண்டதில், சிவபெருமானும் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். அன்று முதல் அக்கடவுள் அறவிடையாக என்றுமே அழியா நிலையில் இருந்து வருகிறது. இதைக் கந்த புராணம் எடுத்து உரைக்கிறது. இந்நிகழ்ச்சியைத் தெரிந்து கொண்ட திருமால், சிவபெருமான் திரிபுர தகனம் செய்யப் புறப்பட்ட போது தாமும் சிவபெருமானுக்கு ஒரு விடையாக மாறினர். இதுவே மால்விடையாகும். இம் மூன்று நந்தி தேவர்களிலும் தரும விடையே சிறப்புற்று விளங்கி வருவது. இந்த விடையை இடபதேவர் எனவும் சொல்லுவர். இத்தகைய இடப தேவர் திருக்கயிலையில் சிவ சந்நிதானத்தில் இருந்த காலத்தில் இவருடன் வாழ்ந்தன ஐந்து பசுக்கள். அவையாவன:- சிவப்பு நிறமுள்ள சுமனை, வெண்ணிறமான சுரபி, கபில நிறமுள்ள நந்தை, புகை நிறமுடைய சுசீலை, கருநிறமான சுபத்திரை ஆகியவையாகும். உலகிலுள்ள எல்லாரையும் உய்விக்கத் திருவுள்ளம் கொண்ட சிவ பெருமான் அப்பசுக்கள் ஐந்தும் பூமியில் பிறக்குமாறு ஆணை பிறப்பித்தார். அவ்வாறே அப்பசுக்களும் பாற்கடலினின்றும் தோன்றின. அவற்றின் வழி வழியாக வந்துள்ள பசுக்களே இந்நிலவுலகினில் பலவகைகளில் அனைவருக்கும் உதவி அளித்து வருகின்றன.

இத்தகைய பசுக்களின் பெருமையைச் சேக்கிழார் சண்டேசுர நாயனார் புராணத்தில் விளக்கமாக எடுத்துக் கூறுகிறார்.

''தங்கும் அகில யோனிகட்கும்
மேலாம் பெருமைத்தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள்
எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்துபுரியாதா
அங்கம் அனைத்துந் தாமுடைய
அல்லவோ- நல்ஆவினங்கள்''

''ஆய சிறப்பினாற் பெற்ற
அன்றே மன்னுள் நடம்புரியும்
நாயனார்க்கு வளர்மதியும் நதியும்
நகுவெண் தலைத்தொடையும்

மேயவேணித் திருமேல்
விரும்பி ஆடி அருளுதற்குத்
தூய திருமஞ்சனம் ஐந்தும்
அளிக்கும் உரிமைச் சுரபிகள் தாம்''

''சீலமுடைய கோக்குலங்கள்
சிறக்குந்தகைமைத் தேவருடன்
காலமுழுதும் உலகனைத்துங்
காக்கும் முதற்காரணராகும்
நீலகண்டர் செய்ய சடை
நிருத்தர் சாத்து நீறுதரும்
மூலம் அவதாரஞ் செய்யும்
மூர்த்தம் என்றல் முடிவென்னு''

''உள்ளுந்தகைமையை இனிப்பிறவேறுளவே
உழைமான் மறிக்கன்று
துள்ளும் கரத்தார் அணிபணியின்
சுடர் சூழ் மணிகள் சுரநதி நீர்
தெள்ளுஞ்சடையார் தேவர்கள்
தம்பிராட்டியுடனே சேரமிசைக்
கொள்ளுஞ்சினமால் விடைத் தேவர்
குலமன்றே இச்சுரபி குலம்''

சிவ வழிபாட்டிற்கு வேண்டியவற்றைப் பசுக்கள் அளிக்கின்றன. ''ஆனகம் அஞ்சும்'' ''ஆனிடை ஐந்தும்'' என நான்காம் திருமுறையும், ''ஆவாகி ஆவினில் ஐந்துமாகி'' என ஆருந் திருமுறையும் கூறுகின்றன. ''ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்'' எனத் திருநாவுக்கரசு நாயனர் குறிப்பிடுவதும் இதுவேயாகும். பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் ஐந்தாலும் வழிபாடு செய்பவருக்குச் சிவபெருமான் உள்ளங்கை நெல்லிக்கனி போல் புலப்பட்டு அருள் புரிவார் என்பதைத் திருநாவுக்கரசு நாயனர்,

''செய்ய மேனியன் தேனேடு பால் தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மையலாய் மற வாமனத் தார்க்கெலாம்
கையிலா மலகக் கனி யொக்குமே''

எனத் தமது திருநீலக்குடித் திருக்குறுந் தொகையில் எடுத்துக் காட்டுகிருர்.

பால், தயிர், நெய், தேன், சர்க்கரை என்பனவற்றை உரிய அளவில் சேர்த்தால் கிடைப்பது இரச பஞ்சாமிருதம். பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன பஞ்ச கவ்வியம் எனப்படும். பஞ்ச கவ்வியம் சிறந்த உண்மைப் பொருள்களைக் குறிப்பாகவுள்ளது. ப - பாவ நிவாரணம் ச - ஆன்ம சுத்தி; வியம் - மோட்சம். பஞ்ச கவ்வியம் இல்லாத வழிபாட்டிற்குத் தேவர்கள் இசையார் என நூல்கள் கூறுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புரியும் பரமசிவனுடைய ஈசானம்; தற்புருடம்; அகோரம்; வாமதேவம்; சத்தியோ சாதம் என்னும் சுத்த குணங்களே அவருடைய திருமுகங்களாகக் கருதப்படுகின்றன. இம்முறையில் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் இவ்வைந்தனுள் நான்கை நான்கு திசைகளிலும் மற்றுள்ளதை மையத்திலும் உள்ள பாத்திரங்களில் வைப்பது முறை. மையத்தில் வைக்கப்படும் பாத்திரம் ''சுப்பிரதிட்டை'' எனப்படும். இதில் பால் பூசனைக்காக வைக்கப்படும். ஈசானம் என்னும் மந்திரத்தால் இது பூசிக்கப்படும். ஈசானம் என்னும் திருவருட்குணம் பதியப்படுவதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. ஈசான முகம் ஆகாயத்தை நோக்கி இருப்பதால் இப்பாத்திரம் மையத்தில் வைக்கப்படுகிறது. இதனல் சத்துரு நிவாரணம் ஏற்படும். தற்புருட முகமானது கிழக்கு நோக்கி இருக்கும். ஆதலால் கிழக்குப் பக்கத்தில் 'சுசாந்தம்'' என்னும் பாத்திரத்திலுள்ள தயிரைத் தற்புருடத்தால் இரண்டு தடவை பூசிப்பது முறை. இதனல் தற்புருட குணம் பதிகிறது. இதன் பயன் புத்திரப் பேறுண்டாகும். தெற்குப் பக்கத்தில் உள்ளது, அகோரமுகம். ஆதலால் இப்பக்கத்தில் ''தேசோவத்'' பாத்திரத்திலுள்ள நெய் அகோரத்தால் மூன்று தடவை பூசிக்கப்படுகிறது. இதனல் அகோர குணம் பதிகிறது. இது முத்தியைக் கொடுக்கிறது. வடக்கு நோக்கியுள்ள முகம் வாமதேவ முகம். வடக்குப் பக்கத்திலுள்ள 'இரத்திஞேதக பாத்திர''த்திலுள்ள கோசலத்தை வாம தேவத்தால் நான்கு தடவை பூசிக்கவேண்டும். இதனல் வாம தேவகுணம் பதிகிறது. இதன்

பயன் செல்வம் கிடைக்கும். சத்தியோ சாதகமுகம் மேற்குத் திக்கில் உள்ளது. மேற்குப் பக்கத்தில் "அமிர்தாத்மச" பாத்திரத்திலுள்ள கோமயம் சத்தியோசாதத்தால் ஐந்து தடவை பூசிக்கப்படும். இதனுல் சத்தியோசாதகுணம் பதியும். இதன் பயன் நோய் நீங்கும்.

கோமயமாகிய சாணத்திலிருந்து இச்சை கிரியை ஞானம் என்னும் மூன்று தளிர்களுடன் கூடிய வில்வம் தோன்றியது. அந்த வில்வத்தில் திருமகள் விரும்பி வீற்றிருந்தாள். இக்காரணமாக வில்வத்திற்கு ஸ்ரீபலம் எனப் பெயர் உண்டு. வில்வம் சிவபெருமான் எந்நாளும் அணியத் தக்கதாகவும், அருச்சனை புரிபவர்களது பாவங்களைப் போக்கும் பெருமை உடையதாகவும் உள்ளது.

அடுத்து நாம் காணத் தக்கது பசுக்களின் சாணத்திலிருந்து கிடைக்கப்பெறும் திருநீறு. இத்தகைய திருநீற்றின் தன்மை பெரிய புராணத்தில் முழு நீறு பூசிய முனிவர் புராணத்தில் பேசப்படுகிறது. திருநீற்றினைத் தம் மேனியில் அணியும் சீலர்கள் உலகம் கலங்கினுலும், ஊழிக் காலம் மாறுபட்டாலும், எப்போதும் கலங்காத உள்ளம் உடையவராக இருப்பார்கள் எனத் திருத்தொண்டர் திருவந்தாதி இயம்புகிறது. கன்று ஈன்ற பசுவின் சாணத்தைச் சத்தியோசாத மந்திரம் ஓதி தாமரை இலையில் ஏற்று, பால், தயிர், நெய், கோசலம், ஆகியவற்றைச் சேர்த்து, சிவ மந்திரங்களால் உண்டாக்கப்படும் சிவாக்கினியில் இட்டு எடுக்கப்படும் திருநீறு சிறந்தது. இது "கற்பத் திருநீறு" எனச் சொல்லப்படும். இதன் மகிமையைத் திருஞான சம்பந்தரது திருநீற்றுப் பதிகம் எடுத்துரைப்பதை நாம் அறிவோம். காமிகம் முதலிய ஆகமங்களிலும், சாரோத்திரம் முதலிய உபாகமங்களிலும், காங்கிலாயன குகியம் முதலிய வேதசாரங்களிலும், பாரத்துவாசம் முதலிய சுமிருதிகளிலும், இராமயணம், பாரதம், சிவரகசியம் முதலிய இதிகாசங்களிலும் இலிங்க புராணம் முதலிய புராணங்களிலும் திருநீற்றின் மகிமை புகழப் பெறுவதைக் காணலாம். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள்ளும், "கரியமேனி மிகை வெளிய நீறு சிறிதே யிடும் தடங்கண்ணன்" என்பது காண்கிறேம். கண்ணபிரான் திருமேனியிலும் திருநீறு விளங்கிற்றென்ருல் திருநீற்றின் பெருமையை யாவரே கண்டறிவார்?

திருநீறு வினைகளை நீக்கும். திருநீறு விபூதி எனவும் சொல்லப்படும். வி - மேலான, பூதி - ஐசுவரியம் என்ற பொருளில் விபூதி உள்ளது. மேலும் வி - சிவபெருமான்; பூ - பாவனை, தி- அடைதல் என்னும் பொருளில் சிவ தத்துவபாவனையை விளக்குவது விபூதி என ஆகமங்கள் பொருள் கூறும். உடல் நோய்களையும் போக்கவல்லது. "அருநோய்கள் கெடவெண்ணீறு அணியாதார்" என அப்பர் அடிகள் எடுத்துக் கூறுகிருர். வீடுகளில் உள்ள நச்சுக் கிருமிகளைக் கொல்லும் தன்மையுடையது சாணம். ஈயம் பூசிய பாத்திரத்திலுள்ள தீய தன்மையைப் போக்குவதற்குப் பசுவின் கோமயமாகிய சாணத்தால் சுத்தம் செய்கிறேம். பசுவின் சாணத்தை விட அதிலிருந்து பெறப்படும் திருநீறு அதிக ஆற்றலுடைத்து. செடிகளில் சில கிருமிகள் பரவி செடிகளையும் தளிர்களையும் அழித்துவிடுவதுண்டு. அக்கிருமிகளைப் போக்கச் சாம்பலைத் தூவுவது வழக்கம். இச்சாம்பலே கொடிய நச்சுக்கிருமிகளைப்போக்குமெனில், மந்திரங்களைக் கூறி திருநீறு தரிப்பதால், நோய் துன்பம் முதலிய இடர்கள் நீங்கப் பெறலாம் என்பதில் ஐயமில்லை. பகைவர்கள் தாக்குதல் தங்கள் உடல் மீது விழாவண்ணம் போர்வீரர்கள் கவசம் அணிந்து கொள்வார்கள். அக்கவசம் அவர்களைப் பாதுகாக்கும். அது போன்று அணிவோரைத் திருநீறு பாதுகாக்கும் என்பதை விளக்கும் வகையில் திருமூலர் திருநீற்றைக் "கவசத் திருநீறு" என்கிருர். திருநீறு அணியும்போது "சிவாயநம"என ஓத வேண்டும். அப்போது சிவகதி கேட்கும் உரிமையும் நாம் பெறுவோம் என்பதை

"திருவாய் பொலிய சிவாய நம
என நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ
பாதிரிப்புலியூர் அரனே"

எனக் குறிப்பிட்டுக் காட்டுகிருர் அப்பர்.

தெய்வ வழிபாட்டிற்கான பஞ்ச கவ்வியத்தை அளிப்பனவும், முத்தியை அளிக்



5, 6, 7, 8-ஆம் ஆண்டு நிறைவு விழாக்களில்

தலைமை வகித்த

ஸ்ரீஜகத் குருபீடம் நியாய சந்திர வேதாந்த பாஸ்கர

ஸ்ரீ மண்டலேஸ்வர

வீரசுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமிகள்.

கும் உகந்ததென்பதாகவும், எருமைகளை வளர்ப்பதிலும் பசுக்களை வளர்ப்பதில் ஆதாய மிருப்பதாகவும், பசுவின் நெய் எருமை நெய்யை விடச் சிறந்ததென்பதாக வும் பல அறிஞர்களின் ஆராய்ச்சியைக் கொண்டு காந்தி அடிகள் (22-2-1935) தேதி ஹரிஜன இதழில் அறிவுரை கூறினர். தூய சிந்தனையும், கூர்ந்த அறிவும் ஏற்பட வேண்டு மானுல் எருமைப் பால் பயன்படுத்துவதை விடுத்துப் பசுவின் பால் உபயோகப்படுத்த வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் பெரியோர்கள் வழிகாட்ட வேண்டும். சென்ற காலத்தில் பசுமடங்கள் ஆங்காங்கு சீரிய முறையில் பயனளித்து வந்தன. அத்தகைய பணி புதுப்பிக்கப்பட வேண்டும். இந் நிலையில் தெய்வ வழிபாட்டு மடங்கள் பசுக்களின் வளர்ப்பில் போதுமான கவனம் செலுத்து மெனில் பல நன்மைகள் பெற இயலும்.

தெய்வச் சூழ்நிலையில் பசுக்களை வளர்க்கப் பொறுப்பேற்றுக் கொள்ளத் தகுதி வாய்ந்த மடங்கள் ஆங்காங்குள்ளன. இத்தகைய சூழ்நிலைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் திரு மடம். இத் திருமடம் அமைந்துள்ள இடம் பட்டீச்சரம். பட்டி என்பது மாட்டுத் தொழுவம். ஒரு பசுவின் கன்றின் குளம்பு பதிந்ததால், ஆங்கிருந்த சிவலிங்கம் தெரிய வந்தது, இவ்வகையில் பட்டீச்சரப் பெருமான் திருக்கோயில் திருப்பேரூரில் எழுந்துள்ளது. இவ்வாறே ஒரு பசு வழக்கமாகப் பால் சொரிந்து வந்த இடத்தில் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் கோகர்ணம் என்னும் கோவில் அமைக்கப்பட்டது. இது புதுக்கோட்டைக்கு அருகில் உள்ளது. வட நாட்டில் உள்ள கோகர்ணத்திற்குவேறுபட்ட தாகும் இத்தலம். திருச்சி மாவட்டம் கரூர் பசுபதிச்சரமும் இது போன்ற வரலாற்றை யுடையதாயுள்ளது. திரு ஆநிலையூர் என்பதான ஊரும் ஆங்குள்ளது. இவ்வுண்மைகளை எல்லாம் நோக்குமிடத்து, பட்டீச்சரத்தில் அமைந்துள்ளதும், கொல்லாமையைப் பற்றி நல்லுபதேசம் செய்து அவ் வகையில் அரிய நூல்கள் இயற்றியருளிய ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் நிறுவியுள்ளதுமாகிய திருமடத்தில் பசு வளர்ப்பு சிறப்பான முறையில் நடைபெறுதல் பொருத்தமாகத் தெரிகிறது. இங்கு இயற்கைச் சூழ்நிலைகள் நன்கு அமைந்துள்ளன. மேய்ச்சலுக்குரிய நிலங்களும், பசுக்கள், தூயநீர் பருகுவதற்கு உரிய நீர்த் துறைகளும், இளைப்பாறுவதற்குத் தேவையான சோலைகளும், தோப்புகளும் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகத் திருமடத்திற்குச் சார்ந்தாற்போற் தொழுவங்கள் அமைக்கத்தக்க இடம் உள்ளது. ஆதலால் பசுக்கள் வளர்ப்பிற்கான உதவிகளையெல்லாம் இத் திருமடம் பெறுவதற்கு தகுதியுடைத்தாக வுள்ளது. தனிப்பட்டவர்களும் தங்கள் தங்கள் பெயரினல் தக்கதொரு பசுவையாகிலும் திருமடத்திற்கு அளித்தலால் பல நன்மை யடையலாம். இத் திட்டம் நிறைவேறு மானுல் இப் பகுதியில் சிவ பூசை புரிவோர்க்குப் பஞ்ச கவ்வியம் எளிய முறையில் கிடைக்கும்; மற்றவர்களுக்குத் தூய திரு நீறு பெறத் தக்க வாய்ப்பு ஏற்படும். தாய்ப் பால் கிடைக்கப் பெருத ஏழைக் குழந்தைகளும் பசுவின் பால் பெறக் கூடிய வாய்ப்புப் பெறும். முனிவர், தபோதனர் முதலிய பெரியோர்களின் தேவைகளையும் ஓரளவிலாயினும் நிறைவேற்ற இயலும்.

பசுவை அன்புடன் அளித்தலால் வரும் புண்ணியத்தையும் அப் பசுவின் பஞ்ச கவ்வியம் கொண்டு பூசிக்கப்படும் சிவலிங்க தரிசனத்தால் கிடைக்கத் தக்க புண்ணியத்தையும் ஒரு மிக்க அடையலாம்.

"தங்கம் கனகமேருவரை தானம்
அளித்தல் ஒரு கோடி
மங்குல் அளகக் கன்னியரை
வளர்த்தளித்தல் ஒரு கோடி
துங்கம் தருகோட்டு வடத்தீம்பால்
சுரபி வழங்கல் துலங்குசிவ
லிங்கந்தனை யேதரிசித் தோர்க்
கெய்தும் பலத்துக் கிணையாமால்"

—சிவபுண்ணியத் தெளிவு.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே."

—திருஞான சம்பந்தர்.

ஞானப் பாலில் வேட்கை

[வித்துவான். வீ. குமாரசாமி ஐயர், மேலூர்]

"ஞானப் பால்" என்றவுடன் சைவ சமயிகளுக்குத் திருஞான சம்பந்தரின் நினைவு எழும். அவர் சைவமும் தமிழும் தழைக்க இவ்வுலகில் அவதரித்த பெருமான். அவர் மூன்றாண்டுப் பிள்ளைப் பருவத்தினரா யிருந்த காலைத் தம் தந்தையாராகிய சிவபாத இருதயர் நீராடச் சென்ற பொழுது உடன் சென்றார். சிவபாத இருதயர் குழந்தையைச் சீகாழிப் பதியிலுள்ள பிரம தீர்த்தக் கரையில் இருக்கச் செய்து குளத்தில் மூழ்கி நீராடினார். குழந்தை தந்தையைக் காணாததால் தோணியப்பர் எழுந்தருளியுள்ள திருக் கோயிலின் சிகரத்தைப் பார்த்து "அம்மே அப்பா" என்று அழ, அக்குழந்தையின் அழு குரல் கேட்ட சிவபெருமான் உமாதேவியுடன் ஆங்கு எழுந்தருளி உமாதேவியை நோக்கி "துணைமுலைகள், பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டு" எனப் பணித்தார். கருணையே வடிவான அம்மையார் பொற்கிண்ணத்தில் தன் நகிலினின்றும் சுரந்த பாலுடன் சிவ ஞானத்தையும் குழைத்து "உண்ணடிசில்" எனக் குழந்தைக்கு ஊட்டி அழுகையைத் தீர்த்தார். நீராடிக் கரையேறிய தந்தையார் குழந்தை பாலருந்தி யிருத்தலை அறிந்து குழந்தையை நோக்கி "யார் கொடுத்த பாலை அருந்தினாய்" என்று அச்சுறுத்தி வினவினார். அப்பொழுது ஞானசம்பந்தர் "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தை யருளித் தோணியப்பரைச் சுட்டிக் காட்டினார். இவ்வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகத்தில்,

"செஞ்சடை வெண் மதியணிந்த
　　சிவனெந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாள்
　　மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி யளவிறந்த
　　ஞானத்தை அமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த
　　போனகமுன் னுகர்ந்தனையே."

என்றருளியுள்ளார்.

இங்ஙனம் அம்மையப்பரால் ஆட்கொள்ளப் பெற்றதாலும் ஞானப் பாலருந்தியதாலும் ஆளுடை பிள்ளையாரெனவும் திருஞான சம்பந்தரெனவும் திருநாமம் பெற்றார். ஞானசம்பந்தராய ஆளுடைய பிள்ளையார் பின்னர் திருத்தலங்கள் தோறும் அடியவர் புடைசூழச் சென்று தேவாரப் பாசுரங்களைப் பாடியருளினார். அங்ஙனம் பாடியருளிய பாடற்றொகை "துன்றிய, பன்னுதமிழ் பதினாயிர நற்பனுவல்" என நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையில் அறிவிக்கின்றார். அப்பாடல்கள் இறைவன் அருளிய மறைமொழியை யொத்த பெருமை யுடையன.

இத்தகு தேவாரப் பாசுரங்களைப் பாட ஏதுவாயிருந்தது ஆளுடைய பிள்ளையார் அருந்திய ஞானப் போனகம். இதனைத் திருத் தொண்டர் புராணத்தின் வாயிலாக உய்த்துணர்ந்த சிவப்பிரகாச அடிகளார்க்கு அத்தகு விழுமிய ஞானப்பால் மீது வேட்கை எழுதல் இயல்பே யன்றோ! அதனை அடிகளார் பெற வேண்டுமென்னும் அவா மிகுதியான் சிவபிரானிடத்தும் உமையம்மையாரிடத்தும் பல்வகையான் பலப்பல முறை பணிவாக விண்ணப்பித்து வேண்டுகின்றார். அவரது வேண்டுகோள் அடிகளாரது செவ்விய மதுரச் செந்தமிழ்ப் பாக்களில் ஆங்காங்கே திகழ்கின்றன. அவற்றை ஈண்டு நோக்குவோம்.

சிவப்பிரகாசர் திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தரிசிக்கச் செல்கின்றார். ஆங்கு எழுந்தருளியுள்ள அம்மையாரின் திருநாமம் உண்ணாமுலையார் என்பதனை அறிந்தார். ஆ! உண்ணா முலையார் என்பதனாலன்றோ ஞானசம்பந்தர் பெருமானுக்குப் பாலைக் கறந்தருத்தினார் போலும் என்று கருதிய அடிகளார்க்கு அப்பாலின் நினைவு எழுந்தது. எழினும் நாம் அம்மையாரது குழந்தையா? இல்லை. ஞானசம்பந்தர் முருகப் பெருமானின் அவதாரமாதலின் தம் பாலை ஈந்தார். அதுவும் பொற் கிண்

ணத்தில் பெய்து அருத்தினர். நம்பொருட்டு அங்ஙனம் செய்வாரா? அப்பேறு பெற்றி லேம். ஆயினும் அருண்மலையாய் விளங்கும் அண்ணமலையாரிடத்து விண்ணப்பித்துக் கொள்வோம் என்று கருதி வேண்டுகின்றார்.

திருவண்ணமலையில் எழுந்தருளியுள்ள பெருமானே! முன்னுளில் சீகாழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தப் பெருமானுக்கு உமாதேவியார் பாலே அருந்திஞரன்றோ? அங்ஙனம் அம்மையார் எனக்குச் செய்யா விடினும் அப்பிள்ளேக்கு அருத்திய பொற் கிண்ணத்தைக் கழுவிய நீர் இருக்குமன்றோ அதனையாவது அடியேனுக்கு வார்க்குமாறு உரைத்தல் வேண்டும். அதுவே எனக்குப் போதும். தாங்கள் செய்ய வேண்டுவது இதுவே எனப் பணிவுடன் வேண்டுகின்றார். இவ் வேண்டுகோளே,

"இழையெனத் தளர்சிற் றிடையுண முலேப் [பால்
எனக்குவண் புகலிவேந் தயின்ற
கழுமணிப் பசும்பொற் குலவுபாற் கிண்ணம்
கழுவுநீர் வார்ப்பதற் குரையாய்"

(சோணசைல மாலே—45.)

என்னும் செய்யுளடிகள் அறிவிக்கின்றன. இவ் வேண்டுகோள் உலகில் பிறர்பால் ஒருத விப் பெற விழைவோர் அவர்க்குரியவ ரைக் கொண்டு அடைய முயலும் பெற்றியை ஒத்திருத்தல் காண்க.

அவ்வாறு வேண்டியும் தம் விழைவு நிறைவேருமையால் அடிகளார்க்கு மற்றோர் எண்ணம் உதித்தது. தேவாரப் பாசுரங் களேப் பாடுதற்குரிய பேற்றினே ஞானப்பால் பெற்றே அடைதல் வேண்டுமென்னும் நியதியில்லே. ஏனெனில், திருநாவுக்கரசருக் குக்கொடிய சூலேநோயைக் கொடுத்தார். அத ஞல் துன்புற்ற நாவுக்கரசர் தேவாரப் பாடல் களேப் பாடினர். ஞானப்பால் பெற்றவரும் சூலே நோய் பெற்றவரும் பாடிய பாடல்களே ஒரு தன்மைத்தாகவே இறைவன் உவப் புடன் ஏற்ருர். உலகோரும் இருவர் பாசு ரங்களேயும் ஏற்றத் தாழ்வின்றிச் சமமாகவே மதிக்கின்றனர். ஆதலின், அதனேயாவது வேண்டிப் பெறுவோம் என்ற கருத்தால்

"பாவுமாம் உமையுண் ணுமுலே (முலேப்பால்
ஈந்து பாடலேச்செயா யெனினும்
மேவுமா துயர்செய் சூலேநோ யெனினும்
விடுத்து நீ பாடுமா றருளாய்"

(சோண சைலமாலே-32)

என்று வேண்டுகின்ருர். இவ்வேண்டுகோள் பன்முறை வேண்டியும் அடிகளார் ஞானப் பால் பெற இயலாமையால் வெறுப்புணர்ச்சி யால் எழுந்ததாம். ஞானப்பாலில் உண் டான வேட்கைத் தணிவால் உண்டான தன்று.

பின்னர், அடிகளார் விருத்தாசலத்திற் குச் செல்கின்ருர். ஆங்கு எழுந்தருளியுள்ள அம்மையின் திருப்பெயர் பெரியநாயகி என் பது. அவ்வம்மையாரை யணுகி, பெரியம் மையே! உள்ளத்தே பிறவிதோறும் நீங்கா காமல் பிணிப்புண்டிருக்கும் அஞ்ஞானமா கிய நோயையுடைய அடியேனுக்கு அதனேப் போக்கும் பொருட்டு மருந்திற்காக உன்பால் வந்து மெள்ளத் தொழுது வணங்கவும் நின் திருமுலேப்பாலே நினது மெல்லிய விரல் நுதி யால் தெள்ளி மிகச்சிறிய துளியளவாயி னும் தொட்டு என் மீது தெறித்திலே. அங்ஙனமிருக்க உன் பிள்ளேயாகிய ஞான சம்பந்தருக்கும் நின் கரத்துள்ள கிள்ளேக் கும் அவ்வரிய பாலேக் கொடுத்ததால் என்? என்று வினவும் முறையில்,

"உள்ளத் துறுபிணி யேற்கு
மருந்துக்கென் றுன்னேவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலேப்
பால்மெல் விரல்நுதியால்
தெள்ளித் துளியள வாயினுந்
தொட்டுத் தெறித்திலேயுன்
பிள்ளேக்குங் கிள்ளேக்கும் பால்கொடுத்
தாலென் பெரியம்மையே!

(பெரியநாயகியம்மை கலித்துறை-15)

என்ற பாடலேப் பாடியுள்ளார். அடிகளாரது பாடலின் நயத்தைக் காண்போம்.

அடியேன் பெற்றிருப்பது புறவுறுப்புக் களினுள்ள நோயன்று. அவ்வாறிருப்பின் வேறு மருந்துகளால் போக்கிக்கொள்ளுதல் கூடும். யான் பெற்றிருப்பதோ உள்ளத்தே

பற்றிய நோய். அந்நோய் வேறொன்றால் தீர்க்கப்படாதது; உன் கருணையாலேயே போக்கத்தக்கது என்பார். "உள்ளத்துறுபிணி" என்றார். பிறர்க்கு மருத்துவம் செய்ய வேண்டிலேன் நின் அடியவனாகிய எனக்கே என்பார் 'எற்கு' என்றார். மருந்துக்கெனின் எவற்றையும் உலகோர் மறுது அளிப்பராதலின் 'மருந்துக்கு' என்றார். பிறர் மூலமாக வினவிப் பெறுது உன்னை நேரில் தரிசித்து அச்சத்துடன் வேண்டுகின்றேனென்பார் "உன்னை வந்து மெள்ளத் தொழவும்" என்றார். ஏனையவற்றைப் பெறுவது போலத் தாய்மாரிடத்து நகிலின்பாலை வினவிப் பெறுதல் அரிதாதலானும் ஞானத்தைப் பயக்கும் பெருமையுடைமையானும் "திருமுலைப்பால்" என்றார். யான் வேண்டுவது சிறிதளவே என்பார் "மெல் விரனுதியால்" என்றார். அடியேனுக்கு ஞானப்பாலை அருத்துதல் செய்யாவிடினும் என் மீது துளியளவு தெறித்தல் கூடாதா என்பார் "துளியளவாயினும் தொட்டுத் தெறித்திலை" என்றார். அகத்துறு நோயால் அல்லலுறும் அடியேனுக்கு இரங்கியளிக்காமல் நின் பிள்ளைக்கும் கிள்ளைக்கும் கொடுத்ததால் ஆவதென் என்பார் "பிள்ளைக்கும் கிள்ளைக்கும் பால் கொடுத்தாலென்" என்றார்.

இன்னோரன்ன பொருணயந் தோன்ற இப்பாசுரத்தால் அம்மையை வினவித் தாம் விரும்பிய பொருளையடைய விழைகின்றார் என்பதைக் காண்க.

பின்னர் அடிகளார் திருவெங்கை நகரில் கோயில் கொண்டுள்ள பழமலை நாதரைத் தரிசிக்கச் செல்கின்றார். ஆங்குச் சென்ற அடிளார்க்குச் சிவபெருமானுடைய திருத்தொண்டர் குழாத்துள் ஒருவராகச் சார்தல் வேண்டுமென்ற பெருவிழைவு உண்டாயிற்று. அதனை எங்ஙனம் பெறுதல் கூடுமென்று எண்ணுவாராயினர். அகப்பற்று புறப்பற்று அற்றவர்களே சிவபெருமானுடைய தொண்டராவர். பற்று ஐம்புலன்களால் உண்டாகின்றது. ஆதலின், ஐம்புலன்களை யடக்குதல் வேண்டும். புலனடக்கம் மெய்யறிவானுண்டாம். அம்மெய்யறிவினை அடைதல் எங்ஙனம்? என்று கருதிய அடிகளார்,

திருவெங்கை நகரில் வீற்றிருக்கும் பழமலைநாதரே! கருணை நிரம்பிய நின்பிராட்டியாராகிய பெரிய நாயகியம்மையார் தன் நகிலினின்றும் சுரந்த பாலை ஊட்டிய காலத்து ஞானசம்பந்தருடைய கடைவாயினின்றும் ஒழுகிய பாலுண்டே? அதில் ஒரு திவலையாயினும் அடியேனுக்கு முற்பிறவியிற் செய்த புண்ணியத்தின் பயனாகக் கிடைக்கப்பெற்றால் உன் அடியவர் குழாத்துள் ஒருவனாகத் தங்குவன்; அங்ஙனம் கிடைக்கப் பெற்றிலேன்! என இரங்கி வேண்டும் முகமாக,

"தேக்குறு கருணைப் பெரியநா யகிதன்
திருமுலை சுரந்தபான் மதுர
வாக்குறும் அழகன் ஞானசம் பந்த
வள்ளலுண் டடஅவன் கடைவாய்ப்
போக்குற ஒழுகுந் திவலையொன் றடியேன்
புண்ணிய வசத்தினுல் கிடைப்பின்
தாக்குறு புலன்வென் றுன்னடி யவருள்
தங்குவன் வெங்கைகா வலனே"
(திருவெங்கைக் கலம்பகம். செய்-61)

என்னும் பாசுரத்தை அருளுகின்றார்!

இங்ஙனம் சிவப்பிரகாச அடிகளார் சிவ பிரானிடத்தும் உமையம்மையாரிடத்தும் ஞானப்பால் பெற வேண்டிக்கொள்ளும் பாசுரங்களால் திருஞான சம்பந்தரின் பெருமையையும் ஞானசம்பந்தரிடத்துத் தாம் கொண்டுள்ளள பேரன்பினையும் அரியச் செய்கின்றார். உலகினர் இறைவனை நோக்கி இம்மைப் பயன்கருதி மகப்பேறும் பொன்னும் பொருளும் போகமும் வேண்டுவது போல் வேண்டாது வீடுபேறு ஒன்றையே கருதி அதற்கு ஏதுவாகிய ஞானத்தை அம்மையப்பரிடம் பெற வேண்டித் தொழுகின்றார் என்பதை அறிவோமாக.

*

பொது நிலை

[கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர், சைவ சித்தாந்த வித்தகர்,
வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.]

பொது நிலை என்றால் இரண்டு மாறுபட்ட பொருள்களும் அவற்றிற்கு நடுநிற்கும் மற்றொரு பொருளுமென முப்பொருள் பற்றிய ஒரு கொள்கையாகும். வள்ளுவர் சமன்செய்து சீர்தூக்கும் கோலைப் பொது நிலைக்கு உபமானம் காட்டுகிறார். அதாவது மாறுபட்ட இரண்டு தராசுத் தட்டுகள், அவற்றில் சீர்தூக்கிக் காட்டும் கோல், ஆக முப்பொருளைப் பற்றி "சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்தொரு பால் கோடாமை சான்றோர்க்கணி" என்பது அவர் கூற்று.

இனி பொது என்ற சொல், சபை, மன்று என்ற பொருளையும் குறிக்குமாதலால் அது தில்லையம் பலத்தையும் அதன் கண் நடம் நவில் இறைவன் நிலையினையும் பொது நிலையெனக் குறித்ததென்னலாம். ஆயின் மாறுபட்ட வேறு இரண்டு நிலை வேண்டுமே. இன்றேல் பொது நிலை என்றல் எங்ஙன் பொருந்துமெனின் தில்லையம் பலத்தின் கண்ணும் மாறுபட்ட இரண்டு தானங்கள் உண்டு என்கிறார் ஒருவர். அவர் யார்? நமது மணிவாசகப் பெருந்தகையே. அவ்விருவருள் ஒருவர் சிவகாம சுந்தரி. மற்றவர் காளி. அம்பிகை, அருளையே நோக்கி நடன அமுதம் பருகித் திளைக்க இறைவனைப் பணிந்து நின்றாள். காளியோ தருக்கு மிகுந்து தன் தோள்வலியுன்னி இறைவனைப் பொருட்படுத்தாது வாது ஆடலுக்கு அறை கூவி நின்றாள். அவளையடக்கவேண்டியது எம்பெருமானுடைய கடமையாயிற்று. இன்றேல் 'தரணியெல்லாம் ஊன் புக்க வேற் காளி கூட்டங்காண் சாழலோ" என்ற படி உலகம் அழியும். இவ்விருவர்க்கும் அருள் புரிந்தான் இறைவன். (அருள்-கருணை) முதல்வர்க்குப் புரிந்தது அறக்கருணை. அடுத்தவர்க்கும் புரிந்தது மறக்கருணை. அவரைத் தோற்கச் செய்து கருணைபுரிந்தமையால் மறக்கருணையாயிற்று. இவ்வகையால் மாறுபட்ட இருவர்க்கும் இறைவன் அருள் புரிந்த நிலை பொது நிலையாயிற்று. அறம். மறம் இரண்டையும் நீக்கிக் கருணைப் பொதுவாந் தன்மையைக் காண்க. இதை நானாகச் சொல்லவில்லை. அவ்வடிகளாரே கூறுகின்றார். அது,

"பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையோடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன்"

என்பதாம்.

இங்கே நான் சொல்லியதே கருத்து என்பதை அறிக. கனிதரு செவ்வாய் உமைக்கும் காளிக்கும் ஒப்ப நமது கூத்தப் பெருமாள் தமது திருமுகத்தின் அழகுறு புன்னகையை அருளினன் என்பது இவ்வடிகளின் கருத்து.

இவ்வாறே இறைவன் பொது நிலையாய் நின்றமை, பல இடங்களில் காணக்கிடக்கின்றது. நகைச்சுவையோடு காட்சியளிக்கும் ஓர் இடத்தைக் காண்போம். கயிலைமலை: அத்தாணி மண்டபம்: சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இடதுபுறத்தில் உமாதேவியாரும், வலப்புறத்தில் நங்கை உருக்கொண்ட கங்கையும் அதே ஆசனத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். இவ்விருவருக்கும் சக்களத்திப் போராட்டம் தொடங்குகிறது. உமாதேவியார், எமது பெருமான் புரிந்த வீரட்டங்களுள் காமதகனமே முதற் கண் நிகழ்ந்தது என்கின்றனர். எதிரிலிருந்த கங்காதேவியோ "போ, போ, அவர் காமதகனம் பண்ணியபொழுது நீ எங்கிருந்தாய் நான் அல்லவோ தலையில் இருந்து அறிந்தேன். ஆதலில் காலசம்காரமே முதலாக நிகழ்ந்தது. அதன்பின்தான் காமதகனம்." என்று கையை அறைந்து கூறுகிறாள். இவ்வாறே இருவர்க்கும் வாக்குவாதம் அதிகரிக்கிறது. இவ்விருவர் பக்கங்களிலும் இருக்கும் அவர்கள் தோழிகளும் அஞ்சுகின்றனர். அவருள் சிலர் அவர்கள் முன்வந்து "அன்னைமீர்! பூசல் எதன் பொருட்டு? இதோ அவ்வீரத்தைச் செய்த ஐயர் இங்கே உள்ளார். அவரையே கேட்போமே. உள்ளது புலப்படுகிறது. உங்கள் வாதமும் ஒழியுமே" என்று அச்சேடியருள் ஒருத்தி

அவ்விருவரையும் சமாதானம் செய்து பொது நிலையில் நிற்கும் ஐயர் (சிவபெருமான்) முன்வந்து அடிதொழுது, "ஆண்டவரே! உமக்குத் தெரியுமே. இவ்விரு வீரங்களுள் எது முன்னிகழ்ந்தது, சொல்லியருளுங்கள் என வேண்டுகிறார்" இந்த இடத்திலும் ஐயர் நிற்கும் நிலை பொது நிலையே. பொது நிலை என்றால் தராசு போன்ற பொது நிலையன்று. அவ்விருவருள் வெற்றி, தோல்வி, ஒருவருக்கும் நிகழாவண்ணம் மௌனம் சாதித்த நிலையேயாம். இக் காட்சி தருபவர் நமது சேரமான் பெருமாள்.

காமனை முன்செற்ற தென்றா
  ளவளிவள் காலின்என்னும்
தாமநன் மார்பனை முன்செற்ற
  தென்றுதன் கையெறிந்தாள்
நாமுனஞ் செற்றதன் றுரையென்
  றேற்கிரு வர்க்கும் அஞ்சி
யாமெனக் கிற்றில ரன்றெனக்
  கிற்றிலர் அந்தணரே.

இனி, சேக்கிழார் பெருமான் பொது நிலைக் காட்சி ஒன்று தருகின்றார். திருவொற்றியூர் எழுத்தறியும் பெருமான் கோயில் வாயில் எதிரே ஒருவர் குறையிரந்து நிற்கின்றார். இவர் யார்? இவர்தான் வன்றொண்டப் பெருந்தகை. முதல்வர் சாத்துப்-பணி கொடுத்து மின்போல் மறையும் சங்கிலியாரைக் கண்டு உளங்கொடுத்த அன்பர், இவர் கடவுள்பால் என்ன வேண்டுகிறார்? தமது உளங்கவர்ந்த அணங்கினை மணம் செய்விக்க வேண்டுகிறார். அவர் எண்ணத்தை நிறைவேற்ற வாக்களித்துச் சங்கிலியார் பால் கனவில் தோன்றி

"சாருந் தவத்துச் சங்கிலிகேள்
  சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட
  தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள
  உரியான் உன்னை எனைஇரந்தான்
வார்கொள் முலையாய் நீயவனை
  மணத்தால் அணைவாய் மகிழ்ந்து"

என்கின்றார். அதை அறிந்த சங்கிலியார் 'அவர் என்னைப் பிரியேன்' என்று சத்தியம் பண்ணித் தருவாரேல் இசைவேன் என்கிறார். இங்குத்தான் இறைவன் பொது நிலைக் காட்சிதருகிறது. தலங்கள் தோறும் சென்று தரிசிக்கும் ஆரூரர் பிரியாமல் இருக்கமுடியுமா? அல்லது அடியார் கூட்டத்தோடு மனைவியையும் அழைத்துச் செல்ல முடியா? ஆக இவர் 'பிரியேன்' என்று சத்தியம் பண்ணித் தரமுடியாது. இவ்வாறு சத்தியம் பண்ணித் தராவிட்டால் இவரை மணந்துகொள்ள முடியாது. மாறுபட்ட இரண்டு பாத்திரங்கள் சுந்தரரும் சங்கிலியாரும். நடுநிலை அல்லது பொது நிலை வகிப்பவர் ஆண்டவர். சுந்தரரிடம் வருகிறார். பிரியேன் என்று சத்தியம் பண்ணித்தரமுடியுமா? வினா. தேவரீருக்குத் தெரியாதா? விடை.

ஆயின் தேவரீரை வேண்டுவது என் மணம் முடியும் நிமித்தம் நான் சத்தியம் பண்ணித்தரும் பொழுது இங்கு ஆலயத்தில் இல்லாமல் அருகிலுள்ள மகிழ மரத்தடியில் இருக்கவேண்டுமென்கிறார். அதற்கு உடன்படுகிறார் பொது நிலைமையாளர். எப்படித் தமது பொது நிலையைப் பாதுகாத்துக் கொள்கிறார். சங்கிலியாரிடம் சொல்கிறார்; நாளை வைகறை ஆரூரன் நமது முன்னுகை உங்களுக்குச் சத்தியம் செய்து கொடுக்க வருவான். அது சமயம் நாம் ஆலயத்துள் இரோம் மகிழ் அடியில் இருப்போம். ஏழையின் பொருட்டுச் சிவன் திருமுன் சத்தியம் வேண்டாம். இந்த மகிழ் அடியில் நின்று சத்தியம் செய்தலே போதும் எனக் கேளுங்கள் என்கிறார். இது சேக்கிழார் காட்டும் பொது நிலை.

இனிச் சாத்திரம் காட்டும் பொதுநிலைக் காட்சி ஒன்று காட்டி இக்கட்டுரையை இனிது முடிக்கின்றேன். ஒளியுடைய பொருள் ஒன்று. இருளுடைய பொருள் மற்றொன்று. ஒளிப் பொருள் பதி. இருட் பொருள் பாசம்! பொதுநிலைப் பொருள் பசு. ஒளி இருளை யறியாது. இருள் ஒளியை அறியாது. பசுப்பொருள் இரண்டையும் அறியும். அது ஒளியைச் சார்ந்தபொழுது இருளாயும் நிற்கும். எனவே பொது நிலையில் நிற்கும் ஆன்மா இருளைச் சார்ந்து இருளாய்விடாமல் ஒளியைச் சேர்ந்து ஒளிப் பொருளாவதாகுக.

இதுகாறுங் கூறியவற்றால் பொது நிலைக்கு வள்ளுவர் இலக்கணமும், வாதவூரடிகள் சேரமான் பெருமாள், சேக்கிழார் பெருமான் இவர்கள் காட்டும் பொதுநிலைக் காட்சியும் சாத்திரத்தில் அறியக்கிடக்கும் பொது நிலையும் ஆகிய இவற்றை ஒருவாறு பெற்றாம்.

குமர குருபர முனிவரின் விண்ணப்பச் சாதுரியம்.

(திரு. சி. சு. கண்ணுயிரம், B. A., கோயமுத்தூர்.)

குமர குருபரமுனிவர் பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சைவப்பெரும் புலவர். தமிழ் இலக்கியத்திலும் சைவ உலகத்திலும் தனக்காக ஓர் நிலையான இடம் தேடிக் கொண்ட சிறப்பினர். இவர் பாண்டிநாட்டிலே பிறந்து வளர்ந்து புலமையெய்திச் சோழநாட்டிலே குருவையடைந்து துறவுபூண்டு வட நாட்டிலே தங்கிச் சைவம் வளர்த்த பெருந்தகையாளர். கொங்குநாட்டுத் திருப்பேரூரில் திருமடம் நிறுவிச் சிவநெறி துலக்கிய சாந்தலிங்கப் பெருமானின் பூர்வாசிரம மைத்துனர். துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவரின் ஆசிரியரான வெள்ளியம்பலத் தம்பிரானுக்கு ஆசிரியராகத் திகழ்ந்தவர். ஆகலின் கொங்கு நாட்டினரும் உரிமை கொண்டாடக் கூடிய பெருமையர்.

இம்முனிவர் இயற்றிய பிரபந்தங்களாக இப்பொழுது நாம் அறிந்தவை (1) கந்தர்கலிவெண்பா (2) மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் (3) மதுரைக்கலம்பகம் (4) நீதிநெறிவிளக்கம் (5) திருவாரூர் நான்மணிமாலை (6) முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ் (7) சிதம்பர மும்மணிக்கோவை. (8) சிதம்பரச் செய்யுட்கோவை (9) பண்டாரமும்மணிக் கோவை (10) காசிக்கலம்பகம் (11) சகலகலாவல்லிமாலை (12) கைலைக் கலம்பகம் (13) காசித் துண்டி விநாயகர் பதிகம் என்னும் பதின்மூன்ருகும். இவற்றுள் இறுதி இரண்டு நூல்களும் அச்சேருது இறந் தொழிந்தன. இவையன்றி மீனுட்சி யம்மை இரட்டை மணிமாலை, மீனுட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை எனும் மூன்று பிரபந்தங்களும் இம் முனிவர் பெயரில் உலவிவருகின்றன. ஆனல் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். மகாமகோபாத்தியாய—டாக்டர். உ. வே சாமிநாதையர் போன்ற பெருமக்கள் இவற்றைக் குமரகுருபர முனிவரின் நூல்களாகக் கருது வதில்லை.

தமிழில் உள்ள ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம் ஆகிய நான்கு கவிவகைகளுள் இம் முனிவரின் பாடல்களை மதுர கவி என்றபிரிவில் சேர்க்கலாம் என்று யான் கருதுவதுண்டு. கற்கண்டின் துண்டு ஒன்றை நாவி லிட்டுச்சுவைத்தால் அது கரையக்கரைய இனியசுவை பயந்து கொண்டே வந்து இறுதியில் முழுதும் கரைந்து மறைந்த பின்பும் நெடுநேரம் நாவில் இனிப்பு நிற்பதுபோல இவரது செய்யுட்கள் படித்துப் படித்துச் சிந்திக்கும் தோறும் இன்பம் பயந்து படித்து முடித்தபின்பும் நெடுங்காலம் நினைவைப் பிணித்து நின்று மகிழ்ச்சி யூட்டுவதாம். இவர் காட்டும் இயற்கை எழில்கள், அணி நலன்கள், தொனிவகைகள், சமத்காரங்கள், கற்பனைகள் ஆகியவற்றை ஆராயப்புகின் அவை பல பெருநூல்களாக வடிவெடுக்கும். ஈண்டு நாம் இம்முனிவர் விண்ணப்பம் செய்வதில் வெளிப்படுத்தும் சாதுரியங்களை மட்டும் சிறிது காண்போம்.

இவர் ஒரு பொருளை அடைய வேண்டி விண்ணப்பிக்கு முன்பு விண்ணப்பிக்கும் பொருளையும் யாரிடம் விண்ணப்பிக்கின்ருரோ அவரது இயல்புகளையும் நன்கு ஆராய்ந்து முடிவுசெய்து கொள்வர். பின்னர் விண்ணப்பத்திற்கான சொற்கள் வெளிவரும். அவை ;

''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல்
அச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து''

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாக அமைந்து விண்ணப்பம் பெறுபவர்க்கு விண்ணப்பித்த பொருளை அருள்வதன்றி வேறு வழி இல்லாத நிலையைச் செய்து விடும். அவற்றை இனிக்காண்போம்.

இறைவனும், அவனையடைந்துய்ய வேண்டிய ஆன்மாக்களும் அவனை ஆன்மாக்கள் அடையாமல் தடுக்கும் மலங்களும் அநாதியானவை என்பது சைவ

சித்தாந்த சமயம் காட்டும் முடிவு. மலங்கள், ஆணவம், கன்மம், மாயை என மூன்ரும். இவை ஆன்மாக்களைப்பிணித்து இருள்மயமான அறியாமையில் அவற்றை அமிழ்த்து நிற்பன. ஆகலின் ஆன்மாக்கள் தாமே இறைவனைத் தேடியமையும் திறனற்றவை. அவற்றின் மீதுள்ள பேரருளினுல் மலத்தளையினின்றும் அவற்றை நீக்கி உய்விக்கும் பொருட்டு இறைவனே ஆன்மாக்களைத்தேடிவந்து அவற்றின் பக்குவத்திற் கேற்றவாறு அருள்புரிவன். ஆணவமலம் மட்டும் உடைய ஆன்மாக்களின் உள்ளத்தினுள்ளே இருந்து தனிமையில் உணர்த்தி அருள் செய்வன். ஆணவம் கன்மம் ஆகிய இருமலங்களையும் உடைய உயிர்களுக்கு இறைவன் மான் மழுத்தாங்கி, பிறைமுடி, நெற்றிக்கண், நீலகண்டம், சதுர்ப்புயங்கள், ஆகிய கோலத்தில் எதிரில் தோன்றி முன்னிலையில் அருள் புரிவன். மும்மலத்தார்க்கு குருவடிவில் மானிடச்சட்டை, தாங்கிவந்து, படர்க்கையில் அருளுவன். ஆதலின் குருவை மனிதராகக் கொள்ளாது சிவபெருமானுகவே கொள்ளல் வேண்டும் என்பது மரபு. குமரகுருபரமுனிவரும்தனது குருவாகிய மாசிலாமணித் தேசிகர் அவர்களை இறைவனுகவே கொண்டார். அவரை நோக்கி விண்ணப்பிப்பதைப் பாருங்கள். "இன்று நான் உன் சந்நிதியில் உள்ளேன். எனக்கு நீ அருளலாம், அல்லது நான் பக்குவம் எய்தாதவன் என்று அருளாது விட்டு விடலாம். மும்மலப் பிணிப்பில் பட்டுள்ள யான் உன்னைத்தேடியடைந்திருக்கமுடியாது. இன்று நான் உன் திருமுன் உள்ளேன் என்ருல் அது எனக்கு அருள்புரிய நீயே கைலையை நீத்து இங்கு வந்ததனுலேயேயாம். நான் பக்குவம் எய்தியவனுக இருந்தால் தானே நீ எனக்காகக் கைலையைவிட்டுப் புறப்பட்டிருக்கவேண்டும். இங்கு வந்தபின்பு நான் பக்குவமற்றவன் என்று கண்டேன் என்பாயானுல் உன் முற்றறிவுடைமைக்கு அஃது இழுக்காமன்ரூே? கதிரவனின்முன் இருள் வந்து விட்டால் அது பிறகு இருளாக இருக்க முடியாதே! ஒளி வெண்மையாக மாறித்தானே ஆகும். உன் சந்நிதியில் வந்து விட்டபின் நான் பக்குவமற்றவனுக இருந்தாலும் உடனே பக்குவம் பெற்றவனுய்மாற்றி விடவேண்டு மன்ரூே? இல்லாடிவில் உன் சந்நிதியின் வரம் பிலாற்றலுடைமைக்கன்ரூே குறைவு ஏற்படும். ஆதலின் எனக்குக் கதியருளுவதே ஒன்றே உனக்குள்ளவழி". என்று முடிக்கின்ருர்.

"அவமாசி லாமனத்தார்க் காருயிரா ஞனேற்
பவமாசி லாமணிச்சம் பந்தா—தவமார்
தநியருளத் தானேநின் சந்நிதிப்பட் டேற்குக்
கதியருளத் தானே கடன்"

(—பண்டார மும்மணிக்கோவை-6)

இனி மற்ெருரு விண்ணப்பம்: "குருநாதனே! உடல் சிலிர்த்து, ஆனந்தக் கண்ணீர் பொழிய, மொழி தடுமாறி, அன்பினுல் அலைப்புண்டு, உன் திரு முன்னர் வரும் சத்திநி பாதர்களுக்கு நீ அருள் புரிதல் ஓர் வியப்பன்று. ஒரு சிறிதும் தவம் புரியாத பக்குவமற்ற பேதைகளுக்கு அருள் புரியின் அஃதன்ரூே வியப்பாகும்? தில்லையில் அன்று மணிவாசகப் பெருமான் முன்பு சமய வாதம் புரியப் பௌத்தர்கள் கூடினர். அச் சபையில் கல்வி கேள்விகளில் வல்ல நல்லோர் பலரிருந்தனர். அவர்களுள் யாரையேனும் ஒருவரை மணிவாசகப் பெருமான் ஏவிப் பௌத்தர்களுடன் வாதம் புரிவித்திருக்கலாமே? ஆனுல் அவர் ஒன்றுக்கும் பற்ருதவளும் "கையினுற் சொலக் கண்களாற் கேட்டிடும் ஓர் ஊமைச் சிறுமியை யன்ரூே அப்பணிக்குத் தேர்ந்தெடுத்தார்? அவரோ வாசகத்தில் மணி! நீயோ மாசிலாமணி!! நீயும் அவரைப் போல உன் சந்நிதியில் ஓர் அற்புதம் நிகழ்த்தலாமே! பக்குவம் அடையாதவனும், தவமில்லாதவனுமான பேதை ஒருவனுக்கு அருள் புரியின் அதனுல் உலகர் உன் திருமுன் சிறப்பினுல் அருள் பெருதவர் யாரும் இலர் என்று வியப்பரே. இதைக் காணவே வெகு ஆசை. இதற்காக நீ பக்குவமற்ற பேதை ஒருவனைத் தேடி வேறு எங்கும் போக வேண்டாம். இதோ நான் இருக்கிறேன் என்கின்ருர்.

தவத்திரு ஞானியார் அடிகள்
ஒன்பதாம் ஆண்டு விழாவின் தலைவர்

பண்டித, அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்
சங்கத்தின் முதல் செயலாளர்.

மணம்பூண்டி,
திரு. குமாரசாமி பிள்ளை
அவர்கள்

பண்டிதமணி,
திரு. மு. கதிரேசன் செட்டியார்
அவர்கள்

பெருஞ் சொல் விளக்கனார்,
திரு. அ. மு. சரவண முதலியார்
அவர்கள்

நாவலர்,
திரு. சோமசுந்தர பாரதியார்
அவர்கள்

" மாசி லாமணித் தேசிக ராய
சாற்றுவன் கேண்மதி மாற்றமொன் றுளதே
மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார
மொழிதடு மாற வுழுவலன் பலைப்பச்
சத்திநி பாதத் தன்மைவந் தடைந்தோர்க்
கப்பொருள் புரிதற் கதுபொழு தாகலின்
மெய்ப்பொரு ளுணர்த்துதல் வியப்பெனப்
படாதே
சொற்றமிழ் விரகன் றுணைக்கண் சாத்த
முற்றுணர் கேள்வியர் பற்பல ராயினும்
கைசொலக் கேட்கும் கட்செவி மூங்கைக்
குய்வகை புணர்த்த தொருவியப் பாகலின்
அன்னது கடுப்பநின் சந்நிதி விசேடத்
தின்னருள் பெருதவர் யாவரு மிலரென
வியப்புள தாக நயப்பதொன் றுளதே
அணையதீங் கென்னென வினவுதி
யாலெனிற்
கதலித் தண்டிற் பொதிதழற் கொளீஇப்
பற்று திருப்பினும் பைப்பைய மூட்டுபு
மற்றெரு சூழ்ச்சியிற் பற்றுவித் தாலென
ஒருசிறி தெனினும் பருவமின் றுயினும்
பவவிரு டுரந்தருள் பதியத்
தவமில் பேதையேன் றனக்கருள் வதுவே "

(—பண்டார மும்மணிக் கோவை-17)

இனி வேறொரு விண்ணப்பம். "ஆசாரிய மூர்த்தியே!" அடியவர்களுக்கு அருள் புரிவதற்காகச் சில விதிமுறைகளை வகுத்துள்ளோம். அதன்படி பக்குவமுடையார்க்கு உரிய காலத்தில் தானே அருள் புரிய முடியும்? இன்னும் அந்நிலையெய்தாத உனக்கு எப்படி விதியினின்றும் வழுவி அருள்வது எனின்; நீயோ உனக்கு மேல் வேறு ஒரு தலைவன் இல்லாதவன். விதிகளோ நீ வகுத்தவை. அவற்றினின்றும் நீ வழுவினுல் அதுபற்றி உன்னைக் கேட்பவர் யாருளர்? முன்பும் நீ மார்க்கண்டேயர்க்கு பதினுறு ஆண்டுகளே ஆயுளாக விதித்தனை. ஆனுல் அவ்வாயுள் எல்லையில் அவர் உயிர் கவரவந்த மறலியைக் கொன்று அவர்க்கு மரணமிலாப் பெருவாழ்வு அளித்தாய். இது விதியினின்றும் வழுவியதாயினும் அதுபற்றி உன்னை யார் கேட்டார்கள்? இம்மாதிரி மீண்டும் ஒருமுறை என் பொருட்டு விதிக்குப்புறம்பாக அருள் புரிவதன் மூலம் உன் தனித் தலைமையை நிலை நாட்டலாமே!

" ஈதியா லின்னரு ளின்னண மெனக்கே
சமையந் தீர்ந்த தனிப்பொரு டெரித்தற்
கமையந் தேர்கலை யருளிதி யாயினும்
எண்ணீ ராண்டைக் கிலக்கமிட் டிருந்த
அண்ணலங் குமரற் காருயிர் தோற்ற
கடாவிடை யூர்திபாற் கண்டும்
அடாதென மொழிகுநா ரார்கொன்மற்
றுனையே "

(—பண்டார மும்மணிக் கோவை-20)

முடிவாக இன்னும் ஒரு விண்ணப்பம் காண்போம். ஆரூரில் பிறக்க முத்தி, அருணையை நினைக்க முத்தி, தில்லையைத் தரிசிக்க முத்தி, காசியில் இறக்க முத்தி என்று சுருதி கூறுகின்றது. எத்துணைப் பக்குவம் இல்லாதவனுயிருப்பினும் யான் தில்லைக்கு வந்து உன் திருக்கூத்தையும் தரிசித்து விட்டேன். இனி நீ எனக்கு வீடுபேறு அளிக்காவிடினும் எனக்குக் கவலையில்லை. நீ என்று முதல் உள்ளாயோ அன்று முதல் நானும் உள்ளேன். இதுவரை எத்தனையோ பிறவிகள் எடுத்துவிட்டேன். கல்லாகப் பிறந்து, தாவரங்களாகவும், புழு முதலியவாகவும் படிப்படி உயர் பிறப்பில் வந்து இம் மனிதப் பிறப்பு அடைந்தேன். இதுவரை எடுத்த பிறவிகளை நோக்கின் இனி நான் எடுக்கும் பிறப்புக்கள் குறைவாகவே இருக்கும். இன்று நீ அருளா விட்டாலும் இத்தனை பிறவிகள் எடுத்த எனக்கு இன்னும் சில பிறவிகளை எய்தி வீடடைதல் ஒரு பொருட்டன்று. ஆனுல் தில்லையில் உன் கூத்தைத் தரிசித்த நான் வீடடையாமல் மீண்டும் பிறந்து உழன்றுல் தில்லைத் தரிசனம் வீடுதரும் என்ற சுருதி மொழியும் பொய்யோ என்று இமையாது விழித்த இமையோரிற் சிலரும் அஞ்சுவர். ஆதலின் அவர் தம் அச்சம் நீங்கவும் சுருதி மொழி பொய்யாகாமலும் இருக்கும் பொருட்டு எனக்கு வீடருள்வாயாக!

"... ... ... புலியூர்க் கிழவநின்
பொன்னடிக் கொன்றிது
பன்னுவன் கேண்மதி
என்றுநீ யுனைமற்றன்றே யானுளேன்
அன்று தொட் டின்றுகா
றலமரு பிறப்பிற்கு
வெருவர லுற்றில னன்றே யொருதுயர்
உற்றுழி யுற்றுழி யுணர்வதை யல்லதை
முற்று நோக்க முதுக்குறை வின்மையின்
முன்னீர் நீந்திப் போந்தவன் பின்னர்ச்
சின்னீர்க் கழிநீத் தஞ்சா னின்னும்
எத்துணைச் சனன மெய்தினு மெய்துக
அத்தமற் றதனுக் கஞ்சல னியானே
இமையாது விழித்த வமரரிற் சிலரென்
பரிபாக மின்மை நோக்கார் கோலத்
திருநடங் கும்பிட்
டொருவனுய்ந் திலனுற்
சுருதியு முண்மை சொல்லா
கொல்லென
வறிதே யஞ்சுவ ரஞ்சாது
சிறியேற் கருளுதி செல்கதிச்
செலவே.''

(—சிதம்பர மும்மணிக்கோவை-20)

✳

கொலை மறுத்தல்

காதறு முருவிதுவான் பறத்தலின்றுங்
கதற்கியல்பாக் காண்டலானும்
போதுறை வோனுதியர்கண் முகமாதி
கனவிலியாம் பொருந்தாதானு
மோதுநினை வலவுணர்வாருயிர்க் குணமிவ்
வுடல்பிணத் தொன்றுணரக்காணே
வாதமுளதிலை யுறக்கத் துணர்வுணர்வ
துயிரெனக் கொண்மதித்தே சில்லோய்.

வைராக்கிய சதகம்

போற்றிநீரணிங் துருத்திரசாதனம் பூண்டிடைந் தெழுத்துள்ளே
சாற்றுநீ குருவாதிமூ வுருவையுந் தாழ்ந்திறைஞ் சிவைசெய்தான்
மாற்றலாம் பிறப்பிறப்பினை நெஞ்சமே மன்றுளாடிய தாளுந்
தோற்று முள்ளொளிக் குள்ளொளியாயதைத் தொழுதுவாழ் தலுமாமே.

வைராக்கிய தீபம்

விடையதூ ரிறையே தாதைமற்றவன்பான் மின்னெமதன்னை யன்னவரை
கடையரே மறந்து துறந்துதானன்றே கடும்பவவிடும்பை யுற்றனமிவ்
வடைவுணர்ந்திலை போன்றுடலிதற்கேது வாய்வரத் தாய்பிதா வெனநெஞ்
சடைவுருநின்றுய் பவந்தொறிவ் வணமுற்றுளவுயிர்க் களவியா துரையே.

அவிரோதவுந்தியார்

ஆயிழையார் பாலுண்டைம்புல வேட்கையு
நீவிரும்பிற் கேடென் றுந்திபற
நெஞ்சமே சொல்வதென் றுந்திபற.

—அருட்டிரு சாந்தலிங்க அடிகளார்

ஊர்ப் பெயர்கள்

[வரலாற்றுச் சிறப்புடையவை]

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

முன்னுரை

தமிழக வரலாற்றில் கடைச்சங்க காலம் ஏறத்தாழக் கி. மு. 300 முதல் கி.பி. 300 என்று சொல்லலாம். அக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தரும் அவர்கட்கு அடங்கியும் அடங்காமலும் இருந்த சிற்றரசர் பலரும் தமிழகத்தை ஆண்டனர் என்பதைச் சங்க நூல்களால் அறிகிறோம். அச்சிற்றரசருள் அதிகைமான்கள், மலையமான்கள், தோண்டைமான்கள் மழவர் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இக்குறுநில மன்னர் சங்ககாலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை (கி.பி. 1300 வரை) தமிழகத்தில் தொடர்ந்து வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இக்குறுநில மன்னர் பிற்காலச் சோழர் ஆட்சியில் அவர்க்கு அடங்கிய சிற்றரசராயும் படைத் தலைவராயும் அமைச்சராயும், நாடுகாவல் அதிகாரிகளாயும் இருந்துவந்தனர் என்று கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

இவர்கள் ஆண்ட நிலப்பகுதியிலும் இவர்கள் அதிகாரிகளாய் இருந்து தமிழக மாவட்டங்களிலும் இவர்களுடைய பெயரால் சில ஊர்கள் அமைந்துள்ளன. அவற்றைக் கீழே காண்க.

அதிகைமான்கள்

சேலம் மாவட்டத்துத் தருமபுரியையும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியையும் ஆண்டு வந்தவர்கள் அதிகைமான்கள் எனப்பட்டனர். இவருள் சங்காலத்து நெடுமான் அஞ்சி என்பவன் ஔவையாரைப் போற்றி வளர்த்த வள்ளல். அதிகைமான்கள் மழவர் மரபினர்.

அதிகைமான்கள்	மாவட்டம்	வட்டம்
1. அதிகமநல்லூர் (அகைமான் நல்லூர்)	செங்கல்பட்டு	செங்கல்பட்டு
2. அதியனூர்	வடஆர்க்காடு	வந்தவாசி
3. திருவதிகை	தென்னார்க்காடு	கடலூர்
4. நெடுமானூர் (நெடுமான் அஞ்சி)	,,	கள்ளக்குறிச்சி
5. நெடுமானூர் (நெடுமான் அஞ்சி)	,,	திருக்கோவலூர்
6. அதமன் கோட்டை	சேலம்	தருமபுரி
7. அதகப்பாடி	,,	,,

மலையமான்கள்

திருக்கோவலூரையும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியையும் மலையமான்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் காலப்போக்கில் வடநாட்டில் வாழ்ந்த சேதி அரசர்களின் மரபைத் தங்களுக்குரியதாக வைத்துக்கொண்டனர். பிற்காலச் சோழர்கள் காலத்தில்

அவர்கள் தங்களைச் சேதிராயர் என்று கூறிக்கொண்டனர். இப்பெயர் காலப்போக்கில் சேதுராயர், சேதுவராயர் எனவும் வழங்கலாயிற்று. இந்த முகவுரையை உளத்திற்கொண்டு கீழ்வரும் ஊர்ப் பெயர்களைக் காண்க.

	மலையமான்கள்	மாவட்டம்	வட்டம்
1.	மலையனூர் செங்குடி	வட ஆர்க்காடு	திருவண்ணாமலை
2.	சேதராகுப்பம் (சேதிராயர் குப்பம்)	,,	வந்தவாசி
3.	மலையனூர்	தென்னார்க்காடு	செஞ்சி
4.	சேதுராயநல்லூர் (சேதிராயநல்லூர்)	,,	செஞ்சி
5.	மலையனூர் (கீழ்)	,,	திண்டிவனம்
6.	மலையனூர் (வட, தென்) 2	,,	திருக்கோவலூர்
7.	மலையம்பட்டு	,,	,,
8.	(செம்பட்ட) மலையனூர்	,,	,,
9.	மலையனூர்	,,	விருத்தாசலம்
10.	சேதுவராயங்குப்பம் (சேதிராயர்)	,,	,,
11.	சேத்துராயன் ஏந்தல் (சேதிராயர்)	தஞ்சை	அறந்தாங்கி
12.	சேதுராபட்டி (சேதிராயர்பட்டி)	திருச்சி	திருச்சி
13.	சேதுராயன் ஏந்தல்	இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை
14.	சேதுராய புதூர்	திருநெல்வேலி	திருநெல்வேலி

தொண்டைமான்கள்

இவர்கள் சங்ககாலத்தில் காஞ்சியைத் தலைநகராய்க்கொண்டு தொண்டை நாட்டை ஆண்டனர். இவருள் தொண்டைமான் இளந்திரையன் சிறந்த தமிழ்ப் புலவன். இவன் மீது பாடப்பெற்றதே பெரும்பாண் ஆற்றுப்படை என்பது.

	தொண்டைமான்கள்	மாவட்டம்	வட்டம்
1.	தொண்டைமான் நல்லூர்	செங்கற்பட்டு	மதுராந்தகம்
2.	சின்ன தொண்டைமானூர்	,,	,,
3.	தொண்டம்பட்டு	,,	பொன்னேரி
4.	தொண்டான் துளசி	வட ஆர்க்காடு	குடியாத்தம்
5.	தொண்டைமானூர்	,,	திருவண்ணாமலை
6.	தொண்டமானத்தம்	தென்னார்க்காடு	சிதம்பரம்
7.	தொண்டமானத்தம்	,,	கடலூர்
8.	தொண்டங்குறிச்சி	,,	விருத்தாசலம்
9.	தொண்டைமான் ஏந்தல்	தஞ்சை	அறந்தாங்கி
10.	தொண்டைமாங்கணம்	திருச்சி	குழித்தலை
11.	தொண்டைமான்குளம்	இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை

மழவர்

திருச்சி மாவட்டத்தில் காவிரியின் வடபாலுள்ள நிலப்பகுதி மழநாடு எனப்பட்டது. அந் நாட்டுத் தலைவன் கொல்லி மழவன் எனப்பட்டான். சங்ககால மழவர்

மூவேந்தரிடத்தும் தனிப்படையினராக விளங்கிவந்தனர். சங்ககால வள்ளல்களாகிய ஓரியும், அதியமான் நெடுமான் அஞ்சியும் இம்மழவர் மரபினரே ஆவர். இவர்கள் பிற்பட்ட சோழர் காலத்தில் பல உயர் பதவிகளைப் பெற்றிருந்தனர். அரியலூர் சமீன்தார்கள் இம்மரபினரே ஆவார்.

	மழவர்	மாவட்டம்	வட்டம்
1.	மழவங்கரணை	வட ஆர்க்காடு	வந்தவாசி
2.	மழவராய நல்லூர்	தென்னார்க்காடு	சிதம்பரம்
3.	மழவந்தாங்கல்	,,	செஞ்சி
4.	மழவராயனூர் (திருக்கோவலூர் அருகில்)	,,	திருக்கோவலூர்
5.	மழவராயனூர் (எல்வானசூர் அருகில்)	,,	,,
6.	மழவராயனூர்	,,	விழுப்புரம்
7.	மழவராய நல்லூர்	தஞ்சை	குடந்தை
8.	மழவராய நல்லூர்	திருச்சி	பெரம்பலூர்
9.	மழவராயனேந்தல்	இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை
10.	மழவராயனேந்தல்	,,	சிவகங்கை
11.	வேளூர் மழவராயனத்தம்	திருநெல்வேலி	திருச்செந்தூர்

தனிப் பாடல்கள்

1. பேரூரை இல்லாய்நீ பேரூரை அடைந்ததுவும் பெற்றம் ஊர்ந்து
சீரூரும் பட்டீச முதியோனைப் பச்சைப்பெண் செல்வி தன்னை
ஏரூர மணந்ததுவும் ஆலிருந்தாய் அரசினடி எய்தி இருந்தவாறும்
நீரூர நினைப்பின் அடியாரொடு எமை ஆட்கொளலும் நீதிதானே.

2. கந்தனை உளந்தனில் நினைந்தனை கலந்தனை கனிந்தனை கசிந்தனைகழல்
வந்தனை புரிந்தனை வணங்கினை யிணங்கினை மகிழ்ந்தனை திகழ்ந்தனைமுனம்
சிந்தனை படர்ந்து அயர்தரும் துயர்அடர்ந்து வலிசிந்திட நலிந்தன எலாம்
உந்தினை உதைந்தனை உணர்ந்தனை உயர்ந்தனை ஒருங்குற ஒளிர்ந்தனை அரோ

3. மனையாள் இனிதுஅட்டு ஊட்டுவதும் மைந்தர் அடங்கிப் பயில்வதுவும்
வினையாள் மனம்போல் வேலைசெய்து மிக்கபயன்கள் விளைப்பதுவும்
அனையாய் முன்பின் அறியாதார் அங்கங்கு உதவி புரிவதுவும்
எனையாள் பேரைப் பெருமனை ஏத்தும் அளவிற்கியை வனவே.

—பண்டித. அ. கந்தசாமிப் பிள்ளை, பேரூர்.

ஆடூஉ-மகடூஉ

(திரு. அரசு. நாராயணசாமி நாயுடு, B.O.L.,)

(தமிழ் விரிவுரையாளர், செந்திக் குமார நாடார் கல்லூரி, விருதுநகர்.)

1

தொல்காப்பியம் பயில்வோர் தலைப் பிற் காணும் இரு சொற்களையும் அந் நூலிற் சில இடங்களிற் காண்பர். உரை யாசிரியர்களும் இச் சொற்களை இவ்வடி விலேதான் காட்டினர்.

இலக்கியங்களில் இச்சொற்கள் காணப்படுதலில்லை யெனவே எண்ணு கிறேன். ஆடவர்-மகளிர் என்றும், ஆண்-பெண் என்றும், மகன்-மகள் என்றும் வழங்குதலறிவோம்.

நன்னூலிலும் இச்சொற்கள் வழங்கப் பட்டில.

தமிழ்ச் சொற் பரப்பில் இவ்வாருன சொல்வடிவு காணப்படவில்லை.

ஆடூஉ-மகடூஉ என்னும் வடிவங்கள் அளபெடையோடு வந்துள்ளன என்றே கருதுதல் தகும். அப்படிக் கருதுதல் பொருந்துமெனின், அளபெடுத்த எழுத் தெது? ஊகாரம் அளபெடுத்ததா அல்லது உகரம் நீண்டு அளபெடுத்ததா?

ஓரெழுத்தொரு சொல்லிலும் வினை யெச்சத்திலும் காணப்படுவதன்றி, ஊகார விறுதி பிறவிடங்களிற் காணப்படுவதில்லை. ஆதலின் உகரவிறுதியே நீண்டு அள பெடை பெற்றதெனக் கருதல் வேண்டும்.

அதாவது ஆடு-மகடு என்ற சொற் களே ஆடூஉ—மகடூஉ என வந்தன எனல் வேண்டும்.

ஆடு-மகடு என்பன ஆண்-பெண் என்ற பொருளில் செய்யுள் வழக்கிலோ உலக வழக்கிலோ 'தமிழ் கூறு நல்லுல கத்து' எப்பகுதியிலாவது உள்ளனவா? தொல்காப்பியர் ஒருவரே இவற்றை யாண்டதன் அருமைதான் எவ்வாறு விளக்கப்படும்?

'இச் சொல்வடிவங்கள் அளபெடுத் தனவல்ல, இயல்பாகவே இவ்வாறு நின் றன' எனின் தமிழில் விட்டிசைபட இவ் வாறு ஒலிக்கப்படுகின்ற பிற சொல்லெது வுங் காணப்படுதலின்றே? இயற்கை யள பெடை யொன்று எங்கோ உரையாசிரிய ரொருவராற் குறிக்கப்பட்டாலும் அவ்வாறு சொல்லல் பொருட் பொருத்த முடைய தன்று.

எனக்குத் தோன்றும் இவ்வையம், மாணவர் பலர்க்குத் தோன்றுமென்றே நம்புகிறேன். தொல்காப்பியப் புலவர்கள் விளக்கந்தந்து ஐயந்தீர்ப்பராக.

2

தமிழிலுள்ள ஆடவர்-மகளிர் என்ற சொற்கள் ஆடு—மகடு என்ற சொற்களை யுள்ளகங் கொண்டனவாகலாம். ஆடவர்-என்ற சொல்லில் ஆடு-இருப்பது நன்கு புலப்படுகிறது. அதனைக் கொண்டு, மகளிர் என்ற மறுதலைச் சொல்லிலும், மகடு-இருப்பதாக எண்ணல் தகுமோ எனக் கருதலாம்.

தெலுங்கு மொழியில் ஆடதி என்ற சொல் பெண்மகள் என்ற பொருளில் வழங் கப்படுகிறது. பன்மை ஆடவாரு (ஒலிக்கும் போது டகரத்துக்கு முன் அரை மூக்கொலி வரும். அதாவது ணகரவரையொலியும் இருக்கும்.) ஆடதி-என்ற சொல்லின் இறுதிநிலை ஒன்றன் பாலைக் குறிக்கும் 'அதி' அல்லது அதன் சிதைவே யாகும். தெலுங்கு, பெண்பாலொருமையை ஒன் றன்பால் வடிவிலேயே சுட்டும்.

மகடு-மகவாடு-மொகவாடு முதலிய சொற்கள் ஆண் மகன் என்ற பொருளில் வழங்குவன. மகன் என்ற தமிழ் வடிவம், தெலுங்கில் மகடு என்றே வரும். (இங்கும் ணகரவரையொலி டகரத்துக்கு முன் ஒலிக்கப்பெறும்.)

தமிழில் ஆடூஉ = ஆண், மகடூஉ = பெண் என்ற பொருளில் வந்துள்ளன.

தெலுங்கில் ஆடதி = பெண், மகடு = ஆண் என்ற பொருளில் வந்துள்ளன.

இவ்வாறு ஆண் பெண்ணாகவும் பெண் ஆணாகவும் மாறியமை வியப்புக் குரியதே.

எனினும் இம் மாற்றத்துக்குக் காரணம் உண்டு. மகன் என்ற தமிழ் வடிவம் தெலுங்கில் மகடு என்றே மாறும். மகன் = ஆண். ஆதலின் மகடு = ஆண் என்பதே பொருத்தமாயிற்று.

மகடு = ஆண் என்றிவ்வாறு வழக்கமைந்த பின், மகடு என்ற மற்றொரு சொல்லைப் பெண் என்ற பொருளில் வழங்குதலை யுள்ளம் ஏற்காது. மகன் திரிந்த மகடு முன்னரே வழக்கில் நிலைத்து விட்டதால், மகடு என்ற சொல்லைப் பெண் என்ற பொருளில் வழங்குதல் ஏற்கப் படவில்லை.

மகன் திரிந்த மகடு என்ற சொல்லுக்கும் இயல்பாகவே மகடு என்றுள்ள சொல்லுக்கும் ஒரே பொருள் தந்து கொண்டனர் தெலுங்கர்.

மகடு என்பதன் மறுதலைச் சொல்லான ஆடு என்ற சொல்லும் விடுபடவில்லை. ஆனால் ஆடு என்றாலும் ஆண் - என்று கொள்ளுதலும் உள்ளத்துக்குப் பொருத்தமாய்ப் பட்டிலது.

'மகடு = ஆண். அதனால் அதன் எதிர்ச் சொல்லான ஆடு = பெண்' என்று எளிதாகச் சிக்கலைத் தீர்த்தனர். 'எப்பொருளெச் சொலினெப் படியுயர்ந்தோர், செப்பினரப்படிச் செப்புதல் மரபே' யன்றோ?

3

தெலுங்கையும் நோக்க ஆடு—மகடு என்பன மிகப்பழைய சொற்களே என்று தான் கருத நிற்கின்றன.

தமிழில் ஆண்-மகள் என்பன இவ் வடிவங்களின் வழக்கருகியமைக்குக் காரணமாகலாமோ? நேர்மாறாய்ப் பொருள் மாறுபடுமளவுக்குப் பழமை (= முதுமை) கொண்டமையால் வழக்கொழிந்தனவோ?

ஆடூஉ = மகடூஉ ஆராய்ச்சி வல்லுநர் பால் அகப்பட்டுத் தம் உண்மை நிலையை வெளிப்படுப்பனவாக.

திருநெல்வேலி, வல்லநாடு,
தவத்திரு சிவராமலிங்க சுவாமிகள் இயற்றியது.

சீர்தருங் கமலச் சேவடி வழுத்தி சீலமுங் கோலமு மொன்றாய்
ஆர்தரு மடியார் அவைக்கடை யெனையும் ஆண்டது போலென தகத்தே
நேர்தருங் குறைகோள் வழங்கலு முறையாம் நிறையருட் கொண்டலே நேயர்
சார்தரு மமுதே தவருறை பேரூர் சாந்தலிங் கேசனின் சரணே.

உலகமுன் முதலே உத்தமர் தமைநீத் தொன்றுபே றெயுயிர்க் குயிரே
கலகவன் சமயர் மருண்மறைப் பொருளே கருணையெம் மண்ணலே நின்னாற்
றிலகமென் றறைந்த நூலொடு பொருளுந் தேர்பொருட் பயனு மென்பாலே
இலகநின் கடைக்கண் அருளுதி பேரூர் சாந்தலிங் கேசனின் சரணே.

(இப் பாடல்கள் சத்வித்யா சன்மார்க்க சங்க 7-ஆம் ஆண்டறிக்கையில் கண்டது.)

தென்னாட்டுக் கலைமன்றங்கள்

(திரு. அ. ச. ஞானசம்பந்தன் M. A., செயலாளர்,
தமிழ் வளர்ச்சி வெளியீட்டுக் கழகம், சென்னை-9.)

கலைகள் பலதிறப்படும். அவற்றை வளர்க்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட குழுக்கள் அனைத்துமே மன்றங்கள் என்று கூறப்பெறும். கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கவிதைக்கலை ஆகிய ஐந்தையும் நுண்கலைகள் என்று கூறுவர். நாகரிகத்தில் மிகுந்த எந்த இனத்தாரும் தமக்கே உரிய தனி இயல்புகளுடன் இக் கலைகளை வளர்த்துள்ளனர்.

கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு முற்பட்டே தமிழ் நாட்டில் இத்தகைய நுண்கலைகள் சிறப்புடன் வளர்க்கப்பெற்றன. இத்துணைக் காலங்கழித்து அவர்களுடைய கட்டிடக் கலை சிற்பக்கலை என்பவற்றை நாம் அறியவும், காணவும் வாய்ப்பில்லாமல் போனதில் வியப்பு ஒன்றும் இல்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தைக்கொண்டு தமிழ்நாட்டின் கலை மன்றங்கள் சிலவற்றைப்பற்றி அறிய முடிகிறது. இதில் கூறப்பெற்ற செய்திகள் அப்பொழுதுதான் தோன்றியவை என்பதற்கில்லை. நாட்டிய அரங்கத்திற்குச் சிலப்பதிகாரம் கூறும் இலக்கணத்தைக் கண்டால் அந்த நூல் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளின் முன்னர்த் தொட்டே இக் கலை நன்கு வளர்ந்து சிறந்துள்ளது என்று நினைக்கத் தோன்றுகிறது. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் கூறவந்த சிலப்பதிகாரம் நாட்டியத்திற்கு உரிய பொருள்கள் அனைத்தையும் கூறுகின்றது.

யாழ் வாசிப்பவன், குழல் வாசிப்பவன், தண்ணுமை வாசிப்பவன், இசையாசிரியன், பாடல் ஆசிரியன் ஆகிய இவர்கட்கெல்லாம் இலக்கணம் கூறுவதுடன் நாட்டிய அரங்கு அமைக்கப்பட வேண்டிய முறையையும் விரிவாகக் கூறுகிறது. நாட்டிய அரங்கில் ஒளி அமைப்பு முறையைக்கூட அந் நூல் மறக்கவில்லை. இடையே உள்ள தூண்களின் நிழல், அரங்கிலும், அவையின் கண்ணும் விழாதபடி விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. உலகம் போற்றும் ஷேக்ஸ்பியர் தம் நாடகங்களை எழுதி நடிக்கும் காலத்திற்கூட அரங்கை மறைப்பதற்கு 'கரந்துவரல் எழினி' என்று சிலப்பதிகாரம் கூறும். 'Drop Scene' கிடையாது என அந் நாட்டுத் திறனாய்வாளர் கூறுகின்றனர். ஆனால், சிலப்பதிகார காலத்தில் 'ஒருமுக எழினி, 'பொருமுக எழினி' 'கரந்துவரல் எழினி' என மூன்று வகைத்திரைகள் இருந்தன என்றால் இக் கலை அன்று வளர்ந்திருந்த நிலைமைக்கு வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை.

நாடகங்கள் என்று எடுத்துக் கொண்டாலும் பல வகை நாடகங்கள் இருந்துள்ளன. 'கூத்து' என்று அழைக்கப்பட்ட இதில் நூற்றுக்கணக்கான வகைகள் இருந்தன என்றும் அறிய முடிகிறது. சிலம்பை அடுத்துத் தோன்றிய பெருங்கதையிலும் நாடகம்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய சிந்தாமணியும் நாட்டியம், நாடகம் என்பவைபற்றிக் குறித்துச் செல்கிறது. "நாறியும், சுவைத்தும் நரம்பின் இசை கூறியும் குளிர் நாடகம் நோக்கியும்'' என வரும் சிந்தாமணிப்பாடல் தமிழ் நாட்டில் பெருவழக்காய் இருந்த நாடகம்பற்றி அறிவிக்கின்றது.

ஞானசம்பந்தர் தேவாரத்திலும் நாடகம்பற்றிய பேச்சைக் கேட்கிறோம். ''வலம் வந்த மடவார்கள் நடமாட முழவு அதிர மழை என்று அஞ்சி'' என வரும் தேவாரமும் ''ஆடல் நெறி பாடல் நெறி'' என வரும் அடியும் இக் கலையை தமிழர்கள் போற்றிய முறையை நமக்கு அறிவிக்கின்றன. மேல் நாடுகளில் பொது மக்களின் பயன் கருதிப் பொது இடங்களில் இக் கலைமன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன; இப் பொது மன்றங்களிலேயே

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

36, 38, 40 44, 47 ஆகிய ஆண்டு நிறைவு விழாக்களின் தலைவர்.

தவத்திரு. மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்,
மகா சந்நிதானம்.

அரசர்களும் வந்து இவற்றை அனுபவித்தார்களாம். ஆனல், தமிழ் நாட்டில் இவ்வாறு இல்லை. அரசனுடைய ஆதரவில் வாழும் இயல்புடையவை இக்கலைகளாதலின் அரசர்கள் தம்முடைய அரண்மனை எனப்படும் கோயில்களிலேயே அரங்குகள் அமைத்திருந்த முறையைச் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய நூல்களிற் காண்கிறோம். நாடக, நாட்டியக் கலை மன்றங்களில் இருவகை உண்டென்றும் அவற்றுள் ஒருவகை பொதுமக்களின் அரங்குகள் எனவும் ஒருவகை அரசர்களின் அரங்குகள் எனவும் அறிகிறோம்.

பட்டிமண்டபம் என்று கூறப்பெறும் கலை மன்றங்களும் மிகுதியாக இருந்துள்ளன. 'Debating Societies' என்று தற்காலம் எவற்றைக் குறிக்கிறோமோ அவைகளே பட்டி மண்டபங்கள் என்று கூறப்பெற்றன. இவற்றிற் சென்று வாதிட வேண்டுமாயின் நிறைந்த கல்வியறிவும், சொல் வன்மையும் நிறைந்திருத்தல் வேண்டும். "பட்டி மண்டபம் பாங்கறிந்து ஏறுமின்" என மணிமேகலையும், "பட்டி மண்டபம் ஏற்றினை" எனத் திருவாசகமும் பேசுவது கலை மன்றங்கள் தமிழ் நாட்டில் மிகுந்திருந்தன என்பதையே அறிவுறுத்தும்.

கம்பநாடன் காப்பியத்தில் "கந்தனை அனையவர் கலை தெரிகழகம்" என்றும் "பந்தினை இளையவர் பயிலிடம்" என்றும் பேசப் பெறுவதால் உடற்பயிற்சி மன்றங்களும், அறிவுப் பயிற்சி, சொற் பயிற்சி மன்றங்களும் இருந்துள்ளன என அறிகிறோம். உடலைப் பேணிப் பாதுகாப்பதையும் ஒரு கலையாகவே தமிழர் கருதினர். ஆதலின் பந்தாடும் இடத்தையும் கம்பநாடன் குறித்துப் போனன்.

பழைய காலங்களில் இருந்த இவற்றைவிட்டு இடைக் காலத்துக்கு வருவோமானல் எல்லாக் கலை மன்றங்களும் ஒருசேரத் தங்கியிருந்த இடமாக ஒன்றிருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இவ்வாறு இருந்த இடம் திருக்கோயில்தான். இறைவனை வழிபட்டு வீடுபேறு அடையும் இடமாக மட்டும் திருக்கோயில்கள் இடைகாலச் சோழர் காலத்தில் இல்லை. நடமாடும் கோயில்களான மக்கள் அறிவு வளர்ச்சிக்குரிய நாடகம், நாட்டியம் என்பவை நடைபெறுவதும் கோயிலில்தான்.

பொது மக்களின் அறிவு வளர்ச்சி கருதிப் பாரதம், இராமாயணம் முதலியவற்றைச் சொற்பொழிவு மூலம் செய்பவர்க்குப் "பாரதப் பங்கு" என்று தனியே மானியம் விடப்பட்டு இருந்தது. திருப்பதியம் பாடுவார் என்பவர்கள் தனியே ஒரு கூட்டத்தாராக இருந்து வந்தனர். தேவாரம், பிரபந்தம் முதலியன பாடும் இவர்களும், இவர்கட்கு பக்க வாத்யம் வாசிப்பவர்களும் இசைக் கலையையும், இயல் கலையையும் ஒருசேர வளர்த்தவர்களாவார்கள்.

பிரபாகர முறை மீமாம்சையும், வேதாந்தமும், வியாகரண பாடமும், தைத்ரேய, வாஜஸபேய பாடங்களும் முன்னரே ஓரளவு கல்வி பயின்றவர்கட்குப் போதிக்கப்பட்டு வந்தமையும் அறியப்படுகிறது. இதில் வியப்புக்குரியது யாதெனில் தமிழ்க் கல்வி போதிக்க நிலம் முதலியன விட்டதாக ஒரு கல்வெட்டுத்தானும் இல்லை. ஊர் தோறும் தமிழ்க் கல்வி போதிக்கப் பட்டமையானும், ஒருசில இடங்களில் மட்டும் வேதபாடம் போதிக்கப்பட்டமையானும் பின்னது கல்வெட்டில் இடம் பெற்றது போலும்.

கி. பி. பத்தாம் நூற்றுண்டில் ராஷ்டிர கூட மன்னனுகிய மூன்றும் கிருஷ்ணனிடம் அமைச்சராக இருந்த நாராயணன் என்பவர் பீஜப்பூர் ஜில்லாவில் "சலோட்கி" என்ற விடத்தில் ஒரு வடமொழிக் கல்லூரியை நிறுவினர். நாளா வட்டத்தில் படிக்கும் பிள்ளைகள் தங்க மட்டும் 27 விடுதிகள் (Hostels) கட்டப்பட்டனவாம். 200 மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் வழங்க ஒருவர் 2500 ஏக்கர் நிலதானம் செய்தார்.

கி. பி. பதினொன்றும் நூற்றுண்டில் தென்ஞர்க்காடு மாவட்டத்தில் 'எண்ணயிரம்' என்ற ஊரில் இராஜேந்திர சோழன் வேதம் கற்பிக்கும் கல்லூரி ஒன்றை நிறுவினன். அதில் 340 மாணவர்கட்கு 10 ஆசிரியர்கள் கற்பித்தார்கள். ஒவ்வொரு பகுதியிலும் கற்ற மாணவர் தொகையும்

தரப்பட்டுள்ளது அக் கல்வெட்டில். 75 மாணவர்கள் ரிக் வேதமும், 75 பேர் யசுர் வேதமும் சாந்தோகசாமன் கற்க 20 பேரும், வியாகர்ணம் கற்க 25 பேரும் இருந்தனராம். ஒவ்வொரு மாணவனுக்கும் தினந்தோறும் ஆன செலவு ¾ குருணி நெல்லும் ½ கழஞ்சு (ரூ 2/- மதிப்பு) பொன்னுமாம். மீமாம்சை, வேதாந்தம், வியாகர்ணம் படிக்கின்றவர்கள் இச் செலவை விட 66% அதிகம் பெற்றனர். ஆசிரியர்கட்கு தினந்தோறும் ஒரு கலம் நெல் சம்பளம். தமிழ் நாட்டில் அந் நாட்களில் ஆசிரியராக இருப்பதும் சிறந்த தொழிலாக இருந்தது போலும்! வேதாந்தம் கற்பிக்கும் ஆசிரியர் 25% அதிக சம்பளம் பெற்றார்.

இதேபோல 340 பேர் படிக்கும் மற்றொரு கல்லூரியும், 190 பேர் கற்கும் மூன்றாவது கல்லூரியும் வியாகர்ணம் கற்பிக்கும் திருவொற்றியூர்க் கல்லூரி ஒன்றும் இவனால் நிறுவப் பெற்றன.

குண்டூர் வட்டத்தில் "மல்லாபுரம்" என்ற கிராமத்தில் ஒரு வேதக் கல்லூரி நிறுவ 44 கிராமங்கள் மானியமாக விடப்பட்டன. தமிழ் நாட்டில் காஞ்சிபுரம் கலை மன்றங்கட்கு உறைவிடமாய் இருந்தது போல் மைசூர் பகுதியில் "பெல்காம்" என்ற இடம் பிரசித்தி பெற்றதாகும். இவற்றையல்லாமல் சைவ, வைணவ, பௌத்த மடங்களும் இம் முறையிலேயே அக் காலத்தில் தொண்டு செய்தன.

மேலே கூறிய ஹிந்து சமய போதனைக் கலை மன்றங்கள் போக "ஹ்யான் சுவாங்" என்ற சீன யாத்ரீகர் குறிப்பிடும் பௌத்த விஹாரங்கள் பல தென் இன மொழிகள் வழங்கும் நாடுகளில் இருந்தன. ஆந்திர நாட்டில் 20 விஹாரங்களில் 3000 மாணவர்கள் கல்வி கற்றனர். பெஜவாடாவில் 1000 பேரும், காஞ்சிபுரத்தில் 10,000 பேரும் பௌத்த சமயக் கல்வி பயின்றனர் என அவர் கூறுகிறார்.

மலையாள நாட்டில் "சபா மடங்கள்" என்பவை பிரபலமாக இருந்துள்ளன; இன்றும் இவை சில உள்ளன. தென்னலாஸ் சிவன் கோயில் மடம் இன்றும் வேத பாடத்தை பிராமணர்க்கு மட்டும் கற்பிக்கின்றது. ஸ்ரீமூலவாசம் என்பது வட மலையாளத்தில் புத்த சமயக் கல்வி போதித்து வந்தது. காந்தளூர் சாலை என்பது தென் மலையாளத்தில் இருந்த கல்வி ஸ்தாபனம்.

ஓவிய, சிற்பக் கலா மன்றங்கள் அடுத்து அறியப்பட வேண்டுவன. சிற்பக் கலையின் சிறப்பை 7ஆம் நூற்றாண்டு முதல் அறிய முடிகிறது. மகாபலிபுரம் என வழங்கும் மாமல்லபுரத்தை அறியாதார் யார்? மகேந்திரவர்மனும், அவன் மகன் நரசிம்ம வர்மனும் கண்ட கனவுகள் சிற்ப வடிவு பெற்று இவ்விடத்தில் இருக்கக் காண்கிறோம். இக் கலைகள் தென்னாட்டில் தோன்றி வடக்கு நோக்கிப் புறப்பட்டன.

அஜந்தா எல்லோராக் குகைகளில் உள்ள ஓவியங்களும், சிற்பங்களும் தென்னாட்டுக் கலையின் முதிர்ந்த பயன்களாகும். புதுக்கோட்டையை அடுத்த 'சிற்றன்னவாச'லில் உள்ள தாமரைக்குள ஓவியம் உலகம் அறிந்த கலைக் கருவூலங்களில் ஒன்றன்றோ? தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் கருப்பக் கிருஹத்தில் காணப்பெறும் சேரமான் பெருமாள் நாயனாரின் கைலை யாத்திரையும் தமிழர் ஓவியக் கலையின் சிறப்பை உலகறிய எடுத்துக் கூறுவது. மேனாட்டில் 'Frisco Painting' என்ற முறை தோன்றப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே இவ் ஓவியங்கள் எழுதப்பெற்று இன்றும் தம் அழகு குன்றாமல் இருந்து வருகின்றன எனில் இவற்றின் சிறப்பை யார் எடுத்துக் கூறமுடியும்? இலங்கைத் தீவில் உள்ள 'சிகிரியா'வில் தோன்றிய ஓவியங்களும் தமிழ் நாட்டு ஓவியக் கலையில் தோன்றியவையே.

அஜந்தாவில் புத்த சமயத்தின் சிறப்பை விளக்கும் ஓவியங்களும், சிற்பங்களும் இத் தென்னாட்டு ஓவியக் கலையின் சிறப்புக்குச் சான்று பகர்கின்றன. எல்லையற்ற அமைதியின் இடையே துக்க நிவாரண மார்க்கம் கண்ட புத்தர் பல்வேறு கோலங்களில் காட்சியளிக்கிறார் அஜந்தாவில். மனித மனத்தில் ஓயாது அடிக்கும்

புயல்கள் அனைத்தும் போதிசத்துவனின் எதிரே அடங்கிப் பேரமைதியை விளக்கின்றன. அனைத்திலும் நிர்வாண உணர்வும், விடுதலை உணர்வும் துலங்கக் காண்கிறோம் அஜந்தாவில். உலகமே அநித்யம் என்பதையும் நிர்வாணம் ஒன்று மட்டுமே நித்தியம் என்பதையும் பார்ப்பவர் மனத்திலே படுமாறு செய்கின்றன இவைகள்.

அஜந்தாவிலிருந்து 70 கல் தொலைவிலுள்ள எல்லோராவிலும் புத்தர் சமயக் குகைகள் 12 உள்ளன. 7ஆம் நூற்றுண்டின் இடையில் இந்து சமயத்தார் இப்பகுதியைக் கண்டு 16 குகைகளை அமைத்தனர். பிற்காலத்தில் 5 சமணக் குகைகளும் இடம் பெற்றன இங்கே.

எல்லோராவும் அஜந்தாவும் எவ்வளவு வேறுபட்டவை. அஜந்தாவின் பேரமைதியின் எதிரே, எல்லோராச் சிற்பங்கள் சக்தியின் வெளிப் பாட்டைக்காட்டி நிற்கின்றன. உலக முழுவதையும் ஆட்டிப் படைக்கும் இயற்கையின் பெருஞ் சக்திகட்கு வடிவு கொடுக்கப்பட்டிருக்கிறது அஜந்தாவில் இப் பெரும் சக்தியின் ஊடே சாதாரண அற்பத்தனமான எண்ணங்கள் விடை பெற்றுக் கொள்கின்றன. பம்பாயை அடுத்துள்ள எலிபெண்டாத் தீவில் உள்ள குகைகளில் உள்ள சிற்பங்களும் சிறந்த திரு மூர்த்தியும் எல்லோராவின் நிழலே ஆகும்.

தென் இனமொழி பேசுவோரின் கலாமன்றங்கள் தனித் தன்மை பெற்று உலகம் போற்றுவையாய் விளங்குகின்றன.

திருநெல்வேலி, வல்லநாடு,
தவத்திரு சிவராமலிங்க சுவாமிகள் இயற்றியது.

திருமலர் செல்வி காதலன் வாழ்வுந் திகழ்பர சுகக்கடற் றூளியென்
இருமையு நீத்து நின்னடித் தொழும்பா யிசைந்தவர்க் கேவலு மிழையேன்
பெருமிதங் கொண்டு திரிந்தனன் அந்தோ பேதையேன் உய்வதெந் நாளே
தருமமன் மூர்த்தி அருளுரு உடையாய் சாந்தலிங் கேசனின் சரணே.

கற்றவ ரறப்பா லொழுகிலே னன்பிற் கசிந்திலேன் போதமு நயவேன்
மற்றவமிழைத்து நாளெலாங் கழித்தேன் மறுமையு மிழந்தனன் வள்ளால்
எற்றலைக்காஞ்சி நதிநிலைப் பேரூர் எம்பிரான் என்னுளத் திராகம்
சற்றலமேரு வேயருட் கடலே சாந்தலிங் கேசனின் சரணே.

நித்தநின் பாலொன் றிரப்பது நின்ரு ணேயநல் குதலது அரிதேல்
பத்தரின் பணிநல் கதுமரி தெனிலோ பரவவர் மிசைந்தெறி மிச்சில்
சித்தம கிழ்ந்துண் ஞமலியா தியவோர் செனனமுஞ் செயலரி தோநூற்
சத்தமுமுளமு மருகுருத் தேவே சாந்தலிங் கேசநின் சரணே.

ஞானமே னியனே நான்றறைக் குயிரே நவநிதி யேபுவிப் பதியே
கானமாங் கவியா லேத்திட வறியேன் கழலடிக் கருதிடவறியேன்
ஆனவோர் நலனும் ஒருயிர்க் கொருகால் ஆற்றவும் அறிகிலேன் இன்ன
தானமேற் பறியேன் முறையிட லறியேன் சாந்தலிங் கேசநின் சரணே.

திருவனே சரணம் வீரமா சைவ சிகாமணி யேசரண் சரணம்
ஒருவனே சரணர் தாக்கரு சிறிய ஊர்புகாக் கதியெனும் பேரூர்
தருவனே சரணம் அறிவுமாய்க் தலையாய்ச் சங்கமங் குருவுமா யுணர்த்து
சருவனே சரணஞ் சதுரனே சரணஞ் சாந்தலிங் கேசநின் சரணே

(இப் பாடல்கள் சத்வித்யா சன்மார்க்க சங்க 7-ஆம் ஆண்டறிக்கையில் கண்டது.)

வித்தும் விளைவும்

[திரு. ம. ரா. போ. குருசாமி, M.A., தமிழ் விரிவுரையாளர்,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை.]

பாம்பி நகரத்தின் இறுதிஎல்லை [The Last Days of Pompeii] என்ற புதினம் உலகப் புகழ்பெற்றது. அதனை எழுதிய வர் லார்டு லிட்டன் என்பவர். அவர் சில கவிதை நூல்களும் இயற்றியுள்ளார். அவற்றுள் மிலிட்டஸ் பற்றிய மறந்த கதைகள் [The Lost Tales of Miletus] எனப்படும் மறைவழி [The Secret way] என்பதும் ஒன்றாகும். மேற்கு நாடுகளிலே வழங்கி வந்த ஒரு கதையே இந்தக் கதைப் பாடலுக்கு மூலம். அந்தக் கதை வரலாறு அன்றி வரலாற்றுப் புனைந்துரையா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. வெறும் கதையாக இருந்த ஒன்றினைக் கலை மெருகேறிய கதைப்பாடலாக ஆக்கிய பெருமை லிட்டன் பெருமகனுர்க்கு உரியது. 780 வரிகள் கொண்ட அந்தப் பாடலைத்தான் தமக்குரிய மூலமாகக் கொண்டார் பேராசிரியர் சுந்தரனுர். எனவே, மனேன்மணீயத்தைச் சார்புநூல் என்று கூறலாம். இச் சார்பு நூல் 4506 வரிகளைக் கொண்டது.

மொழி பெயர்ப்பு நூல்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'மொழி பெயர்த்து யாத்தல்' என்று மட்டும் கூருமல் 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்று விளக்கினர் தொல்காப்பியர். மொழி பெயர்ப்பினைப் பெறும் மொழியின் மரபுக்கு ஏற்ப அமைக்க வேண்டும் என்பது அதன் குறிப்பு. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் மறைவழியாகிய கதையினைத் தமிழுக்கு ஆக்கிய போது, இந்த நாட்டுத் தத்துவச் சூழலுக்கும் மூவேந்தர் மரபினுக்கும் இயையுமாறு யாத்துள்ள பான்மை இங்கு நினைவு கூரத்தக்கது. மேலும், தமிழ் மொழியின் வழிக்கு ஏற்பப் பணிபுரிய விரும்பிய அவர்க்கு நாடகப் பணியின் தேவை புலப்பட்டது. ஆதலின், அவ்வகையிலும் மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தார் பேராசிரியர்.

சுந்தர மூர்த்தி நாயனரின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியாக விரிந்தது. அது பின்னர்த் திருத்தொண்டர் புராணமாகச் சேக்கிழார் திருக்கரம்பட்டுப் பொலிந்தது. வர வர விரிவும் பெருக்கமும் பொலிவும் பெற்றமையினைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் இக்குறிப்பு விளக்குகின்றது. மேலும், விருத்தமாக அமைந்தது முதலில் தோன்றிய திருத்தொண்டத் தொகை; பின்னர் அதன் கருப்பொருள் ஓர் அந்தாதி உருவாக உதவியது. அதன் மேலும் அவ்வந்தாதியின் கருப்பொருள் பெருங்காப்பிய வடிவு பெறலாயிற்று. இவ்வாறு ஒவ்வோர் ஆசிரியரிடத்து ஒவ்வொரு வடிவம் பெறும் ஒரே கருப்பொருள் என்பதற்கு மனேன்மணீய தோற்ற வரலாறும் ஒரு சான்ருகிறது. உரைநடைக் கதையாகக் கலைப் பொலிவின்றி இருந்த ஒன்று லிட்டன் கருத்திற் பதிந்து, கதைக் கவிதையாக மாறியது; அது பேராசியர் சுந்தரனுரின் கருவில் அமைந்து நாடகக் காவியமாகப் பிறந்தது. வெறும் பட்டியலாக அமைந்தது திருத்தொண்டத் தொகை. கதைக் கருவைச் சுட்டிக்காட்டுவதாக விரிந்தது, திருத்தொண்டர் திருவந்தாதி. திருத்தொண்டர் புராணமோ, ஒவ்வொரு கதைக்கும் உறுப்பு நலன்கள் உறுவித்துக் காப்பியக் கதை வடிவு கொடுத்தது; மேலும் பெரிய புராணம் எனச் சிறப்புப் பெயர் பெறுமளவுக்குத் திரண்ட நிலையில் ஒரே பெருங்காப்பியமாகவும் அமைந்தது. காலமும், கருத்தாவும் மாறும் போதெல்லாம் கவினும், காட்சியும் மாறியதையே தொண்டர் புராணம் துலக்குகின்றது. அப்படியே, வெறும் நாடோடிக் கதைபோன்ற கதைக் கரு உருவக மாலைக்கு இடமாய்த் தத்துவ உள்ளுறைகொண்ட நாடகக் காப்பியமாய் மாறியிருப்பதை மனேன்மணீயம் புலப்படுத்துகின்றது.

மூலக் கதையின் போக்கும், மனேன்மணீயக் கதைப் போக்கும் ஒன்றே; லிட்டனின் இரகசியப் பாதையில் வரும் பாத்தி

ரங்களை மனோன்மணீயத்திலும் அடையா ளம் கண்டு கொள்ளலாம்.

லிட்டனின் ஓமார்ட்டீசு

			சுந்தரனாரின் சீவகன்
,,	டெல்யூடஸ்	,,	சுந்தரமுனிவர்
,,	ஆர்க்கியோப்	,,	மனோன்மணி
,,	சீதஸ்	,,	குடிலன்
,,	ஜாரியட்ஸ்	,,	புருடோத் [தமன்

எனப் பெயர் மாறி வருகின்றனர்; பெயர் மாற்றமே யன்றிப் பாத்திர மாற்ற மன்று. கதைப் பாடலை நாடகக் காவியமாக மாற்றி யதற்கு ஏற்பக் கிளை நிகழ்ச்சிகளும், துணைக்கருவும் (Sub. plot) அமைந்திருப் பது பேராசிரியர் சுந்தரனாரின் கலைத்திற னாகும். மாதர் பால் பெறும் சிற்றின்ப வெறியனாய் 'இச்சுகமே சுகம் மெய்ச்சுகம் விளம்பில்' என்று பிதற்றித்திரியும் பலதே வன்—பேணுதகு சிறப்பின் பெண்மைக் களஞ்சியமாய், தியாகப் பெருமாட்டியாய் புத்தி தத்துவத்தின் உருவகப் பாத்திர மாய் உலவும் வாணி—இயற்கைப் பித்த னாகி, அன்பே இலக்காய் எங்கணும் இல கும் நுட்பங்காணும் நடராசன்,—நல்லவ னையும், வல்லவனையும் நடந்து காட்டும் நாராயணன்,—உருவக மாலையின் உட் கருவை உய்த்துணர வல்லார்க்கு உதவி யாய் அமையும் கருணாகரர், நிட்டாபரர் முதலாகிய பாத்திரங்களெல்லாம் சுந்தர னாரின் சொந்தப் படைப்புக்களே. இப் பாத்திரங்கள் ஊடாடி வந்து நாடகக் களத்தை விரிவாக்குவதற்கு ஏற்ற நிகழ்ச் சிகளெல்லாம் தமிழ்ச் சுந்தரரின் கற்பனை யில் எழுந்தனவே.

இலக்கிய வடிவில் இருக்கும் காவியங் கள் சில வேளைகளில் திரைச் சீலைகளில் ஆடி வருவதுமுண்டு. செவிப்புலனும் கதையினைக் கட்புலனுக்கும் திரைமாற்ற உத்திக்காகக் காவிய ஆசிரியனின் கதை யையே சிதைத்துச் சீரழிப்பதும் உண்டு. உருவ மாற்றத்தால் உத்தி மாற்றம் ஏற் படலாம்; ஆயின், உத்தியின் பெயரால் கதையின் உயிரையே சிதைத்துவிடக் கூடாது. பேராசிரியர் சுந்தரனார் நாடகக் காப்பியமாக மாற்றியதற்கு ஏற்ற மாற் றங்களும், சேர்க்கைகளும் வகுத்தார்; எனினும் 'மறை வழி'யின் இதயத்தைச் சிதைக்கவில்லை. முன்னிலும் சீர்பெறச் செய்துள்ளார். அம்மட்டோ! பல இடங் களில் 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றும்' தன்மையினையும் மனோன்மணீ யத்தில் காணுகின்றோம். எடுத்துக் காட்டாகச் சில காட்டுவோம்.

ஆர்க்கியோப் (மனோன்மணீ) கனவு கண்டாள். அதில் யாரோ ஒருவன் பாடல் ஒன்றை யாழில் இசைக்கக் கேட்டது வானம்பாடி. அப்பாடல் இதுகாறும் எவ ரும் கேட்டறியாத இனிமையுடையது. அதே நினைப்பில் தோய்ந்துழலும் வானம்பாடி அந்த இசையினை அதே சுருதியில் பாட முனைந்தது; பல்கால் முயன்றது; வெற்றி காணவில்லை. இச்செய்தியை.

"And as a nightingale that having heard A perfect music from some master's lyre, Steals into coverts lone, With her own melodies no more contented But haunted by the strain, till then unknown Seeks to re-sing it back, herself to charm Seeks still and ever fails Missing the key note which unlocks the music, So, from her former pastimes in the choir of comrade virgins, stole Argiope, Lone amid summer leaves Brooding that thought which was her joy and trouble."

என்று லிட்டன் பாடியுள்ளார். கவிக் கூற் றாக அமைந்த இத்தொடர்களின் பாங் கினைச் சுந்தரனார் நாடகப் பாத்திரத்தின் கூற்றாக அமைத்துப் பாடுகிறார்.

பஞ்ச வனக்கிளி செஞ்சொல் மிழற்றி
இசையது விரித்தோர் பிசித மரமேல்
இருந்து பாடு மெல்லை ஓர் வானவன்
திருந்திய இன்னிசை அமுதிற் செப்பிப்
போயது கண்டு சேயதோர் போந்தையில்
தனியே பறந்துபோய்த் தங்கி அங்கவன்
பாடிய இசையே கூவிட உன்னி

நாடி நாடிப் பாடியும் வராது
வாடி வாயாது மூடி மௌனமாய்
வருந்தி யிருந்ததாக் கண்ட கனவும்
நேற்றன் றேஎனக் கியம்பினே...

என்ற சீவகன் உரையிலும்,

"மண்ணுள் மேனியும் உண்ணுள் அமுதும்
முடியாள் குழலும் படியாள் இசையும்
நடவாள் யாழும் நடவாள் பொழிலும்
அணியாள் பணியும் பணியாள் ஏவலும்
மறந்தாள் கிளியும் துறந்தாள் அனமும்
தூங்குவாள் போன்றே ஏங்குவாள் எளியை
நோக்குவாள் போன்றே நோக்குவள்
(வெளியை
கேட்டும் கேட்கிலள் பார்த்தும் பார்க்கிலள்
மீட்டும் கேட்பள் மீட்டும் பார்ப்பள்
தனியே இருப்பள் தனியே சிரிப்பள்
விழிநீர் பொழிவள் மெய்விதிர்த் தழுவள்."

என்ற செவிலி உரையிலும் லிட்டன் தீட்டிய ஆர்கியோப் தமிழ் மனோன்மணியாய் உலவுகிருள். பெயர்ப்பன பெயர்த்து, விரிப்பன விரித்து, களைவன களைந்து, கவின் பெற மொழி பெயர்க்கும் திறம் இங்கு உணரத்தக்கது.

ஆர்கியோப் (மனோன்மணி) கனவு கண்டதிலிருந்து அடைந்த மாறுதலுக்குரிய காரணத்தினை ஒமார்ட்டீசால் (சீவகன்) உய்த்துணர முடியவில்லை.

The king dis cerned
the change in his fair child,
And question oft,
yet could not learn the cause,
The sunny bridge between
The lip and the heart
which childhood builds was
broken

இவ்வரிகளில் குழவிப் பருவம் உதட்டுக்கும், உள்ளத்திற்கும் ஒரு பாலம் அமைப்பதாகவும், அப்பருவம் முடிவுற்றபோது அப்பாலம் சிதைந்ததாகவும் குறிக்கிருர் லிட்டன் பிரபு. இக்கருத்தினை ஒட்டி - ஆயின், சற்று மாற்றி,

குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்

எனச் சுந்தர முனிவர் கூற்ருக அமைக்கிருர், பேராசிரியர் சுந்தரனுர்.

முதலிற் காட்டிய எடுத்துக் காட்டில் காதல் நோயால் வருந்தும் தலைமகளின் மெய்ப்பாடுகளைத் தமிழ் இலக்கிய மரபு வழி விரித்துக் கூறியுள்ளார்; மரபு போற்றி அதர்ப்பட யாத்த பேராசிரியர், மூல நூலின் போக்கினையும் மறந்தாரல்லர். இரண்டாம் எடுத்துக்காட்டில் குழவிப் பருவம் உதட்டுக்கும், உள்ளத்துக்கும் இடையில் கட்டும் பாலம் சிதைந்ததைத் தமிழ் வழியில் அமைக்கும் போது, இந் நாட்டுச் சமயத்துறையினர் நன்கு அறிமுகப்படுத்தியுள்ள புளியம் பழமும், தோடும் பேராசிரியரின் நினைவிலே வந்துற்றன. இந்நிலத்துக்கு இயல்பான அவ்வுவமையினை அமைக்க முனைந்த பேராசிரியர் மூல நூலுக்குரிய உதட்டுக்கும், உள்ளத்துக்கும் இடையில் தான் அமைத்துள்ளார்.

ஒமார்ட்டீசுக்கு அறிவுரை கூறும் டெல்யூடஸ்,

"Look round the forest of Kings
And to the stateliest wed thy royal blossom

என்று கூறுகிருர். அதையே சுந்தர முனிவர் கூற்ருக,

நிசிதவேல் அரசா டவியில்
உசிதமாம் ஒருதரு விரைந்துநீ உணரே

என அமைக்கிருர் பேராசிரியர் சுந்தரனுர்.

கன்னிப் பருவத்தில் தந்தையன்பு போதாது என்பதை லிட்டனின் கவிதை,

Sharp is a father's pang when comes the hour, In which his love contents child no more

என்று பாடுகிறது. பேராசிரியர் சுந்தரனுரின் சுந்தர முனிவர் இதையே

'தாதா அன்பு போதா தாகும்
காலம் கன்னியர்க்கு உளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனே போலும்.'

என்று கூறுவதைக் கேட்கின்றோம்.

லிட்டனின் சீதஸின் (குடிலன்) கருத் தோட்டம்.

In armed revolt how oft kings disappear and none dare call it murder, And when a crown falls bloodstrained in the dust, The strong man standing nearest to its fall Takes it and crowns himself; And heirs remote are swept from earth as rebels.

என்ற வரிகளாக உருக் கொள்ளுகிறது. இதே கருத்தோட்டம் குழலனிடமும் ஏற் படுவதை மனோன்மணீயம் புலப்படுத்து கின்றது.

"போர்வந் திடிலிவண் நேர்வந் திடுமெலாம்
யாரிற வார்கள் ? யாரறி வார்கள் ?
முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார் ?
அரச வமிசக் கிரமம் ஓரில்
இப்படி யேமுதல் உற்பவம் இருக்கும்
சிலதலை முறையாப் பலவரு டஞ்செலில்
இந்துவில் இரவியில் வந்தோ ரெனவே
மூட உலகம் மொழியும்"

என்ற வரிகளில் இவ்வொற்றுமையினைத் தெளிவுறக் காணலாம்.

ஓமார்ட்டீசின் கோட்டையைச் சுற்றி முற்றுகை யிட்டுள்ளான் ஜாரியட்ஸ். அந்த முற்றுகையைக் கைவிட்டுப் போவ தற்கு அவன் ஒரு நிபந்தனை விதித்துத் தூது அனுப்புகிறான்.

"If, but in homage to my sovereign throne, Thou pay this petty tribute once a year; six grains of scythian soil, One urn of water spared from scythian fountains.

என்ற பாடலில் அந்த நிபந்தனையைக் காணலாம். ஆறுமணி யளவு சித்திய மண்ணும், ஒரு குடம் சித்திய ஊற்று நீரும் ஆண்டு தோறும் திறைப் பொருளாகச் செலுத்த வேண்டும் என்பது ஜாரியட்ஸ் விதித்த நிபந்தனை. இந்த நிபந்தனை சிறு மாறுதலோடு மனோன் மணீயத்திலும் இடம் பெறுகின்றது.

"...... உறவா வதற்கே
உன்னிடில் தாம்பிர பன்னியி னின்றொரு
கும்ப நீரும்ஓர் நிம்ப மாலையும்
ஈந்தவன் ஆணையில் தாழ்ந்திடில் வாழ்வை"

எனப் புருடோத்தமனின் தூதுவர் சீவ கனிடம் கூறுகின்றனர். பாண்டியர் குலத்து வீரத்தையும் மானத்தையும் வளர்த்த பொருநை நீரையும், அக்குலத்து அடையாள மாலையாம் வேப்ப மாலையை யும் திறைப் பொருளாகக் கேட்கின்றான் சேரன்.

இந்த நிபந்தனையை மூலத்தில் வரும் ஓமார்ட்டீஸ் எப்படி ஏற்கிறான் என்பதைக் காணவேண்டும்.

"And the scyth answered-'Let the Mede demand, That which is mine to give or gold or life; The water and the soil, Are every grain and drop, my country's."

ஜாரியட்ஸ் கேட்கும் பொருள்கள் எனக்கு உரியவை அல்ல. ஒவ்வொரு மண்துகளும், ஒவ்வொரு நீர்த் துளியும் இந்த நாட்டுக்கே உரியவை என்று மறுத்துரைத்துத் தூதரைத் துரத்துகிறான் ஓமார்ட்டீஸ். மனோன் மணீயத்துச் சீவகனும், ஓமார்ட்டீஸின் மறுபதிப்பாக அமைந்து அவன் கருத்தையே எதிரொலிக்கின்றான்.

"...... தன்பொரு ளாயின்
ஏற்றிரந் தவர்க்கியாம் யாதுமீந் திடுவோம்
அருந்திடச் சேரன் அவாவிய புனலும்
விரும்பிய சுரும்பார் வேம்பும் விதுகுலம்
வரும்பரம் பரைக்காம் அல்லால் எனக்கே
உளவல ; அதனுல் ஒருவனீந் திடுதல்
களவெனக் காணுதி..."

சீவக வழுதியின் பொறுப்புணர்ச்சி இக் கூற்றின் கண் தெளிவாகப் புலப்படுகிறது. பாஞ்சாலி சபதத்தில் சுப்பிரமணிய பாரதியார் 'தேயம் வைத்திழந்தான் சீச்சீ சிறியர் செய்கை செய்தான்' என்று தருமனை மதிப்பிடும் இடம் ஒப்பிட்டு உணரத் தக்கது. மூலத்தில் ஓமார்ட்டீசு சொல்லும் கருத்தினைச் சீவகன் எதிரொலிக்கிருன் என்பதோடு இதனை நிறுத்தி விடுவதற்கில்லை. அரசியல் சூதாடிகட்கு நாட்டாட்சியும் சூதுகளத்துப் பொருளாகி விட்ட காலம் சுந்தரனார் காலம். தேயம் வைத்திழந்து சிறியர் செய்கை செய்த புல்லர்களால் நாட்டுரிமை பறிபோன அவலத்திற்கு இரங்கிய பாங்கினையும் இச் சீவகன் கூற்றிலே உணர்கின்றோம்.

ஆர்கியோப் கண்ட கனவின் விளைவாகக் காதல் நோய்க்கு இலக்காகின்ருள். அவள் கொண்ட நோய்த்திறம் ஓமார்ட்டீசுக்குத் தெரியவில்லை. அரசவைக் குருவாகிய டெல்யூடஸ் அந்நிலையில் தரும் விளக்கத்தில்,

"Sharp is a father's pang when comes the hour, In which his love contents his child no more, And the sweet wanted smile, Fades from his hearth stone to rejoice a stranger's."

என்ற கூற்று அமைந்துள்ளது. இதன் மையக் கருத்து, பருவகாலம் உறும்போது கன்னியர்க்குத் தம் தந்தையர் அன்பு போதியதாயிருப்ப தில்லை என்பதே. இந்த மையக் கருத்தினை மனோன் மணீயச் சுந்தர முனிவரும் கூறுகின்ருர்.

"தாதா அன்பு போதா தாகும்
காலம் கன்னியர்க் குளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும்"

என்று மனோன்மணியின் பருவ நோய் பற்றிச் சீவகனிடம் விளக்குகிருர் சுந்தர முனிவர்.

மேற்காட்டியவை சில எடுத்துக் காட்டுகளே; இன்னும் பல இடங்களில் லிட்டனின் சொற்றொடர்கள் மனோன்மணீயத்தில் எதிரொலிக்கக் காணலாம். விரிவஞ்சி இவ்வளவில் நிறுத்துவம்.

வித்துக்கு ஏற்ற விளைவாகவும், விளைவுக்கு உரமூட்டும் வித்தாகவும் இரு கலைஞர்களின் படைப்பும் அமைந்திருப்பதை மேற்காட்டிய சான்றுகள் புலப்படுத்தும்.

இவ்வாறு கூறுவதால், மனோன் மணீயத்திற்கும் மறை வழிக்கும் வேற்றுமையே இல்லையென்று கருதுதல் வேண்டா. இது பற்றிய கருத்தோட்டம் மற்றொரு கட்டுரைக்கு உரியது.

"கௌமார முறைமை"

"சாத்திரங்கள் நாலின்நெறி நான்கும் சொன்ன
சாந்தலிங்க மூர்த்தி அருந் தவத்தி னோர்க் கோர்
நேத்திரம் நேர். அருள் நெறியிற் கொன்று வெந்த
நிணமருந்தும் வேள்வி செய நினைப்போர் மீதும்

ஆத்திரங் கொண் டிகழாமை கொடிதென் றுலும்
அநுபூதி ஞான நிலை அடையத் தக்க
பாத்திரம் மூன் றுலகினும் ஒன் று அரிதென் றோர்ந்து
பகர்ந்த மொழி அறிஞர் மகிழ் பான்மைத் தாமே."

—தவத்திரு தண்டபாணி சுவாமிகள்

தவத்திரு சபாபதி சுவாமிகள்,
மௌனசுவாமிகள் மடம், சிதம்பரம்.
49 ஆம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர்.

கவியரசு
திரு. கு. நடேச கவுண்டர்,
கல்லூரி முன்னாள் தலைவர்.

திரு. சி. ஆர். நடராசன்
பி.ஏ., பி.எல்., அவர்கள்
கல்லூரிக் கழக உறுப்பினர்.



தவத்திரு சாந்ததேவ சாரங்க தேசிக
சுவாமிகள் பெரிய மடம், கும்பகோணம்,
43வது ஆண்டு நிறைவு விழாத் தலைவர்.

திரு. ச. பா. மாணிக்கவாசகம்,
சங்கத்தின் முன்னாட் செயலாளர்.

திரு. அருணாசல நாட்டார் பி.ஏ.,
சங்கத்தின் முன்னாள் செயலாளர்.

வள்ளுவர் கண்ட அரசியல்

[திரு. உ. பழநி, எம். ஏ., பி. ஓ. எல்., தமிழ் விரிவுரையாளர்,
தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

திருவள்ளுவர் பொருட்பாலினை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்திக் கூறுகின்றார். அரசியல் என்பது அரசனைப்பற்றிய இலக்கணம் எனப் பொருள்படும். அதனை இருபத்தைந்து அதிகாரங்களால் விரித்துக் கூறுகிறார். அரசனுடைய ஆட்சிக்குத் துணையாகவுள்ள அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறும் அரசனுக்கு அங்கங்கள் என்று கூறப்படும். நாடாளும் மன்னனுக்கு அமைச்சர்கள் துணையாக இருக்கிறார்கள். நாடு பொருளால் வளமுறுகின்றது. பொருள் வளத்தால் சிறப்புறும் நாடு மிகச் சிறந்த நாடாகக் கருதப்படுவதில் வியப்பில்லை. பொருளால் வளமுறும் நாட்டைப் பாதுகாக்கச் சிறந்த அரணும் படையும் வேண்டும். நாடு வளத்தாற் சிறந்த தாயினும் பாதுகாப்பில்லையாயின் பகைவர் வயப்பட்டு அல்லலுக்குள்ளாகும். நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அரணும் பொருளும் படையும் துணை செய்வதுபோல நட்பும் பெரிதுந் துணை செய்யும். ஆகவே நாடாளும் மன்னனுக்கு இந்த ஆறும் இன்றியமையாதது வேண்டப்படுதலின் இவை அங்கம் அல்லது உறுப்புக்கள் எனப்பட்டன. மன்னனுக்கும் மன்னனுக்கு இன்றியமையாத உறுப்புக்களுக்கும் இலக்கணம் கூறியபின் நல்ல குடியில் பிறந்தார்க்குரிய நற்பண்புகளையெல்லாம் தொகுத்து ஒழிபியல் என்னும் பகுதியில் கூறுகின்றார்.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் மன்னனை மக்கட் சமுதாயத்தின் உயிரெனக் கருதினர். நெல்லும் நீரும் உயிரை உடம்பில் நிறுத்தும் ஆற்றலுடையன. ஆதலும் நெல்லும் நீரும் உயிர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன. அவ்வாறு சிறப்பித்துச் சொல்லப்படும் நெல்லும் நீரும், நல்ல ஆட்சி உள்ளவழியே மக்களுக்கு நன்கு பயன்படும். நல்ல ஆட்சியில்லாவிட்டால் உயிரை உடம்பில் நிறுத்தும் ஆற்றலுள்ள நெல்லும் நீரும் பிறரால் கவரப்பட்டுப் பயன்படா தொழியும். இதனாலே மோசிகீரனார் என்னும் புலவர், ''நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்று மன்னனைச் சிறப்பித்துக் கூறினர்.

மக்களுக்குத் தலைவனாகிய மன்னனுடைய இயல்பினை எல்லா நாட்டவரும், எக்காலத்தும், ஒத்துக்கொள்ளும்படியாக வள்ளுவர் கூறுகின்றார். அரசியலில் கூறப்படும் இலக்கணங்கள் மக்கள் தலைவனாகிய அரசனுக்குப் பொருந்துவதாக இருந்தாலும் மக்களுக்கும் அவ்விலக்கணங்களுள் பல இன்றியமையாது வேண்டப்படுவனவே. அரசியலில் கூறப்படும் இறைமாட்சி, செங்கோன்மை, கொடுங்கோன்மை, ஒற்றுடல் ஆகிய அதிகாரங்கள் அரசனுக்கே உரியன. கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்து செயல்வகை முதலியன அரசனுக்கும் மக்களுக்கும் உரியன. இவ்வாறே வள்ளுவர் கூறுவனவற்றைப் பகுத்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அரசனுக்குரிய இலக்கணங்களைக் கூறும் பொழுது வள்ளுவர் அரசனுக்கு அஞ்சாமை, ஈகைத்தன்மை, அறிவு, ஊக்கம் ஆகிய இவற்றோடு காரியங்களை விரைந்து செய்யும் ஆற்றலும் அதற்கேற்ற கல்வியும் துணிவும் இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். மன்னனைக் குடிகள் காண விரும்பும்பொழுது கண்டு குறைகளைச் சொல்லுதற்குரிய வாய்ப்பினை மன்னன் எளிதாக நல்குதல் வேண்டும். குறைகேட்டு அவர்களிடம் இனிமையாகப் பேசி அக்குறையை நீக்கிக் காக்க வல்ல மன்னனை மாநிலம் கடவுளாகவே கருதும்.

கல்வி மக்களுக்குக் கண் போன்றது. கல்வி பெறாதவர் முகத்தில் கண்களைப் பெற்றிருப்பினும் கல்வியினாலாகிய விளக்கம் பெறுமையின், அறிஞர்கள் காலந்தோறும் சொல்லிய கருத்துக்களையெல்லாம் அறியுந் தன்மை உடையரல்லர். அறிஞர்களுடைய கருத்துக்களெல்லாம் நூல்வடிவிலே உள்ளன. கற்றவர்கள், நூல்களைப் படிக்கும்பொழுது அந்த அறிஞர்களோடு பேசுகின்றார்கள். அவர்களுடைய கருத்துக்களைக்கண்டு மகிழ்கின்றார்கள். கல்லாதவர்கள், உலகப் பொருள்களையெல்லாம் காணும் ஆற்றலுடைய கண்களால் நூல்களை விரித்துப் பார்க்கும் பொழுது அந்நூல்களிலுள்ள பொருள்களைத் தெரிந்துகொள்ள இயலாமல் விழிக்கின்றனர். வெள்ளை ஏடும் கருப்பு எழுத்துந்தாம் தெரிகின்றன. ஐயோ! பாவம், எல்லாவற்றையும் காணும் கண்களுக்கு நூல்களிடம் செல்லும்போதுதான் அவற்றின் குருட்டுத் தன்மை விளங்குகிறது. குருட்டுத் தன்மை வாழ்க்கையில் எவ்வளவு துன்பத்தைப் பயக்கின்றது! அவ்வளவு துன்பத்தைக் கல்லாமையும் பயக்கின்றது. ஆதலின் வள்ளுவர், ''முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்'' என்றார்.

எவ்வளவு கற்கின்றோமோ அவ்வளவிற்கு அறிவு பெருகும். இதனை வள்ளுவர் ஓரழகிய உவமையால் விளக்குகிறார். ஆற்றுப்படுகையில் தோண்டினால் தோண்டுகின்ற அளவு தண்ணீர்

ஊறும். கல்பாங்கான இடங்களில் தோண்டினால் மிக ஆழமாகத் தோண்டியவிடத்தும் நீர் காணப் படாது. ஆகையினால் கல்பாங்கான இடத்தில் தோண்டுவதை உவமையாக எடுக்கவில்லை. மணற்பாங்கான இடத்தில் தோண்டுகின்ற அளவு நீர் ஊறும். ஊற்றுநீரின் பெருக்கம் கிணறுதோண்ட முடியாதபடியும் சங்கடப்படுத் தும். ஆதலின் எவ்வளவு கற்கின்றோமோ அவ் வளவு அறிவு பெருகும் என்பதற்குத் தோண்டிய அளவு நீர் ஊறும் மணற்கேணியை உவமை யாகக் காட்டினார். கல்விக்குரிய சிறப்பு என்ன வென்றால் கற்றவர், தாம் கற்ற கல்வியினால் தாமும் இன்புறுகின்றார்; உலகத்திற்கும் இன்பம் செய்கின்றார். தாம் இன்புறும் ஒன்றிற்கு உலகம் இன்புறுவது கல்வி ஒன்றிற்கேயாகும். ஆகவே கல்வி, 'கேடில் விழுச் செல்வம்' என்று போற்றப் படுகிறது.

கல்வியின் சிறப்புப் பத்துக் குறள்களில் அடங்கிவிடவில்லை. ஆதலின் கல்வியின் சிறப்பைக் கல்லாமையினால் வரும் இழிவாலும் கூறுகின்றார். அத்துடன் அமையாது பல்வேறு நூல்களின் பொருள்களைப் பலரிடத்தும் பல காலும் கேட்டலாகிய கேள்வியினாலும் அறிவு வளருமாதலின் கேள்வி என்னும் அதிகாரத்தால் கேட்டலால் அறிவு பெருகுமென்றும், ஆதலின் அக்கேள்வியினைச் சிறிதாக இருந்தாலும் சிறி தென்ணி இகழாது நாடோறுங் கேட்டுவரல் வேண்டுமென்றும், அப்படிக் கேட்டு வருதல் 'பலதுளி பெருவெள்ளம்' என்பதுபோல நாடோ றும் சிறுகச் சிறுக அறிவினை நல்கிப் பேரறிவினை உண்டாக்குமென்றும் கூறுகின்றார். படித்து ஒரு பொருளை அறிந்துகொள்ளப் பெரு முயற்சி வேண்டும். ஆனால் அப்பொருளைக் கற்றவர் சொல்லக் கேட்கும்பொழுது வருத்தமின்றி உணர்ந்து கொள்ளலாம். தானே பொருளை ஈட்டும்போது மிக முயற்சியும் உழைப்பும் தேவை. ஆனால் அப்பொருளைப் பிறர் தருவாரானால் அதனைப் பெறும்போது அத்துணை முயற்சியும் உழைப்பும் தேவைப்படுதல் இல்லை. அவ்வாறே கற்குங்கால் பெருமுயற்சி வேண்டப்படுகிறது. பிறர் சொல்லக் கேட்குங்கால் அத்துணை முயற்சி வேண்டப்படுவதில்லை. அதனால்தான் வள்ளுவர், ஒருவன் கற்றிருத்தல் இன்றியமையாதது. ஒரு வன் பொருளின்மையினாலோ படிக்கவேண்டும் என்னும் எண்ணம் இளமையிற் கொள்ளாமை யினாலோ கல்லாதவனாக இருக்கக்கூடும். அது பற்றி அவன் கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் கற்றவர் சொல்லும் நூற்பொருள்களைக் கேட்கவேண்டும் என்னும் அவா மட்டும் உடைய வனாயிருந்தால் அதுவே அவனை அறிவுடைய வனாக்கிவிடும் என்பதைக், "கற்றிலனாயினும் கேட்க" என்பதால் அறிவுறுத்துகின்றார். கற்ற லாலும் கேட்டலாலும் அறிவு பெருகும். இந்த அறிவேயன்றி மக்களுக்கு இயற்கையறிவும் உண்டு. இந்த அறிவு உண்மையறிவு என்றும் சொல்லப்படும். இதனையே 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தால் விளக்குகின்றார்.

ஆகவே அறிவுடைமையைப்பற்றி வள்ளுவர் சொல்லும்போது கற்றலாலும் அறிவு பெருகும்; கேள்வியாலும் அறிவு பெருகும்; இவ்விரண்டு மன்றி இயற்கையறிவும் ஒன்றும் உண்டு என்று முடிக்கிறார்.

அறிவிற்குச் சிறந்த அடையாளங்கள் என்ன வென்றால் உலக நடைக்கு ஏற்ப நடத்தல், அஞ்சவேண்டுவனவற்றிற்கு அஞ்சுதல், தமக்கு வருங் கேட்டினை முன்னரே அறிந்து அது வாரா வண்ணம் தடுத்துக் கொள்ளுதல் ஆகியவையாம்.

கல்வி மக்களாய்ப் பிறந்தாரனைவர்க்கும் இன்றியமையாது வேண்டற்பாலதாயினும் மக்க ளுக்குத் தலைவனாகிய அரசனுக்கு அது மிகத் தேவையானது என்பதைப் புலப்படுத்த அதனை அரசியலிற் கூறினார்.

மக்கள் நீக்கவேண்டிய குற்றங்கள் ஆறாகும். அவை காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்பன. இந்த ஆறு குற்றங்களுள்ளும் காமம், வெகுளி, உவகை என்பன முற்ற நீக்கப்படவேண்டிய குற்றங்கள் அல்ல. வாழ்க்கையில் ஈடுபட்டு வாழும் மக்க ளுக்கு அளவுகடவாத காமமும், எல்லைகடவாத கோபமும், வரம்புகடவாத மகிழ்ச்சியும் வேண் டப்படுவனவே. இவை அளவுகடவாத நிலையில் இருந்தால்தான் மக்கள் வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ முடியும். ஆனால் கடும்பற்றுள்ளம் என்னும் கருமித் தன்மையும் பணியவேண்டிய பெரியோர் களிடத்துப் பணிந்தொழுகாத வீணான மானத் தன்மையும் மதம் என்னும் குற்றமும் அறவே நீக்கப்படவேண்டுவனவாகும். மானம் என்பது இருவகைப்படும். ஒருவன் தன்னுடைய உயர் நிலையிலிருந்து தாழ்வதற்கேதுவான இழிந்த செயல்களைச் செய்யக்கூடாது. அப்படித் தவறிச் செய்துவிட்டால் அந்தத் தவறுகளைப் பொறுத் துக்கொண்டு உயிர் வாழக்கூடாது. இது உயர்ந்த மானமெனப்படும். இதுவே வேண்டற்பாலது. இதனை வள்ளுவர் 'மானம்' என்னும் ஓரதிகாரத் தால் விளக்கிக் கூறுகின்றார். நன்மையில் நீங்கிய மானம் அல்லது தீய மானம் என்பது தான் பணியவேண்டிய பெரியோர்களிடத்துப் பணியாமல் செருக்குக் கொண்டிருத்தல். தன் னையே மிகப் பெரியவனாக நினைத்தும், பேசியும் வருபவனை 'இவன் மதங்கொண்டவன், என்று உலகோர் கூறுவதாலும் 'மதம்' என்பது குற்றத் தினுள் ஒன்று என்பது நன்கு அறியக்கிடக் கின்றது. இந்த அறுவகைக் குற்றத்துள்ளும் பெரிய குற்றம் கடும்பற்றுள்ளம் என்னும் கருமித் தன்மையாகும். இந்த ஒரு குற்றம் மட்டும் ஒருவ னிடத்தில் இருக்குமானால் அவனிடத்தில் எவ் வளவு நற்குணங்களிருந்தாலும் அந்த நற் குணங்களெல்லாம் பிறருக்குத் தெரியாது. இத் தீக்குணமே எல்லோருடைய கண்களுக்கும் புலப்படும். ஆகவே குணங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித்தான் மேம்பட்டுத் தோன்றவல்லது இத்தக் கருமித்தனம். ஒருவன் செட்டாக வாழ

ாம்; ஆனால் கருமியாக வாழக்கூடாது. செட்டாக வாழ்தல் வரவுக்குத் தக்கபடி அளவுக்கு ருமல் செலவு செய்தல். கருமியாக வாழ்த லன்பது செலவு செய்ய வேண்டியதற்கும் சலவு செய்யாது பொருளை இறுகப் பிடித்து வாழ்தல். "ஆற்றேடு போனாலும் போவேன்; தோணிக்காரனுக்கு ஒரு காசும் கொடுக்கமாட்டேன்" என்பது போல்வது கருமித்தனம்.

மக்கள் குற்றம் நீக்கி வாழ்தலோடு, சிறு குற்றம் தவறிச் செய்ய நேர்ந்துவிட்டாலும் அதனைப் பெரிதாக எண்ணி வருந்துதலும், பின்னரும் அத்தகைய குற்றத்தை வழுவியும் செய்யக் கூடாது என்றெண்ணுதலும் சிறந்ததாகும். ஒருவன் செய்யும் குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும். ஆதலின் குற்றத்தை 'அற்றந்தரூஉம் பகையாக' அஃதாவது அழிவை உண்டாக்கும் பகையாக எண்ணிக் குற்றத்தைத் தான் செய்யாதவாறு தன்னைக் காத்தொழுகவேண்டும். பிறரிடம் உள்ள குற்றத்தை யாரும் எளிதாகக் காண்பார்கள்; பிறர் அறியவும் சொல்லுவார்கள். ஆனால் அப்படிச் சொல்லுபவர்களே தம்மிடமுள்ள குற்றத்தைத் தாம் காணமாட்டார்கள். பிறரிடமுள்ள குற்றத்தைக் காண்பதற்கு முன்னர் நம்மிடமுள்ள குற்றத்தைக் காணவேண்டும்; கண்டு அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளவேண்டும். இவைகளே மக்கள் குற்றம் நீங்கிக் குணமுடையவர்களாக வாழ்தற்குரிய வழிகளாகும்.

ஒருவன் குற்றம் நீக்கி வாழ முயலுதல் வேண்டும். அதனுடன் அமையாது தவறு கண்ட விடத்துத் திருத்துவதற்குப் பெரியோர்களையும் துணைக்கொள்ளவேண்டும். பெரியோர்களைத் துணைக் கொண்டால் மட்டும் போதாது. சிறியார் தொடர்பை அறவே நீக்குதலும் வேண்டும். ஏனெனில் பெரியவர்கள் கூட்டுறவு செய்யும் நன்மையைச் சிறியவர் தொடர்பு அழித்துவிடும். அதனால் தான் வள்ளுவர் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் அதிகாரத்தை அடுத்துச் 'சிற்றினம் சேராமை' என்னும் அதிகாரத்தை வைத்துள்ளார்.

தவறு கண்ட விடத்துக் கடுமையாகச் சொல்லி அத்தவறு நிகழாவண்ணம் செய்யும் பெரியோர்களைத் துணையாகக் கொள்ளாத அரசன், கெடுக்கக் கூடிய பகைவரில்லாத போதும் கெட்டு விடுவான். ஆதலின் அரசன் பெரியோர்கள் கூட்டுறவை என்றும் கைவிடுதல் கூடாது. அத்தகைய பெரியோரின் தொடர்பினைக் கைவிடுதல், பலரோடு பகை கொண்டால் எவ்வளவு தீமையை விளைவிக்குமோ அதைப் போலப் பத்து மடங்கு தீமையை விளைவிக்கும் என்று பெரியோர் தொடர்பைக் கைவிடுதலின் குற்றத்தை நன்கு விளக்குகிறார்.

பிறர் செய்தற்கரிய செயல்களைச் செய்பவர்கள் பெரியோராவர். நல்ல செயலுக்கு நன்மையும் தீச்செயலுக்குத் தீமையும் இல்லை என்று அறத்தில் நம்பிக்கையில்லாமற் பேசுபவர்களும், தீயவழியில் நடப்பவர்களும், பெருங்காமுகர்களும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நடிப்பவர்களும் சிறியோராவர். பெரியோர் நட்பு கொள்ளற்பாலது; சிறியோர் நட்பு தள்ளற்பாலது.

'தெரிந்து செயல்வகை' என்னும் அதிகாரத்தால் அரசன் எவ்வாறு காரியங்களை ஆராய்ந்து செய்யவேண்டும் என்பதை விளக்கமாகக் கூறுகிறார். இஃது அரசனுக்குச் சொல்லப்பட்ட தாயினும் மக்களெல்லோர்க்கும் பொருந்துவதே. நாம் வாழ்க்கையில் எவ்வளவோ காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாம் செய்யும் காரியங்களை யெல்லாம் எவ்வாறு சிந்தித்துச் செய்தல் வேண்டும் என்பதை இவ்வதிகாரம் நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

ஒரு காரியம் செய்ய எண்ணும் போதும் அதனால் எவ்வளவு அழியும்? எவ்வளவு ஆகும் என்று எண்ணிப் பார்த்து, ஊதியம் அஃதாவது இலாபம் வருவதாக இருந்தால் செய்யலாம். ஊதியத்திற்கு ஆசைப்பட்டு முதலையே இழக்கும் படியான காரியத்தில் ஈடுபடக்கூடாது. செய்யத்தகாத காரியங்களைச் செய்தலினாலும் கேடுவரும். செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமையினாலும் கேடுவரும். மக்களுடைய இயல்பை அறிந்து அவரவர் பண்பிற் கேற்றவாறு நடந்து காரியத்தை முடித்துக் கொள்ளல் வேண்டும்.

ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவதற்கு முன் வலியினையும் காலத்தினையும் இடத்தினையும் அறிந்து, அவை நம் காரியத்திற்குத் துணைபயப்பனவாக இருக்கின்றனவா என்பது தெரிந்தே காரியத்தைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்.

வலியறிதல் நான்கு வகைப்படும். ஒரு காரியம் செய்யத் தொடங்கும் போது நாம் செய்யப்புகும் காரியம் நன்மையானதா? அதனைச் செய்யத் தொடங்கும் நம்முடைய வலிமை என்ன? அக்காரியம் செய்யும் நமக்கு இடையூறு விளைவிக்கும் பகைவனுடைய ஆற்றல் எவ்வளவு? நமக்கும் நம் பகைவனுக்கும் துணையாக வருபவர்களுடைய ஆற்றல் எவ்வாறுள்ளது? என்னும் நான்கையும் சிந்தித்து அந் நான்காலும் நாம் மேம்பட்டிருந்தால் காரியத்தைச் செய்யத் தொடங்கலாம்; இன்றேல் காரியத்தைத் தொடங்கலாகாது.

சிலர் தமக்கு வலியில்லாமையை அறிந்து பகைவர்களை எதிர்க்காமல் அடங்கிச் செல்வர். சிலர் அத்தகையவர்களை நோக்கி, 'நீ என்ன ஆண்மகனா? உன் உடலில் இரத்தம் ஓடுகிறதா?

இவ்வாறு அடங்கிச் செல்கின்ருயே உனக்கு வீரமிருக்கிறதா? இவ்வாறு வாழ்வதை விட இறப்பது நல்லது என்று அடங்கியிருக்கும் அவனை அடிபடவைக்க முயல்பவர்களும் உண்டு. அதுகேட்டு, அடங்கியிருந்தவன் தன்னை எதிர்த்த வலியவனை எதிர்க்கச் சென்று படாத அடியும் உதையும் பட்டுத் திரும்புதலு முண்டு. ஆத்திரத்தால் சிந்திக்கும் வலியிழந்து வலியாரோடு எதிர்த்து நின்று உதைபட்டு வந்தவர்களையும் வள்ளுவர் கண்டார். கண்டதை அப்படியே குறளாக எழுதினர். ''உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி, இடைக்கண் முறிந்தார் பலர்'' என்பதே அவ்வருமைத் திருக்குறளாகும்.

ஒருவன் காரியம் செய்தலில் நால்வகை வலியையும் அறிதல் போலப் பொருள் வலியையும் அறிந்து அதற்கேற்பச் செலவு செய்து வாழ வேண்டும். ஈதல் சிறந்ததுதான். ஆயினும் ஒருவன் தனக்கு உள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப ஈதல் வேண்டும். வருவாயுள் கால் பகுதியை அறத்தின் பொருட்டு ஈந்து வாழ்தல் வேண்டும் என்று திரிகடுகம் என்னும் நூல் கூறுகின்றது. வருவாய் குறைந்தாலும் குற்றமில்லை. அதற்கேற்றபடி செலவைச் சுருக்கிக் கொள்ளல் வேண்டும்.

வலியறிதல் போலக் காரியம் முடித்தற்குரிய காலத்தையும் ஆராய்ந்து செயலாற்ற வேண்டும். கொக்கு மடைத்தலையில் பெரிய மீனைக்குத்துவதற்காகக் காத்துக் கொண்டே இருக்கும். அப்போது செல்லும் சிறிய மீன்களை யெல்லாம் விட்டு விடும். அதனுல் பெரிய மீனும் சிறிதும் ஐயப்படாது அக்கொக்கின் அருகே வரும். அதனைக் கண்டதும் அதுவரை தவஞ் செய்வது போல் வாடியிருந்த கொக்கு ஒரேகுத்தாக அப்பெரிய மீனைக்குத்தும். நாம் நாடோறும் நீர் நிலைகளில் காணும் காட்சிதான் இது. ஆனுலும் காலம் நோக்கிக் காரியத்தை முடிக்க வேண்டும் என்பதை இக்கொக்கின் செயல் காட்டுகின்றது என்று வள்ளுவர் கருதியதைப் போல நாம் கருதுவதில்லை. புலவர் பெருமக்கள் நாம் அன்ருடம் காணும் சில பொருள்கள், சில செயல்கள் ஆகியவற்றினிடத்தே பல அரிய உண்மைகளைக் கண்டு உலகிற்கு அறிவுறுத்திச் செல்கின்ருர்கள்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வோரிடம் துணைசெய்வதாக இருக்கும். பொருந்தாத இடத்திலே சில செயல்களைச் செய்ய முற்பட்டால் அச்செயல்கள் வெற்றியாக முடியா. கடலின்கண் விரைந்தோடும் மரக்கலங்கள் நிலத்தில் ஓடமாட்டா. அவ்வாறே நிலத்தில் ஓடும் தேர்கள் கடலில் ஓடமாட்டா. தண்ணீரில் இருந்தால் முதலை யானையையும் வெல்லும். ஆனுல் அம்முதலையே தண்ணீரை விட்டு வெளியே வந்து விட்டால் சிறுவர்களே அதனை அடித்துக் கொன்று விடுவார்கள். தண்ணீரில் இருக்கிறபோது இருக்கிற வலிமை அத்தண்ணீரை விட்டு வந்தவுடன் இல்லாமற் போய்விடுகிறது. இதுதான் இடத்தால் வரும் வலிமையாகும். இவ்வாறெல்லாம் மக்கள் ஒருகாரியத்தைச் செய்ய முற்படும் போது இக்காரியம் செய்தற்கு இது ஏற்ற இடமா என்று எண்ணிப் பார்த்து ஏற்ற இடமாயின் செய்ய வேண்டும். ஏலா இடமாக இருந்தால் அக்காரியத்தைச் செய்தல் கூடாது. ஒருவன் எவ்வளவு வலி குறைந்தவனுக இருந்தாலும் அவன் இருக்கும் இடம் சென்று அவனைத் தாக்குதல் கூடாது. யானை சேற்றுநிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் நரியாலும் கொல்லப்படும். அதுபோல வலிமையுடையாராயினும் இடமல்லா இடத்திலே அகப்பட்டுக்கொண்டால் வலிமையற்றவராலும் தோற்கடிக்கப்படுவர். ஆதலின் இடம் மக்களுடைய ஆற்றலையும் வேறுபடுத்தும் ஆற்றலுடையது என்றெண்ணி இடமறிந்து செயலாற்ற வேண்டும்.

அரசன் வினைக்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர்க் கவனிக்க வேண்டுவன பல உள. எல்லாம் நன்கு கற்றவர்களிடத்தும் ஆராய்ந்து காணுமிடத்துச் சில அறியாமை காணப்படும். காரணம் எல்லாம் முற்ற அறிந்தவர்கள் உலகத்தில் யாருமே இல்லை. மக்களைத் தேர்ந்தெடுக்கும் போது, குணமே நிரம்பியவர்களும் குற்றமே நிரம்பியவர்களும் உலகத்தில் யாருமில்லையாதலால் எவ்வளவு குற்றங்களிருக்கின்றன? எவ்வளவு குணங்களிருக்கின்றன என்று எண்ணிப் பார்த்துக் குற்றங்களைக் காட்டிலும் குணம் மிகுதிப்பட உடையவனுக இருந்தால் அவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குற்றம் மிகுதியாக உடையனுயின் அவனைத் தேர்ந்தெடுக்காது தள்ளிவிட வேண்டும். ''குணம் நாடிக் குற்றமும் நாடியவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்'' என்பது வள்ளுவர் கூறிய வழியாகும். ஒருவனை நன்ருக ஆராய்ந்த பின்னர் அவனைத் தேர்ந்தெடுத்து அவன்பால் ஒப்படைக்க வேண்டிய செயல்களை ஒப்படைக்க வேண்டும். யாரையும் நன்கு ஆராயாமல் தெளியக் கூடாது. அவ்வாறு ஆராயாது தெளிந்தால் அது தீராததுன்பத்தைக் கொடுக்கும். நன்கு ஆராய்ந்து தெளியப்பட்டவனிடத்தே மீண்டும் மீண்டும் ஐயப்படுதலும் துன்பத்தைக் கொடுக்கும்; இதனையே 'தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும், தீரா இடும்பைதரும்' என்பதனுல் தெளிவுறுத்துகின்ருர்.

நன்ருக ஆராய்ந்து அலுவலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அலுவலை ஏற்றுக் கொண்டவுடன் மாறுபட்டுப் போதலும் உண்டு. இதனை 'எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையால், வேருகும் மாந்தர் பலர்' என்னும் குறள் காட்டுகிறது. சச்சந்தன் கட்டியங்காரனைத் தனக்கு கேடுசூழ மாட்டான் என்றெண்ணி அரசனுக்கினுன். கட்டியங் காரனே

பின்னர் மனம் வேறுபட்டுச் சச்சந்தனுக்குப் பகைவனாய் நின்று அவனைக் கொன்றான். இத்தகைய நிகழ்ச்சிகள் உலகில் மிகுதியாகக் காணப்படுதலின் 'வேறுகும் மாந்தர் பலர்' என்றார்.

மன்னன் தன்கீழ்ச் செயலாற்றுபவர்களெல்லாம் நன்கு செயலாற்றுகின்றார்களா என்பதை அவர்களுடைய உரிமையை அழிக்காமல் ஆராய்ந்து காணுதல் வேண்டும். அவ்வாறு ஆராயின் வினை செய்பவர்களும் தம் கடமையை அஞ்சி ஒழுங்காகச் செய்வர். அதனால் உலகமும் இனிது நடை பெறும். "நாடோறும் நாடுக மன்னன் வினை செய்வான், கோடாமை கோடா துலகு" என்றுவள்ளுவர் மன்னனுக்குக் கூறிய அறிவுரை சிலரைத் தன் கீழ்க்கொண்டு தலைமை வகித்து நடத்தும் மக்களுக்கும் பொருந்துவதாகும்.

செல்வம் பெற்றவர்கள், காக்கை எவ்வாறு தன் இனத்தை அழைத்து உண்கிறதோ அவ்வாறே தம் சுற்றத்தாரும் உண்டு மகிழுமாறு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யின் அவர்களுக்குச் செல்வம், சுற்றத்தார் துணை புரிதலின் மேலும் மேலும் வளரும்.

சோர்வால் நாம் வாழ்க்கையில் செய்ய வேண்டிய இன்றியமையாத செயல்களை மறந்து விடுகின்றோம். செய்ய வேண்டிய செயல்களை மறப்பதால் பல இழப்புகளுக்குள்ளாவதோடு இன்னலுக்கும் ஆளாகின்றோம். நமக்கே மறதி இத்தகைய துன்பத்தைத் தருமானால் ஆட்சித் தலைமை உடையவர்கள் மறதியினால் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாது விட்டால் அதனால் எவ்வளவு இடையூறுகள் மக்களுக்கு ஏற்படும் சிலர் இயல்பாகவே மறதியுடையர். அத்தகையோர் நாடோறும் சிலவற்றை மறந்து விடுவர். சிலர் தமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியின் காரணமாகச் செய்ய வேண்டுவனவற்றை மறந்து விடுவர். எதனால் மறந்தாலும் மறதி கேட்டினை விளைக்கும்; புகழினைப் போக்கும். இதனையே வள்ளுவர், "பொச்சாப்பார்க்கில்லை புகழ்மை அது உலகத், தெப்பால் நூலோர்க்கும் துணிவு" என்றார்.

ஒருவன் நினைத்த காரியத்தை அடைய முடியும். ஆனால் அவன் எதனை அடைய எண்ணினானோ அதனை மீண்டும் மீண்டும் நினைத்து அதற்குரிய வழிகளில் மறவாமல் முயலுவானயின் அவன் நினைத்ததை அடைய முடியும். "உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான், உள்ளிய துள்ளப் பெறின்" என்னும் குறளை நினைத்து அவ்வழி ஒழுகினால் நினைத்ததை நினைத்தவாறே அடையலாம்.

அரசனுக்குரிய செங்கோலைப் பற்றிக் கூறும் போது வள்ளுவர் நீதி செலுத்தும் முறை பற்றி விளக்கமாகக் கூறுகின்றார். தன்கீழ்வாழ்வார் குற்றம் செய்தால் அக்குற்றத்தை நன்கு ஆராய்ந்து, அவர் நமக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்னும் பாகுபாடு கருதாமல், அக்குற்றத்திற்கு என்ன தண்டனை என்பதைச் சட்ட நூல்வல்லாரோடு நன்கு ஆராய்ந்து, அக்குற்றத்திற் கேற்பத் தண்டனையளிப்பதே சிறப்பாகும். தண்டனையளிக்கும் போது செய்த குற்றத்திற்குப் பொருந்தாத பெரிய தண்டனையை அளித்தல் கூடாது. தண்டனை அளிக்கும் போது குற்றம் செய்தவன் அஞ்சி அலறும் வண்ணம் கடுமையாகத் தண்டிப்பது போல் பாவனை காட்டி மென்மையாகத்தான் தண்டிக்க வேண்டும். கடுமையாகத் தண்டிப்பது போல் காட்டுவதால் குற்றம் செய்தவன் அஞ்சுகின்றான். அளவு கடவாது தண்டிக்கின்றமையால் மற்றவர்கள் அரசன் கொடுங்கோலன் எனக் கூறமாட்டார்கள். இதனை வள்ளுவர், "கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம், நீங்காமை வேண்டுபவர்" என்னும் குறளால் அறிவுறுத்துகின்றார்.

தண்டனை, துன்பஞ் செய்தல், பொருள் கோடல், கொல்லுதல் என மூவகைப்படும். துன்பஞ் செய்தல் பல ஆண்டுகள் சிறையில் தள்ளி வருந்தச் செய்தல். இவ்வளவு பொருள் தண்டமாக விதிக்கப்பட்டுள்ள தெனத் தீர்ப்புக் கூறி அப்பொருளினைக் கொள்ளுதல் பொருட்கோடலாகும். கொல்லுதல், மரண தண்டனை விதித்தல். மிகமிகக் கொடியவர்களை மரண தண்டனை விதித்து ஒழித்தலும் தக்கதே. அவ்வாறு அவர்களை ஒழித்தல் பயிர்களுக்கு இடையூறு செய்யும் களைகளைப் பிடுங்கி எறிதல் போலாகும் என்பதனைக் "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடு நேர்" என்னும் குறட்பாவால் அறிவுறுத்துகிறார்.

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்." தம்மோடு பழகியவர் தம்மாட்டு யாதானும் ஒரு பிழை செய்தவழி அவர் நண்பராயிற்றே என்று கருதி அப்பிழையினைப் பொறுத்தல் கண்ணோட்டமாகும். துன்பப்படும் ஒருவனை ஒருவன் பார்க்கின்றான். பார்க்கும் போதுதான் அவனுடைய துன்பங் கண்டு இரங்கும் தன்மை ஏற்படுகிறது. ஆகவே அருள் பிறத்தற்குக் கண்வழியாக இருக்கின்றது. ஆதலின் கண் பார்த்தலாலுண்டாகும் இரக்க உணர்வினைக் கண்ணோட்டமென்றார். அரசன், நீதி சிதையாதாயின் அவ்விடத்துக் கண்ணோடலாம். நீதி கெடுமாயின் அவ்விடத்துக் கண்ணோடக் கூடாது. நீதி கெடாமல் கண்ணோட்டம் செலுத்த வல்ல அரசர்க்கு இவ்வுலகம் முழுவதுமே உரிமையாக விளங்கும்.

அரசன் ஒற்றர்களைக் கொண்டு பிற நாட்டிலுள்ள நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளுதல் மிகமிக இன்றியமையாதது. நீதி நூலும் ஒற்றர்களும் அரசனுக்கு இரண்டு கண்களாகும். அரசன் ஒற்றர்களை வைத்துக்கொள்ளும் போது ஓர் ஒற்றன் மற்றோர் ஒற்றனைத் தெரிந்து கொள்ளாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஓர் ஒற்றன் வெளிநாட்டிற்குச் சென்று அறிந்து வந்து சொல்லும் கருத்துக்களையும் உடனே

நம்பிவிடாமல் மற்றும் ஓர் ஒற்றனை விடுத்து அவன் சொல்வது உண்மையாக இருக்கிறதா என்று பார்த்தல் வேண்டும். மூன்று ஒற்றர்கள் சொல்வது மாறுபாடின்றி ஒரே தன்மைத்தாக இருக்குமானால் அதனை நம்பலாம். ஒற்றர்கள் அரிய செய்திகளை அறிந்து வந்து சொன்னமைக்குச் சிறப்புச் செய்யவேண்டின் அரசன் பிறர் அறியாமல் அவ்வொற்றர்களுக்குச் சிறப்புச் செய்ய வேண்டு. பிறர் அறியும்படி சிறப்புச் செய்தால் இவ்வொற்றன் இச்செய்தியை அறிந்து வந்து சொன்னான் என்றும், அதனால் அரசன் சிறப்புச் செய்தான் என்றும் பிறர் அறிய நேரிடும். இவ்வாறு பிறர் அறிதல் அவ்வொற்றனுக்குக் கேட்டினை விளைவிக்கும். ஆதலின் வள்ளுவர், ''சிறப்பறிய ஒற்றின் கண் செய்யற்க செய்யின், புறப்படுத்தானாகும் மறை'' என்று கூறுகின்றார்.

மக்களுக்குத் தலைவனாகிய மன்னனுக்கு இடையறாத ஊக்கமுடைமையும், சோம்புதலில்லாமையும், முயற்சியுடைமையும், அம்முயற்சியில் துன்பம் நேரின் மனம் தளராமையும் வேண்டும். ஊக்கம் இருந்தால்தான் சோம்பல் ஒழியும். சோம்பல் ஒழிந்தால்தான் முயற்சி செய்ய முடியும். அம்முயற்சி செய்யும் போதுதான் பல இடையூறுகள் உண்டாகும். அவ்விடையூறுகளுக்கு அஞ்சாமல் காரியத்தை முடித்தலே புகழுக்குரியதாகும். இக்கருத்துக்களை வள்ளுவர், ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என்னும் அதிகாரங்களால் கூறுகின்றார்.

அல்லி, தாமரை ஆகியவற்றின் தண்டுகள், நீர் எவ்வளவு உயர்ந்துள்ளதோ அந்த அளவுக்கு உயர்ந்து தோன்றும். அதுபோல மக்களுடைய உணர்ச்சியும் அவர்களுடைய எண்ணம் எவ்வளவு உயர்ந்திருக்கின்றதோ அதற்கேற்பத்தான் இருக்கும்; ஆதலின் மக்கள் உயர்ந்த நோக்கங்களையே மேற்கொண்டிருத்தல் வேண்டும். அந்த நோக்கம் நிறைவேறாவிட்டாலும் கவலையில்லை. உயர்ந்த நோக்கங்களையே எண்ணியிருந்து அவற்றின் பொருட்டே முயலுங்கால் அந்நோக்கங்கள் நிறைவேறாவிட்டாலும் அவை நிறைவேறியனவாகவே கருதப்படும்.

காரியத்தை விரைந்து செய்யாமல் தாமதித்துச் செய்யும் பண்பும், மறதியும், சோம்பலும், எப்பொழுதும் உறக்க இயல்பாகவே இருத்தலும் ஒருவனை விரைவில் கெடுக்கும். ஆகையால் இந்நான்கினையும் கெட்டுப் போகின்றவர்கள் விரும்பி ஏறும் கப்பல் என்று சொல்லலாம். இவைகளை ஒருவன் விரும்பி மேற்கொள்வானாயின் அவனை இன்பத்தில் ஆழ்த்துவது போல் காட்டி அவை முடிவில் துன்பத்தில் ஆழ்த்திவிடும்.

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைக்கொடுக்கும். சோம்பல் ஒருவனுக்கு வறுமையைக் கொடுக்கும். ஒருவனுக்கு நல்ல ஊழில்லாமை குற்றமாகக் கருதப்படமாட்டாது. ஆனால் முயற்சியில்லாமலிருத்தல்தான் பலரும் பழித்துரைத்தற்கு இடனாகும். நல்ல ஊழிருந்தால் முயலும் போது மிக்க பயனுண்டாகும். நல்ல ஊழில்லாவிட்டாலும் முயற்சி யிருந்தால் அம்முயற்சி செய்த அளவுக்குப் பயன் கிடைத்தே தீரும். ஆதலின் நல்லூழ் வருங்காலத்தை நோக்கி வாடியிராமல் இடையறாது முயலுதல் வேண்டும். அவ்வாறு முயலுபவர்கள் ஊழையும் தோற்கடிக்கும் ஆற்றலுடையவர்கள் ஆவார்கள்.

முயற்சி செய்யும் போது அடுத்தடுத்துத் துன்பங்கள் உண்டாவது இயற்கை. அப்படித் துன்பங்கள் வரும்போதெல்லாம் அவற்றிற்கு அழாது சிரித்தல் வேண்டும். துன்பங்களைக் கண்டு சிரிக்கும் ஆற்றல் பெற்றுவிடுவோமானால் அத்துன்பங்கள் தாமே மறைந்தொழியும். துன்பத்தைப் போக்குதற்குரிய வழிகளும் பல உள. துன்பத்திற்குத் துன்பப்படாதவர்களைத் துன்பம் ஒன்றும் செய்யாது. இந்த உடம்பே துன்பத்திற்கு இருப்பிடம் என்று நினைப்பவர்கள் துன்பங்களைக் கண்டு அஞ்சமாட்டார்கள். இன்பத்தை விரும்பாதவர்களாய் இந்த உடல் துன்புறுவது இயல்பு என்று நினைப்பவர்கள் எஞ்ஞான்றுமே துன்பப்படுவதில்லை. இன்பம் வந்தபோது இதுவும் இயல்பென்றெண்ணி மகிழாமல் இன்பத்தை அனுபவித்துச் செல்லுபவன், துன்பம் வந்தபோது அதனைத் துன்பமாக எண்ணி வருந்துதல் இல்லை. துன்பத்தையே இன்பமாகக் கருதும் மனப்பான்மை ஒருவனுக்கு உண்டாகி விடுமானால் அவனைத் துன்புறுத்துவர் உலகில் யாருமே இல்லை. அவன் பகைவராலும் புகழப்படும் சிறப்பினையுடையவனாவன்.

மக்களுக்குத் தலைவனாகிய மன்னன் கற்க வேண்டியவைகளைக் கற்றுப் பேரறிவு பெற்றுக் குற்றங்களை நீக்கி அறிவால் பெரியோர்களைத் துணையாகக் கொண்டு சிற்றினத்தார் சேர்க்கையை ஒழிக்கவேண்டும். செய்யவேண்டிய காரியங்களை வலியும் காலமும் இடமும் அறிந்து செய்யவேண்டும். அலுவல்களுக்குரிய மக்களைத் தெரிந்தெடுக்கும் வகையால் தெரிந்தெடுத்து அவர்கள் பால் ஒப்படைக்க வேண்டிய செயல்களை ஒப்படைக்க வேண்டும். காரியங்களில் மறவாமையோடு செங்கோன்மை தவறாமல் மக்கள் அஞ்சத்தகும் செயலினை நீக்கி ஆளுதல் வேண்டும். யாரிடத்தும் கண்ணோட்டமுடையனாய் விளங்குதலோடு ஒற்றரால் யாவும் அறிந்து செயலாற்றும் பண்பும் மன எழுச்சியும் முயற்சி உடைமையும் துன்பத்திற்கு அஞ்சாமையும் கொண்டு மாட்சியுற விளங்குதல் வேண்டும். இவைகளெல்லாம் அரசனுக்குரிய அருங்குணங்களாக வள்ளுவரால் வகுத்தோதப்பட்டுள்ளன. இந்நெறிகளைப் பின்பற்றி ஒழுகின் அரசியல் யாவரும் போற்றும் வண்ணம் விளங்கும்.

சமய மறுமலர்ச்சி

[திரு. மு. சண்முகம், M.A.,B.O.L.,
தமிழாசிரியர், யூனியன் உயர்நிலைப்பள்ளி, கோயமுத்தூர்—1]

சமயம்:

உடல் வளர்ச்சிபெற உணவும், மனம் வளர்ச்சிபெற அறிவும் தேவையாயிருப்பது போல் ஆன்மாவைப் பக்குவமடையச் செய்யச் சமய நுகர்வுதேவை.

உலகத்து உயிர்கள் யாவும் இன்ப விருப்பும், துன்ப வெறுப்பும் கொண்டுள்ளன. இன்பங்கள்யாவும் நிலையற்றன வாயுள்ளன. அதனால் அறிவுடைப் பெருமக்கள், நிலைத்த இன்பத்தை அடைய முயலுகின்றனர். அவ்வாறு நிலைத்த பேரின்பத்தை அடைவதற்கு அறிவுடையோர் கொண்டொழுகும் வழிகளே சமயங்கள் எனப் பெயர் பெற்றன.

இன்றைய உலகில் மக்களாட்சி வேட்கை எல்லோரிடத்திலும் இருக்கிறது. உலகில் பெரும்பாலான இடங்களில் மக்களாட்சியே நடைபெற்று வருகிறது—மக்களை மக்களாக மதிக்கச் சொல்லிக் கொடுப்பது மக்களாட்சி. மக்களைக் கடவுளாக மதித்து அன்பு செய்யக் கற்றுக் கொடுப்பது சமயம். தன்னோடு ஒப்பாக நினைப்பதிலும் தன்னினும் உயர்ந்ததாக மதிப்பது சிறந்த தென்பதை மறுப்பாரிலர். எனவேதான் திருமூலர் மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசுவரனுக்குச் செய்யும் தொண்டு என்றார். மக்களை மக்களாக மதிக்கும் சனநாயகத்தைக் காட்டிலும், மக்களைக் கடவுளாக மதித்து அன்பு செய்யச் சொல்லும் சமயம் உயர்ந்தது என்று சொல்லவேண்டுவதில்லை.

1. தனக்கு என வாழாப் பிறர்க்குரியோனாக வாழ்வதே சமயத்தின் அடிப்படை.

2. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே சமய உணர்வு.

3: இன்ப துன்பங்களை எந்தவித வேறுபாடுமின்றி ஏற்றுவாழ்வதே சமய வாழ்வு

4. எல்லோரும் ஓர்குலம் என்று எண்ணுவதே சமயநலன்.

நம்மவரின் வாழ்வு சமயப்பண்பிலே வளர்ந்து வளம் பெற்றது. வாழ்வென்னும் கடலில் வீசும் துன்பப்புயலை இனிய தென்றற் காற்றாக மாற்றித்தருவது சமயம். அன்பு பொருந்திய, அறம் தழுவிய, ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுப்பது சமயம். சமயச்சார் பற்ற ஒழுக்கம் உலகில் நிலைத்து நிற்க முடியாது. சமயவாழ்வு பிறர்நலம் பேணுவது. வெறுப்புணர்ச்சி இல்லாத பூசலற்ற நிலையிலேவாழச் சொல்லியது சமயம்.

ஒன்றா பலவா ?

சமயம் ஒன்றே. உலகில் பல சமயங்கள் பேசப்படற்குக் காரணம் என்ன? சமயங்கள் பல இல்லை. சமயப் பெயர்கள் பல உண்டு.

உலகில், மொழிகள் பலவாயிருத்தலின் சமயத்துக்குப் பெயர்கள் பலவாக வழங்கப் படுகின்றன. பெயர்கள் பலவாயிருப்பினும் பொருள் ஒன்றே.

'பலசமய உணர்வு கொள்ளுவது தவறு. அவ்வுணர்வு ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புக இடந்தருதலான் அஃது ஒரு கடவுளைப் பலகடவுளாகப் பாவிக்கவும் இயற்கைப் படைப்பை அவதூறு செய்யவும் தூண்டுகிறது' (திரு.வி.க.)

மெய்யறிவு விளங்கும்வரை ஒருவன் நம்பிக்கை இன்னொருவனுக்கும், இவன் நம்

பிக்கை அவனுக்கும் மாருகத் தோன்றல் கூடும். இத்தோற்றத்தால் ஒருவன் ஒரு வனைத்தன்வழியில் திருப்பும் முயற்சியும் அவன்பால் எழுதல்கூடும். இவன் தவருன வழியில் செல்கிருன் என அவன் இரங்கியும் அவன் தவருன வழியில் செல்கிருன் என இவன் இரங்கியும் ஒருவனை ஒருவன் திருப்பமுயல்கிருன். இதற்குப் பலாத்காரம் தேவையில்லை. உண்மையான இரக்கம் வன்முறையில் இறங்கச் செய்யாது. வன்முறை எழுமிடத்தில் நேர்மை இராது. வன்முறைச் செயலால் ஒருவன் ஒருவனைத் திருத்தமுயல்வது, காட்டு மிராண்டித்தன மாகும். அருள்நெறியில் நின்று, தான் உண்மை என்று நம்புவதை மற்றவனுக்கு உணர்த்த முயலுவதே நாகரீகம்.

சமயம் ஒன்றே என்பதை நம் நாட்டுப்பெரியவர்கள் விளக்கியுள்ளதிறம் வியத்தற்குரியது. ஒருவனே தேவன் என்ருர் திருமூலர்.

"வேறுபடும் சமயம் எல்லாம் புகுந்து [பார்க்கின்
விளங்கு பரம் பொருளே நின் [விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியின் நதித்திரள் போல் [வயங்கிற்றம்மா"

என்ருர் தாயுமானுர்.

"பொங்குபல சமயம் எனும் நதிகள் [எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி [ஓங்கும்
கங்குகரை காணுத கடலே"

என்பது வள்ளலார் கூற்று.

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும்
இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயஞ் சொல்லும்
பொருளும்போல் பரந்ததன்றே.

என்பது கம்பர் கவியமுதம்.

"ஆத்தி சூடி இளம்பிறை யணிந்து
மோனத்திருக்கும் முழு வெண் [மேனியான்
கருநிறங் கொண்டு பாற்கடல் [மிசைக்கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந் துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் [ஒன்றே"

என்பது பாரதியின் மணிவாக்கு. மேற் கண்ட பெரியார்களின் சொற்களை நீள நினைந் தெண்ணுவார்க்குச்சமயம் ஒன்றே என்பது தெளிவாகும்.

நமது சமயம்

இது காறும் சமயம் என்ற நிலையில் பொதுப்படையாகச் சிலவற்றை யறிந்தோம். இனிநமது சமயமாகிய இந்து சமயத்தைப். பற்றித் தெரிந்து கொள்வது நலமென்று கருதுகிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு சமயங்கள் இருந்தாலும், காலத்தால் முந்தியது இந்து சமயமே. வேறு சமயங்கள் எல்லாம் அவ்வம் மதங்களை உண்டாக்கிய பெரியோர் பெயரைக் கொண்டு விளங்க இந்து மதத்தின் பிரிவுகள் ஒவ்வொன்றும் கடவுளின் திருப்பெயர் கொண்டு விளங்குகின்றன.

சைவம்—சிவன்

வைணவம்—விட்டுணு

சிவம் என்னும் சொல்லுக்குப் "பெருஞ் சுகம்" என்று பொருள் கூறுகிறது தேம் பாவணி.

முத்தி யடைதற்கு ஏற்ற மதம் எங்கள் மதமே என யானை கண்ட குருடர்போலக் கூக்குரலிடுவதில்லை. எப்பெயரிட்டு எங்கிருந்து வழிபட்டாலும் அவையனைத்தையும் இறைவன் ஏற்றுக் கொள்கிருன் என்ற சமரசக் கருத்தினை வெளியிடுவது இந்து சமயம்.



திருமதி. இரா. கௌசலாம்பாள் அம்மாள் அவர்கள்,
கல்லூரி மேன்மாடிக் கட்டிடம், கோயில் நிதி உதவியவர்.

டாக்டர்.
செங்காளியப்பக் கவுண்டர், L.M.P.
அவர்கள்,
முன்னாள் கல்லூரி மருத்துவர்.



டாக்டர்.
ஷண்முகசுந்தரக் கவுண்டர், F.R.C.S.
அவர்கள்,
இந்நாள் கல்லூரி மருத்துவர்.

திரு. R. செங்கோட்டுவேலன்,
கல்லூரிக் கழகப் பொருளாளர்.



திரு. அய்யாசாமிப் பிள்ளை,
பள்ளிக் கல்விக் குழுச் செயலாளர்.



திரு. சாமிக் கவுண்டர்,
பொருளாளர், பள்ளிக் கல்விக் குழு.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ
மாகியாங்கே
மாதொருபாகனுர்தாம் வருவர்"

என்றும்

விரிவிலா அறிவினுர்கள் வேருெரு சமயம்
செய்த
எரிவினுல் சொன்னுரேனும் எம்பிராற்
கேற்றதாகும்"

என்றும்

"எம்மதத்தோர் எவ்வகை நிட்டை
சொல்லினும்
சம்மதமே என்று உந்தீபற
தற்போதம் மாய்க்குமேல் உந்தீபற."

என்றும் பறைசாற்றுவது இந்து சமயமே.

உருவ, அருவ, அருஉருவ வழிபாட்டிற்கு வழி வகுப்பது. கடவுள் உருவமற்றவர் என்பது இந்துக்களுக்கும் உடன்பாடே. ஆனல் அருபியாக மட்டுந்தான் கடவுள் இருப்பார் என்று சொல்பவர்களிடம் அருபியாகிய கடவுளுக்கு உருவத்தோடு வரமுடியுமா என்று கேட்டால் என்ன விடை கூறுவார்கள். முடியும் என்ருல் உருவமாக விளங்குவதும் சரி என்ருயிற்று. முடியாது என்பார்களானுல் எல்லாம்வல்ல இறைவனுக்கு உருவத்தோடு மட்டிலும் வரமுடியாது என்பது அறிவுக்கு ஏற்றதாகாது. ஒருநாமம், ஒருருவம் ஒன்றுமில்லார்க்காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ என்ற திருவாசகம், கடவுள், பெயரும், உருவமும் அற்றவர் என்ருலும் அப்படி நாமரூபங் கடந்தவனுக்கு நாம் பெயரிட்டு வணங்குவோம் என்று வலியுறுத்துகிறது.

Hinduism teaches that God, the absolute is nameless and formless, and it is only for our convenience that we invent him with name and form ; just as we call the one undivided ocean around our country, Bay of Bengal in one place, the Indian ocean in the other and the Arabian sea in a third. (what is Hinduism.)

சமயமறு மலர்ச்சி:

சமய நெறியில் பழைய மரபுகளேயே கடைப்பிடிக்க வேண்டும் என்று சாதிப்பவர் மறுமலர்ச்சி என்ருல் உளங்கொதித்து எழுவர். வளருகின்ற சமுதாயம் பல்வேறு துறையிலும் மறுமலர்ச்சி பெறுதல் இன்றியமையாத தேவை. பழைய மரபுகளேயே என்றும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுவது ஐந்து வயதில் தைக்கப்பட்ட சட்டையையே இருபத்தைந்து வயது வளர்ந்த பிறகும் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒப்பாகும்.

கடவுளும் அவனருளும் என்றும் மாருஇயல்போடு இருந்தாலும் சமய வாழ்வு காலத்துக்குக் காலம் புதிய நெறியில் இயங்கும் அடிப்படையில் மாறுதல் இல்லேயே தவிர, இயங்கும் நெறியில் தொண்டு வகையில் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வேறுபடும். நமக்குச் சமயவாழ்வு இன்றியமையாதது. அந்தச் சமய வாழ்வில் மறுமலர்ச்சி மிக மிக இன்றியமையாதது. மனிதனுடைய முயற்சிகள் அனைத்திலும் சமய உணர்ச்சி கலக்க வேண்டும். அப்போதுதான் மனிதனுக்கு மனிதன் பகையும் பொருமையும் கொள்ளாமல் வாழ முடியும். யாவரும் இறைவனுகிய ஒரு தந்தையின் மக்கள் என்ற உணர்ச்சி தலேப்படும்.

சமயங்களின் பேரால் பின்னுளில் சண்டைகள் எழுந்தன. பிறர் நலமே போற்றிய சமயத்தில் சாதிச் சண்டைகள் நுழைந்தன. உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் பெருகின. தன்னலமும் பேராசையும் தலே தூக்கின. இந்த உணர்ச்சிகள் சமய வாழ்விற்குப் புறம்பானவை. மனித நாகரிகத்திற்கு நஞ்சானவை. இவையனைத்தும் அழிந்தொழிந்து சமயம் மறுமலர்ச்சி பெறுவது நல்லது.

உயர்ந்த இந்து சமயத்தில் சாதிமத வேற்றுமை பெருகியதனுல் இடையிடையே பல பெரியார்கள் தோன்றி ஒன்றே குலம் என்றனர். கண்மூடி வழக்கங்கள் எல்லாம் மண்மூடிப் போக வேண்டும் என்றனர். அண்மைக் காலத்தில் இராம கிருட்டிண

பரமஹம்சர், இராம்மோகன் ராய், வள்ளலார் முதலிய சான்றோர்கள் கண்மூடி வழக்கங்களை மிக உரமாகக் கண்டித்தனர். ஒரே நெறி என்பதை வலியுறுத்தினர். இவர்கள் போதனையால் ஓரளவு பயன் விளைந்தது என்பதை நாமறிவோம். உலகப் பெரியார் காந்தியடிகள் கூடச் சாதிப்பூசலைப் பின்வருமாறு சாடுகிறார்.

In the Conception of Varna there is absolutely no idea of superiority and inferiority. If I again interpret the Hindu spirit rightly all life is absolutely equal and one. It is therefore an arrogant assumption on the part of the brahmin when he says "I am superior to ths other three Varnas." (Gandhiji)

மேலும்

" வாழ்கின்றவர் முப்பத்து முக்கோடி
என்றால் சூழ்கின்றபேதம் அந்தத் தொகை
யிருக்கும் "

எனப் பாரதிதாசனும்

" ஆதியிலே வழிபாட்டுக்கார்ந்த பெருங்
கோயில்பலச்
சாதிமதச் சாக்கடையாய்ச் சண்டாளர்
இருப்பிடமாய்
நீதி அறம் அழித்துவரல் நின்மலனே
நீ அறிவாய்
கோதுகளை அறுத்தொழித்துக் குணம்
பெருகச் செய்யாயோ "

என்று தமிழ்த் தந்தை திரு. வி. க. வும்,

" சாவியொடு பூட்டிட்டுச் சன்னதிக்குக்
காவலிட்டுத்
தேவிருக்கும் கோயிலை நீர் சிறைச்சாலை
ஆக்கலாமோ "

என்று கவிமணியவர்களும் உள்ளம் குமுறியதை நினைத்தால் சமய மறுமலர்ச்சி தேவை, என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

இறைவரவா

[சிவ. பொய்யாமொழி, மூன்றும் யாண்டு மாணவர்.]

அருள்வளர் பெரும்புகழ்த் திருவமை யெழில்மிகு
அன்பே கொண்டாளும்
அரும்பொருள் புகன்றிடு மொருதவ நெறியினி
லொன்றாய் நின்றிலகும்

திருவருள் மிகவுறு திகழொரு தனிப்பெருந்
துணையே உன்னுருவைச்
சிறுவுள மதனினில் ஒளிவிடு அருண்முகம்
சிறிதே காட்டிடுவாய்

கருமுகில் மழைபொழி பயிர்விளை நிலைபொற்
காப்பே பூண்டாயே
கருதிடு மொருநாற் கவியினி லகப்படு
கரும்பே வந்திடுவாய்

தருவென வுளமுறை சாந்தலிங் கப்பேர்த்
தலைவா தாலோ தா லேலோ
தகுபுகழ்த் தமிழ்வளர் வெகுபுகழ் கொண்டோய்
தாலோ தா லேலோ

பிரமபுரமும் பேரூரும்

(திரு. சிவகலை. மு. சுப்பையா அவர்கள், R. M. S., சென்னை-10)

கீழைக் கடலோரம், பாண்டிச்சேரிக்கு மூன்று கல் வடக்கே அமைந்துள்ளது பிரம புரம் என்ற மூதூர். பிரமபுரம் என்பது பொம்மபுரம் என்ருகி பொம்மயபாளையம் எனத் திரிந்தது. அதன் சரிதம் மிகப் பழைமையானது. சிறிய ஊர் எனினும் பெரிய புகழையுடையது. முருகனுல் சிவ ஞான உபதேசம் பெற்ற சித்தர், சிவஞா னத்தை யாவருக்கும் உபதேசித்ததால் சிவ ஞான பாலய சித்தராகி வாழ்ந்த இடம். பிரம நிலையுணர்ந்து பால வயதோடு சித்தர் தங்கி இருந்த அவ்வூருக்குப் பிரமபுரம் எனப் பிரமனைக் குட்டிச் சிறையிருந்த கோமான் இட்ட பெயர் அது. இதன் சிறப்பை மயூராசல புராணம் விரிவாய்க் கூறும். இன்றும் நல்ல சூழலில் மிளிர்கிறது. ஊரின் ஓரத்தே ஓர் காட்டாறு. காட்டாற்றின் இருகரையும், அது கலந்து உறவாடும் கட லின் ஓரமும் ஒரே தென்னந் தோப்பாய்க் காட்சியளிக்கிறது. மாஞ்சோலைகளுமுண்டு. நடுநடுவே குளம் குட்டைகளுக்கும் குறை வில்லை. இங்கே இயற்கையன்னை தன் எழிலை வாரி வழங்கி வருவோரை ஆனந்த வெள்ளத் தில் ஆழ்த்துகிருள். மாஞ்சோலைகளின் மத்தியில் மனதைக் கவரும் மணிமண்டப முடைய ஓர் திருமடம் காணப் பெறுகிறது. பழைமையானது என்பதை அதன் அமைப்பே நமக்கு எடுத்தியம்பும். அது கட்டப்பட்ட காரணத்தைச் சற்று ஆராய்ந்து அறிவோம்?

இன்றைக்கு சற்றேறக்குறைய மூன்று நூற்ருண்டுகட்கு முன்பு, பொம்மபுர ஆதீன முதற்குரு-சித்திகளில் வல்லவரான சிவஞான பாலய சித்தர்-முத்தி பெற்றவுடன் சிவஞான தேசிகர்-இரண்டாம் பட்டமாய் எழுந்தருளி ஞர். சதுரக்கள்ளிப் பாலைச் சாப்பிட்டுத்துத் தவமியற்றியவரின் ஞான வாரீசல்லவா! 'கிடைத்தால் பாலும் பழமும்; கிடைக்கா விட்டால் பட்டினி' என்ற விரதத்தை மேற் கொண்டிருந்தார். பிரமபுரக் கடற்கரையினும், பெருமுக்கல், செஞ்சி, மயிலம் போன்ற மலை களினும் தவமியற்றவர், சிறந்த ஞானி. குறையுடையோர் வந்து முறையிட்டு வேண் டினல், இவர் இறைவனை நினைந்து, குணம் பெற அருளிக் குற்றமில் திருநீறு கொடுப் பார். குறைவு நிறைவாகும், குணமடைவர். காஞ்சீபுரத்தில் விடமேறி இறந்தவர் விழித் தெழப் புரிந்தார். நல்ல குருடாய்விட்ட நவாப்பின் மனைவிக்குக் கண் பார்வை அளித்தார். மகிழ்ந்த மகமதிய மன்னன் மட்டற்ற விளை நிலம் கொடுத்தான். செஞ்சி மன்னன் திரியம்பகனின் அருமை மகளு டைய கருங் கூந்தல் நரைத்து வெண்மை யாய்க் காட்சியளித்தது. அக்குறை கண்டு பெருங் கவலை கொண்ட மன்னன் இம் முனி வரிடம் முறையிட்டான். சிவஞான சித்தரின் திருக்கைத் திருநீறு குறை களைந்தது.

"இளைக்கு மருங்குலொரு மடந்தைக்
கெய்து தவள முகிற் கூந்த
லிடுஞ்சூன் முகிலினிருள் படைப்ப
இருண்ட அடியேன் உளம் விளர்ப்பத்
தினைக்கு மலர்க்கட் கருணைமடை
திறக்குங் குணப் பொற் குன்றையுயர்
சிகரமயிலைச் சிவஞான தேவன்"

என்பது பிள்ளைத் தமிழில், சிவப்பிரகாசரின் சொற்றொடர்கள். அகமிக மகிழ்ந்த செஞ்சி அரசன் கட்டிக் கொடுத்த கல்மண்டபமும் திருமடமுமேதான் இப்போதுநம்முன்காட்சி யளிக்கின்றன. அதனுள் தவமியற்றத் தனிச் சுரங்கமும் அமைந்திருந்ததை இன்றும் காணலாம்.

இங்கிருந்து சுமார் இருநூறு மைல் களுக்கு மேல், மேற்கே யமைந்துள்ளது கோங்குநாடு. அக்கொங்கு, ஏழ் தலங்களையும், குமரனுடும் கணக்கற்ற குன்றுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சரிதம் பல கண்டது. அதைப் பெருநில மன்னர்கள் பிடித்தாண்டதுண்டு. குறுநில மன்னர் களால் சீரும் சிறப்பும் பெற்றது. இந்நாட்

டின் அணிகலனுய்த் திகழ்வது காஞ்சிமா நதி. இதன் கரையிலுள்ளது பேரூர். " ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில் அணிகாஞ்சி வாய்ப் பேரூர்" என்று நினைவாற்றலில் நிகரற்ற சுந்தரர் புலியூர் சிற்றம்பலமான சிதம்பரத்தில் காஞ்சி நதியையும், அக்கரையிலுள்ள பேரூரையும், மன்றிலாடும் இறைவனையும் மனக் கண்முன் காண்கிருர். அப்பர் சுவாமிகள் "ஆரூர் மூலட்டானம் ஆனைக் காவும் ஆக்கூரில் தான் தோன்றிமாடம் ஆவூர், பேரூர் பிரமபுரம் பேராவூரும்" என திருத்தாண்டகத்தில் வைப்புத்தலமாக வைத்துக் கூறுகிருர். 'தாமே இழிந்ததும் தாமே என...பயந்தரும் இறைவர் மற்றதும் காட்டப் பள்ளனுய்த் திருவிளையாட்டால் நயந்த பூம்பண்ணையின் வினைசெல அன்பர் நண்ணுமுன் நண்ணினர்" எனப் பேரூர் புராணத்தில் கச்சியப்பர் கனிவாய்க் கூறுகிருர். நாவலூரில், மறையோதிய முதிய வேதியனுய்த் தடுத்தாட்கொள்ள வந்த தனி நாயக முதல்வன், பேரூரில் பள்ளனுய் வந்து மீண்டும் ஆண்ட பான்மையைப் பாடிப் பரவுகிருர். தீராப் பிணி தீர என்ற பாட்டில், 'பாரோர் கிறைசேயே பாலாக்கிரிராச பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே' என்றும், 'பட்டியாள்பவர் கொட்டியாடினர், பாரூரா சூழ் பேரூராள்வார் பெருமானே,' என்றும், தித்திக்கும் சந்தத் திருப்புகழால் அருணகிரி நாதர் இசைக்கிருர். பேரூர், பெரியபாளையம், தாரமங்கலம், தாடிக் கொம்பு போன்ற கொங்கு நாட்டுச் சிற்பக் கருவூலங்கள் உள்ள கோயில்களுக்குத் தலைமை வகிப்பது இப்பேரூர்ப் பட்டிப் பெருமான் திருக்கோயில். பழம் பாண்டிநாட்டு மதுரை நாயக்கர் அளகாத்திரியாரால் கட்டப்பட்ட இக் கோயிலில், ஆடும் கூத்தப்பிரானுக்கு அமைக்கப்பெற்ற கனகசபை கண்கவர் சிற்பக் கலைக்குச் சிகரமாய்த் திகழ்கிறது. பட்டிப் பெருமானும், பச்சை நாயகியும், பாங்காய்த் திகழும் கோயில் ஒரு கண்ணுய்த் திகழும் இப் பேரூருக்கு, மறு கண்ணுய்த் திகழ்வது, சாந்தலிங்கரின் திருமடம்.

சாந்தலிங்கர் சுயசொரூப ஞானி. அங்கத்தலத்தில் போதிக்கும் ஆசரணையினுல் அங்கியாகி தத்சம்பந்தமான லிங்கத் தலத்தில் போதிக்கும் ஆசரணையினுல் லிங்கியாகி உபயாசரணையினுல் அங்கலிங்க சங்கியாகியவர். ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கியவர். முற்றும் துறந்த முனிபுங்கவர். திருஓடு இருப்பின் பாசம் பற்றுமெனக் கரங்களில் உணவேற்று உண்டு வாழ்ந்த சந்நியாசி. இவருக்கு யாத்திரையின் போது, அத்துவித வெண்பா, சிவஞானதீபம் முதலியன மலர்ந்தருளிய, துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகளிடம் திருவண்ணுமலையில் தொடர்பு ஏற்பட்டது. முருகன் அருளால், முற்றுமுணர்ந்து, சித்திபெற்று, இறையருளின் இருப்பிடமாய் விளங்கிய, பொம்மபுரம் சிவ ஞான பாலய தேசிகரைக் கண்களால் கண்டு வணங்கக் கருத்திற் கொண்டு, பொம்மபுரத்திற்கு எழுந்தருளுங்கால், சாந்தலிங்க சுவாமிகளுக்குத் துறைமங்கலம்சிவப்பிரகாச சுவாமிகளின் சந்திப்புக் கிட்டியது. பின்பு அவர் தம் தங்கை ஞானும்பிகையை சிவஞான தேசிகரின் திருவுளப் பாங்கின் வண்ணம் சாந்தலிங்கர் மணந்ததால், உறவும் உடையார் ஆனர்.

சிவப்பிரகாசர் காஞ்சியம்பதியில் (தொண்டை நாடு) பிறந்தவர். குமாரசாமி தேசிகரைத் தந்தையாகவும், வேலாயுதம், கருணைப் பிரகாசம், ஞானும்பிகை ஆகியோரை உடன் பிறப்பாளர்களாகவும் உடையவர். அண்ணுமலை ரெட்டியாரின் அன்பு அணைப்பில் திகழ்ந்தவர். அவரது வேண்டுகோட்கு இணங்கித் துறைமங்கலம் என்ற ஊரில் அவர் அமைத்துக் கொடுத்த திருமடத்தில் சிலகாலம் தங்கியிருந்ததால் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்றும், நல்லாற்றாரில் சமாதி கொண்டருளியதால் பிற்காலத்தே நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர் என்றும்பெயர் பெற்றவர். திக்கெலாம் புகழ் திருநெல்வேலியிலுள்ள சிந்துபூந்துறை வெள்ளியம்பலவாண சுவாமிகளிடம், பக்கலிலிருந்து, இலக்கண, இலக்கிய பாடம் கேட்டவர். முதன் முதலில், சிவஞான தேசிகர் மீது பாட மறுத்த சிவப்பிரகாசருக்குப் புதுப் பட்டியில், முருகன் கனவிற்றேன்றி மொழிய, உண்மை உணர்ந்து, மனமுருகித் தாலாட்டும், நெஞ்சுவிடுதூதும் பாடித் தேசிகரின் திருப்பாதப் போதுக்காக்கி, அவரிடம் ஞானேப தேசமும் பெற்றவர். பின்பு அவர்மீது பிள்ளைத் தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி முதலியன பாடிப் பரவினர். முப்பத்திரண்டாண்டே வாழ்ந்த செந்தமிழ்ச் செம்மல் சிவப்பிரகாசர் முப்பத்திரண்டு நூல்கள் மொழிந்துள்ளார்

இப்பிரமபுரக் கடற்கரை மணலில் தான் நன்னெறி வெண்பா நாற்பதும் சிவப்பிரகாச சுவாமிகள் எழுதினர். இத் திருமடமும், கடற்கரையும், நூலாசிரியரான சிவப்பிர காசரே அவற்றைப் பாடும்போது கேட்டவை. அவர் பாதம்படப் புண்ணியம் செய்தவை. மன்னர்களும், மன்னர் மன்னர்களும் வந்து வணங்கிய இடம் இம்மடம். பிரெஞ்சிந்திய கவர்னர் டூப்ளேயும், திவான் ஆனந்தரங்கம் பிள்ளையும், பன்னீரும் பட்டாடையும் கொண்டுவந்து சந்நிதானத்தின் முன் வைத்து வணங்கியதும் பிரமபுரத் திருமடத் தில் தான் என்பதை ஆனந்தரங்கம் பிள்ளை யின் நாட்குறிப்பு நமக்கு அறிவிக்கிறது. நடு நாட்டரசன் சித்திர பூபதி தனதரசுரிமை யைப் பறிகொடுத்து விரக்தியுற்று இத்திரு மடத்தில் பணியியற்றியுய்ந்தான். அவன் விருப்பம் அறிந்து சிவஞான தேசிகர், திரும் பவும் அரசுரிமை பெறவைத்தார்.

இதுபோன்றே கன்னட தேசத்து அரசர் குமாரதேவர் அரச மகுடம் துறந்து, மணந்த மனைவியை விட்டு, அத்தனையும் அன்னையையும் நீத்துப் பேரூர்த் திருமடம் வந்து, புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்கு மிட்டுக் குரு ஆணைப்படி எருதுக்குப் புல் லறுக்கப் போய், இடக்கையை யறுத்த வலக் கையைக் கோபித்த வரலாற்றுச் செய்தியை யும் உணர்கிறோம். குமார தேவர் உபதேசம் பெற விரும்பியபடி அவருக்கு ஞானோப தேசம் செய்த சாந்தலிங்கரே "மகாராஜா" என அழைக்கும் பேறு பெற்றார். இக்குமார தேவர் மஹாராஜ துறவு முதலான பதினாறு சாத்திரங்கள் அருளிச் செய்தார். பிற் காலத்தே சாந்தலிங்கரின் அருளாணையின் வண்ணம் மணிமுத்தா நதிக்கரையில் திருமுது குன்றம் என்ற விருத்தாசலத்தில் தங்கித் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் போன்ற தவச் சீலர்களை உருவாக்கினர்.

மதுரை அங்கயற் கண்ணியம்மைக்கு மீனாட்சியம்மை கலிவெண்பாவும், தம்ஞானக் குருவான குமார தேவருக்கு நெஞ்சுவிடு தூதும், நல்லாருக்கு நல்லவனான சமராபுரிச் சண்முகனுக்குத் திருப்போரூர்ச் சந்நிதி முறையும், பஞ்சாதிகாரதீபமும் பாடிய நூலாசிரியர் இக் கவிராசர் சிதம்பர சுவாமிகள். அருண்மிகு சாந்தலிங்கர்இயற்றிய அருமையான நான்கு மணி நூல்களுக்கும், ஒழிவிலொடுக்கத்திற்கும் இவரே உரையா சிரியர். வேலுக்கரசு, விறல்மா மயிற்கரசு, தாலத்தரசு சமராபுரி நாயகத் தருளால் பல சித்து விளையாடிய சித்தர். பல அடியாருக்கு வெண்ணீறு கொடுத்து வெப்பம், சூலை, மகோதரம், குட்டம் முதலிய நோய்களைத் தவர். காலவாக்கம் முடவனுக்குக் கால் கொடுத்தவர். கண்ணுவப்பேடு குருட்டுக் குலாலனுக்குக் கண் பார்வை யளித்து, அருளியவர். இம் முனிவர் முதன் முதலில் ஞானப் பசியால் நாடிவந்த இடமும் இத் திருப் பேரூரேயாகும்.

எண்ணரிய காஞ்சிமா நதி மணலும், பேரை மடமும், கோலை மறுத்தல், வைராக் கிய தீபம், வைராக்கிய சதகம் அவிரோத உந்தியார் ஆகியவற்றின் மூலத்தை மொழிந்த முதல்வர் திருவாக்கால் மொழியக் கேட்ட பேற்றையும், தென்னாட்டுச் சைவர் சிதம்பர சுவாமிகள், அந்நான்கு நூல்களுக்கும் எழு திய, நுண் மாண் நுழைபுலனுராய்ச்சியுரை யையும் செவி மடுக்கும் பெருமையையும் பெற்றவை. போலீசு அதிகாரி பொன்னு ரங்க முதலியார் தனது பொருளால் சாந்த லிங்கரின் திருமடத்துத் திருப்பணி செய்த தைக் கல்வெட்டு ஒன்று நமக்குக் காட்டு கிறது.

ஆதி சிவஞான பாலயசித்தருக்குநேருக்கு நேர், மயிலம் முருகன் தோன்றிக் காட்சி யளித்ததுடன் சில வரங்களும் கொடுத்துள் ளார். அடுத்த சிவஞான தேசிகர், அம் முருகனின் திருத்தொண்டர். செந்தில் முருகன் மீது நிரோட்டகயமக வந்தாதித் தொடையாக முப்பது கட்டளைக் கலித் துறைப் பாமாலை பாடிச் சூடியவர், சிவப் பிரகாச சுவாமிகள். புனிதத் தவத்தோர் தொழுதேத்தும், புராரி குமரனை உமை சிறுவனை, போரூர் முருகனை சந்நிதி முறை யாற் பாடிப் பாமாலை சாற்றிப் போற்றியவர் சிதம்பர சுவாமிகள். வீரசைவத்திற்கும், கௌமாரத்திற்கும் உண்டான இணைப்பை இவர்கள் மூலம் அறிகிறோம். மயிலத்தின் அருகில் அமைந்துள்ள திரு ஆமாத்தூரில், தண்பாண்டி நாடு தந்த தங்கம், தண்டபாணி சுவாமிகள் அமைத்த கௌமாரத் திருமட மும், பொம்மய பாளையத் திருமடத்துடன்

அப்பகுதி மக்களுக்கு வீர சைவத்துடன் கௌமாரத்தையும் விளக்கிக் கொண்டிருக்கும் நிலையமாகும். அதுபோன்று, சென்ற நூற்றாண்டின் இறுதியில் கொங்கு நாட்டில் பேரூரின் சுற்றுப் புறத்தில் சிரவணபுரம் கௌமாரத் திருமடத்தையும், சபையையும் அமைத்துப் பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொலையும் புலையும் விட்டு, விபூதி யணிந்து, வழிபாடாற்றி, நல்வழிப் படுத்திய பெருமை திருநெல்வேலித் தண்டபாணி சுவாமிகளின் மாணாக்கரான இராமானந்த சுவாமிகளைச் சாரும். அம்மடத்துத் திருத் தொண்டர்களே பேரூர் சாந்தலிங்கர் நிலையத்தின் தலைவர்களாய்த் திகழ்ந்து வந்துள்ளனர். இவ்விரு நிலையங்களும் ஒன்றுக்கொன்று உறுதுணையாயிருந்து, இன்று கொங்கு நாட்டில் வீர சைவத்தையும் கௌமாரத்தையும் பரப்பும் பணியை மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாடு செய்த தவப்பயனாய்ப் பிரமபுரம் என வழங்க்ப்பெற்ற பொம்ம புரத்தி லுதித்த சிவஞானபாலய சித்தரால் தொடங்கிய ஞானபரம்பரை சிவஞான தேசிகரையும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளையும் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளையும் திருமுதுகுன்றம் குமார தேவரையும், திருப்போரூர் சிதம்பர சுவாமிகளையும் உருவாக்கித் தமிழ் நாட்டின்பல மூலைகளுக்கு அனுப்பி ஞானத்தைப் பரப்பியது. அப்பிரமபுரத்தில் அண்மையில் விளங்கிய பட்டம் பதினெட்டாம் பட்டம். இப்பட்டத்து சிவஞானபாலய சுவாமிகள், கடவுளுணர்வு நலிவுற்ற இக் கலியுகத்தில், நடமாடும் கோயிலாய்த் திகழ்ந்தவர்கள். சிவப்பிரகாசர் செந்தமிழ் நூலில் நல்ல ஊற்றம் உடையவர்கள். நூல் நயத்தைப் பிறருக்கு எடுத்தியம்பும் ஆற்றலும் பெற்றவர்கள். இட்டலிங்க பூசையிலும், முருக வழிபாட்டிலும் உள்ளம் பறிகொடுத்த உத்தமர். வளர் திருத் தொண்டின் நெறி வாழ வாழ்ந்தவர்கள். வருஞானத் தவமுனிவர். பண்டிதரும், பாமரரும், "என்னவர்," "என்னினியர்," என்றேத்தும்படி, எல்லோரிடமும், இனிமையாய், அவ்வவர்கள் நிலைக்கேற்பப் பழகும் ஏற்றம் பெற்றவர்கள். ஞானாசிரியராய்த் திகழ இலக்கணமுடையவர்கள். தமிழ் நாட்டிலேயே முதன் முதலில் தமிழ்க் கல்லூரியைத் தோற்றிய தனி முதல்வர். பொம்மபுரவாதீனத்து இப்புனிதரிடம் பேரையூர் சாந்தலிங்கர் திருமடத்து இளவரசு ஞானோபதேசம் மாத்திரம் பெறாது, தமிழை வளர்க்கும் பண்பையும் அவர்களிடம் கற்று, அறிந்து வந்தது மிகப் பொருத்தமே.

பிரமபுரத்து இப் பதினெட்டாம் பட்டத்து ஆதீனகர்த்தர், பேரூர் இச் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் ஆண்டு விழாக்களில் தலைமையேற்று, நிகழ்ச்சிகளில் பெரும்பங்கு பற்றி உருவாக்கிய உத்தமர்களில் தலையாயவர். பொம்மபுரம், பேரூர் ஆதீனங்கள் தமிழை மயிலம் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி மூலமும், சைவத்தை மயிலம் முருகன் செந்தமிழ்க் கழகம், சத்வித்யா சன்மார்க்க சங்கம் மூலமும், முறையே, பரப்பி வருகின்றன. சத்வித்யா சன்மார்க்க சங்கம் போன் விழாக் கோலம் பூணும் இப் புனித நன்னாளில் பிரமபுரம், பேரூர் என்ற இரு ஊரையும் எண்ணி, சிவஞானபாலய தேசிகர் சாந்தலிங்கர் ஆகிய இரு முதுகுரவரையும் நினைந்து, இருபெரும் வீரசைவ ஆதீனத் திருமடங்களையும் அதன் வழி நிற்கும் கல்வி நிலையங்களையும் போற்றிச் சைவத்தைப் பரப்பும் இரு சங்கங்களையும் வாழ்த்துவோமாக! செந்தூரனருளால், முன்னோர் காட்டிய வழியில் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க, இரு நிலையங்களும் இன்னும் பாடுபடத் திருவருள் துணை புரியட்டும். வாழ்க பிரமபுரம்! வளர்க பேரூர்!

வைராக்கிய சதகம்

பூசை செய்து தோத் திரஞ்சொலித் தனைநினை புண்ணியர் பானண்ணற்
காசை செய்திடு மம்பலக் கூத்தனை யடைகிலை யடைந்தாரிற்
பேசு கின்றனை யறவரின் விளங்கினை பிறர்மனை நயக்கின்றாய்
சீசி யிங்கிருந் தென் செய்தாய் நெஞ்சமே செத்திலாய் கெடுவாயே.

—அருட்டிரு சாந்தலிங்க அடிகளார்.

தமிழரசு

[புலவர். புவியரசு, தமிழாசிரியர்,
நரசிம்மலு நாயுடு நினைவு உயர்நிலைப் பள்ளி, கோவை.]

*

அகரமுதற் பெயருடைய அப்பர், அந்த
அகரம்போற் றலைமையொடு முதன்மை பெற்றுப்
பகரவொணு அருட்பாடல் பாடிப் பாடிப்
பார்முழுதும் பைந்தமிழே மணக்கச் செய்தார்.

ஒருநாவைப் பெற்றிருந்தும், ஓழியாப் பொய்மை
உரைப்பதற்கே தீட்டுகின்ற ஓயா நாவேன்,
ஒருநாவால் பல்கோடி நாக்கள் உய்ய
உயர்பாக்கள் தந்தவரைப் பாடல் விந்தை!

எண்டிசையின் அமணரெலாம் ஒன்று கூடி
ஏற்றமுடை வேந்தனது மனதை மாற்றித்
தண்டமிழின் நாவரசர் தம்மைப் பற்றத்
தலையாணை அனுப்புவித்த போதும், நெஞ்சம்

கொண்டிருந்த கொள்கைதனை எடுத்துக் காட்டிக்
கொற்றவனுர் காவலரைத் தூசாய் எண்ணி
விண்டுரைக்க வியலாத வீரப் பாடல்
விளம்பியநா தமிழரசின் திருநா வன்றே?

தாமார்க்கும் குடியல்லாத் தகைமை யாளர்
தலைவனையே மனச்சிறையில் அடைத்த தூயர்
'நாமார்க்கும் குடியல்லோம்' என்றெடுத்த
நற்றமிழ்ப்பா வுக்கிணைப்பா உலகி லுண்டோ?

செந்தழலே கனல்கின்ற அறையிற் பன்னுள்
செகம்மறந்து, செந்தழலான் பாதம் எண்ணிச்
சிந்தையெலாம் குளிர்ந்திடவே இருப்ப ராஞர்!
செந்தமிழே மணக்கின்ற உட லும் வேமோ?

நஞ்சினையே நெஞ்சமெனப் பெற்ற வஞ்சர்
நாவரசின் திறங்கண்டு குலைகு லைந்து
நஞ்சளைந்த பாற்சோறு ஈந்த வேளை
நல்லமுதாய் மாற்றியநா தமிழ்நா வன்றே?

நஞ்சுண்ட பெருமானின் நாமந் தன்னில்
நாவகத்தைத் தோய்க்கின்ற நாவின் வேந்தர்
அஞ்சவரும் குஞ்சரமும் அடியில் வீழ
"அஞ்சுவது யாதொன்றும் இல்லை" என்ருர்!

வேற்படையும் வாட்படையும் வெல்லாப் பாறை
கையுழவா ரப்படையால் வென்ற வீரர் !
நாற்படையும் புறங்காணுத் தீமை தம்மைப்
பாப்படையால் ஓட்டுவித்த பாவின் வேந்தர் !

உயர்குலத்துப் பெருமையினும் ஒழுக்கம் ஒன்றே
உயர்வுடைய தென்பதனை நாட்டிச் சென்றார்
உயர்மேனிச் சாதியினும், உயிரைப் பற்றும்
உயர்சமயம் சிறந்ததெனக் காட்டிச் சென்றார்.

"பசிப்பிணியைப் போக்குதலும் பரமன் தொண்டே
பாமரரை உயர்த்துவதும் பரமன் தொண்டே
நசிகின்ற மேனியதும் நன்றே யாகும்,
நம்பரமன் வாழ்கின்ற கோயி லாகும்.

புன்பிறவி வாழ்வதுவும் புனித மாகும்
புனிதர்தம் நடனமிடும் காட்சி கண்டால்!"
என்றுரைத்தே இன்றமிழின் அமுத வெள்ளம்
இப்புவியில் பெருகவிட்டார் இசையின் வேந்தர் !

வடிவேறு திரிசூலம் தோன்றும் வேளை
வாகீசர் உழவாரப் படையும் தோன்றும் !
படிவாழப் புரமெரித்த கண்ணும் தோன்றின்
மழைவாரும் அருட்கண்ணின் அன்பு தோன்றும் !

கடுவுண்ட எழிற்கண்டம் தோன்றும் போதில்
குளிர்தமிழே எழுகின்ற கண்டம் தோன்றும் !
அடுபுலித்தோல் அணியாடை தோன்றுங் காலை
அப்பரவர் அரையாடைக் கோலந் தோன்றும் !

நிறையாடை தமைத்துறந்த அண்ணல் காந்தி
நிறைவாழ்வின் பெரும்பணிகள் தோன்றும் வேளை,
அரையாடை, உழவாரப் படைகொள் வீரர்
அயராத அருட்பணியே நெஞ்சில் தோன்றும் !

தமிழிசையாம் பேராற்றிற் வற்ற ஊற்று !
தமிழ்மணத்தை ஏந்திவரும் தென்றற் காற்று !
அமிழ்தனைய குறிஞ்சித்தேன் இருக்கும் கூடு !
அருளாளர் அருட்பாடல், முல்லைக் காடு !

அக்காட்டின் நடுவிருக்கும் தெய்வ வீட்டில்
சாக்காட்டை ஒழிக்கின்ற அமுதம் உண்போம் !
எக்காலும் வாழ்ந்திருப்போம் ! ஏற்றங் கொள்வோம் !
" இன்பமதே, எந்நாளும் துன்பம் இல்லை !"

*

உயர்திரு வெ. சு. சின்னசாமிக் கவுண்டர் அவர்கள்,
கல்லூரிக் கழகத்தின் துணைத் தலைவர்.



உயர்திரு சி. என். நாகப்பக் கவுண்டர்,
பீ.எ., பீ.எல்., அவர்கள், கட்டிட நிதி,
பரிசுத்திட்ட நிதி உதவியவர்.



உயர்திரு. பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமி நாயுடு அவர்கள்,
கல்லூரிக் கழக உறுப்பினர்.

தமிழ் வளர்ச்சி

[தேவி-கவிமணிதாசன், கம்பம், மதுரை.]

*

காலத்திற்கேற்பக் கன்னித் தமிழை வளர்த்தோமா?

தமிழ்த்தங்கச் சுரங்கமெனும் சங்கநூற் பேழை
    தரணிக்குத் தெரியவில்லை; சான்றோர் வாழ்க்கை
அமிழ்தவன்பு அருளறம்சேர் இலக்கியச் சாற்றை
    அருந்தவில்லை; நூல்தொல்காப் பியமெனும் வைரம்
இமிழ்கடல்சூழ் உலகினிலே கோகினூராக
    இருப்பதனை உணரவில்லை; திருக்குறட்சோலை
கமழுமுயிர்க் காற்றுவாங்கல் காசினிக்கில்லை
    கன்னியென்றும் தமிழியல்பாய் வளர்த்துள்ளோமா?

ஞாலத்தில் தமிழ்பரவ நம்மவர் செய்ததென்ன?

இருபத்தாம் நூற்றுண்டின் ஆங்கிலத் தோடு
    ஒப்பிடின்நம் மொழிப்பற்று நகைக்கத் தோன்றும்
ஒருமொழிதான் உலகறியாத் தொன்மொழி என்றால்
    ஓங்கியது முதன்மொழியாய் உலவிடல் வேண்டும்
துருவமெலாம் துளைத்துகடல் கடந்தும் வாழ்ந்தார்
    செந்தமிழைப் பரப்பவில்லை சிறப்புடன் ஆங்கே
மருவிடும் விஞ்ஞானகலை வளர்ச்சிச் சொல்நூல்
    வழக்கிலில்லை எனில்தமிழ்தான் வளர்ந்ததாமோ?

உண்மைத் தமிழ்வளர்ச்சி எப்பொழுது?

அறிவியலின் துறைகளொடு பிறகலைக்காகும்
    அனைத்துமிவண் தமிழினிலே பாடஞ் சொல்லும்
நெறியினிற்கல் லூரியெலாம் இயங்கும் ஞான்றும்
    நீதிமன்றம் தனில்தமிழே நிலைக்குங் காலும்
முறைகூறும் சட்டமன்றம் முத்தமிழ் தன்னில்
    முழுவாட்சி செயும் பொழுதும், தமிழைக் கற்க
விரையுதுபார் எனச்செவிச்சொல் விழுந்திடும்போதும்,
    வேகமாக வளர்கிறது தாய்த்தமிழ் என்போம்.

தமிழ்க் கல்லூரி வாழ்த்து

ஆல்போல் தழைத்தே அருகுபோல் வேரூன்றிப்
பால்போல் பகுத்தறிவைப் பாய்ச்சியே—மேல்கீழ்த்
திசை மகிழச் சாந்தலிங்கர் தீந்தமிழ்க் கல்லூரி
இசையுடனே வாழ்க இனிது.

சொல்லேருழவர் சால்பு

(திரு. ஓ. கி. நல்லமுத்து M. A.,
துணைமுதல்வர், சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.)

புலவர்தம் பெருமை நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; நீரினும் ஆரளவினது. அவர்தம் நட்பு தாமரைத் தண்டாதூதிமீமிசைச் சாந்தின் தொடுத்த தீந்தேன் போன்றது. அவர்தாம் நின்ற சொல்லினர்; நீடுதோன்றினியர். பண்பின் பெட்டகமாய், கடமையின் கருவூலமாய், அன்பின் ஆலயமாய், அறிவில் அலைகடலாய் நின்ற புலவர்தம் பெருமையினை நமக்கு நன்கு புலப்படுத்தா நிற்பது புறநானூறுகும். அந்நன்னூற்றினை அறிந்தோர் தமிழக வரலாற்றினை நன்கு அறிந்தோராவர். அந்நானூறு விளக்குவன பலவாயினும் ஈண்டுயாம் விளக்க விழைவது புலவர்தம் சால்பே யாம்.

புரவலரைப் பழுமரம்தேரும் புள்ளினம்போன்று படர்ந்து பொருள் பெறுவது மட்டுமே இவர்தம் கொள்கையன்று. பெற்ற பொருளினைத் தன்பற்று மிக்குத் தானே துய்த்தல் வேண்டும் என்ற கீழ் நினைவும் அவர்தமக்கு இல்லாத ஒன்று ஆகும். பெற்ற பெருவளத்தைப் பெருதோர்க்கு ஈந்து, ஈத்துவக்கும் இன்பத்தைத் தாங்களும் நுகர்ந்து மகிழ்ந்தனர். புறநானூற்றுப் புதையலில் மூழ்கி நுகராதவர்களே அப்பாடல்கள் யாவும் செல்லாக்காசுகள்; செல்லுங்காசுக்காகப் புலவர் இயற்றிய சொற்கோவைகள் என்பர். அவர்தமக்கு இலக்கியம் என்பது யாதென இயம்பும் வேலையன்று யாம் ஈண்டு எடுத்துக்கொண்டது. நெற்பயிர்செழித்து வளர்ந்த விடத்துக் களை தானே அழிந்து படுதல்போன்று புலவர்தம் சால்பினைக் கூறுங்கால் அறியார் கூற்றும் அழியும்.

பரணர் சோழன் உருவப் பஃறேரி ளஞ்சேட் சென்னியைக் கண்டார். கண்டுகழிபேருவகை கொண்டார். அவனுடைய வெற்றிச் சிறப்பினைப் பல்லாற்றுனும் புகழ்ந்தார். அவனுடைய வாளினை வாழ்த்தினர். வேலினை வியந்தார். மாவினையும் போரெனில் விருப்பால் விம்மும் புகழ் மறவரையும் கண்டு கண்டு உவந்தார். மலை உண்டேல் மடுவுண்டு. ஒளி உண்டேல் இருள் உண்டு. வெற்றி உண்டேல் தோல்வி உண்டு. வலிமை உண்டெனில் அதற்குப் பலியாவார் பலருண்டு. அவர்களை நினைந்து நெக்குருகியது அவருடைய நன்னெஞ்சு. உள்ளும் புறமும் ஒத்திருப்பவர் புலவர். ஆகையினுலே சோழனை வாழ்த்திய வாயொடுதான்னெஞ்சத்துத் தோன்றிய அவலநினைவையும் புலப்படுத்தி அரசனை அறிவுறுத்துகிருர்.

> "தாயில் தூவாக் குழவி போல
> ஓவாது கூஉ நின் உடற்றியோர்
> [நாடே"

சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாகிய நெகிழ்ச்சியினை அன்பெனுது என்னென்பது? அன்பே புலவர் உளமாய் அமைந்தது எனில் அமையும்.

பழிபாவங்கட்கு அஞ்சுபவனே வல்லவனுயினும் நல்லவனுய் இருத்தல் இயலும். புலவர்தம் சொல்லே ஆணையெனக் கொண்டு ஒழுகும் அரசர் பலர் இருந்தும் பழி பாவங்கட்கு அவர்கள் அஞ்சி வாழ்ந்தமை அவர்தம் பண்பினையே விளக்கா நிற்கிறது. அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழிலன்றே? புலமையெனினும் அறிவெனினும் ஒருபொருள். புலவர் பழி பாவங்கட்கு அஞ்சி ஒழுகுகின்ற பண்பினைக் கடலுள் மாய்ந்த இளம் பெரும் வழுதியின் பாடலால் நன்குதெளியலாம். அது,

> "..................பிறர் அஞ்சுவதஞ்சிப்
> புகழெனி னுயிருங் கொடுக்குவர்
> [பழியெனின்
> உலகுடன் பெறினும் கொள்ளலர்."

என்பதாம்.

வேதநூல் பலகற்று அதன் வழி ஒழுகுவதோடு உலகநடையினையும் அறிந்து ஒழுகுதல் பல்லாற்ருனும் சிறப்புடைத்தாகும். புலவர்பெருமக்கள் ஒப்புரவு அறிந்து ஒழுகியதோடன்றி மன்னரையும் அந்நெறியில் ஒழுகுமாறு செய்தனர்.

"செல்லும் உலகத்துச் செல்வம்
[வேண்டினும்
....
நல்லிசை நிறுத்தல் வேண்டினு
[மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்
[தோரே"

எனப்பாண்டியன் நெடுஞ் செழியனைக்குடபுலவியனார் வாழ்த்தி அவனுடைய வென்றிச் சிறப்பினைப் புகழ்ந்து, பின் இவ்வுலகத்தோடு ஒட்ட ஒழுகி இயக்க வேண்டிய செயல்கள் பல என அறிவுறுத்துகிருர். ஒப்புரவு அறிந்தவன்தான் உலகில் நிலைபெற்று நிற்றலியலும்.

கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல் புண் என்று வள்ளுவப் பெருந்தகை மொழிந்துள்ளார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார் மன்னன் ஆணையினை மறுத்துக்கூறல் பெரும் பிழையென எண்ணது அவனை நண்ணி மலயமானைப்புகழ்ந்து, அவன் மழலைச் செல்வங்களின் தன்மையினை விளக்கி அவர்களை உய்யக்கொண்டார்.

"கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே" எனப்புலவர் கூறிய பின்னும் மன்னன் தன்தவறு உணராது ஆணையிடுவனே? செய்யானன்ரே? புலவர்தம் கருணைக் கண்ணோட்டம் நினைந்து மகிழ்தற்கு உரியது.

புலவர்கள் எவர்க்கும் அடிமைப்பட்டவர்கள் அல்லர். குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பில்லை. புலவர்தம் உள்ளத்தில் ஒளி உண்டு. அஃது வாக்கினிலே மிளிர்கிறது. புலவர்கள் குணம் எனில் போற்றுவர்; குறையெனில் தூற்றுவர். நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக் கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு என்பதனை நன்கு அறிந்தவர்கள் புலவர்கள். உடாஅ போரா ஆகுதல் அறிந்தும் படாஅ மஞ்ஞைக் கீத்த கடாஅ யானைக் கலிமான் பேகன் ஒருகால் பெரும் பிழை செய்தனன்.

இல்லக்கிழத்தியை மறந்து மாற்ருள் ஒருத்தியுடன் மகிழ்ந்து உறைந்து வந்தனன். அவனுல் துறக்கப்பட்ட கண்ணகி குழல் இனைவதுபோல் புலம்புவது கண்ட புலவர் பெருமக்கள் பேகனிடம் சென்று அவனை நன்னெறிப் படுத்தும் முறை நவில் தொறும் நவில் தொறும் நன்னயம் பயப்பதாய் உள்ளது.

"மடத்தகை மாமயில் பனிக்கு
[மென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
....
இஃதுயாம் இரந்த பரிசு..............
இனமணி நெடுந்தே ரேறி
இன்னு துறைவி யரும்படர் களைமே."
—எனப்பரணரும்

"..........என்னை நயந்து
பரிசில் நல்குவை யாயின் குரிசில் நீ
....
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்க
[நின்மாவே.
—என அரிசில் கிழாரும்,

செறுத்த செய்யுள் செய்செந் நாவின் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலனும் பிறரும் மன்னனிடம் பொன்னும் பொருளும் போகமும் வேண்டாது யாவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்தனர்.

"அன்பு, நாண் ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மையோ டைந்துசால் பூன்றிய தூண்" எனவகுப்பார் வள்ளுவர். இப்பண்புகள் யாவும் ஒன்ருய் அமைந்து விளங்கியவர்கள் புலவர்கள். அப்புகழ் மிகு புலவர்தம் பொன்னர் திருவடி போற்றி அவர் காட்டிய நன்னெறி நின்று உய்வோமாக.

சமய மாற்றம்

[திரு. வித்துவான். ர. வையாபுரி, விரிவுரையாளர், சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.]

மக்கள் தாம் உறுதிப்பொருளுணர்ந்துய்யும் வண்ணம் பல சமய நெறிகளை மேற்கொண்டொழுகுகின்றனர். ஒரு சமயத்தில் நின்றவர் பின்னர் அதனைவிட்டு வேறு சமயம் புகுதலும் உலகில் காணப்படுகின்றது. இதைப்பற்றி நூல்களின் வாயிலாய் அறிந்தது கொண்டு சில எழுதப் புகுகின்றேன்.

உலகில் இன்று நம்மால் கேட்கப்படும் சமயங்கள் மிகப்பல. நமது முன்னோர் சமயங்களை அகம், புறம் என இரண்டாகவும் அவற்றையே அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காகவும் கொண்டனர். இந் நான்கில் ஒவ்வொன்றிலும் அவ்வாறு சமயங்கள் உள. இவற்றின் விரிவு சிவஞான போதம் அவைபடக்கச் செய்யுளுக்கு மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதிய பேருரையாலும் பிற நூல்களாலும் அறியலாம்.

உலகில் இத்துணைச் சமயங்கள் நிலவக் காரணம் என்ன? மக்களனைவரும் மக்கட் சாதியான் ஒரு தன்மையரே எனினும் அறிவு விளக்கத்தாற் பலதிறப்பட்டுத் தத்தம் அறிவு சென்றவாறே பொருள் நிச்சயம் செய்தனராதலின் சமயம் பலவாயிற்று. யானை கண்ட குருடர் கதை, முதலியவற்றாலும் நமக்கு ஒரு பொருளைப் பற்றிப் பாலப் பருவத்தில் இருந்த அறிவு இளமைப் பருவம், முதுமைப் பருவங்களில் மாறுபடுவதாகிய அனுபவத்தாலும் இது துணியப்படும்.

உயிர்களுக்கு அறிவு கன்ம பாகத்தின் அளவாய் விளக்கமுறுதலின் அறிவு விளக்கத்துக்கேற்ப அவற்றிற்குச் சோபான முறையான் உறுதிப் பொருளறிவுறுப்பான் பல சமயங்கள் இறைவனால் செய்யப்பட்டன என்பர் பெரியோர். இங்ஙனம் படிப்படியாய் உணர்ந்து பக்குவப்படுதலை அரும் பருவம் அடைதல் என்றும் அங்ஙனம் அடையும் முறையாவது புறச்சமய நெறி நின்றும் அகச் சமயம் புக்கும், புகல் மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம அறத்துறைகளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும் சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதசிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்று சைவத்திறத்தடைந்து, சரியை கிரியை யோகஞ் செலுத்தி, ஞானத்தாற் சிவனடியைச் சேர்தலாம் என்றும் சிவஞான சித்தியார் கூறும்.

இச்சமயங்களுள் ஒவ்வொன்று ஒவ்வொரு காலத்திற் சிறந்து விளங்கும். ஒவ்வொன்று அழியும். விளங்குவதற்கும் அழிவதற்கும் அவ்வச் சமயங்கள் கூறும் பொருளுண்மை மட்டுமன்றி வாதிகள் அவர்கள் பற்றுக் கொண்டுள்ள அரசர்கள் ஆகியோரின் வலியும் வலியின்மையும் பிறவும் காரணங்களாம். இவையன்றி இறைவன் திருவுள்ளக் குறிப்பு மிகச் சிறந்த காரணமாம். "அமணொடு தேரரை வாதினில் வென்றழிக்கத் திருவுள்ளமே" என்று திருஞான சம்பந்த மூர்த்திசுவாமிகள் வேண்டினுர் அன்றோ! "தோல்வியும் வென்றியும் சொன்மதங்கட்கெலாம், கால பேதத்தினுண்டுந் தீ பற, கருத்தன் செயல தென்றுந்தீ பற," என்பர் சாந்தலிங்க சுவாமிகள். மேலும், "வாதிகள் தங்களுக்கல்லால் மதங்களுக் கோதார் வலியின்மையுந் தீ பற, ஓதியுணர்ந்தாரென்றுந்தீ பற" என்றும் கூறுவர். இக்காரணங்களால் மக்களிடை சமயமாற்றம் பல நிகழ்ந்தமை இலக்கியங்களாலும் உலக வரலாற்றாலும் நன்கு அறியப்படும்.

உண்மை என்பது எப்பொழுதும் ஒன்றாய்த்தானிருக்குமேயன்றிப் பலவாயிருத்தலில்லை. எனவே உண்மைப் பொருள் இதுவெனத் தெளிந்து கூறும் சமயத்தால் பிற சமயங்கள் பொன்றுவதும் இயல்பே. ஒன்

றொடொன்றொவ்வா மதங்கள் ஒன்று ஒன்றினால் பொன்றுவதில்லையேல் உந்தீ பற பொய்யென்பதெத்தை நாம் உந்தீ பற என்பது அவிரோத உந்தியார். எல்லாச் சமயங்களும் இறைவனால் செய்யப்பட்டன என்று கூறியபின் அவற்றுள் ஒன்றற்கொன்று வன்மை மென்மை கூறலும் வென்றி தோல்வி எய்தியதாகக் கூறுதலும் பொருந்துமோ என ஐயம் எழலாம். இவ்வையம் சிவஞான போதம் சிறப்புப் பாயிரப் பேருரையில் சைவாகமப் பிராமாணியம் கூறுமிடத்து மாதவச் சிவஞான சுவாமிகள் 'எல்லா நெறியும் இறைவனாற் செய்யப்பட்டமையின் விசேடம் இன்மையின் அவற்றுள் ஒன்றற்கொன்று வன்மை மென்மை கூறின் இதுவே மாறுகொளக் கூறலாமால் எனின், அற்றன்று; அவற்றைப் பின் வழிப்படுத்து நூல் செய்தோர் தாரதம்மியத்தானே அவற்றிற்கு வன்மை மென்மை கூறுதல் அமையுமாதலின். பின்னூல் செய்தார் அவ்வந்நெறியிற் கூறும் பொருள்களை அம்மொழியின் தாற்பரியம் அறியாது மயங்கி அவற்றொடு மாறுகொளத் தொகுத்தும் விரித்தும் செய்தாராகலின் அவை மென்மை எனப்பட்டன என்று எடுத்தெழுதியது கொண்டு விடுக்கப்படும்.

உயிர்கள் கன்ம பாகத்திற்கேற்ப அறிவு விளக்கம் பெறப் பெற இங்ஙனம் நிலவும் பல சமயங்களுள் தான் நின்றொழுகும் சமயம் உண்மைப் பொருளை முற்ற உணர்த்துவதன்று என உணர்ந்து அதனைவிட்டு உண்மைப் பொருளை உணர்த்தும் சமயத்தை அறிதலில் வேட்கையுற்று நூல்களாலும் கேள்வியாலும் உலகில் உயர்ந்து நிலவுமாற்றாலும் உணர்ந்து இறைவன் திருவருள் செலுத்தியவாறே போய்ப் பிறிதொரு சமயஞ் சாரும். இங்ஙனம் நிகழ்வதே உண்மைச் சமயமாற்றமாம். இங்ஙனம் சமயம் மாறிப் புகுந்தோர் நின்ற சமயத்தை விட்டதனால் வரும் குற்றம் எய்தாமை மேலும் புகுந்த சமயத்தினால் வரும் நன்மையையும் எய்துவர். இங்ஙனமன்றிப் புகழ், பொருள் முதலிய காரணங்களாலும், பிற காரணங்களாலும் மாறுதல் தக்கதன்று. இதனை உயர்ந்த நெறியீதென்றொன்றை விட்டொன்றை இயைந்திடுவோனுமுண்டுந்தீ பற, ஏதம் அடையான் என்றுந்தீ பற எனும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்காலும் இதற்கு 'தன் சமயத்தின் கண் இழிவும் பிறிதொரு சமயத்தின்கண் உயர்வும் கன்ம பாகத்தின் அளவின் ஒருவனுக்குத் தோன்றுகையால் தான் முன்பு நின்ற நெறியை நீங்கி உயர்வு தோன்றிய நெறியை அடையாநிற்பன். ஒரு சமயத்தின்கண் நின்றான் அச்சமயமே உயர்ச்சி என்றும் மற்றயவை தாழ்வு என்றும் மனதில் நிச்சயார்த்தம் பிறந்திருக்கவும் புகழ் பொருளாகிய முன்னிலையினால் மற்றொரு சமயத்தை அடைந்தானேயாயின் அங்சமயத்தில் கூறிய முத்தியை அடையாது முன்பு நின்ற சமயத்தில் கூறிய பதிதத்தன்மை யடைந்து நரகத்தில் தாழ்குவன். இஃதன்றி முன்பு, நின்றுள சமயம் தாழ்வென்றும் பின்பு செல்லவேண்டிய சமயம் உயர்வென்றும் நிச்சயார்த்தம் பிறந்து சென்றானேயாயின் அச்சமயத்தில் கூறிய நன்கு அடைவதன்றி முன்பு நின்றுள சமயத்திற் கூறிய பதிதத்தன்மையடையான்' என்று சிதம்பர சுவாமிகள் உரைத்த உரையாலும் உணரலாம்.

அப்பர் சுவாமிகள் சமணஞ் சார்ந்ததும், சைவத்திற்கு மீண்டதும் சேக்கிழார் வழிநின்று கூறுஞ் சிவப்பிரகாச சுவாமிகள் 'ஊர்ந்து வரும் இளவேறுடையான் தன் உளத்தருளாற் சார்ந்து சமண் விட்டுறும் உனக்கே வரும் சைவ நலம் கூர்ந்து மிளிர் தரும்' (நால்வர் நான் மணிமாலை) எனச் சார்தல், விடுதல் இரண்டிற்கும் திருவருளே ஏது எனக் குறித்தலின் சமய மாற்றமும் இறைவன் திருவருளின்றி நிகழாது என்பது அறியப்படும். சேக்கிழார் சுவாமிகள் 'சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர நம்பரருளாமையினால் கொல்லாமை மறைந்துறையும் சமண் சமயங் குறுகினார்' என்றும் 'ஈசரருள் கூடுதலால் ஒவ்வா இப்புன் சமயத்தொழியா இத்துயரொழிய செவ்வாறு சேர் திலகவதியார் தாள் சேர்வன் என' என்றும் அப்பர் சுவாமிகள் புராணத்துட் கூறுதல் அறியதக்கது.

உண்மைச் சமயம் இதுவென உணரும் அறிவும் அதிற் செலுத்தும் திருவருளும் பெறத்தக்க ஊழ் வாய்ப்பது மிக அரிது. இவ்வருமையைச் சிவஞான சித்தியார் பல்யோனி யெல்லா மொழித்து மானுடத்துதித்தல் கண்டிடிற் கடலைக் கையில் நீந்தினன் காரியங்காண் என்றும் நான் மறை பயிலா

நல்லவர்

[திரு. வித்துவான். மா. பட்டியப்பன்,

விரிவுரையாளர், சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.]

நல்லவர் வாழ்கின்ற நிலம் தான் நன்னிலம் என்று புறநானூறு கூறுகிறது. நிலம் மேடாகவோ பள்ளமாகவோ இருக்கலாம். அதுகொண்டு நிலத்தை நன்னிலம் என்றோ புன்மைநிலம் என்றோ கூறிவிட முடியாது. நாடாகவும் இருக்கலாம்; காடாகவும் இருக்கலாம் இதனாலும் நிலத்தின் தன்மை உயர்ந்து விடாது. ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்பதே அப்புறநானூற்றுப் பாடல். இதிலிருந்து நாம் ஒன்றை அறிய முடிகிறது. எந்த நாட்டில் நன்மக்கள் இல்லையோ அந்தநாடு என்னதான் நீர் வளமும் நிலவளமும் ஏனைப் பொருள் வளங்களும் உடையதாய் இருந்தாலும் பாராட்டப் படுவதாகாது என்பதேயாகும்.

இனி மக்களில் யாரை நல்லவர் என்பது? யாரை நல்லவரல்லர் என்பது? இதுதான் பெரியதொரு சிக்கலான கேள்வி. விடை காண்பதும் எளிதாக இல்லை.

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னைப்பிறர் நல்லவர் என்று சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்றான். இவ்வாறு எதிர்பார்ப்பவன், 'நான் நல்லவனாக இருக்கின்றேனா?' என்பதைச் சிந்திக்க முற்படுவதில்லை. எப்படியோ நல்லவனென்ற பட்டத்தில் நடமாட ஆசைப் படுகின்றான். இதற்காக இவன் தேடுவதெல்லாம் இரண்டே தான். ஒன்று, ஏதோ பணம் நிறைய நம்மிடமிருந்தால் நல்லவர் என்ற பெயரை எளிதில் சம்பாதித்து விடமுடியும் என்று நம்புகிறான். அது கிடைக்கக் காலம் சிறிது கடக்கும் என்றால் எப்படியோ உலகை ஆள்பவர் உறவைப் பெற்று விட்டால் எளிதில் நல்லவன் என்ற பெயரைப் பெற்று விடுவதோடு பொருளைத் தேடுவதற்கு வழியும் பிறந்து விடுமென்று உறுதிகொண்டு அதைப் பெறப் படாத பாடுபடுகிறான். இதில் வெற்றி கண்ட நல்லவர்கள் தான் உலகில் வெளிச்சமாகக் காணப் படுகி

நாட்டில் விரவுத லொழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தானாகும் என்றும், தவஞ் செய் சாதியில் வந்தும் பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொணாதே என்றும் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது என்றும் படிப்படியாய்க் கூறியிருப்பது கொண்டு அறியலாம்.

இதுவரை கூறியவாற்றால் சமயங்கள் உயிர்களின் அறிவு விளக்கத்துக்கேற்ப இறைவனால் பலதிறப்பட செய்யப்பட்டன என்பதும் அறிவு விளக்கம் பெற உயிர்கள் சமயம் மாறி மாறி ஒழுகும் என்பதும் இம் மாற்றம் ஒரு பிறவியிலோ – பல பிறவிகளிலும் நம்மையறியாமலே நிகழ்கிறது என்பதும் அதுவும் இறைவன் திருவருளின்றி நிகழாதென்பதும் உண்மைச் சமயம் அறிந்து சார்தல் மிக அரிது என்பதும் ஒருவாறு விளங்கும்.

இவ்வரியவூழ் வாய்த்திருந்தும் ஊன்றி நின்றொழுகாது வழுவிப் பயனிழப்போர் பலர். இவ்வளவும் உணர்ந்த நாம் மனித உடம்பொடு நான்மறை பயிலும் நாட்டில் பிறந்த புண்ணியத்தை வியந்து பரசமயங்களிற் செல்லாது சைவத்திறத்தடைந்து சரியை கிரியை யோகம் செலுத்தி ஞானத்தால் வீடெய்துமாறு முயல்வதே தக்கதாம் எனக் கூறி இதனை முடிக்கின்றேன்.

ருர்கள். இந்த நல்லவர்களையா புகநானூறு எதிர்பார்த்தது ?

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே'' என்று ஒருபாடல் தொடங்கு கிறது. இந்தப் பாடலும் நல்லவர் இருக்க வேண்டிய தேவையை வற்புறுத்து கிறது. நவ்லவர் வேண்டும் என்று வற்புறுத்துகின்ற கருத்து மிகத் தொன் மையான காலத்திலிருந்தே விடாது கூறப்படுகிறது.

யார் நல்லவர்?

யார் நல்லவர் என்ற கேள்வியை எடுத்துக் கொண்டால் இரண்டு விதமான நல்லவர்கள் நம் முன்னர் வருகின்றனர். இயல்பாகவே அறநெறி வாழ்ந்து வரும் நற்குடியில் தோன்றித் தானும் நல்ல வராய் வாழ்ந்து பிறர் நல்லவராய் வாழ் வதற்கோர் வழிகாட்டியாகவும் இருப் பவர்கள் ஒருவகையினர். இனி இரண் டாவது வகையினர் நல்லவர்களாய் நல்ல வர்களாகப் பயிற்று விக்கப்பட்டு நல்ல வராய் வாழ்கின்றவர்.

இவர்கள் இருவருமே உலகம் தன் னைப் பற்றி என்ன சொல்கிறது என்பதில் கவலையில்லாமல் நாம் உலகை என்ன சொல்ல வேண்டும் என்பதிலேயே அறி வையும் ஆற்றலையும் செலவிடுகின்றனர். இவர்கள் உலகை நோக்கித் தங்கள் பய ணத்தை மேற்கொள்வதில்லை. தங்கள் பயணத்தை உலகம் தொடர்ந்து வந்தால் அதைப் புறக்கணிப்பதுமில்லை. பயணத் தில் உலகத்தின் வேகம் பின்னிட்டால் அதுபற்றித் தங்கள் பயணத்தின் வேகத் தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் மாட் டார்கள்.

இவர்கள் பயணத்திற்குத் துணை யாகக் கொள்வதெல்லாம் வாழ்வில் தெளிந்தவர்களின் தெளிவு ஒன்றனையே. தெளிவாகத் தோன்றுபவை யெல்லாம் முன்னோர்கள் தெளிந்தவையாக இருந்தா லொழியத் தெளிவென இவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. இத்தகைய உறுதி யுடையவர்களை நல்லவர் என்று எந்தச் சமயத்திலும் துணிந்து கூறலாம். இந்த அரிய தகுதி, வாழ்ந்தால் சரி என்ற கொள்கையுடையவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. வாழ வேண்டுமே என்ற கொள்கையுடையவர்களிடம் தாம் காண முடியும். இந்த உயரிய வாழ்வு வாழ முடி யாத போது தன் வாழ்வை வாழ்வாகக் கணக்கிட்டுக் கொள்வதில்லை. வாழமுடி. யாத ஒவ்வொரு கணத்திலும் தங்களை இல்லாதவர்களாகவே கணக்கிடுகிறார்கள். இவர்கள். வாழ்க்கையில் காலம் மூன் றையும் மிகத் தெளிவாகக் கணக்கிடு கிருர்கள். ஞானிகளாகத் திகழ்கின்றார்கள். இந்த நல்லவர்கள் இருந்தார்கள் என்று சொல்லும் பெருமை சில தலைமுறைகள் வரை தொடரும். இன்று நாம் காண் கின்ற காட்சி என்ன? மேலே சொல்லிய பெருமை நம் கால்வழிகளுக்கு இருக்கும் என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. அதை நாம் தேடிவைக்காது போனல் பின்னே வருபவர்கள் நம்மை எப்படியோ எண்ணுவார்கள். இந்தப் பழிக்கு நாம் ஆளாகாமல் இருக்கவேண்டுமானல் பின் வருவதைச் செய்தாக வேண்டும்.

நல்லவர் ஆக என்ன செய்ய வேண் டும்? நாம் நல்லவராக ஆகவேண்டுமா னல் நல்லவர்க்குக் கூறப்படும் இலக்க ணங்களை, ஒழுக்கங்களை மேற்கொண்டு ஒழுகி அதனல் நமக்கு வரும் அனுபவங் களைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். நாம் மேற்கொள்ளும் இலக் கணங்களும் ஒழுக்கங்களும் நம்மால் மேற் கொள்ள முடியுமா? என்று நினைப்பதாக இருந்தால் பயன்படாது. மேற்கொண்டு ஒழுகத்தான் வேண்டும். அதனல் வரும் தொல்லைகளைப் பொறுத்துக் கொள்வதில் சிறிதும் தயங்குதல் கூடாது. இதனல் நமக்குத் துன்பங்கள் தான் மிகும். அவை நம்மால் கடக்கப்பட வேண்டியவையே. ஒருவன் எப்பொழுது என்னென்ன இன் பங்களைத் துய்த்தோம் என்பதில் பெருமை கொள்ளுதல் கூடாது. மாருக என்னென்ன துன்பங்களைக் கடந்தோம் என் பதிலேயே பெருமை கொள்ள வேண்டும். நல்லொழுக்கத்தை, அறநெறியை மேற் கொள்பவன் என்றுமே தனக்கு வரும்

‘கனவு’

[திரு. வித்துவான் ந. இராய. சென்னியப்பனர்,
விரிவுரையாளர், சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.]

இலக்கணப் புலவர், இலக்கியப் புலவர், உளநூலறிஞர் சமய நூலார் ஆகியோர் கனவு பற்றிக் கூறினவற்றைத் தொகுத்தெழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோலா நாவின் மேலோராகிய தொல்காப்பியர் தாம் செய்த தொல்காப்பியத்தில் பொருளதிகாரம்–மெய்ப்பாட்டியல் ‘இன்பத்தை வெறுத்தல்......’ எனத் தொடங்கும் நூற்பாவில் ‘கனவொடு மயங்கல்’ என்று கனவைப்பற்றிக் கூறியுள்ளார்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் காமத்துப் பாலில் ‘கனவு நிலை யுரைத்தல்’ என ஓர் அதிகாரமே பாடியுள்ளார். ‘...அக் கனவு நனவின் கண் நினைவு மிகுதியாற் கண்டதாகலின் இது நினைந்தவர் புலம்பலின் பின் வைக்கப்பட்டது’ எனப் பரிமேலழகர் கூறுவர். நினைவே கனவாகும் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுண்டு. உளநூலார் நனவில் கண்டவை தாம் கனவில் தோன்றுகின்றன என்பர். சமய நூலார் இக்கொள்கையை மறுப்பர். இறுதியில் இதுபற்றி விளக்குவல்.

துன்பங்களைச் சமாளிக்க வேண்டியவனல்லன். அவற்றைக்கடந்து வெற்றிகாண வேண்டியவனே. “இடுக்கண் வருங்கால் நகுக” என்ருர் திருவள்ளுவர். இவற்றையெல்லாம் நன்கு சிந்திப்போமேயானுல் ஒருவாறு உண்மையான நல்லவர்களாக ஆக முடியும்.

இதை விட்டு விட்டு யாருக்கு எதைச் செய்தால் அவர் நம்மை நல்லவர் என்பார் என்றும், அவர் நம்மை நல்லவர் என்று சொல்ல நாம் எதைச் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்த்துச் செயல்படுவது பயனற்றது. இன்று எவர் ஒருவர் வேறு ஒருவரை நல்லவர் என்று சொன்னுரோ அவரே சில காலத்துக்குள் தனது கருத்தை மாற்றிக் கொள்கிருர். இதுதான் இன்றைய உலக நிகழ்ச்சி! மேலும் ஒருவர் தான் நல்லவர் என்று எவரைச் சொல்கிருரோ அவரைத்தான் உலகம் நல்லவர் எள்று சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கூட வந்து விடுகிருர்கள். இந்தக் கொடுமைகளிலிருந்தெல்லாம் ஒருவர் தப்ப வேண்டுமானுல் உண்மையில் தெளிந்த ஞானிகளது வாழ்க்கையைத் தம் வாழ்க்கையாக ஆக்கிக் கொள்ள முற்பட வேண்டும். இல்லையேல் நாம் ஒருவர் சொல்லுகின்ற வரை தான் நல்லவர்; அவர் சொல்லாத போது நாம் நல்லவரல்லராக வேண்டியது தான். இந்தப் பயங்கரமான போக்குக்கு நம்மை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது.

மிகச் சுருக்கமாகச் சொல்லப் போனுல் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை—என்ற இவ்வைந்தையும் நம் நிலைக்கேற்ற வகையில் மேற்கொண்டொழுகுவதே சிறந்த வழி. இதை ஒருவருக்காக அல்லாமல் தனக்காக மேற்கொண்டொழுகி உய்வதே சிறந்த நல்லவராதற்கு வழி.

இவ்வாறு வாழவல்ல ஆற்றல் பெற முயல்வோம். அம்முயற்சியே கடவுள் வழிபாடு. அதைப் பெறுவதே கடவுளருள்.

நல்லவர் பெருகுவதாக. நானிலம் புகழுறுவதாக!

தவத்திரு சாந்தலிங்க அடிகளார், தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள், எழுத்தர்.



தவத்திரு சாந்தலிங்க அடிகளார், உயர்நிலை, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

உயர்திரு. வே. ந. சுப்பணக் கவுண்டர்
அவர்கள், திருமடத்திற்கு நிலமும்,
கல்லூரிக்குப் பரிசு நிதியும் உதவியவர்



உயர்திரு கே. ஆர். இராமகிருட்டிண பிள்ளை
அவர்கள், பரிசுநிதி உதவியவர்

பதிற்றுப்பத்தில் - இரண்டாம் பத்து-முதற்பாட்டில்

''கவிர்ததை சிலம்பில் துஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியோடு நரந்தங்
கனவும்...'

என்று கவரிமான் கனவு கண்டதாகக் குமட்டூர்க் கண்ணனர் பாடியுள்ளார்.

அகநானூறு மணிமிடை பவளத்தில் (குறிஞ்சி-132)

'துளிதலைத் தலைஇய
சாரல் நளிசுனைக்
கூம்புமுகை அவிழ்ந்த
குறுஞ்சிறைப் பறவை
வேங்கை விரியினர்
ஊதிக் காந்தள்
தேனுடைக் குவியிலைத் துஞ்சி யானை
இருங்கவுள் கடாஅம் கனவும்...'

என்று தாயங்கண்ணனர் வண்டு கனவு கண்டதாகப் பாடியுள்ளார்.

அழுதல், அஞ்சுதல், மகிழ்தல், பெருமிதங் கொள்ளுதல் போன்றன விலங்குகளுக்கு இல்லை என்பர். உணர்ச்சிமட்டும் உண்டு என்பர். மக்கள் பெற்றுள்ள சிறந்த ஒன்று மனம் என்பர். அம்மனத்தாலேதான் கனவு காண்கின்றனர் என்பர். விலங்குகள் கனவு கண்டதாகத் தமிழ்ப் புலவர் கூறிய செய்தி வியத்தற்குரிய ஒன்றே. தமிழ்ப் புலவர் தம் பல்கலைப் புலமை இதனல் விளங்குகின்றதல்லவா?

தமிழின் தனிப் பெருங் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் கனவு மிகச் சிறப்பாக மூன்று இடங்களில் கூறப்பெற்றிருக்கின்றது. கற்பின் கொழுந்தாகிய கண்ணகி தான் கண்ட கனவினைத் தேவந்திக்குக் கூறும், 'கனத்திறம் உரைத்த காதை'யில் வரும்.

'கடுக்குமென் நெஞ்சம்
கனவினல் என்கை
பிடித்தனன் போயோர்
பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற்
படாத தொருவார்த்தை
இட்டனர் ஊரார்
இடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர்
தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான்
கட்டுரைத்தேன் காவலனோடு
ஊர்க்குற்ற தீங்குமொன்
றுண்டா லுரையாடேன்
தீக்குற்றம் போலும்
செறிதொடீஇ தீக்குற்றம்
உற்றேனோ டுற்ற
உறுவனோடு யானுற்ற
நற்றிறங்கேட்கின்
நகையாகும்...'

என்ற பகுதி பின்னர் நடப்பனவற்றைக் கனவில் கண்டதைக் காட்டுகின்றது.

அடைக்கலக் காதையில் மாடல மறையோனிடம் கோவலன் தான் கண்ட கனவினைக் கூறுகிருன்.

'.........ஓர் குறுமகன் தன்னால்
காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
நாறைங் கூந்தல்
நடுங்கு துயரெய்தக்
கூறைகோட் பட்டுக்
கோட்டுமா ஊரவும்
அணித்தகு புரிகுழல்
ஆயிழை தன்னெடும்
பிணிப்பறுத் தோர்தம்
பெற்றி எய்தவும்
மாமலர் வாளி
வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள்
கையற் றேங்க
அணிதிகழ் போதி
அறவோன் தன்முன்
மணிமேகலையை
மாதவி அளிப்பவும்
நனவு போல
நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன்...'

என்பது அப்பகுதியாகும்.

இக்கனவில் கோவலனுக்குப் பின்நேர இருப்பதையும், கண்ணகி துன்புறு செய்தியையும், கோவலன் கண்ணகி வானுலகடைந்த பின் மாதவி மணிமேகலையைப் புத்தமதத்திற் சேர்த்துவதையும் இளங்கோவடிகள் கோவலன் வாயிலாகக் கூறுகிருர்.

அடியார்க்கு நல்லார் இப்பகுதிக்கு எழுதும் உரை மிகச் சிறந்த கருவூல மாகும். கனவு காணும் பொருள்களில் நல்லன, தீயன, காணுங் காலத்தால் கனவின் பலன் விளை காலம் ஆகியவற் றைக் கனு நூலின் துணைக்கொண்டு விளக் கிக்காட்டியுள்ளார் அடியார்க்கு நல்லார். கனுநூல் எனத் தமிழில் ஒரு நூலும் உண்டு.

வழக்குரை காதையில் கோப்பெருந் தேவி, செங்கோலும் வெண் குடையும் நிலத்தில் வீழ்தலையும், வாயில்மணி நடுங்கு தலையும் இரவில் வானவில் தோன்று தலையும், பகலில் விண்மீன்கள் விழுதலை யும், கனவில் காண்கிருள். பின்னே நடக்க விருக்கும் நிகழ்ச்சிகளே பாண்டி மாதேவி கனவில் தோன்றின எனலாம். பின் நடைபெறும் நிகழ்ச்சிகள் தாம் முன்னே கனவில் மூன்றிடத்தும் சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றன.

கம்பராமாயணத்தில் திரிசடை கண்ட தாகக் கூறப்பெறும்-சுந்தரகாண்டத்தில்-காட்சிப் படலத்தில் வரும் கனவும் இத்தகையதே.

ஆங்கிலத்தில் சிறந்த நாடக ஆசிரி யரான சேக்ஸ்பியர் எழுதிய ஜூலியஸ் சீசர் (Julias Caesar) எனும் நாடகத் திலும் கனவு கூறப்பெறுகிறது. சீசரின் மனைவி கண்ட கனவே அது. சிலப்பதி காரத்தில் கோப்பெருந்தேவி கண்ட கனவைப் போன்றதே அது. ரோம் நாட்டுச் செல்வ மனிதர் காசியஸ், புரூட் டஸ் போன்ரோர் திட்டமிட்டுச் சீசரைக் கொல்ல எண்ணி உள்ளனர். அக் கொலைக்கு முந்திய நாள் இரவில் சீசர் மனைவி கலிபோர்னியா கனவு கண்டனள். 'ரோம்நாட்டுச் செல்வ மனிதர் பலர் கூடிச்சீசரைக் குத்திக் கொல்வது போலவும்,குருதியில் கை கழுவுவது போல வும் 'கனவுகண்டாள்' சீசர் மனைவி. இதுவும் பின் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை முன் கலிபோர்னியா கனவில் கண்ட தாகவே அறிகிரோம்.

இன்னும் பல இலக்கியங்களில் இவை போன்ற கனவு நிகழ்ச்சிகளைப் புலவர் பெரு மக்கள் அமைத்துள்ளனர்.

இனி இக்கனவு பற்றி உள நூலார் கொள்கைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம். அச்சம், மகிழ்ச்சி, காதல், வீரம், செரித்த லின்மை போன்றன பற்றிக் கனவு தோன் றும் என்பர். மக்கள் மனத்தை அடிமனம்; நடுமனம்; புறமனம் என மூன்ருகப் பகுத்துக் கூறுவர். பகலில் தொழில் புரியும் போது புறமனம் செயல் படுகிறது என்பர். உறங்கும்போது நடு மனத்தாலும், அடிமனத்தாலும் புற மனம் அடக்கப்படுகிறது என்பர். உறங்கும் போது நடுமனத்தில் நாம் நினைப்பன கனவில் தோன்றுகின்றன என்பர். நாம் நனவில் கண்டனவே கனவில் வருகின்றன என்றும் காணுதன கனவில் வாரா என்றும் நனவில் கண்டவற்றின் வேறு வடிவங் களே கனவில் வருவன என்றும் அவர் கூறுவர்.

நமது அருண்மிகு சாந்தலிங்க சாமிகள் 'கொலை மறுத்தல்' நூலில் கனவைப் பற்றி விரிவாகப் பாடியுள்ளார். கனவில் உயிர் இவ்வுடலை விட்டு வேரோர் உடலின் கண் புகுகின்றது என்பது சாமிகள் கொள்கை. கனவில் தோன்றுவன வெல்லாம் நனவின் கண்ட நினைவாகும் என்பதனை மறுத்துக் கூறியுள்ளார்.

கனவில் நம் உடல் வானில் பறப்பது போன்று சில சமயங்களில் காண்கின் ரோம். கனவில் பறக்கும் நம் உடல் நனவில் பறப்பதில்லை. எனவே நினைவே கனவாகும் என்பது பொருந்தாது. கதை களில் தேவர் முதலியோர் பறப்பதாகப் படித்திருக்கிரோம். கேட்டிருக்கிரோம். கதைகளில் - கேட்ட - நினைவால் பறப்ப தாகக் கனவில் காண்கிரோம் என்று தடை யெழுப்பலாம். கதைகள், புராணங்கள் ஆகியவற்றில் நான் முகன் முதலிய தேவர் களுக்குப் பல முகங்கள் இருப்பதாகவும் படித்திருக்கிரோம். அவையும் கனவில் தோன்ற வேண்டும். அவை அவ்வாறு தோன்றுவதில்லை. எனவே படித்த, கேட்ட செய்திகளும் கனவில் தோன்றுவ தில்லை என்பது புலனுகுகிறது.

'காதல்தரும் உருஇதுவான்
பறத்தல்இன்று ஆங்கு
அதற்கு இயல்பாய்க்
காண்ட லானும்

'மாயா விதம்'

[வித்துவான் மு. சகந்நாதன்,

தலைமைத் தமிழ் ஆசிரியர், சாந்தலிங்கர் உயர்நிலைப்பள்ளி, பேரூர்.]

'மாயா விதம்' என்னும் இச்சொற்குப் பொருள் யாதோ? எனில், 'மாண்டு போகாது, மாட்சிமைப்பட்டு நிலை நிற்பது' எனப்படும். இச்சொல் தோன்றுவதற்கு, இதனைத் தலைப்பாக அமைத்துக்கொண்டதற்கும் காலப் போக்கே காரணமாக நிற்கின்றது - உலக நடை தழுவாத எந்த ஒரு நூலும் காலத்தால் நிலைப்பதில்லை; எனவே தாம் கூறப் போகும் கருத்துக்கள் நிலைக்க, உலக நடை தழுவி, காலத்துக்கு ஏற்பன கொண்டு பொருந்தக் கூறிச் செல்லும் வரன் முறையை மேற்கொள்ளுகின்றனர். இல்லையேல் தம் கருத்துக்கள் ஏலாததோடு தம் நூலும் மாளும் என்பதனை உணர்ந்து சொல்லிச் சென்றுள்ளனர் என்பதற்கு இக்கட்டுரை சான்று பகரும்.

முதலாவதாக தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருந்தகையார் தாம் கொண்ட கொள்கையை ஆன்றோர் செல்லும், சென்று பயனடைய வைக்கும், நெறியிலேயே செலுத்தும் பண்பு வாய்ந்தவர். அவ்வாறு செல்லாத மக்களை, மக்கள் கூட்டத்தினின்று விலக்கிப் 'பதடிகள்' என்றும், 'மாக்கள்' என்றும், 'செத்தார்கள்' என்றும் கூறி ஒதுக்கி வைக்கும், உறுதியாளர். இந்நிலை படைத்த அவர், தம் காலத்தே நிலவும் கொள்கை தமக்கு முரண்பாடாயினும் - தம் கொள்கைக்கு ஒவ்வாத நிலைமைத்தாயினும் - அவ்வாறு அக்கொள்கையினை மறுத்துக் கூறின், தாமும் தம் கொள்கையும் இவ்வுலகத்தே நிலை பேறு அடையாது - எதனையும் வலியுறுத்த முடியாது என்று எண்ணங்கொண்டார் போலும். அதனால் அக் கொள்கைகளை உடன்படுவார் போன்று காட்டி, மறுத்துக் கூறிச் செல்லும் நோக்கைச் சில குறட்களில் காணலாம்.

அருள் தன்மையினைக் கூற வந்த வள்ளுவர், "அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்," என்று கூறிப் பின் 'புலான் மறுத்தலை'க் கூறிக் கொல்லாமை என்று மற்றோர் அதிகாரத்தையும் வகுத்துள்ளார். புலான் மறுத்தலுக்குக்கு முன்னுரை எழுதிய பரிமேலழகர் 'கொலைப் பாவத்தைப் போக்க முனைவார்க்குக் காரண காரியத்தை ஒருங்குடைத்தாய **ஊனுண்டல்** அருளுடையார்க்கு இயைவதன்று' என்பர். எனவே அருளுடையார் என்பார் கொலையை அறவே வெறுக்கும் அந்தணாள்-சான்றோர் - அறவோர் எனலாம்.

இத்தகைய செம்மை உள்ளம் படைத்துக்கூறிய வள்ளுவர்,

'அவிசொரிந்து ஆயிரம்
வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணுமை நன்று'

என்று கூறியுள்ளார்.

போது உறைவோன்
ஆதியர்கள் முகம்ஆதி
கனவில் யாம்
பொருந்தா தானும்
ஓதும் நினைவு அல
உணர்வார் உயிர்க்குணம் ..'

என்பது சாந்தலிங்க சாமிகளின் அருள் வாக்கு.

இப்பகுதிக்குத் திருப்போரூர் சிதம்பர சாமிகள் வினாவும் விடையுமாக மிக அழகாக உரை எழுதியுள்ளார். படித்து உணர வேண்டிய மிகச் சிறந்த பகுதியாகும். இப்பாடலில், உணர்வார் உயிர்க் குணம் என்ற தொடர் பயிலுந்தொறும் பயிலுந்தொறும் பேருணர்வினை உண்டாக்க வல்லதாகும்.

இக்குறளில் - முன்னும், பின்னும் கூறும் குறட்களில் கண்ட வள்ளுவனரின் மனச் சீற்றத்தைக் காண முடிவதில்லை. "ஆயிரம் வேள்விகள் வேட்கில் ஓர் இந்திரன் பதவி கிடைக்கும் அல்லது பெரும் ஊதியம் கிடைக்கும்" என்று வேதம் கூறும். ஆயினும் அதன் பயனையோ, பதவி யினையோ காட்டிலும் ஒன்றனது ஊனைத் தின்ன எவ்வுயிர்க்கும் எவ்வகையிலும் தீங்கு விளைவிக்காது இருப்பது சிறந்தது என்ற கருத்தினை விளக்கும். இக்குறளில் 'ஒரு விலங்கினது உயிரைப் போக்கி, நின்ற ஊனை உண்ணுமை நன்று' என்று எளிமையாக, அமைதியாக அல்லவோ கூறுகின்ருர்.

'ஒத்த தறிவான்
உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.'

என்ற குறளுரை, "உயிரனறிவுஞ் செயலுங் காணுமையின் 'செத்தாருள் வைக்கப்படும்' என்ருர்; இதனுல் உலக நடை வழு, வேத நடை வழுப் போலத் தீர்திறனுடைத் தன்று என்பது கூறப்பட்டது." என்கிறது.

எனவே வள்ளுவனரும் உலக நடை வேத நடைகளைத் தழுவிக் கூறும் முகத்தானும் 'வேள்வியில் உயிர்ப்பலியிடுவதை வெறுத்துக் கூறின் தம் நூல் உலக நடைக்குப் புறம்பானதாக ஆக்கப்பட்டு மறைக்கப்படுமோ' என்று ஐயுற்றுக் கூறியுள்ளார் என்று புலப்படுகின்றது.

இந்நிலையிலேயே நம் அருட்குரவரான அருள்மிகு சாந்தலிங்க சுவாமிகளும் வேள்விப் பெரும் பகையாம் வீர சைவ சித்தாந்தக் கொள்கையினையுடையவராகியும் கேள்வியிற் கொல்லுதலை வெறுத்துக் கூற முனையாது ஒப்பிக் கூறியுள்ளார். இவர் மேலைச் சிதம்பரமாம் திருப்பேரூரினைத் தம் பதியாகக் கொண்டு மக்களுக்கு உண்மை நெறியினை விளக்கி வந்தார். மக்களை நல் வாழ்க்கை நெறியில் செலுத்த எண்ணி அதற்கு முதற்காரணமான கொலையை விலக்கியும், வெறுத்தும், சில சமயக் கொள்கைகளை மறுத்தும் கூறும் வகையில் 'கொலை மறுத்தல்' என்ற ஓர் நூலினை இயற்றினர். அந்நூல் தம் காலத்தனவே அன்றி, வருங்காலத்தும் தம் அடியார்கட்கும், மக்கட்கும் பயன்பட்டு நிலைநிற்க வேண்டும், நீண்டு வாழவேண்டும் என்றும் எண்ணினர். மேலும் எம் மதத்தோரும் சம்மதமே என்ற கொள்கையுடையவராய், பிறமதத்தோருக்கு தத்தம் மதச்சார்பான வினுக்கட்கு விடை கொடுத்து சைவத் தொண்டர்களாக்கி தம் நூற்களில் இருவகைத் தோற்றம் பற்றியும், உயர்ச்சியிலும் ஏற்றமும் தாழ்வும் உள்ளன பற்றியும் விரித்துக் கூறிப், பல்லுயிரைச் செகுத்துண்பவர் கீழாவார்; கொலை துயர் தரும் என்று விட்டு நீங்கி நிற்பவர் மேலாவார் என்று எடுத்துக் காட்டி வேள்வி செய்தல் வேத விதி என்றும், வேதாகமம் ஈசுரவாக்கியம் என்றும் கூறியுள்ளார்.

ஊனுண்டலை விரும்பிய ஒருவன் தான் உயர் செகுத்துண்ணுது, பிறனெருவன் ஊட்டின் உண்ணலாமோ என்றதற்குக் 'கொன்ருன் பாவந் தின்பார்க்கும் உண்டு' என்ற விதிப்படி (1) கொலை தடுக்காத பாவம், (2) கொலை விரும்பிய பாவம், (3) ஊன் இச்சித்த பாவம், என்ற பாவங்கள் உனக்கு (தின்பார்க்கு) வரும், எனவே தானுக மரித்திடினுந் தின்னல் தீது "யாகத்திடத்தன்றி" என்ருர். எதுபோல என்ருல் "இராசாவின் களஞ்சியத்தில் திருடுதல் தவறு என்று தடுத்த விடத்தும் கேடுவந்தால் நான் அனுபவிக்கின்றேன் என்றவன் வார்த்தையை நம்பியவரும் மரணமடைதல்" போல என்று கூறி ஊன் தின்பதனுல் வரும் பாவத்தை விளக்கினர்.

இதனைக் கேட்ட ஒருவர் தாங்கள் யாகத்திடத்தன்றி ஊன்தின்னல் ஆகாது என்றீர் - யாகக் கொலை பாவம் ஆகாதோ என்ருர் - அதற்கு யாகம் வேத விதிப்படி செய்யப்படுகின்றது; அதனில் ஓதும் மந்திரம் அவ்வுயிர்க்குப் பிறப்பறுக்கச் செய்து வீடு பேற்றினைத் தருகின்றது; அதனுல் அக்கொலையில் பாவமில்லை என்ருர். அதற்கு எடுத்துக்காட்டாக, "ஏட்டின் கண்ணுள்ள எழுத்துப் பொருள்களைச் சிறுவர்க்கு ஓதுவிக்கும் ஆசிரியர் பின்பு சுகத்தை விளைவிக்கும் பொருட்டு முன்னர் அநேக குற்றமாகத் தோன்றும் துக்கங்களை விளைவிக்க அவரது தாய், தந்தையர்கள் அவற்றினை இதமாகக்

கொள்ளுதலினாலும். மேலும் ஆசிரியர் பொருள் பெற்று சுகமடைதலும் போல் - பூசுரர் யாகத்தின் கண் கொன்ற சீவன் அப்பொழுது துக்கத்தை அடைந்ததாயினும் பின்பு மிகவும் வேத ஓசை முழங்கு தலையுடைய தேவலோகத்தை எய்திப் பிறப்பறுத்துச் சுகம் அடைதலாலும்-யாகம் புரிந்த பூசுரரும் பரமேசுரனது அருளினாலே வானுலகம் புகுந்து உய்யா நிற்பார்கள்'' என்று கூறி விளக்கினார்.

இத்தகைய உறுதியுடன் கூறினார். ஆயினும் இதனில் தமக்கு விருப்பமில்லை என்பதனையும் மறைமுகமாகச் சுட்டுகின்றார். முன்பு திதி, மருந்து, உயிருய்யுமிடம் இவற்றில் ஊனருந்தல் தீதில ஆயினும் இக்கலியுகத்தில் மருந்து, உயிருய்யுமிடம் இவற்றினும் ஊனருந்தல் தீதே என்று மறுத்துக் கூறி வேறோர் எடுத்துக்காட்டும் தருகின்றார்.

''அருந்தனையன் தனைத் தன் மனை
தோள் பிறர்க்கீந்தும் பெறுவது அழகு
அக்கால் இக்கால் பொருந்துமதோ இக்
கலியீடு...'' என்று கூறிக் காலத்திற்கேற்பப் போவதே முறையென்பதினால் தமக்கும் வேள்விக் கொலை உடன்பாடு அன்று என்பதே கருத்தாகும் என்று தெரிவித்துக் கொள்கின்றார்.

நம் சுவாமிகள் தம் நூலில் வேள்வியினை ஒப்புக்கொண்ட தன்மைக்குத் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் காரணத்தை விளக்கி வைத்துள்ளார் - சாந்தலிங்க அடிகளர் சிறந்த வீர சைவர், வீர சைவக் கொள்கை - வேள்வியில் உயிர் செகுத்தல் பெரும் பகையாகக் கொண்டிருப்பது. ஆனாலும் இவர் தம் நூலில் வேள்விக் கொலையினை உடன்பட்ட காரணத்தை கீழ்வரும் செய்யுட்கள் புலப்படுத்துகின்றன.

''வேள்விப் பெரும்பகையாம்
வீர சைவ சித்தாந்தக்
கோள் விட்டிடாத
குருவாம் அவனூலில்
வாள்விப் பிறர் செய்கொலை
மட்டும் ஒப்பலேனென்னும்
கேள்விக்கு...''
விடையாக
வண்டமகஞ் செய்பனவர்
வாஞ்சையிடை மூழ்குந்
தண்டமிழ் தேயத்துச்
சனங்கள் பல ராதலினால்
விண்டதன்னூன் மாயா விதம்
கருதி மீதிலொப்பிக்
கொண்டனன்...''

என்று கூறுகின்றார்.

எனவே காலத்தால் தம் நூல் இறந்தொழியாமை வேண்டின் காலக்கொள்கையினைத் தன்னகத்தே கொண்டு கூறவேண்டும் என்று விளங்குகின்றது.

இப்பாடல் ஆசிரியரும் தம் நூற்களில் வேள்வியினை அறவே வெறுத்துக் கூறியுள்ளார் என்பதனைக் கண்டு முடிப்பாம்.

''வேதங் கொல்வேள்வி
விதிக்கும் என நம்புமவர்
பேதங்கள் அத்தனையும்
பொய்''

என்றும்,

''தன்னைக் கொலற்கிசையான்
தானென்றைக் கொல்வதுபோல்
பின்னை மற்றொன்றுண்டோ பிழை''

என்றும் மனுநெறி நூலிலும், தாம் வடமொழி வாணருடன் வாதிட்டு முருகனிடம் சீட்டுப் பெற்றுத் தமிழைச் சிறப்பித்துக் கூறுமிடத்து,

''நான்முகன் தக்கன் முதலோர்
அனேகர் நவின்ற வட
நூன்முழுதும் கொலை வேள்வியை
போற்று நுடங்கரிய
வேன்முனைக் கண்ணவ்வை
வள்ளுவனாதியர் விண்ட
தென்னூல் ஊன் முழுப்பாவ
மெனவே யடிக்கடி ஓதிடுமே.''

என்று தமிழலங்காரத்திலும் கூறிப்போந்ததும் அறியத்தக்கது.

பழந்தமிழ்ப் பெண்கள்

[வித்துவான், நா. இராமாத்தாள்,
தமிழாசிரியை, சாந்தலிங்கர், உயர்தொடக்கப்பள்ளி, பேரூர்.]

தமிழ்ப் பெண்களின் அன்றைய நிலையை யறிய நமக்குப் பெருந்துணை புரிவன பொய்யில் புலவரின் மெய்யுரை, புவியரசைத் துறந்து "கவியரசு" எனக் காசினியரால் போற்றப்படும் இளங்கோ வடிகளார் செய்த சிலம்பு, கவிச்சக்கரவர்த்தியால் கன்னித் தமிழில் எழுதப்பட்ட இராமகாதை, ஒன்பான் சுவையும் அமைந்த பெட்டகமாகிய சங்க இலக்கியங்கள், சைவ மணங்கமழும் பெரிய புராணம் போன்றவைகளேயாகும். பண்டைச் சான்றோரின் அனுபவக் கருவூலங்களாகிய இவற்றைக் கொண்டு அக்காலப் பெண்களின் இயல்பைக் கூற முற்படுகின்றேன்.

பெண்களுக்குரிய இயல்புகளாகப் பொதுவாக எல்லோராலும் கூறப்படுவன அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பனவாகும்.

அச்சம்—காணாத பொருளைக் கண்டவிடத்து ஏற்படுவது.

மடம்—கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை

நாணம்—(காமக் குறிப்புள் வழி) உண்டாகும் உள்ள ஒழுக்கம்.

பயிர்ப்பு—முன்பு பயிலாத பொருளைக் கண்ட இடத்துத் தோன்றும் அருவருப்புத் தன்மை. இவையன்றித் தொல்காப்பியனார்,

"செறிவும் நிறைவும்
செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும்
பெண் பாலான"

என்று கூறுகிறார். இதை நோக்க இவ்வாறு பண்புகளும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கனுள் அடங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

அறிவும், ஆற்றலும், சொல்வன்மையும் ஆண்களுக்கு மட்டுமல்லாமல் பெண்களுக்கும் அமைந்திருக்க வேண்டிய பண்புகளாகும் எனக் கூறுகின்றார் தொல்காப்பியர். வாழ்க்கைப் பாதையில் இல்லறத் தலைவனுக்குத் துணை நிற்பவள் பெண்ணே யாவாள். பெண் இல்லறத்தில் பெரும் பங்கு கொள்கிறாள். புறத்தில் சிறு பங்கு கொள்கிறாள். எனவே தான் வள்ளுவர்,

"இல்லதென் இல்லவள்
மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"

என்று கூறுகிறார்.

மனைவியானவள் நற்குண நற்செயல்கள் நிரம்பியவளானால் இல்லாத பொருள் ஒன்றுமில்லை. அவள் நற்குண நற்செயல்கள் அற்றவளானால் ஒருவனுக்கு உள்ள பொருள் எதுவுமேயில்லை - என்கிறார். இதையேதான் "ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்" என்னும் வாக்கும் தெளிவுபடுத்துகின்றது.

"கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்," "கொண்டோர்க்குரியோர் கொடுத்தோர்" என்பன போன்ற மந்திர மொழிகள் பெண்மையைக் காத்தற்கு எழுந்தனவாகும். தம் தலைவர் நன்றாக இருக்கவேண்டும் என்று தம்முடைய பசி, பிணி முதலிய குறைகளை மறைத்துக் கொண்டு வாழ்ந்த மகளிர் பலர் உளர். கணவராலும், சுற்றத்தாராலும், குழந்தைகளாலும் மற்றவராலும் உள்ளத்துக்கும், உடலுக்கும் நேரும் துன்பங்களைப்

பொறுத்துக் கொண்டு தமக்கென்று ஒன்றையேனும் எண்ணுமல் பிறர் நன்மைக்காகவே உழைக்கும் நிலையையுடையவர் மகளிர்.

''அன்புடைக் கணவ
ரழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப்
பொறையே பெருமை''

என்பது பெருங்கதையில் உள்ளது.

இவ்வுண்மையை நாம் நமது சிலம்புச் செல்வியின் மூலம் நன்குணரலாம். கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் உறையும் காலத்தில் கண்ணகியின் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தி ''காவிரியின் சங்கமுகத்துறையை அடுத்த கானலில்உள்ள சோமகுண்டம் சூரிய குண்டம்என்னும்துறைகளில் மூழ்கிக் காமவேள் கோட்டத்தைத் கை தொழுதால் மகளிர் இம்மையிற் கணவருடன் கூடி இன்புற்று மறுமையிலும்போக பூமியிற்போய்ப்பிறந்து கணவனைப் பிரியாதிருப்பர். ஆதலில் நாமும் ஒரு நாள் நீராடுவோமாக'' என்றழைக்க, அதற்குக் கண்ணகி ''பீடன்று'' என்ற ஒரே சொல்லினுல் கணவனை அன்றி வேறுதெய்வங்களை வணங்குதல் தமிழ்ப் பெண்களின் இயல்பன்று என்பதைச் கூறி விடுகின்ருள். வள்ளுவரும்

''தெய்வம் தொழா அள்
கொழுநற் றெருழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்ருர்.

இதில் தெய்வத்தைத் தொழ மாட்டாள் என்றும் கூறுகிருர். பெண்களுக்குரிய கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய மடம் கண்ணகியிடத்தில் சிறந்திருப்பதை இங்குக் கண்டோம்.

தலைவன் இன்பமே தங்கள் இன்பம் எனக் கருதி வாழ்ந்த மகளிர், கணவனுக்குத் தேவையில்லாத ஒன்று தங்களுக்கும் வேண்டுவதன்று என்னும் கொள்கையில் உறுதியுடையவர்களாய் இருந்தனர். காரைக்காலம்மையார் வாழ்வில் இப்பண்பினைக் காணலாம்.

அம்மையாரும் பரமதத்தனும் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வரும் நாளில் ஒரு நாள், வணிகத்தின் பொருட்டுப் பரமதத்தனை வந்தடைந்தவர்கள், மாங்கனிகள் இரண்டைக் கொடுப்ப, அதனை 'இல்லத்துக் கொடுக்க' என்று கூறுகின்ருன். கணவனுல் கொடுத்தனுப்பப்பட்ட கனிகளைப் பெற்று வைத்தபின், அடியவர் ஒருவர் உணவின் மிகு வேட்கையுடன் மனையினுட் புகுந்தார். தொண்டர் நிலை கண்டு ''நாதன் தன் அடியாரைப் பசிதீர்ப்பேன்'' என்று எண்ணி அமுது படைக்க ஆவன செய்தார். கறியமுது இன்மையால் கணவன் 'வைக்க' எனக் கொடுத்தனுப்பிய கனிகள் இரண்டினில் ஒன்றைக் கொண்டு வந்து படைத்து மனமகிழ்ச்சியோடு அமுது செய்வித்தார். அடியவர் சென்ற பின், வணிகன் வீட்டிற்கு வந்து உண வருந்த அமர, அம்மையாரும் முறையாக அடிசில் இட்டபின் அவர் கொடுத்த கனிகளில் தொண்டருக்குப் படைத்தது போக மீதி இருந்ததைக் கொண்டு வந்து வைத்தார். அதனை உண்டபின் பரமதத்தன் அதன் சுவை மிகுதியால் ''இனைய தொரு பழம் இன்னும் உளது, அதனை இடுக'' என்று கேட்டான். அவ்வம்மையாரும் அதனைக் கொண்டு வருவார் போல் அவ்விடத்தை விட்டு நீங்கினுர். அரும் கனிக்கு என் செய்வார்? விடையவர் தாள் மனங்கொண்டுணர்தலும் அவன் அருளால் அதிமதுரக் கனியொன்று கிடைத்தது. அதனைக் கொண்டு வந்து பரமதத்தனுக்கு வைக்கின்ருர். அதனை யுண்ட பரமதத்தன் மிக்க சுவையாய் இருப்பதைக் கண்டு ''இது முன் தருமாங்கனியன்று பூவுலகில் பெறற்கரிதால் பெற்றது வேறு எங்கு'' என்று அம்மையாரைக் கேட்டான். அதைக் கேட்ட அம்மையார் ''அருளுடையாரின்—அருள் விளம்புந் திறமன்று என்று உரை செய்யாமலும், கணவன் உரை காவாமை மெய்வழியன்று என்று சொல்லாமல் இருக்கவும் முடியாமல் திகைக்கின்ருர். முடிவில் 'செய்தபடி சொல்லுவதே கடன்' என்னும் எண்ணத்தோடு நடந்தவற்றைக் கூறினுர். ''ஈசனருள்''

என்பதைக் கேட்டதும் அதை நம்பமாட்டாதவனாய், இன்னமும் ஓர் கனி அவனருளால் அழைத்தளிப்பாய் எனக் கூறுகின்றான். அவ்விடத்தை விட்டு அகன்று மாதொரு பாகனைப் பரவி ''ஈங்கிதளித்தருளீரேல் என்னுரை பொய்யாம்'' என்று வேண்டமாங்கனியொன்று அருளால் வந்தெய்த அதனை அவனுடைய கையிலே கொடுத்தவுடன் அதிசயத்துடன் வாங்கினான். அக்கனியைச் சிறிது நேரத்தில் காணாதவனாய் அச்சம் ஏற்பட்டு உள்ளம் தடுமாறி, அம்மையாரை தெய்வமென்று கருதி நீங்கி விடும் எண்ணத்துடன் வாழ்ந்து வரும் நாளில், கடல் கடந்து சென்று வாணிகம் செய்து வரும் நாளில் வாணிகன் மகள் ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்கிறான்.

சிறிது காலம் சென்ற பின்னர் அம்மையாரின் நிலைகண்ட பரமதத்தன் தன் மனைவியோடும், மகளோடும் வந்து அவரை வணங்கி ''யான் உமதருளால் வாழ்வேன்'' என்றார். எல்லோரும் ஏன் அவரை வணங்கினை என்று வினவ ''மானுடம் இவர் தாம் அல்லர்; நற்பெருந் தெய்வமாதல் நானறிந்தகன்ற பின்பு பெற்ற இம்மகவு தன்னைப்பேரிட்டேன் ஆதலாலே பொற்பாதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின்'' என்றார். இதைக்கேட்ட அம்மையார் ''கொன்றை வார் சடையனார் தம் கழல் போற்றி'' எனக்கூறி 'இதுவே என் கணவர் கருத்தாயின்' இவனுக்காகத் தாங்கிய இவ்வனப்புக் கெட்டு பேய் வடிவினைத்தரல் வேண்டும் என வேண்டினர். இதனால் அக்காலப் பெண்கள் தம் கணவருக்காகவே வாழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை.

கணவன் நலமே தங்கள் நலம் என வாழ்ந்தாலும் விருந்தோம்பலில் சிறிதும் தவறியவர்கள் அல்லர். அதுவே சிறந்த அறம் எனக் கருதினர். கோவலனும் கண்ணகியும் மணம் புரிந்து இன்பத்தில் திளைத்தபோது கோவலனின் தாய் இவர்கள் எவ்வாறு சுற்றத்தார்களையும், விருந்தினர்களையும் ஓம்புவார்கள் என்பதைக்காணவேண்டி அவர்களைத் தனித்திருக்கச் செய்தாள். இதையுணர்ந்த கண்ணகிதன் கணவன் பிரிந்த போதும் வருந்தவில்லை. கோவலன் நான், 'எழுகென எழுந்தாய் என் செய்தனை'' எ'ன்று கேட்க.

''அறவோர்க் களித்தலும்
அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
வருந்தெதிர் கோடலும்
இழந்த வென்னைக்''

கண்டு உமது தாயும் தந்தையும் பாராட்ட நான் எனது உள்ளத்து மறைத்த கவலையையும் மெய் வருத்தத்தையும் கூறுவது போன்ற எனது உண்மையில்லா புன் சிரிப்பிற்கு அவர்கள் உள்ளம் வருந்தும் வண்ணம் போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின் ஏற்று எழுந்தனன் யான் என்று கூறுகின்றான். தன் கணவனைப் பிரிந்த காலத்து தன் குறையாக வேறொன்றனையும் கூறாமல் அறவோர் முதலியோரை உபசரியாததையே பெருங் குறையாகக் கூறுகின்றாள்.

இதுபோன்றே அசோக வனத்தில் பல இன்னல்களுக்கு இடையில் இருந்த சீதையும் இராமபிரானை நினைந்து வருந்தியதாகக் கூறுமிடத்து.

''அருந்தும் மெல்லடகாரிட
வருந்தும் என்றழுங்கும்
விருந்து கண்டபோ
தென்னுறுமோ வென்று விம்மும்
மருந்து முண்டு கொல் யான் கண்ட
நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித்
திடவுமாண் டெழாதாள்''

விருந்தினரைக் கண்டபோது என்ன செய்வாரோ என வருந்துகிறாள். இதனால் பெண்களுக்கு விருந்தெதிர் கொள்ளும் அறமே சிறந்ததென்று பெறப்படுகின்றது.

தலைவன் பால் தமக்கு மன வருத்தம் உண்டான காலத்தும் விருந்தினர்



உயர்திரு பி. ஆர். காளிமுத்துத் தேவர் அவர்கள்,
கட்டிடப் பொறியியலாளர். பன்ன பாளையம்.

சிவகலை
உயர்திரு மு. சுப்பையா,
திருமடத்தின் தொண்டர்.



உயர்திரு வெ. சு. பழநிச்சாமிக்
கவுண்டர் அவர்கள்.
கழக உறுப்பினர்.

உயர்திரு
எம். எஸ். பழநியப்ப முதலியார்
அவர்கள், பீ.,ஏ.,

வந்தால் அதனை மறந்தும் உபசாரம் செய்தல் பெண்கள் வழக்கம். அதற்காகக் கணவன் விருந்தினரை உடனழைத்து வருதல் வழக்கம். அப்போது அவர் கோபம் நீங்கும். இதனை "விருந்து கண்டொளித்த ஊடல்" என்று கூறுவர் சான்றோர்.

"பெருந்தடங்கண் பிறை
நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்
கீதலும் வைகலும்
விருந்து மன்றி
விளைவன யாவையே"

என்னும் பாடல், பழந் தமிழகத்தில் இல்லறத்தில் வாழ்ந்த பெண்களின் தன்மையையும், அவர்கள் உலகெலாம் ஓம்பும் அறச் செல்வியர்களாய் வாழ்ந்தனர் என்பதையும் நன்கு தெளிவாக்குகின்றது.

"பெண்ணிற் பெருந்தக்க
யாவுள கற்பெனும்
திண்மையுண்டாகப்
பெறின்"

என்பது வள்ளுவர் வாக்கு.

இல்லறத்தில் சிறந்திருத்தலைப் போலவே கற்பு நிலையிலும் சிறந்திருந்தனர். தன் கணவன் இறந்ததும் உடனே உயிர் நீக்குதல் தலைக்கற்பென்றும், கணவனுடன் தீப்பாய்தல் இடைக்கற்பென்றும், கைம்மை விரதம் கொள்வது கடைக் கற்பென்றும் கூறுவர். நெடுஞ்செழியன், பொன் செய் கொல்லன் தன் சொற் கேட்டுக் கோவலனைக் கொன்றான். தன் குற்றத்தைக் கண்ணகியால் அறிந்ததும் உடனே உயிர் நீத்தான். உடனே தேவியும் உயிர் நீத்தாள். இவ்வாறு இறத்தலை "மூதானந்தம்" என்பர்.

தலைவன் இறந்த போது தானும் உடன் எரிபுகுதலை "ஆனந்த பையு"ளென்பர். இது தொல்காப்பியத்தில் மாலைநிலையாகச் சொல்லப்படுகின்றது. பெருங்கோப்பெண்டு இவ்வகையைச் சேர்ந்தவள். இறந்த பின் கைம்மை நோன்புபற்றி நீர்ச் சோற்றையும், எள் துகையலையும், கீரை உணவையும் உண்டு பாயின்றித் தரையில் படுத்துறங்கும் வாழ்வையே மேற்கொள்வர்.

நமது சைவச் செல்வியார் திலகவதியார் தன்னை மணக்க இருந்த கலிப்பகையார் விண்ணுலகு சென்றுவிட்டார் என்பதைக் கேட்டதும் தன்னுயிரை அவருயிரோடு இசைவிக்கத் துணிகின்றார். "அன்னையும் அத்தனும் அகன்ற பின்னையு நான் உமை வணங்கப் பெறுதலினால் உயிர் தரித்தேன். என்னை இனித் தனிக்கை விட்டேகுவீர் எனல்யானும் முன்னம் உயிர் நீப்பன்" என மொழிந்தார்.

"தம்பியார் உளராக வேண்டும்"
என வைத்த தயா
உம்பருலகணையவுறு நிலை
விலக்க உயிர் தாங்கி
அம்பொன்மணி நூல் தாங்கா
தனைத்துயிர்க்கும் அருள் தாங்கி
இம்பர் மனைத் தவம் புரிந்து
திலகவதியா ரிருந்தார்"

இவ்வாறு வாழ்வெல்லாம் இழந்து கைம்மை நோன்பை நோற்று உலக மக்களுக்காக அருள் தாங்கி மனைத்தவம் புரிந்து வாழ்ந்த திலகவதியாரின் கற்பை எத்தகைய கற்பென்று கூறுவது? தவம் செய்வது ஆண்களுக்கு மட்டுமே உரியதன்று. பெண்களும் தவம் செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது. ஆற்றலைப் பெற்றிருந்தாலும் அதனை நல்வழிக்கே பயன்படுத்துவர். தீய வழிக்குப் பயன்படுத்த மாட்டார்கள் என்பது,

"கடலன்ன காமம்
உழந்தும் மடலேறாப்
பெண்ணிற்
பெருந்தக்கதில்"

என்னும் பொய்யா மொழியின் மூலம் புலப்படுகின்றது.

இல்லறத்திலே பெரும்பங்குகொண்டு வாழ்கின்ற பெண்களிடம் பெண்மை மட்டு மேயல்லாது தாய்மையும் இறைமையும் கலந்திருக்கக்காண்கிறோம். பெரும்பாலும் ஆண்களைக் குறிப்பிடும்போது செட்டியார், முதலியார் என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் பெண்களைக் குறிக்கும் போது அம்மை, ஆச்சி, அம்மா என்று குறிப்பிடும் தன்மையும் பெண்களைத் தெய்வமாகக் கூறும் தன்மையும் இதனைப் புலப்படுத்தும்.

கணவன் இறந்ததைக் கேட்ட கண்ணகி கொலைக்களம் நோக்கிச் செல்கின்றாள். அப்போது நகர மக்களை நோக்கி,

''பெண்டிரும் உண்டுகொல்
பெண்டிரும் உண்டு கொல்
கொண்ட கொழுநர் உறு
குறை தாங்குறூ உம்
பெண்டிரு முண்டு கொல்
பெண்டிரு முண்டு கொல்
சான்றோரு முண்டு கொல்
சான்றோரு முண்டு கொல்
ஈன்ற குழவி எடுத்து
வளர்க்குறூ உம்
சான்றோரு முண்டு கொல்
சான்றோரு முண்டு கொல்
தெய்வமு முண்டு கொல்
தெய்வமு முண்டு கொல்
வைவாளில் தப்பிய
மன்னவன் கூடலில்
தெய்வமு முண்டு கொல்
தெய்வமு முண்டு கொல்''

எனக் கூறி அழுகின்றாள்.

இந்நிலையில் கண்ணகியிடத்து அமைந்திருந்த பெண்மையும், தாய்மையும் இறைமையும் வெளிப்படுகின்றது. காரைக்காலம்மையார் வாழ்விலும் இம்மூன்றும் அமைந்திருக்கக் காணலாம்.

தலைவியைப் பிரிந்திருந்த தலைவன் மீண்டும் வந்து நான் பிரிந்திருந்த போது தலைவி என்ன செய்தாள் எனத் தோழியிடம் வினவ அவள் விடையிறுக்கிறாள்.

''வாழியாதன வாழியவினி
நெற்பல பொலிக பொன் பெரிது சிறக்க
எனவேட்டோளே யாயே''

''விளைக வயலே வருக இரவலர்
என வேட்டோளே''

என்றும் கூறுகின்றாள்.

காவற் பொருட்டு அரசன் வாழ்க! விருந்து ஆற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக! இரவலர்க்கு ஈதற் பொருட்டுப் பொன் உண்டாகுக'' எனவாய் இல்லத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைந்திலள் எனக் கூறுகிறாள். இங்கும் பெண்மையில் தாய்மை திகழ்வதைத்தான் அறிகின்றோம்.

இல்லறத்தில் ஒன்றிய மகளிர் அரசியலிலும் பங்கு கொண்டு திகழ்ந்திருக்கின்றனர். மன்னவனோடு சரியாக அரியாசனத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர். அறம் வளர்த்த நாயகியாகிய மீனாட்சியம்மை மதுரையை ஆண்ட வரலாற்றை திருவிளையாடற் புராணத்தில் காண்கின்றோம். இராணி மங்கம்மாள், அகிலாண்டேசுவரி நாச்சியார் போன்றவர்களும் நாடாண்டவர்களே.

''தொட்டிலை யாட்டுங்கை
தொல்லுலகம் ஆளும் கை''

என்னும் வாக்கிற்கேற்ப மகளிரும் நாட்டை யாண்டிருக்கின்றனர்.

கண்ணகி வழக்குரைக்குமிடத்து பாண்டியனோடு ஒருங்கு வீற்றிருந்தாள் பாண்டிமாதேவி என்பதையும், மலைவளம் காணச் சென்ற செங்குட்டுவனுடன் சேரமாதேவியும் உடன் சென்று ஒருங்கிருந்த தன்மையையும் சிலப்பதிகாரத்தால் அறிகின்றோம்.

என்னே பழந்தமிழ்ப் பெண்களின் பண்பு!

பொழிந்த அன்பு

[திருமதி, என். சுப்புலட்சுமி, எம்.ஏ., பீ. ஓ. எல்.,
தமிழ் விரிவுரையாளர், நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை.]

என்றும் புதிய செந்தமிழால் பழமறையை மொழிந்த பூசுரனுர் ஆகிய திருஞானசம்பந்தரின் நட்பினைப் பெற்று அவரால் 'அடிகள் நக்கன்' என்றும் 'நிறையினுர் நீல நக்கன்' என்றும் சாத்தமங்கைத் தேவாரத்தில் வைத்துப் புகழப் பெற்றவர் திருநீலநக்க நாயனுர். அவர் ஞான சம்பந்தருடன் கூடிப் பயின்று பல தலங்களையும் வழிபட்டார். அவரது திருமணத்திறம் சேவித்து சிவபெருமான் திருவடியைச் சேர்ந்தார். சாத்த மங்கையின் வாழ்ந்த மறையவராகிய அவரைச் சேக்கிழார் 'திண்பெருந் தொண்டராகிய திருநீல நக்கர்' எனச் சிறப்பித்துள்ளார்.

"வேத உள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காத லாலவை இரண்டுமே செய்கருத்
துடையார்."

ஆதலின் சிவாகம விதிப்படி வேதகாரணராகிய சிவனை நாள்தோறும் நியமமாகப் பூசிப்பதும் அடியார்களுக்கு அமுது செய்விப்பதும் முதலாக சிவத்தொண்டுகள் எல்லாவற்றையும் விரும்பிச் செய்து வந்தார்.

ஒரு திருவாதிரை நாளில் தம் ஆன்மார்த்த பூசனையை முடித்துக்கொண்டு தம் ஊரில் அயவந்தி என்ற திருக்கோயிலில் அமர்ந்தருளும் இறைவனுரையும் அருச்சனை புரிந்திட நீலநக்கர் விரும்பினுர். பூசைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் குறைவு இல்லாமல் அமைத்துக் கொண்டார். தம் மனைவியாருடன் கோயில் எய்தினுர். அங்கு அயவந்திமேய அமுதினைத் தொழுது பூசனை தொடங்கினுர். அவருக்கு வேண்டுவனவற்றை அவ்வப்போது மனைவியார் எடுத்து எடுத்து ஏந்தி நின்றுர். நீடு பூசனை முறைகள் எல்லாம் அன்பினுல் செய்து முடித்தும், மனம் நிரம்பாராய் வலம் வந்து வணங்கினுர். பிறகு, தேடுமாமறைப் பொருளைத் தெளிவுற நோக்கித் திருவைந்து எழுத்தைத் தியானிக்கத் தொடங்கினுர். அப்போது அவரது மனைவியாரும் இறைவரை நோக்கியவாறே அங்கு நின்றுர். ஒரு சிலம்பி தான் நின்ற நிலையினின்றும் வழுவிச் சிவலிங்கத் திருமேனிமேல் விழுந்தது. உடனே அவ்வம்மையார் விரைந்து வந்து அச் சிலம்பியை ஊதித்தள்ளி பொழிந்த அன்பினுல் திருமேனி மீது எச்சில் உமிழ்ந்தார்.

குழந்தையின்மேல் சிலம்பி வீழ்ந்தால் அவ் விடத்தில் கொப்புளம் உண்டாகும். அதனைத் தடுக்கச் சிலம்பி விழுந்த இடத்தில் ஊதி உமிழ் வது தாய்மார் செய்யும் மருத்துவ முறையாகும். அம்முறையில் அவ்வன்னை பேரன்பினுல் இச் செயல் செய்தார். கோயிலில் உள்ள அருள் திருமேனிகளை அன்பிலாதார் கல் அல்லது உலோகத்தால் ஆன வடிவமாகக் காண்பார்கள். ஆனுல் அத்திருமேனியில் ஆண்டவன் அருள் மேனியைப் பக்தர்கள் கண்டு மகிழ்வார்கள். 'திருக்கோயிலுள் இருக்கும் திருமேனி தன்னைச் சிவன் எனவே கண்டார்க்குச் சிவன் உறைவன் ஆங்கே.' இது சிவஞான சித்தியார் சாற்றும் சித்தாந்தம். அத்தகைய பேரன்பால், கோயில் திருமேனியில் இறைவனைக் கண்டார் அவ் வம்மை. அதன்மீது சிலந்திவிழக் கண்டதும் அவருக்குத் தாயன்பு பெருகியது. இளம் குழவிக்கு விடம் நீக்கும் முறையை அவரும் செய்தார்.

அச்செயலைத் திருநீலநக்கர் கண்டு, கண்களைக் கைகளால் புதைத்தார். 'என்ன செய்தாய், அறிவற்றவளே!' என வினவினுர். "சுதைச் சிலம்பி மேல்விழ ஊதித் துமிந்தனன்" என்றுர் மனைவியார். அவர் அன்பினை மனங் கொள்ளாமல், பூசைவேளையில் அனுசிதச் செயல் அது என்று நீலநக்கர் நினைந்தார். அக்கருத் தால் மனைவியை வெறுத்தார். "இறைவன் மேல் விழுந்த சிலம்பியை வேறு ஏதேனும் வகை யால் நீக்கியிருக்கலாம். அங்ஙனம் இன்றி அவன் திருமேனிமேல் எச்சில்பட ஊதி உமிழ்ந்தாய், சிவ அபராதியாகிய உன்னை நான் இங்கேயே இப் போதே துறந்தேன்." என்று உரைத்தார். தமது பூசனையை முடித்து தனியே மனைக்குச் சென்றுர்.

அவர் செல்வதைக் கண்ட அவரது மனைவியார் அஞ்சும் உள்ளத்தினராய் அவர்மருங்கு போக மாட்டாமல் கோயிலினுள் தங்கிவிட்டார்.

செஞ்சொல் நான்மறைத் திருநீலநக்கர் தம் இல்லத்தில் அன்று இரவு உறங்கும்போது ஒரு கனவு கண்டார். அதில் அயவந்திப் பரமர் தோன்றி வெள்ளநீர்ச் சடையோடு நின்று தம் மேனியைக் காட்டினுர். "நின் மனைவி என் மேல் அன்புவைத்து ஊதி உமிழ்ந்த இடம் ஒழிய மற்ற இடமெல்லாம் கொப்புள்கொண்டிருக்கிறது, பார்" என்று அருளினுர். கண்ட அக் கனவினை நாயனுர் நனவாகவே கருதி, அச்சமோடு அஞ்சலி செய்து விழித்தார். இறைவனது கருணையைப் போற்றி நின்று ஆடினுர், பாடினுர், துதித்தார், தொழுதார், அழுதார். தம் மனைவி செய்த அனுசிதத்தினை உசிதமாகக்கொண்ட திருவருட் பெருமையையும், தவருக எண்ணிய தம்மைப் பொருட்படுத்தி உண்மையை உணர்த்திய கருணைத் திறத்தையும் போற்றினுர். "ஆருத காதலின் மிக்கு அடியார் செய்த அனுசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும் சீருத பெருமையராகிய சிவ பெருமான்" தமக்கு அருள் செய்த பெருமையையும் அதற்குத் தகாத தம் சிறுமையையும் எண்ணிய அத்தொண்டர் அழுதார். பொழுதும் புலர்ந்தது, உடனே கோயிலுட் புகுந்து அயவந்தியிலமர்ந்தாரைப் பணிந்து பரவினுர். இறைவன் திருவுள்ளப்படி மனைவியாரைத் தம்முடன் கூட்டிக்கொண்டு மனைக்கு ஏகினுர். முன்னையிற் பெருகிய மகிழ்ச்சி வந்து எய்த, இன்புறும் திறத்துப் பூசனைகளும், அடியார்க்குப் பணி விடைகளும் இருவரும் தொடர்ந்து செய்து வாழ்ந்தனர்.

ஆகம விதிப்படிப் பூசனைகள் செய்து வந்த திருநீலநக்கரின் செம்மையையும், அவரது மனைவியாரின் பொழிந்த அன்பு நிலையையும் ஒருங்கே இறைவன் அறிந்து மகிழ்ந்தார். முன்பு காளத்திவேடர் கண்ணப்பரது செயல்களை உவந்தேற்று, ஆகம பூசை நெறி உடைய அன்பர் சிவகோசரியாருக்குக் கண்ணப்பரது பேரன்பினைப் புலப்படுத்தினுரல்லவா? அதுபோலவே, மனைவியைத் துறந்த நீலநக்கருக்கும் உண்மை நிலை உணர்த்தி இருவரையும் மீண்டும் சேர்த்தார். அதற்காகத் திருமேனியை வெள்ளநீர்ச் சடையோடு காட்டினுராம். புனித நீர்களுள் சிறந்ததாகவும் பிறவி நோய் முதலாம் எத்தீங்கையும் போக்கவல்லதாகவும் உள்ளது கங்கைநீர். அந்நீரால் நனையும் திருமேனியாயினும், சிலம்பியினுல் நேர்ந்த தீங்கு ஒழிக்கப்படவில்லை. அம்மையார் பரிந்து ஊதிய எச்சில் பொழிந்த இடம் அல்லாத இடமெங்கும் கொப்புளங்கள் எழுந்திருந்தன. துமிந்த இடத்தில் வாய்நீரால் விடம் ஒழிந்திருந்தது. இவ்வாறு கடவுளார் தமது திருமேனியைக் காட்டி, அம்மையின் எச்சிலைக் கங்கையினும் புனித நீராகத் தாம் ஏற்றுக் கொண்ட திறத்தினைத் திருநீலநக்கருக்கு உணர்த்தினுர்.

இல்லற தருமத்திலும் சிவ தருமத்திலும் நாயகர்க்குத் துணைசெய்து பொழிந்த அன்பினராக விளங்கும் இவ்வம்மையின் வாழ்வு நமக்குச் சமய நெறியில் வழிகாட்டுகின்றது.

இதுபோன்று சாந்தலிங்கப் பெருமானின் இல்லற வாழ்விலும், அருள் வாழ்விலும் ஞானம்பிகை அம்மையார் பொழிந்த அன்பினராய், அடியவர்களெல்லாம் 'அப்பனெடு அம்மை' எனப் போற்றும் பண்பினராய், இல்லற விளக்குக்கு எடுத்துக் காட்டும் குண நலம் மிக்கவராய்த் திகழ்ந்தார். சத்வித்யா சன்மார்க்க சங்கம் பொன்விழாக் கோலம் பூணும் இத்தருணத்தில் சாந்தலிங்கரின் தாள் வணங்கும் போழ்து ஞானம்பிகை யம்மையாரின் பொழிந்த அன்பினையும் எண்ணிப் பணிவோமாக!

சாந்தலிங்கர் ஞானம்பிகை தாண்மலர் வாழ்க!

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டருள்
தூயவன் சரணமே சுமக்க வென்றலை
வாய்துதி செயக்கர மலர்கள் தூய்த்தொழ
நேயமோடு அநுதினம் நினைக நெஞ்சமே.

—போரூர், தவத்திரு. சிதம்பர சுவாமிகள்.

தாய்மொழிப் பயிற்சி

[திரு. இரா. வெங்கட்டராமன், ஆசிரியர்,

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் உயர் தொடக்கப் பள்ளி.]

தமிழுக்குத் தொண்டாற்றத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கும், கொஞ்சு மொழியும் பிஞ்சுமனமும் உடைய சின்னஞ் சிறு பிள்ளைகளுடன் ஈடுபாடு கொண்டுள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படும் முகத்தான் இக்கட்டுரை மலர்ந்துள்ளது.

சாதாரணமாக முதல் இரண்டு வகுப்புகளிலே பால் மணம் மாறியவுடனே பாடசாலை என்னும் பகுத்தறிவுச் சோலையிலே புகுந்த பிள்ளைகள் — அன்னை, தந்தை, அத்தை, மாமன், அண்ணன், அக்காள் ஆகியோரிடத்திலேயன்றி, அன்னியரை அணுகுவதற்கும் அச்சப்படுகின்ற பிள்ளைகள்— தன் வீட்டையும் விளையாட்டுப் பொருள்களையும் மாத்திரம் பிரதானமாகக் கருதுகின்ற பிள்ளைகள் — களங்கமின்றி, கவலையின்றி, கட்டுப்பாடு எதுவுமின்றி வெவ்வேறு சூழ்நிலையிலே வளர்ந்து வந்த பிள்ளைகளைத்தான் நாம் முதன் முதல் சந்திக்கிறோம். அவர்களின் அச்சந் தவிர்க்க அவர்களுடன் அளவளாவிப் பேசுகிறோம். அவர்களின் அறிவு நிலைகளுக்கு ஏற்ற போதனை முறைகளை வகுத்துக் கொள்கிறோம். நமது முயற்சி வெற்றிபெறவும், அதனால் பிள்ளைகள் நல்ல பயன்பெறவும் தாய் மொழி மூலம் கற்றுக் கொடுப்பது சாலச் சிறந்ததாகும்.

நமது உள்ளத்திலே எழுகின்ற எண்ணங்களை உருவாக்கி, அதைத் தெளிவுப்படுத்திப் பிறர் அறிந்து கொள்ளுமாறு செய்வதற்குக் கருவியாக இருப்பது மொழி. எண்ணம் வேறு, மொழி வேறு அன்று. எண்ணமும் மொழியும் ஒன்றோடொன்று இணைந்தே இயங்குகிறது. மொழியானது உயிரும் உரமும் கொண்டு மக்களின் உணர்ச்சியைத் தூண்டுகிறது. இந்த மொழியின் அடிப்படையிலேதான் மக்கள் சமுதாயம் பல்வேறு துறைகளிலே வளர்ந்து கொண்டிருக்கிறது. நாகரிக மேம்பாட்டிற்கும், சமய வளர்ச்சிக்கும், அரசியல் அமைப்புக்கும், கலைகளின் வளர்ச்சிக்கும், இறைவழிபாட்டுக்கும் இன்றியமையாதது மொழியே.

இத்தகைய நல்லியல்புகளுக்கு இருப்பிடமாயிருக்கின்ற மொழி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவற்றுள் ஒன்று பேச்சு மொழி—இதை வாய் மொழி என்கிறோம்; மற்றொன்று எழுத்து மொழி. தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் என்பன போன்ற பல்வேறு மொழிகள் அவைகளுக்கெனப் பிரத்தியேகமான ஒலிகளையும் எழுத்துக்களையும் அமைத்துக் கொண்டுள்ளன. ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் கேட்டுப் பழகும் மொழியே அதன் தாய் மொழி ஆகும். தமிழ் நாட்டில் பிறந்த நம் அனைவருக்கும் தாய் மொழியாக இருப்பது தமிழே.

தொடக்கப் பள்ளிகளிலுள்ள முதலிரண்டு வகுப்புப் பிள்ளைகள் எதையும் தாய் மொழியிலேதான் நினைக்கிறார்கள்; பேசுகிறார்கள். தாய் மொழியிலேதான் மனோபாவங்களும், கவிதா ரசிப்பு உணர்ச்சிகளும், அறிவு வளர்ச்சியும் ஏற்படுகின்றன. தாய் மொழியிலே தேர்ச்சி பெற்றிருந்தால் தான் பிற மொழிகளைக்கற்பது எளிது. மேலும் தாய் மொழிப்பாடம் அல்லாது பிற பாடங்களைப் படித்து அறிவதற்கும் தாய்மொழிப் போதனை இன்றியமையாததாய்க் கருதப்படுகிறது. திருத்தமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும், நல்ல மொழியறிவு பெறவும் தாய் மொழிப் போதனை அவசியமாகும்.

"கொல்லாமை நன்று; கொலை தீது"

[திரு. அ. கி. அரங்கநாதன், எழுத்தாளர், தமிழ்க் கல்லூரி.]

இத்தலைப்பினைக் கண்ணுற்றதும், இஃது கூறப் போகும் பொருள் யாதென யாவர்க்கும் தெள்ளிதின்-உள்ளங்கை நெல்லிக் கனி போல்-விளங்குறும். கொல்லாமை பற்றியும், ஊன் உண்ணுமை பற்றியும் சாந்தலிங்க சுவாமிகளும், மற்றுஞ் சிலரும் கூறியவற்றைத் தொகுத்து இவண் கட்டுரையாக்கித் தந்துள்ளேன். கட்டுரைக்குரிய தலைப்பும் 'சிறுபஞ்ச மூலம்' எனும் நூலின் கண் வந்துள்ளதோரடியேயாகும். (எண். 51)

"சீவகாருண்ணியம்" என்பது ஓரறிவுடையன முதல் எல்லா உயிர்களிடத்தும் காட்டும் இரக்கம் - அன்பு - ஆகும்.

"சீவகாருண்ணியத்தின் பெருமைகளை-சிறப்புக்களை-நாம் அறிந்திருந்தும்-உணர்ந்திருந்தும்-கொல்லுதலை மேற்கொண்டும்—ஊன் உண்ணுதலைக் கைக்கொண்டும்-இருப்பதன் காரணம் யாதோ?

"கொலைச் செயலானது அவன் செய்யக் கூடிய தீய செயல்கட்கெல்லாம் தலைமையானதாக வைக்கப்படும்-அது உயிர்கட்குத் தலை எவ்வாறு முக்கியமான உறுப்போ அதனைப் போன்றதாகுமென்று" சாந்தலிங்க சுவாமிகள் தமது "கொலை மறுத்தல்" நூலின் கண் விளக்கியுள்ளார். (எண். 5)

கொலை செய்பவர்களையும், ஊன் உண்பவர்களையும் தீயோரென்றும், மற்றவர்களை நல்லோரென்றும் அற நூலோர் வகுத்துள்ளனர். வள்ளுவப் பெருமானுர்,

"அறவினை யாதெனிற்
கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந்
தரும்" (எண் 321)

"நல்லாறெனப் படுவது
யாதெனிற் யாதொன்றுங்
கொல்லாமை
சூழு நெறி" (எண் 324)

என்று கூறுகின்றார்.

இவ்வுடலானது அழிந்து போகக் கூடியது. இவ்வெளிய உடலினைப் பெருக்கற் பொருட்டு ஊனுண்பது எவ்வாறு பொருந்தும்? இதனை "பல்லுயுர் செகுத்து உண்டு உடலை வளர்க்குங் கீழ்" (எண். 4.) என்ற சாந்தலிங்க சுவாமிகளின், கொலை மறுத்தல் நூலின் மூலமும், "தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூ னுண்பானை எங்ஙனம் ஆளும் அருள்" (எண். 251), என்ற திருக்குறளாலும், "ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதலின்னு" (எண். 22), "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" (எண் 4) என்ற இன்னு நாற்பது, இனியவை நாற்பது செய்யுட்களின் மூலமும், நன்குணரலாம். மேலும் நாம் இவ்வுடலைப் பெருக்க வெண்ணி ஊனைத் தின்பது சரியன்றென்றும் இச்செய்கை கற்றறி மூடர்கள் செய்கை என்பதனையும் "ஊன் உண்டு, உயிர்கட்கு அருளுடையெம்" என்பதன் மூலமும் அறியலாம். கொலை செய்வதால்-ஊன் உண்பதால்-நமக்குக் கிடைக்கும் நன்மை, தீமைகள் யாவை? என்று கேட்டபின், அதற்கும் விடை கூறியுள்ளனர். கொலை செய்பவர்கள் நரகத்தில் பல பெருந்துன்பங்கள் எய்துவர். "பாவிகளிற் பாவிகள்" என்றும் துன்பத்தின் இறுதி நிலையாகிய நரகத்திற்கு அனுப்பட்டு, ஆங்குக் கால தூதுவர்களால் கயிற்றில் கட்டுப்பட்டும், எரியும் வெந்தழலில் நடக்கச் செய்தும் வதைக்கப்படுவர்களென்றும், பெறுதற்கரிய துன்பங்கள் அவர்களை வந்தடையும் என்றும் பலவிதமாக நூல்கள் சித்தரித்துக் கூறுகின்றன. மேலும், "ஊனினை உண்பவர்கள் மிருகாதிகட்குச் சமம்" (எண் 60) "ஊனுண்பான் நாச்சாம்" (எண் 10) என்றும், நான்மணிக் கடிகை, சிறுபஞ்ச மூலம் ஆதிய நீதி நூல்கள் அவர்களை இழித்துக் கூறுகின்றன. இனி, கொல்லாமையால் நாமடையும் நன்மையுள், இன்பங்கள் யாவையென்பதற்கு விடையாகக் கீழ்க்காணும் உதாரணங்களைக் கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

பிறப்பில் துன்பமல்லதில்லை

[க. இராமசாமி, நான்காம் ஆண்டு மாணவர்.]

மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் இருளும் ஒளியும் போல் மாறி மாறி வருகின் றன. நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் நிலையாமையை உடையது இவ்வுல கம். செத்துப் பிறக்கின்ற நாமெல்லாம் செந்நெறி நின்று இறைவனையடைய முயலு கின்றோம். பிறந்த பிறப்பறுக்கும் இறை வன் திருவடியை அடைந்தவர் பிறவிப் பெருங்கடலை நீந்துவர் என்று வள்ளுவர் கூறியுள்ளார். எனவே உயிரானது பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய பிறப்பினை அறுக்கும் வழியை மேற்கொள்ள வேண்டும்.

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் பிறவியின் வாயிலாகத் துன்பம் அடைகின்ற னவே யொழிய இன்பமடைவதில்லை. துன் பத்தைக் கண்டு நாம் சிரித்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்போது தான் பிறந்து விட்டோம் என்ற குறையைப் போக்க முடி யும். வாழும் வாழ்க்கையோ கானல் நீரைப் போன்றது. மாயமும் இருளும் நிறைந்த வாழ்வில் துன்பமேயன்றி இன்பமில்லை என் பதைப் பற்றி உலகில் உள்ள பெரியோர்கள் அனைவரும் தங்கள் தங்களது கருத்தைப் பலவேறு வழிகளில் உணர்த்தியுள்ளனர். துறவின் நெறிகளைப் பேணி முறையோடு வாழ்ந்த நமது சாந்தலிங்க சுவாமிகள் பிறவித் துன்பத்தைப் பற்றிப் பல செய்யுட்களிலே அழகாக மொழிந்துள்ளனர்.

பிறப்பில் துன்பமே யன்றி இன்பமில்லை யென்பதைப் பற்றிச் சொல்லும்போது துன் பத்தின் எல்லையில் நின்று துன்பப் பிறவி யைப் போக்க வேண்டுமென்று கூறியுள்ளார். இறைவன் வழியில் சென்றாலன்றி பவத் தனிப் பரவையைக் கடப்பதறிது என்பதைப் பல செய்யுட்களிலே தெளிவாக்கியுள்ளார். நூலின் முகப்பிலேயே துன்பத்தின் மலர்ச்சி யையும் துய்க்கின்ற மனிதனின் வாழ்க்கை யையும் தெளிவாக்கியுள்ளார்.

"தோன்றிநின் றழியப்
படுங்கொடும் பிறப்பிற்
றுன்பமே யன்றியெட் டுணையு
மூன்றிநெஞ் சகத்தோர்ந்
திடிற் பிறிதிலையால்"

"கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்" (எண் 260)

என்ற குறளாலும்,

"கொலை புரியான் கொல்லான்
புலால் மயங்கான்......
............விண்ணவர்க்கும்
மேலாய் விடும்" (எண் 2)

"கொல்லான் கொலை
புரியான்.........இறையில்
பெரியாற்கு இவை" (எண் 19)

என வரும் ஏலாதிப் பாடல்களாலும் கொலை செய்தல் - ஊன் வெறுத்தல் - ஆகிய நற் செயல்களின் மூலம், மக்கள் தங்களினும் மேலான விண்ணவர் - தேவர் - நிலையையடை வர் என்று தெரிந்து கொள்கிறோம்.

விலங்குகளிலும் "சாகபட்சணி" என்ற ஒரு பிரிவு உண்டு. பகுத்தறிவற்ற மிருகங்களும் ஊனை வெறுத்தொதுக்குவதை உணர்ந்து பகுத்தறிவுடன் கூடிய நாமும், நல்லொழுக்க மாகிய—நல்லறமாகிய—நற்செய்கையாகிய— கொல்லாமையையும், ஊனினை உண்ணாமை யையும்—மேற்கொண்டு நம்மைச் சார்ந்த சுற்றத்தினரையும் மேற்கொள்ளச் செய்து இம்மை மறுமை இன்பங்களை எய்து வோமாக.

வாழ்க கொல்லாமை!

வளர்க அருளுடைமை!!

என்னும் செய்யுளில் மூன்று வரிகளில் துன்பத்தின் வடிவையே தோன்றி நின்று அழியும் என்று கூறியுள்ளார். உற்பத்தி திதி லயங்களை உடைய கொடிய பிறப்பின் கண்ணே துன்பமே யன்றி இன்பமில்லை என்று உரையெழுதிய சிதம்பர சுவாமிகள் கூறுகின்றார்.

இந்த உடலானது மாதாவினது கருப்பத்தின் கண் ஐந்து பெருந்துயரினை அடைகின்றது. அது லயமாகின்ற காலத்து அவ்வுற்பத்தித் துன்பத்துக்கு எட்டுப்பங்கதிகம். திதி காலத்தின் கண் பால குமார விருத்தமாகிய மூவகையிடத்தும் துன்பமே. எனவே உற்பத்தி திதி லயமாகிய மூன்று பிறப்பின் கண்ணும் துன்பமே என்பதை விளக்கும். செய்யுளும் பொருளுடையது. இச்செய்யுளுக்கு ஏற்ப சிதம்பர சுவாமிகள் தெளிவாக உரை யெழுதியுள்ளார். அதனை விளக்கும் பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது.

"உடலிதுற் பவத்தோ ரைம்பெருந்
[துயர் மாய்ந்
துறுகணத் துயரின்எண் மடங்கால்
இடையுள திதிக்கட் டுயரமூப்
[பறிவோங்
கிளமைய பிணியுறு விடத்தும்
விடலரும் பசிநோய் காமநோய்
[தணிப்பான்
மிகுபொரு டேடுத றுயரீண்
டடையினு மதனைக் காக்குத
[றுயர்வேந்தா
யினு மிகுநராற் றுயரே"

என்னும் செய்யுளில் தெளிவுடன் சொல்லியுள்ளார்.

உற்பவத்தில் ஐம்பெருந்துயர் என்பதைப் பற்றி உரை யெழுதும் போழ்து உற்பவ துன்பத்தைப் பற்றி வாழ்க்கையோடு இணைத்துள்ளார். கருப்பாயசப்பை உறுத்தலினாலும், அதிற்சலம் பூரித்தலினாலும், உதராக்கினி சுடுதலினாலும், பிரசூதவாயு முரித்துத் தள்ளுதலினாலும், யோனித்துவார நெருக்கத்தினாலும் மலையிருத்திக் கொண்டது போலவும், கடலின்கண் வீழ்த்தி மிதித்தல் போலவும், இருப்புக் குடத்தில் அடைத்து நெருப்பாற் சுடுதல் போலவும், மலைமேல் நின்றானைத் தலைகீழாகத் தள்ளுதல் போலவும், ஆலையிலிட்ட கரும்பு நெருக்குண்டல் போலவும் வருந்துன்பங்களை விரிவாகக் கூறியுள்ளார். லய காலத்தின் கண் வருந்துன்பங்கள் கடவுளே அறியவல்லவன் என்று துன்பத்தின் அளவையைக் கூறியுள்ளார். திதி காலத்தின் கண் பால குமார விருத்தமாகிய மூவகையிடத்தும் துன்பம் உளவென்று கூறியுள்ளார். எனவே பிறப்பின் கண் உற்பத்தி திதி லயமென்று கூறுகின்ற மூன்று காலத் துன்பமேயன்றி இன்பமில்லை என்று கூறியுள்ளமை போற்றுதற்கு உரிது.

வெண்கொற்றக் குடை நிழற்கண்ணே இராச்சிய பாரத்தையெல்லாம் தாக்கின்ற பேரரசுக்குத் தான் இன்பமில்லையோ வெனின், அவனுக்கும் இன்பமில்லையென்று துன்பத்தின் கொடுமையைக் கூறியுள்ளார். கூற்றுவனைக் கண்டு அஞ்சுவதும்; குடிகளின் செயலால் தன்னை அனைவரும் தூற்றும் சொற் கண்டு மனம் வேதனையுறுவதுமாகிய தன்மையைக் கண்டு இன்பமடையாது, துன்பமே யுடையவன் என்று அறிவித்துள்ளார்.

இன்பமும் துன்பமும் மனித வாழ்வுக்குத் தான் உரியது என்று நினைக்கிறோம். அவ்விரண்டும் நாற்கதிக்கும் உண்டு என்று கூறியுள்ளார். தேவ கதிக்கண்ணும் இன்பமில்லை என்பதை விளக்கும் போது பல வியாதிகளையும் பயங்களையும் காமக் குரோதிகளையும் அடைதலின் அக் கதிக்கண்ணும் இன்பமில்லையென்பதை தெளிவாக்கியுள்ளார். ஆகையால் பிறப்பின் கண் துன்பமேயல்லது இன்பமில்லை. பிறவித் துன்பத்தை துயரமென்று அறிவுறுத்தும் அரியதோர் கருத்துக் குவியலாய் அமைந்துள்ள செய்யுளின் பகுதியைக் காண்போம்.

"பிறப்பிறப் புடைய ராயிடை யினும்பல்
பிணிபயந் தணிவில் காமாதி
யுறப்படு தலின்வா னவர்க்கும்மற்
[றென்னை
யுளசுகந் தேவின்மா னுடத்திற்

சிறப்பிவை யென்றூற் குறுக்குயோ
(னிகளின்
தீமையும் கொடியர்வீழ் நிரயத்
தறப்பெருந் துயரு முரைப்பதென் பிறப்பூ
டாதலாற் றீதிலா திலேயே.'' என்னும்

செய்யுளே நாற்கதிக் கண்ணும் துன்பமே யல்லாது இன்பமில்லை என்பதை உணர்த்தி யுள்ளது. எனவே நாற்கதியுள்ளும் அதிக மாயுள்ள தேவகதிக் கண்ணும் துன்பமே வருதலின் வீடொன்றே இன்பமுடையது என்பதைக் கூறுமல் கூறி யுள்ளார். எப்படியேனும் இறைவனையடைய வேண்டும் என்னும் உணர்வு உயிருக்குக் கருப்பையகத்தே இருக்கும். மீண்டும் பிறந்து விட்டால் உலகச் சேற்றிலே அழுந் துமே யொழிய பிறவியை யறுக்கும் வழிகளை மேற்கொள்ளாது. இவ்வாறு உயிர்கள் இருப் பது இயற்கை என்பதை பலசெய்யுட்களிலே கூறியுள்ளார். காணுகின்ற பக்கமெல்லாம் துன்பவெம் பிறப்பின் இழிவினையும் வினைப் பிறப்பு துயரென்பதையுமே காட்டிக்கொண்டு செல்கின்றூர்.

அறிஞர்களும் ஞானிகளும் பிறவாமை வேண்டும் என்று கூறுகின்றூர்களே யொழிய மீண்டும் பிறப்பதற்கு யாரும் விரும்புவதில்லை. பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததின் மேல் இச்சை கொள்வது உயிருக்கு இயற்கைக் குணம். பிறப்பு அசுத்தம் துக்கம் அநித்திய மென்பது கண்டிருந்தும், தாம் அடையாத வீடு சுத்தம் சுகம் நித்தியம் என்பது கேட்டி ருந்தும் அதனை நீக்கி இதனை அடைய விரும்புதலின்றி அதனையே உயிர்கள் விரும்பு கின்றன. எனவே பிறப்பின்கண் துன்பமே வருகின்றது என்பதை அறிந்தும் மீண்டும் பொல்லாத பிறவியைப் பெற விரும்புவது போல் இவ்வுயிர்களும் அடையாத வீட்டின் பத்தை மறந்து பிறவிக்குக் காரணமான வற்றை நாடிச் செல்கின்றது.

ஆகவே பிறந்த பிறப்பறுக்கும் பிறவா நெறியையுடைய இறைவனை அடைய வேண் டும். இறைவனே! பிறவாமை வேண்டும். கார ணம் பிறப்பானது மிகவும் துன்பமுடையது. மீண்டும் தவறிப்போய் பிறந்து விட்டால் உன்னை மறவாமை வேண்டுமென்று எண்ணு கின்ற எண்ணம் வளரவேண்டும். நெருநல் உளனெருவன் இன்றில்லை என்னும் நெறி யுணர்ந்து இருக்கின்ற இப்போதே விதித்தன செய்து விலக்கியன வொழித்து இறைவன் திருவடியைப் பெற முயலவேண்டும்.

“ஆய்ந்த இன்பம்
வாய்ந்துளம் நிறைய
சாந்தையன் பதம்
யாம் தொழுவோமே.''

தமிழ் அமுதம்

[அரங்கநாதன், மூன்றூம் ஆண்டு மாணவர்.]

*

அமிழ்தும் தமிழும் இரண்டென்பர் அறிவிலார்;
அமிழ்தே தமிழாவ தாரும் அறிகிலார்;
அமிழ்தே தமிழாவ தாரும் அறிந்தபின்;
அமிழ்தே தமிழாய் ஆர்ந்திருப் பாரே.

திருக்குறளும் வைராக்கிய தீபமும்

[அர. ஈசுவரி, நான்காம் ஆண்டு]

பொய்யா மொழியின் கருத்துக்களை எடுத்தாளாத நூல்களே இல்லை எனலாம். மனிதனையும், தெய்வத்தையும் ஒன்று படுத்தும் தீபவொளியாய்த்திருக்குறளும் வைராக்கியதீபமும் விளங்குகின்றன. நமது சாந்தலிங்க சுவாமிகள் வள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தீபத்திலே பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். துறவியின் பெருமை யையும் இல்வாழ்வான் இயல்பையும் அழகாகக் கூறுகின்ருர். தவத்தின் சிறப் பையும், இலக்கணத்தையும் வள்ளுவரின் வழியிலே நின்று காணுவோம். உலகுக் கோர் வழிகாட்டியாய்த்திருக்குறளும், வழி காட்டிக்குத் துணையாகத்தீபமும் நின்று நிலவுகின்றன. திருவள்ளுவர்,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி
[மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்"

என்று தவமென்னும் அதிகாரத்திலே துறவி யின் பெருமையையும் இல்வாழ்வானின் கடமையையும் முறையோடு கூறுகின்ருர். இக்கருத்தையே சுவாமிகளும் "பவத்தனிப் பரவைக் குரவையைத் தானப் படுவையைக் கொடுகடப்பரிதால்" என்னும் செய்யுளில் இல்வாழ்வார் தன்மையைப் புகழ்வது போன்று பழித்துக் கூறுகின்ருர்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் துறந்தோரது பெருமையைக்கூறி, அதன் பின்னர் இல்வாழ்க்கைச் சிறுமையைப் புகழ்வது போன்று இகழ்ந்தார். நீத்தவர் பெருமையைக் கூறி அதன்பின்னர் இல் வாழ்க்கை என்னும் அதிகாரத்தை வைத் துள்ளமையைச் சுவாமிகள் கூறும்போது,

"நிறந்தருந் தெய்வப் புலமைவள்ளுவனார்
நீத்தவர் பெருமைநூன் முகப்பாற்
சிறந்திட வமைத்தாங் கதுகொடில்
[வாழ்க்கைச்
சிறுமைதூற்றினர்"

என்று கூறுகின்ருர்.

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை;
[அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று."

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

வள்ளுவர் இல்வாழ்க்கையை அதிக மாகக் கூறியிருக்க அதனை மறுத்து தவத்தினை அதிகமாக சாந்தலிங்க சுவாமிகள் கூறுவது என்னையெனின்—ஈதல் அறம். தானம் செய்தற்குரிய இடம் இல்வாழ்க்கை. அது எல்லோருக்கும் செய்ய இயலுவது. துறவு என்பது அநித்தியமாகிய அனைத்தை யும் கைவிட்டு நீங்குதல். அது அனைவருக்கும் இயலுவதன்று. ஒரு சிலருக்கே முடிவது. ஆதலின் ஈதல் தொழில் நிகழும் இல்வாழ்க் கையினை அறம் என்றும் துறவின்கண் குற்றமற்ற வீட்டிலக்கணம் இருத்தலை நோக்கி மெய்ப்பொருளை அறிதற்கேதுவாகிய ஞானங்கூறிய மெய்யுணர் வென்னும் அதிகாரத்தையும் சேர்த்துக் கூறினர் வள் ளுவர் என சுவாமிகள் கூறுகின்ருர்.

முத்தி நெறியை அடையமுயற்சி செய் தால் காலமுண்டாகத் துறக்க வேண்டு மென்பதைத் திருக்குறள்

"வேண்டின்உண் டாகத்துறக்க; துறந்தபின்
ஈண்டியற் பால பல"

என்று கூறுகின்றது. இக்கருத்தையே சாந் தலிங்க சுவாமிகள் 'வார்த்திகனுகி, மனந் தடுமாறி, கண்கள் பஞ்சடைந்து உடல் நடுக்குறும் அக்காலம் வந்து பொருந்து முன்னரே பெண்டிர் முதலிய சார்புகளைத் துறப்பார் புண்ணியர்' என்று கூறுகின்ருர்.

"வேண்டினுண் டாகத்துறக்கவென்
[றமையால்
விருத்தனுய்க் கருத்தழிந் துருவங்
காண்டல்செய் விழிபஞ் சடைந்துட
[னடுக்குங்
காலம்வந் தடைவதன் முன்னர்
மாண்டகற் பதனுற் சாலியைப் போலு
மனைவியா தியசமா தியினுற்

நீண்டுமா னந்தம் பலவடைந் திடுதற்
கெண்ணிநீத் திடுவர் புண்ணியரே."

வைராக்கிய தீபம்பாட்டு—24.

முத்தியை அடைய விரும்புவோர் ஐம் பொறிகளுக்குரிய புலன்களின் ஆசையைக் கெடுக்கவேண்டும் என்னும் கருத்தைத் திருக்குறள்

"அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை [விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு"

என்று கூறுகின்றது. இக்கருத்தையே தீபமும்

"ஐம்புல னடல்வேண்டும் விடல்வேண்டு [மொருங்குவேண்
டியவனைத் தையும்"

என்று கூறுகின்றது.

பிறவுயிர்க்கு வந்த துன்பத்தினைத் தனக்குவந்த துன்பமாகக் கொள்ள வேண்டும். துன்பத்திற்குத் துணையாகாத வாழ்வு துயரமுடைய வாழ்வென்பதை, வள்ளுவர்.

"அறிவினன் ஆகுவது உண்டோ [பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை"

என்னும் குறளால் விளக்குகின்றார்.

இக்கருத்தையே சுவாமிகள் 'மெய்ஞ்ஞானத்தைப் பெறும் பொருட்டுக் குற்றமற்ற துறவறத்தினைப்பொன்செய் வணிகர் போலத் திரிகரணங்களினாலும் வருந்தித் தினந்தோறும் வளர்ப்பவன் பிறிதோருயிர்க்கு வந்த துன்பத்தினைத் தனக்கு வந்த துன்பத்தைப் போன்று போற்றிக் கொள்ளானாகில் கற்றறிந்த அறிவினால் ஒரு பயனாவதுண்டோ என்று திருவள்ளுவ நாயனார் கூறினமையால் எல்லா உயிர்களுக்கும் மறந்தாயினும் துன்பத்தினைச் செய்வானோ' என்று கூறுகின்றார்.

"பிறிதுநோய் தன்னோய் போன்று [போற்றானேற்
பெரிது நூலறிதினோர்ந் துணர்ந்த
அறிவினா லுண்டோ வாவதென் றமையா
னறைதரு சராசர மெவைக்குஞ்
சிறிதுமோர் துயர மறவியுற்றேனுஞ்
செய்யுமே மெய்யுணர் வடைவான்
மறுவறு துறவைப் பொன்செய்வா [ணிகர்போல்
வருந்திநா டொறும்வளர்ப் பவனே"

வைராக்கிய தீபம், பாட்டு—56.

கொல்லாத அறத்தைக் கொண்டதே தவம் என்பதை வள்ளுவர்,

"கொல்லா நலத்தது நோன்மை" எனக் கூறுகின்றார். இக்கருத்தையே சுவாமிகளும் "அறைதலிற் கொல்லாமை நலத்தது நோன்மை" எனக் கூறுகின்றார்.

பொய்யாமொழிப் புலவர் ஒருவன் எந்தெந்தப் பொருள்களிலிருந்து பற்று நீங்குகிறானோ அந்தப் பொருள்களிலிருந்து அவனுக்குத் துன்பம் இல்லை என்பதைத் துறவு என்னும் அதிகாரத்திலே

"யாதனின் யாதனின் நீங்கியான் [நோதல்
அதனின் அதனின் இலன்"

எனக் கூறுகின்றார். சுவாமிகளும் இக்கருத்தையே

"யாதியா தொருவ னீங்கியான் நோதல்
அதனினு லதனினு லிலனென்று
ஓதலான்"

என 63-வது செய்யுளில் கூறுகின்றார்.

வள்ளுவர், ஊழ் இல்லாதிருத்தல் பழி அன்று. முயற்சி செய்யாதிருத்தலே பழியாகும் என்னும் கருத்தை

"பொறியின்மை யார்க்கும் பழியன்று; [அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி"

என்று கூறுகின்றார்.

இக்கருத்தையே சுவாமிகளும்

"அரும்பொறி யின்மை பழியன்றி [யார்க்கு
மறிவறிற் றாள்வினை யின்மை
பெரும்பழி யெனலான்"

எனக் கூறுகின்றார்.

வைராக்கிய தீபத்தில் உவமைகள்

[அ. மங்கையர்க்கரசி, நான்காம் ஆண்டு]

எம்மதத்தில் உள்ளவர்கள் எந்நிட்டை சொன்னாலும் சம்மதமேயாம் எமக்குத் தற்போதமாயிலெனா; பொய்மதத்தோர் நாணப்புகன்றருளும் சாந்தலிங்கராம் மும் மதமாப் போலும் முழுஞானவீரர் திருவாய் மலர்ந்தருளிய மூன்றும்நூலே வைராக்கிய தீபமாகும். இந்நூலுள் துறவின் பெருமை யினையும் அதனை மேற்கொள்ளும் நெறியினை யும் விளக்கி உவமையும் எடுத்துக் காட்டிக் கூறியுள்ளார்.

உவமை என்னும் அணி தொல்காப் பியரே நமக்குக் கொடுத்துச் சென்ற ஒப்பற்ற பொருளாகும். ஓரியலில் இதனை நமக்கு விளக்கிக் காட்டியுள்ளார். அவர் கூறிய உவமையணியே பிற்காலத்து முப்பத் தைந்து, நாற்பத்தைந்து என வளரலாயிற்று என்பது பல ஆசிரியர்கள் துணிபு.

இனிச் சாந்தலிங்கர் தமது நூலில் கூறியுள்ள உவமைகளைப்பற்றிச் சிறிது காண்போம்.

அவர் தமது ஆசிரியர் தமக்கு வந்து தோன்றி அருள் செய்ததிறத்தை "ஆலியா நீரினருளிறையா யெமக் கேமவைப்பென வன்னையெனப் பிதாவெனக் கண்மணி யெனத் தவப்பயனென வுட்செப்புயிரென வந்தாண்ட காளத்திதேசிகர்" என்றனர். உருவமில்லாத இறைவன் கருணையினால் உருக்கொண்டு வந்ததற்கும் அங்ஙனம் உருக்கொண்டாலும் தன்னியல்பில் திரியா மைக்கும் நீர் ஆலியாக (பனிக்கட்டி) ஆதலை உவமை காட்டியதிறம் அறிந்து இன்புறுதற் குரியது. உரையாசிரியர் சிதம்பர சுவாமிகள் பின் வந்துள்ள உவமைகளுக்குத்தமது உரைத்திறம் முழுவதும் தோன்ற உறை

பொய்யாமொழிப் புலவர் செயலின் கண்ணே திண்மையுடையவர் தாம் பெற எண்ணியவற்றை எண்ணியவாறே பெறுவர் என்னும் கருத்தை வினைத்திட்பம் என்னும் அதிகாரத்தில்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப; [எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

எனக் கூறுகின்றார்.

இக்கருத்தையே சுவாமிகள் 'கொலை யினைச் செய்யா நின்ற பூதங்கள் முதலியவை வளைந்து கொண்டனவாயினும் தாமிருந்த சமாதி நிலையை வழுவாதிருந்தோர் தாம் எண்ணிய வீட்டின்பத்தினை எண்ணியவாறே அடைகுவர் எனக் கூறுகின்றார். அப்பாடல்

"அருந்தவ விலக்கிவ் வுடற்பரிப் [பதுதான்
அச்சமா திகடரு மூலர்
திருந்துநம் சிந்தை சிவன்கணே யாவர்
வரினுமென் றமையிற் பேதிப்பான்
பொருந்தினும் வானோ ரெதிர்முதிர் [கொலைவெம்
பூதமா தியவளைந் திடினும்
இருந்ததச் சமாதி நிலைகுலை யாதோர்
எண்ணிய எண்ணியாங் கடைவர்"

என்பது. [வைராக்கிய தீபம் பாட்டு-99]

மற்றும் சில இடங்களில் குறளின் கருத் துக்களைத் தீபத்தில் எடுத்துக் கூறியிருக்கின் றார். நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந் தர்க்கு உறுதி பயக்கக் கூடிய குறளையும், பாச நீக்கத்தைக் கூறுகின்ற வைராக்கிய தீபத்தையும் பலரும் படித்து இன்புற்று நன்னெறியில் செல்வோமாக! அதற்கு சாந்த லிங்கப் பெருமான் திருவருள் புரிவாராக!

எழுதியுள்ளார். அதனை இங்குக்காண் போம்.

ஏமவைப்பினை நினைக்குந் தோறும் மனப்பூரிப்பு வருதல்போல் ஆசிரியனை நினைக் குந்தோறும் மனப்பூரிப்பு வருதலின் வைப் பென்றும், தாய் அமுதூட்டி உடம்பை வளர்த் தல்போல் உபதேச மொழிகளை அனுக்கிர கித்து அறிவை வளர்த்தலின் அன்னை யேன் றும், தந்தைதவிர் காரியத்திற் செல்லுதலைத் தடுத்துச் செய்காரியத்திற் செலுத்துதல் போல் அசாஸ்திர பிரபஞ்சத்தின் வழி செல் லாது தடுத்துச் சாஸ்திரப் பிரபஞ்சத்தின் வழி செலுத்தலிற் பிதாவென்றும் கண்மணி யானது நன்று இது தீது இது என்று அறி வித்தல் போற் பந்தந் துன்பமென்றும் மோட்சம் இன்பமென்றும் அறிவித்தலிற் கண்மணி என்றும், தவப்பயன் எங்கேயிருந் தாலும் அங்கே வந்து உதவியின்பத்தைக் கொடுத்தல்போல் எங்கேயிருந்தாலும் தமது பூரண சொரூபத்தை விளக்கி யின்பத்தைக் கொடுத்தலின் தவப்பயன் என்றும், உடலுக் குளுயிர் அந்தவுடலை அபிமானித்து அதன் கண் வருந்துன்பத்தைத் துடைத்தல் போல் உயிருக் குயிராயிருந்து அவ் வுயிருக்குத் துன்பந் தருகின்ற மும்மலங்களைத் துடைத் தலின் உடலுட் செப்புயிரேன்றும், கூறினர், என்றார். என்னே அவரது உவமை. என்னே அவரது உரைச்சிறப்பு!! இவ்வுரையினைக் கேட்டிருந்த ஆசிரியர் எவ்வாறு வியந்திருப்பர். தாம் பாடிய காலத்தினும் மகிழ்ந்திருப்பர். படித்து நாமும் இன்புறுவோம்.

மேலும் தமது ஆசிரியரின் அருள் திறத்தை விளக்கிக் காட்ட,

"அருந்திய காலத் தற்பமாய்ப் பிற்பே
ரௌடத முடலினின் றுடலை
வருந்தல்செய் பிணியெல்
[லாமகற்றுதலின்"

என்னும் உவமையினை அமைத்துக் காட்டி யுள்ளார். எவ்வாறெனில் வைத்தியன் கொடுத்தமருந்தை ஒருவன் உட்கொண்ட காலத்தில் அம்மருந்து முன்புசிறிது வியாதி யைப் போக்கி அவன் சொன்ன பத்திய பாகப்படியே நிற்க அஃது உடலிலே நின்று ஊறிப் பின்பு மற்றை வியாதிகளை யெல்லாம் ஒருங்கே நீக்குதல்போல், ஆசாரியர் கிருபா நோக்கம் வைத்த காலத்தில் அக்கிருபா நோக்கம் முன்பு சில பற்றுக்களைநீக்கி அவர் அருளிச்செய்த நன்மார்க்கத்தின் படியே நிற்க அக்கிருபை மனத்தின்கண் மாறாது நின்று மற்றைப்பற்றுக்களையும் போக்கிற்று என்பது தோன்ற அவ்வுவமையினை அமைத்துள்ளார். இவ்வுவமை எத்தகைய சிறந்த உவமை என்பதை எடுத்துக் கூறவேண்டுமோ?

இந்நூலின் பெயரே உவம ஆகுபெய ராய் வந்தகாரணக்குறியாம். அவர் பெயர்க் காரணங் கூறுமிடத்து "பெண்டிர் தாய் முதலிய யோக பந்தத்தினை எனதெனவும் அசுத்த துக்காநித்தியங்களே சகசமாயுள்ள தேக பந்தத்தினை யானெனவும் மனத்தின் கண் வைத்துக் கருதும் ஒப்பற்றமயக்கமாகிய விருளைத்துறவாகிய ஒளியினாலே நீக்கி மனமாகிய வீட்டினை விளக்கஞ் செய்தலினால் இந்தநூலுக்குப் பெயர் வைராக்கிய தீபம் எனச் சொல்லப்படும் என்று எடுத்துக் காட்டுகின்றனர்.

துறவினை மேற்கொள்ளாது நூல் தெளிந்த மாத்திரத்திலேயே அகம் பிரம்மம் எனக்கருதி இறுமாந்திருப்பார்க்குச் சிறிய வர் மணற்சோறுண்டு தேக்கிடல் உவமை யாகக் கூறுகின்றார்.

"சிறியவர் மணற்சோ றுண்டுதேக்
[கிடல்போற்
றேர்ந்து நூ றெளிந்த மாத்திரத்தி
னறிதரிற் சிவமும் விடயமாமென நீத்
தகத்திரு ளறுதுவைத் தந்தோ
வுமகம் பிரம மென வுரைத் திறுமாந்
துறைதலோ ஞானம்"

என்ற பாடலுள் சிற்றிலிழைக்கின்ற சிறு பெண்கள் மணலாகிய சோற்றினை வயிறு நிறையவுண்டது போலுண்டு ஏப்பமிடுகின் றது போல் வேதத்தினை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக்கொண்ட மாத்திரத்திலே அறி வினால் அறியப்படுவன வெல்லாம் விடயமா கலிற் சிவத்தினை அறியத் தொடங்கில் இதுவும் விடயமாமென்று இதனை அறியும்

அறிவை விட்டு உள்ளிருளாகிய அவித்தையை நீங்காது வைத்துக் கொண்டு நான் பிரமமென்று இறுமாந்து கொண்டிருக்குதலோ ஞானம். அஞ்ஞானமானது துறவினை அடைந்தாலன்றி நாசமாகுமோ? என்று துறவின் பெருமையினை எடுத்துக் காட்டியுள்ளார்.

நமக்குப் பரஞானம் என்பது எது என்பதனை விளக்க உவமையினை எடுத்துக் காட்டுகின்றார். வாழையினது மட்டைகட்கெல்லாம் உள்ளே இருக்கும் தண்டினை எடுத்தல் போல் ஒருவன் அனுபவமாய் மாயா காரிய காரணங்கட்கெல்லாம் உள்ளீடாய் விளங்குகின்ற சிவத்தினை அறிதலே எங்கும் பரிபூரணமாகிய பரஞானம். அவ்வாழையின் மீதுள்ள மட்டைகளை ஒவ்வொன்றாக நீக்குதல் போல் தம்மால் விரும்பப்பட்ட உட்பற்றுப் புறப்பற்றாகிய இருவகைப் பற்றினையும் துறந்து அஞ்ஞான இருளைக் கெடுத்தலே மோட்சம் என்பதை

அரம்பையுள் ளூறுதண்டெடுத்
[தலி னொருவ
னனுபவ மாஞ்சிவ முணர்தல்
நிரம்பு மெய் யுணர்வத் தண்டின்
[மீதொன்றி
நின்ற நாரனைத்து நீக்குதல் போல்"

எனக் காட்டியுள்ளார்.

தவத்தினைப் பல பிறவியினும் முயன்று செய்தல் வேண்டும், எனவும் விடய சுகத்தினை நச்சிச் செய்யக்கூடாது எனவும் கூறுமிடத்து மேலான யானையை இரையாகத் தேடிச்சென்ற சிங்கம் அந்த யானை கிடையாது போயிற்றாயினும் அதனையே தேடுதலன்றி கீழான தேரையூனைத் தின்னத் தேடாமைமை உவமை காட்டி மேலான பேரின்பத்தை அனுபவிக்கத் தொடங்கினோன் அவ்வின்பம் தனக்கு கிடையாது போயிற்றாயினும் அதனையே விரும்புதலன்றிக் கீழான விடய சுகத்தை விரும்பான் எனக் கூறுகிறார். அப்பாடற் பகுதி,

"கரிபிழைக்கில் தீதிலோர்
[சிங்கமதனையே யன்றித்
தேடுமோ தேரையூன் தினவே"

என்பது.

துறவினை எவ்வாறு வளர்த்தல் வேண்டும் என்பதனை ஒரு குறளுடனும் உவமையுடனும் எடுத்துக் காட்டுகின்றார். எவ்வாறெனில் பிறிதோருயிர்க்கு வந்த துன்பத்தினைத் தனக்கு வந்த துன்பம் போன்று போற்றிக்கொள்ளானாகில் அவன் பெரிய சாத்திரங்களை அறிந்தும் அந்த அறிவினால் ஒரு பயனுண்டோ? அதுபோல் மெய்ஞானத்தைப் பெறும் பொருட்டுக் குற்றமற்ற துறவறத்தினைப் பொன் தேடுதல் செய் வணிகர், கொள்ளுதல், விற்றல், உரைத்தல் முதலியவற்றால் பொருளை வளர்த்தல் போல் நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல், ஓடல் முதலிய விடத்தும் உயிர்க் கொலைபுரியாது துறவினை வளர்க்க வேண்டும் என்று காட்டுகின்றார். இவ்விடத்தில் "அறிவினான் ஆவதுண்டோ பிறிதினோய் போல் போற்றாக்கடை" என்ற குறளினை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். பொன்செய் வணிகர் என்னும் உவமை மிகச் சிறந்தது. உரையாசிரியர் பரிமேலழகரின் அறிவினான்......குறளுக்கு எழுதிய உரையை நினைக்குமாறு விளக்கிக் காட்டியுள்ளார். இரண்டும் நாம் படித்தின் புறுதற்குரியது.

ஞானிகள் ஞானசமாதியினைக் கூடுமிடத்தினை எடுத்துக் காட்டக் கணப்பொழுதாயினும் ஒரு பெண்ணை விட்டு நீங்காத ஒரு காமியினிடத்து அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டிய பிறர் வந்து வழக்கினிடை அழைத்துச் செல்ல அவன் தனது கண்ணை விட்டு நீங்காது அந்தப் பெண் வருதல் போலும், பார்த்துக் கொண்டு சென்று அவ்விடத்து அந்த வழக்கினை எப்படியாயினும் சீக்கிரத்தில் தீர்த்துக் கொண்டு அந்தப் பெண்ணிடத்தில் மீண்டும் வந்து கூடியிருத்தல்போல், அறிஞரும் கணமாயினும் இடைவிடாது தாம் பண்ணிய ஞான சமாதியை விட்டு நீங்கிக் காடி கூழே தாயினும் சீக்கிரத்தில் வாங்கிப் புசித்துத் தமது பசியை மாற்றிக் கொண்டு மீண்டும் வந்து அந்த ஞான சமாதியைக் கூடுமுறைமை என்று உவமை கூறி விளக்குகின்றார்.

வைராக்கிய தீபமும் நால்வர் பாடலும்

[இரா. சாந்தாமணி, நான்காம் ஆண்டு.]

உலகினைப் படைத்து அதில் உயிரினங்களைப் படைத்துத் தனக்கு உருவின்றி அருவமாய் விளங்கும் பரம் பொருளுக்குப் பல உருவங்களையும் படைத்து, அவற்றிற்கு நாமங்களைச் சூட்டித், தொழில்களையும் தன்மையினையும் இவையெனப் பிரித்து அதன் அடிப்படையிலே பல்வேறு சமயங்களையும் பகுத்தனர் பேரறிவு படைத்த பெரியோர். அதில் தன்னிகரின்றித் தழைத்தோங்கிய சைவசமயத்தில்'உவமை சொல்ல இயலாத பெரிய ஆசையாகிய கடலின் கண் ஆழ்ந்துள்ளோர்க்கு அதற்குக் கரையாகிய துறவு வந்து பொருந்தும் படி' அக்கடலை நீந்துதற்கு ஒரு தெப்பமாகப் பெரியோர்கள் வகுத்துச் சொல்லிய நூல்கள் பல. அதில் 17-ம் நூற்றுண்டில் தோன்றி விளங்கிய வீர சைவனுகிய சாந்தலிங்க தேசிகன் என்னும் ஞானசூரியன் அருளிய நான்கு நூல்களில் ஒன்று 'உயிர்கள் மருட்சியினுல் கொடிய பாசமாகிய குழியினுள் வீழாமல் உய்யும் படிக்கு உணர்வாகிய கண்ணுக்கு யான் என்னும் அகங்காரமும் எனதென்னும் மமகாரமும் ஆகிய மயக்க விருளைக் கெடுத்துப் பரம சிவனுகிய பொருளை விளக்கும் வைராக்கிய தீபம் என்பது.

சைவநெறி மேன்மையுற விளங்கித் தோன்றிய நால்வரில் அப்பர் இறைவனையும் தம்மையும் ஆண்டான் அடிமை போன்றும் சம்பந்தர் தந்தை சேய் போன்றும், சுந்தரர் நண்பர் போன்றும், மணிவாசகர் தலைவன் தலைவி போன்றும் கண்டு தொடர்புற்றுத் தம் பக்தித் திறத்தால் இறைவன் அருட்டிறம் பெற்றுத் தம் கருத்துக்களைப் பாடல்களாக வெளியிட்டனர். அந்நால்வர் பாடற் கருத்துக்களையும் சாந்தலிங்கர் தம் வைராக்கிய தீபத்தில் கொண்டு கூறியிருப்பதை நான் இங்குச் சிறிது கூறுகின்றேன்.

வைராக்கிய தீபம், பற்றறுத்து வீடடைதலைப் பற்றிக் கூறும் போது - அகப்பற்று புறப்பற்றுஆகிய இரண்டனுள் முதற்கண்புறப்பற்றினை நீக்கியே அகப்பற்றை ஒழிக்க வேண்டும். துறவிலக்கணங்களை

உரையாசிரியர் இவ்வுவமையினை மூவிடங்களுக்கும் பொருத்திக் காட்டுகிருர். எவ்வாறெனில் அறிஞர் மிகவும் விரும்பி ஒரு கணமாயினும் விட்டு நீங்காது ஞான சமாதியைக் கூடியிருத்தலின் "பெண்ணை விட்டகலா வொரு விடனென்றும்," பசியினுற் பிச்சையைக் குறித்துப் பிரார்த்த வசத்தனுய்ச் செல்லுகின்றபோது மனத்தின் கண் அந்நிஷ்டை நீங்காது செல்லுதலின் "கண்ணை விட்டகலாதவள் வரல் போலுங் கண்டு கொண்டேகியென்றும்" நாச்சுவை விரும்பாது காடி கூழேதாயினும் வந்ததைச் சீக்கிரத்தில் வாங்கி உண்டு பசியை மாற்றி மீண்டும் வந்து சமாதியைக் கூடியிருத்தலின் "ஆங்கஃதெவ்வண்ணமாயினும் சீக்கிரத்தினின் முடித்தவ்வனிதை பான் மறிதரன் மான" என்றும் தமது உரைத் திறத்தால் விளக்கிக் காட்டுகின்றுர்.

வைராக்கிய தீபம் ஒரு அரும் பெருங் கடல். அதனுள் காணும் உவமையென்னும் முத்துச் சிப்பிகளோ மிகப்பல. ஆழ்ந்து முத்தெடுக்கும் நமக்கோ ஒவ்வொன்றும் விலை மதிப்பற்றன. ஒவ்வொன்றை எடுக்கும் பொழுதும் இன்னென்று இன்னென்று என்ற பேராசையின் காரணமாக அதிக முத்துக்களைக் காட்டி விட்டேன். நான் எடுத்துத் தந்த முத்துக்களை அணிந்து மகிழ்வீராக.

"எம்மதத்தில் உள்ளவர்கள்
எந்நிட்டை சொன்னுலும்
சம்மதமே யாம்எமக்குத்
தற்போதம் மாயிலெனப்
பொய்ம்மதத் தோர்நாணப்
புகன்றருளும் சாந்தலிங்கர்
மும்மதமாப் போலும் முழுஞான
வீரனம்மா."

அறிந்து அளவிட்ட தெளிந்த அறிவினை யுடைய திருவள்ளுவ நாயனுரும் யாவர்க்கும் சம்மதமாக முன்னர் புறப்பற்ருெழித்தே அகப்பற்ருெழிக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். மற்றும் சுகரும் சனகர் முதலியோரும் வேதாகம கலைகளையும் ஞானத்தினையும் அறிவிக்கும் வல்லமையுடைய உத்தம பிதாக்களையும், அவரது செல்வத்தினையும் துறந்து ஞான சமாதி கூடி அகப்பற்றினை ஒழித்து வீடடைந்தார்கள். இவர்களேயன்றி பரதத்துவத்தை அறிய விரும்பினேன் மனைவி முதலிய சகல பற்றுக்களையும் விட்டுத் துறந்து மெய்ஞ்ஞான முத்திரை விளங்க ஞானசமாதி அடைந்தாலன்றி அதனை அறிய முடியாதென்று மகாதேவி முதலாயுள்ள கூட்டங்களை விட்டு நீங்கிக் கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளி ஞான சமாதியடைந்து மகாதேவனே அறிவித்தான் என்று முன்னர் புறப்பற்றினை ஒழித்தே அகப்பற்ருெழிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகின்றது.

இதில் வரும் மனை முதலாய சகலமும் விடுத்தல் வேண்டும் என்பது சம்பந்தருக்கும் கருத்து என்பதற்கு அவருடைய கூற்றையே சாந்தலிங்கர்,

"தந்தை தாய் முதலாம் பந்த
[நீங்கிலர்கள் தாம் உயும் நெறிய
தின்றெனும் சம்பந்தனுருரை...."

எனத் தம் பாடலில் எடுத்துக் காட்டியுள்ளார். சம்பந்தனுருரையாவது :

"தந்தை தாய் தன்னுடன் தோன்றினுர்
புத்திரர் தார மென்னும்
பந்த நீங்காதவர்க் குய்ந்து
[போக்கில்லெனப் பற்றினுயே
வெந்த நீருடியாராதியார் சோதியார்
[வேதகீதர்
எந்தையாரூர் தொழுதுய்யலா
[மையல் கொண்டஞ்ச னெஞ்சே"

என்பதாகும்.

இதனையே அப்பரும், தொன்மையான சுற்றத்தையும் துறந்தாலன்றி, வேண்டிய தனை அடைய முடியாது. நம்மிலிருந்து நீங்கிவிடும் நீர்மையினை யுடைய சுற்றத்தை நீங்கி என்றும் நீங்கா நீர்மையனுகிய இறைவன் ஒருவனே சுற்றமென்று அவனைப் பற்றினுல் தான் வேண்டியதனை அடையமுடியும் என்பதனை,

"பழகினுல் வரும் பண்டுள சுற்றமும்
விழ விடா விடின் வேண்டிய
தெய்தொணு"

என்னும் அடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

இதுவன்றியும் பரிசுத்தயாகிய தவத்தினையுடையவர்களுக்கு எக்காலத்தும், எவ்விடத்தும், பாம்பு முதலியவற்ருல் மனத்தில் அச்சம் தோன்ருது. ஏனெனில், இறைவன் தான் படைத்த உடம்பைக் காக்கும் நாளில் அழிப்பார் ஒருவரும் இல்லை. படைத்துக் காக்கும் அவனே பின்னர் அழிக்குமிடத்து இந்நிலத்து வைத்துக் காப்போர் ஒருவரும் இல்லை என்பது நிச்சயம். ஊனையோம்புதலைக் கைவிட்டு இறைவன் திருவடியை விரும்புவர். அங்ஙனமின்றி உடம்பைப் பாதுகாத்தற்கு விரும்பின் பரதத்துவ நிலையை அறியும் அறிவும் தன்னை விட்டு நீங்கி, உடலைப் பாதுகாத்தற்கு இயலாமையால் அதுவும் தன்னை விட்டு நீங்க மறுமைக்கண் இழிந்த பிறப்பினையும் அடைவனுதலின் பஞ்ச கிருத்தியத்துக்கும் அதிகாரியாகிய இறைவன் பால் உடலை ஒப்படைத்து ஞானமொன்றனையே விடாது பற்றும் ஒருவன் பரகதியடைவான் என்று கூறப்பட்டுள்ளது வைராக்கிய தீபத்தில்.

இதில் ஊனையோம்புதல் கைவிடுத்துனை உவப்பார் உணர்வர் என்றதனைச் சுந்தரர்,

"தேனைக் காவல் கொண்டு விண்ட
[கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு
[நின்ருரறியா நெறியானே

"மங்கை பங்கன்"

[திரு. அ. இரத்தினம் மூன்ரும் ஆண்டு மாணவர்.]

முன்னுரை: செந்தமிழ் நாட்டிலே, கொங்கு மண்டலத்தில், தேவார ஆசிரியர் மூவரால் பாடல்பெற்ற தலங்கள் ஏழு. அவ்வேழில் "திருச்செங்கோடு"மொன்று. இத்தலத்திற்குத் "திருக்கொடிமாடச் செங்குன்றூர்" என்றும் பெயர். "செங்குன்றூர்" என்ற பெயருமுண்டு. "செங்குன்றூர் கிழார்" என்னும் சங்ககாலப் புலவர் பெயரில் காணப்படும் செங்குன்றூர் இத்தலமேயாகும். இத்தலத்தைப் பற்றியும், இங்கெழுந்தருளிய மங்கைபங்கனைப் பற்றியும், ஒரு சிறிது கூற விழைகிறேன்.

தல வரலாறு: திருச் செங்குன்றூர், நாகமாமலை, இடபமலை, துர்க்கை மலை முதலிய பல பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. மலையின் கீழிருந்து மலையை நோக்கினுல் நாகம் போன்று இருப்பதைக் காணலாம். இத்தலத்தில், அம்மையார் தவஞ்செய்து இறைவனது திருமேனியில் இடப்பாகம் பெற்றுர். மங்கைபங்கன்; மாதொரு பாகன் என்றும்; வட மொழியில் "அர்த்தநாரீசர்" என்றும் கூறுவர். அர்த்தம் என்ருல் பாதி; நாரி என்ருல் பெண்; எனவே, "பாதி பெண்ணுரு உடையவன்" என்பதாம். மங்கைபாகன் திருவுருவம் மூலத்தானத்தில் விளங்குகிறது. இஃது, இத்தலத்திற்கே சிறப்பாக உரியதாகும். இக்குன்று முருகக் கடவுளுக்குக் குன்றுதோருடல்களில் ஒன்ருகும்.

இத்தலத்தில் யானைமுகக் கடவுளை "நாரிகணபதி" என்றும்; முருகனைச் "செங்

யானைக் காவிலரனே பரனே
[யண்ணுமலையானே
யூனைக் காவல் கைவிட்டுன்னை
[யுகப்பாருணர்வாரே."

என்னும் பாடலில் கூறியுள்ளார்.

இனிச் சாந்தலிங்கர், ஆசானுக்கு உடல் பொருள் ஆவி மூன்றினையும் கொடுக்கும் இயல்பினைக் கூறும் போது, பாண்டியனுக்குச் குதிரை கொள்ளும் பொருட்டு அந்நாளில் சென்று திருப்பெருந்துறையில் ஞானசாரியரை அடைந்து உடலாதி மூன்றினையும் உண்மையாகக் கொடுத்த மாணிக்க வாசக சுவாமிகளைச் சிறப்பித்துக் கூறுகிருர். அப்பாடல்,

"குதிரை கொண்டிட
[கன்றடைந்துட லாதி
கொடுத்தவன் போற்
கொடுப்பார்க்கும்"

என்பதாகும்.

திருவாசகத்தில்,

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றேயனையாய் என்னை
ஆட்கொண்ட போதே
கொண்டிலையோ"

என வருவது அறியத்தக்கது.

இங்ஙனம் வைராக்கிய தீபத்தில் நால்வர் பாடலும் தக்க இடங்களில் எடுத்தாளப்பட்டுக் கற்போர் கருத்தினைக் கவரும் திறம் பெற்று விளங்குகிறது. தெய்வம் ஒன்று உண்டா? எனக் குரலெழும்பிக் கருத்தரங்குகள் நிகழ்த்தும் இந்த இருபதாம் நூற்ருண்டில் செல்லும் நெறியறியாது தடுமாறுவோர்க்கு உய்யும் நெறி காட்டும் "வைராக்கிய தீபம்" போன்ற பல நூல்கள் வெளியாகி மக்களை நன்னெறிப் படுத்தச் சாந்தலிங்கர் அருள் பெருகுவதாக.

———

கோட்டுவேலன்'' என்றும்; இறைவனை ''மங்கைபங்கன்'' என்றும் வழங்குவர்.

திருஞான சம்பந்த சுவாமிகள் இத் தலத்திற்குவந்து வணங்கி,''வெந்த வெண் ணீறு அணிந்து'' என்ற திருப்பதிகம் பாடி யருளினர். இவர் தம்முடன் வந்தோரில் சிலரை இருக்க வைத்து, பவாநி, பேரூர் முதலிய சிவதலங்களை வணங்கி, மீண்டும் திருச்செங்கோடு வந்தபோது இவ்வூரில் நளிர்சுரம் பரவி, மக்களைத் துன்புறுத்தி யது. அது, அறவே நீங்கற்பொருட்டு, ''அவ்வினைக்கு இவ்வினையாம்'' என்று தொடங்கும் திருநீலகண்டத் திருப்பதி கத்தில் ''செய்வினை வந்தெம்மைத் தீண் டப்பெரு திரு நீலகண்டம்'' என்று ஆணை யிட்டருளினர். அதனல், அந்நாடு முழு மையும் அப்பிணி தீர்ந்து, மக்கள் யாவரும் மகிழ்ந்திருந்தனர். அதுமுதல், இதுகா றும் மக்கள் நளிர்சுரம் கண்டு இறப்ப தில்லை. இஃது கண்கூடு. இங்குப், பிருங்கி முனிவர், இறைவனை வழிபட்டு அவனடி அடைந்தார்.

சிவபெருமான் வடிவங்கள்: இறைவன் திருவுருவத்தை மூவகையாகப் பிரிப்பர். அவை, அரு, அருவுரு, உரு என்பன வாம்.

அரு: உருவமற்ற தன்மை. இது நான்கு வகைப்படும். அவை சிவம், சக்தி, விந்து, நாதம் என்பன.

அருவுரு: உருவமற்ற தன்மையும், உருவமுள்ள தன்மையுமாம். அது சதா சிவம் (சிவலிங்க வடிவம்) என்று கூறுவர், சான்ருேர்.

உரு: உருவுள்ள தன்மை. மகேசு வரனின், நடராசர், தட்சிணுமூர்த்தி, பிச்சாடனர், மங்கைபங்கன் முதலிய 25 வடிவங்களாகும்.

சிதம்பரத்தில் முதன்மைக் கடவுள் நடராசர்; திருவாரூரில் சோமாஸ்கந்தர்; அதுபோல, திருச்செங்கோட்டின் முதன் மைக் கடவுள் ''மங்கை பங்கன்.''

மங்கைபங்கன்: திருச் செங்கோட்டி லுள்ள மங்கை பங்கனை, வெந்த வெண் ணீறு அணிந்து, விரிநூல் (பூநூல்) திகழ் கின்ற மார்பினையும், நல்ல பந்து போன்ற விரலையுடைய அம்மை அமர்ந்த இடப்பா கத்தையும் உடையவராய், கொத்துக்கள் பொருந்துகின்ற சோலைகள் சூழ்ந்த திருச் செங்கோட்டில் நின்ற மங்கை பங்கனைத் தொழுபவர்கள் அவலம் அறுப்பவர்கள் ஆவர் என்று திருஞான சம்பந்தர் பதிகம் பாடியருளினர்.

அப்பாடல்:

''வெந்த வெண்ணீறணிந்து
விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விரலாள்
ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்
சூழ்கொடிமாடச் செங்குன்றூர்
அந்தணனைத்தொழுவார்
அவலம் அறுப்பாரே''

என்பது. இங்கு, இறைவன் நின்ற கோலத்திலிருக்கிருன்.

''அவ்வினைக்கு இவ்வினையாம்
என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும்
உந்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத்
தீண்டப் பெருதிரு நீலகண்டம்''

என்பது, நளிர்சுரம் நீக்கிய பாடல்.

மங்கையைப் பங்கிலே இறைவன் கொண்டுள்ளான் என்பதைத் திருநாவுக் கரசர்,

''அங்கையு ளனலும் வைத்தா
ரறுவகைச் சமயம் வைத்தார்
தங்கையில் வீணை வைத்தார்
தம்மடி பரவ வைத்தார்
திங்களைக் கங்கையோடு
திகழ்தரு சடையுள்வைத்தார்
மங்கையைப் பாகம்
வைத்தார் மாமரைக்காடனுரே''

என்று பாடியுள்ளார்.

மங்கை பங்கனைப்பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"மருவாள் வலனேந்தீ
மறையோதீ மங்கைபங்கா
தொழுவாரவர் துயராயின
தீர்த்தலுன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அழகாவுனக் காளாயினி
யல்லேன் எனலாமே"

என்று பாடியருளினர்.

மாதொரு பாகத் திருவுருவத்தைப் பற்றி, மணிவாசகப் பெருமான், திருவாசகத்தில் 61–வது இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றுள்,

"தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும்
உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"
(திருக்கோத்தும்பீ-18)

என்னும் பாடல் முழுவதும் அவ்வுருவையே கூறுகிறது. மற்ற பாடல்களில் சில தொடர்கள் இவ்வுருவைக் கூறுகின்றன. அவை,

"பண்ணின் நேர்மொழியாள் பங்க நீ"
(வாழாப் பத்து-5)

"இணங்கு கோங்கை மங்கை பங்க"
(திருச்சதகம்-75)

"மங்கையோர் பங்க போற்றி"
(திருச்சதகம்-65)

"பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி"
(போற்றித்திருவகவல், வரி- 151.)

என்பனவாம்.

செங்கோட்டு வேலனைப்பற்றி அருணகிரியார் கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ் முதலிய நூல்களில் பாடியுள்ளார்.

அவற்றுள்,

"மாலோன் மருகனை மன்றுடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தெய்வத்தை
மெய்ஞ்ஞான தீரத்தைமேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோ
டனைக்கண்டு சென்றுதொழ
நாலாயிரங்கண் படைத்திலனே
அந்த நான்முகனே."

என்பது கந்தரலங்காரச் செய்யுள்.

இத்தலத்திற்குப் படிக்காசுப் புலவர் பாடிய வருகைப் பதிகம், கலம்பகம் முதலிய நூல்களும் உண்டு.

மங்கை பங்களுகிய இறைவன் திருவருள் பற்றிச் சித்தாந்த நூல்கள் கூறுமாறு.-

"தேவரி னொருவ னென்பர்
திருவுருச்சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்
முதலுருப் பாதிமாத
ராவதுமுணரா ராதியரிய
யற்கறிய வொண்ணு
மேவுரு நிலையிமோரா
ரவனுரு வினைவு மோரார்"
(சிவஞானசித்தியார் சுபக்கம்-49)

"தன்நிலைமை மன்னுயிர்கள்
[சாரத்தருஞ் சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்"
(திருவருட் பயன்–2)

மங்கை பங்கனை வழிபடுவதால் பெறும் பயன்

மங்கை பங்கனை வழிபடுவதால் உலக வாழ்க்கை இன்பங்கள் இம்மையில் பெற்று, இறுதியில் முக்தி நிலையும் பெறுவர் என்பது ஆகமநூல் துணிபு.

முடிவுரை; இதுகாறுங் கூறியவற்ருல், சிவஞானிகளால் வழிபடும் அருவத் திருமேனியுடைய இறைவன், ஏனைய ஆன்மாக்களும் உய்தி கூடும் பொருட்டு உருவத்திருமேனி கொண்டு, ஆங்காங்கு எழுந்தருளுகிருனென்பதும், அவற்றில், மங்கை பங்கன் திருவுருவம் இத்தகைய

தந்தை தாய் மனைவி மக்கள்

[திரு. சு. இரத்தினபாய், நான்காம் ஆண்டு.]

வைராக்கிய தீபம் ஒரு சிறந்த சைவ சமய நூலாகும். இதனை இயற்றியருளியவர், தவத்திரு சாந்த லிங்க அடிகளார் ஆவர். இவர் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், அவிரோத உந்தியார் என்னும் நூல்களையும் இயற்றி யுள்ளார். வைராக்கிய தீபத்தில் நம் மைப்பற்றியிருக்கும் தாய்தந்தை மனைவி மக்கள் என்னும் பற்றுக்களினின்றும் நீங்குவது பற்றிக் கூறுமிடத்து, மக்கட் குத் தாய் தந்தை மனைவி மக்களாவார் எவர் என விளக்குகின்றார். அதனை ஈண்டுக் கூறுவோம்,

நமது உடல் அநித்தியம் அது போல் இவ்வுடல் தோற்றுவதற்குக் காரணமாக இருந்தோராகிய நமது தாய் தந்தையரும் அநித்தியம். இவர்கள் ஒவ்வொரு பிறப் புத்தோறும் நமது உடல் மாறி வருவது போன்று வேறு வேறாய் மாறி வருவர்.

உயிர் நித்தியமானது. இவ்வுயிர்க் குத் தந்தை இடபத்திலேறி நடத்துகின்ற கடவுள். தாய் அவனது பாகம் பிரியாதிருக் கின்ற மின்போல்வாள். உயிர் எல்லாப் பிறப்புக்கும் ஒன்றே. ஆதலால் அவ்வுயிர்க் குத் தாய்தந்தையராய் இருக்கும் மாதா வும் பிதாவுமாகிய சக்தியும் சிவனும் நித் தியமாய் இருக்கும் தாய் தந்தையர் ஆவர்.

தாய் அமுதூட்டி உடம்பை வளர்த் தல் போல் உபதேச மொழிகளை அனுக் கிரகித்து, அறிவை வளர்த்தலால் தாய் என்றும், தந்தை தவிர்காரியத்திற் செல்லுதலைத் தடுத்துச் செய் காரியத்திற் செலுத்துதல் போல் அசாஸ்திரப் பிரபஞ் சத்தின் வழி செலுத்தாது, சாஸ்திரப் பிரபஞ்சத்தின் வழி செலுத்துதலால் தந்தை என்றும் தமது குருவாகியகாளத்தி தேசிகர் தாயும் தந்தையுமாக இருப்ப தனை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு நித்தியமான உயிருக்குத் தாயும் தந்தையும் இருப்பதால் உடலுக் குத் தாய் தந்தையராய் இருப்பவரைத் துறந்து தவம் புரிகின்றவர்களுக்கு மிகுதி யான துன்பம் இல்லை என்று ஆசிரியர் கூறுகின்றார்.

உயிர்க்குத் தாய் தந்தை வேறே இருத்தலினால் உடற்குத் தாய் தந்தை களைத் துறந்து விடுகின்றோம். ஆனால் அவ்வாறின்றித் தன்னையே நம்பி இருந்த மனைவி மக்களைத் துறக்கலாமோ என்று கேட்கின்றவர்களுக்கு ஆசிரியர் தமது மனமாகிய வீட்டின்கண் அகலாதிருந்து கடமைகளைச் செய்து பேரின்பத்தைத் தரு கின்றவள் மனைவி. தனதிடத்தில் இனி தாய்த் தோன்றி ஒப்பற்ற தனது தொழில் களை மாற்றி, வயது முதிர்ந்த காலத்தில் வீட்டின்கண் வைத்துத் தனக்கு உணவு கொடுத்துக் காப்பாற்றுபவர் மக்கள். இத் தகைய மனைவியும் மக்களும் ஒரு புருட னுக்கு அவனுள்ளே தோன்றிய மெய்ஞ் ஞானமே.

மெய்ஞ்ஞானம் என்பது தனதிடத்தில் இனிதாய்த் தோன்றி ஒப்பற்ற தனது தொழில்களை மாற்றித் தனது மனத்தி னின்றும் அகலாதிருந்து பேரின்பத்தைத் தந்து முத்தியாகிய வீட்டின்கண் அசை

தென்பதும், அவன் எழுந்தருளிய தலம் திருச்செங்கோடு என்பதும், அத்தலத்தின் வரலாறு, அத்தலத்தைப் பற்றிப் பாடிய நால்வரின் திருப்பாடல்கள், செங்கோட்டு வேலனைப் பற்றி அருணகிரியார் பாடிய பாடல் ஆகியனவும், மங்கை பங்கன் தத்துவம் சித்தாந்த நூல்களில் எங்ஙனம் விளக்கப்பெறுகிற தென்பதும், மங்கை பங்கனை வழிபடுவதால் எய்தும்பயன் இன்னதென்பதும், பிறவும் பெற்றோம்.

சைவம்

[திரு. சொ. இராமசாமி, மூன்றும் ஆண்டு.]

முன்னுரை

உலகத்தில் வாழும் மக்களுக்குச் சமுதாய நியதி, சமய உணர்வு என்ற இரு பெருங்கொள்கைகள் மிகவும் இன்றியமையாதன. சமுதாய நியதி அறநூல்களாலும், அரசியல் சட்டங்களாலும் அறிவன. சமய உணர்வு உயிரைப்பற்றிச் சிந்தித்த அனுபவ ஞானிகளினுலே உணர்த்தப்படுவது. சமய உணர்வு அவர்கள் அனுபவத்திற் கேற்பப் பலதிறப்பட்டுப் பலசமயங்களாகக் குறிக்கப்படுகின்றன. அவற்றுள் இன்றைவரையுள்ள சமயங்களில் சொல்லப்படும் அனைத்தையும் ஒரே இடத்திற் காண விழைந்தால் அதற்கேற்ப அமைவது சைவசமயம் ஆகும்.

சைவசமயம்

தமிழர்க்கு உயிருணர்வையூட்டும் சமயங்கள் பலவற்றுள்ளும் சிறந்து ஒப்புயர்வற்ற நிலையில் அனைவருக்கும் விடை கூறி, ஆன்ம நிலையை விளக்குவது சைவசமயமாகும். இத்தகைய சமய உண்மைகளின்படி மக்கள் உணர்ந்து வாழ்வதற்குக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. அத்தகைய கட்டுப்பாடுகளையும் தன் உண்மையாற்றலால் விலக்கித் தலைநிமிர்த்து நின்றது சைவசமயம். பழந்தமிழகத்துத் தெய்வம் செம்பொருள் என்னும் திருப் பெயரால் வழங்கிவந்தது. அதுவே பிற்காலத்துச் சிவம் என வழங்கப்பெற்றது. சிவத்தைத் தொழுவோர் சைவர் எனவும், அவர்தம் மாறிலாக் கொள்கை சைவம் எனவும் வழங்கி வருகின்றன. சைவம் ஒன்றுதான் எல்லாம் தழுவும் சமயமாய் விளங்குகிறது என்று அதன் சமரசத் தன்மையைத் தாயுமானவர் புகழ்ந்திருக்கிருர், இதன் பயனையும் பண்பையும் குறிப்பிட்டு, "சமயங்கடந்த மோன சமரசமாய் முற்றி, சமயா தீதப்பழம் பொருள் சேர்க்கவல்ல திதுதான்" என்று அனுபூதிமான்கள் போற்றியிருக்கின்ருர்கள்.

இச்சமயம் பொருளாராய்ச்சி செய்யத்தலைப்பட்டு மூன்று பொருள்கள் இயல்பாக இருப்பவை என்று கூறுகிறது. இவற்றைத்தான், "சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்றுள, மறையெலா மொழிய நின்றன, ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த் தொகை, வான்திகழ் தளையென விருப்பர், அன்னவே," என்று கந்தபுராணம் கூறுகிறது. பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களையும் முறையே காணவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம். இனி அவற்றைக் கண்டறிவோம்!

வற வைத்து அம்முத்தி இன்பமாகிய அமுதத்தைப் புசிப்பிப்பதாகும். ஆகவே இந்த மெய்ஞ்ஞானத்தை அன்றிப்பிறரை மனைவி மக்கள் என்று நினைத்துக் கொண்டு வீணிலே வாழ்நாட்களைப் போக்குதல் குற்றம் என்று விடை கூறுகின்ருர்.

மனைவி மக்களால் வரும் இன்பம் அநித்தியமானதும், அற்பமானதும் ஆகும். மெய்யுணர்வால் வரும் இன்பம் நித்தியமானதும் பூரணமானதும் ஆகும். ஆகவே மனைவி மக்களைத் துறந்து மெய்யுணர்வைப் பெறவேண்டும் என்று கூறுகின்ருர்

வைராக்கிய தீபத்தின் வாயிலாக நமக்கு எல்லாப் பிறப்பிற்கும் தாய் தந்தையாக இருப்பவர் சக்தியும் சிவனும் என்பதும், மனைவி மக்களாக இருப்பது மெய்ஞ்ஞானம் என்பதும் தெரிகிறது. ஆகவே நாம் உயிர்க்குத் தாய் தந்தையாக விளங்கும் இறைப் பொருளை மனைவி மக்களாக விளங்கும் மெய்ஞ்ஞானத்தால் அடைய முயற்சி செய்வோமாக.

பதி

ஐந்தொழில் படுகின்ற இவ்வுலகிற்குத் தலைவன் ஒருவன் தேவைப்படுகிருன். இத்தலைவன் தன்ஞல் செய்யப்படும் ஐந்தொழிலைத் தனக்குச் செய்வார் ஒருவருமில்லாதவன். தனக்கெனச் செய்யாதவனும் கூட. எனவே இவற்றை உயிர்களுக்கே செய்கிருன் என்பது உறுதியாகிறது. உயிர்களுக்கு ஐந்தொழில் செய்வதும் விளையாட்டுக்காக இல்லை. இன்பத்தை நுகர்வதற்குச் சொந்தமான உயிர் அதைவிட்டுத் துன்பத்தையே நிலைக்களமாகக் கொண்டிருப்பதைக் கண்டு இரங்கிய இரக்கமே. அவ்விரக்கத்தால் தொழில்படும் செயல்களே ஐந்தொழில் எனப்படுகின்றது. உயிர்களுக்கு இன்பத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கமுடைய இறைவன் இன்பமே வடிவமானவன் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இங்குக் கூறிய கருத்துக்களைத்தான் திருவள்ளுவர், "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றும், "பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்' என்றும், இன்னும் பலவாருகக் கூறியுள்ளார். பதி ஒருவனே—பலரல்லர் என்பது. பகவன், உவமையில்லாதான், அந்தணன், இறைவன் என்ற ஒருமை வாசகமாகக் கூறியதிலிருந்து வெளியாகிறது. "ஏகமே பதி பல அல எனுமது காண்டி" என்று பிறநூல்களும் பேசுகின்றன. "ஒருவனே தேவன்" என்று சமய நூல்கள் கூறுகின்றன.

பசு

பசு, ஆன்மா என்றும், உயிர் என்றும் பல பெயர்களாகக் குறிக்கப்படுகின்றன. உயிர் பல என்பது சைவ சமயத்தின் கொள்கை. உயிர் அறிவுள்ளதாகவும் இல்லை; அறிவில்லாததாகவும் இல்லை. இன்னதுதான் இதன் இயல்பு என்று கேட்கிறீர்களா? அறிவித்தால் அறியும் அறிவுண்டு. தாஞக அறியும் அறிவில்லை. இதஞற்ருன் உயிரைச் "சதசித்து" எனக் குறிப்பிட்டார்கள். உயிர் ஒவ்வொன்றும் தனித்தனி தாம் தாம் செய்த செயல்களின் பலனைத்துய்க்கும் இயல்பினையுடையது. இந்த உயிர்க்கு மூன்று நிலை சொல்லுகிருர்கள். அவை முறையே கேவலம், சகளம், சுத்தம் என்பன. கேவலம் என்பது அறிவு முழுவதும் மறைந்த நிலை. உயிர் தன்னையே அறிய மாட்டாது, இருட்டறையில் பட்ட கண்ணும், கையும், காலும் இல்லாக் குழவி போல அலமரும். இந்த நிலையில்தான் உயிர் இறைவனது கருணைக்கு இலக்காகின்றது. சகள நிலை. செயலற்றுக்கிடந்த உயிர் பயன் கருதாத பரமனது அருளால், தன் மாட்டு மறைந்திருந்த அறிவு விளக்கமுறுத்தப்பெற்று, தொழிற்படுதற் கேற்ற உடல் அகக்கருவி, அறிவுக்கருவி, செயற்கருவி ஆகியவற்றைப் பெற்று, இன்பதுன்பத்திற்கும் ஏதுவான வகையில் செயல்பட்டு, அவ்வின்ப துன்பங்களில் மாறி அனுபவித்துக் கொண்டிருக்கிற நிலையே "சகள நிலை" என்பர். உயிர் மாறி மாறி வரும் இன்பதுன்ப நிகழ்ச்சிக்கு ஏதுவான நல்வினை, தீவினைகளில் நாட்டமில்லாமல் தலைவன் ஒருவனையே நாடி, அவன் திருவருளைப் பெறும் பேரவாவில் ஏங்கி நிற்றலைச் "சுத்த நிலை" யென்பர். இங்கே உயிர் தனக்கென எதையும் தான் செய்து கொள்வதில்லை. தன்னை முழுவதும் தலைவனிடமே ஒப்புவித்து விடுகிறது.

பாசம் ;

பாசம் என்பது உயிரினது இயல்பான அறிவை மறைப்பது. இது உயிர் என்று உண்டோ அன்றே அதனேடு தொடர்புடையது. "நெல்லினுக்குமியும் செம்பில் நீடு காளிதமும் போலத் தொலை தொட்டு இன்று காறும் உயிரிடைத் தொக்கி நிற்கும்" என்ற சிவஞான சித்தித் திருவாக்கால் நன்கறியலாம். பாசம் உயிரது அறிவாற்றலால் அறுக்கப்படாதது. பதியினது அருளால் உயிரைப்பற்றிய கட்டு விட்டு வலியிழந்து நிற்பது. இறுதியில்தான் முதல் செய்து கொண்டிருந்த மறைப்புத் தொழிலை விட்டு உயிரறிந்து இன்புறுதற்குத் துணையாகச் செயல்படுத்தப்படுவது. இத்தகு பாசத்தினை ஆன்மாவினது இன்ப நுகர்ச்சிக்குப் பக்குவப்படுத்துவதே இறைவன் செய்யும் ஐந்தொழிலாக இருக்கின்றது.

உயிர், பெறும் பயன் :

மேற்சொல்லிய முறைப்படி உயிர் - யான், எனது என்று அற்ற உணர்வின

முடியா முதல்

[திரு. கு. சோ. முருகன், மூன்றும் ஆண்டு.]

முன்னுரை: முடியா முதல் என்ற இஃது ஒரு மணிவாசகம். இம்மணிக்கு விலைதர வேண்டுமானால் முடியா முதலைத் தான் தரலாம். இந்த மணிவாசகத்தைத் தந்தவர் மாணிக்கவாசகர்.

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் கீழ் இருந்து வாதவூரருக்கு, முடியா முதல், தன்னை அறிவித்தார். பின் வாதவூரர் தம் வாசகம் கேட்ட இறைவன் அவரை 'மணிவாசக' எனப் பெயரிட்டு அழைத்தார். முடியா முதல் நம்மணி வாசகருக்கு முடியும் முதலானார். பின் மணிவாசகர் பல மணிவாசகங்களைத் தந்தருளினர். அதில் ஒன்று இது.

முடியா முதல்: என்றும் முடிவில்லாதது என்பது இதன் பொருள். முடிவில்லாதது ஆதியும் அற்றதாகத்தானே இருக்கும். முடியாததும் முதலானதுமான இத்தன்மையினை மணிவாசகர்,

''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி...'' என விளக்குகிறார். இறைவனின் இத்தன்மையினைப் பாடாதார் இல்லை. திருஞானசம்பந்தர்,

'பறப்பைப் படுத்தெங்கும்' என்ற திருப்பாசுரத்தில்,

''பிறப்பில் பெருமானை'' எனக் கூறியுள்ளார்.

திருநாவுக்கரையரும்,

''முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி...'' எனவும், 'நூறு கோடி பிரமர்கள் என்ற தேவாரத்தில்,

''ஈறிலாதநல் ஈசன் ஒருவனே.'' எனவும் இத்தன்மையை நன்கு கூறியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும், 'மூவிலை வேற்கையானை' என்ற திருப்பாடலில்,

''முதலானை...'' எனப் பாடியுள்ளார். 'பத்தியாய் உணர்வோர்' என்ற திருவிசைப்பாவில்,

''உலகெலாம் படைத்த தனி முதலுமாய்...'' என்று பாடப் பெறுகிறது. சேந்தாய், அவன் - அவனது என்றுணர்வுடையதாயிருந்து, அதனால் வரும் ஒரு வகை இன்பத்தில் களித்திருப்பதே உயிர் பெறும் பயனாகும். இவ்வாறு உயிர் களித்திருக்கும் களிப்பை ஒரு பெரியவர், சிறந்த உவமை வாயிலாக விளக்குகிறார், '' ஒரு தேன்வண்டு தான் தேடிச் சென்ற தேனிலே தொடர்பு கொண்டு, ஆற உண்டு, உண்ணுகின்ற தன்னையும், உண்ணப்படுகின்ற தேனையும், அதனால் தனக்கு வந்த களிப்பையும் மறந்து, மலர் குவிவதும் தெரியாமல் அதனுள்ளே அயர்ந்து கிடத்தலை, '' உவமை வாயிலாகக்காட்டி விளக்குகிறார். '' அறிவிழந்து சுரும்பில் கழிகளித்து '' என்பதே அப்பெரியாரின் வாக்கு. இவ்வாறு ஆர்ந்திருந்தலையே '' முத்தி நிலை '' என்று சைவசமயம் கூறும்.

முடிவுரை :

சைவநெறி அளப்பரும் பெருமையைத்தரும். உயிர்க்கு வேண்டியதெல்லாம் இந்த ஒன்றே என்பதுதான் எல்லாராலும் ஒருமுகமாக வேண்டப்படுகிறது. சமுதாய நியதியைப்பற்றிச் செம்மையாக அறிந்து ஒழுகாத ஒருவன் சமுதாயத்தில் எவ்வாறு ஒழுங்காக வாழமுடியாதோ அதுபோலவே இத்தகு சமய உணர்வை நன்குணர்ந்து அனுபவிக்க முயலாத ஒருவன் உயிர்க்கென அமைத்த வாழ்க்கையைப் பெருதவன் ஆகின்ருன். எனவே இத்தகைய சமய உணர்வை உலகம் உள்ளவரை உணர்த்தியிருக்கும் சைவம் ஓங்குவதாக; இவ்வுணர்விற்கு அடிப்படையாக அமைந்த சமுதாய நியதி சிறந்து விளங்கி மிளிர்வதாக!

ரருளிய திருப்பல்லாண்டில், "மிண்டு மனத்தவர்." என்ற பாடலில்,

"பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்..." எனப் பாடியுள்ளார்.
இத்தன்மையினைச் சேக்கிழாரும்,

"ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி..." எனக் கூறியுள்ளார்.

இத்தன்மைய முடியாமுதல், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற இவற்றுள் அடங்காதது; இவற்றிற்கு முதலும் ஆனது. ஆனால், தன்பால் அன்புடையவர் உள்ளத்தில் அடைபட்டுக் கிடப்பது. அவர்கட்கு வேண்டுவன செய்வது. இத்தன்மையினைச் சமயகுரவர் நால்வர் வரலாற்றால் நன்கு உணரலாம்.

அன்பாலன்றி, தன் வலியால், அறியாமையால், ஆணவத்தால் மாறுபட்டார்க்குத் தான் எட்டாததாய், அவர்கள் செயலற்ற நிலையில், அவர்கட்கு அறிவும் அருளும் செய்யும் தன்மையுடையது. இத்தன்மையினை விளக்கும் நிகழ்ச்சியைத் திருமுறைகளால் உணரலாம். 'ஆண்டானை அடியேனை' என்ற திருத்தாண்டகத்தில் தாண்டக வேந்தர்,

"அடியொடுமுடி அயன்மால் அறியா வண்ணம் நீண்டானை..." என்று கூறும் இச்செய்தியும், திருஞான சம்பந்த சுவாமிகள் கூறுகின்ற,

"இலங்கை மன்னன்
எடுத்த இடுக்கண்மேல்
அலங்கொள் கால்விரல்
சங்கரன் ஊன்றலும்
கலங்கி வாய்மொழி
செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம்
நமச்சி வாயவே."

என்ற பாடற் செய்தியும், நம் மணிவாசகர் கூறுகின்ற,

"தக்கனையும் எச்சனையும்
தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கண வந்தவர் தம்மைத்
தொலைத்தது தான் என்னேடீ
தொக்கணவந்தவர் தம்மைத்
தொலைத்து அருளிஅருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலை
மற்றருளினன் காண்சாழலோ."

என்ற பாடலின் செய்தியும் மேற்கூறிய தன்மையினை நன்கு விளக்குவதாம்.

பிறிதோரிடத்தில் சம்பந்தர்,

"ஏதுக்களாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா
சுடர்விட்டுளன் எங்கள்சோதி..."

என அம்முதலின் தன்மையைப் போற்றுகிறார். திருமுறைகள் அனைத்தும் அதன் தன்மையை நன்கு விளக்குவனவாகும்.

அடிகள் வேண்டுவது: இனி, இத்தன்மையரான இறைவனை அழைத்து ஆளுடை அடிகள் வேண்டுவதைச் சிறிது நோக்குவோம். அடியவர்கள் மிகவும் விரும்புவது அடியார் குழாத்தோடு சேர்தலையே. இதை அவர்கள் பெறுதற்கரிய பேருகவே கருதுகின்றனர். இதைத்தான் ஆளுடை அடிகளும், 'இறைவா! உன்னுடைய அடியார் குழாத்தின் நடுவில் என்னைச் சேர்த்து அருள்வாய்" என இறைவனிடம் வேண்டுகிறார்.

"அடியேன், உன் அடியார் நடுவில் இருக்கும் அருளைப் புரியாய்..." என்பது அவர்தம் வாசகமாம். குமர குருபர அடிகளும் இப்பேற்றினையே தமக்கு அருளுமாறு, தம் ஊமைத் தன்மையை நீக்கி அருள் புரிந்த திருச்சீரலைவாய் முருகனிடம் வேண்டுகின்றார். 'செவ்வேளே உன்னுடைய பழைய அடியார் குழாத்தினோடு என்னைச் சேர்த்து, அதனால் உண்டாகும் பேரின்பத்தினை எனக்கு அளித்து அருள்வாய்' என அவர் வேண்டுகின்றார்.

"...செந்திற்பதிபுரக்கும் செவ்வேளே...
பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம்
துய்ப்பித்துச் – சேய,
கடியேற்கும் பூங்கமலக்
கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்."

என்பதே குமர குருபரரின் வேண்டுகோள் ஆகும். கற்றாரைக் கற்றாரே காமுறுதலைப் போல அடியார், அடியார் கூட்டத்துடன் சேர்தலையே காமுறுகின்றனர்.

அம்மை அப்பராகிய உங்களையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்ப தால் நீவிர் என் உள்ளத்தின் கண் இருக் கின்றீர்கள்.

''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று மணி வாசகர் கூறும் கூற்று ஈண்டு நோக்கு தற்குரியது. இவ்வாறு நீவிர் உம் அடிய வனை என் நடுவுள் இருப்பது உண்மை யானால் எனக்கு உன் அடியார் நடுவில் இருக்கும் அருளைப்புரிய வேண்டும். எனது இக்கருத்தை முடியும் வண்ணம் இறை வனே நீ முன்னின்றருள்வாய்; என வேண்டுகிறார் மணிவாசகர்.

''அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள்
இருக்கும் அருளைப்புரியாய்...''

என்பது அவர்தம் வாசகம்.

மணிவாசகர் தம் நெஞ்சில் நீங்காத வனாய் இறைவன் இருத்தலைக் கூறுவது போல, இறைவனை இடையறாது நினைத் தலையும், இறைவன் தம் உள்ளத்தில் நீங்காதிருப்பதையும் தேவார ஆசிரியர் மூவரும் பாடியுள்ளனர். அவர் தம் கூற்றுக் களையும் இங்குக் காண்போம். 'தோடு டைய செவியன்' என்ற பாடலில் ஆளு டையபிள்ளை,

''என் உள்ளம் கவர்கள்வன்.'' என்று பாடியுள்ளார். இறைவனால் சூலை நோய் தீர்ந்த திருநாவுக்கரையர்,

''நெஞ்சம் உமக்கே இடமாக
[வைத்தேன் நினையாது
ஒரு போதும் இருந்தறியேன்...''

எனவும் திருவங்கமாலையில்,

''...தேடித் தேடொணாத் தேவனை
[என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.''

எனவும், தாம் இறைவனை இடையறாது நினைத்தலையும், தன் உள்ளத்தில் இறை வன் நீங்காது இருத்தலையும் கூறுகின்றார். சுந்தர மூர்த்தி சுவாமிகளும்,

''நீள நினைந்தடியேன் உமை
நித்தலும் கைதொழுவேன்...''

எனவும்

''மற்றுப்பற்றெனக்கின்றிநின்
திருப்பாதமே மனம்பாவித்தேன்.''

எனவும், தாம் இடையறாது நினைத்தலைக் கூறியுள்ளார்.

இனி, இதுகாறும் மணிவாசகர் கூறிய செய்தி உள்ள திருவாசகத்தை எழுதி, இக்கட்டுரையினை முடிக்கின் றேன். அப்பாடல்,

''உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.''

என்பது ஆகும். இதுவே, இதுகாறும் எழுதிய இக்கட்டுரையின் முதலும் ஆகும்.

முடிவுரை: இக்கட்டுரையில், முடியா முதலின் தன்மையினையும், அம்முதலை அழைத்து மணிவாசகர் வேண்டும் வேண்டு கோளினையும், இவர் வேண்டுவது போலவே பிற அடியார்களும் வேண்டு வதையும் எடுத்துக் காட்டியுள்ளேன். முடியா முதல் அருளால் இக்கட்டுரையினை முடித்துவிட்டேன்.

—✳—

நமக்கு நாம் அழுவதில்லை!

[திரு. சா. சண்முகசுந்தரம், மூன்றாம் ஆண்டு.]

நிலையாமை பற்றிய நூல்களும், கருத்துக்களும் மக்களால் எவ்வாறு மதிக்கப் படுகின்றன? நம்மைப் பொறுத்த மட்டில் நிலையாமையைப் பற்றி உணர்வதற்கு மட்டுமின்றிக் கற்பதற்கும், இயல்பாகவே குறிப்பிட்ட வயதை வரையறுத்துக் கொள்ளுகின்றோம். காரணம் நிலையாமை என்பது எளிதில் புரிந்துணர்ந்து கொள்ள முடியாதது என்றும், இளம் வயதினர், விரும்பிக் கற்பதற் குரிய தன்று என்றும் நாம் நம்பிக் கொண்டிருப்பது தான். ஆயின் உண்மை அவ்வாறன்று. தமிழ் நூல்களில் ஏனையவற்றைப் பற்றிப் படிக்கும்போது ஏற்படுகின்ற அதே கருத்தை நெஞ்சாழத்தில் பதிக்கின்ற நயமும் விரும்புதற் குரிய இலக்கியச் சுவையும் நிலையாமையைப் பற்றிப் படிக்கும்போதும் ஏற்படவே செய்கின்றன.

இதற்குச் சான்றாக எத்துணையோ பாடல்களை யெடுத்து விளக்கம் கூறிக் கொண்டிருக்கலாம். நிலையாமையை வலியுறுத்த ஒரு அதிகாரத்தையே அழகுற அமைத்த தெய்வப்புலவர்,

"நாளென ஒன்றுபோற் காட்டி [உயிரீரும்
வாளா துணர்வார்ப் பெறின்"

என ஒரு குறட்பாவில் கூறியுள்ளார். ஒவ்வொரு நாளும் நமக்கு ஒவ்வொரு பொய்த் தோற்றமே. ஒவ்வொரு நாள் முடிந்தவுடன் மனிதனின் வாழ்நாளில் ஒவ்வொரு நாள் குறைந்து விடுகின்றது. எனவே நாளினை நமது வாழ் நாளைக் குறைக்கின்ற, துண்டிக்கின்ற, வாள் என்று கூறுவது பொருத்தும். இத்தகைய நாளின் தன்மையை உணரா மக்கள் தமக்குப் பொழுது போகின்றது, என்று இன்புறுகின்றனர். இத்தகைய நிலையாமைக் கருத்தையாவரும் உணரத்தக்க சுவையோடு, யாவரும் உணர வேண்டிய நயத்தோடு குண்டல கேசியின் ஒரு பாடல் விளக்குகின்றது. அது,

"பாலையாம் தன்மை செத்தும்
பாலனும் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மூளும்இவ் வியல்பு மின்னை
மேல்வரும் மூப்பு மாகி
நாளும்நாள் சாகின் றோமால்
நமக்குநாம் அழாத தென்னோ"

என்பது.

இப்பாடலின் கருத்து உண்மையாகவே நம் நெஞ்சத்தை அள்ளும் தன்மைத்தாகும். நம்மைச் சார்ந்தவர்களின் சாவுகளுக்காக அழுது புலம்புகின்ற நாம் நமக்குள்ளே நாளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சாவிற்கு அழுவதில்லையே! ஏன்? என வினவுகின்றது, பாடல். உண்மை தானே! இளைஞன் ஒருவனை எடுத்துக் கொண்டால் அவன் தனது இறந்துபோன குழந்தைத் தன்மை, பாலத்தன்மைகளுக்காக, அழுதிருக்கின்றானா? இல்லையே முதியவர் ஒருவரை எடுத்துக் கொண்டால் அவர் தமது இறந்துபோன குழந்தை, பால, காளை, தன்மைகளுக்காக அழுதிருக்கின்றாரா? இல்லையே! தம் இறப்புக்குத் தாம் அழாத இத்தகையோர் பிறருடைய சாவையெண்ணி அழுகின்ற அறியாமை தான் எத்தகையது? இத்தகைய கருத்தைக் குறிக்கின்ற "நாளும் நாள் சாகின்றோமால் நமக்கு நாம் அழாத தென்னோ" என்ற வரிகள் தாம் எத்தகையன?

குழந்தைத் தன்மை சாகிறது, பாலத் தன்மை சாகிறது. என்று நமக்குள் நிகழும் சாவுகளைக் குறிப்பிடுகிறது பாடல். சாவு என்பது பிறந்த ஒன்றுக்குத்தானே? ஆகவே பருவங்கள் நம்மில் சாகவேண்டுமாயின் அவை பிறக்கவும் வேண்டுமன்றோ? பிறந்து வாழ்ந்து தானே பின்சாக வேண்டும். ஆகவே குழந்தைத் தன்மை சாக பாலத்தன்மை பிறக்கின்றது. பாலத்தன்மை சாக இளமைத் தன்மை பிறக்கின்றதே என இப்படி ஆராய்ந்து கொண்டு செல்லுங்கால் ஒருவினா நம்

பேரூரான்

[உயர்திரு. பித்துக்குளி. முருகதாஸ் அவர்கள், அம்பத்தூர்.]

ஊரூராய்த் திரிந்தலைந்த
ஒருமகனைக் கருணையினால்
பேரூரான் வாவென்றான்
பேச்சற்று இருஎன்றான்
நாரூராங் கருவூரில்
நலியாத நற்பொருளை
நாடோரும் நல்லிசையால்
பாடுநீ என்றான்காண்.
சீரூராம் இருவினையால்
இருக்குமதை நாடாமே
இன்ப அன்பு அருள்நோக்கு
இதுகாட்டும் நல்லூராம்.

பேரூராம் அது நாடு
பெரிய நிலை யிதுகூடு
பெருமை எனச்சொன்னான்காண்
பின்புறத்து ஆண்டியான்!

ஆம்! நான் பித்தனாய், பித்துக்கொளியாய், இன்றுவரை பிதற்றித் திரிவதில் பெருமைப்பட வைத்தவன். மேலைச் சிதம்பரத்து மேற்குப் பிரகாரத்தில் வீற்றிருக்கும் ஆண்டவனே!

"காலத்தால் ஞானத்தால்
காணாத நற்கருத்தைக்

முள் எழுகின்றது. நம்முள் நிகழும் சாவுகளுக்கு நாம் அழ வேண்டுமென்றால், நம்முள் நிகழும் பிறப்புக்களுக்கு நாம் மகிழ்ந்து சிரிக்க வேண்டுமன்றோ? இவ்வாறு நாளும் நாள் சாகின்றோமால் எனுமிடத்து நாளும் நாள் சாவது மன்றி நாளும் நாள் பிறக்கவும் செய்கின்றோம், எனுங்கருத்தை வைத்து நோக்கினாலும், பிறப்பும் இறப்பும் மாறி மாறி நிகழ்வதாயினும் இறுதிநிலையானது இறப்பில் போய்த்தான் முடிகின்றதே யன்றிப் பிறப்பில் முடிவதில்லை யென்ற உண்மையை ஒப்புக்கொள்வதன் மூலம் நம்வினா பொருளற்ற ஒன்றாகி விடுகின்றது. ஆக பிறப்புக்கு மகிழ்வென்பது பொருளற்றதாகவும், இறப்புக்கு அழுவதே பொருளுள்ளதாகவும் இருப்பதை உணர்கின்றோம்.

மேலும் ஒவ்வொரு பருவத்தின் புதிய பிறப்பும் நமது இழந்த வாழ் நாட்களை நினை வூட்டுவதும், இழக்க இருக்கின்ற வாழ்நாட்களை எடுத்துக்காட்டுவது மான ஒரு அச்சுறுத்தும் கருவியாகவே இருக்கின்றது. எனவே நம்முள் நிகழும் இறப்புக்கு மட்டுமின்றி, நம்முள் நிகழும் பிறப்புக்கும் சேர்த்தே அழ வேண்டியவர்களாகின்றோம்.

அடுத்து "நமக்கு நாம் அழாததென்னோ" என்பது ஒரு பொருளுள்ள வினாவாகும். அடுத்தவர் சாவுகளுக்கே அழும் இயல்புடையவர்களாக இருக்கின்ற நாம், இறுதிவரை நமக்கு நாம் அழும் வாய்ப்பையே இழந்து விடுகின்றோம். உண்மைதான். நாம் சாவு என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற இறுதிச் சாவு உடலை விட்டு உயிர் பிரிந்து விடுகின்ற இறுதிச்சாவு நிகழும்போது நம்மால் நமக்கு நாம் அழுதல் என்பது இயலுமா? ஆக அழுவதற்குரிய நாம் அடுத்தவருக்கு அழுது கொண்டிருக்கின்றோம். இந்த அடிப்படையில் தான் 'செத்தாரைச் சாவார் சுமந்து" என்று பட்டினத்தடிகளும் பாடினார்.

நிலையாமை பற்றிய பாடல்களின் சுவையும், நயமும் எத்தகையன என்று உணர்தற்கு ஒரே ஒரு பாடலைத்தான் கண்டோம். இளையனாகிய என்னாலேயே இந்த அளவிற்கு இதில் சுவையையும், நயத்தையும் காண முடிகின்ற தென்றால் ஏனைய அறிஞர் பெருமக்கள் இது போன்ற பாடல்களை விளக்க முற்படின் ஒவ்வொரு பாடலுமே நமக்கோர் அருமையான இலக்கிய நூலுள் நுழைந்து சுவைத்த மீண்ட இன்பத்தையன்றோ அளிக்கும்.

காட்டிவிட்டான் ஊட்டிவிட்டான்
கவியதாம் பேரமுதை
மூலத்தால் நடுமுடிவால்
பரவெளியால் உணராத
மோனத்தை என்னுணர்வில்
பொங்கிடவே ஊட்டினவன்''

இந்த முருகனிடம் எதையும் வெளியிலிருந்து குறிப்பாகப் பெறலாமே தவிர, அன்பமுதாய் உள்ளேதான் உணர வேண்டும். சத்குருவும், சத் சங்கமும் உள்ளுணர்வில் அடங்கிக் கிடக்கும் பேரின்ப ஞான அனுபவத்தைக் கிளறிவிடும். அறிவுணர்வை, சக்தியை ஊக்குவிப்பார்கள். ஆனால் அந்த ஊக்கத்தை வைராக்கிய சக்தியாகி மாற்றிக்கொண்டு, தியானம் செய்யவேண்டும். அது கடினமென மனம் அஞ்சினால், குருநாதனின் ஊக்க சக்தியை, அருள் ஆசியைப் பக்தியாக மாற்றிக் கொண்டு, ஆத்ம நிவேதனம் செய்து ஆண்டவனையே நமக்காக எல்லாம் செய்யச் செய்து கொள்ளலாம்.

'பரிபக்குவம்' என்று சொல்வது, இவ்விடுமுறையில் எப்படியாவது குருமொழியான ஊக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் [சிரத்தை] உறுதிப்பாடு என்பதே யாகும்.

மனிதன் உறுதிப்பாடு அற்றிருப்பது போல 'அவலம்' வேறு இல்லை. புத்திச் சாதுர்யம், அறிவின் வெற்றி வெறி இரண்டும் ஒன்றுதான். ஆனால் தெளிவான உறுதிப்பாடு அற்றவர்களின் அறிவு, ஆற்றல், கல்வி அனைத்தும் ஏட்டுச் சுரைக்காயாய் விடும். அது பிறருக்குப் பிரசங்கம் செய்யப் பயன்படுமே தவிர தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

எனவேதான் சிலர் பெரியவர்களாய்ப் பலர் மத்தியில் வேஷம், பேச்சு, பதவி வகித்தாலும் சாமான்ய மனிதனுக்குள்ள புலனடக்கம் கூட இன்றிக் கெட்டழிகின்றனர். பணம், பதவி, சொல்வன்மை ஆகிய குற்றத்தையும் அவலநிலைகளையும் மறைக்கலாம். ஆனால், ஆண்டவன் வாய்விட்டுச் சிரிப்பான். உறுதிப்பாடு அற்றவன் உள்ளுணர்வு 'ஞ' என்று அலறும்.

எனவே, அன்பர்களே! முருகனைப் பூரணமாகச் சரணடையுங்கள். அவன் உரு, ஒலி, ஒளி என்ற மூன்று நல்ல நிலைகளிலும் தன்னையும், தன் மயமாக நம்மையும் காண வைப்பான்.

வழிபாட்டு முறையிலே களங்கமற்ற கற்பொழுக்கமும், கனிவும், கருத்தும் நிறைந்த உறுதிப்பாடும் இருக்கவேண்டும். நிச்சயம் முருகன் தன்மயம் தருவான்.

உருவ வழிபாடு பிடிக்கவில்லை உங்களுக்கு என்றால் 'உங்கள் பால் உங்களுக்கு நம்பிக்கையிருக்கட்டும். உள்ளே கள்ள மற்ற தன்மை இருக்கிறதா பாருங்கள். சோதித்துக் கொள்ளுங்கள்' ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்'' செல்வரல்லவா?

சொல், நினைவு, செயல் என்ற மூன்றும் நல்ல அறிவுத் தெளிவுடன், உறுதிப்பாடான நல்லுணர்வுடன், கற்பொழுக்கம் தவறாமல் புலனடக்கத்துடன் எதைச் செய்தாலும் அது நன்மையாகவே முடியும்.

மனித வாழ்வில் இரண்டே பாதையுண்டு. அமைதியாக இருக்க! ஆத்ம நிவேதனம் [பக்தியோகம்] இரண்டாவது, தன்னம்பிக்கைதான். [ஆசை, அழுக்காறு, வெகுளி, மயக்கம், ஈயாமை, எள்ளாமை என்ற ஆறு விரோத சக்தியாலும் தீண்டப்படாத தூய மனிதன் என்ற தெளிந்த அறிவுணர்வு] என்பதே யாகும்.

மேற்சொன்ன இரண்டுமின்றி இருப்பது தனக்கோ பிறருக்கோ பயனில்லை. முதல் பாதையில் சுலபமான சில அம்சங்கள் இருக்கின்றன. ஆம்! அதில் ஞானிகள் அடிக்கடி தென்படுவார்கள். நாம் தவறி விழுந்துவிடாமல் பலர் நம்மைக் கவனிப்பார்கள். எனவே, காப்பு நிறைய உண்டு. கடவுளையும், கருணையையும் நம்புவதால் மன்னிப்புக் கிடைக்கும்.

ஆனால், தன்னம்பிக்கை உடையவன் பூரண அறிவின் நல்லாணவத்தால் உறுதிப்பாடு என்ற கோட்டையைக் கட்டுவதால் அவனிடம் இருப்பவர் இல்லாமலே இருப்பர். அபாயம் ஏற்படாது. ஏற்பட்டு விட்டால், மறுபடி எழுந்திருக்கவே முடியாது.

கொலைமறுத்தல் உரைநலம்

[திரு. மு. நடேசன், இரண்டாம் ஆண்டு.]

மனிதன் தெய்வ நிலைக்கும், விலங்கு நிலைக்கும் இடைப்பட்டவன். அவனை விலங்காக்குவதும், தெய்வமாக்குவதும் அவனுடைய மனமே. விலங்கியல்பு குறையக், குறைய, அவன்பால் தெய்வ உணர்வு முகிழ்க்கும். அவ்வுணர்வே மெய்யுணர்வு. அவ்வுணர்வை வெளிப்படுத்த விழைவதே கலையின் உள்ளுறை. அங்ஙனம் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறும் பொருட்டுச் சாந்தலிங்கப் பெருமானார் நூல்கள் பல யாத்தனர். அந்நூற் பொருள் சிற்றறிவுடையோர் எளிதில் உணருமாறில்லை. எனவே உரை எழுந்தது. இந்நூற்கு உரை எழுதியவர் திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளாவர்.

நூல்களின் உரைகள் அவற்றின் மறுபிறப்பு என்றே கூறலாம். இந்நூலு

எனவே, எல்லா அன்பர்களுக்கும் சுலபமான வழி முருகா என்று வாயையும், அர்ச்சனை என்று கையையும் முருகன் அல்லது பிடித்தமான தெய்வத்தின் பால் வைத்துவிட்டால், தீமைகளைக் காது கேட்கவோ, கண் பார்க்கவோ முடியாது. உடல் உதவியால் தான் எல்லாமே நடைபெறும். தீவினை வாராது.

"கைவாய் கதிர்வேல்
முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே
ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா
சியொடு செவியாம்
ஐவாய் வழிசெல்
லுமவா வினையே"

என்று அருணகிரியார் பாடுவதால் ஏழைப் பித்துக்குளியை இந்த நிலைக்கு உயர்த்தியதும், உங்கள் அன்பு வாத்சல்யத்தைப் பெற்றதும் அவன் அருளால்தான்.

எல்லோரும் சத்தான
ஒரு பரம்பொருள்
ஒருருவம் ஒருநாமம்
ஒன்றுமில்லா ஈசனாகி
ஓராயிரந் திருநாமங்
கொண்டுலவும் குருவாகும்

தன்மையை உணர வேண்டும். அவன் அருளால் அவன் தாள் வணங்கி,

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய

உரைக்கும் வித்தையை [பயிற்சியை]க் கொள்ள வேண்டும்.

சத்வித்யா சித்தித்தவர்கள் எப்பொழுதும் சேவை, தியாகம், அன்பு, சமத்தும், அமைதி, ஆனந்தம் என்ற முறைமைகளையுடைய சன்மார்க்கத்தில்தான் இயங்க முடியும். இத்தகைய சன்மார்க்கிகளின் திருக்கூட்டம் எங்குள்ளதோ அங்கெல்லாம் ஆண்டவன் ஆனந்தக் கூத்தாடுகிறான். ஆண்டவன் திரு நடனமாடும் கூடம் சன்மார்க்க சங்கமே. சன்மார்க்க சங்கத்தைக் கூட்டிவைப்பது சத்வித்யா [உண்மையின் பயிற்சியின் வெற்றி] ஆக, திரு. சாந்தலிங்க சுவாமிகளின் மலரடியில் ஆரம்பமாகியுள்ள சத்வித்யா சன்மார்க்க சங்கம் நீடூழி உழைத்து, நல்ல சாதகர்களையும், வெற்றி பெற்ற ஞானிகளையும், பண்பாடுடைய பக்தர்களையும் உலகுக்கு ஈயுமாக!

"பாடுமாறு பணிக்கின்றான்
பாடுகின்றேன் நான் யார்? பாட்டெழுத?
கூடுமாறு ஆடுகின்ற
கூத்தனே எல்லாம் உன் செயல்!

ரைக்கு, எந்நூலுரைக்கு மில்லாத தனிப் பெருமையுண்டு. அஃது இவ்வுரை சாந்த லிங்கப் பெருமானுலேயே கண்ணுறப் பெற்ற ஒன்று என்பதாம். அதனுற்றுன் இவ்வுரை எவ்விடத்தும் அவர்தம் உட்கிடக்கைக்கு மாறுபட்டிலது எனத் துணியலாம். இந்நூல் அவாய் நிலைப் பொருளால் ஆனது. அஃதாவது விடையினை மட்டுமே தன்னுட் கொண்டுளது. அவ் விடைக்கேற்ப வினுவினை எழுப்பி ஆசிரியர் உரை கூறிச் செல்லும் திறமே திறம்.

இந்நூற்குப் பாயிரமெனக் கொள்ளத்தக்க முதற் பாடலில் பரம் இச்சிறியனேற்கும் தரும் இருதாள் தலைமிசைக் கொண்டு...... இயம்பா நின்றேன், என்ற வரிக்கு, பரசிவம் தன்னுடைய கருணையினுலே முடி அடி முதலாய உறுப்புக்களோடு குருவுருவாய் இந்நிலத்தின் கண்ணே எழுந்தருளிவந்து ஒன்றுக்கும் பற்ருத சிறுமையுடையனேற்கும் பிறவியாகிய கடலை நீந்தும்படி புணையாகத் தந்தருளிய இரு திருவடிகளையும் என் புன்தலை மேல் வைத்து அவற்றின் அருளினுல் கூறலுற்றேன் என விரிவுரை கூறுகிருர். இஃது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்,

என்னும் குறளை நினைவுறுத்துகிறதன்ருே! இது இவ்வாசிரியர் தம் பன்னூற் புலமைக்குச் சான்ரும்.

இவர் கூறும் உவமைகளோ தனக்குவமை இல்லாதன. உடல் நிலையற்றதென்பதையும், அதனைக் காக்க நினைக்கும் பேதமையையும் குறிக்க உடலைக் காக்க எண்ணுதல் "நீர்க்குமிழிக்குப் பூண்கட்ட நினைத்தலை ஒக்கும்" என்னக் கூறுகிருர். "காயமானது நீரிடைக் குமிழ்போல் கழியும்" எனப் பிறகும் கூறினுரேனும் இவர் அதற்குப் பூண்கட்ட நினைத்தலை ஒக்கும் எனக்கூறிக் கற்போர் கழிவிரக்கம் கொள்ளுமாறு செய்கின்றனர். நீர்க்குமிழிக்குப் பூண்கட்டுமாறு யாங்ஙனம்? இதனுல் கீழோர் இவ்வுடலை அழியாத் தன்மையது என்ற உணர்வில் பிறவற்றைப் பூணுட்படுத்துக் காக்குமாறு போல அதனைக் காக்கும் பேதமை விளங்குகிறதன்ருே! உடலை ஓம்பி உடலால் வாழ்வோர் உண்மையை எங்ஙனம் அறிவர்!

கண்ணப்பர் முதலானேர் ஊன் அருத்தி வழிபாடு செய்த பக்திமை வழியை யாவர்க்கும் பொதுவிதியாய்க் கொள்ளலாகாது. அங்ஙனம் கொள்ளுதல், ஒருகால் வெள்ளப் பெருக்கால் ஏரியின்கரை உடைபடுமாயின் அதனையே அதன் கலிங்காகக் கொள்ளுகின்ற தன்மையை ஒக்கும் என்கிருர். கண்ணப்பர் அன்போ, அருட்பெரு வெள்ளம். அதற்குக் கரை யாண்டுளது? சிற்றறிவினர் அங்ஙனம் அன்பு செலுத்த வல்லரோ? ஏரி உடைபட்ட இடத்தைக் கலிங்காகக் கொள்ளின் பின் நீர் எங்ஙனம் தங்கும். அவ்வாறே மெய்யன்பிலார் கொலை செய்து ஊன் படைத்தால் அவர்மாட்டு அருள் நிலவுங் கொல்! அந்தோ பேதமை!

இந்நூல் வினுவை அவாவி நிற்றலான், இவர் வினுவை எழுப்பி அதன்கண் கூறும் உவமைகள் விடையிற் கூறும் உவமையினும் உயர்வு தாழ்வின்றி விளங்குதல் அவர்தம் நுண்மாண் நுழை புலத்தை விளக்கா நிற்கின்றன. அறிவு உயிரின் குணம் உடலின் குணமன்று என்ற சிந்தாந்தியை, இவ்வுடலின் வேருய உயிருள்ளதாகக் கூறுதல் முயற் கொம்பும், ஆமை மயிரும் உள்ளதென்ருற்போலும் எனக்கூறி உலகாயதன் மறுக்கின்ருன். இப்பொருளுவமையாக, ஆசிரியர் கூறும் இவை நகைச்சுவை அளிப்பனவாக உள.

இவ்வுரையில் பொன்மலர் நாற்றமுடைத்தெனக் கொள்ளக் கிடக்கும் ஒன்று அவர் மேற்கோள் பாடல்களைப் பல நூல்களிலிருந்து தரும் தன்மையேயாம். இவரைப் போன்று மிகுதியான மேற்கோள்களைத் தரும் உரையாசிரியர் மிகச் சிலரே காணப் படுவர். கொலைமையே தலையாய தீவினை என்பதற்கு "ஆனை அடியில் அடங்கா அடியிலை" என்ற பாடலையும், கொலையால் வரும் தீவினைக்கு 'அக்கே போல் அங்கை ஒழிய விரலழுகித் துக்கத் தொழுநோய் எழுபவே' என்ற பாடலையும் எடுத்தாண்டுள்ள திறம் அணிக்கு அணி செய்கிறது. மேலும்

உன் சொல் பிழையாமன்றே!

[ஓர் உரையாடல்]

[திரு. ப. வினதா, இரண்டாம் ஆண்டு மாணவி.]

[பல சமயவாதிகளின் சபை கூடுகிறது. வேதாகமங்களைக் கைக்கொள்ளும் சைவரும், உலகாயதன், சமணன், பௌத்தன், ஏசுமதவாதி, இலௌகிகன் ஆகியவர்களும் தத்தம் இருக்கைகளில் வந்து அமர்கின்றனர். சைவாச்சாரியார் நட்சத்திர கணங்கள் தன்னைச் சூழ நடுவே விளங்கும் பூரண சந்திரனைப்போல அமர்ந்திருக்கின்றார். அவரை ஒரு பக்குவ மாணாக்கன் வந்து வணங்கி உலகத்துள்ள உயிர்த் தோற்றத்துள் உயர்வு, தாழ்வு அருளுக என்று கூற சைவ சித்தாந்தி பல்லுயிர் செகுத்துண்டு உடலை வளர்க்காத கொல்லா விரதிகளே மேலோர் என்று கூறுகிறார். அதனை உலகாயதன் முதலில் மறுக்கிறான். அவனுக்குத் தகுந்த விடையிறுத்தபின் ஏசுமதவாதி புன் சிரிப்புடன் எழுந்து பெருமிதமாகக் கூறுகிறான்.]

ஏசுமதவாதி; ஐயா! உலகாயதன் கூறிய உரை தவறு. நீர் பதிலிருத்தவற்றுள்ளும் சில கருத்துக்கள் ஒத்துக்கொள்ளக்கூடியவை. சில கருத்துக்கள் ஒத்துக் கொள்ளக் கூடாதவை.

சைவசித்தாந்தி: [புன்னகை தவழ] என்னுரையில் நீ கண்ட குற்றம் யாது?

ஏசுமதவாதி: ஐயா! கொலையாற் பாவம் வரும் என்று கூறினீர். அது சரி. ஆனால் எல்லாக் கொலையாலும் பாவம் உண்டு என்று நீர் கூறுகின்ற கருத்து தவறாகும்.

சைவசித்தாந்தி: அது எவ்வாறு?

ஏசுமதவாதி: அது எவ்வாறென்றால் மனிதனை மனிதன் கொன்றால் கொன்றவன் நரகமடைவான். இது உண்மை. மிருகங்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தை உண்பதனால் பாவம் இல்லை.

சைவ சித்தாந்தி: [பெரிதாகச் சிரித்து] மிருகங்களைக் கொல்வதனால் பாவம் இல்லை என்று நீ சொல்லுவது எவ்வாறு பொருத்தமுடையதாகும்?

ஏசுமதவாதி: மிருகங்களை மனிதர்களுக்கு உபகாரமாக கர்த்தர் படைத்துக் கொடுத்தார் என்பது எங்கள் சத்திய வேதத்திலுள்ள உண்மை.

சைவசித்தாந்தி: [அமைதியாகக் கூறுகிறார்] ஈசுரன் ஞானரூபியானவன்.

பாடல்களை விரிவஞ்சி விடுத்தனர் போலும்! அவ்வாற்றானும் அவர்தம் உள்ளம் நிறைவுற்றிலது என்பதே சிறியேனின் துணிவு!

இங்ஙனம் மிகுதியான பாடல்களை, நூல்களை எடுத்தாண்ட திறத்தால். அந்நாளிலிருந்து, இந்நாளொழிந்த பல நூல்கள் அறியக் கிடக்கின்றன. ஏசுமத நிராகரணம் என்னும் நூல் அறியப்படுமவற்றுள் ஒன்று. இவர் இடையிடையே கூறும் தத்துவ விளக்கங்கள். சிறுமதியோரும் எளிதில் உணரும் பான்மைய. பூதங்களின் கலப்பால் மனம் தோன்றும் என்னும் உலகாயதன் கூற்றுக்கு, வெற்றிலை, பாக்கு முதலியவற்றின் கலப்பால் அவற்றின் வேறாய செம்மை நிறம் தோன்றுதல் போல எனக்கூறியிருத்தலே இதற்குக் கரியாய் அமையும்.

மேற்கூறிப் போந்தவற்றால் இவர் உரையை விரித்தெழுதும் தன்மையும், பன்னூற் புலமையும், உவமைச் சிறப்பும், மேற்கோள்களின் மிகுதியும், தத்துவ எளிமையும் நன்கு விளங்கும். அவர்தம் உரையெனும் பெருங்கடலில் சிறியேனின் சிற்றறிவுத்தோணி கொண்டு தேடிய முத்துக்கள், எம்மிடைப்பட்டு ஒளியுற்றனவோ அல்லவோ அறியேன். எல்லாம் வல்ல சாந்தலிங்கப் பெருமானார் இன்னருளை இறைஞ்சி இத்துடன் அமைகிறேன்.

மனிதர்களுக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்தான் என்று நீ சொல்கிறாய். மலத்தில் ஈயால் உண்டாகிய நுண்ணிய புழுக்கள் இருக்கின்றன. மேலும் நுண்ணிய பல உயிர்களும் இருக்கின்றன. அவைகளினால் உனக்கு என்ன பயன்? சிந்தித்துப் பார்!

ஏசுமதவாதி: [அமைதி]

சைவசித்தாந்தி: அவ்வாறு அவை பயனற்றவை யென்றால் உன் வேதத்தில் கூறப்படுகின்ற கருத்தா ஞானமயமானவன் என்பது எவ்வாறு ஏற்புடைத்தாகும்?

ஏசுமதவாதி: [விரைந்து] உயிர்களிலே சிறியவைகளெல்லாம் பெரியவைகளுக்கு இரையாய் ஒன்றுக்கொன்று உணவாகும். இவ்வாறு முறை முறையில் மனிதர்களுக்குப் பயனுள்ளவைகளாகப் படைத்ததே, எல்லா உயிர்களும் ஆதலின் நீர் சொல்வது தவறு.

சைவசித்தாந்தி: உன் கூற்றுப் படியே ஆய்வாம். எல்லா உயிர்களும் மனிதர்களுக்கு உபகாரமாகப் படைக்கப் பட்டவை என்று கூறுகிறாய். சிங்கம், புலி, யானை, கரடி, பாம்பு, தேள் முதலியவைகளை மனிதர்களுக்கு நல்லதற்குப் பயன்படாமல் மனிதர்களைக் கொன்று தின்றும், கடித்தும் வருத்துகின்றன. அவைகளை நீ எவ்வாறு உபகாரமாகப் படைத்தவை என்று கூறமுடியும்? ஆதலால் உன் கூற்று தவறு. உயிர்களை மனிதர்களுக்கு உபகாரமாகப் படைத்தது இல்லை.

ஏசுமதவாதி: என் கூற்றில் தவறில்லை. கருத்தா முற்காலத்தில் ஒரு மனிதனைப் படைத்தார். எல்லா மிருகங்களையும் அவனுக்கு அடங்குபவனவாகச் செய்தார். இன்னபடி நட என்று பல புத்தி மதிகளையும் கூறினார். ஆனால் அம்மனிதனே அந்நற் புத்தியின் வழி நடவாமல் குற்றங்கள் பல செய்தலினால் மிருகங்கள் உனக்கு இனி அடங்கா எனச் சாபம் இட்டார். ஆதலால் அவனுக்கும் அவனது வழிவந்த மனிதர்களுக்கும் அடங்காமற் போய்விட்டன. இதுவே உண்மை.

சைவ சித்தாந்தி: [கைகொட்டிச் சிரித்து] கருத்தா கூறிய சாபத்தால் மிருகங்கள் அடங்கவில்லை என்று கூறுகிறாய். ஆடு, மாடு, எருமை, பன்றி, நாய், கோழி முதலியன சில மனிதனுக்கு அடங்குகின்றனவே! இவ்வாறு அடங்குமிடத்து அடங்காது என்று நீ கூறியது எவ்வாறு பொருந்தும்?

ஏசுமதவாதி: [யோசித்தவாறிருத்தல்]

சைவசித்தாந்தி: எனவே உன் கருத்தா சபித்தது பொய்யான செயலாகும். ஞானரூபியான கடவுள் கூறிய சாபம் மாறிப்போயிற்றென்னில் உம் கருத்தா ஆற்றலில்லாதவன் ஆவன். ஆதலின் சபித்தது என்பது இல்லை.

ஏசுமதவாதி: நீர் கூறுவது ஏற்புடைத்தன்று. சாபமிட்டது மாறுபட்டுப் போகவில்லை. மனிதர்களுக்கு புலி, சிங்கம், பாம்பு, கரடி முதலியன அடங்காமற் போகவும், ஆடு, மாடு முதலியன அடங்கவும் கருத்தாவினது சாபமேயாகும்.

சைவசித்தாந்தி: நீ இப்பொழுது கூறிய உரையும் குற்றமுடைத்து ஒரு கால் பாம்பு, முதலியன ஒருவனுக்கு அடங்குதலினாலும், பசு முதலியன ஒருவனைக் கொல்லுதலினாலும் அதுவும் சரியில்லை. ஆதலின் மனிதர்களுக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்ததேயில்லை. இவ்வுரையை உன்னால் மறுத்தல் கூடாது.

ஏசுமதவாதி: உம் கூற்றுப்படி நோக்கின் கருத்தா ஒரு பக்கத்தில் விருப்பமுடையவர் போலும்! எல்லா உயிர்களையும் ஒரு நிலையிலின்றி தேவராகவும், மனிதராகவும், விலங்காகவும் படைத்துள்ளார். ஆகவே கருத்தா நடுநிலையற்றவர்.

சைவசித்தாந்தி: உன் கூற்று தவறு. உயிர்கள் தாம் முன் செய்கின்ற நன்மை தீமைகளினால் வருகின்ற புண்ணிய பாவங்களினாலே பல வடிவங்களைப் பொருந்தும். ஆதலால் உன்வேதம் உண்மையன்று:

ஏசுமதவாதி: [அமைதியாக இருக்கையில் அமர்கிறார். சபையோர் தோள் பூரிப்ப நகை செய்கின்றனர்.]

1957-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.



1958-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1959-ஆம் ஆண்டு புலவர் மாணவர்கள்.



1960-ஆம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1961-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1962-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1963-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1964-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1965-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.

1966-ம் ஆண்டு புலவர் மாணவர்கள்.



1966-ம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பு மாணவர்கள்.



மாணவர் உடற் பயிற்சி



மாணவியர் உடற் பயிற்சி



கொடி வணக்கம்

கல்லூரி மாணவர்களின் நாடகம், "கலிங்கச் செல்வி" அரிமா சங்கம் நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது.

கல்வி நிலைய மாணவர்கள் சுற்றுலா,
(தென்காசி பராக்கிரம பாண்டியன் கட்டிய கோயிலின் முன்பு)



கல்லூரிக் கட்டிடத் திறப்பு விழாவிற் பங்குபற்றிய பெருமக்கள்.

முருகன் அவதாரம்

[திரு. பி. அருணுசல நாட்டார் அவர்கள், பி.ஏ. கோவை-1.]

இறைவன் உருவம், பெயர், தொழில் ஒன்றும் இன்றிப் பரவியவன். இந்நில வுலகில் விரவிய உயிர்கட்கு வீடு தந்திடும் கருணையால், உலகைப் படைத்துக் காத்து அழித்து அருள் செய்யும் அவன் ஓர் இலக்கியம் (=லக்ஷியம்) அவனிடத்துள்ள ஓர் இலக்கணம் (=லக்ஷணம்) இவ்விலக்கணம் பொது, சிறப்பு என இருவகைப் படும். இதை முறையே தடஸ்த லக்ஷணம், ஸ்வரூப லக்ஷணம் என்பர். அவனுக்கு அளவுபடாத உண்மை, அறிவு, இன்பம் (ஸத், சித், ஆனந்தம்) இருப்பது சிறப் பிலக்கணம். உருவம், பெயர், தொழில் ஏற்றல் பொது இலக்கணம். மேலும், உயிர்கட்குப் போகம் தந்து, அதன் இழிவினை உணர்த்தி, அதனினும் மேம் பட்ட வீடு பேற்றில் விழைவு வரச் செய்து, அதற்குரிய சாதனம் தந்து ஒழுகவைத்து வீடு நல்க, அவன் உருவம் கொள்வான். அவன் உருவும், அருவும், உருவருவும் ஆனவன். மிக்க அருளால் மேனி கொண் டவன். இந்த உண்மைகளைக் கந்த புரா ணம் கீழ் வருமாறு விளக்குகின்றது.

"உருவோடு தொழில்பெயர்
ஒன்றும் இன்றியே
பரவிய நீஅவை
பரித்து நிற்பது
விரவிய உயிர்க்
கெலாம்வீடு தந்திடும்
கருணையதே அலாற்
கருமம் யாவதே"

(உற்பத்தி காண்டம், திரு அவதாரப் படலம் 34)

"தன்னை நேரிலாப்
பரம்பொருள் தனியுருக்கொண்ட
தென்ன காரணம் என்றியேல்
ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப்பாசங்கள்
முழுவது மகற்றிப்
பின்னை வீடு பேறருளுவான்
நினைந்த பேரருளே"

(—மகே. சூரன், அமை-119)

'ஞானந்தான் உருவாகிய
நாயகன் இயல்பை
யானுநீயுமாய் இசைத்தும்
என்றாலஃ தெளிதோ
மோனந்தீர் காலமுனிவரும்
தேற்றிலர் முழுதும்
தானும்காண்கிலன் இன்னமும்
தன்பெரும் தலைமை"

(—மகே-சூரன், அமை-128)

கரும காரணத்தால் தோன்றிய நமது உடல் இரதம் (மச்சை), உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய எழுவகைத் தாதுக்களையுடையது. உயிர் களைக் காக்கக் கருதி, அருள் காரணத்தால் தோன்றிய அவன் திருவடிவம், மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்கள் (வழிகள்) எனும் பகுதிகளின் தொகுப்பாகும்.

"மந்திரமே சோரியாவான்
பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே
தொக்காகப்-பந்தனையால்

பாதகத்துக்குப் பரிசு

[வித்துவான் திரு. மு. சங்கரலிங்கம் அவர்கள்,
தமிழாசிரியர், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, விழுப்புரம்.]

உலகில் செயற்கரிய செயல் செய்தவர்க்குப் பரிசளிப்பதுண்டு. தன்னலம் கருதாமல் பிறர் நலம் பேணும் பெற்றியுடையாருக்கும் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று பொதுத் தொண்டாற்றும் பெரியோர்கட்கும் பரிசளிப்பதுண்டு. பெருங் கொலைபுரிந்து அகப்படாமல் தலைமறைவாக இருக்கும் கொலைஞனைப் பிடித்துத் தருவோருக்கு அரசாங்கம் பரிளிப்பதுமுண்டு. ஆனால் ஏதுமறியா ஒருவனைக்கொலை செய்து விட்டால் அதற்குப் பரிசளிக்க வேண்டுமென எவரே கூற வல்லவர்? ஆயின் உடலிலுள்ள உறுப்புகளை வெட்டி வீழ்த்திவிடின் அவரைப் பாராட்டுபவரும் உண்டுகொல்? அவரை ஊரார், உறவினர், அரசினர் வாளா விடு

ஒத்த புவனத்
துருவே உரோமமாத்
தத்துவங்களே சத்த
தாதுவா - வைத்த
கலையே அவயமாக்
காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமாய் நின்றோய்"

—கந்தர் கலிவெண்பா.

இறைவன் பல காலத்தில், பல இடங்களில், பல அன்பர்கட்குப் பலவகைப் பேறுகளை அளிப்பதற்கென்றே கொண்ட திருவுருவங்களுள் முருகன் திருவுருவும் ஒன்று. ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன். தனக்குத்தானே மகனாகிய தத்துவன். அவன் பரனோடு பேதகமல்லன். மாற்றம் மனங்கழிய எங்கும் நீக்கமற நின்று, எல்லாவற்றையும் தன் அகத்தே தாங்குவதால் பிரமம் எனப்படுகிறான். இந்த நிலை யோகிகட்குப் புருவ மத்தியில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மேல் தேவ அங்குஷ்ட பிரமாணத்தில் சோதியாகக் காட்சியளிக்கும். அந்த சோதியே இவ்வுலகம் உய்ய விசித்திர உருக்கொண்டு குழந்தை வடிவில் வரும்.

"அருவமும்உருவுமாகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய

(—உற்பத்-திருஅவ. 22)

இந்த நுண் பொருளை உறுதிப்படுத்த முருகன் திரு அவதாரம் இலக்கியமாயிற்று. மனவாசகம் கடந்தவன் பரசிவத்தின் புருவ மத்தியில் அழற் கண்ணினின்றும் சோதியாகத் தோன்றி, நிலம், நீர், தீ வளி, வான் ஆகிய ஐம்பொருள் உறவு கொண்டு, சரவணப் பொய்கையில், தாமரை மலர்மேல் ஆறுமுகம் பன்னிரண்டு கைகளும் கொண்டு முருகனாகத் திரு அவதாரம் செய்தான் என்பது புராண வரலாறு.

"மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டுமாகி
நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த்தோன்றி
அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்
போதில் வீற்றிருந்தருளினனே"

(—உற்பத்-திருஅவ-96)

(பேரூர் சத்வித்யா சன்மார்க்க சங்க ஆண்டு நிறைவு விழாவில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பு.)

வார்களா? உடன் நடவடிக்கை அன்றோ எடுப்பர்? நடவடிக்கை முடிவில் குற்ற மறிந்து அதற்கேற்ப நீதி வழியே பரிசும் வழங்குவர். ஆனல் அப்பரிசு யாது? கடுந் தண்டனையாகச் சில ஆண்டுகள், ஆயுள் தண்டனை என்பவைகளே என்ருல் வியப்பில்லை யன்றோ?

இஃதிவ்வாறிருக்க ஈன்ற தந்தை, அறியாமையால் சின மிகுதிகொண்டு 'இன்னது செய்தல் தகாது' என்று செய்த செயலுக்காக, அவருடைய கால் களை வெட்டி வீழ்த்தினன் அவன் மைந் தன் என்ருல் அஃது எவ்வளவு பாதகமான செயலாகும்? அச்செயலையும் பிறர் நன் றென்றுரைப்பதுண்டோ? உரைப்பினும் அச் செயலைச் சிறப்பென்றறிந்து ஒருவன் அவனைப் பாராட்டிப் பரிசில் அளித்தான் என்ருல் அஃது அதனினும் பாதகமான தாக அன்றோ இருக்கிறது? அப்பரிசும் எளிய பரிசாக இல்லையே? பல பிறவிகள் எடுத்து அருந்தவம் செய்து முயன்றாலும் கிடைத்தற்கரிய பதவியைப் பரிசாகக் கொடுத்தான் என்ரல் எப்படி இருக்கிறது? அதுவும் கொடுத்தவன் எளிய மனிதன் அல்லன். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகிய சிவபெருமான் என்ருல் அஃது விந்தையாக அன்றோ இருக்கிறது? இத் தகைய பரிசு பெற்றவன் யார்? அவன் செய்த பாதகமான செயல் என்ன? என் பன வெல்லாம் அறிய வேண்டாவா? இனி அது பற்றிக் காண்போம்:-

திருமிகு சேய்ஞலூரில் எச்சதத்தன் என்பாருக்குத் திருமகனுகத் தோன்றிய விசாரசருமருக்கு, இளமையிலேயே "முந்தை அறிவின் தொடர்ச்சியினல் முகைக்கு மலரின் வாசம் போல்" என்ருங்கு முற்பிறப்பில் வேதாகமங்களைப் பயின்று பெற்ற அறிவு, கல்வி பயிலத் தொடங்கிய வுடன் பெரிதும் விளங்கலாயிற்று.

ஒருநாள் கோவலனெருவன் பசுவை ஒறுத்தி வருத்திய செயலறிந்த இவர் உள்ள மிக வருந்தினர். பசுக் குலத்தின் பெருமை முற்றுமுணர்ந்த இவர் "கன்று பயில் ஆன்நிரைகாக்கும் இதன்மேல் இல்லை; கடனிதுவே! மன்றுள் ஆடும் சேவ டிகள் வழுத்து நெறியாவதும் என்று..." எண்ணி அன்று முதல் 'ஆன்நிரை மேய்க் கும் பணியை மேற்கொள்வாராயினர் பசுக்கள் நலம் பெற்றன. பால் வள மோங்கியது. ஊரினர் உவந்தனர்.

மண்ணியாற்றங்கரை யடைந்த பசுக் கள், தம் தலைவனை விசாரசருமரைக்கண்டு அவர் பக்கம் சென்று உருகித் தாமாகவே மடி சுரந்து பாலைக்கரவாமற் பொழிந்தன. அதைக் கண்ட அவர் மனம் செம்மை யுற்றது. சிவனர் பூசனையைப் புரியும் வேட்கை விரைந்தெழுந்தது, அவ்வாற் றங் கரையிலே விளையாட்டாக "ஆத்தி யின் கீழ், செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும், துங்க நீடும் கோபுரமும் சுற்றுலயமும் வகுத் தமைத்தார்." நன்மலர் பலவும் கொணர்ந் தார். மஞ்சனம் ஆட்ட பசுக்களின் மடி யைத் தொட்டார். அவைகளனைத்தும் குடங்கள் நிறையப் பாலைப் பொழிந்தன. அன்பாற் பெற்ற ஆன்பாலை இறைவ னுக்கு ஆட்டினன். முன்னைத் தொடர் பால் இவ்வாறு பல நாளும் சிறந்த பூசை செய்தனர். பூசைக்குப் பால் உதவிய போதிலும் வீட்டிலும் குறைவறப் பசுக்கள் பால் சுரந்தன என்க.

இவ்வரும் செயலின் சிறப்பறியாத அயலான் ஒருவன், ஊராரிடம் சென்று விசாரசருமன் பாலைக் கறந்து மணலில் ஊற்றி வீணுக்குவதாக அலர்மொழி எழுப் பினன். இதையறிந்த எச்சதத்தன் உண்மையறியும் பொருட்டு விசாரசருமர் ஆன்நிரை மேய்க்கச் சென்ற பின்பு அவர றியாதவாறு தந்தை மறைவாகச் சென்று ஒளிந்திருந்து நிகழ் செயலைக் கவனிக்க லானன். விசாரசருமர் வழக்கம் போல மணலால் கோயில், சிவலிங்கம் முதலியன அமைத்து வழிபடலானர். பாற்குட மெடுத்து இறைவன் முடியில் அபிடேகம் செய்வதைக் கண்ணுற்று எச்சதத்தன் சினந்தான், ஓடினன். கைப்பிரம்பினல் அவர் முதுகில் ஓங்கி அடித்தான். கடு மொழி பேசினன். அவரது உள்ளம் இறையருளிற் கலந்து நின்றதால் அடி, பேச்சு முதலியவற்றை அவர் உணர்ந் திலர். இதையறிந்த எச்சதத்தன், தன் காலால் எஞ்சியிருந்த பாற்குடங்களை இடறினன். கண்ணுற்ற விசாரசருமர் ஆற்ருெணுச் சினம் கொண்டார். இடறிய

திருஞானசம்பந்த மூர்த்திகள் அருளிய சிவபுரத் தேவாரம்

[திரு. ச. ப. மாணிக்கவாசகம் அவர்கள், பேரூர்.]

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தர் வரலாறு கூறு முகத்தில்,

"வேதநெறிதழைத் தோங்கமிகு
சைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய்
மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான
சம்பந்தர்
பாத மலர்தலைக் கொண்டு திருத்
தொண்டு பரவுவாம்"

என வாழ்த்திப் பின் தன் மனத்தின் கண் அவர் தம் திருவுருவை எழுதிப் பார்த்து இன்புற்று "யாம் பெற்ற இன்பம் பெருக யிவ்வையகம்" என்பதற்கேற்ப ஆன்மாக்

வர் யார் எனக் கண்டார். தன் தந்தையே அவ்வாறு செய்தவர் என்றுணர்ந்தார். சிவ அபராதம் செய்தவன் தந்தை என்ருலும் செய்தது தவறு எனக் கொண்ட அவர், அருகிலிருந்த கோலை எடுத்தார். அக்கோல் அவருக்கு மழுவாக மாறியது. பாற்குடங்களை இடருவதற்குத் துணை புரிந்த இரு கால்களையும் துணித்து வீழ்த்தினர். மறையோனும் மண்மிசை வீழ்ந்திறந்தான். பின் விசாரசருமர் முட்டின்றிப் பூசையை முன்போல் செய்து முடித்தார்.

"நேசம் நிறைந்த வுள்ளத்தால் நீலம் நிறைந்த மணி கண்டத்து, ஈசன் அன்பால்" பாசமற்றுப் புரிந்த பூசையின் சிறப்பறிந்த சிவபெருமான், உமையம்மை, பூதர், தேவர் புடைசூழக் காட்சி யீந்தனர். அவரைத் தம் திருக்கரத்தால் எடுத்து "நம்பொருட்டால் ஈன்றதாதை விழஎறிந்தாய்! அடுத்த தாதை இனி உனக்கு நாம்" என்றும், "உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவும் உனக்காச்சண்டீசனுமாம் பதம்தந்தோம்" என்றும் கூறியருளித்தம் சடை முடியிலிருந்த கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினர். தேவர்கள் பூமாரி பெய்து வாழ்த்தினர்.

அன்று முதல் விசாரசருமர் தாம் கொண்ட அன்பால் மானிட உடலோடு சிவபெருமானுக்குரிய திருமகனராக ஆயினர். சிவபெருமானிடத்து அன்புகொண்ட அடியார்கள் செய்யும் தவறு, தவருகக் கருதப்பட மாட்டாது. அது தவமேயாகும். இம் முறையில் விசாரசருமர் பாதகம் செய்து உலகம் போற்றத்தக்க பொற்கோயில், போனகம், மணி முடித்தாமம், சண்டேசப்பதவி, தொண்டர்கட்கெல்லாம் தலைவன் ஆகிய இப்பரிசுகளைப் பெற்ருர். அவ்வாறு உதவிய சிவபெருமானை வாழ்த்திப் பல்லாண்டு கூறுகின்ற நிலையில் சேந்தனர் என்ற தெய்வத்திருமகனர் பாடுகின்ருர். அவர் பாடிய பாடல் 10-ம் திருமுறையாகிய திருப்பல்லாண்டு என்ற பகுதியில் உள்ளது. பாதகத்துக்குப் பரிசு வழங்கிய அப்பெருமான் அருட்சிறப்பை அழகுறப் பாடியுள்ளார். பெரும் பாதகத்துக்குப் பரிசு வழங்கிய பரமன், சிறுபிழை புரியினும் நமக்கருள்வதுறுதியன்ரே? அத்தகைய மெய்யன்பு அவனருளாற்ருனே எய்தும்? அவர் பாடிய பாடல் இதோ பாருங்கள்.

"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
அண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."

(திருப்பல்லாண்டு 10)

ளாகிய நாமெல்லாம் அன்னவர் பெற்ற அனுபவத்தைத் துய்த்து இன்புறும் வண்ணம்.

“ஞானத்தின் திருவுருவை நான்
மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்
வளர்மதிக் கொழுந்தைத்
தேனக்கமலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்
குளிப்பக் கண்டார்கள்”

எனத் தியான வடிவில் வழிபட்டுப் புராண நிறைவில் “அருந்தமிழாகரர் சரிதை அடியேனுக்கு அவர்பாதம் தரும் பரிசால் அறிந்தபடி துதிசெய்தேன்” என, நெஞ்சம் உருகிப் புராணம் முழுமையும் தோத்திர வடிவில் நிறைவாக்கு மாற்றால் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் திருஞான சம்பந்தர் பால் வைத்த அன்பு அங்கை நெல்லிக் கனி போல் விளங்குவதைக் காணலாம்.

ஞானசம்பந்தப் பெருமான் இப்பூ உலகின்கண் திரு அவதாரம் செய்து செயற்கருஞ்செய்கை செய்துள்ளார் என்பது அவர் தம் வரலாற்றைப் படிக்கும் அன்பர்களுக்கு இனிது விளங்கும்.

பசு போதம் நீங்கிப்பதிபோதம் அடைந்த சிவஞானிகட்கு இறைவன் தாம் புரியும், ஐந்தொழில் தன்மையை நல்குவார் என்பது சைவசித்தாந்த சாத்திரக் கருத்து. சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கின் ஒன்றாகிய திருக்களிற்றுப் படியாரில்,

“ஓடஞ் சிவிகையுலவாக்கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலை நெய்தல்
ஏடெதிர் வெப்
பென்புக்குயிர் கொடுத்தலீங்கிவைதா
மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.”

என்று கூறுமாற்றால் இனிது விளங்கும்.

இனி இக் கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட பதிகத்தின் திருத்தலமாகிய திருச்சிவபுரம் சோழ நாட்டுப் பாடல் பெற்ற திருப்பதிகளில் ஒன்று, சண்பக வனம் எனவும் பெயர் பெறும். கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 3 கல் தொலைவில் தென்கிழக்கே யுள்ளது. திருமால் வெள்ளைப் பன்றியின் வடிவாய் வழிபட்ட தலம். திருஞான சம்பந்தர் திரு அரிசிற்கரை புத்தூரில் இருக்கின்ற காலத்தில் திருச்சிவபுரத்திற்கு எழுந்தருளி இறைவனை வழிபட்டுப் பாடிய பதிகங்களில் ஒன்று, இப்பதிகத் திருப்பாசுரம் பதினொன்றிலும் முதற்றிருப் பாசுரத்தில் இறைவனே சிருட்டித் தொழில் இடையறாது நிகழ்த்தத் திருவுளங் கொள்ளுகின்றார். அத்தொழிலைச் செய்யும் நான்முகன் அந்தப் பாவனையில் இருந்து சிருட்டிக்கின்றான் என்றும், இரண்டாம் திருப்பாசுரத்தில், எல்லா உலகங்களும் தத்தம் கால எல்லைவரை நிலைபெறும்படி திருவுள்ளக் குறிப்போடு பாற்கடல் மேல் பள்ளிகொள்ளும், திருமால் உருவினில் நின்று காத்தல் தொழில் செய்கின்றார் என்றும், மூன்றாம் திருப்பாசுரத்தில் உலகங்கள் முழுமையும் உருத்தெரியாமல் இல்லையாம் வண்ணம் அழிக்கும்படி உருத்திரனாக நின்று, அழித்தற்றொழிலைச் செய்கின்றார் என்றும், படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்பவர் இறைவனே என்ற கருத்தை இம்மூன்று திருப்பாசுரங்களில் அருளினார்.

சைவசித்தாந்த சாத்திரத்தில் கூறிய நாற்பாதங்கள்.

“தரையினாலயம் வலமுதல் திருப்பணி
சரியை
கிரிசனெம்பிரானருச்சனை புரிவது
கிரியை
யொருமை யுள்ளுறத்தியானமுற்
றிருபது யோகம்
பொருவிலானுடனிரண்டறக்
கலப்பது போதம்.”

என்றும் திருக்குற்றாலத் தல புராணம், வேடன் வலம் வந்த சருக்கம் முதற் செய்யுள் கூறியபடி சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளின் நின்று வழிபடும் அன்பர்கட்கு இறைவன் சாலோக, சாரூப, சாமிப்ய, சாயுட்சய பதவிகளை

கேடில் விழுச் செல்வம் கல்வி

(திரு. க. சண்முக சுந்தரம், தலைமை ஆசிரியர்,
தவத்திரு, சாந்தலிங்க அடிகளார் உயர்நிலைப்பள்ளி, பேரூர்.)

நுண்ணிய ஆல விதை மிகப் பெரிய மரத்தின் தன்மைகளை யெல்லாம் உள்ளடக்கி, மண் வளம், நீர், பாதுகாப்பு போன்ற சூழ்நிலைகளால் வளர்ந்து காலத்தில் மிகப் பெரிய மரமாகிறது. உயிரினங்கள் அனைத்தும் மரபு நிலை முழுவதும் பெற்று சூழ்நிலையால் வளர்ந்து காலத்தால் மாறுதலடைகின்றன. மனிதனும் மிகச்சிறிய சினையில் தன் மரபு நிலை முழுவதும் கொண்டு, பல்வேறு சூழ்நிலைகளில் வளர்ந்து, பெரியவனாகிருன். உருவம் மட்டுமன்றி தன்மை, பண்பு, இயல்பூக்கங்கள் அனைத்தும் மரபிலேயே அமைந்துள்ளன. இவைகள் சூழ்நிலையால் (Environment) அவனது உள்ளத்திலே வலுப்பெற்று வளர்ச்சி அடைகின்றன. மேல் நாட்டு அறிஞர் ஒருவர் ஒரு குழந்தையின் உள்ளம் எழுதப்படாத தூய்மையான கரும்பலகை போன்றது; அனுபவத்தால் எழுதப்பட்டு அக்குழந்தை அறிவு

நல்கி, அருள்பாலிப்பார் என்ற கருத்தைக் கூறத் தொடங்கி நான்காம் திருப்பாசுரத்தில், இறைவனை நறுமணம் கமழும், சந்தனக் குழம்பால் அபிடேகித்து, மொட்டரு மலர்பறித்திறைஞ்சி நல்ல தூப தீபங்கள் கொண்டு வழிபடும் அன்பர்களுக்குக் குறைவில்லாத பதமுத்தி தருவர் என்று சரியை கிரியை ஆகிய வழிகளை ஒன்றுபடுத்தி அருளினர்.

பதம் என்பது சாலோக சாரூபம் இரண்டையும் குறிக்கும்.

ஐந்தாம் திருப்பாசுரத்தில் அகப்பகை ஆறும்வென்று, ஐம்பொறி அடக்கிப் பிராண வாயுவை ஒழுங்குபடுத்தி யோக நிலையில் நிற்கும் அன்பர்களுக்கு சாரூப பதவி நல்குவர் என்றும்,

ஆரும் திருப்பாசுரத்தில், மறைகள் முதல் கலைகள் அனைத்தும் கற்றல் கேட்டலுடைய ஞானச் செல்வர்களுக்கு சாயுட்சய பதவி கொடுத்து அருள்பாலிப்பார் என்றும், ஏழாம் திருப்பாசுரத்தில் தலவரலாறு கூறுமுகத்தில், திருமால் வராக அவதாரத்தில் கொடிய உருவோடு கோபம் மிகுந்து நகங்களைப் பறித்து மதம் மிகுந்த நீளமான முகத்தில் பிறைச் சந்திரனை ஒத்த கொம்பில் பூமியைத் தாங்கி நிலைநிருத்திய ஆதிவராகமூர்த்தி வழிபட்ட சிவபுரம் என்றும், வழக்கம் போல், எட்டாம் திருப்பாசுரத்தில், இராவணனுக்கு அருளினமையும் ஒன்பதாம் திருப்பாசுரத்தில், திருமால் அயனுக்கு அரியராம் தன்மையும், பத்தாம் திருப்பாசுரத்தில் சமண புத்தர் கொள்கைகளை மறுத்தும் பதிகத்தை முற்றுவித்துப் பதினென்ரும் திருப்பாசுரமாகிய திருக் கடைக் காப்பில் பத்துப் பாசுரங்களில் கூறிய பயன்கள் அனைத்தையும், ஒருங்கு தொகுத்துக் குலம், நிலம், நிறைதிரு, உரு, சயமகள், புகழ், புவி, அடிமையாகிய இவற்றைச் சிறப்புடையனவாக அடைவர். எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இப்பதிகத்திற்குறிய சிறப்பியல்பு மேற்கூறிய கருத்துகளைக் குற்றெழுத்தமைந்த மொழிகளாலேயே தொடுத்து உரிய சொற்கள் உரிய இடங்களில் அமையக் கூறியிருப்பது மிகவும் பாராட்டற்குரியது. திருஞான சம்பந்தப் பெருமாஞர் தம்மைத் தமிழ் விரகன் என்று திருக்கடைக்காப்பில் அருளினமையும் இது பற்றிப் போலும்.

இதுவரை கூறிவந்த வற்ருல் சிவபுரம் பதிகத்தின் அருமை பெருமை ஒருவாறு விளங்குகிறது. அடியேன் கூறிய இவற்றில் பிழைகள் இருப்பின் செந்தமிழ்ச் சைவ உலகம் மன்னிப்பதாகுக.

பெறுகிறது என்று கூறுகிருர். இது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

மனிதன் மரபிலேயே அனைத்தும் பெற்றுள்ளான் என்பது அறிஞர் பலரின் முடிவு. சூழ்நிலையால் அத்தன்மைகளும், பண்புகளும், இயல்பூக்கங்களும், தூண்டப்பட்டும் வளர்க்கப்பட்டும், தடுக்கப்பட்டும் பல்வேறு நிலைகளில் இன்பமும், துன்பமும் அதனதன் நிலைக்கேற்ப பெற்று, உறுப்பெற்று, வலுப்பெற்று அடிமனம் என்ற நிலையை அடைகிறது. ஒரு பனிக்கட்டி நீரில் மிதக்கும் போது அதன் ஒரு சிறு பகுதியே நீர்ப் பரப்பிற்கு மேல் தெரியும். மிகப் பெரும் பகுதி நீர்ப்பரப்பிற்கும் கீழேயே ஆழ்ந்திருக்கும். நீரோட்டம் ஏற்படும் பொழுது ஆழ்ந்திருக்கும் பகுதியின் அசைவிற்கேற்றபடியே சிறு பகுதியான மேற் பகுதியும் அசையும். இது போன்றுதான் நமது அடிமனத்தின் (Sub Conscious Mind) அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சித் தொகுப்பின் இயக்கத்திற்கேற்ப மேல் மனம் இயங்குகிறது. இந்நுண்ணிய மனவளர்ச்சி, சூழ்நிலைக்கேற்ப (Environment) உடல் வளர்ச்சியோடு இணைந்து இளம் பருவத்திலேயே உருவாகி வாழ்நாள் முழுவதும் ஒருவனை இயக்குகிறது.

எனவே மனிதன் இயற்கையிலேயே எல்லாத் தன்மைகளையும், பண்புகளையும், இயல்பூக்கங்களையும் கொண்டவனுக பூரணத்துவம் உடையவனுக இருக்கிருன். இம்முழு நிலையில் நுண்ணியதாயுள்ள நல்ல தன்மைகளையும், பண்புகளையும், இயல்பூக்கங்களையும் வெளிக்கொணர்ந்து, கட்டுப்படுத்தி, வளர்த்துப் பெருநிலையை அடைவதே கல்வி என்று கூறுகிருர் சுவாமி விவேகானந்தர். (Education is the manifestation of the perfection already in man)

மரபு நிலைக்கு உரிய இடம் இருப்பினும் ஒருவனை உயர்ந்த சிறந்த மனிதனுக்குவது சூழ்நிலையே என்பது தெளிவு. மிகப் பெரும்பாலோர் சராசரி நுண்ணறிவு உடையவர்களே. நல்ல சூழ்நிலை, வறுமையின்மை, மன அமைதி, வாய்ப்பு, வழிகாட்டி, தூண்டுகோல் இவைகள் இருப்பின் எல்லோரும் சிறந்த அறிவாளிகளாக உயர்ந்த குடிமக்களாகத் திகழ முடியும்.

இதைத்தான் பாரதி கூறினுர்—

வெள்ளத்தின் பெருக்கைப் போல்
[கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்
[குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

மனிதனுக்கு மனிதன் உளப் பாகுபாடு, உடலமைப்பு, திறமை, பொது அறிவு, நுண்ணறிவு, பழக்க வழக்கங்கள் ஆளுமை, நடத்தை போன்றவைகளில் வேறுபட்டிருந்தாலும், அவ்வேறுபாடு மிகப் பெரியது அன்று. ஆழ்கடலில் விலை மதிப்பற்ற முத்துக்கள் தோன்றிப் பயனற்று அழிகின்றன. பாலை வனங்களிலும், மிக பெருங் காடுகளிலும் பெரும் பூக்கள் நறுமணம் பரப்பி நுகர்வாரற்று அழிந்து போகின்றன. இவை போன்றே கிராமப் புறங்களில் ஏழைக் குடும்பங்களில் மிகப் பெரும் அறிஞர்கள், அரசியல், தத்துவ மேதைகள் புகழ்பெருத, மில்டன்கள், ஷேக்ஸ்பியர்கள், இளங்கோக்கள் கம்பர்கள், தோன்றி வாழ்க்கையில் நல்ல சூழ்நிலையும், வாய்ப்புமில்லாமல் அமைதியாக வாழ்ந்து புகழின்றி மடிந்து போகிருர்கள், என்று கூறுகிருர், "தாமஸ்கிரே" "Thomas gray) என்ற ஆங்கிலக் கவிஞர் தன்னுடைய "கிராமப்புறக் கல்லறையிலே எழுதப்பட்ட இரங்கற்பா" என்னும் கவிதையிலே.

கல்வி என்ருல் என்ன? இது தான் கல்வி என்று யாரும் வரையறுக்க இயலாது. வாழ்க்கையே கல்வி என்று விரிந்து போகின்றது. பிளேடோ, அரிஸ்டாட்டில், லாக், கான்ட், ஹெர்பர்ட், ஹெர்பர்ட் ஸ்பென்சர், பெஸ்டலாசி, மாண்டிசோரி, ஜான்டுயி, காரல் மார்க்ஸ், திருவள்ளுவர், விவேகானந்தர், காந்தி போன்ற கல்விச் சிந்தனையாளர்கள் அனைவருமே கல்வியின் நோக்கங்களையே விரித்து செல்கின்றனர். கல்வி ஒருவனை நல்குடி மகனுக ஆக்கவேண்டும்; அவனுக்குத் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் திறனையும், தன்னம்பிக்கையும் தருதல் வேண்டும்; வாழ்க்கைக்கும் வருவாய் உடையதாக இருத்தல் வேண்டும்; அறிவு

வளர்ச்சி பெற்று, ஒழுக்கமும், நற்குணங்களும் வளர்ந்து, நன்நெறியில் வாழத் துணை செய்ய வேண்டும்; தன்னை உணர்ந்து, முழு முதற் பொருள் — இறைவனை அறியத் துணை செய்தல் வேண்டும். இவ்வாறு கல்வியின் நோக்கங்கள் விரிவதைக் காண்கிறோம்.

உயர்ந்த கல்விச் சிந்தனையாளர்கள் பலர் தோன்றி யிருப்பினும், அவர்களுடைய குறிக்கோள்களுக்கேற்ப உயர்ந்த சமுதாயம் அமையாதிருப்பது, நம்மிடையே உள்ள ஏதோ குறைபாட்டையே காட்டுகிறது. தாய் மொழிக்கு முதலிடம் அமைத்துப் பயிற்சி மொழியாகத் திருத்தல், வறுமை நீக்கப்பெற்று ஒவ்வொருவரும் போதிய வசதியுடன் வாழ்தல், ஆங்கில இலக்கியத்திற்கே அதிக முக்கியத்துவம் தராது தாய்மொழிப் பயிற்சிக்கு இடமளித்தல், விஞ்ஞான ஆய்வு வசதி பெருக்குதல்; கல்வியில் தனிப்பட்டோர் செல்வாக்கினைக் குறைத்து அரசு அதிகமாகத் தலையிடாமல் சுயமாக சிந்திக்க வாய்ப்பளித்தல்; அரசியல் கட்சிகள், சினிமா, செய்தித் தாள்கள், ஆபாச நூற்கள் இவைகளைக் கட்டுப்படுத்தல்; ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியமளித்து, சமுதாயத்தில் உயர்ந்த மதிப்புடன் வாழவும்; அரசியலாரும் மக்களும் ஆசிரியர்களின் பணியை உணரவும் வகை செய்தல் கல்வித் திட்டம்; தேர்வு முறை மாறுதலடைந்து புதிய அமைப்பை உருவாக்குதல்; ஆன்மீக உணர்வு, ஒழுக்கம், உயர்ந்த லட்சியம் இவைகளைக் கொண்ட ஆசிரியர்களுக்கு வாய்ப்பளித்தல்; சுயமாக முன்னேறுபவர்களுக்கு ஊக்கமும், சூழ்நிலையும் அமைத்தல், இந்திய நாடு முழுவதற்குமுள்ள பொது மொழிப் பிரச்சனையை போதனு மொழியுடன் இணைத்து சிக்கல் ஏற்படுத்தாதிருத்தல், கல்வி, சமய, தத்துவ, அறிவியல், அறிஞர்கள் எழுதிய நூற்களுக்கும் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் எழுதிய நூற்களுக்கும், முதலிடம் அளித்தல், ஆகிய இவைபோன்ற பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும்.

மொழியே நாகரீகத்தின் உயிர். மொழியின் தோற்றம், மொழியின் வளர்ச்சி, நாகரீகத்தின் வளர்ச்சி. மொழியின் வீழ்ச்சி, நாகரீகத்தின் வீழ்ச்சி, சுருங்கச் சொல்லின் மொழியின்றேல் நாகரீகம் இல்லை. சமுதாயம் இல்லை.

"...... நன்மையும் அறிவும்
எத்திசைத் தெனினும் யாவரே [காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்ச மொன்றில்லை......"

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு [சேர்ப்பீர்"

பாரதியார்.

———

வைராக்கிய சதகம்

ஏனை நூல்பல வோதினை யோதவற்றிறையரு ளடையாதார்க்
கூனவெம்பவ மொழிப்பதற் குள்ளமேவுபாயம்வே றிலையானல்
ஆனையீருரி போர்த்தவென் றம்பிரானருள்விரைந் தடையாதே
தானி நாண்மினுர் போகநீ வியந்தது தப்பலாற் சதுரன்றே.

ஆல நீழலி லன்றொரு நால்வருக் கருநெறி யுரைத்தானைக்
கால காலனைச் சிவப்பிரகாச வென் கண்மணிதனை யுன்னு
தேலவார் குழலார் மயல் கொண்டுநீ யிங்குழலுவ தெல்லாஞ்
சாலவே பிழை யாகுநெஞ்சே சொனேன் றவறிலையென் மேலே.

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார்.

பெண்மையும் புலமையும்

[திரு. ப. கிருட்டிணசாமி, பள்ளபாளையம்,
சாந்தலிங்கர் உயர்தொடக்கப்பள்ளி, முன்னாள் தலைமையாசிரியர்.]

புலமை என்பது அறிவுடைமையால் சிறக்கும் பண்பாகும். கல்வி என்பது அறிவுடைமையை வெளிப்படுத்தும் கருவியாகும். இத்தகைய நிலையையே பண்டை மக்கள் முதல் இன்றைய மக்கள் வரை மதித்தும் போற்றியும் வருகின்றனர். வாழ்க்கையைச் சீராக நடத்துவதற்கும் பெருமையுடன் வாழ்வதற்கும் புலமை இன்றியமையாதது. கல்வி கற்ற சான்றோர், கல்லாதவர்களை வெறுத்து ஒதுக்கினர். வள்ளுவப் பெருந்தகையார்,

"விலங்கொடு மக்களனையார்
[இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்"

எனப் புலமையின் சிறப்பை வலியுறுத்தியுள்ளார். குமரகுருபரர் சிற்றுயிர்க்குற்ற துணை என்றும் நாற்பொருள் பயனைத் தரவல்லது என்றும் நல்லோரிடையே புகழ் பரப்பும் எனவும் எடுத்தியம்புகிறார். கல்வியறிவு இல்லாதார் நற்கருத்துக்களை எடுத்தியம்பினாலும், அறிவுடைய பெரியோர்கள் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கற்றறிவுடைய மக்கள் எனக் கூறப்படுவது ஆடவர் பெண்டிர் ஆகிய இரு பாலாரையும் சேர்த்தே குறிப்பதாகும். தமிழ் வேந்தர்கள் புலமை வாய்ந்த ஆண்பால் புலவர்களோடு பெண்பால் புலவர்களையும் போற்றி ஆதரித்துத் தமிழை வளர்த்து வந்தார்கள். 'நச்செள்ளையார்' சொற்சுவை பொருட் சுவை மிளிர்ந்த பாக்கள் இயற்றிச் சேர மன்னனைப் புகழ்ந்து பாடி ஒன்பது துலாம் பொன்னும் ஆயிரம் பொற்காசுகளும் பெற்றார். அதோடு அரசன் அருகே வீற்றிருக்கும் பெருமையும் தகுதியும் பெற்றார்.

ஔவையார் என்னும் புலவர் பெண்மணி தன் புலமை காட்டி அதியமான் வள்ளலிடம் "அருநெல்லிக்கனி பெற்று உண்டு நீண்ட காலம் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றினார். அரசர்க்குரிய அறிவுரை நூற்களும் மக்கட்கேற்ற அறிவுரைப் பாக்களும் எழுதி இறவாப் புகழ் பெற்றார். குழந்தை முதல் வயது அடைந்தோர் வரை, இப்பெண்பாற் புலவர், படித்துப் பயன்பெறும் வண்ணம் எழுதியிருக்கும் புலமை பாராட்டத்தக்கது. இவர் போன்றே நச்செள்ளையார், ஆதிமந்தியார், பொன் முடியார், வெண்ணிக் குயத்தியார், முடத்தாமக்கண்ணியார் போன்றோர் சங்க காலத்தில் புலமை மிக்கோராக விளங்கினர். அவர்கள் யாத்த போற்றற்கரிய பாக்கள் பதிற்றுப் பத்து, ஐங்குறு நூறு, நற்றிணை, அகநானூறு, புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் மிளிரா நிற்கின்றன.

பண்டைச் சோழப் பெரு வேந்தனை கரிகால் பெருவளத்தான் மகளாகத் தோன்றிய ஆதிமந்தி என்னும் பெண்பாற் புலவர், ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் காவலராக விளங்கியதோடு சிறந்த பாவலராகவும் விளங்கியது போல், அரச குடியில் பிறந்திருந்தும் உயர் கல்வியிலும் பாவியற்றும் புலமையிலும் சிறந்திருந்தனள்.

இடைக்காலத்தில் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியார், பரவை நாச்சியார். சங்கிலி நாச்சியார், ஆண்டாள் போன்ற பெண்மணிகள், சிறந்த புலமை உடையராய்ச் சமயச் செந்நெறியின் நின்று மக்களால் போற்றப்பட்டனர். பாவலராக விளங்கிய பெண்மணிகள், இராணி மங்கம்மாள், சான்சி இராணி, சாந்த் பீபி போன்றோர் அறம் நாட்டும் காவலராகவும் விளங்கினர்.

கண்ணகி, மாதவி, மணிமேகலை. கோப்பெருந்தேவி, ஆதிரை போன்றோர் பெண்மைக்கே இன்றியமையாதனவான தம் உயிரினும் உயரிய கற்புக் கடம் பூண்டு சான்றோர் போற்றுமாறு வாழ்ந்தனர். பெண் தன்மை மென்தன்மை வாய்ந்தது

'க'வின் பெருமை

[திரு. கோ. வெ. நாராயணுச்சார், தலைமையாசிரியர்
சா. அ. அ. உ. தொடக்கப்பள்ளி, பேரூர்.]

கலியுகம் இது. என்னால் தான் தொடங்கப்படுகிறது. கடையிலும் நான் தான் இருப்பேன். கடவுள். நானில்லை என்றால் கடவுளெங்கே? கரிமுகன் முதல் கமலாசனன், கண்ணன். கபாலி முதலிய ஆண் தெய்வங்களும், கலைமகள், கார்த்தி யாயினி, காமாட்சி முதலிய பெண் தெய் வங்களும் என்னால்தான் பெருமையடை கிறார்கள்.

புண்ணியத் தலங்களாகிய காஞ்சி, காசி, காளாத்தி, குருவாயூர் இவைகளில் நான் இருக்கிறேன். புண்ணிய நதிகளா கிய கங்கை, கபினி, காவேரி, கிருஷ்ணு, கோதாவரி முதலிய நதிகளிலும் நானிருக் கிறேன். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற புகழ் கம்ப நாட்டாருக்கு என்னால்தான் கிடைக்கிறது. கண்ணப்ப நாயனாரில் இருக்கிறேன்; கவி காளிதா சனில் இருக்கிறேனே. தேசத்தின் தந்தை காந்தியடிகளும் பெரும்பான்மைக் கட்சி யாகிய காங்கிரசும், அதன் தலைவர் காமரா சரும் நானிருப்பதால்தான் புகழ் பெற் றனர். உலகத் தலைவர்ளாகக் கருதப்பட்ட கென்னடி, குருச்சேவ் இவர்கள் யாரால் ஏற்றமடைந்தனர்? என்னால் தான். கண் ணகிக்கு 'கற்புக்கரசி கண்ணகி' என்னும் புகழ் நான் இருப்பதால்தான் வந்தது. முக்காலத்துக்கும் பொருந்தும் குறளிலி ருக்கின்றேன். 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றியற் றிய வள்ளுவர் என் பெருமையை எவ்வ ளவு நன்ருக அறிந்திருந்தார் பாருங்கள்; காட்டுப் பிராணி கரடியிலிருக்கிறேன்; அதிசய மிருகம் கங்காருவிலிருக்கிறேன். கடலிலும், அதன் மேல் செல்லும் கப்ப லிலும் இருக்கிறேன். உயிர் வாழ்வதற்கு முக்கியமான காற்றிலிருக்கிறேன். மழை யைக் கொண்டுவரும் கார்மேகத்திலிருக் கிறேன். ஐம்பொறிகளாகிய கண், காது, மூக்கு, நாக்கு இவைகள் என்னால்தான் இயங்குகின்றன.

கலஹரி பாலைவனத்திலும், வைரம் கிடைக்கும் கிம்பர்லியிலும் தங்கம் கிடைக் கோலாரிலும் நான்தானிருக்கிறேன். இராமாயணம் எழுதிய வால்மீகி, கபிலர், கஸ்யபர், கௌசிகர், கௌதமர் முதலிய முனிவர்கள் என்னால் தான் பெருமை யடைகின்றார்கள். இசையுலகிலும் நான் இருக்கிறேன். முதல் ராகமாகிய கனகாங்கி என்னால் தான் தொடங்கப்படுகிறது. கல்யாணி, கரகரப்பிரியா, காம்போதி, குந் தலவள்ளி முதலிய ராகங்கள் என்னைக் கொண்டுதான் பெருமையடைகின்றன. முதலாக வானவெளிக் கப்பலில் பிரயா ணம்செய்த ககாரின் என்னால்தான் வெற்றி கண்டார். புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் கலா சாலையிலிருக்கிறேன். ஆங்கிலத்தில் காலேஜ் என்பதைத் தமிழில் கல்லூரி என்றே ஏன் சொல்கிறார்கள். என் பெரு மையை அறிந்துதான்.

குமரி முனையிலிருந்து கயிலாய மலை வரையிலும் கேப்டவுனிலிருந்து கைரோ வரையிலும் நான்தான். உலகம் நானில் லையேல் உலகமாகுமா? யோசியுங்கள், கொசுவிலிருந்து கேசவன் வரையிலும் குப்பையிலிருந்து கபாலி வரையிலும் என் பிரபாவம்தான்.

இந்தக் கட்டுரையைக் கடைசிவரை பொறுமையுடன் படித்தவர்களுக்குக் கண் டிப்பாக யாதொரு குறையும் இல்லாது கடவுள் காப்பாற்றுவாராக.

எனப் புலவர் பெருமக்களால் போற்றப் பட்டது. ஓவியர் கூட தாம் எண்ணிய உயர் கருத்துக்களைப் பெண்ணுருவாயிலா கவே வரைந்து இன்புற்று வெளிப்படுத் தினர். தமிழ்த் தென்றல் மகளிரைப் பற்றிக் கூறவந்த காலை பெண்மை, தாய்மை, இறைமைப் பண்புடைய இயலு டையார் செம்மை மாதர் எனச் சிறப் பித்தார்.

நம் காலத்து மகளிர்களும் இத்தகைய நம் முன்னோர் மரபை நன்குணர்ந்து புலமையும் திண்மையும் வாய்ந்து சமயச் செந்நெறியை வளர்ப்பவராய் விளங்கு வதற்கேற்ற எல்லா வாய்ப்பையும் நாம் குறைவறச் செய்து கொடுக்க வேண்டும். அங்ஙனம் செய்தால் எதிர்காலத்தில் நல்ல சமுதாயம் அமைந்து உலகெலாம் பெண்மையும்புலமையும் ஒளிபரப்பிவாழும்.

இசைக் கலையின் சிறப்பு

[இசையாசிரியர். கு. பழனிசாமி.]

"உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற ஐயா" என்கிறார் மணிவாசகப்பெருமான். "ஓங்காரத்துள் ஒளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு" என்கிறார் அருணகிரியார். ஓங்காரத்துள் ஒலிப்பது நாதமாகும். நாதவடிவமாக இறைவன் உள்ளான் என்பது ஆன்றோர்களின் கருத்து. நாதத்தை விரித்துரைக்கும் நூலை இசை நூல் என்கிறோம். இசையை உணர்ந்தவன், நாதத்தையுணர்கிறான். நாதத்தையுணர்ந்தவன் நாதவடிவான இறைவனை உணர்கிறான்.

உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்ற, திருஞானசம்பந்தரும், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலான சிவநேசச்செல்வர்களும் தமிழ்மறையாகிய தேவாரம், திருவாசகம் போன்ற பாசுரங்களைப்பலபண்களிலே மழையெனப் பொழிந்து இறைவனைப் பாடிப்பரவசமடைந்ததும், பிறவிப்பயனடைந்ததும் இசைவழியாலேயாகும். "பாடும் பணியே பணியாய் அருள்வாய்," யெனப்பாடினார் அருணகிரியார். "நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருக" இறைவனைப்பாடும் பணி எவ்வளவு சிறப்புடைத்து என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

14-ம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர் புரந்தரர். 17-ம் நூற்றாண்டிலே வாழ்ந்து மும்மூர்த்திகளெனப்பட்ட தியாகராஜர். முத்துசாமிதீட்சதர், சாமாசாஸ்திரி போன்றவர்கள் நாதவடிவான இறைவனை நாதத்தால் வழிபட்டு இன்புலகு எய்தியவர்கள் ஆவார்கள்.

இறைவனை இசைவடிவமாகக் கொண்டு பாராட்டுகின்ற சாமவேதம் எவ்வளவு சிறந்ததோ. அவ்வாறே நாதத்தை விரித்துரைக்கும் நூலாகிய இசைநூலும் சிறப்புடையதாகும் என்றால் மிகையாகாது.

"ஸ்ருதிமாதா லயம் பிதா" யென வடமொழியில் கூறுவதுண்டு. (லயம் தாளம்) நாதவடிவமான 'அம்மையும், லயவடிவமான அப்பனும் சேர்ந்து அம்மையப்பனாகி இவ்வுலகையும், கதிரவனையும், அம்புலியையும், எண்ணற்ற கோளங்களையும், அதன்கண் உள்ள உயிரினங்களையும் ஆட்டுவிக்கின்றனர், இறைவனும் ஆடுகிறான். ஆடிக்கொண்டேயிருப்பான். சிவமும் சக்தியும் சேர்ந்தது சிவசக்தி. இசையும், தாளமும் சேர்ந்தது இசைக்கலை. நாதவடிவான இறைவி இலயவடிவான இறைவனுடன் சேர்ந்து ஆடுவது தெய்வீகம்; அதன் சக்தியிலே இயற்கை இயங்குகிறது; இசைபிறக்கிறது, ஓசை, சுரம், ராகம் என்ற வடிவிலே. மேற்கண்ட தத்துவத்திலே இசையும் உள்ளது இயற்கையும் உள்ளது.

லயம் பிசகும் போது, இயற்கையில் பூகம்பங்களும் பிரளயங்களும் ஏற்படுகின்றன. இசையிலே அதன் தன்மை கெட்டு இன்பம் கெடுகிறது. ஆகவே இசையைப் பயில்வதாவது இறைவனை உணர்வதற்கும் இயற்கையை உணர்வதற்கும் ஒரு வழிகாட்டி என்பது மட்டுமல்லாமல் இருநிலமீதில் இன்புற்று வாழவும் வகை செய்கிறது. ஆடலையும். பாடலையும் இறைவனுக்கே அர்ப்பணிக்க வேண்டும்என நமக்குப்புகட்டவே ஐயன் அம்பலக் கூத்தனாக ஆடிக்கொண்டும், அம்மை கலைமகளாக யாழேந்திய கையினளாக சதா இறைவனைப் பாடிக்கொண்டு உள்ளார்கள் என்பதறிக. ஆகவே இசையைப் பயிற்றி இறைவனைப்பாடி இன்புறுவோமாக. வாழ்க இசை. வளர்க சைவம்.

மாலை முழுதும் விளையாட்டு

[திரு. ச. நா. தாமோதரன், உடற் பயிற்சி ஆசிரியர்,
சாந்தலிங்க அடிகளார் உயர் தொடக்கப்பள்ளி, பேரூர்.]

சாந்தலிங்க சுவாமிகள் கல்வி நிலைய மாணவ மாணவியர் மாலை நேரங்களில் விளையாட்டு மைதானத்தில் வண்ண வண்ண உடையணிந்து கைபந்து, வளை பந்து, சடுகுடு, பூப்பந்து, மட்டைப் பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. இவ்வூர் மக்கள் கோவிலுக்கு வருவோர், போவோர் இதைக் கண்டு இன்புறுகின்றனர். இந்தக் கல்வி நிலையங்கள் விளையாட்டில் அடைந்துள்ள வளர்ச்சியைச் சற்றே கூற அவாக் கொள்கின்றேன்.

ஆள் நடமாடமுடியாத இடுகாடாக இருந்த இடத்தை இரவு பகல் என்று கூடப் பாராமல் படாத பாடுபட்டு விளையாடுமிடமாக ஆக்கித்தந்த பெருமை அண்ணல் இராமசாமியடிகளார் அவர்களையே சாரும். உடல் திடமாக இருந்தால் தான் உள்ளம் நன்ருக இருக்கும் என்ற முதுமொழிக் கிணங்கக் கல்லூரி மாணவ மாணவியர் ஒவ்வொருவரும் கட்டாயமாக விளையாட்டுகளில் பங்கு கொள்ள வேண்டுமென்ருர் தவத்திரு அடிகளார் அவர்கள். உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர் சீருடையணிந்து நடைபயிலும் (Marching) காட்சி, வாரமொருமுறை கூட்டு உடற் பயிற்சி (Mass-Drill) செய்யும் காட்சி பார்க்கப் பார்க்கக் கண்களுக்கு விருந்தாக அமைகின்றது. மனதை ஒரு நிலைப்படுத்த கடவுளையே எண்ணி, எண்ணி தியானம் செய்ய எல்லா மாணவ மாணவிகளுக்கும் ஆசனங்கள் கற்றுத் தரப்படுகின்றன. நிற்க.

இந்த வருடம் கோவையில் நடந்த மாகாண அளவில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் நமது நிலையம் பங்கு பெற்றது. தோல்விதான் கண்டார்கள். (Failure is the foundation stone for success) தோல்விகள் தான் வெற்றிக்குப் படிகள் என்ற ஆங்கிலப் பழமொழிக்கிணங்க இக்கல்வி நிலைய மாணவ மாணவியர்கள் மேலே சொன்ன விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிக்கு முயற்சி செய்தார்கள்.

எல்லா வற்றையும் விட இங்கு இருக்கும் கைப்பந்துக்குழு தான் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பல ஆண்டுகளாக விளையாடித் தேர்ச்சிபெற்ற கல்லூரிகளையும் வென்றிருக்கிறது. நமது கல்வி நிலையக் கைப்பந்துக் குழு என்ருல் போற்றத்தான் வேண்டும். இலக்கிய வளம் கண்டு மகிழும் தமிழ்க் கல்லூரி, கம்பன் தந்த காணிக்கையாம், கம்ப இராமாயணத்திலே தனது கருத்தைச் செலுத்தும் தமிழ்க் கல்லூரி, மொழி நயத்தையும் கற்பனைகளையும் காவியங்களையும் தொகுத்திடும் தமிழ்க் கல்லூரி, புறநானூற்றைப் புகழ்ந்துரைக்கும் தமிழ்க் கல்லூரி, திருநீறு பூத்த நெற்றியோடு திருவெம்பாவையைக் கரைத்துக் குடிக்கும் தமிழ்க் கல்லூரி மாணவர்கள் கைப்பந்திலே குறுகிய காலத்தில் இவ்வளவு முன்னேற்றமா! என்று ஒவ்வொரு கல்லூரி மாணவரும் மூக்கின் மீது விரலை வைத்து வியந்து போற்றுகின்றனர். நிற்க.

இன்னும் இசையோடு உயற் பயிற்சி செய்தல், கரணங்கள் அடித்தல், நெருப்பு வளையங்களுக்குள்ளே பாய்ந்து தாவுதல், பற்பல ஆசனங்கள் செய்தல், போன்ற இரவிலே நடக்கும் பயங்கர விளையாட்டுக்கள், நல்ல முறையிலே நடந்திட மேன்மேலும் வாழையடி வாழையாக விளையாட்டுக்களிலே வளர, உள்ளத்திலே தூய்மையும், உடலிலே உறுதியும் கொடுக்கத் தென்னுடைய சிவன் அருள் புரிவாராக.

"தெய்வத் தமிழும், நமது கடமையும்"

[திரு. ப. செங்குட்டுவன், பள்ளி இறுதி வகுப்பு, பேரூர்.]

முச்சுடரே! முத்தமிழே!! மூவேந் தராலும் வாழ்விக்கப் பட்டதாயே!!! எல்லோரும் இன்புற்றிருக்க அருள்புரி வாயாக.

கதிரவன் இப்புவிக்குத் தன்னுடைய ஒளியினை வழங்குகிறான். ஆறுகள் மக்களுக் காகவே எங்கெங்கோ ஓடியலைந்து இறு தியில் கடலோடு கடலாகக் கலக்கின்றன. பயிர்கள் இவ்வுலகில் உள்ள ஓரறிவு முதல் ஆறறிவுபடைத்த உயிரினங்களுக்காகவே செழித்தோங்கி வளர்கின்றன.

அதுபோலவே நாம் நம்முடைய மூதாதையர்களின் நடை முறையினையும் பழக்கவழக்கங்களையும் போற்றி வளர்த்து மேம்பாடடையச் செய்வதற்கே இப்புவியில் எல்லாம்வல்ல இறைவனால் படைக்கப்பட்டு இருக்கிறோம். இந்தப்பணியினைக் கூடச் செய்யமுடியாத மனிதன் இருந்தென்ன போயென்ன? இருந்தால் எல்லோராலும் எள்ளி நகையாடப் படுவான், ஆதலான் அவன் இறத்தலேமேல்.

முதலில் நாம் எதற்காக இவ்வூனினைத் தாங்கிய உடலைப் பெற்றுள்ளோம் என்று சிந்திப்போமேயானால் அதன் உண்மை நன்கு விளங்கும். தெய்வத்தமிழ் இருக் கிறதே அதுதானாகத் தோன்றி இருக்க முடியாது. நம்முடைய முன்னோர்கள் செய்த தவப்பயனின் விளைவுதான் அந்தத் தூய தமிழை நமக்குக் கிட்டும்படி செய்தது. அதைக் காப்பதற்காகத்தான் நாம் நம் முடைய ஊனினைத்தாங்கிய உடல்கொண்டும் உடலுக்கு அறிவின் துணைகொண்டும் முயற் சிக்க வேண்டும்.

மூத்தோர் செய்த புண்ணியத்தின் பயனாகக் கிட்டிய மொழியை நாம் கரைய விடலாமா? விடக்கூடாது. நன்றாகக் கெட்டிப் படுத்தி சமநிலைக்குக் கொண்டுவந்து சிதை வுறாதிருக்கச் செய்ய வேண்டும்.

இந்நாட்டில் தாய்மொழியை நன்கு பயின்று தேர்ச்சி பெற்றவனுக்குப் பேரும், புகழும், பட்டமும் கிடைப்பதில்லை. எவன் ஒருவன் அன்னிய மொழியிலே நான்கு எழுத்துக்கள் படித்து இருக்கிறானோ அவனுக் குத்தான் பட்டமளிக்கப்படுகிறது. அன்னிய மொழியினைப் பயின்றவர்களும் அதிலேயே நின்று தம்முடைய விடாமுயற்சியின் பயனா கத்தன்னுடைய கருத்தைச் செலுத்தி கோட்டைமதிற்சுவர் போன்று வானளாவி நிற்கின்றனர். கடமையை உணர்ந்து வெட் கத்திற்கு உள்ளாகாதவாறு கூடுமான வரையில் சொல்வழக்கில் தமிழையே கைக் கொள்ள வேண்டும். அன்னியனுடைய கலைச் சொற்களை உபயோகிப்பதில் தன்மனம் நோக வேண்டும். அப்பொழுது தான் தமிழ் மொழிவளர்ந்து நிலைபேற்றினைப் பெறும். தமிழ்த்தாயும் இன்புறுவாள்.

நாம் சற்று ஆராய்வோமானால் நம் முடைய மூதாதையர்கள் தமிழ் மொழியை வளர்க்கும் பொருட்டு சங்கங்களை நிறுவிப் புலவர்களையும் போற்றி வளர்த்தது சில நூல்களின் வாயிலாக அறியலாம். இதற்குப் பல கதைகளும் வழங்குகின்றன.

இனி தமிழைப்பற்றி நோக்குவோம். நம்முடைய தமிழ்மொழி அமிழ்தினும் இனியதாகவும் கடலின் ஆழத்தைக்காண முடியாத அளவுக்குப் பெருமளவுக்கு நூல்களைப் பெற்ற மொழியாகவும் இருக் கிறது. இத்தகையசிறப்புவாய்ந்த மொழியினை உள்ளத்தால் உணர்ந்து, அறிவால் அறிந்து உணர்வால் மதித்து, மதிப்பின் சிறப்பால் மகிழ்ந்து மகிழ்வால் அகம் நெகிழ்ந்து ஆர்வம்மலர்ந்து அன்புகனிந்து அதன் இன்பத்தை நுகரும் நேரத்தில்தான் தளர் வில்லா நம்பிக்கை உள்ளவனாகவும், தன்மான முள்ள மனிதனாகவும் இருந்து தமிழ்த் தெய்வத்திற்குத் தன் கடமைகளைச்செய்ய முன்வருவான். நிற்க

சைவமும் தமிழும்

[திரு. சீ. புருஷோத்தமன், ஒன்பதாம் வகுப்பு, 'ஆ' பேஞர்.]

தமிழ்! செந்தமிழ்! உலகத்தோடு பிறந்த தமிழ்! கல் தோன்றி மண் தோன்ருக்காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ். இவ்வாருக தமிழானது பண்டைய காலந்தொட்டு சிறப்புடன் வளர்ந்து வருகிறது. தமிழ்க் கடவுளைப் போல ஒருவரால் பெறப்பட்டதன்று. அது முதல் இறுதியற்றது. பரம் பொருளிடம் இருந்து வந்து பரம்பொருளை விளக்கி நம்மைப் பரம் பொருளிடமே சேர்க்கும் அருள்வலியுடையது. இறைவன் போன்றே எல்லையற்றது. கடலால் விழுங்கப்பட்டும், நெருப்பால் எரிக்கப்பட்டும், ஆற்றில் ஆழ்த்தப்பட்டும் அழியாது என்றும் இளமையுடன் விளங்குவது. தமிழ் எல்லாம் வல்லது. தன்னை அண்டிய அன்பருக்கு பயிலப் பயில அமிழ்தினும் சுவை பயப்பதாகும்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்
[மொழி போல்
இனிதாவதெங்கும் காணேம்;
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்ரே? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்.

என்று செந்தமிழ்ப் புலவர் சுப்ரமணிய பாரதியார் கூறுகிருர். இந்நாட்டில் வள்ளுவரின் தெய்வக் காவியத்தை வழிபடாதவரில்லை.

கம்பன் கவிதையில் இன்புருதவரில்லை. தாம் இன்புற்றதைப் பிறரும் இன்புறச் செய்வது தமிழரியல்பு. தருகை நீண்டு அமிழ்தளிக்கும் தாயன்புடைய தனி மொழியே தமிழ்! இனிமையே தமிழ்! இதனையே சுப்ரமணிய பாரதியார்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே—
இன்பத்தேன் வந்து பாயுது
[காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—
[ஒரு சக்தி
பிறக்குது மூச்சினிலே. என்று பாடினர்.

இத்தமிழில் சைவப் பெரியார்கள் தமிழுக்குரிய பண்ணில் தேவாரத் திருவாசகங்களை முழக்குகின்றனர். சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தையும் கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாவையும் தமிழர்கள் சிறப்புடன் பயிலுகின்றனர். வாதவூர் அடிகளின் திருவாசகத்தேன் ஊறியதும் இத்தமிழ் நாட்டில்தான் கந்தப் புராணத்தை இயற்றிய கச்சியப்ப முனிவர் தனது பாடலில் பாடுகிருர்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க
மன்னன் கோன்முறை அரசுசெய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்குக
நற்றவ வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெலாம்

மாடமாளிகைகளின் அமைப்பு இன்னது இப்படிப்பட்டது, என்று அறியாதவன்கூட அம்மாளிகைகளில் வாசம் புரிவதில்லையா? ஓசை எழும்காரணம் அறியாதவன் பலவகைக் கருவிகளைக் கொண்டு ஒலியினைக் கேட்டு இன்புறுவதில்லையா? கலையுணர்வு அற்றவனும் நாடக மேடைக்கு சென்று கைதட்டி ஆரவாரிப் பதில்லையா? அதுபோலவே தமிழை முழுக்க முழுக்கக் கற்காதவனும் கூட அவன் தமிழ்ச்சொற்களால் நயம்பட அடுக்கிப் பேசும் பொழுது அவனைக் கலைஞன் எனக் கொள்கிறது தமிழ் உலகம்.

இன்றைய கலைஞர்களின் நிலைமாற வேண்டுமாயின் அந்தமாற்றத்தின் பொருட்டு தமிழ்த்தெய்வமாகிய தமிழ்த்தாயனவள் இன்புறவேண்டுமாயின் தமிழர்களின் வாழ்வு மட்டும் சிறந்தால் போதாது. தமிழ்த்தாயை மகிழ்விக்கும் பொருட்டு தமிழை வாழ வைக்க வேண்டும். அதற்கு அன்பும் அறிவின் விழிப்பும்தான் இன்றியமையாது வேண்டப் படுகிறது. ஆகவே நம்முடைய தமிழை வாழ்விக்கும் அவசியத்தை உணர்ந்து நாம் இப்பிறவி எடுத்ததன் பயனைக் கண்டுகளிக்க நன்முறையில் பணியாற்று வோமாக!

காலமும் கடமைகளும்

[திரு. கு. மெ. ச. மூர்த்தி, 10-வது வகுப்பு, த. சா. அ. உயர்நிலைப் பள்ளி.]

ஆதியும் அந்தமும் அறியவியலாத ஆறு போன்று அலைந்தாடிக் கொண்டு செல்லும் தன்மையினையுடையதே காலம். அக்காலத்தினை நிமிடம், மணி, நாள், வாரம், வருடம் என நாம்பிரித்துள்ளோம். ஆனால் அவ்வொவ்வொரு நிமிடம், மணி, நாள் போன்றவைகளனைத்தும் நமது வாழ் நாளைச் சிறிது சிறிதாக வீழச் செய்யும் தன்மையுடையன. எனவே அத்தகைய வீழ்நாள் வருவதற்குள் கிடைக்கும் காலத்தைப் பயன் படுத்திச் செய்து கொள்ளும் நற்செயல்களே கடமைகளாகும்.

மனிதனின் முதற் பருவம் குழவிப் பருவம் அப்பருவத்தில் அவன் மனத்துக் கண் மாசிலனாகவே விளக்குகிறான். தக்க வயது வந்ததும் கல்வி கற்கச் செல்லுகிறான். பள்ளியில் கற்று வரும் போது அவனுடன் கலந்து பழகும் இளமைத் தோழர்கள் பலர். அவர்கள் அவனிடம் பண்பிருந்ததால் பழகவில்லை பணமிருந்ததால் தான் பழகினார்கள். இதையறிவானா அவன். இல்லை, ஏனெனில் பழகுவதால் உண்டாகும் நிலையற்ற இன்பம் பனிப்படையானது அவ்வுண்மையினை மறைத்தது.

காலம் அவனது வாழ்நாளை வீழச் செய்து கொண்டே இருந்தது. பள்ளிப் படிப்பு ஒருவாறு முடிந்து பட்டப் படிப்பிற்குச் சென்றான். மலரினுள்ள மதுவினை உண்டுமறையும் வண்டுபோலப்பள்ளி நண்பர்கள். ஆனால் பள்ளியை விடகல்லூரியில் தான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நண்பர்கள்பலர் சேர்ந்தனர். அவனது கல்லூரி வாழ்க்கை கள்ளுண்பதிலும், களிப்பதிலும் பொய்ப்பதிலும் பேயாய் அலைந்து திரிவதிலும் கழிந்ததேயன்றிக் கல்வி கற்பதில் கழிய வில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் அவனல்ல அவனது சேர்க்கையாகும். அதாவது நிலத்திற்குத் தக்கபடி அதில் கலக்கும் நீர் நிறம் பெறுபோல கெட்ட சேர்க்கையால் கெட்ட செய்கையும் ஏற்பட்டு விட்டது.

கடுமையாக உழைத்தும், கடன் வாங்கியும் கற்கவைக்கும் தந்தையின் உள்ளம் தன் ஒரே மகனது இப்படிப்பட்ட கெட்ட நடத்தையை அறிந்ததும் நீரினுள்ள மீன் நிலத்தில் விழுந்து துடிப்பது போல (Fish out of water) துடிதுடித்தது. அத்துடிப்போடு அவரது வாழ்வும் முடிந்தது. சாற்றைச் சுவைத்துச் சக்கையை எறியும் கரும்புபோல அவன் நண்பர்களிடமிருந்து விலக்கப்பட்டான். வறுமை யென்னும் கதிரவனால் நிலையா இன்பமாகிய பனிப்படை விலக்கப் பட்டது. ஆனால் இப்போது அவனது வாழ்க்கைப் போராட்டத்தில் நிலையான இன்பம் பெறும் வழி காணப்படவில்லை.

அவனது உள்ளம் சாந்தி சாந்தியென்று அமைதியைத்தேடும். ஆனால் அது காற்றோடு கலந்த துகள் போல அவனுக்கு எட்டாமற் சென்று மறையும். மேலும் அவன் மானமிழந்து, மதிகெட்டு, போன திசைகளிலெல்லாம் கொடியவனாகவே மதிக்கப் படுவான். இவ்வாறு அவனது வாழ்க்கை துன்பப் புயலால் அலைக்கப்பட்டு அவனை காரிருளினுள் உய்த்து விடுகிறது.

இவைகளுக்கெல்லாம் காரணம் என்னவென்றால் அவன் உரிய காலத்தில் தன் கடமைகளைச் செய்திலன். உரிய காலத்தில் அவன் தன் கடமைகளைச் செவ்வனே செய்திருப்பின் அவன் இன்னும் மூன்றாண்டு முன்னரே பள்ளிப் படிப்பை முடித்திருக்க முடியும். அம் மூன்றாண்டு காலத்தில் கல்லூரிப் படிப்பே ஒருவாறு முடிந்திருக்கும் தந்தை கடுமையாக உழைத்து கடன் வாங்கி கற்கவைத்த காலத்தில் தன் கடமையாகிய கற்றலைச் செவ்வனே செய்திருப்பின் அவன் பட்டதாரியாக மதிக்கப் பட்டிருப்பான்.

எனவே நாம் நமக்குரிய காலங்களிலெல்லாம் நல்லவைகளையே செய்தால் அதுவே நம்மை நன்றின் பாலுய்க்கும். தவிர நாம் அன்றறிவாம் என்னாது நம்மைப் படைத்துக் காக்கும் இறைவனைப் பற்றியும் இன்றே எண்ணல் வேண்டும்.

அடியார் மாண்பு

[வித்துவான். சிவகளை மு. நாராயணன்,
மாவட்ட கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வள்ளியூர்]

சைவ சமய நெறிப்படி மூன்று முறை யான் இறைவனை வழி படலாம். ஒன்று குருவழிபாடு. குருவையே சிவனாக மதித்து பூசைபுரிதல். (2) இலிங்க வழிபாடு. (3) சங்கமவழிபாடு. சங்கமம் எனில் அடியார் திருக்கூட்டம் எனப் பொருள் படும். ஆகவே அடியாரைவழிபடல் அரனை வழி படலுக்கு ஒக்குமாம். 'பெரிது பெரிது புவனம் பெரிது' என்று ஆரம்பித்து 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிது' எனக்கூறுகிறார் ஔவையார். அளப்பரிய அடியார் மாண்புபற்றி முழுதும் கூறும் சைவ நூல் பெரிய புராணம். அது அடியவர்களின் வரலாற்று நூல். அருள் மணங்கமழும் தெய்வ நூல். சைவத்தின் சரித்திர நூல். அறுபான்மும்மை அடியவர்களின் பெருமையை விளக்க சேக்கிழார் பெருமான் முன்வினைப்பயனால் மொழிந்த நூல். அந்நூலிலே அடியவர்கள் யார் ? யார் ? என்பதை உணர்த்துகின்றார். படம் பிடித்துக் காட்டுகின்றார். நுணுகிப்பார்ப் போமா ?

அடியார்கள் எப்படிப்பட்டவர்கள் ? ஈர அன்பினர் யாதுங் குறைவிலார் நீண்ட தொல்புகழார் தாண்டவப் பெருமானின் தனித் தொண்டர்கள்.

அவர்களது அணிகலன்கள்: ஆரங் கண்டிகை, ஆடையுங் கந்தையே, பாரம் ஈசன் பணியல தொன்றிலார். பெருமை: இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை. உரிமை : அகில காரணர் தான்பணிவார்கள் தாம் அகில லோகமும் ஆளற்குரியர். கடமை : கைத் திருத் தொண்டுசெய் கடப்பாட்டினார். சிந்தை: அத்தர் வேண்டி முன் ஆண்டவர் அன்பினால் மெய்த்தழைத்து விதிர்ப்புறு சிந்தையார். உள்ளம்: பூசு நீறு போல் உள்ளும்புனிதர்கள். மனத்திண்மை: பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் மாதொர் பாகர் மலர்த்தாள் மறப் பிலார்ஓதுகாதல் உறைப்பின் நெறி நின்றார். குணதிசயம்: கோதிலா குணப் பெருங்குன்றனார், கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார். ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார். கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

மன்னுசீர் அடியார் தங்கள் வழித் தொண்டை உணர்த்த அவர்கள் தங்கள் பெருமையை நாதனார் தம்வாயால் நவின்ற, வண்ணத்தையும், வடிவத் தையும் நாம் கண்ணுறுவோமாக.

"பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால்
எம்மைப் பெற்றார்; ஒருமையால்
உலகை வெல்வார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்;
அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையுங் கடந்து நின்றார்"
—என்கிறார் சிவபெருமான்.

இயற்கைத் துறவி. ஐந்து வயது ஊமைப்பிள்ளை. செந்தூர் அறுமுகன் அருள் சுரக்க மறுநாட்காலை மடைதிறந் தாற் போல் கந்தர் கலி வெண்பாப் பாடியவர். ஸ்ரீவைகுண்டம் குமரகுருபர சுவாமிகள்.

பின்பியற்றிய நீதி நெறிவிளக்கத் திலும்தவத் தோரைப்பற்றி தாம்கருதிய

இறைவன் இன்ன தன்மையுடையவன் இவ்வாறு இருந்தால் அவனது திருவருளைப் பெறலாம் என்பதைத் தெளிவாகக் கூறுவது சைவசமயமாகும். எனவே நாம் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது அக்காலத்திற்குரிய கடமைகளை ஆற்றி சைவசமயத்தைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும் அதுவே என்றும் அழியாத நிலை பெற்ற இன்பத்தினை அளிக்கும். எனவே காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது போல காலமுள்ள போதே நாம்நமது கடமை களைச் செய்து முடித்தல் வேண்டும்.

கருத்தை வைத்துள்ளார் — "முற்றத் துறந்தார்க்கு மெய்யுணர்விற் ரேன்று வதே இன்பம் இறந்த வெல்லாம் துன்ப மலாதில்" என்கிருர். மெய்யடியவர் மாண் பிற்கு எடுத்துக் காட்டாய்த்திகழ்ந்து, ஆரூரில் அடித்துக் கொல்லப்பட்டவனை எழுப்பி, இறந்த தாயின் உடலை ஈரவாழை மட்டையால் எரியச் செய்து, நிந்தைகூறி யவனின் பெருவயிறு பிளக்கச் செய்து, பேய்க்கரும்பு இனிக்கச் செய்த பட்டி னத்துப் பிள்ளையார், திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்,

"நின்னையடைந்த அடியார்க்கு
என்னையும் அடிமையாகக் கொண்டே
இட்டபச்சிலை கொண்டொட்டி அறிவித்து
இச்சிறை பிழைப்பித்து இனிச்சிறை [புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண்டன்ன செஞ்சடை [யோனே"

என்கிருர்.

தண்ணூர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில் திருவாதவூரிற் பிறந்து, அரி மர்த்தனபாண்டியன் காலத்தே அமைச் சராயிருந்து, தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தைப் பெற்று, குதிரை கொள்ளச் சென்றவிடத்து குருவினைக் கொண்டு, 'பெருந்துறைப்பிள்ளை' என்றும் 'திருவாதவூர் சிவபாத்தியன்' என்றும், பேசப்பட்ட சமயாச்சாரியர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் அடியவர் பெருமையை அடுக்கிக் கொண்டேபோகிருர். சொல் புதிதன்று. பொருளும் எளிதே. ஆகை யால் மூலம் மாத்திரம் கொடுக்கிறேன். விளக்கம் தேவையில்லையாதலால் விட்டு விடுகிறேன்.

கோயில் மூத்ததிருப்பதிகம்

'உடையாள் உன்றன் நடு இருக்கும் ...
அடியேனுன் அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய்"

திருச்சதகம் :

"பேசப்பட்டேன் நின்னடியாரில் திருநீறே
பூசப்பட்டேன் பூதலராலுன்
அடியானென்று
ஏசப்பட்டேன் இனிப்படுகின்ற தமை
யாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன்
அடியேனே."

"அடியேன் அல்லேன் கொல்லோ
தானெனை ஆட்கொண்டிலை கொல்லோ
அடியாரானுர் எல்லோரும் வந்துன்
தாள் சேர்ந்தார்"

"அழுகேன் நின்பால் அன்பாம்
மனமாய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னர் மின்னர்
பொன்னர் கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
ரோடுந் தொடராதே......"

"பணிவார் பிணிதீர்த்தருளிப் பழைய
அடியார்க்குன் அணியார் பாதங்
கொடுத்தி"

"அடியாரானுரெல்லோரும் வந்துன்
தாள் சேர்ந்தார்"

"விரும்பும் அடியார்
உளத்துள்ளாய்"

திருவெம்பாவை :

"உன்னைப்பிரானுக பெற்ற உன்
சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்"

சென்னிப்பத்து :

"தொழுத கையினராகித் தூய்
மலர்க் கண்கள்
நீர் மல்கும் தொண்டர்க்கு
வழுவிலாமலர்ச் சேவடி"

மலைநாட்டுச் செலவு

[உயர்திரு. பி. ரா. கந்தன், B. A., தெப்பக்குளம், திருச்சி-2.]

'மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' எனப் பராபரக் கண்ணியிற் பாடி நமக்கு வழி காட்டுகின்றார் திருச்சிராப்பள்ளி தாயுமான சுவாமிகள். முற்றத் துறந்த முனிபுங்கவர்களும், மகான்களும் சித்தர்களும் கூட ஆலயந் தேடி அரனடி தொழுதனர். ஆகையால் தலயாத்திரை ஆன்மாவிற்கு இன்றியமையாதது. அமைதியையும் பரிபக்குவ நிலையையும் கொடுக்க வல்லது.

ஆண்டு தோறும் எண்ணற்ற மக்கள் எங்கிங்கிருந்தோ, மகர விளக்கிற்கு, சபரிமலை நோக்கி வருகின்றனர். முறைப்படி 48 நாள் நோன்பிருந்து, கறுப்பாடை தரித்து, மாலையணிந்து, முன்முடிச்சுப் பின் முடிச்சுத் தாங்கிச் செல்வதைக்கண்டு ஓர் முறை ஏன் இந்தத் தலயாத்திரையை நாமும் மேற்கொள்ளக் கூடாதென்ற உள்ளுணர்வு பல நாளாய் உந்தத் தலைப்பட்டதால் இந்த ஆண்டு மேற்கொண்டனன்.

முறைப்படியான சபரியாத்திரை எருமேலி என்ற இடத்திலிருந்து தான் ஆரம்பம். ஐயப்பன் சென்ற வழிதான் செல்வது முறை என்ற நம்பிக்கையுடைய மக்கள் இங்கிருந்து நடந்தே செல்ல ஆயத்தமாகின்றனர். முதல் தடவை சபரிமலை ஏறுபவர்களைக் கன்னி ஐயப்பன் என்றழைக்கின்றனர். இவர்களும் மற்றவர்களுடன் பல நிறப் பொடிகளை முகத்தில் தூவி, புலிவேடம் பூண்டு, கையில் ஒரு குச்சி கொண்டு மறு கையால் காய்கறிகளைக் கட்டித் தொங்கவிட்டிருக்கும் கழியை தோளிலிட்டுத் தூக்கிக் கொண்டு 'சாமி தந்தினத்தோம், ஐயப்ப தந்தினத்தோம்' என்று குதித்துக் கொண்டே சுற்றிவர வேண்டும். பிள்ளைப் பிராயத்தில் துள்ளிக்

எண்ணப்பதிகம் :

"ஆருருவாய என் ஆரமுதேயுன்
அடியவர் தொகைநடுவே
ஒருருவாய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே''

ஆனந்தமாலை :

"பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியாரொடுங்கூடா
தென்னாயகமே பிற்பட்டிங்கிருந்தேன்
நோய்க்கு விருந்தாயே''

பிரார்த்தனைப்பத்து :

"கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர் பின்னாள்''

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இன்னும் எத்தனையோ இடங்களில் அடியவர் மாண்பு பற்றிப்பேசுகிறார்.

சத்வித்யா சன் மார்க்கசங்கம் பொன்விழாப் பொலிவுபெறும் இப்பொன்னான நாளில் எண்ணற்ற பழ அடியார்கட்கு சாந்தலிங்கர் திருமடம் தண்ணிழல் அளிக்க வேண்டும் என அவாவுகிறேன். பொருளைப் பொருளாக எண்ணி, வாழ்வெல்லாம் உழைத்த உள்ளங்கள் வாடி கடைசி காலத்தில் அமைதியைத்தேடி, ஓடிக் கொண்டிருக்கின்றன. அறவழியில், ஈட்டிய பொருளைச் செலவிட்டு, உள்ளம் அமைதியுற எண்ணி நாடிவர தமிழகத்தில் நல்ல நிறுவனங்கள் இல்லையே என ஏங்கித் தவிக்கின்றனர். அக்குறை தவிர்க்க, தவத்திருசாந்தலிங்கர் திருமடம் அவர்களை எல்லாம் புத்தடியார்களாக்கி, புகலிடம் கொடுத்து, அருள் வாழ்வு அளித்து, உள்ள அமைதியைத்தந்து, எல்லோரும் இன்புற்றிருக்க சாந்தலிங்கப் பெருமான் திருவருள் புரியட்டும்.

"அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி.''

குதித்து மகிழ்ந்த காலத்தை நினைவுக்குக் கொண்டு வந்தது. இந்த எருமேலியிற் ருன், ஐயப்பனின் மகமதிய துணைவனுன பாபர் சமாதியும், சாஸ்தா கோவிலும் உண்டு. ஆடிவரும் போது அவற்றையும் சுற்றிவர வேண்டும்.

அதைவிட்டுப் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போன்று புறப்பட்டோம். பாதை கரடு முருடாகவும், கல்லும் முள்ளு மாகவும் இருந்தது. இருப்பினும் அம்மலைக் காட்சி கண்ணுக்கு விருந்தளித்தது. அழுதா மலையில் நடந்த அலுப்பை ஓடும் நதியின் குளிர்ந்த நீரில் குளித்துக் கழித் தோம். களிப்புடன் இரவும் வந்தடைந் தது. கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்த ஐயப்பன்மார்கள் ஏற்றிவைத்திருந்த எண் ணெய் விளக்குகளும், மெழுகுவர்த்தி களும், பாட்டரிக் கை விளக்குகளும் மலைச் சரிவெல்லாம் பிரகாசிக்கச் செய்தன. காலையில் எழுந்து கால் கடுக்க நடந்து, காளை கட்டி என்ற இடம் வந்தடைந் தோம். இஞ்சிக் கோட்டை தாண்டி முக் கூட்டு மலைச்சரிவின் பின்புள்ள கரிமலை மேல் ஏறி இறங்குவதற்குள் எண்ணற்ற இடர்ப்பாடுகள். நல்ல சோதனை என்றே சொல்ல வேண்டும். இந்த இரவைப் பம்பா நதிக்கரையில் கழித்தோம். மயக்கும் மாலை யில் பம்பா நதிக்கரையில் மூங்கிலால் சிறு ஓடங்களைக் கட்டி அவற்றுள் விளக்குகளை ஏற்றி வைத்து நீரில் விட்டனர். தண்ணீ ரில் தண்ணொளி வீசியதுடன், அவற்றின் பிரதிபிம்பங்களையும் நீரிற் காண முடிந் தது. நேரிற் கண்டால் தான் அந்த இன்பத்தை அனுபவிக்க இயலும். இரவில் யானைக் கூட்டம் இறங்கித் துயர் கொடுத் தது. போதாததற்கு மழை. பம்பா நதிக் கரையில் தென்புலத்தார்க்குக் கொடுக்கும் முறைப்படி இராமன் தன் தந்தை தசரத னுக்கு பிண்டம் கரைத்ததாய் வரலாறு உண்டு. அதனுல்தான் இந்நதி அதிக சிறப் புற்றது. இங்கு விருந்துகொடுத்து உண்டு மகிழல் வேண்டும். இரண்டு கல் தூரம் நீலிமலை மேலேறிக் கடந்தால் இராமாய ணத்தில் இடம்பெற்ற சபரி தவமியற்றிய பீடம் வந்தடையலாம். அதன்பின் சரங் குத்தி ஆல். இங்குத்தான் கன்னி ஐயப் பன்மார்கள் எருமேலியிலிருந்து எடுத்து வந்த சரங்களை வைக்க வேண்டும். கொஞ்ச தூரம் நடந்தால் சபரிமலை ஐயப் பன் கோவில் கண்ணுக்குப்படுகிறது. தவ மிருந்து காணவேண்டிய கோயிலைப் பொங்கற் புதுநாளில் வெள்ளிக்கிழமையில் கண் குளிரக் கண்டோம். தலைவாயில் பதினெட்டுப் படிகளாலானவை. பதினெட் டாம் படியில் தேங்காய் உடைத்து மிதித்து திரும்பிப் பாராது ஏறி ஐயப்பன் சந்நிதி வந்ததும் ஆனந்தத்தில் மிதக்கிருேம். கண நேரமே மூர்த்தியைக் காண முடிந் தது. மின்னல் கண நேரம் என்ருலும் ஒளியில் குன்றுகிறதா? பளிச்சென்று பதிந்தது. முன்முடிச்சவிழ்த்துப் பூசனைப் பொருள்களை எடுத்துக் கொடுத்து, நெய்ய பிடேகமும், பூசனையும் கண்டுகளிக்க நெடுநேரம் ஆயிற்று. இரவு வந்துற்றதும் ஐயப்பனுக்கு ஆபரணம் பூட்டியபின் ஆராதனை ஆயிற்று. மலைக்கு மத்தியில் சோதியொன்று குத்து விளக்கு தீபம் போல் தெரிந்தது. இந்த அஞ்ஞான மனத்திற்கு அது ஒரு நட்சத்திரமோ என்ற சந்தேகம். துருவித் துருவிப் பார்த் தேன். கொஞ்சம் வேறுபாடும் தெரிந் தது. ஒற்றுமையும் இருந்தது.

பின்வாயில் வழியே கோயிலுட்சென்று வழிபாடியற்றியபின் வந்த பதினெட் டாம் படியின் மேல்படியில் தேங்காய் உடைத்துக் கீழே பின் நோக்கி இறங்கு வது முறை. இது கடந்து வந்த பாதை யில் நடந்ததைவிடக் கடினமான யாத் திரை என்றே கூறவேண்டும்.

திருவனந்தபுரம் சென்று பின்பு, பழம் பாண்டி நாட்டில் பாடல் பெற்ற தலங் களைப் பாடிப் பரவ எண்ணி இன்றே அதுவும் இரவே, புறப்பட்டேன். இந்த சபரி யாத்திரை வாழ்வில் ஒரு பொன்னே டாய் நிலைத்தது. கேரள நாட்டின் இயற்கை எழிலும், மலைவளமும், நீர்வள மும், மக்களின் பக்தியும், எங்கேயும் காண முடியாதது. இருந்தும் அவர்கள் வறுமை யில் வாடுவது நெஞ்சைப் பிளக்கிறது. ஏதோ சாபக் கோளாறு. கிருட்டிணன் இருக்குமிடத்தில் இராதை யில்லை. இராமன் கோவிலில் சீதை யில்லை. பகவதி கோயிலில் பகவான் இல்லை. வைக்கத்து அப்பனுக சிவலிங்கம் வைத்து வழிபடும்

அப்பெரிய கோயிலில் அம்பாள் சன்னிதியைத் தேடவேண்டியிருக்கிறது. ஆகம சாத்திரம் தெரிந்தோர் ஆராய்ந்து நிவர்த்தித்தால் விமோசனம் உண்டு என்றுதான் நினைக்கிறேன். மலைகளையுடையது இம்மலையாளம் மேலைக் கடற்கரை யோரத்தில் அமைந்திருப்பதால் முன்பு மேல் நாட்டார் இறங்கி முதலில் மதமாற்றியது இம்மக்களையே. காரணம் வறுமையும் பிணியும். பாதிரிகள் பள்ளிகளையும், வைத்திய சாலைகளையும் வைத்து, அவற்றின் மூலம் மக்கள் மனதை மாற்றினர். காலம் மாறிவிட்டதால் உண்மை உணர்ந்த மக்கள் உள்ளம் மாறி என்றும் உள்ள பரம் பொருளை நாடி வருகின்றனர். ''யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனுர் தாம் வருவர்'' என்ற சித்தியார் வாக்குப்படி பகவதியாகவும், ஐயப்பனுகவும் வழிபடுகின்றனர். சாதி, குலம், பிறப்பென்ற சளக்கெல்லாம் விட்டு 'ஐயப்பன்' என்று ஒன்றுபட்டு ஓர் ஐக்கிய எண்ணத்தை வளர்த்து இந்து சமுதாயத்திற்கு ஓர் புத்துணர்வை ஊட்டுகிறது இந்த சபரி மலை யாத்திரை.

—*—

தாள் வணங்குவாம்

(ந. பொன்னுசாமி, பதினொன்ரும் வகுப்பு த. சா. அ. உயர்நிலைப்பள்ளி.)

*

இருளகற்றி ஒளிகொடுக்க
எழுந்து வந்தவன்—உயிர்
மருள்துடைத்து அருள்சுரக்க
மலர்ந்து வந்தவன் !

குறை தவிர்த்து நிறைவு செய்யக்
குறித்து வந்தவன்—மேலைச்
சிதம்பரத்தில் திங்களாகக்
திகழ்ந்து வந்தவன்!

தமிழர் வாழ்வில் தலைமகனுய்த்
தழைத்து வந்தவன்—எம்
தமிழ் வளர்த்த சாந்தலிங்கர்
தாள் வணங்குவாம். !



உணவு உற்பத்தி பெருக
RMF
RMF
RMF
RAMU
பம்புகள்
தந்தி: இம்பல்லர்
போன் : 4212
ராமு பவுண்டரி
பாப்பநாயக்கன்பாளையம்.... கோயமுத்தூர்-1
NAVA INDIA

எமது நல் வாழ்த்துக்கள்

டெக்ஸ்மோ இண்டஸ்டிரிஸ்

மேட்டுப்பாளையம் ரோடு

ஆர். எஸ். புரம் (அஞ்சல்)

கோயமுத்தூர் – 2.

உயர்ந்த ரக பஞ்சினால்
நூற்கப்படும் எங்கள்
நூல் தனிச்சிறப்புடையது

எங்கள் தயாரிப்புகள் :

100s, 80s, 60s

கோம்டு, கார்டட்

ஒற்றை நூல், இரட்டை நூல், கோன்

சிவானந்தா மில்ஸ் லிமிடெட்

கணபதி போஸ்ட் — கோயமுத்தூர் - 6.

போன் : 3309 TELEX No. 205

தந்தி : FINEMIL SIVAMIL CB.

Telegrams : VASANTA

Telephone 5522 / 5523

THE VASANTA MILLS LIMITED

REGISTERED OFFICE :

SINGANALLUR — COIMBATORE DT.

Authorised Capital : Rs. 30,00,000

Paid up Capital : Rs. 25,50,000

SPINDLES : 53,124

LOOMS : 289

SPINNING :

Ring yarn of all counts ranging from Nf. 17 to 84.

SINGLE	**DOUBLE**
CHEESES	**CONES**
STAPLE FIBRE	**GASSED AND MERCERISED**

★

MANUFACTURING :

GADA	**DHOTIES**
MULLS	**LONGCLOTH**

போன் : 171. தந்தி : "சக்தி"

டெக்ஸ்மார்க் : 3642

ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிட்.

தபால் பெட்டி எண் 36

பொள்ளாச்சி

★

அனுமதிக்கப்பட்ட மொத்த கதிர்கள்	:	*25032*
நிறுவப்பட்டவை	:	*22248*
இயங்கும் கதிர்கள்	:	*18536*
டபிளிங் கதிர்கள்	:	*1212*

★

ஸ்ரீ சக்தியின் தயாரிப்பான

NF. 17 - 34 - 52 ஒற்றை நூல் ரகங்கள்

NF. 2/17 முறுக்கு நூல் மற்றும்

NF. 17 கோன் நூல் ரகங்கள்

தரத்திலுயர்ந்தவை — குணத்திலுயர்ந்தவை

அதனல் யாவரும் விரும்பி வாங்குபவை.

போன் : ஆபீஸ் : 105, 65.
வீடு : 115.

தந்தி - "RICE"

பருப்பு மில்

தி கோபி கிரேம்ஸ் பிரைவேட் லிமிடெட்

120, C, கச்சேரி வீதி

கோபிசெட்டிபாளையம், ஈரோடு (Via) S. Rly.

எங்களிடம்

நல்ல முறையில் தயார் செய்த துவரைப்பருப்பு, உளுந்து வகைகளும்.
சுத்தம் செய்த கடுகு, சீரகம், மல்லி, மிளகு இவைகளும்
மொத்தமாகவும் ஒரு லிட்டர் வரை குறைந்த அளவிலும்
பாலுத்தீன் பாக்கட்களில்

கிடைக்கும்.

மானேஜிங் டைரக்டர்கள் : V. M. கருப்பண்ணன்
C. S. சத்தியமூர்த்தி பி. எஸ்ஸி., (அக்ரி)

இந்தியத் தொழில்துறை வரலாற்றில் புதிய சகாப்தம்

செயற்கை வைரத் தளங்கள்
சகல நிறங்களிலும் தயாரிக்கும்

ஆசியாவின் ஒரே தொழிற்சாலை

தந்தி : "இண்டோஸ்விஸ்"

போன் : பாக்டரி : 127
ஆபீஸ் : 136

தி இந்தோ - ஸ்விஸ் சிந்தட்டிக் ஜெம் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்

மேட்டுப்பாளையம் :: கோயம்புத்தூர் ஜில்லா

ஏக விநியோகஸ்தர்கள் :

ஜி. எஸ். & கம்பெனி,

6, ஜாபர்ஷா தெரு,
திருச்சிராப்பள்ளி.
தந்தி: 'MANEK' போன்: 2006 & 2084

கோபால்ஜி ரஸ்தா,
ஜெய்ப்பூர்
தந்தி: 'இண்டோஸ்விஸ்' போன்: 2814 & 2825

Phone : 4770 Grams : GECEPE

SPORTS GOODS

IN
ATHLETICS
GYMNASTICS
INDOOR & OUTDOOR
GAMES ETC.

FOR
OWN USE
SCHOOLS
COLLEGES
ARMY & POLICE
CLUBS ETC.

Please Contact

POPLI BROS.,

SPORTS SPECIALISTS,
OPPOSITE MUNICIPAL OFFICE.
COIMBATORE-1.

*A VISIT TO **POPLI** IS AN ASSET TO YOU*

ரவிவர்மா ஸ்டுடியோ, ஈரோடு

கலர் போட்டோக்கள் ★ குரூப் போட்டோக்கள்
கல்யாணங்கள் ★ விசேஷ கூட்டங்களில்
ஃபிளாஷ் போட்டோக்கள்
சிறந்த முறையில் எடுக்குமிடம்

Phone Studio : 126, Residence: 648

Please Contact :

போன் ஸ்டுடியோ : 126, இல்லம் : 648

For Best
PORTRAITS ★ GROUP PHOTOS
FUNCTIONS FLASH PHOTOS
& CHILDREN'S SNAP

RAVIVARMA STUDIO, ERODE.

டெலிபோன் : 6356

வேலுமணி இஞ்ஜினியரிங் இண்டஸ்டிரி

துடியலூர் – P. O., கோவை – 11

எங்கள் தயாரிப்புகள் :	10 SDT "டெக்ஸ்வெல்" ஸ்டாட்டர்
	20 ,, ,, ,,
	84 ADS "புஸ்பட்டன்" ஸ்டாட்டர்
	15 Amps 500 Volt "டெக்ஸ்வெல்" சுவிட்சுகள்
	30 ,, ,, ,, ,, ,,
	60 ,, ,, ,, ,, ,,

நீடித்த உழைப்புக்கும், மோட்டார்களின் பாதுகாப்புக்கும் சிறந்தவை "டெக்ஸ்வெல்" தயாரிப்புகளே

கோயமுத்தூர் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கு லிட்.,

கோயமுத்தூர்-1

தபால் பெட்டி எண்: 100 போன் நெ. 7221

கிளை : 20/91, கச்சேரி வீதி, ஈரோடு

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர், தலைவர்

திரு. எஸ். கே. ராமசாமி முதலியார் உபதலைவர்

பிக்சட் டெபாசிட்டுகளுக்கு வருஷத்திற்கு ரூ. 4% முதல் ரூ. 7½% வரை வட்டி கொடுக்கப்படுகிறது.

36 மாதங்களுக்கும் அதற்கு மேலும் வைக்கப்படும். பிக்சட் டெபாசிட்டுகளுக்கு அசலுக்கும். வட்டிக்கும் சென்னை அரசாங்கம் உத்திரவாதம் அளிக்கிறது.

சேவிங்ஸ் பாங்கு கணக்கிற்கு வருடத்திற்கு ரூ. 4% வட்டி கொடுக்கப்படுகிறது.

மற்றும் பிராவிடெண்ட், ரெக்கரிங் டிபாசிட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

விபரங்களுக்கு எழுதவும்.

With Compliments of :

S. BEEMIAH CHETTY,

THE WHITE SHOP

Big Bazaar Street, COIMBATORE-1.

We Stock:

All kinds of Binny, Mettur and other Mills' Goods, Mill Dhoties, Silk, Cotton, Full Voile and Nylon Sarees, Bedsheets, Towels, **Silk Cotton Beds, Spencer Beds, Pillows,** Mosquito Nets and Holdalls, etc.,

Please Visit

Our Show Room

For Quality Goods

தரத்திற்கும், நயத்திற்கும் புகழ்பெற்ற இடம்

எவர்சில்வர், பித்தளை, பாத்திரங்கள்

நியாயமான குறைந்த ஒரே விலையில் கிடைக்குமிடம்

K. ராமலிங்கம் செட்டியார்

எவர்சில்வர், பித்தளை, தாம்பர பாத்திர வியாபாரம்

ராஜ வீதி :: கோயமுத்தூர்

COIMBATORE OFFICE PHONE NO. **5205**

THANGAM ENGINEERING WORKS,

SAIBABA MISSION P. O.,

COIMBATORE-11.

Manufacturers

STEEL TRUSSES, METAL WINDOWS, DOORS,

WINDOW GRILLS, COLLAPSIBLE GATES,

WATER TANKS, PADDY BOILER TANKS

&

STEEL FURNITURES.

தங்கம் பவுண்டரி

(தங்கம் ஸ்டீல் ஒர்க்ஸ்)

திருச்சி ரோடு,

ஒட்டர்பாளையம், ஒண்டிப்புதூர் (வழி)

கோவை-16.



"தங்கம்" பர்னிச்சர்

தயாரிப்பில்

உயர்ந்தவை

வீடு, ஆபீஸ் மற்றும்
ஆஸ்பத்திரிகளுக்கும்
தேவையான சகலவித
மான பர்னிச்சர்கள்
உயர்ந்த முறையில்
தயாரிக்கிறோம்.



Branch :
RAJA STREET COIMBATORE. Telephone No. 3101 Telephone No. 2722

KRISHNASWAMI & CO.,

POST BOX NO. 746.

R. S. PURAM P. O. COIMBATORE-2.

AGENTS FOR :

UNDERWOOD TYPEWRITERS JAYKAY PORTABLES & DUPLICATORS

Also Selling Agents for

GODREJ M 12 OPTIMA TYPEWRITERS

FOR COIMBATORE, SALEM, NILGIRIS, PALGHAT DISTRICTS

STOCKISTS: DUNLOPILLO PRODUCTS

PHARMACEUTICAL CHEMISTS AND GENERAL SUPPLIERS

TO HOSPITALS NURSING HOMES SANATORIA AND ESTATES

PHONE: 3235

SRI MARUTHAMALAI ANDAVAR GINNING & SPINNING MILLS,

PERUR ROAD, COIMBATORE - 10.

★

PROPRIETORS

V. K. KRISHNASWAMI NAIDU & SONS,

MANUFACTURING :

Superior Cotton Yarn Count 10s English

Tex. Mark No. 47/MAS

Improved Agricultural Implements & Machinery



- Grain Thrashing Machines
- Sugarcane Crusher
- Groundnut Decorticator
- Chaff Cutter
- Water Carts Etc.

★

METRIC PLATFORM SCALES

MAJOR	500 Kg.
MINOR	300, 250 Kg.
MINK	100 Kg.

MANUFACTURERS :

ELSEETEE (LCT) INDUSTRIES
TRICHY ROAD, P.B. No. 864 SINGANALLUR.
COIMBATORE-5

மின்சார மோட்டார்களின்

பாதுகாப்பிற்குச் சிறந்தவை

★

G. E. M.

ஸ்டார்ட்டர்கள்

ஸ்விட்சுகள்

★

தயாரிப்பவர்கள்

கணபதி எஞ்ஜினியரிங் மானுபாக்சரர்ஸ் பிரைவேட் லிமிடெட்

கணபதி (அஞ்சல்) கோயமுத்தூர்-6

போன் : 3024

Man Made Fibres

For Quality you can Count on

South India Viscose Products

★

RAYON YARN Rated among the best - comparable to imported yarn. Available in 75, 100, 120 & 150 Deniers Bright. Cones, Hanks & Cakes.

STAPLE FIBRE Superb in quality 1·5 D x 1·5"

The uniform excellence of South India Viscose Products is the result of collaboration with one of the World renowned producers, SNIA VISCOSA, ITALY: Up-to-date machinery; and latest manufacturing technique.

★

For further particulars contact:

SOUTH INDIA VISCOSE LIMITED

RACE COURSE — COIMBATORE - 1.

Grams: "VISCOSE" Phone: 3206, 3207 & 3208

Telex: "VISCOSE CB" No. (042)—210

தமிழகத்திற்கு முற்றிலும்
நம்பகமானதொரு
சரக்குப் போக்குவரத்து நிறுவனம்



ABT பார்சல் சர்வீஸ்

(Prop: ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி.)

டாக்டர் நஞ்சப்பா ரோடு, **கோயமுத்தூர்-1**

போன் : **3366** (3 Lines)

* உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை *

★ ஸோவா 5 குதிரைத்திறன் டீஸல் ஆயில் என்ஜின்கள்

★ 5 எச். பி. 1500 ஆர். பி. எம். வேர்டிகல் டீஸல் என்ஜீன்கள்

தயாரிப்பாளர்கள் :

தந்தி : "ஸோவா" தொலைபேசி : 5680

ஸோவா பிரைவேட் லிட்.,

குனியமுத்தூர், கோயமுத்தூர் - 8.

பூரண வினியோகஸ்தர்கள் :

பாட்லிபாய் & கம்பெனி ப்ரைவேட் லிட்.,

பம்பாய் - 1.

மற்றும் அதனுடைய கிளை அலுவலகங்கள்

THE LAKSHMI MILLS COMPANY LTD.,

COIMBATORE.

Manufacturers of quality fabrics

Staple Fibre & Cotton yarn

Gassed, mercerised yarns a speciality

MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.

Grams : "UTHIRADAM"

Phone { Mills : 2174
Office : 4478

The Anandakumar Mills Limited

SIRAVANAMPATTI POST, COIMBATORE - 6.

★

SPINNERS OF QUALITY YARN

Installed Capacity 12,096 Spindles

Roto Coner 240 Spindles

Nf. 84 & Nf. 68
In Hanks & Cones

★

Managing Agents:

N. KRISHNARAJ & BROTHER

13/55, PONNURANGAM ROAD

R. S. PURAM — COIMBATORE - 2.

Phone : 2753

Trade Mark No. 199901 | Tex Mark No. 3235
Telephone : Mills : 4153 | Managing Agents Residence : 4496

OM PARASAKTHI MILLS LIMITED

KRISHNARAYAPURAM,
GANAPATHY P. O. :-: COIMBATORE-6.

★

Producers of

Superior quality Carded yarn of
Counts: Nf. 84, Nf. 68, Nf. 50, Nf. 37 and Nf. 34
available in Cones also.
Double yarn Speciality.

Spindles running **15000**.
Doubling **676**
Expansion Spindles **10,000**

★

Managing Agents :

Messrs. THIRUGNANASAMBANDAM & CO.,

Partners :

Sri K. S. Thirugnanasambandam Chettiar
Race Course, Coimbatore.

Sri D. Balasundaram, B. E., (Eng) Sheffield,
Managing Agents, Textool Co., Ltd.

Manager :

SRI S. RAMASWAMY, B. A., D. Com., (I. M. C.)

GNANAMBIKAI MILLS LIMITED

GNANAMBIKAI MILLS POST

COIMBATORE - 11

TELEGRAM: GNANAMBIKA PHONE: 2356

RING SPINDLES 18,544.

Under Expansion spindles 6,456

★

MANUFACTURERS

BEST COTTON YARN

30s to 60s

IN HANKS & CONES

MANAGING AGENTS:

V. C. VELLINGIRI GOUNDER & BROS.

★

MANAGING PARTNERS:

MESSRS. V. S. CHINNASWAMI & V. S. KOLANDAVEL

SRI RAMAKRISHNA MILLS (COIMBATORE) LTD.,

POST BOX No. 7

GANAPATHY POST — COIMBATORE - 6.

FINE	*	FINE
FEATHERS MAKE	*	YARN MAKE
FINE BIRDS	*	FINE CLOTHS

MANAGING AGENTS :

M/s. S. N. RANGASWAMY NAIDU SONS

COIMBATORE.



கோயமுத்தூர் & மேட்டுப்பாளையத்தில்

கட்டிடங்களுக்குத் தேவையான

ஓடு
மரம்
இரும்பு
பெயிண்ட்

விலைகுறைவாகவும்
நம்பிக்கையுடனும்
வாங்குவதற்கு ....

ராஜேந்திரா & கோ

போன். 4794
மேட்டுப்பாளையம் ரோடு
P. B. No. 751
கோவை-2.

போன். 168
மெயின்ரோடு
பழைய பஸ்ஸ்டாண்டு
மேட்டுப்பாளையம்

போன் : 2324

கற்றவர்க்கும், கற்பவர்க்கும்,
கற்பிப்பவர்க்கும், நூல் நிலையங்களுக்கும்
தேவையான தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள்
கிடைக்குமிடம்

கவிஞர் பதிப்பகம்,

363, ராஜ வீதி — கோயமுத்தூர்-1.

உரிமையாளர் :

ரா. அமிர்தலிங்கம்

S/o. நாமக்கல் கவிஞர், M. L. C.

B. கந்தசாமி,

மளிகை & பட்டாசு வியாபாரம்,
26/557, ரங்கேகவுடர் வீதி,
கோயமுத்தூர்-1.

அன்புடையீர்,

எங்களிடம் மளிகை சாமான்கள் சுத்தமாகவும் நாணயமாகவும், மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தீபாவளி பண்டிகைக்குத் தேவையான பட்டாசுகளும், மத்தாப்புகளும், விலை மலிவாகக் கிடைக்கும்.

அன்பர்கள் ஒருமுறை விஜயம்செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

THE METTUPALAYAM COONOOR SERVICE PRIVATE LIMITED

METTUPALAYAM

★

DAILY SERVICE

BETWEEN

COIMBATORE — METTUPALAYAM & OOTACAMUND

MAIL CONTRACTORS

SPECIAL TRIPS & TOURIST TRIPS

Arranged on Advance Intimation

FOR EFFICIENT AND COMFORTABLE TOUR

★

PLEASE CONTACT:

Manager, H. O. Mettupalayam

or

Branch Offices at

Coimbatore, Coonoor & Ootacamund.

TELEGRAM: SUPRAYARN

TELEPHONE { REGD. OFFICE: 2859
MILLS : 2909

SURYA PRABHA MILLS (PRIVATE) LIMITED

COIMBATORE - 1

Mills At:
KUNIYAMUTHUR.

Regd. Office:
26/234, Big Bazaar St., COIMBATORE - 1.

★

SPINNERS OF SUPERIOR COTTON FOR PEAK PERFORMANCE IN QUALITY SPINNING

★

SPECIALISTS IN:

NF 50s & NF 68s CARDED & COMBED COTTON YARN IN HANKS & CONES

Installed Spindles: 12,320

Under Expansion: 12,680

★

MANAGING DIRECTOR:

VYSIA BHUSHANAM. P. A. RAJU CHETTIAR

'VICTOR' Centrifugal Pumps

THE ASSET OF CHOICE FOR AGRICULTURISTS

Ensures Economical Running,
Long life & Paramount output.

Attractively marketted allover
INDIAN AND FOREIGN MARKETS.

★

Manufacturers :

The Kala Industries Private Limited,

METTUPALAYAM ROAD,
COIMBATORE-11.

★

Telegrams : 'VICTORPUMP' Telephone : 6060

With best compliments from :-

SAVALDAS MADHAVDAS

17/101, OPPANAKARA STREET

COIMBATORE - 1.

Manufacturers of

SM BRAND

CATTLE - FEED

(MINERALISED AND VITAMIN) SCH

''வையகங் காப்பவரேனும் சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்
பொய்யகலத் தொழில் செய்தே பிறர்
போற்றிட வாழ்பவா எங்கணும் மேலோர்''

—பாரதியார்

LINGAM & CO.,

Refinery & Laboratary :

AVANASHI ROAD

" ROSE BRAND " GHEE Manufacturers

AG MARK GHEE GRADING STATION

Approved by the Agricultural Marketing
Adviser to the Govt. of India

COIMBATORE.

TELEPHONE NO. { DEPOT : 2971
OFFICE : 2392

அனைவரும் விரும்புவது

"அசோகா"

★

சுகந்த பாக்குத்தூள்

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

முதல் தரமான படிக வெள்ளைச் சர்க்கரை தயாரிப்பாளர்

பதிவு அலுவலகம் :

133, சத்தியமூர்த்தி வீதி,
இராம்நகர்,
கோயமுத்தூர் - 9.

தொழிற்சாலை :

ஆப்பக்கூடல் (அஞ்சல்)
வழி. ஜம்பை,
ஈரோடு. ஆர். எம். எஸ்.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

மெசர்ஸ் பவானி என்டர்பிரைசஸ், பொள்ளாச்சி.



TEXTOOL
DIESEL
ENGINES
நிறைந்த
விளைச்சலுக்கு
நீர்ப்பாசன வசதியை
அதிகரிக்க
டெக்ஸ்டூல்
டீசல் இஞ்ஜின்
பம்பு செட்டுகளை
5 H. P. 10 H. P.
நிறுவுங்கள்
அரசாங்கக் கடனுதவி கொண்டு வாங்க மத்திய, மாகாண கவர்ன்மெண்ட்டாரால் அங்கீகாரம் பெற்றவை.
TEXTOOL CO. LTD.
COIMBATORE. 6
D. 5/65.

Grams : "STEELMACO" Phone : 5679

DHANALAKSHMI STEEL MACO WORKS (PRIVATE) LTD.,

TUDIYALUR P. O., :: COIMBATORE-11.

CIVIL, MECHANICAL & STRUCTURAL ENGINEERS AND CONTRACTORS.

MANUFACTURERS OF :

All types of Steel Fabrication Works such as: Trusses, Metal Windows, Doors, Window Grills, Collapsible gates & Shutter gates, Tanks etc. etc.,

&

Steel Office equipments, Steel furnitures, Cots etc.,

&

Sakthi Foot Sprayers for Agricultural purposes, Crucible Blowers, Pillar type Drilling Machines

&

G. P. Pans, G. P. Pots etc. etc.

உ

ஸ்தாபிதம் : 1924

தொலைபேசி எண் : 3867

நீண்டநாட்கள் அனுபவம் பெற்று கைத்தறி ஜவுளிகளும், மில் ஜவுளிகளும் மொத்தம் & சில்லறையில் வியாபாரம் செய்து வருகிறோம்.

தங்கள் மேலான வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்

மேடா கோபால செட்டியார் சன்ஸ்

கைத்தறி & மில் ஜவுளி வியாபாரம்

770, பெரிய கடைவீதி, கோயமுத்தூர்-1.

குறிப்பு : வியாபாரிகளுக்குத் தனி விலையில் சப்ளை செய்கிறோம்.
வாடிக்கைக்காரர்கள் திருப்தியே எங்கள் திருப்தி.

நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?

நவீன பார்டர்கள் நாணயமான நெசவு திடமான கலர்

பல்வேறு உடல் தினுசுகள் கொண்டதும்

பலரால் போற்றப்பட்டதுமான

"வீகோ" சேலைகள்

(ரிஜிஸ்டர்)

"VEECO" SAREES

இன்றே தங்கள் ஊர் ஜவுளிக்கடையில் வாங்கி உபயோகியுங்கள்

உற்பத்தியாளர் :

K. S. VEE & CO.,

FASHION CREATORS IN SAREES

COIMBATORE.

Phone No. 3533 Telegrams : "VEECOFABS"

THE COIMBATORE CITY CO-OPERATIVE BANK LTD.,

COIMBATORE.

President

Thiru R. SENGOTTUVELAN, B. A., B. L.,

Vice-President

Dr. S. G. RAJARATHINAM, M. B., B. S.,

Directors

Thiru S. KANNUSWAMY GOUNDER, B. A., B. L.,
Thiru A. MARUDACHALA GOUNDER.
Thiru P. ARUNACHALAM.
Thiru M. V. RAMACHANDRAN, B. Sc., B. L.,
Thiru R. NAGAPPAN.
Thiru M. MARIA LOUIS.
Thirumathi S. ARPUTHA LEELA.

FUNDS OF THE BANK

Authorised Share Capital	Rs.	3,00,000
Paid up Share Capital	Rs	3,45,516
Reserve Fund and other reserves	Rs.	1,54,850
Investments	Rs	1,89,504
Deposits Outstandings	Rs.	30,49,318
Loans Outstandings	Rs	28,96,709
Working Capital...	Rs	35,25,151

RATES OF INTEREST ON DEPOSITS

FIXED DEPOSITS

3 Months	$5\frac{1}{2}$% P. A.	6 Months	6% P A.
1 Year	$6\frac{1}{2}$% ,,	2 Years	7% ,,
3 Years	$7\frac{1}{4}$% ,,	$4\frac{1}{2}$ Years	$7\frac{1}{2}$% ,,
5 Years	$7\frac{3}{4}$% P. A.		

Current Deposits	$\frac{1}{2}$%
Savings Deposits	$4\frac{1}{4}$%
Recurring Deposits	6%
Home Safe Deposits	6%
Provident Deposits	6% (Compound)

Safe Deposit Lockers are available for rent at moderate rates.

FREE LOCKER SERVICE

One "A" Type Locker is offered free of rent who invests Rs. 10,000/- as Fixed Deposit in our Bank till the date of maturity of the deposit.

ALL KINDS OF BANKING BUSINESS ARE TRANSACTED.

Coimbatore.
23—2—1966

N. S. KUNCHITHAPATHAM, B. A.,
SECRETARY.

SRI RANGA VILAS GINNING & OIL MILLS,

POST BOX No. 151,

COIMBATORE.

Grams : "OILMILLS" Phone : 4151

Manufacturers of :

GROUNDNUT OIL & CAKE

COTTON & COTTON SEEDS

COTTON SEED OIL

AND

COTTON SEEDS CAKE

Suppliers :

IN INDIA AND ABROAD

EDIBLE QUALITY GROUNDNUT MEAL IS OUR SPECIALITY

Edible Groundnut Meal is being produced in one of the plants provided by "UNICEF"

Phone No. 6736

ஜாபர் பிரிண்டிங் பிரஸ்

17/276, N. H. ரோடு (5முக்கு) கோவை-1

★

அழகிய அச்சு வேலைகள்

குறித்த காலத்தில், குறைந்த செலவில்

செய்து கொடுக்கும் சிறந்த ஸ்தாபனம்

Jaffer PRINTING Press

PHONE NO. 6736

ஜாபர் புக் பைண்டிங் ஒர்க்ஸ்

(பள்ளி நோட்டுகள், அக்கௌவுண்ட் புத்தகங்கள் தயாரிப்பாளர்)

JB Binding Works

பள்ளிக்கூடத்திற்குத் தேவையான எல்லாவிதமான நோட்டுகள், அக்கௌவுண்ட் நோட்டுப் புத்தகங்கள் எங்களிடம் மொத்தமாகவும், சில்லரையாகவும் குறைந்த விலையில் கிடைக்கும். இது தவிர எல்லாவிதமான வாழ்த்துக்களும், காலண்டர்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

JAFFER BOOK BINDING WORKS

(Mfrs. SCHOOL NOTES & ACCOUNT BOOKS ETC.)

17/111, N. H. ரோடு (5முக்கு) கோவை - 1

The House For

DRUGS
CHEMICALS
PATENT MEDICINES
SURGICAL INSTRUMENTS, ETC., ETC.

Dispensing a speciality

PHONE : 3774

THE SOUTH INDIAN MEDICAL STORES

CHEMISTS AND DRUGGISTS

BIG BAZAAR STREET

COIMBATORE

கே. ஆர். & சன்ஸ்

அன்புடன் அளிக்கும்

சுடர் ஒளிவீசும் சுத்தமான அசல் **வைரங்கள், தங்க நகைகள்.**

மால்ட், ரவை, சேமியா, வடகம்

குழந்தைகளுக்கு ஆரோக்கிய உணவு கோவை மால்ட்ஃபுட் பேக்டரி ராகி தயாரிப்புகள்

''ஜோதி'' மண்ணெண்ணை, டீசல், கிரீஸ் Etc.

IOC இந்தியன் ஆயில் கம்பெனி

கோவை, பாலக்காடு, நீலகிரி மாவட்ட பூர்ண வினியோகஸ்தர்கள்.

விபரங்களுக்கு
தொலைபேசி :
3033

தந்தி :
''புல்லியன்''

இப்புதிய வாகனங்களின் புரோட்டோடைப்புகள் பூரணமாகப் பரிசோதிக்கப்பட்டு எல்லாவிதத்திலும் சிறந்தது என நிரூபிக்கப்பட்டவை.

புதிய டிஎம்பியின் சிறப்பு அம்சங்கள் :

முன்னும் பின்னுமுள்ள எக்ஸ்ட்ரா ஹெவி டூட்டி ஆக்ஸில் அசெம்பிளிகள்— அதிக பாரத்தை ஏற்றிச் செல்ல.

புதிய ஸ்டியரிங் அசெம்பளி யுனிவர்சல் ஜாய்ண்டுடன் பொருத்தப்பட்டுள்ளதால் ரோடு அதிர்ச்சிகள் பாதிக்காமல் சௌகரியமாக ஓட்ட வசதியாக இருக்கும்.

ஹைபாய்டு கியர்கள்— பற்சக்கரங்கள் நல்ல முறையில் இணைந்து, வாகனம் நீண்ட நாட்கள் தொல்லையின்றி வேலை செய்ய.

பிற தொழில்நுணுக்க அம்சங்கள் :

புதிய ச்சாஸிஸ் பிரேம் முறுக்கு உருக்காலான உயர்ந்த, விசேஷத்தரம் வாய்ந்தது

முன்னும் பின்னுமுள்ள புதிய ஸ்பிரிங்குகள்— உறுதியானவை, அடர்த்தியானவை, பளுவானவை.

ஓஎம் 312 டீசல் எஞ்சின்— நல்ல முறையில் பரிசோதிக்கப் பட்டது. திருப்தியடைந்த ஆயிரக்கணக்கான வாடிக்கைக் காரர்களால், பல இலட்சம் மைல்கள் ஓட்டிப்பார்த்து சிறந்தது என நிரூபிக்கப்பட்டது.

டாடா
மெர்ஸிடஸ்-பென்ஸ்



T. 4432-TAM

கோவை, நீலகிரி ஜில்லா வினியோகஸ்தர்கள் :—

தி கவுண்டர் & கம்பெனி,

225-226, டாக்டர். நஞ்ஜப்பா ரோடு, (ஜெயில் ரோடு)

கோயமுத்தூர்-1.

போன் : 3377, (3 லைன்கள்) தந்தி: "GOUNDERCO" தபால் பை எண் : 512

தலைமைக் காரியாலயம் :—4A, கூட்ஸ் ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

டாடா மெர்ஸிடஸ் - பென்ஸ் சர்வீஸ் ஸ்டேஷன்கள். }
கோயமுத்தூர் ரோடு, பொள்ளாச்சி.
குன்னூர் ரோடு, உதகமண்டலம்.

திருமடத்தின் தோற்றம்.

தமிழ்க் கல்லூரிக் கட்டிடம்.

Paari Achakam, 127, Broadway, Madras-1.